*528 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Revenue be pleased to state the area of the beach in Madras belonging to (1) the Corporation of Madras, (2) the State Government, (3) the Central Government and (4) Private Parties?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** சென்னை கடற்கரையில் உள்ள நிலத்தின் உரிமை விவரங்கள் பின்வருமாறு :—

| | | காணி | மனை | ச. அடி. |
|---|---|---|---|---|
| 1 | சென்னை மாநகராட்சி | 0 | 06 | 0405 |
| 2 | மாநில அரசு | 229 | 05 | 0826 |
| 3 | மைய அரசு | | இல்லை | |
| 4 | தனியார் | | இல்லை | |

Thiru N. DENNIS : May I know the revenue to the State from these lands?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தனிக் கேள்வி போட்டால் சேகரித்துத் தருகிறேன்.

### வைகைக் கால்வாயை நவீனப்படுத்தும் திட்டம்

* 529 வினா.—**திரு. நா. வெ. குருசாமி :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வைகைக் கால்வாயை நவீனமாக்கும் திட்டம் மத்திய சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்டும், வேலை தாமதமாக நடைபெறுவதற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** வைகைக் கால்வாய் சீரமைப்புத் திட்டத்தின் துவக்க காலத்தில் கீழ்வரும் காரணங்களால் வேலையில் தாமதம் நேர்ந்தது :—

(1) பின்தங்கிய இப்பகுதியில் பெரிய வேலையேற்கும் ஒப்பந்தக்காரர்கள் இல்லாதது.

(2) பெரிய வேலைகள் ஏற்று நடத்த ஒப்பந்தக்காரர்கள் முன் வராதது.



(3) மேற்கண்ட காரணங்களின் விளைவாகத் திரும்பத் திரும்ப ஒப்பந்தப் புள்ளிகள் கேட்க வேண்டிய நிர்ப்பந்த நிலை ஏற்பட்டது.

**திரு. த. சோனையா :** தலைவர் அவர்களே, இந்த வைகைக் கால்வாய் சீரமைப்புத் திட்டம் நீண்ட நெடுநாட்களாகவே இருந்துகொண்டு இருக்கிறது. அதை இந்த ஆண்டாவது முடிப்பதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இது ஒரு பெரிய திட்டம். இதற்கு 4 கோடியே 39 லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டு இருக்கிறது. வேலைகள் சீக்கிரமாக நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கின்றன. இந்த ஆண்டு பத்து லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த பத்து லட்சம் ரூபாய் செலவழிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### பக்கிங்ஹாம் கால்வாயைச் சீர்படுத்தல்

* 530 வினா.—**திரு. கா. வேழவேந்தன் :**
**திரு. சி. ஆறுமுகம் :**
**திரு. சு. துரைசாமி :**
**திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையிலிருந்து பழவேற்காடு வரை எண்ணூர் வழியாக பக்கிங்ஹாம் கால்வாயைச் சீர்படுத்தி உல்லாசப் படகுகள் விடும் திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தமிழ்நாட்டில் பக்கிங்காம் கால்வாயைச் சீர்படுத்தும் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படவிருக்கிறது. உல்லாசப் படகுகள் விடும் திட்டம் தற்போது எதும் இல்லை.

**திரு. கா. வேழவேந்தன் :** துணைத் தலைவர் அவர்களே, பழவேற்காட்டிலிருந்து மகாபலிபுரம் வரையிலே இப்படி சீர்படுத்தி உல்லாசப் படகுகள் விடுகின்ற திட்டம் செயல்படுத்தப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பக்கிங்ஹாம் கால்வாய் சீரமைப்புத் திட்டத்திற்காக இந்த ஆண்டு 50 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். 4 கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டம் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. பக்கிங் ஹாம் கால்வாய் சீரமைப்புத் திட்டம் முடிந்ததற்குப் பிறகு அதிலே விசைப் படகுகள், துடுப்புப் படகுகள், உல்லாசப் படகுகள் விடுவதுபற்றி முடிவு செய்யலாம்.

**திரு. சி. ஆறுமுகம் :** பக்கிங்ஹாம் கால்வாய் வழியாக பழைய காலத்தில் பொருட்கள் வந்திருக்கின்றன, அதன் காரணமாக பொருட்களின் விலை குறைந்திருக்கின்றது. ஆனால் இப்பொழுது லாரிகளில் வருவதால் பொருட்களின் விலை ஏறியிருக்கிறது. இவற்றையெல்லாம் மனதிலே கொண்டு அரசு வேகமாக இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முன்வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வரவு-செலவுத் திட்டத்திலே இந்தத் திட்டத்தைப்பற்றி அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப்போல் திட்டங்கள் விரைவாகச் செயல் படுத்தப்படும்.

### எல்லாபுரம், கும்முடிப்பூண்டி நிலவள வங்கிகள்

* 531 வினா.—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எல்லாபுரம், கும்முடிப்பூண்டி நிலவள வங்கிகள் மூலம் 1971-72-ல் வழங்கப்பட்ட கடன்கள் பற்றிய விவரங்கள் யாவை ?

(இ) 1972-73-ல் கடன் வசதிகளை மேலும் விரிவுபடுத்த மேற் கொண்டுள்ள தீவிரப் பணிகள் யாவை ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) & (இ) இதைப் பற்றிய விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

---

@ 124-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



**திரு. கா. வேழவேந்தன் :** இப்படிக் கடன் வழங்குகின்ற ஏற்பாட்டில் இருக்கிற சிறு சிக்கலைப்பற்றி அந்த நிலவள வங்கிகள் அமைச்சரிடத்திலேயும், இந்த கூட்டுறவுத் துறைக்கும் அனுப்பி யிருக்கிற கோரிக்கை மனுக்களைக் கவனித்து விதிமுறைகளைத் தளர்த்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** கடன் வழங்குவதிலே சிக்கல் ஏதும் இல்லை. உலக வங்கியின் நடைமுறை விதிகள் 1—11—1971-லிருந்து அமலுக்கு வந்தன. புதிய விதிகள் என்ன என்று தெரிந்துகொண்டு, கடன் மனுக்கள் அனுப்பப்பட வேண்டும். தெரிந்துகொள்வதிலே காலதாமதம் ஏற்பட்டதே தவிர, அதிலே சிக்கல் ஒன்றும் இல்லை.

### புதிய கிணறுகள் தோண்டக் கடன்கள்

* 532 வினா.—**திரு. எஸ். கணேசன் :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நடப்பாண்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் புதிய கிணறுகள் தோண்டுவதற்கும், பம்பு செட்டுகள் அமைப்பதற்கும் சிறு பாசனத் திட்டத்தின்கீழ் கடனாக வழங்கப்பட்ட தொகை எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, குழாய்க் கிணறுகளுக்காக 8.07 லட்சம் ரூபாய், பம்பு செட்டு களுக்காக 6.12 லட்சம் ரூபாய்.

### *Wild Life Sanctuary in Coimbatore district*

* 533 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether any Wild Life Sanctuary is to be set up in Coimbatore district; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ) & (இ) 21—1—1973 அன்று மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரால் திறந்து வைக்கப்பட்டுள்ள ஆனைமலை வனவிலங்கு உய்விடத்தைத் தவிர, கோவை மாவட்டத்தில், வேறு வனவிலங்கு உய்விடம் ஏற்படுத்தும் உத்தேசம் எதுவும் தற்போது அரசுக்கு இல்லை.

THIRU N. DENNIS : Sir may I know whether the Govern-
ment will formulate Wildlife Scheme under the Central and U.N.
Aid?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** மத்திய அரசும், மாநில
மு.ப. அரசும் சேர்ந்து ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்திடமிருந்து உதவி
9-30 பெறத்தான் இப்போது திட்டம் இருக்கிறது.

*Sale of human hair*

* 534 *Q.*—THIRU R. R. MUNUSAMI : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether the demand for the human hair offered by pilgrims in templese have dwindled in recent times; and

(*b*) the steps taken to improve the sales of the same?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** (அ) ஆம்.

(இ) உலக மார்க்கெட்டில் முடிக்கு கேட்புக் குறைவு ஏற்பட்டமையினால் இங்கும் முடி விற்பனை குறைவு ஏற்பட்டுள்ளது. இதற்கு பிரத்தியேக நடவடிக்கை எதுவும் எடுப்பதற்கில்லை. பொது ஏலத்தில் விடுவதுதான் அதிக பயன் தரும். உலக மார்க்கெட்டில் இயற்கை முடிக்கு உயர்வு ஏற்படும்போது இங்கு முடிக்கு விலையில் கூடுதல் கேட்பு ஏற்படலாம்.

**திரு. ரா. ரா. முனுசாமி :** இந்தப் பொது விற்பனை, முடியின் அளவு குறைந்துவிட்டதால் பொதுச் சந்தையில் அவை விலை போகவில்லையா? அல்லது அளவு குறையாது வளர்ச்சி பெறாத காரணத்தால் குறைந்துவிட்டதா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** அளவு குறைவு இல்லை. ஆனால் அளவு குறைந்தவர்கள் இதை உபயோகிப்பதைக் குறைத்து விட்டார்கள்.

**திரு. எம். சுரேந்திரன் :** கோவில்களில் பக்தர்களால் வழங்கப் படும் முடி விற்பனையின் அளவு அண்மையில் குறைந்து உள்ளதா என்று கேட்கப்பட்டது. கோவில்களில் பக்தர்கள் முடி விற்றார்களா என்பதையும் அதே நேரத்தில் கோவில்களுக்குச் செல்லும் பக்தர்களுக்கெல்லாம் மொட்டை அடிக்கப்படுகிறதே என்ற காரணத்தால் கோவில்களுக்கு அதிகம் பேர்கள் செல்லவில்லையா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** பக்தர்களுடைய எண்ணிக்கை குறையவில்லை என்பதை நாம் பல்வேறு புள்ளிவிவரங்களில் இருந்து பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் விற்பனை குறைந்ததற்குக் காரணம் இயற்கை முடியை முன்னால் பல உபயோகங்களுக்கு உபயோகித்து வந்தார்கள். ஆனால், வெளி நாடுகளில் செயற்கை முடி தயாரிக்கப்பட்டு விட்ட காரணத்தால் இயற்கை முடிக்கு இப்போது அங்கு மார்க்கெட் குறைவாகியிருக்கிறது. ஆகவே அதனாலே இங்கேயும் விற்பனை குறைந்திருக்கிறது.

**திரு. வை. பாலசுந்தரம் :** பொதுவாகவே பக்தர்கள் மொட்டை அடித்துக்கொள்வதை ஒரு அசிங்கமாகக் கருதுகிற காரணத்தால் அது குறைபடுகிறது என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அது குறையவில்லை, விலை குறைந்து போயிற்று என்பதுதான் கேள்வி.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I find that some new converts are now going to Tirupathi and cut their hair—some of the people who did not earlier believe in God, but now have started believing in God—is the Government aware of it?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** இங்கிருக்கிற ஆலயங் களிலேயே செய்யச் சொல்லிப் பிரசாரம் செய்யலாம்.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** இந்த முடியை அணிகிற பெண்கள் மறைந்துவிடுகிறார்கள் என்ற கட்டுக்கதையை சமீபத்தில் விட்டு விட்டார்கள். அதனால் பக்தர்கள் அவர்களுடைய முடியைக் கொடுப்பதால் அவர்கள் முடியை அணிந்தால் மறைந்து விடுவார்கள் என்ற பயம் காரணமாகக் கொடுக்காமல் இருக்கிறார்கள். இது கட்டுக்கதை என்பதைத் திட்டவட்டமாக அரசு அறிவித்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** கட்டுக்கதை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அதை அவர்களே வெளியிலே பிரசாரம் செய்தால் நல்லது.

**திரு. எம். தேவதாசன் :** தமிழ்நாட்டில் எந்தக் கோவிலில் முடி அதிகமாகக் கொடுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** பழனி கோவிலில்தான் அதிகமான முடி வருமானம் வருகிறது.

**திரு. ஆ. பரந்தாமன்:** இந்த முடியை தனியார்கள் வாங்குகிற வரையில் நல்ல கிராக்கி இருந்தது என்றும், எஸ்.டி.ஸி. எடுத்துக் கொண்டதற்குப் பிறகு கிராக்கி குறைந்துவிட்டது என்றும் சொல்கிறார்கள். ஆகவே, மீண்டும் தனியார்களுக்கே கொடுத்து விட அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** ஸ்டேட் ட்ரேடிங் கார்ப்பரேஷன் எடுத்துக்கொள்கிற வரையில்தான் அதிக விலை நமக்குக் கிடைத்துக்கொண்டிருந்தது. அவர்கள் தேவை இல்லை என்று சொல்லிவிட்ட காரணத்தினால்தான் தனியார்களுக்கு பொது ஏலத்தில் விற்கிறபோது குறைவான விலைதான் நமக்குக் கிடைக்கிறது.

### *Temples in platforms of Madras City.*

* 535 *Q.*—THIRU R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to clear all the platform temples in Madras City;

(*b*) if so, when this will be done; and

(*c*) the reasons for the delay?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** (அ) இல்லை.

(இ) & (உ) வினாவுக்கு இடமில்லை.

**திரு. ரா. ரா. முனுசாமி:** சென்னையிலே, இப்போது தமிழகத்தில் மக்கள் பெருக்கம் அதிகமாகியிருப்பதைவிட சாமிகளின் பெருக்கம் அதிகமாகி ஒவ்வொரு நாளும் திடீர் திடீர் என்று ப்ளாட்பாரங்களைப் பார்க்கும்போது மூன்று நான்கு சாமிகள் உருவாகி விடுகிறார்கள். அதனால் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருக்கிறது. ஆகவே, உடனடியாக அவைகளை அப்புறப்படுத்தி பொதுமக்களுக்கு நன்மை பயக்க நம் அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** நடைபாதைகளில் திடீர் என்று ஏற்படுகிற கோவில்களைத் தடுக்கவேண்டுமென்று சொல்லித்தான் கொஞ்ச நாட்களுக்கு முன்னால் அறநிலையத்துறை சார்பில் ஏதாவது சட்டம் கொண்டு வரலாமா என்று



யோசிக்கப்பட்டது. அதன் பயனாகத்தான் அறநிலையத் துறை ஆணையாளர் அவர்கள் புதுக் கோவில்களை அல்லது பொது வழிபாட்டுக்குரிய நோக்கோடு கட்டப்படுகிற கட்டடங்களுக்கு அறநிலையத் துறை ஆணையாளருடைய முன் அனுமதி பெற வேண்டும் என்ற ஒரு திருத்தம் கொண்டுவரலாம் என்ற யோசனையைச் சொன்னார்கள். ஆனால், அதுபற்றி கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறைச் செயலாளர், சட்டமன்றச் செயலாளர் ஆகியோர்களுடன் விவாதித்து ஏற்கனவே 1920-ம் ஆண்டு நகராட்சிகள் சட்டத்திலும் 1919-ம் ஆண்டு சென்னை மாநக ராட்சித் சட்டத்திலும் இப்படிப்பட்ட புதுக் கோவில்கள் உருவா வதைத் தடை செய்யவும், ஏற்கனவே உருவாகியிருக்கிற கோவில் களை அப்புறப்படுத்தவும் வழிவகைகள் இருக்கிற காரணத்தால் புதிதாகச் சட்டம் வேண்டாம் என்று சொல்லி முடிவு எடுக்கப் பட்டது. ஆனால் இப்பாதிருக்கிற கோவில்களையும், இனிமேல் உருவாக்கப்படுகிற கோவில்களையும் தடுக்கிற வகையில் அந்தந்த நகராட்சிகளுடைய ஆணையாளர்களுக்கும், இந்தத் துறையில் பணியாற்றுகிறவர்களுக்கும் போதுமான அறிவுரைகள் வழங்கப் பட்டு இந்த விஷயத்தில் அவர்கள் கண்டிப்பாக இருக்கவேண்டும் என்று அரசு சார்பில் சொல்லப்பட்டிருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சென்னை கார்ப்பரேஷன் மேயர் ஒருவர் இம்மாதிரி இப்படிப்பட்ட ப்ளாட்பாரங்களில் இருக்கக் கூடிய கோவில்களை எல்லாம் அவை இடைஞ்சலாக இருந்தால் மாற்றப்படும் என்று சொன்னார்கள். அதற்கு எந்தமாதிரியான நடவடிக்கைகள் எடுத்தார்கள்? சில சீர்திருத்தவாதிகள் எல்லாம் அதை வரவேற்கிறார்கள். இதுமாதிரி மதுரை, சென்னை போன்ற இடங்களில் இப்படி போக்குவரத்துக்கு இடைஞ்சலாக புதிதாக வரக்கூடிய கோவில்களையாவது அந்த பக்தர்கள் மனம் நோகாத அளவில் வேறு இடத்தில் வைக்கக்கூடிய முறையில் ஏற்பாடு செய்யப்படுமா? இப்போது அவை போக்குவரத்துக்கு மிகவும் இடைஞ்சலாகத்தான் இருக்கின்றன.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** மேயர் பொறுப்பை ஏற்றவுடன் சொன்னார்கள். இப்போது அவர் போய்விட்டார். ஆனால், அரசாங்கத்தில் இருந்து அப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுத்தால் அவரேகூட ஒரு போராட்டத்தைத் தொடங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

**திரு. நா. வீராசாமி** : சென்னை நகரிலுள்ள நடைபாதைகளில் திடீர் திடீர் என்று கோவில்கள் உருவாவதைப்போல் திடீர், திடீர் என்று பயங்கரமான, ஆபத்தான சுவரொட்டிகள் இன்றையதினம் சென்னை நகரில் ஒட்டப்பட்டிருக்கின்றன. ஆனந்த மார்க்க சமாஜம் என்ற அமைப்பால் க்வீன் மேரீஸ் காலேஜ், லேடி வில்லிங்டன் காலேஜ் ஜார்ஜ் டவுன், மின்ட் ஆகிய பகுதிகளில் 'இந்திராவின் கயமைத்தனத்தால் சாமியார் விஷம் கொடுத்துக் கொல்லப்பட்டார்', 'இந்திராவும், கருணாநிதியும் சேர்ந்து கொண்டு அமெரிக்கா-ரஷ்யாவிற்கு அடகு வைத்துவிட்டார்கள்' என்ற ஆபத்தான சுவரொட்டிகள், மக்கள் மத்தியில் ஒரு தவறான எண்ணத்தை உண்டாக்கும் சுவரொட்டிகள் ஒட்டப்படுகின்றன. இப்படிப்பட்டவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நடைபாதைக் கோவில்களில் இருந்து நடைபாதைகளில் எழுதப்படுகிற எழுத்துக்கள் அளவிற்கு வந்து விட்டார்கள். ஆனால் ஒன்றை நான் இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன். சென்னை நகரில் சுவரொட்டிகள் ஆங்காங்கு எல்லாயிடங்களிலும் சுவரொட்டிகள் ஒட்டுவதைத் தடுப்பதற்கு இன்னின்ன இடங்கள் என்று சிலவற்றை நிர்ணயித்து அந்த இடங்களில்தான் சுவரொட்டிகள் ஒட்டப்படவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டு, முதல் கட்டமாக நம் கடற்கரைச் சாலையில் வானொலி நிலையத்தில் இருந்து கோட்டை வரையில் முதல் கட்டமாக சுவரொட்டிகள் ஒட்டாமல் பார்த்துக்கொள்ளவேண்டும் என்று இப்போது ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அதற்கேற்ப, அந்த இடங்கள் எல்லாம் சுத்தம் செய்யப்பட்டு அங்கு சுவ ரொட்டிகள் ஒட்டக் கூடாது என்று அறிவிப்புகள் செய்யப் பட்டிருக்கின்றன. ஆனால், சுவரொட்டிகள்தான் ஒட்டக்கூடாது எழுதினால் என்ன என்று எழுதக்கூடும். அதில் பிரதமரைப் பற்றியும், என்னைப் பற்றியும் எழுதியிருப்பதாகச் சொன்னார்கள். அதைபற்றியெல்லாம் காவல் துறையினர் கண்காணித்து வருகிறார்கள்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்** : தலைவர் அவர்களே, நடைபாதைக் கோவில்களுக்கு ஆங்காங்கு இருக்கிற வட்டத்தைச் சார்ந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த கவுன்சிலர்கள்





விளக்கங்கள் கொடுத்து, அதைக் கட்டுவதற்கு உற்சாகப் படுத்துகிறார்களே, அதற்கு அரசு என்ன செய்ய உத்தேசித் திருக்கிறது ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: இப்போது நடை பாதைக் கோவில்கள் மாத்திரமல்ல, கொடிகளை நாட்டுவதற் காகவும் ஆங்காங்கு சில பீடங்கள் அமைத்து அந்தக் காரியமும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கட்சிகள் கொடி மரங்கள் அமைப்பதும், பீடங்கள் அமைப்பதும் உள்ளபடியே போக்கு வரத்துக்கு இடைஞ்சலாக நடைபாதைகளில் இருக்கின்றன. ஆகவே எல்லாக் கட்சிக்காரர்களும் சேர்ந்து—இந்த ஒரு விஷயத் திலாவது எல்லாக் கட்சிக்காரர்களும் சேர்ந்து—அவற்றை அகற்றுவதில் ஆர்வம் காட்டவேண்டும். தனித்தனியாக பீடங்கள் அமைக்கக்கூடாது என்பதில் எல்லோரும் ஈடுபட்டால் அரசு நிச்சயமாக ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. கவன ஈர்ப்பு.

### இராமநாதபுரம் மாவட்டம் வறட்சிப் பகுதிகளில் கூட்டுறவுக் கடன்களை தள்ளிவைத்தல் குறித்து.

**திரு. கு. ஆண்டி என்ற குருசாமி**: துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில், குறிப்பாக திருவில்லிப்புத்தூர் வட்டத்தில் வறட்சிநிலை காரணமாக விவசாயிகள் தங்கள் கடன்களைத் திருப்பித்தர மிகவும் அவதிப்படும் நிலையில் அவர் களுக்குக் கூட்டுறவுத் துறை மூலம் வழங்கப்பட்ட கடன்களை வசூலிப்பதை தள்ளிவைக்க வேண்டியது பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்**: தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் சில பகுதிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டன என்று அறிவிக்கப்பட்ட உடனேயே எத்தகைய

பகுதிகளில் விளைச்சல் ஆறு அணுவுக்கு குறைவு என்று அனுவரி சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதோ அந்தப் பகுதிகளில் உள்ள விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்களைத் தள்ளி வைக்க மனுக்களை வாங்கி அனுப்புமாறு இராமநாதபுரம் மத்திய வங்கி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஸ்ரீவில்லிப்புத்தூர் வட்டத்தில் நான்கு கூட்டுறவுச் சங்கங்கள் குறுகிய காலக் கடன்களை மத்திய கடன் களாக' மாற்றுவதற்கு கேட்டுக்கொண்டதற்கிணங்க ரூ. 39,548 வழங்கப்பட்டது.

மேலும் வறட்சியால் பாதிக்கப்பட்டு ஆனுல் விளைச்சல் ஆறு அணுவுக்குக் குறைவு என்ற அனுவாரி சான்றிதழ் வழங்கப்படாத பகுதிகளிலும் கடன் வசூலிப்பதில் கெடுபிடி நடவடிக்கைகள் மேற்கொள்ளக்கூடாது என்று அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டிருக் கிறார்கள். இந்த அறிவுரைகள் 30—6—1973 வரை அமலில் இருக்கும்.

**திரு. கு. ஆண்டி என்ற குருசாமி**: கூட்டுறவு முறையில் கொடுக்கப்பட்ட கடன்களைக் கெடுபிடியாக வசூல் செய்கிறார்கள். அப்படிக் கெடுபிடியாக வசூல் செய்யப்படுவது தடுத்து நிறுத்தப் படுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்**: எல்லா ஊர்களிலும் கெடுபிடி நடவடிக்கைகள் 30—6—1973 வரை நிறுத்தி வைக்கப் பட்டிருக்கின்றன.

### 3. தகவல் கோரல்.

### அவை அலுவல் குறித்து.

THIRU K. T. K. THANGAMANI: Today is the last day for the Demand and you will be guillotining all the Demands which are not voted at 1 O' clock. What I suggest is, there may be some change in the order of business. This resolution may be taken up at 1 O' clock. The Demand on Jails which was to have been taken up on the 22nd is just coming up today and there is a danger of that Demand being guillotined also. So, priority may be arranged in such a way that the Demand which was to have been taken on the 22nd may be taken up first and the other things next in order. After 1 O' clock this Resolution may be taken up.



THIRU R. PONNAPPA NADAR: I also agree to the sugges- tion made by the hon. Member Thiru K. T. K. Thangamani that the Resolution may be taken up after 1 O'clock after guillotining of Demands is over. There would be time before 1-30 and I think we can take the Resolution afterwards because there are only few Demands.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: அரசினர் தீர்மானம் நாளை எடுத்துக் கொள்ளப்படும்.

DR. H. V. HANDE: Supplementary Demands also will have to be guillotined at 1 O'clock tomorrow.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: நாளைக்கும் கில்லெட்டின் 1 மணிக்கு வரும்.

THIRU R. PONNAPPA NADAR: There are two amendments to the resolution.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: அரசினர் தீர்மானம் நாளை எடுத்துக் கொள்ளப்படும்.

### 4. அரசினர் தீர்மானம்.

### அவை அலுவல் வரிசையில் மாற்றம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**: தலைவரவர்களே, "இன்று நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டுள்ள பொது நிறுவனங்கள் குழு அமைப்பதற்கான அரசினர் தீர்மானம், நாளை 28—3—1973-ம் நாளன்று எடுத்துக் கொள்ளப்படவேண்டும்" என முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

THIRU K. T. K. THANGAMANI: I would like to know the order in which the Demands are going to be taken up. In the Order Paper the first is State Legislature, then Animal Husbandry and then Administation of Justice and Jails. So what I would suggest is, the Demands on Administration of Justice and Jails which was postponed to this day may be taken up first and the other Demands next in the order.

MR. DEPUTY SPEAKER : I will do one thing. We will take up all the Demands at a stretch. Hon. Members may speak on any of the Demands because by 1 O' clock I have to guillotine the Demands.

மொத்தமாக எல்லா மானியக் கோரிக்கைகளேயும் எடுத்துக் கொண்டு அவரவர்கள் விரும்புகின்ற மானியத்தில் தம் கருத்துக்களைப் பேசட்டும். சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் ஒவ்வொருவரும் 12 மணி முதல் 1 மணி வரை பேசட்டும்.

திரு. நா. வீராசாமி : கன்ப்யூஷனுக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கன்ப்யூஷன் ஒன்றும் இருக்காது. அசெம்பிளி, ஜெயில் எல்லாம் கிட்டத்தட்ட சம்பந்தப் பட்டவைதான்.

### 5. 1973-74-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

**நிதிக் கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம்.**

**நிதிக் கோரிக்கை எண் 21—கால்நடை வளர்ப்பு.**

**நிதிக் கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம்.**

**நிதிக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள்.**

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்பேரில் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

" நிதிக் கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 36,15,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும் ".

THIRU R. PONNAPPA NADAR : Sir, I move the following cut motion to discuss policy :

" That the allotment of Rs. 36,15,000 under Demand No. 7—State Legislature—be reduced by Rs. 100 ".

THIRU N. V. GURUSAMI : Sir, I move the following cut motion to discuss policy :

" That the allotment of Rs. 36,15,000 under Demand No. 7—State Legislature—be reduced by Rs 100 ".



THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, I move the following cut motion to discuss policy :

" That the allotment of Rs. 36,15,000 under Demand No. 7—State Legislature—be reduced by Rs. 100 ".

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தொகுதி வேலைகளைச் சரியாகச் செய்வதற்கு ஏதுவாகக் காரியாலயமும், எழுத்தரும் வழங்க வேண்டும் என்பதைக் குறித்து விவாதிக்க—

" நிதி கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 36,15,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தொகுதியின் தலைநகரங்களில் அலுவல கமும், தனி உதவியாளரும் அளிக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றி விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 36,15,000ல் ரூ. 100 குறைக்க வேண்டும் " என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி இருக்கையில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் முன்மொழியப்படவில்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் விடுதியில், தங்கும் அறைகளுக்குப் பின்புறம் தாழ்வாரம் அமைப்பது பற்றி விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண் 7—மாநிலச் சட்ட மன்றம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 36,15,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1973 மார்ச் 27

பட்டிருந்த நேரத்தில், சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் சிறைச்சாலைக்குப் போய் அந்த ஆசிரியர்களைப் பார்க்க நானே சிறை அதிகாரிகளிடம் விண்ணப்பம் கொடுத்தேன். ஏறத்தாழ முக்கால் மணி நேரம் அவர்கள் என்னை உட்கார வைத்துவிட்டு முக்கால் மணி கழித்துச் சொன்னார்கள், நீங்கள் சிறையில் இருக்கிற ஆசிரிய கைதிகளைப் பார்க்க முடியாது என்று சொல்லி விட்டார்கள். நான் அப்போதுகூடச் சொன்னேன், சட்டமன்ற உறுப்பினன் என்ற நிலையில் இல்லாவிட்டாலும், வழக்கறிஞர் என்ற முறையில் அவர்களைப் பார்க்கவேண்டும் என்று கேட்ட போதும் அவர்களைப் பார்க்க அனுமதி கொடுக்க மறுத்துவிட்டார் கள். இந்த நிலைமைகளை மாற்றியமைக்கும்படி மாண்புமிகு சட்ட அமைச்சரவர்களைக் கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. கு. இராசமாணிக்கம் :** பேரவைத் துணைத் தலைவரவர் களே, இந்த மாநிலச் சட்டமன்ற மானியக் கோரிக்கைமீது சில வார்த்தைகள் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே நடைபெறுகின்ற மானியக் கோரிக்கைகள்மீது உறுப் பினர்கள் அவரவர்கள் தொகுதியில் உள்ள பிரச்னைகளை எடுத்துச் சொல்கின்ற நேரத்தில், எதிர்க்கட்சிக்கு அதிகப்படி வாய்ப்புகள் கொடுக்கப்படுகின்ற காரணத்தால் நாங்கள் எந்தக் ரூபாய் டாக்சிக்கு வாடகை கொடுத்தும் நாங்கள் சாப்பிடுவ கோரிக்கையை இங்கே சொல்லவேண்டுமென்று எண்ணிக்கொண்டு வருகிறோமோ, அவைகளைச் சொல்லமுடியாமல் எங்களுக்குத் தடை ஏற்பட்டு விடுகிறது. இந்தக் குறையைப் போக்க வேண்டும்.

எங்களுடைய தொகுதியில் வேளாண்மைத் தொழில் சம்பந்த மான பல பிரச்னைகள் இருக்கின்றன. நேற்று நடந்த மானியக் கோரிக்கையின்மீது கோவில், மடாலயங்கள் என்பதைப்பற்றிப் பேச வேண்டுமென்றிருந்தேன். அதற்கு எனக்கு நேரம் கிடைக்க வில்லை. எந்தெந்த உறுப்பினர்கள் எந்த மானியக் கோரிக்கை மீது பேசவேண்டுமென்று விரும்புகிறார்களோ, அதில் அவர் களுக்குப் பேசச் சந்தர்ப்பம் அளிக்கின்ற வழிவகையைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, உறுப்பினர்கள் விடுதியில், எங்களுக்குச் சாப்பாட்டு வசதிகள் மிகமிகச் சங்கடமான சூழ்நிலையில் இருக்கின்றன.



1973 மார்ச் 27] [திரு. கு. இராசமாணிக்கம்]

மு.ப. 10-00

காலையில் சாப்பிடுவதற்கும், மத்தியானம் சாப்பிடுவதற்கும் நாலைந்து ரூபாய் டாக்சிக்கு வாடகை கொடுத்தும் நாங்கள் சாப்பிடுவதற்குக் கஷ்டப்படவேண்டிய நிலையிருக்கிறது. சட்ட மன்ற விடுதியில் குளிப்பது, லட்ரீன் போன்ற வசதிகள் கிராமப் பகுதியிலிருந்து வந்திருக்கின்றன உறுப்பினர்களுக்கு உகந்த முறையில் இல்லை. எங்களுடைய நடைமுறைகளுக்கு ஏற்றவாறு அவைகளை மாற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ரயிலில் வருவதற்கு வசதிகள் வேண்டும் என்றார்கள். அதே போல் ஒரு லட்ச மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் கார் வசதி இருக்கிறது என்று சொல்ல முடியாது. சில பேருக்கு இருக்கிறது. பலருக்கு இல்லை. கார் வைத்துக்கொள்வதை ஆடம்பரம் என்று சொல்ல முடியாது.

(திரு. நா. வீராசாமி தலைமை.)

சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதியில் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் செல்ல வேண்டியிருக்கிறது. சட்ட மன்ற உறுப்பினருக்கு ஒரு கார் அவசியமாகத் தேவைப்படுகிறது. இதை நான் அரசாங்கமே கொடுக்க வேண்டுமென்று கேட்கவில்லை. கார் வாங்குவதற்கு நீண்ட காலக் கடன் கொடுத்து, ஐந்து அல்லது ஆறு வருடங்களில் அந்தக் கடனைத் திரும்பிப் பெற்றுக்கொள்ளுகின்ற அளவுக்கு வசதி களை ஏற்படுத்தித் தரவேண்டும். கால்நடையாகவோ, சைக் கிளிலோ வாடகைக் கார் எடுத்துக்கொண்டோ சென்றால் முடியாது. உறுப்பினர்களுக்குக் கொடுக்கின்ற சம்பளம் கார் வாடகைக்கும், பெட்ரோலுக்கும் போதாது. சட்டமன்ற உறுப் பினர்கள் பொது மக்களுடைய பிரச்னையைத் தீர்க்கவும், குறைகளைக் கேட்டறிந்து அவையில் எடுத்துச் சொல்லவும் வசதி செய்யும் அளவிற்கு, அவர்களுக்குக் கார் வாங்குவதற்குக் கடன் கொடுக்கும் வசதிகளைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு வாய்ப்பளித்ததற்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

* **திரு. எம். சுரேந்திரன் :** உதவி சபாநாயகர் அவர்களே, இங்கே சட்ட மன்றத்திற்கான மானியக் கோரிக்கைமீது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். சட்டமன்றம் என்று சொன்னால், சட்டமன்ற உறுப்பினர்களுடைய நலன்களைப்

பிரதானமாகக் கவனிக்க வேண்டுமென்ற விஷயத்தை வற்புறுத்திக் கூறுவதற்கு இந்த நேரத்தைப் பயன்படுத்துவதான் வாய்ப்பாக இருந்து கொண்டு வருகிறது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இப்போது தங்குகிற விடுதியிலே இருக்கிற வசதிகள் என்ன என்பதை எடுத்துக் கொண்டோமானால் ஒவ்வொரு அறையிலேயும் இன்றைக்கு ஒரு தலையணைதான் இருக்கிறது என்பதை முதலில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதை ஹவுஸ் கமிட்டியில் சொல்லலாம்.

**திரு. எம். சுரேந்திரன் :** சட்டமன்ற உறுப்பினர்களுடைய வசதிகளைச் சரியாகக் கவனித்தால்தான் சட்டமன்றத்தில் சுறுசுறுப்பாக, நல்ல கருத்துக்களைச் சொல்வதற்கான வாய்ப்புகள் இருக்கும். வேலை செய்வதற்கு ஓய்வு வசதிகள் எல்லோருக்கும் அளிக்கவேண்டியது மிகவும் அவசியமான ஒன்றாகும். ஆகவே, சட்டமன்ற விடுதியிலே உள்ள தலையணையைப்பற்றிச் சொன்னால் அந்த தலையணையும் தலைக்கு வைப்பதற்கு லாயக்கற்றதாக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதேபோன்று, சட்டமன்ற அறைகளிலே ஸ்க்ரீன் எடுக்கப்பட்டுவிட்டிருக்கிறது. காலையில் வெய்யில் வரும்போது ஜன்னல் வழியாக சூடு ஏறுகிறது. மாலையில் அந்தப் பக்கத்தில் இருந்து சூடு வருகிறது. அதை மறைப்பதற்கான ஏற்பாடுகள் ஒன்றுமே இல்லை.

அதோடு மட்டுமல்ல. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவ்வப்போது தேவைப்படுகிற பொருள்களை வாங்க கடை கண்ணிகளுக்குப் போக பியூன்களை வைத்திருக்கிறோம். ஒவ்வொரு ஃப்ளோருக்கும் 3, 4 பேர்களை வைத்திருக்கிறோம். அவர்களையெல்லாம் கண்டுபிடிப்பது என்பது கஷ்டமாக இருக்கிறது. 32 அறைகள் இருக்கிறதென்று சொன்னால், அங்கே 4 பேர் விகிதாசாரம் செய்து 8 அறைகளுக்கு ஒருவர் என்று அவர்களிடம் பொறுப்பை ஒப்படைத்து, இன்னின்ன காரியங்கள் செய்ய வேண்டுமென்று சொல்லி வழிமுறை செய்வது நன்றாக இருக்கும். இப்போது அப்படிப்பட்ட வழிமுறை இல்லை.

காலையில் பியூன் வந்தவுடனே அறையில் இருக்கிற டேபிளைச் சுத்தம் செய்து, குடி தண்ணீர் எடுத்து வைத்து இது போன்ற காரியங்களைச் செய்ய இன்றைக்கும் அவர்கள் தயாராக இல்லை





என்பதைப் பார்க்கிறோம். வரவேற்பாளரிடத்தில் புகார் செய்தால்,
தகவல் சொன்னால், அவருக்கும் கட்டுப்பட்டு பியூன்கள் நடக்கி
றார்களா என்பது சந்தேகமாக இருக்கிறது என்ற முறையில்
இருக்கிறது. ஏதோ அவர்களைக் குற்றம் சொல்லவேண்டுமென்று
நான் இதைச் சொல்லவில்லை. நம்முடைய ஹாஸ்டல் நிர்வாகம்
அப்படி இருக்கிறது. அதைச் சரியாக நிர்வகிப்பதற்கு என்ன
தடை இருக்கிறது என்பதைக் கவனத்திற்கு கொண்டு
வருவதற்குத்தான் நான் இந்த விவரத்தைச் சொல்கிறேன்.

அதேபோன்று, இவைகளைக் கவனிப்பதற்கு ஒரு ஹவுஸ் கமிட்டி
இருக்கிறது. இந்த ஹவுஸ் கமிட்டி சில நேரங்களில் கூடுகிறது.
பல விவாதங்கள் நடக்கின்றன. தீர்மானங்களும் செய்யப்படு
கின்றன. ஆனால், இந்தத் தீர்மானங்கள் நடைமுறைக்கு
வருகிறதா என்று பார்த்தால் நடைமுறையிலே வருவதில்லை.
அங்கே நல்ல உணவு கிடைப்பதற்கான ஏற்பாடு செய்யவேண்டும்
என்று, இன்னின்னாரைப் போடலாம் என்று தீர்மானம் செய்யப்
பட்டது. ஆனால், பின்னால் பார்க்கிறபோது பழைய ஆட்களே
அங்கே இருக்கிறார்களே தவிர, எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை
என்பது வேதனைக்குரிய ஒன்றாக இருக்கிறது.

ஒன்றரை மணிக்குச் சட்டசபை முடிந்து ஆங்கே செல்கிறோம்
என்றால் பசியோடு செல்கிறோம். வெளியே சென்று சாப்பிட்டு
வர நேரமில்லை. அங்கு போகிற நேரத்தில் ஏதாவது கிடைத்ததை
வாயில் போட்டுக்கொள்வது என்ற நிலையில்தான் சட்டமன்ற
உறுப்பினர்கள் இருக்கிறார்கள். நல்ல உணவு கிடைப்பதற்கான
வழியும், வாய்ப்பும் இல்லாத நிலைமை இருக்கிறது. இது
முக்கியமாகக் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டிய விஷய
மாகும்.

அங்கே இருக்கிற பியூன்கள் முறையாகக் காரியங்கள் செய்ய
இயலாத வகையில் எங்கெங்கிருந்தோ வேலை செய்ய அங்கு வருகி
றார்கள் என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு விடுதிப் பக்கத்தில்
தங்க ஏற்பாடு செய்வது அவசியமான ஒன்றாகும் என்று
சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இங்கே சட்டசபையில் இருக்கிற அங்கத்தினர்கள் ஏதோ
நேரத்தில் ஒரு காப்பி சாப்பிடுவதற்கு, தண்ணீர் குடிப்பதற்கு
நல்ல கிளாஸ் கிடையாது. அவ்வளவு மோசமாக இருக்கிறது.

நான் சமீபத்தில் இரண்டு நாட்களுக்கு முன்புகூடச் சொன்னேன். 10 கிளாஸ் வாங்கிப் போடுங்கள், இதற்கு எவ்வளவு ரூபாய் செலவாகிவிடும் என்று கேட்டேன். சட்டசபை உறுப்பினர்கள் தண்ணீர் குடிப்பதற்கு கிளாஸ்கள் என்று சொன்னால் நல்ல விதமாக கிளாஸ் இல்லாமல் பிளாஸ்டிக் கிளாஸ் இருக்கிறது. அதைப் பார்த்தால் குடிப்பதற்குத் தோன்றவில்லை. அந்த மாதிரிப் போட்டிருக்கிறார்கள். இதெல்லாம் சிறு விஷயங்கள் தான். ஆனால், கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டிய விஷயங்கள். கவனிக்க வேண்டிய விஷயங்கள். இந்தக் கஷ்டங்களை இந்த இடத்தில் சொல்கிறேன்.

இதேபோன்று இங்கே இருக்கிற பியூன்கள் பல வருஷங்களாக, 8 வருஷம், 10 வருஷங்களாக டெம்பரரியாக இருக்கிறார்கள். அவர்களை நிரந்தரமாக்கலாம். அப்படி நிரந்தரம் ஆக்குவதற்குப் பதிலாக அடுத்தாற்போல வருகிற சட்டசபைக் கூட்டங்களுக்கு அவர்களையே போடுகிறார்களாவென்றால் அதுவும் இல்லை. அவர்களை ஊஸ்ட் செய்து, புதுப் புது ஆட்களைப் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். அப்படி ஊஸ்ட் செய்து புதுப் புது ஆட்களைப் போடுவதால், எல்லோருமே புதிதாக வந்து விடுவதால் அவர்களுக்கு வழிமுறைகள் தெரிவதில்லை. ஒரு சமாச்சாரத்தை அல்லது ஒரு பேப்பரைக் கொடுத்தால் எங்கே கொடுக்கவேண்டுமென்று தெரியவில்லை. பழைய தோழர்களை, பியூன்களைத் தொடர்ச்சியாக வைத்துக் கொண்டு ஏதோ புதிதாக இரண்டொருவரைப் போட்டுக் கொள்ளலாம். (மணி அடிக்கப்பட்டது.)

எங்களுடைய கஷ்டமான விஷயங்களைப் பேசுவதற்கு நேரம் கொடுக்க வேண்டும். அவர்களை நிரந்தரமாக்க வேண்டும். பியூன்களை ஒவ்வொரு தடவையும் மாறி மாறிப் போடாமல், தொடர்ந்து இருந்து வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னொரு விஷயம், சட்டசபை உறுப்பினர்களுக்கு மற்ற மாநிலங்களிலேயெல்லாம் என்ன மாதிரியான வசதிகள் செய்து தருகிறார்கள், எவ்வளவு சம்பளம் தருகிறார்கள், அலவன்ஸ் தருகிறார்கள் என்பது ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும். விலைவாசிகள் ஏறிக் கொண்டேயிருக்கின்றன. நாங்கள் மற்றவர்களோடு சேர்ந்து





தலைமை தாங்கி அவர்களுக்காகப் போராட்டம் நடத்துகிறோம். எங்களுடைய போராட்டத்தை எங்கே நடத்துவது. இங்கேதான் நடத்தவேண்டியதாக இருக்கிறது. இந்த விஷயத்தைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும். தொகுதியில் எங்களுக்கு டெலிஃபோன் வசதி செய்துகொடுத்தால் நன்றாக இருக்கும். இதை நான் முன்பே கூறியிருக்கிறேன். இதை சபை கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும்.

லெட்டர்பேடு தருகிறார்கள். வெறும் காகிதம் தரப்படுகிறது. அதில் எங்கள் பெயர்களை அச்சடித்துக் கொடுத்தால் அதிகச் செலவு ஆகிவிடுமா? அப்படிக் கொடுத்தால் இன்னும் சிறப்பாக இருக்கும். இதிலே கவனம் செலுத்தவேண்டுமென்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

* **திரு. ஆ. கு. சுப்பையா** : தலைவரவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கிற கால்நடை மானியம் சம்பந்தமாக என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு விரும்புகிறேன்.

கால்நடை விவசாயிகளுக்கு மிக உதவியானது, துணையானதும் கூட. கிராமப் புறங்களில் இருக்கிற விவசாயிகள் கால்நடைகளை நம்பி வாழ்க்கை நடத்துகிறார்கள். அதுபோல, விவசாயிகளுக்குக் கால்நடை உதவியாக இருந்துகொண்டிருக்கிறது. இந்த முறையிலே நம்முடைய கால்நடை இலாகா வேலை செய்துகொண்டு வருகிறது என்பதை நாம் பார்க்கிறோம். நம்முடைய நாட்டில் இருக்கிற கால்நடைகளை அபிவிருத்தி செய்வதற்கு, கால்நடைகள் இன விருத்தியை அதிகமாக்கி, அதிகமான பால் கிடைக்க வேண்டி வெளி நாடுகளிலிருந்து கால்நடைகளை இறக்குமதி செய்கிறோம். அவ்வாறு செய்கிற ஒன்றிற்காக மிகக் குறைவான ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது போதுமானதல்ல.

இன்றைய தினம் நம்முடைய தமிழகத்திலே 4, 5 இனங்களைச் சேர்ந்த மாடுகள் இருக்கின்றன. ஒரு இனத்தைப் பார்த்தால் சுமைகளை இழுக்கும், உழும், அதே சமயத்தில் பால் அதிகமாகக் கொடுக்கும்.

மற்றொன்று, தஞ்சை மாவட்டத்தைப் போன்ற மாவட்டங்களிலே சகதிகளில் வேலை செய்யக்கூடிய உம்பளாச்சேரி

[திரு. கி. ஜெயராமன்] [1973 மார்ச் 27

அடுத்து, என்னுடைய நண்பர் திரு. ராஜமாணிக்கம் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கார் வாங்குவதற்குக் கடன் வழங்க வேண்டுமென்று கேட்டார்கள். அதோடு மற்றொரு உத்தரவையும் போடவேண்டும். நகரங்களிலே பணியாற்றுகின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு Scooter கிடைப்பதற்கும் உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

மேலும் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் பஞ்சாயத்துக் கவுன்சில் கூட்டங்களில் கலந்துகொண்டு வாக்களிப்பிலேமட்டும் கலந்துகொள்ளக்கூடாது என்ற நிலை இருக்கிறது. அதேமாதிரி நகராட்சிகளிலும் ,கார்ப்பரேஷன்களிலும் தொகுதிப் பணிகளைக் கவனிக்கும்பொருட்டு, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எந்த விதமான அஜெண்டாவும் அனுப்பிவைப்பது கிடையாது. மேலும் பஞ்சாயத்து கவுன்சில் கூட்டங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்வதைபோல நகராட்சிகள், கார்ப்பரேஷன்கள் கூட்டத்தில் கலந்துகொள்கின்ற வகையில் 'டிஸ்டிரிக்ட்' முனிசிபாலிட்டி ஆக்டை' திருத்தவேண்டும் அல்லது மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இன்னும் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அரசுக்குக் கொஞ்சம் தொகை செலவானாலும் கூட—இரயில்வே பாஸ் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். தொகுதியிலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் வீடுகளில் டெலிபோன் வசதியும் செய்து கொடுக்க வேண்டும். இப்போது சட்டமன்ற உறுப்பினர்கள் மன்ற நடவடிக்கைகளில் கலந்துகொள்ளும்போது கையெழுத்துப் போட வேண்டுமென்று இருப்பது கொஞ்சம் சிக்கலாக இருக்கிறது. ஆகவே, எனக்கு முன்னால் ஒரு நண்பர் சொன்னதுபோல் 5 நாட்களுக்கு ஒருமுறை கையெழுத்துப் போட்டால் போதும் என்று ஏற்பாடு செய்யவேண்டும்.

நீதிமன்றங்களின் விஷயத்தில் சொல்லவேண்டுமானால், நம்முடைய மாநிலத்தில் நீதிபதிகள் யாருக்கும் அஞ்சாத விதத்தில் செயல்படுகிறார்கள். நீதிமன்ற விவகாரங்களில் அரசு தலையிடுவதில்லை. பொறுப்பில் உள்ள சிலர் தங்கள் சொந்த நலனைக் கருத்தில் கொண்டு நீதிபதிகள் சரிவரப் பணியாற்றுவதில்லை என்று கூறி அவர்களை வெளியேற்ற வேண்டும் என்று சொல்வது சரியல்ல. அரசு இவ்விஷயத்தில் ஜாக்கிரதையாகக் கவனிக்க வேண்டும்.



1973 மார்ச் 27] [திரு. கி. ஜெயராமன்]

கிராம கோர்ட்டுகள் அனுமதிக்கப்பட இருக்கிற முயற்சியைப் பாராட்டுகிறேன்.

சிவில் ப்ரொசீஜர் கோடு-படி கடன்கள் வசூலிக்கப்பட முடியாமல் கோர்ட்டுக்குப் போனால், கோர்ட்டிலே டிகிரி வழங்கும் போது வாங்கிய கடனுக்கு 6 சதவிகிதம்தான் வட்டி கொடுக்க வேண்டுமென்று தீர்ப்பு வழங்கி விடுகிறார்கள். கடந்த 30 வருஷங்களாக இந்த முறைதான் இருந்து வருகிறது. அரசு இப்போது மக்கள் நன்மைக்காக ஏராளமான கடன்களைக் கொடுத்திருக்கிறது. அந்தக் கடன்களை வசூலிக்க முடியாமல் கோர்ட்டுக்குப் போனாலும் இதேமாதிரி அதாவது 6 சதவிகிதம் வட்டி வீதத்தில் வசூலிக்க வேண்டுமென்று தீர்ப்பு வழங்கிவிடுகிறார்கள். அதனால் அரசாங்கத்திற்குப் பெருத்த நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, எல்.ஐ.சி. போன்ற பொது நிறுவனங்களிலிருந்து கடன் வழங்கப்படும் போது எந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்கப்படுகிறதோ அதே விகிதத்தில் திருப்பி வசூல் செய்வதற்கு சிவில் ப்ரொசீஜர் கோடு படி தீர்ப்பு வழங்கத்தக்க வகையிலே சட்டங்களை மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, 'சப்ரஷன் ஆஃப் இம்மாரல் டிராபிக் ஆக்ட்' சரியாக இருக்கிறது. அதைப் பொதுமக்களின் நன்மைக்காகச் நடைமுறைப்படுத்துவதற்குப் போதுமான அலுவலர்களை நியமிக்க வேண்டும். மக்கள் இந்தமாதிரியான குற்றங்களில் ஈடுபடாமல் இருக்கத்தக்க வகையிலே வேண்டுமானால் விதிகளைக்கூட மாற்றியமைக்க வேண்டும். பொதுமக்களின் மேலான உதவியை அலுவலர்கள் நாடவேண்டும்.

மேலும் நம்முடைய கூட்டுறவு அமைப்புகளில் வழக்குகள் ஏற்படுகின்றபோது அல்லது கையாடல் நடைபெறுகின்றபோது நடவடிக்கை எடுப்பதற்காக ஆர்பிட்ரேஷன் முறையை வைத்திருக்கிறோம். இந்தமாதிரியான வழக்குகள் சிவில் கோர்ட்டுக்களுக்குப் போய் தாமதம் ஆகாமல் இருப்பதற்காக இந்த முறையை வைத்திருக்கிறோம். அதைச் சரியான முறையிலே நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டு அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்).

காளைகள் இருக்கின்றன. இதற்கு முக்கியத்துவம் கொடுககப் படாமல் இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்பு கிறேன். தஞ்சையிலே அதிக சகதிகள் இருப்பதால் உழுவதற்குப் பெரிய மாடுகளை வைத்து உழ முடியாது. அதன் காரணமாக உம்பளாச்சேரி காளைகள் பொருத்தமாக இருக்க முடியும். பால் கொடுக்கவில்லையென்றாலும், உழுவதற்கு உதவ முடியும்.

உம்பளாச்சேரி பண்ணையை அபிவிருத்து செய்து உம்பளாச் சேரி இனம் அதிகமாக விவசாயிகளுக்கு உதவி செய்யக்கூடிய அள விற்கு செய்யவேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இதற்கு முன்னாலே இந்த மாதிரியான கால்நடைகள் மும்முர கால் நடைத் திட்டம் என்று இருந்துகொண்டிருந்தது. இந்த மும்முறைந் திட்டமானது தஞ்சாவூருக்கு அவசியமானது. தஞ்சாவூரிலே கீ வில்லேஜ் செண்டர் என்று வைத்திருந்தார்கள். ஆலத்தாம்பாடி, வலிவலம், மண்ணார்குடி, சேவூர் போன்ற இடங்களில் இருந்த கீ வில்லேஜ் செண்டர்களை அறவே எடுத்து விட்டார்கள். இந்தமாதிரி செண்டர் இருப்பதன் காரணமாக உம்பளாச்சேரி இனக்காளைகள் வளருவதற்கு மிக உதவியாக இருந்தது. அது இல்லையென்று சொன்னால், மையக் கிராமத் திட்டம் அடிப்படையில் மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, பட்டுக்கோட்டை, அறந்தாங்கி ஆகிய தாலுகாக்களில் மையக் கிராமத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் யோசிக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே இன்றைக்கு செம்மறியாட்டு மேம்பாட்டுத் திட்டம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. தஞ்சை மாவட் டத்தில் மேட்டுப் பகுதியாக இருக்கக்கூடிய அறந்தாங்கி, பட்டுக் கோட்டைப் பகுதிகளிலும் அதைப்போலவே மன்னார்குடி, திருத் துறைப்பூண்டிப் பகுதிகளிலும் செம்மறியாட்டு மேம்பாட்டுத் திட் டத்தை அமல்படுத்தினால் விவசாயிகளுக்கு அது பேருதவியாக இருக்கும். அதையும் கவனிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப் பத்திலே அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு கிறேன்.

அடுத்தபடியாக, இந்த கால்நடை உதவியாளர்களின் எண் ணிக்கை இப்போது இருப்பது போதாது. இப்போது இருக்கக்



கூடியவர்களால் கால்நடைகளின் பராமரிப்பைச் சரியாகப் பார்வை யிட முடியாது. 2, 3, 4 கூட்டு மன்றங்களுக்கு ஒரு உதவியாளர் என்ற முறையில்தான் இப்போது இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே எல்லாக் கால்நடைகளையும் அவர்கள் பார்வையிடுவது என்பது மிகவும் கஷ்டம். எனவே அதிகமான கால்நடை உதவி யாளர்களை நியமிக்க வேண்டும். கால்நடைகளை விருத்தி செய் வதற்கு இன்னும் அதிகமான நிறுவனங்களையும் ஆரம்பிக்க வேண்டும். அதோடு இப்போது கால்நடை உதவியாளர்களுக்கு அளிக்கப்படுகின்ற சம்பளத்தைவிட அவர்களுக்கு இன்னும் அதிகமான சம்பளம் கொடுத்து, அவர்களை இந்தப் பணியில் ஊக்கத்தோடு செயல்படச் செய்யவேண்டுமென்று இந்த நேரத் திலே கேட்டுக் கொள்கிறேன்.

(திரு. நா. வீராசாமி தலைமை)

அதுமட்டுமல்ல. தினக்கூலிகள் ஆயிரக்கணக்கானவர்கள் இன்னும் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் நிரந்தரமாக்க வேண்டும். அம்மாதிரிச் செய்துகொடுத்தால் அவர்களுக்கு ஒரு பாதுகாப்பு ஏற்பட்டு வேலைக்கு உத்தரவாதம் ஏற்பட முடியும். ஆகவே, இந்தக் காரியங்களைச் செய்வதற்கு அரசாங்கம் முயற்சி களை மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. கி. ஜெயராமன்** : பேரவையின் மாற்றுத் தலைவரவர் களே, இன்றைக்குச் சட்டமன்றத்தின் முன்னால் தாக்கல் செய்யப் பட்டிருக்கின்ற கோரிக்கைகளை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அரசு இப்போது இலவச மருத்துவ வசதி அளிக்கிறது. அதைப்போலவே அவர்களுடைய குடும்பத்தினரும் நோய்வாய்ப்படும்போது இலவச சிகிச்சை பெறுவதற்கு வசதி செய்துகொடுக்க வேண்டும்.

சட்டமன்ற விடுதிகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் சட்ட மன்றம் நடைபெறும் நாட்களில் இலவசமாகத் தங்குவதற்கு அனு மதிக்கப்படுகிறார்கள். அதைப்போலவே சட்டமன்றம் நடை பெறாத நாட்களிலும் உறுப்பினர்கள் தங்கினால் இலவசமாகத் தங்குவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும்.

[திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி] [1973 மார்ச் 27

கொடுத்திருக்கின்றார்கள் என்று அறிகிறேன். எனவே இதை இங்கும் செய்து தரவேண்டும்.

அடுத்து, அனிமல் ஹஸ்பெண்டரியைப்பற்றி ஒரே ஒரு வேண்டுகோள் விடுக்க ஆசைப்படுகிறேன். மூன்று நான்கு ஆண்டுகளுக்கு முன்பு நமது மாநிலத்தில் 'ஷீப் கோ-ஆபரேடிவ் ஃபார்மிங்' ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று அரசின் பரிசீலனை யில் இருந்து வந்தது. ஏனோ இதுவரையில் அதைச் செயல் படுத்த அரசு முனையவில்லை. இதற்கு வேண்டிய நிதியை நம் நாட்டின் 'அக்ரிகல்சுரல் ரீ பைனான்சிங் கார்ப்பொரேஷன்' தர வில்லை என்கின்றார்கள். இராமநாதபுரம், அருப்புக்கோட்டை, முதுகுளத்தூர் பகுதிகளில் இப்படிப்பட்ட கேட்டில் ஃபார்ம்ஸ், ஷீப் ஃபார்ம்ஸ் ஆரம்பித்தால் அவர்களுக்கு மிக உதவியாக இருக்கும். அங்கே அவர்களாகவே இப்படிப்பட்ட கோ-ஆபரேடிவ் ஃபார்ம்ஸ் ஆரம்பிக்க முடியவில்லை. எனவே ஏ.ஆர்.சி.யிலிருந்து நிதி உதவி கிடைக்காவிட்டாலும்கூட நமது மாநிலத்தின் பண உதவி கொண்டாவது இவற்றைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து இன்னும் ஒன்றைமட்டும் குறிப்பிட்டுவிட்டு என் உரையினை முடித்துக் கொள்கிறேன்.

இப்போது நமக்கென இருக்கும் சட்டமன்ற நூலகம் உள்ள இடம் மிகவும் சிறியதாக இருக்கின்றது. அது உண்மையிலேயே நூலகம் போன்று இல்லாமல் ஒரு சிறிய வாசக சாலை போன்று தான் இருக்கிறது. எனவே தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டு இதைச் சீக்கிரம் விரிவுபடுத்தி இட வசதி மற்ற வசதிகளை விரிவு படுத்திக் கொடுத்து இதை ஒரு சிறந்த நூலகமாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையினை முடித்துக்கொள்ளு கிறேன். வணக்கம்.

* Thiru K. M. SUBRAMANIAM : Sir, sometime back letters were appearing in the Press criticising the huge income derived by the legislators and I am surprised and shocked to see the ignorance of these people who have been writing these letters. So far as I am concerned and this legislature is concerned, we are given a salary of Rs. 350 and a sitting fee of Rs. 20 per day. Unfortunately in the press, letters were appearing saying we were



1973 மார்ச் 27] [Thiru K. M. Subramaniam]

clearing Rs. 20,000 or Rs. 30,000 per year. At the outset I want to dispel that wrong impression.

I agree with many hon. Members that there is a case for increasing the remuneration to Rs. 350. It is some thing on which a legislator cannot discharge his responsibility as a legislator. Even a tiny State like Tripura is paying its Members Rs. 500 a month. Tamil Nadu Government which is getting Rs. 465 crores per year, should see that legislators are paid reasonably well. Some hon. Members raised the question of car. There are many people who cannot afford to buy a car; but without it, it is impossible to discharge the responsibility of a legislator. Government could at least finance the purchase of a car and receive the money in fairly reasonable instalments. These are the two things I have to say.

Coming to the establishment of a legislator, in U.K. Parliament they have got allowances for clerical assistance. But here we have to do clerical work, peon's work. I draft, I type and I take the letter to the Slum Clearance Board and that is how I do the work. I do not know how people can discharge their responsibi- lities legislators without clerical assistance.

Coming to Animal Husbandry, I am glad that lot of money is now being spent. But so far as the city is concerned, we know thousands of skulls of dead calves are carried and placing them before the cow, milking is done. I do not know whether the Hon. Minister has seen such deplorable sight. It is proposed to shift cattle from the city. Before that it is the duty of this Government to provide cattle sheds. Some sheds are there but it is like 'dhobikanas'. They are not looking very well. Corpora- tion is not doing it well and Animal Husbandry should take up the responsibility to have proper cattle sheds. The cattle popu- lation is 25 per cent of the human population. They should be given proper facilities. The artificial insemination is failing in many cases. I have got personal experience of taking the cow to veterinary hospital five or six times a year. Even after a year, it had not become pregnant.

*The Hon. Thiru K. ANBHAZHAGAN : The hon. Member is saying that after atificial insemination, the cow is not getting

[Thiru K. Anbhazhagan] [1973 மார்ச் 27

pregnancy. Even in such cases, it may be due to some disease of the cow or in some cases even if there is proper service, the actual result is not fruitful as it is the case even in natural service.

* THIRU K. M. SUBRAMANIAM : I entirely agree with the Hon. Minister. If that is the case, it should be analysed by the doctor and properly diagnosed. Proper remedy should be given. We do not get that kind of response from the department. That is what I want to say. Not only in regard to artificial insemination but even in regard to natural insemination, this is the case. It may be due to defect of the cow. I do not deny. But all these things shoud be attended to properly by the departmental people. So many depots are there. I do not say that they are not doing any work. I do not want to criticise them. They must give proper attention to cases.

Coming to another point, the cost of fodder in the City—(Oh, God what an increase) has increased during the last three months by about 40 per cent. Of course, fortunately wheat bran is supplied in the ration shops. We receive supplies of wheat bran from the Government depots. But what about other things? They are so costly. If you want to get good milk, you will have to pay Rs. 3 or Rs. 4 per measure. This is the state of affairs now prevailing in the City of Madras. So, it is very necessary that the prices of fodder should be controlled just like the prices of other essential commodities. The first thing is that the price of food articles should be controlled. As I stated earlier, the prices of cattle feed should also be controlled. This department is a very important department. I think the Government should not only sanction money but they sould see that the entire money is properly and well spent. Then only there will be real worth for the money spent.

Thank you, Sir.

*** காதர் பாட்சா என்ற வெள்ளைச்சாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நமது அவையில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிற மானியங்களை ஆதரித்து எனது கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.



1973 மார்ச் 27] [திரு. காதர் பாட்சா என்ற வெள்ளைச்சாமி]

கடந்த சில ஆண்டுகளாகக் கால்நடைத்துறையில் நாம் அதிக
மான அளவுக்கு முன்னேற்றம் கண்டுவருகிறோம். இப்போது
புதிய முறையில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் கால்நடை
உதவியாளர்கள் என்பதாக நியமித்து சப்சென்டர்கள், ஐந்தாறு
ஊராட்சிகளுக்கு ஒரு துணை மையமாக, வைத்து செயலாற்றி
வருகிறார்கள். பெரும்பாலான சப்-சென்டர்கள் இருக்கின்றன.
அந்த ஊரிலேயே அந்தக் கால்நடை மருத்துவர் தங்குவதில்லை.
பக்கத்தில் உள்ள நகரங்களில் தங்குகிறார்கள். கால்நடைகளையே
தெய்வமாக மதிக்கக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்கள் கால்
நடைக்கு நோய் என்றால் உடனடியாக அவர்களைச் சென்று
பார்த்து கால்நடைகளுக்குச் சிகிச்சை செய்ய முடியாத நிலை
இருக்கிறது. அந்த உதவியாளர்கள் ஆங்காங்கே தங்கவேண்டும்
என்பதாகச் செய்யவேண்டும்.

அதோடு நான்கு ஆண்டுகளுக்கு முன்பாக ஊராட்சி ஒன்றிய
ஆணையர்களிடம் அந்த அந்த சப்-சென்டர் வைத்தியர்கள் அந்த
மாதங்களில் தாங்கள் செய்த சுற்றுப்பயணம், சிகிச்சை செய்த
கால்நடைபற்றிய விவரங்கள் ஆகியவற்றைத் தெரிவிக்கிற
பழக்கம் இருந்தது. இப்போது ஒவ்வொரு டிவிஷனுக்கும் உதவி
இயக்குநர் என்று நியமித்து, அவர்களுடைய பார்வையின்கீழ்
இந்த உதவியாளர்கள் வருவதால் இவர்கள் ஊராட்சி ஒன்றிய
ஆணையரிடம் முன்போல் எதுவும் தெரிவிப்பதில்லை. ஊராட்சி
ஒன்றியக் குழுக் கூட்டங்களில் கலந்துகொள்ளாத நிலைமைகூட
இருக்கிறது. அப்படியின்றி அவர்கள் ஒவ்வொரு கூட்டத்திற்கும்
சென்று ஊராட்சித் தலைவர்கள், ஒன்றியத் தலைவர்கள், ஆணையா
ளர்கள் சொல்கிற கருத்துக்களையும் கேட்டுக்கொள்ள வசதி ஏற்
படுத்த வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பெரும்பாலான துணை நிலையங்களில் மருந்துகள் இல்லை என்ற
குறைபாடு இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்ட வளர்ச்சி
மன்றக் கூட்டத்தில் அங்கு இருக்கிற துணை இயக்குநர் அவர்
களையும், உதவி இயக்குநர்களையும் அழைத்து மருந்து பற்றாக்குறை
என்ன இருக்கிறது என்பதைக் கண்டு அறிந்து, அரசாங்கத்
திற்குத் தீர்மானமே போட்டு அனுப்பினோம். அந்தக் குறை
இன்றுவரை நிவர்த்திக்கப்படவில்லை. உடனடியாகத் துணை நிலையங்
களுக்குத் தேவையான மருந்துகள் சப்ளை செய்யப்பட வேண்டும்
என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி :** பேரவையின் மாற்றுத் தலைவரவர்களே, இன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கும் எல்லா மானியங்களையும் ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அமைச்சர்கள் எல்லாம் இப்போது நமது கொள்கைப் பிரகாரம் அம்பாசிடர் கார்களிலேதான் போய்க்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நான் ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். இதை விளையாட்டாகவோ அல்லது வேடிக்கையாகவோ சொல்லவில்லை; மக்கள் நலன்களுக்காக அவர்கள் நீண்டநாள் உடல்நலத்தோடு பணியாற்றவேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு சொல்கிறேன். பொதுப் பணிகளிலே ஈடுபட்டிருப்பவர்கள் அடிக்கடி சுற்றுப் பயணம் செய்யக்கூடியவர்கள் நல்ல வசதியான முறையில் பிரயாணம் செய்தால்தான் உடல்நலம் நன்றாக இருக்கும்; உடல் அசதி குறைவாக இருக்கும். அப்படி இருந்தால்தான் அவர்கள் நீண்ட நாள் உடல் நலத்தோடு இருக்க முடியும். இதற்கு முன்னால் இருந்த அமைச்சர்கள் எல்லாம் அதனால்தான் பெரிய கார்களில் சுற்றுப்பயணம் செய்தார்கள். நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள்கூட வசதியான பெரிய காரிலே சுற்றுப்பயணம் செய்திருந்தால் இன்னும் கொஞ்ச நாள் உடல் நலத்தோடு இருந்திருப்பார்கள். பெரிய கார்களிலே நாம் சென்றால் மக்கள் என்ன நினைப்பார்கள் என்று யாரும் எண்ணவேண்டாம். மக்களுக்கு அது நன்றாகத் தெரியும். அப்படி யாராவது குறை சொல்வதாக இருந்தாலும் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை.

பொது வாழ்வில் ஈடுபட்டிருப்பவர்கள், மக்கள் நலனுக்காக உழைப்பவர்கள் முதலில் தங்கள் உடல்நலத்தைத் திடகாத்திரமாக வைத்துக்கொண்டால்தான் நீண்ட நாள் சேவை செய்யமுடியும். நான்கூட மதுரையிலிருந்து சில சமயங்களில் அம்பாசிடர் காரில் வந்திருக்கிறேன். அப்போது ஏற்படுகின்ற உடல் அசதியையும் உணர்ந்திருக்கிறேன். ஒருநாள், இரண்டு நாள் அம்பாசிடர் காரில் வரும்போதே இப்படி இருந்தால் அடிக்கடி சுற்றுப்பயணம் செய்கிறவர்களுக்கு எப்படி இருக்கும் என்பதை என்னால் நன்றாக உணர முடிகிறது. ஆகவே, அமைச்சர்கள் ஊர் செல்லும்போது மக்கள் குறை சொல்வார்களே என்றோ அல்லது மற்றவர்கள் குறை சொல்வார்களே என்றோ எண்ணாமல் வசதியான பெரிய கார்களில் செல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



இதுபோன்று நான் அங்கத்தினர்களுக்காகவும் ஒரு வேண்டுகோளை இங்கே விடுக்க விழைகின்றேன். அங்கத்தினர்களுக்கு இலவசமாகத் தொலைபேசி வசதிசெய்து தரப்படவேண்டும். அவர்களுக்கு ஒரு கிளார்க் வேண்டும் என்று நீண்ட காலமாகக் கேட்கப்பட்டு வருகின்றது. நானும் அக்கோரிக்கைகளை என் கட்சியின் சார்பிலே வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இவை இருந்தால் இன்னும் மிகச் சிறந்த முறையில் தொகுதி மக்களுக்குச் சேவை செய்ய முடியும். கிளார்க் அல்லது டெலிபோன் வசதிகளை ஒருசிலர்தான் சொந்தச் செலவில் வைத்துக்கொள்ள முடியும். எல்லா அங்கத்தினர்களாலும் முடியும் என்று சொல்லுவதற்கில்லை. எனவே இந்தக் குறைந்த பட்ச வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும்.

இதுபோல இப்போது அங்கத்தினர்கள் கார் வாங்க வேண்டுமானால் ஒரு சில உதவிகளையும் சலுகை--அதாவது முன்னுரிமைகளையும் அரசு செய்து கொடுக்கின்றது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆனால் எல்லா அங்கத்தினர்களாலும் கார் வாங்கிக்கொள்ள முடியுமா என்பது சந்தேகமே. எனவே அப்படிக் கார் வாங்க முடியாத நிலையில் உள்ளவர்கள் விரும்பினால் அவர்கள் காருக்குப் பதிலாக ஸ்கூட்டர் வாங்கிக்கொள்ளத்தக்க வகையில் கார் வாங்குவதற்கு என்னென்ன சலுகைகளை அல்லது உதவிகளை அரசு செய்துகொடுக்கின்றதோ அவற்றை இந்த ஸ்கூட்டர் வாங்குவதற்கும் விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஸ்கூட்டர் இருந்தால் அங்கத்தினர் தொகுதியில் பல இடங்களுக்கும் சென்று சிறந்த முறையில் மக்களுக்குத் தொண்டாற்ற உதவிகரமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்னும் ஒன்று. மாண்புமிகு அங்கத்தினர்களுக்கு இரயிலில் பயணம் செய்ய இலவச ‘பாஸ்’ தரப்பட வேண்டும் என்ற கோரிக்கை நீண்டநாட்களாக இருந்துவருகிறது. இதையும் அரசு பரிசீலிக்க வேண்டும். இதை வைத்துக்கொண்டு அங்கத்தினர்கள் தங்கள் பணிகளை இன்னும் வேகமாகப் பல பகுதிகளுக்கும் சென்று, அலுவல்களைக் கவனிக்க முடியும். அவசியமின்றி யாரும் இவற்றை வைத்துக்கொண்டு பயணம் செய்யப் போவதில்லை. பல மாநிலங்களிலே இந்த வசதிகளை அங்கத்தினர்களுக்குச் செய்து

[திரு. காதர் பாட்சா என்ற வெள்ளைச்சாமி] [1973 மார்ச் 27

அடுத்து, கிராமப்புறங்களில் கால்நடைகளுக்கு நோய் வந்தால் அவற்றை மருந்தகங்களுக்கு எடுத்துச் செல்ல வசதி இல்லாத காரணத்தினால் மருத்துவர்களே அங்கே வரவேண்டியதாக இருக்கிறது. பஸ் வசதி இல்லாத இடங்களும் இருக்கின்றன. ஆகவே ஒவ்வொரு மருந்தகத்திற்கும் கூடுமான வரையில் ஜீப் அல்லது வேன் வசதி செய்துதர வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். ப்ரைமரி ஹெல்த் சென்டர்களுக்கு இப்போது அளிக்கப்பட்டுள்ளதுபோன்ற வசதி இதற்கும் உடனடியாகத் தேவைப்படுகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

முதுகுளத்தூர் தாலுக்காவில் ஐந்து கூட்டுறவு ஆட்டுப் பண்ணைகள் அமைக்கப் பதிவாகி இருக்கிறது. நிதிகோரி மேலே அனுப்பப்பட்டிருக்கிறது. பண்ணைகள் அமைக்க இதுவரை அரசு அனுமதி கிடைக்கவில்லை. அரசாங்கத்தின் அனுமதியை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. இராமநாதபுரம் செம்மறியாடு மிகவும் பெயர் பெற்றது. அங்கே இருந்துதான் மற்ற இடங்களுக்கு எல்லாம் இராமநாதபுரம் செம்மறியாடு போகிறது. கமுதியிலிருந்து மேற்குத் திசையில் 7 மைல் தூரத்தில் ஆட்டுப் பண்ணை வைப்பதற்கு ஆயிரக்கணக்கான ஏக்கரா நிலங்கள் இருக்கின்றன. ஆகவே உடனடியாக இராமநாதபுரம் செம்மறியாடுகளை நல்ல முறையில் வளர்க்கவும், அவற்றை மாநிலத்தின் பிற பகுதிகளுக்கு அனுப்பி வைக்கவும் ஏற்ற வகையில் அங்கே புதிய 5 ஆட்டுப் பண்ணைகளையும் ஏற்படுத்தித் தரத் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சட்டமன்றம் என்ற தலைப்பில் ஒருசில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் உணவு நிலையம் மிக மோசமாக இருக்கிறது. அங்கே இருக்கிற உணவு விடுதியை நல்ல முறையில் சீரமைத்துத் தரும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மற்ற மாநிலங்களில் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு அதிகமான சம்பளம், படி எல்லாம் வழங்கப்படுகிறது. மகாராஷ்டிரா, மத்தியப் பிரதேசம் ஆகிய இடங்களில் ரூ. 600, 500 சம்பளம் கொடுக்கப்படுகிறது. அதைப்போலவே பொதுவாழ்வில் ஈடுபட்டிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாதச் சம்பளத்தையும் படியையும் கட்டித் தரவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.



1973 மார்ச் 27] [திரு. காதர் பாட்சா என்ற வெள்ளைச்சாமி]

டெலிபோன் வசதி
மேலும் எல்லா உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக்
செய்து கொடுக்கப்பட வேண்டும் என்பதாகவும்
கொள்கிறேன்.

மற்ற மாநிலங்களில் ரயில்வே ப்ரீ பாஸ் கொடுக்கிறார்கள்.
பிற மாநிலங்களில் பத்தாயிரம் கிலோமீட்டர் போவதற்கும்கூட
இலவச பாஸ் வழங்குகிறார்கள். அதுபோல பிற மாநிலங்களுக்குப்
போக வழங்காவிட்டாலும் நம்முடைய மாநிலத்திற்குள்ளேயே
பிரயாணம் செய்ய வசதியாக ரெயில்வே ப்ரீ பாஸ் தரவேண்டும்
என்பதாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் தலையணை உறை,
பெட்ஷீட் ஆகியவற்றை அடிக்கடி சலவைக்குப் போட்டு மாற்ற
வேண்டும் என்பதாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரவு நேரங்களில் திடீரென்று உடல் நோயுற்றால் உடனடியாக
மருத்துவர் வசதி கிடைக்கக்கூடிய வகையில் ஆஸ்டலுக்குப் பக்
கத்தில் ஒரு மருத்துவர் இருக்க வழிசெய்ய வேண்டும் என்பதாகத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

க்ளாஸ் டம்ளர்கள்,
ஒவ்வொரு அறையிலும் நான்கைந்து
ப்ளாஸ்க் ஆகியவை இருக்க வழி செய்ய வேண்டும்.

சன்னல்களுக்குப் போடப்படுகிற கம்பிகள் வழியாகத் திருடிப்
போகிறார்கள். இரண்டு கைகளையும் விட்டு உள்ளே இருக்கும்
சாமான்களை எடுத்துப் போகக்கூடிய நிலை இன்றைக்கு இருக்கிறது.
ஆகவே சன்னல்களுக்குக் கம்பி வலைகள் போடப்பட வேண்டும்
என்பதாகத் தெரிவித்துக் கொள்கிறேன்

அதோடு அவைக் குழு ஒன்றுதான் மற்ற மாநிலங்களுக்குப்
போகாத குழுவாக இருக்கிறது. நம் மாநிலத்திலேயே வேறு
இடங்களுக்குப் போகாது சென்னையிலே இருக்கிறது. மற்ற
மாநிலத்திற்கும் சென்று அங்குள்ள விடுதிகள் எந்த வகையில்
நடத்தப்படுகின்றன என்பதைப் பார்த்துவர ஏற்பாடு செய்தால்
தான் அங்குள்ளதுபோல இங்கும் பல வசதிகளை ஏற்படுத்த வசதி
யாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நேரமாகிவிட்டது.
அடுத்த முறை போவோம்.

***காதர் பாட்சா என்ற வெள்ளைச்சாமி**: நீதித் துறையை எடுத்துக் கொண்டால்—முதுகுளத்தூர் தாலுக்கா மிகவும் பிற் பட்ட பகுதி—டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டுக்குப் போக வேண்டு மானால் பரமக்குடிக்குத்தான் போகவேண்டியிருக்கிறது. முது குளத்தூர் பெரிய விஸ்தீரணமான பகுதி—990 சதுர மைல் உள்ள பகுதி. ஆகவே முதுகுளத்தூரிலேயே ஒரு டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட் ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கமுதி தனித் தாலுக்காவாக இயங்கி வருகிறது. ஆகவே, அங்கே ஒரு சப் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் ஏற்படுத்த வேண்டும். 100 ரூபாய்க்கு உட்பட்ட சிவில் வழக்குகளை எல்லாம் நடத்த ஊராட்சி கோர்ட்டு களையும் ஆங்காங்கே ஏற்படுத்தித் தரவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொண்டு மானியக் கோரிக்கைகளை ஆதரித்து முடிக் கிறேன். வணக்கம்.

***திரு. நா. வெ. குருசாமி**: துணைத் தலைவரவர்களே, சட்ட மன்ற மானியக் கோரிக்கைமீது என்னுடைய சார்பிலும், என்னு டைய கட்சியின் சார்பிலும் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மா னங்களை ஆதரித்துச் சில வார்த்தைகளைச் சொல்ல ஆசைப் படுகிறேன்.

சட்டமன்றத்தில் பல முறைகளில், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோருக்கும், குறிப்பாக ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள், எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்கள் என்ற பாகுபாடு இன்றி உரிய மதிப்புக்கொடுக்க முடியும் என்று சில நாட்களுக்கு முன்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூடச் சொன்னார்கள். இங்கேதான் அப்படிப் பேசப்படுகிறதேதவிர மற்ற இடங்களில் அப்படி நடப்பது இல்லை.

சட்டமன்ற உறுப்பினர்களிடம் ஆளும் கட்சியைச் சார்ந்த வர்கள், எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் என்ற பாகுபாடுடன் தான் மற்ற இடங்களில் நடந்து கொள்கிறார்கள். குறிப்பாகச் சொல்லப்போனால், 4, 5 நாட்களுக்குமுன் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு வந்தார்கள். அந்த விழா நடந்த இடம் என்னுடைய ஊருக்குப் பக்கத்திலேயே இருக்கிறது. அந்த விழா நடக்கும் இடம் என் தொகுதியில் இருக்கிறது. அந்த விழாவில் எந்தவிதமான முக்கியத்துவமும்





எனக்குக் கொடுக்கப்படவில்லை. அதை நான் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு தந்திமூலம் தெரிவித்து இருக் கிறேன்.

***மாண்புமிகு திரு. க. அன்பழகன்**: உங்களுடைய தந்தி கிடைத்தவுடன் நீங்கள் சென்னையில் இருப்பீர்கள் என்று எதிர் பார்த்து, உங்களை 3, 4 தடவை திரு. நா. வீராசாமி அவர்கள் மூலமாக இரவு 8 மணி முதல் 10 மணிவரை தொலைபேசிமூலம் தொடர்புகொள்ள முயற்சித்துப் பார்த்தேன். நீங்கள் கிடைக்க வில்லை, அந்த நிகழ்ச்சி சில நாட்களுக்கு முன்பாகவே ஏற்பாடு செய்யப்பட்டுவிட்டதாலும், அதோடு இணைத்து வேறு சில நிகழ்ச்சிகளும் இருந்த காரணத்தாலும் சட்ட மன்ற உறுப்பினருக்குத் தெரிவிக்காதது குறை என்றாலும், பஞ்சாயத்து ஒன்றியத்தின் தலைவர் அந்த ஒன்றியத்தின் சார்பாக அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தைத் திறப்பது அன்றைக்கே நடக்க வேண்டு மென்று விரும்பியதாலும், தொகுதி சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரிவிக்க மறந்து விட்டார்கள் என்பதை உறுப்பினருக்கு அரசாங்கத்தின் சார்பாகத் தெரிவிக்கலாம் என்று முயற்சி எடுத்துக்கொண்டேன். நான் புறப்படும்முன் அழைத்துச் செல்ல லாம் என்று கூட நினைத்தேன். ஆனால் உறுப்பினர் கிடைக்கவில்லை. காலையில் விமானத்தில் சென்று மாலையில் அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டேன். உங்களுடைய செய்தி அறிந்து, உங்களுக்குத் தெரிவித்து அழைத்துச் செல்ல வாய்ப்பு இல்லை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே**: நண்பர் திரு. குருசாமி அவர்கள் சொல்வது எல்லாம் அந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தவர்கள் அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களை அழைக்க வில்லை என்பதாகும். அந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தவர்கள் பாமிலி பிளானிங் இலாகாவாகும். குறிப்பாக ஒரு நிகழ்ச்சி நடந்தால் அதில் எம்.எல்.ஏ. பேரும் இணைக்கப்படும். அதைச் செய்யாமல் அங்கே இருக்கும் பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர்களின் பெயரைப் போட்டிருக்கிறார்கள், அங்கேயிருக்கும் அதிகாரிகளின் பெயரைப் போட்டிருக்கிறார்கள். அதிலே, கடைசியாக நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சிக்குக்கூட ஒரு டாக்டர் பெயர் போடவில்லை. அதற்குப்பதிலாக அங்கேயிருக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் போட்டிருக்கிறார்கள். இந்த இலாகாவில் சம்பந்தப்பட்ட

டாக்டர்களைப் போடவில்லை. அங்கேயிருக்கும் சட்டமன்ற உறுப்பினருக்கு எந்த விதமான முக்கியமான பங்கும் கொடுக்காமல் அவர் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார் என்று சொல்கிறார்.

* **மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, பொதுவாகத் தொகுதியில் நடைபெறுகிற காரியங்களுக்குச் சட்டமன்ற உறுப்பினர்களை அழைக்கவேண்டுமென்று இலாகாவினருக்குத் தெரிவித்துக்கொண்டுதான் இருக்கிறோம். அவர்களைச் சந்திக்க முடியாததால் விட்டுவிட்டதாகச் சொன்னார்கள். பொதுவாகச் சட்டமன்ற உறுப்பினர்களை அழைப்பது என்பதைக் கட்டாயப்படுத்த முடியாது. அதைக் கட்டாயப்படுத்திக் கேட்பது என்பது சரியாகாது. ஒன்றியத் தலைவரின் பொறுப்பில் ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. அவர்கள் விட்டுவிட்டார்கள் என்று சொன்னால், அமைச்சர்கள் சட்டமன்ற உறுப்பினர்களையும் அழைத்துச் சென்றுதான் நடத்த வேண்டும் என்று கூற முடியாது. அந்தத் தவறைச் சுட்டிக் காட்டித் திருத்த முயற்சிக்கலாம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** ஒன்றியத் தலைவர்மீது குற்றம் சாட்டவில்லை. அந்த விழாவில் சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்கிறார்கள் என்று போட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய பெயர் போடவில்லை. அவர்கள் அழைக்கப்படுகிறார்கள். அழைக்கப்படுகிறார்களேதவிர அந்த விழாவில் அவர்களைச் சம்பந்தப்படுத்தவில்லை. அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. நேற்று மதிப்பிற்குரிய திருமதி அனந்தநாயகி அவர்களுக்குக்கூட அங்கே ஒரு பங்கு கொடுக்கவில்லை என்று சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் நான் எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருந்தேன். ஒரு முறை கூட எந்த அமைச்சரும் நிகழ்ச்சிகளுக்கு அழைக்கவும் இல்லை, கூப்பிட வேண்டுமென்று நாங்கள் கூறவும் இல்லை. ஆனால் நாங்கள் எந்த நிகழ்ச்சி நடந்தாலும், அந்தத் தொகுதியில் உள்ள சட்டமன்ற உறுப்பினரை அழைக்கவேண்டுமென்று அதிகாரிகளிடம் தெரிவித்திருக்கிறோம். ஓரிரு இடங்களில் தவறு ஏற்படுகிறது. அதையும் திருத்திக்கொண்டு வருகிறோம்.





* **திரு. நா. வெ. குருசாமி :** எடுத்ததற்கெல்லாம் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் என்று சொல்கிறீர்கள். இப்போது நடைபெறுவதைப்பற்றித்தான் நான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இரண்டு நிமிடம் தான் இருக்கிறது. சீக்கிரம் முடித்து விடுங்கள்.

**திரு. நா. வெ. குருசாமி :** குறுக்கீடுகள் காரணமாக நேரம் அதிகமாகக் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உங்கள் தலைவர்தான் பேசி இருக்கிறார்.

* **திரு. நா. வெ. குருசாமி :** அங்கே ஒன்றியத்தின் சார்பாக அந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது என்று சொன்னார்கள். அரசாங்கச் சார்பாக நடைபெறுகிற விழாதான் அது. மாவட்ட குடும்ப நலத் திட்டத் துறை அதிகாரிதான் அதை அச்சிட்டுக் கொடுத்திருக்கிறார். அப்படியிருக்கும்போது அது அரசாங்கத்தின் குறையாகத்தான் இருக்கவேண்டுமென்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் சட்டமன்ற உறுப்பினராக சுதந்திராக் கட்சியின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும், பல்வேறு கட்சி உறுப்பினர்களுடனும் சேர்ந்து நல்ல முறையில் தொகுதியில் பணியாற்றி வருகிறேன். இம்மாதிரியாக வேண்டுமென்றே சில அதிகாரிகள்தான் பாகுபாடு செய்கிறார்கள். மேலும் அந்த விழாவில் நன்றி கூறுவதற்கு அங்கே உள்ள ஒன்றியக் கமிஷனரைத்தான் கூப்பிட்டார்களேதவிர, அங்கே ஒரு டாக்டர் கூட கிடைக்கவில்லையா என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதை முழுக்க முழுக்கக் கட்சியின் விழாவாகத்தான் கொண்டாடினார்களேதவிர பொது நிகழ்ச்சியாக அதைக் கருதிக் கொள்ள முடியவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே, சட்ட மன்ற விடுதியில் உள்ள செயல்முறைகளையும் இங்கே பல உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். நானும் சொல்லலாம் என்று நினைக்கிறேன். அங்கே சட்டமன்ற விடுதியில் உள்ள லிப்டில் சட்ட மன்ற உறுப்பினர்கள் ஒழுங்காகச் செல்ல முடியவில்லை. எப்போது பார்த்தாலும் அதிகக் கூட்டமாக இருக்கிறது. ஓரளவுக்கு அதைக் கட்டுப்படுத்தி, வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. நா. வெ. குருசாமி] [1973 மார்ச் 27

சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே வருவதற்கு பஸ்விடப்படுகிறது. அதிலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று பஸ் போட்டிருக்கிறதேதவிர அந்த பஸ்ஸிலே சட்டமன்ற உறுப்பினர்கள் ஒழுங்காகப் போக முடியவில்லை.

சட்டமன்ற விடுதியில் ஒரு ஓட்டல் இருக்கிறது. ஒரு பழமொழி சொல்வார்கள். அப்துல் காதருக்கும், அமாவாசைக்கும் என்ன சம்பந்தம் என்று. அதுபோல் அங்கே உள்ள விஜிடேரியன் ஓட்டலை முஸ்லீம் வைத்தால் எப்படி இருக்கும் என்பதை உணர்ந்து அந்த ஓட்டலை நல்ல முறையில் நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதியைச் சுற்றிப் பார்ப்பதற்கு ஒன்றியத்தின் ஜீப் மாதத்திற்கு 4 நாட்கள் கொடுத்தால் நல்ல முறையில் அவர்கள் தொகுதி வேலையைக் கவனிக்க முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு மருத்துவ வசதி செய்துதரவேண்டும். மற்ற மாநிலங்களில் இது செய்துதரப்பட்டுள்ளது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு டெலிபோன் வசதி செய்துதரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. நா. வீராசாமி :** அப்துல் காதருக்கும் அமாவாசைக்கும் என்ன சம்பந்தம் என்று பழமொழி இருப்பதாகச் சொல்லி, சட்டமன்ற விடுதியில் உள்ள ஓட்டலை முஸ்லீம் நடத்துவதாகச் சொன்னார்கள். முஸ்லீம் அதை நடத்துவதால் அங்கே வைக்கப்படும் சாம்பார் குருமா மாதிரி இருக்கிறது என்று சொல்லி அதிகம் பேர் சாப்பிடுவதாகச் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உங்களுக்கு அதிலே என்ன சம்பந்தம் இருக்கிறது? திரு. அப்துல் ஜப்பார் பேசுவார்.

* **திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இன்று இந்த அவைமுன் இருக்கின்ற கோரிக்கைகளை வரவேற்று ஒரு சில கருத்துக்களைச் சொல்லிக் கொள்கிறேன். இந்தக் கோரிக்கைகளிலே கால்நடைக்கு உண்டான கோரிக்கையும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கான கோரிக்கையும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டுக்கும் என்ன ஒற்றுமை என்று எனக்குத் தெரியவில்லை.



1973 மார்ச் 27]

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** கால்நடை கோரிக்கை தனி. சட்டமன்றக் கோரிக்கை தனி. தனித்தனியாகத்தான் கோரிக்கைகள் வந்திருக்கின்றன. அங்கத்தினருக்கு என்ன காரணத்தால் சந்தேகம் வந்தது என்று எனக்குத் தெரியவில்லை.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** இதிலே சட்டமன்றத் துறையும், சிறைச்சாலையும் சேர்ந்திருக்கிறது என்று நான் உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, நடுவிலே நீதி இருக்கிறது.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** ஆக சிறைவாசம் போன்ற வாழ்வுடையவர்களுக்கு நீதி கிடைத்ததால் சட்டமன்றம் வந்திருக்கிறார்கள் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். கால்நடைகள் எப்படி உள்ளத்தில் இருப்பதை வெளிப்படையாக எடுத்துச் சொல்ல முடியவில்லையோ, அதேபோல் சட்டமன்ற உறுப்பினர்களும் தங்களுடைய தேவைகளை இதுகாறும் சொல்ல முடியாத நிலையில் இருந்தார்கள். ஆகவே, இந்த கால்நடைக்கும், சட்டமன்றத்திற்கும் தொடர்பு இருக்கிறது என்று நினைக்கிறேன். ஆனால் இன்றைக்கு இந்த மானியத்தின்மீது பேசுவதால் சட்டமன்ற உறுப்பினர்களின் ஒரு சில கோரிக்கைகளைப் பட்டவர்த்தனமாகச் சொல்வது நலம் தரும் என்று நினைக்கிறேன்.

இப்போது படியாக ரூ. 20 கொடுக்கப்படுகிறது. உண்மை என்ன என்று சொன்னால் இன்றைய தினம் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கேண்டீனிலேயே ஒரு நேரத்திற்கு ரூ. 4, 5 செலவாகிறது. கூடவே யாராவது ஒரு வாக்காளர் வந்துவிட்டால் அவர்களுக்கும் சேர்த்துச் செலவுசெய்யவேண்டியிருக்கிறது. இந்த நிலையில் ரூ. 30 ஒரு நாளைக்கு அதிகமாகச் செலவாகிறது. ஆகவே, அவர்களுக்கு ரூ. 10 கைவிட்டுச் செலவாகிறது. இதை அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போதுள்ள சூழ்நிலையில் உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதியைமட்டும் சுற்றிப் பார்த்தால் போதாது. இன்றுள்ள அரசியல் சூழ்நிலை காரணமாகப் பல்வேறு இடங்களுக்கும் சென்று வரவேண்டியிருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு ரயில்வே பாஸ்

கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டெலிபோன் வசதி வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நெடுங் காலமாகச் சொல்லப்பட்டு வருகிறது. தொலைபேசி மிக மிக அத்தியாவசியமானது. சட்டமன்ற உறுப்பினர்கள், செயலாளர்கள், மற்ற மற்ற அலுவலர்களுடன் தொடர்புகொண்டு பேசுவதற்கு வசதியாக இருக்கும். தொகுதி மக்களின் நலன் கருதி இதைச் செய்துதரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொகுதி மக்களின் நலன் கருதிப் பேசுவதற்காகத்தான் கேட்கிறோமேதவிர மனைவி மக்களோடு பேசுவதற்குத் தொலைபேசி கேட்கவில்லை. தொகுதி மக்களுடைய நலனை அலுவலர்களுக்கும் மற்றவர்களுக்கும் அவ்வப்போது எடுத்துச் சொல்வதற்காகத் தொலைபேசி கேட்கிறோம். அதை உணர்ந்து, சட்டமன்ற உறுப்பினர்கள் தாங்கள் எடுத்துக்கொண்ட பணியை அழகாக, மிகச் சிறப்பாகச் செய்ய இந்த வசதியைச் செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அத்துடன், சட்டமன்ற உறுப்பினர்கள் அலுவலர்களுக்குக் கடிதம் எழுதவேண்டுமென்றால், நண்பர் திரு. கே. எம். சுப்பிரமணியம் சொல்லியதைப்போல், ஸ்டாம்ப் ஒட்டி, அஞ்சலகம் சென்று பெட்டியில் போடுவதுவரை சட்டமன்ற உறுப்பினர்கள் செய்வதென்பது முடியாத காரியம். அதனாலே, கிளார்க்—உதவியாளர்—தேவை. ஆனால் கிளார்க் கொடுக்க முடியாது. அதற்கு நான் சொல்கிற வழி என்னவென்றால், 'கிளார்க்-கம்-பியூன்'-க்கு உண்டான சம்பளத்தை எங்களிடம் கொடுத்து விடுங்கள் (ஆரவாரம்). அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை நாங்கள் செய்து கொள்கிறோம். கிளார்க் அவசியம் தேவை. அதனால் கிளார்க்கினுடைய சம்பளத்தை எங்களிடம் கொடுங்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, எல்லோருக்கும் வீட்டு வசதி இருக்கிறது. அமைச்சர்களே சாமானியர்கள் என்று சொல்கிறார்கள். நாங்கள், எம்.எல்.ஏ.-க்கள் சர்வ சாமானியர்களாக இருக்கிறோம், எங்களில் பலருக்கு ஒழுங்கான வீடுகள் கிடையாது, ஒற்றையறையைத் தவிர. நாங்கள் வசதியான வீட்டிலிருக்க, அதற்கு வேண்டிய





வீடில்லாது போனாலும் கடனாவது தரவேண்டும். அதுவும் இல்லை விட்டால், நீண்டகாலத் தவணையிலே,—நாங்கள் சட்டமன்ற உறுப்பினராக இல்லாது போனாலும் நீண்ட ஏற்பாட்டைச் செய்து தரவேண்டும்—கடன் தருவதற்கான வசதியை வீட்டு வசதி அமைச்சர் அவர்கள் செய்துதருவார்கள் என்று எதிர் பார்க்கிறேன் . . .

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** வீட்டு வசதிகளைப் பொறுத்தவரையில், நல்ல நீண்டகாலத் தவணைத் திட்டங்கள் உள்ளன. சட்டமன்ற உறுப்பினர்களுக்கெனத் தனியாக வீடுகள் கேட்டு, எதிர்க்கட்சிக்காரர்கள் பூராவும் சேர்ந்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வீட்டை வாங்கி, இடத்தை விட்டுவிடாதீர்கள் என்றுதான் சொல்லுகிறேன். (சிரிப்பு)

*** திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** சட்டமன்ற உறுப்பினர்கள் மீது அமைச்சர் அவர்கள் வைத்துள்ள அந்த அக்கறையைப்பற்றி என்ன சொல்வது என்றே எனக்குத் தெரியவில்லை. அதைக் கவனிப்பார்கள் என்று நினைக்கிறேன்.

அடுத்து பென்ஷன் விஷயம். எல்லோருக்கும் ஓய்வூதியம் கொடுக்கப்படுகிறது. வயது வந்தவர்களுக்கு, எவ்விதப் பணியுமற்ற அவர்களுக்குக்கூட, மனிதாபிமானத்தோடு, அனுதாபத்தோடு பென்ஷன் கொடுக்கப்படுகிறது. அரசியலிலே ஈடுபட்டு, மக்களுக்காக நற்பணி ஆற்றியவர்களுக்கு முடியாத காலத்திலே ஏதாவது ஓய்வூதியம் அளிக்க வேண்டாமா? குறைந்த பட்சம் 3 பீரியட்டுகள், 15 ஆண்டுகள் என்று சட்டமன்றத்திலே ஈடுபட்டவர்கள்—இந்தக் காலத்திலே இரண்டு பீரியட்டுகளுக்கு மேலே வருவது குதிரைக் கொம்பாக இருக்கிறது—இரண்டு 5 ஆண்டுகள் சட்டமன்ற உறுப்பினர்களாகவோ, பாராளுமன்ற உறுப்பினர்களாகவோ இருந்தால், அவர்களுக்கு ஓய்வூதியம் தர வேண்டும். அதையும் அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்து அறிவிப்பார்கள் என்று நம்புகிறேன்.

பள்ளபட்டியில் கால்நடை மருத்துவ மனை ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே ஆடு வளர்ச்சிப் பண்ணையைப்பற்றி நீண்ட நெடு நாட்களாகச்

[திரு. வா. மை. அப்துல் ஜப்பார்] [1973 மார்ச் 27

சொல்லி வந்தேன். 'மச்ச மாமிசம்' கூடிவிட்டது என்று சொன்னேன். கொழுக்கட்டை புல் என்ற புல் நல்ல ஆரோக்கியமான புல் அங்கே நிறைய இருக்கிறது. என்னுடைய தொகுதியிலே இருக்கிற இறைச்சியினுடைய ருசி வேறு எந்தப் பகுதியிலும் இருக்காது. எங்கள் பகுதிக்கு . . .

**திருமதி த. ந. அனந்தநாயகி :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். சட்டமன்றம்-கால்நடை இரண்டையும் கலந்து உறுப்பினர் பேசுவதாலே, கொழுக்கட்டை புல் இருப்பதைப்பற்றிக் கூறும்போது, எம்.எல்.ஏ.-க்களுக்காக கூறுகிறாரா, அல்லது கால்நடைகளுக்காகக் கூறுகிறாரா ? (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அங்கத்தினர் அவர்கள் ஊரில் நிறைய கொழுக்கட்டை புல் கிடைக்கிறது என்று சொன்னார். யாருக்குத் திறமை இருக்கிறதோ அவர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம். (சிரிப்பு)

*** திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** நான் முன்பே சொன்னேன், எதனால் இந்த இரண்டையும் இணைத்து வைத்தார்கள் ; என்ன காரணம் என்று கேட்டேன். அம்மையார் அவர்கள் அதைக் கவனிக்கவில்லை போலும். என்னுடைய பகுதியிலே ஆட்டுப் பண்ணையை ஏற்படுத்தித் தரவேண்டும்.

அடுத்து, உறுப்பினர்கள் தொகுதியைச் சுற்றிப் பார்க்க ஏதாவது வசதி செய்துதரவேண்டும். என்னுடைய தொகுதியிலே 500-லேயிருந்து 600 வரை கிராமங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு வருஷமும் அவர்களைப் போய்ப் பார்க்கவில்லையென்றால், அவர்கள் கோபித்துக் கொள்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினராகி ஓராண்டு ஆயிற்று. எட்டிக் கூடப்பார்க்கவில்லை. ஓட்டுக் கேட்க வருகிறவன் இதுவரையிலே வரவில்லை என்று பொதுமக்கள் கேட்பது, சர்வசாதாரணமாகி விட்டது. அரசியல் விழிப்புணர்ச்சி மக்கள் மத்தியிலே அதிகமாகிவிட்டது. தனது தொழிலையும் பார்த்துக் கொண்டு, சட்டமன்றக் காரியங்களையும் முடித்துக்கொண்டு, மக்களது பணிகளையும் பார்த்துக்கொண்டு, 500, 600 கிராமங்களையும் சுற்றிப் பார்ப்பதென்பது இயலாத காரியம். ஆகவே, தொகுதியைச் சுற்றிப்பார்க்க ஜீப் வசதியோ, வேறு வசதியோ செய்துகொடுக்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி.



1973 மார்ச் 27]

*** திரு. கோவை செழியன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஸ்டேட் லெஜிஸ்லேச்சர் டிமாண்டில் மாண்புமிகு அங்கத்தினர்கள் பலர் பேசினார்கள். இந்த ஒரு மானியத்திலே தான் எதிர்க்கட்சி, ஆளும்கட்சி என்ற பாகுபாடு இல்லாமல் எல்லோரும் ஒரே கருத்தை இங்கே பேசுகிறோம் (ஆரவாரம்). இங்கே பேசிய அத்தனை மாண்புமிகு அங்கத்தினர்களும் சொன்னதைத்தான் நானும் வலியுறுத்திச் சொல்லவேண்டியிருக்கிறது. முதலிலே ஒன்றைத் தங்கள்மூலமாக வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். இங்கே, எம்.எல்.ஏ. ஆவதற்கு முன்னால் அங்கத்தினர்கள் எல்லாம் ஒவ்வொரு தொழிலிலே இருந்தோம். இதற்குப் பின்னாலே இப்பொழுது விட்டுவிட்டோம். அப்பொழுது, நான் ஆண்டிற்கு 3 சினிமாப் படம் எடுத்துக் கொண்டிருந்தேன். அதையும் விட்டுவிட்டேன். விவசாயத் தொழிலிலே . . .

*** மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அங்கத்தினருக்கு ஏற்பட்ட நஷ்டம் எல்லாம், இனி ஏற்படாது என்ற நம்பிக்கையோடு சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறார் அல்லவா ?

*** திரு. கோவை செழியன் :** அதை ஏற்றுக்கொள்கிறேன். எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், இப்படி 24 மணி நேரமும் பொது வாழ்க்கைக்கு எங்களுடைய வாழ்க்கையை அர்ப்பணித்துவிட்ட காரணத்தால், சொந்த வாழ்க்கையைப் பற்றிப் பேசுவதற்கு இன்றைக்கு ஒரு நாள் கிடைக்கிறது. கொஞ்சம் அனுதாபத்துடன் கேளுங்கள் என்றுதான் கேட்கிறோம்.

சம்பளம் ஜாஸ்தி கேட்கவில்லை (சிரிப்பு). ரூ. 250 போதும். (சிரிப்பு). ஆனால், அலவன்சைமட்டும் ரூ. 500-ஆகச் சேர்த்து, ரூ. 750 கொடுங்கள் என்றுதான் கேட்கிறோம். (ஆரவாரம்). ஏனென்றால், சம்பளம் என்று கேட்டால், இன்கம்டாக்ஸ் ரூ. 500 எடுத்துக்கொள்ளுவார்கள். நாங்கள் அதை ரயிலுக்கும் காருக்கும் தான் செலவழிக்கிறோமேதவிர, எங்களுக்காகச் செலவழிக்கவில்லை.

ரயில்வே பாஸ்களைப்பற்றி ஒவ்வொரு வருஷமும் சொல்லிக் கொண்டிருக்கிறோம். என்னைப் பொறுத்தவரையிலும், மற்றுமுள்ள அங்கத்தினர்களைப் பொறுத்தவரையிலும், நாங்கள் கோயம்புத்தூரிலிருந்து, மற்ற ஊர்களிலிருந்து சென்னைக்கு வருகிறோம், என்றால், சொந்தக்காரர்களைப் பார்ப்பதற்கா, கல்யாணம் காட்சிகளைப்

[திரு. கோவை செழியன்] [1973 மார்ச் 27

பார்ப்பதற்காகவா வருகிறோம். செக்ரட்டேரியட்டுக்குத்தான் வருகிறோம். அதுதான் எங்கள் புகலிடம். பொதுமக்களுக்காகத் தான் வருகிறோம். ரயிலிலே மூண்டி அடித்துவருவதற்குள் பிராணன் போய்விடுகிறது. ஆகவே, அங்கத்தினர்களுக்கு முதல் வகுப்பு ப்ரீ பாஸ், இந்த 5 ஆண்டுக்காலத்திற்காவது தரவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். (ஆரவாரம்). அதற்கு மத்திய அரசாங்கத்திற்கு ஒரு மானியத்தை இந்த அரசாங்கம் தந்தாலும் பரவாயில்லை என்பது என்னுடைய கருத்து.

ஐந்து நாளைக்கு ஒருமுறை ஊருக்குச் சென்று வரவேண்டு மென்று எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் சொன்னார்கள். அதையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். திடீர் திடீரென்று வந்து விடுகிறது ஏதாவது ஒரு பிரச்சினை. திடீரென்று போலீஸ் ஸ்டேஷனிலே தகராறு, ஊரிலே தகராறு என்று சொல்கிறார்கள். ஓட வேண்டி யிருக்கிறது. ஆகவே, 5 நாட்களுக்கு ஒரு முறை என்று வைத்துக் கொண்டால் மிகவும் நல்லது. தொகுதியிலே பிரச்சினை வந்து விடுகிறது, வெள்ளம் வந்து விடுகிறது.

ஏதாவது பிரச்சினை என்றால், டெலிபோன் செய்யவேண்டி யிருக்கிறது. மூன்று மாதத்திற்கு ஒரு முறை ரூ. 1,000, ரூ. 500 என்று பில் வருகிறது. ஆகவே, ட்ரங் கால், லோக்கல் கால் எல்லாவற்றையும் ப்ரீயாக்கிவிட வேண்டும். (ஆரவாரம்). துணைத் தலைவரவர்களே, தங்கள்மூலமாக, இதை முதலமைச்சர் அவர் களுக்கும் அவை முன்னவருக்கும் கொஞ்சம் வலியுறுத்திச் சொல்லிக்கொள்கிறேன்.

அதேபோல், அங்கத்தினர்களுக்கு வருகின்ற கடிதங்களுக்குப் பதில் கடிதம் அனுப்புவதற்கு டைப்பிஸ்டுகள் வேண்டும். ஆண் டைப்பிஸ்டுகளாக இருந்தால்கூடப் பரவாயில்லை (சிரிப்பு). ஆகவே, ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு டைப்பிஸ்டு தேவை.

அதேபோல் அலுவலகம், பஞ்சாயத்து யூனியன் அலுவலகத் திலோ, வேறு ஒரு இடத்திலோ, தொகுதியிலே ஒரு சிறிய அறை, 'பாத் அட்டாச்ட்' கூடக் கேட்கவில்லை, சிறிய அறை, உட்காரு வதற்கு ஒரு அறை கேட்கிறோம்.

ஆபீசர்களைப் பார்க்கப் போனால், டெல்லிப் பாராளுமன்றத்திலே பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் வந்தால், ஏக உபசாரத்தோடு



1973 மார்ச் 27] [திரு. கோவை செழியன்]

கவனிக்கிறார்கள். இங்கே, நாங்கள் அதிகாரிகளைப் பார்க்கப் போனால், ½ மணி நேரம் வெளியே உட்கார்ந்து கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. எங்களை யாசகம் கேட்பவர்களைப் போல் கவனிக்கிறார்கள் (சிரிப்பு). அந்த முறை மாறவேண்டுமென்று உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இனிமேலாவது, மக்கள் பிரதிநிதிகளை மதிக்க வேண்டுமென்று அவர்களுக்கு ஆணையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மக்கள் பார்லிமெண்ட் உறுப்பினர்களையும் தேர்ந்தெடுக் கிறார்கள், எங்களையும் தேர்ந்தெடுக்கிறார்கள். ஆனால், பாராளுமன்ற உறுப்பினர்களைவிட, சட்டமன்ற உறுப்பினர்கள்தான் அதிகம் வேலை செய்கிறோம். புருஷன்-மனைவி சண்டை என்றால்கூட, எங்களிடம்தான் வருகிறார்கள். எம்.பி. என்றால், அந்தத் தொகுதியிலே இருப்பார், இந்தத் தொகுதியிலே இருப்பார் என்று தப்பித்துக்கொள்வார். ஆதலால், எங்கள் குறைகளை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அவை முன்னவர் அவர்களும் கவனிக்க வேண்டுமென்று தங்கள்மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

ஹாஸ்டலில், செஷன் சமயத்திலே எங்களுக்கு ப்ரீயாக அறையை விடுகிறார்கள். உள்ளே குளியலறையிலே குளித்தால், தண்ணீர் முழுவதும் பெட் ரூமுக்கு வந்துவிடுகிறது. அதைச் சரி செய்ய வேண்டும். அந்த ரூம் ப்ரீயாக இருக்கவேண்டும். அந்த அறைகளை வருஷம் பூராவும் எங்களுக்கே கொடுத்துவிடுங்கள். அது எங்களுக்காகக் கட்டிய கட்டடம். அரசாங்க வேலைக்காக வருகிறோம். ஆகவே, ஹாஸ்டல் ரூமை ப்ரீயாக எப்போதும் எங்களுக்கே கொடுத்துவிடவேண்டும்.

ஹாஸ்டலில் சாப்பாடு சரியில்லை என்று எல்லா நண்பர்களும் சொன்னார்கள். நான் அங்கே அதிகமாகச் சாப்பிடுவதில்லை. இதுவரையில் 2, 3 நாட்கள்தான் சாப்பிட்டு இருக்கிறேன். அதிலே இரண்டு நாட்கள் சாப்பிட்டதின் பலனாகப் பேதியாகிவிட்டது. நான் சாப்பாடு மோசம் என்று சொல்லவில்லை, இப்படி பொட்டு, பொட்டு என்று எம்.எல்.ஏ.-க்கள் செத்துவிட்டால் அரசாங்கத் திற்குத்தான் நஷ்டம், ரீ-எலக்ஷன் நடத்துவது என்றால் 10 லட்சம் ரூபாய் கிட்டத்தட்டத் தேவை. எனவே அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கோவை செழியன்] [1973 மார்ச் 27

ரீடிங் ரூம், லைப்ரரி இவைகளை 7 மணிமுதல் 10 மணி வரை திறந்து வைத்திருந்தால் நல்லதாக இருக்கும். லைப்ரரியிலே புத்தகம் எடுத்தால் அதை நான்கு நாட்களுக்குள் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று நோட்டீஸ் வந்துவிடுகிறது. அது போதாது. இரண்டு மாதங்களுக்கு புத்தகங்களை பயன்படுத்திக் கொள்ள வழிசெய்யவேண்டும்.

நாங்கள் எல்லாம் இங்கே பேசுகின்றபொழுது தாகம் வந்து விடுகிறது. அமைச்சர்களுக்கு மட்டும் தம்ளரிலே குடிக்கத் தருகிறார்கள். எங்களுக்கு பியூன்களைக் கேட்டால் வேண்டாம் என்று சொல்கிறார்கள். நாங்கள் தண்ணீர்தானே கேட்கிறோம், Bar-ஆ கேட்கிறோம்? தண்ணீர்தானே கேட்கிறோம். இப்படிப் பல குறைகள் இருக்கின்றன.

துணைத் தலைவர் அவர்களே உங்கள் மூலமாகக் கேட்கிறேன், இவைகளையெல்லாம் கவனிக்கவேண்டுமென்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் அவை முன்னவர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் இதுபற்றி எந்தத் தீர்மானம் கொண்டுவந்தாலும் எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள் நூற்றுக்கு நூறு ஆதரிப்பார்கள். ஆகவே துணிந்து இந்த முக்கியமான ஆலோசனைகளையெல்லாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, கால்நடை பற்றி ஒரே ஒரு வார்த்தையைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

காங்கேயம் கால்நடை பெயர்போனது. அந்த இனம் இப்பொழுது கொஞ்சம் கொஞ்சமாக அழிந்துகொண்டே இருக்கிறது. அதைத் தடுக்கக்கூடிய முறையிலே லேண்ட் சீலிங்கிலே எக்சஸ்-ஆக வந்த 3.500 ஏக்கரில் 1,500 ஏக்கர் நிலத்தைத் தனியாக இதற்காக ஒதுக்கி அரசாங்கமே ஒரு பண்ணையை துவக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காங்கேயத்திலிருந்தும் ஊத்துக்குளியிலிருந்தும்தான் இங்கே சென்னைக்கு பால் வருகிறது. பால் உற்பத்தியைப் பெருக்கக்கூடிய வகையில் அவர்களுக்கு ஊக்கம் அளிக்கக்கூடிய வகையில் டெய்ரி பார்ம் வைத்திருக்கின்றவர்களுக்கு வரிச் சலுகைகள் தரவேண்டும். டெய்ரி பார்ம் வைப்பதற்கான பண உதவியையும் அரசாங்கம்



1973 மார்ச் 27] [திரு. கோவை செழியன்]

கொடுக்க முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு நீங்கள் மணியடிப்பதற்கு முன்னாலேயே என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

* THIRU B. VENKATASWAMI : I thank the Deputy Speaker for giving me this opportunity to speak a few words on this Demand of 'Legislature'. In spite of our criticism during the last budget session, re-employment of retired officers blocking the avenue of promotions of subordinates in the Legislative Assembly Department has been done. No action has been taken against what we said last year. I request Government to take necessary action not to re-employ retired officers in the State Legislature.

Our Legislature should function independently like the Lok Sabha. That is another point I want to raise.

I think Government should reconsider its earlier proposal to have another building for housing the Tamil Nadu Secretariat including Assembly.

With regard to Animal Husbandry Department I am sorry to find that sufficient amounts have not been granted to Animal Husbandry Department. Even the Hon. Minister mentioned that this is the most important department. Only Rs. 5 crores had been alloted for the Demand. At the outset I want to say it is important to allot more funds for this Animal Husbandry Deparment. Regarding milk production, even though the national standard is 300 gms. per day per head we are getting only 63 grammes per head. More amount should be allotted.

* THE HON. THIRU K. ANBAZHAGAN : Not only is this amount being spent. In order to produce more milk, 'Operation Flood' costing Rs. 8½ crores is also being implemented by a Board.

* THIRU B. VENKATASWAMY : If sufficient milk is produced, it is all right. Regarding egg production, as against 8.40 gms. per head, we are getting only 1.26 gms. The Hon. Minister knows the importance of health and he must definitely see that egg production is also increased.

After reorganisation of the department, it has led to lot of troubles. Number of castrations is low. Production of chicks is low when compared to last year.

[1973 மார்ச் 27

*THE HON. THIRU K. ANBAZHAGAN : For the year 1972–73, the figure given is only for nine months. It is not for 12 months. It is up to 31st December 1972, compared to 12 months' figure for the previous years.

* THIRU B. VENKATASWAMY : The Tamil Nadu Estimates Committee toured all over the State and wherever we went people were for reviving key village centres, ICDP blocks and extension service blocks. They have all been closed due to re-organisation. It is high time they are revived. Previously whenever we went to outside States like Mysore, etc., the Directors there used to say we were products of Madras Veterinary College. But to-day . . .

THE HON. THIRU K. ANBAZHAGAN : That product is continually supplied. But other products are somewhat to be improved.

THIRU B. VENKATASWAMY : Animal Husbandry Department is the most vital department for improvement of our agricultural economy. Cross breed animals like Jersy, Red-Dane, Fresian should be bred in village areas. Dharmapuri district is an ideal place for breeding exotic breeds. It is not an industrial area. It is a backward area. 'Operation Flood' was not operated in Dharmapuri last year, even though other districts got it and for which I am glad since the whole State was benefited. Some good scheme which benefits the agriculturists should be evolve the Agriculturists.

THE HON. THIRU K. ANBAZHAGAN : I invite the attention of the hon. Member to page 49. An exotic cattle breeding farm is being suggested to be established by the Central Government at Hosur

* THIRU B. VENKATASWAMY : I thank the Hon. Minister it. I am also aware of it. But that should not be within the four walls of cattle farm. The service should be extended to the people nearby. No extension service is given from the present cattle farm. That should not happen in this also.



1973 மார்ச் 27] [Thiru B. Venkataswamy]

Regarding rinderpest disease, we are in the border area and this disease travels from Bangalore and affects our area, that is, Hosur and Denkanikotta which are border areas. I request the Hon. Minister that a mobile van may be given for the area so that we can take control measures. It is a dangerous disease.

Next is foot-and-mouth disease. I understand that some serum has been invented for the control of this, but it is not given to the people freely. So I request the Hon. Minister to see that this foot-and-mouth disease which is a most dangerous disease and which affects cross-breed animals is put a stop to.

Regarding semon banks, though they have been established in other States, we have not yet started semon banks. I request that semon banks may be started in Tamil Nadu.

Cattle insurance is very necessary. There are valuable animals and for want of insurance people are put to a lot of loss and suffering when these animals are affected and die of some disease or other. I request the Hon. Minister to see that cattle insurance, especially for exotic animals, is introduced from this year onwards.

Cattle feed has become very costly nowadays ; groundnut cost has increased and there is need for grant of subsidy, so that people may be benefited.

Grant of risk allowance to doctors is necessary. When these surgeons deal with contagious diseases, they are affected and for that some risk allowance is necessary.

Regarding Livestock Assistants, Grade II, last year also I had spoken. I have already represented to the Hon .Minister. The Livestock Assistants are in the scale of L.D.Cs. They can be given Rs. 225 and the amount involved will be very small. They are also representing on so many occasions. I request the Hon. Minister that Livestock Assistants may be given the higher scale.

Finally, I request the Hon. Minister to see that since the amount allotted for this Demand is not at all sufficient, at least next year, the amount may be enhanced. Unless at least Rs. 25 crores is allotted for this Animal Husbandry department, we will

[Thiru B. Venkataswamy] [1973 மார்ச் 27

not be able to improve the rural economy and health of the cattle and the village people. Thank you, Sir.

**திரு. எம். ஏ. லத்தீப்:** துணைத் தலைவரவர்களே, நான்கு மானியங்கள் ஒன்றாக இன்றைக்கு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. நான் சார்ந்திருக்கிற நீதித் துறை இதிலே சேர்க்கப்பட்டிருக்கிறது, சட்டத் துறையும் சேர்ந்திருக்கிறது. எப்படிப் பேசுவது என்று தெரியவில்லை. இரண்டொரு வார்த்தைகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

கால் நடைகள் பற்றி ஏற்கெனவே மதிப்பீட்டுக் குழுவின் சார்பாக கடந்த ஆண்டே இதற்கான பரிந்துரைகளெல்லாம் வழங்கப்பட்டிருக்கின்றன. என்னுடைய தொகுதியில் இருக்கிற ஏலகிரி மலையில் நல்ல சூழ்நிலை அமைந்திருக்கிற காரணத்தினாலும், அங்கே கால் நடைகளுக்கு வேண்டிய தீவனங்கள் அதிகமாகக் கிடைக்கிற காரணத்தினாலும் அந்த மலையில் ஒரு ஆட்டுப் பண்ணை வைக்கவேண்டுமென்ற பரிந்துரை வழங்கப்பட்டிருக்கிறது. அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. அதன் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்.

அதே மாதிரியாக மாட்டுப் பண்ணையைப்பற்றிக் கூட நல்ல ஒரு பரிந்துரையை அவர்கள் வழங்கி இருக்கிறார்கள். ஜவ்வாது மலையில் மாட்டுப் பண்ணையை வைத்தால் நல்ல முறையில் நடத்த முடியும், நல்ல திட்டங்களை செயல்படுத்த முடியும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகையினாலே அந்த ஜவ்வாது மலையில் மாட்டுப் பண்ணை வைப்பதற்கு அமைச்சரவர்கள் உரிய முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் உள்ள வாணியம்பாடியில் முன்சீப் கோர்ட் வேண்டுமென்று பல ஆண்டுகளாக வேண்டுகோள் இருந்து வருகிறது. சட்டத் துறை அமைச்சரவர்களிடத்திலும் தனியாகப் பேசும் போது நான் சொல்லியிருக்கிறேன். வாணியம்பாடி தாலுகாவினுடைய தலைமை ஸ்தலமாக மாற்றப்பட்டிருக்கிறது. அங்கு முன்சீப் கோர்ட் ஏற்படுத்தவேண்டும். ஆலங்காயம் ஜவ்வாது மலையின் நுழை வாயிலாக இருக்கிற காரணத்தினால் அங்கே சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட், கிரிமினல் கோர்ட் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.



1973 மார்ச் 27] [திரு. எம். ஏ. லத்தீப்]

சில இடங்களில் முன்சீப் கோர்ட் அகற்றப்படவேண்டுமென்று சில திட்டங்கள் இருப்பதாக கேள்விப்படுகிறேன். ராணிப் பேட்டையில் ஏற்கெனவே முன்சீப் கோர்ட் இருக்கிறது. அதை எடுத்து விடவேண்டுமென்று ஏதோ பரிந்துரை வழங்கப்பட்டதாக சொல்லப்படுகிறது. புதியவைகளை ஏற்படுத்தா விட்டாலும் ஏற்படுத்தியவைகளை அகற்றாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்.

சட்ட மன்ற உறுப்பினர்களைப் பற்றி பல்வேறு பிரச்னைகளை பல உறுப்பினர்கள் உருக்கமாக எடுத்துச் சொன்னார்கள். இவைகளையெல்லாம் சொல்லும்போது நாம் இப்படி இங்கே பேசிக் கொள்வது நம்முடைய குறைகளைப் பற்றி இங்கே பேசுவது, மக்களுடைய குறைகளைப் பற்றி பேச வந்திருக்கிறோம் நாம்—நம்முடைய குறைகளை இங்கே பேசுவதா என்று சிலர் நினைக்கிறார்கள், தயக்கம் காட்டுகிறார்கள். இது மிகவும் தவறு. சட்ட மன்ற உறுப்பினர்கள் செயல்படுவதற்கான சூழ்நிலையும் வசதிகளும் சரியாக இருந்தால் தான் மக்களுடைய தேவைகளும் சரியாக நடைபெற முடியும். ஆகையினாலே நாம் பேச வேண்டி இருக்கிறது. பல முறை எடுத்துச் சொல்கிறோம். ஏதோ சொன்னோம் என்று விட்டு விடாமல் சாத்தியமான முறையில் அரசு இதை நல்ல முறையில் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியைப் பற்றி சொன்னார்கள். நண்பர் குருசாமி அவர்கள் பேசும்போது சொன்னார்கள். அப்துல் காதருக்கும் அமாவாசைக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்டு, ஏன் வெஜிடேரியன் ஓட்டலை முஸ்லீம் நண்பர் ஒருவருக்குக் கொடுத்திருக்கிறார்கள், என்று அதனால் கேட்டார். அவர் அப்துல் காதருக்கும் அமாவாசைக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்பது போலத்தான் நான் அமாவாசைக்கும் அப்துல் காதருக்கும் என்ன சம்பந்தம் என்று தெரியவில்லை என்று சொல்கிறேன். அங்கே அவர்கள் வெஜிடேரியன் ஓட்டலை முஸ்லீம் ஒருவருக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால், நான்—வெஜிடேரியன் ஓட்டலை முஸ்லீம் அல்லாதவருக்குக் கொடுத்திருக்கிறார்கள். இது ஏன் என்று தெரியவில்லை. முஸ்லீம்களாக இருக்கிற உறுப்பினர்களின் உணர்ச்சிகளை மதிக்கவேண்டும். அங்கே காடை,

கோழி வெட்டப்பட்டால் அங்கே கோழியைச் சாப்பிட முடியவில்லை, காடையைச் சாப்பிட முடியவில்லை. என்னுடைய வேண்டுகோள், எங்கள் உணர்ச்சிகளை மதிக்கிற வகையில் நான் வெஜிடேரியன் ஓட்டலை முஸ்லீம் ஒருவருக்குத் தர வேண்டுமென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். நான் கூட அங்கே இருக்கிறேன். சாப்பிடவே முடியவில்லை. எதுவும் சாப்பிட முடியவில்லை. இதைக் கவனிக்கவேண்டுமென்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த அலவன்ஸைப் பற்றிச் சொன்னார்கள். நம் மாநிலத்தில் 20 ரூபாய் கொடுக்கிறார்கள். மத்தியப் பிரதேசத்தில் ஒரு நாள் ஒன்றுக்குக் கொடுப்பது 60 ரூபாய். அவர்கள் 60 ரூபாய் கொடுக்கிறார்கள். உத்தரப் பிரதேசத்தில் 45 ரூபாய் கொடுக்கிறார்கள். மஹாராஷ்டிரத்தில் 50 ரூபாய் கொடுக்கிறார்கள். இப்படி மற்ற மாநிலங்களிலேயெல்லாம் 60 ரூபாய், 45 ரூபாய் என்று அவர்கள் கொடுப்பதைப் போன்று, நாம் அவ்வளவு கேட்கா விட்டாலும், ஓரளவிற்கு "டு மீட் போத் எண்ட்ஸ்" கொடுக்க வேண்டுமென்று சொல்கிறேன்.

சட்ட மன்ற உறுப்பினர்கள் என்னென்ன செலவு செய்ய வேண்டியிருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். சட்ட மன்ற உறுப்பினர்களாக இருந்த அமைச்சர்கள் நன்றாக அறிந்திருக்கிறார்கள். என் தொகுதியிலிருந்து எவ்வளவோ பேர் வந்து விடுகிறார்கள். வசதி உள்ளவர்கள் வருகிறார்கள், வசதி இல்லாதவர்களும் வருகிறார்கள். அவர்களுக்கு டிபன் வாங்கிக் கொடுப்பது, சாப்பாடு வாங்கிப் போடுவது, இன்னும் ரயில் சார்ஜ் கொடுத்து அவர்கள் போய்விட்டால் போதும் என்று அனுப்ப வேண்டிய நிலைமை இருக்கிறது. இதை அமைச்சரவர்கள் உணர்ந்திருப்பார்கள். இந்த 20 ரூபாய் என்று வைத்திருப்பதை மற்ற மாநிலங்களில் வைத்திருப்பதைப்போல ஏற்றித்தர வேண்டும். அறுபது ரூபாய் அளவிற்கு இல்லாவிட்டாலும் 40 ரூபாய், 45 ரூபாய் அளவிற்குத் தரவேண்டும்.

அதே நேரத்தில் 350 ரூபாய் சம்பளம் என்பது விசித்திரமான நிலைமை. ஒரு சட்ட மன்ற உறுப்பினர் 350 ரூபாய் வைத்துக் கொண்டு எப்படி காலம் தள்ள முடியும் என்று நினைத்துப் பார்க்க



வேண்டும். அரசாங்க உத்தியோகத்தில் உள்ள அலுவலர்கள் கூட 700, 800 ரூபாய், 1,000 ரூபாய் என்று சம்பளம் வாங்குகிறார்கள் என்றால் இந்த சட்டமன்ற உறுப்பினர்கள் ஜனநாயக நாட்டில் மக்கள் பிரதிநிதியாகிய எங்களுக்கு எந்த வசதியும் இல்லையென்று சொன்னால் எப்படி நாம் செம்மையாக செயல்பட முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். குறைந்த பட்சம் 500 ரூபாயாகவாவது உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு சபையினுடைய முன்னவர், இப்படித் தான் சொல்வார்கள், என்று விட்டு விடாமல் சீரியஸாக கன்ஸிடர் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உரிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று நான் தாழ்மை யோடு கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் கிளார்க்குகள் வேண்டுமென்று சொன்னார்கள். (மணி அடிக்கப்பட்டது) லீடர் பேசவில்லை. நான்தான் பேசுகிறேன்.

(மணி அடிக்கப்பட்டது) லீடர் பேசவில்லை. நான் தான் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஜப்பார் அவர்கள் பேசியிருக்கிறார்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** ஆகையினாலே இந்த கிளார்க்குகள் விஷயத்திலே நம் சட்ட மன்ற உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு வசதி செய்து தரவேண்டும். கேரளத்திலே, உத்திரப் பிரதேசத்திலே அந்த மாநிலத்தில் ரயிலில் பிரயாணம் செய்ய பர்ஸ்ட் கிளாஸ் பாஸ் கொடுத்திருக்கிறார்கள். அதை ஏன் நமக்குக் கொடுக்கக் கூடாது ? அதையும் கொடுக்க வேண்டும். அத்துடன் பஸ் பாஸ் கொடுத்திருக்கிறார்கள். பஸ் பாஸோடு வேறு ஒரு ஆலோசனையையும் வேண்டுகோளாக விடுக்க விரும்புகிறேன். இப்போது பாராளுமன்ற உறுப்பினர்கள் ரயிலில் பிரயாணம் செய்யும்போது, அவர்கள் கிளார்க்குகள், அல்லது அஸிஸ்டெண்டுகள் மூன்றாம் வகுப்பில் பிரயாணம் செய்யலாம். சட்டமன்ற உறுப்பினர் பஸ்ஸில் பிரயாணம் செய்யும்போது கிளார்க்குகளை அல்லது அஸிஸ்டெண்டுகளை அழைத்துச் செல்வதற்கு அனுமதியளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதை நான் சாதாரணமாகச் சொல்லவில்லை. அனுபவ பூர்வமாகச் சொல்லுகிறேன். மாநிலம் பூராவும் செல்ல வேண்டியிருப்பதால் அசிஸ்டெண்டை அழைத்துச் செல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அசிஸ்டெண்டையும் கூட அழைத்துச் செல்வதற்கு பாஸ் வழங்க வேண்டும்.

நாகாலாந்தில் ஒவ்வொரு எம்.எல்.ஏ.-வுக்கும் ஜீப் கொடுக்கப்பட்டிருக்கிறது, கார் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த வசதியை எங்களுக்குச் செய்து கொடுக்கக்கூடாதா ? நாங்கள் என்ன குபேரர்களா ? எழுபது மைலுக்கு மேல் தொகுதியில் பிரயாணம் செய்ய வேண்டியிருக்கிறது. காரில் செல்ல வேண்டியிருக்கிறது, ஜீப்பில் செல்ல வேண்டியிருக்கிறது, வண்டியில் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த வசதியைச் செய்து தரவேண்டும்.

டெலிபோன்பற்றியும் சொன்னார்கள். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர் வசிக்கும் இடத்திலும் டெலிபோன் வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

டீ சாப்பிட வேண்டுமென்றால் அதை வாங்கி வர அரை மணி நேரம் ஆகிறது. லெஜிஸ்லேச்சர் ஹவுசுக்குப் பக்கத்திலேயே கான்டீனை ஏற்படுத்தித் தரவேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களுக்கான ரீடிங் ரூமை சட்டமன்ற விடுதியில் பெரிய ஹாலில் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு அவை முன்னவர் அவர்கள் இதைப்பற்றியெல்லாம் பரிவுடன் கவனித்து நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முடித்துக் கொள்கிறேன்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவர் அவர்களே, லெஜிஸ்லேச்சர் டிமாண்டில் என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

குறிப்பாக, நம்முடைய சட்டசபை பட்ஜெட் செஷன் ஒவ்வொரு நாளும் முடிய 2 மணி, 2½ மணி ஆகிவிடுகிறது. அதைச் சரியாக 1½ மணிக்கு முடித்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம், அங்கத்தினர்களுக்கு மாத்திரமல்ல, அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கும், குறிப்பாக நம்முடைய ரிப்போர்ட்டர்களுக்கும் ரொம்ப சிரமமாக இருக்கிறது. அவர்களுடைய வேலையே ஒரு சிரமமான வேலை. ஒன்றரை மணிக்குப் பிறகு சில சமயங்களில் மத்தியானமும் வைத்துக் கொள்கிற காரணத்தால் இரவு 8, 9 மணி ஆகிவிடுகிறது. அதற்குப் பிறகு அவர்கள் சட்டசபை நடவடிக்கைகளை எல்லாம் தயாரிக்க வேண்டியிருக்கிறது. அதற்குக் கொஞ்சம் சமயம் வேண்டும்.





நம்முடைய சட்டசபை கூடும்போது மற்ற கமிட்டிகளையும் வைத்துக் கொள்கிறோம். அது கூடாது என்றுதான் சொல்ல விரும்புகிறேன். மற்ற கமிட்டிகள் கூடும்போது சட்டசபை அங்கத்தினர்கள் அங்கு கொஞ்சம் பேரும் இங்கு கொஞ்சம் பேருமாக இருக்கிறார்கள். கொஞ்சம் பேர் வெளியே சென்று விடுகிறார்கள். சட்டசபையிலே கோரம் இல்லாத நிலைமையில் ரகசியமாக வெளியிலே போய் அங்கு இருக்கின்ற மெம்பர்களை எல்லாம் வரவழைக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** காப்பி கூட வாங்கிக் கொடுக்கிறோம்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இவற்றைத் தவிர்க்க மற்ற கமிட்டிகளை எல்லாம் சட்டசபை நடக்கும்போது கூட்ட வேண்டாமென்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

லேடீஸ் ரூம் பற்றிக் குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன். சட்டசபையிலுள்ள கன்டெம்டு ஃபர்னிச்சர் எல்லாம் லேடீஸ் ரூமில்தான் இருக்கின்றன. 'பெண் என்றால் பேயும் இரங்கும்' என்று கூறுவார்கள். அந்த ரூமைப் பார்த்தால் சற்று நேரம் உட்காருவதற்குக் கூட மனது வரமாட்டேன் என்கிறது. எனக்கு வேண்டுமானால் கொஞ்சம் வயதாகிவிட்டது. எல்லோரையும் வயதானவர்களாகக் கருதிக் கொண்டு இரண்டு ஈஸி சேர்கள் போட்டிருக்கிறார்கள். அதிலே உட்கார்ந்தால் சருக்கிக் கொண்டே வந்துவிடும். லேடீஸ் ரூமில் கொஞ்சம் மாடர்ன் ஃபர்னிச்சர் போட்டு வசதி தேடிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நமது சட்டசபை ஹாஸ்டலிலும், ஆபீசிலும் சேர்த்து 90 பியூன்கள் இருக்கிறார்கள். ஹாஸ்டலில் 60 பேரும், ஆபீசில் 30 பேரும் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் பல ஆண்டுகளாக நான்கைந்து ஆண்டுகளாக டெம்பரவரியாகவே இருந்து

வருகிருர்கள். அவர்களை எல்லாம் நிரந்தரமாக்க வேண்டும். ரிப்போர்ட்டிங் செக்ஷனிலும் ஸ்டாஃப் குறைவாக இருக்கிருர்கள். ரிப்போர்ட்டர்களும், ஆபீசர்களுக்கும் எல்லாம் ஸ்டெனோகிராபர்கள் போடவேண்டும். பியூன்களை எல்லாம் நிரந்தரமாக்க வேண்டும்.

இங்கு விவாதம் நடக்கும்போது ஆபீசர்கள், அமைச்சர்களின் பி.ஏ.-க்களுக்கெல்லாம் இங்கு உட்கார இடம் இருக்கிறது. சட்டசபை காரிடாரில் ஸ்டாஃப் பைல்களை வைத்துக் கொண்டு மணிக் கணக்காக நின்று கொண்டிருக்கிருர்கள். ரெடி ரெபரன்ஸ் வேண்டுமென்ருல் கொடுப்பதற்காக அவர்கள் ஃபைல்களை வைத்துக் கொண்டு நின்று கொண்டிருக்கிருர்கள். போக வர இடைஞ்சல் இல்லாமல் ஒரு பெஞ்சாவது அவர்களுக்குப் போட்டுத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மெம்பர்களுக்கு ரயில்வே பாஸ் ரொம்ப அவசியம். என்னைப் பொறுத்தவரை கவலை இல்லை. மற்ற அங்கத்தினர்கள் சார்பில் கூற விரும்புகிறேன். பலமுறை இந்த டிமாண்ட் வரும்போதெல்லாம் ரயில்வே பாஸ் மெம்பர்களுக்குத் தரவேண்டுமென்று கோரப்பட்டு வருகிறது. அதைக் கண்டிப்பாகக் கொடுத்தாகவேண்டும். பஸ் பாஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிடக் கூடாது. இந்த ஆண்டிலிருந்தாவது ரயில் பாஸ் கொடுத்தால் வரவேற்கத்தக்கதாக இருக்கும். 465 கோடி ரூபாய் செலவழிக்கக்கூடிய தமிழ் நாட்டில் அங்கத்தினர்களுக்கு ரயில் பாஸ் கொடுத்துவிட்டால் பெருமளவுக்குச் செலவாகிவிடாது. அதற்குத் தயவுசெய்து அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஃபாரின் விசிட்டர்ஸ் வரும்போது அவர்களை டாக்சியில் வைத்து அழைத்துச் செல்லுகிருர்கள். முன்பெல்லாம் இந்த மாதிரி வெளிநாட்டிலிருந்து வருகின்ற டிக்னடரிசுக்காக கவர்ன்மெண்ட் ஹவுசில் தனியாகக் கார்கள் நிற்கும். அப்படி வருகின்றவர்களை மரியாதையாக வைத்து நடத்தி அனுப்பவேண்டும். தமிழ்நாடு ஹாஸ்பிடாலிடிக்குப் பேர் போனது. அவர்களுக்கு என்று சில கார்களை அரசாங்கம் ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு வெட்டுப் பிரேரணை கொண்டு வந்திருக்கிருர்கள்.

" To discuss the need to shift the Central Jail from Park Town, Madras, to give way to the expansion of the General Hospital in that area ".

இதையொட்டி ஒரு கருத்தைக் கூற விரும்புகிறேன். இது நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகின்ற பிரச்சினை. மத்திய சிறைச் சாலையை இங்கிருந்து மாற்ற வேண்டுமென்பதற்காக அதற்காக இடம் கூட ரெட் ஹில்சில் தேடிவைக்கப்பட்டிருக்கிறது என்று தெரியும். அது என்ன ஆயிற்று ? ஜெனரல் ஆஸ்பத்திரி விரிவாகிக் கொண்டு போகும் நிலைமையில் சிறைச்சாலையை அங்கிருந்து அப்புறப்படுத்துவது சாலச் சிறந்ததாக இருக்கும். அரசு ஆவன செய்யவேண்டும்.

டிஸ்ட்ரிக்ட் முனிசிபல் கோர்ட்டுகள் இருக்கும் கட்டடங்களை எல்லாம் புதுப்பித்துக் கட்ட வேண்டுமென்று பல ஜில்லாக்களில் இருந்து மனு வந்தபோது அமைச்சர் அவர்கள் பதில் கூறும் போது அவை எல்லாம் சீஃப் ஜஸ்டிஸ் பரிசீலனையில் இருப்பதாகக் கூறிஞர்கள். சீஃப் ஜஸ்டிசிடமிருந்து சீக்கிரம் அவர்களுடைய அபிப்பிரயாயங்களைப் பெற்று ஃபேஸ்டு புரோகிராமாக அந்தக் காரியத்தைச் செய்ய அரசு முன்வர வேண்டும்.

அனிமல் ஹஸ்பண்டரியை எடுத்துக் கொண்டால் ரெண்டர் பெஸ்ட்-வெக்கை வியாதி பரவக்கூடிய நிலைமை இருக்கிறது. அதைக் கண்காணிக்க, தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகப் புத்தகத்தில் கூறப்பட்டிருக்கிறது. அதற்கான டாக்டர்கள், வெட்டிரினரி சர்ஜன்ஸ் குறைவாக இருக்கிருர்கள். அவர்களுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்தி இதைத் தடுப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை மு.ப. 11-30
முடித்துக் கொள்கிறேன்.

**திரு. என். கணபதி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மானியங்களை ஆதரித்து ஒரு சில கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன்.

முக்கியமாக சட்டமன்ற மானியத்தைப் பொறுத்தவரையில் இங்கிருக்கிற அத்தனை உறுப்பினர்களும் கட்சி வேறுபாடு இல்லாமல் நம்முடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்று இங்கு குரல் கொடுத்திருக்கிறார்கள். இப்போது கொடுக்கப்படுகிற சம்பளத்தை இருக்கிற விலைவாசியோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது எதையுமே நாங்கள் சரிவரச் செய்ய முடியவில்லை. நண்பர் திரு. செழியன் சொன்னதுபோல் எங்களுடைய தொழிலை எல்லாம் விட்டு விட்டு இங்கு சட்டமன்ற உறுப்பினர்களாக நாங்கள் பணியாற்றிவருகிற நோக்கில் அதில் வருகிற வருமானத்தை ஓரளவிற்காவது ஈடு செய்கிற வகையில் இங்கு எங்களுக்குக் கொடுக்கப்படுகிற ஊதியமும் அலவன்ஸும் உயர்த்தப்பட்டால் மிகவும் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். எனது சொந்தக் கருத்து, நண்பர் செழியன் அவர்கள் சொன்னதுபோல் ஒரு ரூ. 500 அலவன்ஸையும் சேர்த்து ரூ. 750 ஆக ஆகமொத்தம் எங்களுக்கு மாதம் ஒன்றுக்குக் கொடுத்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, எங்களுக்கு டெலிபோன் வசதி செய்து தர நிச்சயமாக நம் அரசு முன்வரவேண்டும். இப்போது பல்வேறு அலுவலகங்களுக்கு டெலிபோன் செய்து கொள்ளவேண்டியிருப்பதால் மாதாமாதம் குறைந்தது ரூ. 100, ரூ. 150 என்று டெலிபோன் பில் கட்டவேண்டியிருக்கிறது. இது தவிர்க்கமுடியாத நிலையாகிவிட்டதால்—பெரும்பாலும் எம்.பி.-க்களுக்கு போன் கொடுக்கப்பட்டு அவர்கள் டெல்லியில் இருந்துகொண்டும் இங்கு இருந்துகொண்டும் அவர்கள் டெல்லியில் ஒரு போன், இங்கு ஒரு போன் என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி அங்கும் இங்கும் போன் வைத்துக்கொண்டு அவர்கள் தொகுதி வேலையை எவ்வளவுதூரம் செய்கிறார்கள் என்பதை நான் சொல்வதற்கில்லை. ஆனால் குறிப்பாக எந்தத் தொல்லையாக இருந்தாலும் முதன் முதலாக சட்டமன்ற உறுப்பினரிடத்தில் வந்துதான் அதைத் தீர்த்து வைக்கவேண்டிய ஒரு தொல்லை இருக்கிற காரணத்தால் இவர்களுக்கு டெலிபோன் ஒரு அத்தியாவசியம் என்பதை உணர்ந்து அதற்கு ஏற்பாடு செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





அடுத்து, ரயில்வே பாஸ் எங்களுக்கு நிச்சயமாக வழங்கப்பட வேண்டும். பஸ் பாஸ் கொடுத்திருக்கிறார்கள். இந்த பஸ் பாஸை நாங்கள் உபயோகித்தாலும் உபயோகிக்காவிட்டாலும் இங்கிருக்கிற இலாகா மொத்தத்திற்கு ஆண்டுக்கு 239 பாஸ் என்று கணக்கிட்டு பணத்தை வசூல் செய்து கொள்கிறார்கள். அந்தப் பணத்தைப் பார்க்கும்போது ரயில்வே பாஸ் கொடுப்பதற்கு ஆகும் செலவு குறைவாகத்தான் இருக்கும்.

அடுத்து, எங்களுக்குள்ள நூல் நிலையத்தை எடுத்துக் கொண்டால் அந்த நிலையத்தில் பல அருமையான புத்தகங்கள் இருந்தாலும் இப்போது நவீனமாக வெளியிடப்படுகிற நூல்கள் எல்லாம் அதிகப்படியாக சேர்க்கப்படவேண்டும். அங்கு உட்கார்ந்து படிப்பதற்கு எங்களுக்கு நல்ல வசதிகள் செய்து தரப்பட வேண்டும். அங்கிருக்கிற ஊழியர்கள் மிக நல்லமுறையில் எங்களிடம் நடந்து கொண்டாலும் அங்கிருக்கிற இட நெருக்கடி மற்றவைகளை உத்தேசித்து அங்கு நல்லமுறையில் அந்த நூல் நிலையத்தைப் பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை. ஆகவே அதை விஸ்தரிப்பதற்கு முயற்சி செய்யவேண்டும்.

அடுத்து, பேரவைத் தலைவர் ஒரு ஒதுக்கிவிடப்பட்ட மனிதர் போல் இருக்கிறார்கள். அவர்களுக்கு அளிக்கிற ஊதியத்தை ஓரளவிற்கு உயர்த்தி மாதம் இரண்டாயிரம் ரூபாயாவது அவர்களுக்கு ஊதியம் தரப்படவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உங்களுடைய கோரிக்கைக்கு தயவுசெய்து என்னை துணைக்கு அழைக்க வேண்டாம். உங்களுக்கு மாதம் ரூ. 350 என்பதை 750 ரூபாய் என்று ஆக்கும்போது தலைவருக்கு இரண்டு மடங்காக்குவதில் என்ன தவறு ?

**திரு. என். கணபதி:** ஆகவேதான் தலைவர் அவர்களது ஊதியத்தை அதிகப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** பேரவைத் தலைவருக்கு ரூ. 2,000 என்று வைத்தால் யாரும் மந்திரியாக இருக்கமாட்டார்கள். எல்லோரும் பேரவைத் தலைவராக வர வேண்டுமென்று நினைப்பார்கள். அது வேறு ஆபத்து.

**திரு. என். கணபதி:** அடுத்து, நீதி நிர்வாகம் பற்றி ஒரு கருத்தை மட்டும் கூறிக்கொள்ளவிரும்புகிறேன். பி.ஏ., பி.எல். படித்தவர்கள்தான் மாஜிஸ்ட்ரேட்களாகவும், டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப்களாகவும் போகிறார்கள். செஷன்ஸ் ஜட்ஜாகக் கூட நேரடியாக நியமிக்கப்படுகிறார்கள். பாவம், இந்த மாஜிஸ்ட்ரேட்களாக நியமிக்கப்படுபவர்கள் ரிட்டயராகும் நேரத்தில்தான் டிஸ்ட்ரிக்ட் முன்சீப் ஆகும் நிலைமை இருக்கிறது. எனவே டிஸ்ட்ரிக்ட் முன்சீப்ஸ் தேர்ந்தெடுக்கும்போது மாஜிஸ்ட்ரேட்களுக்கு ஒரு ஆட்டோமாட்டிக் ப்ரமோஷனை டிஸ்ட்ரிக்ட் முன்சீப் போஸ்டைத் தர அவர்களுக்கு ஓரளவுக்கு அந்த வாய்ப்பைத் தேடித் தர வேண்டும்.

அடுத்து, கால்நடை நிர்வாகம் பற்றி பேசுகிற நேரத்தில் லைவ் ஸ்டாக் அஸிஸ்டெண்ட்ஸ் என்ற ஒரு காட்டிகரி இருக்கிறார்கள். அவர்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு இடையே அந்தப் பணியைச் செய்யவேண்டியிருக்கிறது. ஊதியக் குழுவில் ஊதிய நிர்ணயிப்பு நேரத்தில் ஒருசில அம்பீக்குவிட்டீஸ் அவர்களுக்கு ஏற்பட்டிருப்பதாக ஒரு குறை இருக்கிறது. எனவே அமைச்சர் அவர்கள் இந்த லைவ் ஸ்டாக் அஸிஸ்டெண்ட்ஸ் விஷயத்தில் சற்று கவனம் செலுத்தி அவர்களுக்கு ஊதிய உயர்வு அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, காளை இனத்தினை விருத்தி செய்வதில் 25, 30 ஆண்டுகளுக்கு முன்பு உள்ளதைப்போன்று சிந்திக் காளைகளை வைத்துக் கொண்டுதான் இனத்தை உற்பத்தி செய்வதற்கான முயற்சியைச் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் தற்காலத்தில் உள்ள ஜெர்ஸி காளைகளை அதிகமாக வரவழைத்து கால்நடைச் செல்வத்தை, அதன் உற்பத்தியை அதிகரிக்கவேண்டும்.

அடுத்து, கிராமங்களில் கால்நடைகளை வைத்துக்கொள்வதில் அத்தியாவசியமான ஒரு நிலை இருக்கிறது. சாதாரணமாக ஒரு வீடு என்றால் வீட்டுக்குப் பின்னால் ஒரு மாட்டுக் கொட்டகை இருக்கும். ஆனால் இப்போது குடியிருப்புகளுக்கு பட்டா வழங்கும்போது அந்த வீட்டு மனையை ஓரளவிற்கு அளந்து வீட்டுக்கு வேண்டிய பகுதியைத்தான் தருகிறார்கள். மாட்டுக் கொட்டகை வைத்துக்கொள்ள அல்லது கோழிகளை வைத்து



தொழில் செய்வதற்கு ஏற்ற விதத்தில் குடியிருப்பு பட்டா வழங்கும்போது அதிகப்படியான இடம் வழங்கப்பட வேண்டும். கீ வில்லேஜ் சென்டர்களில் ஆர்டிபிஷியல் இன்செமனேஷன் செய்யும்போது வெட்டரினரி துறையைச் சார்ந்த அவருக்கு உதவியாக ஒரு அட்டன்டர் நியமிக்கப்படவேண்டும். மாடுகளோடு பழகும்போது சில நேரங்களில் உதை வாங்கி பல் உடையக் கூடிய நிலைமையில் பழகுகிறார்கள். அந்த மாதிரி நேரங்களில் அவர்களுக்கு உதவியாளர்களை பஞ்சாயத்து யூனியன் மூலம் நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கட்சித் தலைவர்கள் பேசவேண்டியிருக்கிறது. மூன்று அமைச்சர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு பதினைந்து நிமிடங்களாவது கொடுக்கவேண்டாமா? ஆகவே பத்து நிமிடங்களில் முடித்துக்கொள்ளுங்கள்.

***திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இன்றையதினம் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உள்ள குறைபாடுகளை எல்லாம் இங்கு பேசிய உறுப்பினர்கள் அனைவரும் குறிப்பிட்டார்கள். ஒன்று நான் தெளிவாகச் சொல்லவேண்டும். அமைச்சரவையில் இருக்கிற அமைச்சர்களுக்கு இருக்கிற சிரமத்தை விட மிகக் சிரமமான பணியை சட்டமன்ற உறுப்பினர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதை தயவு செய்து நீங்கள் கருத்தில் கொள்ளவேண்டும். எதற்கெடுத்தாலும் சாதாரண மக்கள் சட்டசபை உறுப்பினர்களை அணுகி அவர்கள் குறைபாடுகளை எடுத்துச்சொல்லி அதை நீக்குவதற்கு முயற்சிக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். எதிர்பார்ப்பதை நாங்கள் செய்யவில்லை என்றால் நாங்கள் சரியான முறையில் பணி செய்யவில்லை என்ற கருத்து மக்களிடையே பரவி விடும் என்ற காரணத்தால் அவர்களோடு ஒன்றிப் பழகவேண்டியவர்களாக நாங்கள் இருக்கிறோம். ஆக அதற்கேற்ற வசதிகள் இல்லை என்றால் அந்தப் பணியை சரியான முறையில் செய்யமுடியாது.

கடந்த பல ஆண்டுகளாக, இருக்கிற நிலையை எடுத்துக் கொண்டால் எந்தெந்த சட்டமன்ற உறுப்பினர்கள் அதிகமாக மக்கள் பிரச்னையைத் தெரிந்துகொண்டு அதைத் தீர்ப்பதில் முயற்சி எடுக்கிறார்களோ அந்தத் தொகுதியில் நிச்சயமாக பல நல்ல காரியங்களைச் செய்துகொடுக்க முடிகிறது. ஆகவே எல்லா உறுப்பினர்களும் நல்லமுறையில் பணி செய்வதற்கு வேண்டிய

[திரு. எ. ஆர். மாரிமுத்து] [1973 மார்ச் 27

வசதிகளை செய்துகொடுக்கவேண்டும் என்று எல்லோரும் கேட்பதில் தவறு இல்லை. அவர்களோடு நானும் சேர்ந்து இந்த சிரமங்களை எல்லாம் போக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ரயில்வே பாஸ் பற்றிச் சொன்னார்கள். ரொம்பவும் அவசியம். செய்யவேண்டிய ஒன்று.

டெலிபோன் வசதி ரொம்ப அவசியம்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அந்தந்தத் தொகுதியில் ஒரு ஆபீஸ் இருந்து, அதில் ஒரு கிளார்க் இருக்கவேண்டியதும் அவசியம். பொது மக்கள் குறைகளை எழுத்து மூலம் வாங்கும் போது அவற்றின்பேரில் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன என்பதை நாம் தொடர்ந்து கண்காணித்து வரவேண்டும். நாங்களே எல்லாவற்றையும் பார்த்துச் செய்வது இயலாத காரியமாக இருக்கிறது.

சட்டமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களுக்கு அல்லது அதிகாரிகளுக்கு குறைபாடுகள் பற்றி எழுதிக் கொடுத்தால் கிட்டத்தட்ட இதைக் கவனிக்கிறோம் என்ற ஒரே கடிதம்தான் இப்போது ரெகுலராக வந்துகொண்டிருக்கிறதே தவிர, அவற்றின் பேரில் என்ன முடிவுகள் எடுக்கப்பட்டன என்பதற்குப் பதில் சாதாரணமாக வந்து சேருவதில்லை. கவனிக்கிறோம் என்ற கடிதம் மட்டும் போதாது. பரிசீலிக்கிறோம் என்பதோடு துரிதமாக பரிசீலனை செய்து அதன் முடிவுகளையும் அறிவிப்பதற்கான முயற்சிகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சாப்பாடு வசதிபற்றியெல்லாம் சொன்னார்கள். அதைப்பற்றி நான் அதிகம் சொல்லவேண்டியதில்லை. செக்ரட்டேரியட்டில் சாப்பாடு வசதி செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இங்கு வந்து சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரு மாத காலம் தங்கிவிட்டு போகும்போது யாரும் நோய் இல்லாமல் போவார்கள் என்று நான் கருதவில்லை. வயிற்று வலியையாவது வாங்கிக்கொண்டு போகவேண்டிய ஒரு துர்பாக்கிய நிலையில் இருக்கிறோம். ஆகவே சாப்பாடு வசதியையாவது, எங்கள் உடல்நிலையைக் கருத்தில் கொண்டு, ஒழுங்காகச் செய்து கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1973 மார்ச் 27] [திரு. எ. ஆர். மாரிமுத்து]

கால்நடைத் துறையைப் பொறுத்தவரையில் கடந்த காலத்தில் பல வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றி இருந்தாலும், பரவலாக நாட்டில் நாம் எதிர்பார்த்த வளர்ச்சியை எய்தவில்லை என்று கருதுகிறேன். என்ன காரணம் என்றால் நாம் ஏதாவது வேகமாகச் செய்யவேண்டுமென்றால் அதைப் பரவலாகச் செய்ய வேண்டும். செயற்கை கருத்தரிக்கும் முறையை எடுத்துக் கொண்டால் ஆயிரம் இடங்களில் நடைபெறுவதாகக் கருதுகிறேன். 2,000 கால்நடை உதவியாளர்கள் இருக்கும்பொழுது 1,000 பேர்கள் உள்ள இடத்தில்தான் செயல்படுகிறது. அதை இன்னும் அதிக மாக்கலாம். அதை அமலாக்குவதில் கஷ்டம் ஒன்றும் இருக்காது.

நாம் கணக்குப் போட்டுப் பார்த்தால் 1,500 ஆக்கவேண்டு மென்று சொன்னால் பல கோடி ரூபாய்க்குக் கணக்கு வரும். இவ்வளவு ரூபாய் கொடுக்க முடியாது என்று சொல்லி ஸ்டாண்டிங் கமிட்டியில் கருத்து சொல்லிவிடுகிறார்கள். இருக்கிற வசதியைக் கொண்டே அதை அபிவிருத்தி செய்யலாம். பரவலாக அதிக இடங்களில் இதைச் செய்ய முடியும். ஒரு இடத்தில் விந்து தயார் செய்கிறோம் என்று சொன்னால் அதைச் சைக்கிளில் எடுத்துக்கொண்டு போகச்செய்து, அந்தப்பகுதியில் இருக்கும் உதவியாளர்களைக் கொண்டு இதைப் பரவலாகச் செய்ய முடியும். அதற்கு அதிகம் செலவு ஆகாது. இதனால் நல்ல முறையில் அபிவிருத்தி செய்ய வாய்ப்பு ஏற்படும்.

பால் அபிவிருத்தித் திட்டத்தின் இன்னொரு பகுதியில் கால் நடை அபிவிருத்திக்கும் பணம் ஒதுக்குகிறார்கள். இரண்டு விதத்திலே இரண்டு விதமாகச் செலவு செய்கிறோம். இதை ஒரேயடியாகச் செலவு செய்தால் நன்றாக இருக்கும். பால் உற்பத்தி, பால் சேகரம், பால் விற்பனை எல்லாவற்றையும் பால் அபிவிருத்தித் துறையே பார்த்துக்கொள்ளலாம். கால்நடை அபிவிருத்தி செய்யும் முறையை மட்டும் இந்தக் கால்நடை துறையிடத்தில் விடுவது நல்லது. அப்படி முயற்சி செய்தால் பயன்உள்ளதாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

நமது நாட்டில் 2½ கோடி பசு, எருமை இருக்கிறது. பட்டுக் கோட்டைப் பகுதியில் செயற்கைக் கருத்தரிப்பு நிலையம் இல்லை. அதை அந்தப் பகுதியில் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1973 மார்ச் 27

கொள்கிறேன். கால் நடை மருந்தகங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

மருந்தகங்கள் இருக்கும் இடங்களில் கோழிப் பண்ணை டெவலப்மெண்டுக்கும் சம்பந்தம் வைத்து மாதிரிப் பண்ணைகளாகச் செய்யவேண்டும். இங்கே ஹை-பிரிட் கோழி தயாரிப்பது இல்லை. ஒயிட் லெக்கான் கோழி தான் அபிவிருத்தி செய்கிறோம். இது அதிக லாபம் தருவது இல்லை. 160-180 முட்டை தான் வருஷத்திற்குத் தருகிறது. தீவனத்திற்கு ஆன செலவு போக மிச்சம் அவர் களுக்கு ஒன்றும் வருவது இல்லை. ஹைபிரிட் கோழி 240 முட்டை வரை கொடுக்கிறது. அந்த அளவு முட்டை கொடுத் தால் தான் ஒரு கோழிக்கு மாதம் 75 காசு கிடைக்கும். 160-180 முட்டையிடும் கோழி என்றால் நிச்சயமாக லாபம் இருக்காது. கையைப் பிடிக்கும். ஆகவே, இந்த ஒயிட் லெக்கான் கோழி அபிவிருத்தி செய்வதை விட்டு விட்டு, ஹை-பிரிட் கோழி அபிவிருத்தி செய்ய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டில் எல்லாப் பகுதிகளுக்கும் செயற்கைக் கருத்தரிப்பு முறை கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று சொல்லி உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** உதவி சபாநாயகர் அவர்களே, இன்று 4 மானியங்களின் பேரில் பேச வேண்டிய நிலை ஏற்பட்டு இருக்கிறது. வெட்டுப் பிரேரணை 1048-ல் சட்டமன்றம் கூடுகின்ற நாட்களை அதிகப்படுத்தவேண்டுமென்று ஏ. சுப்பிர மணியம் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதை நாம் ஏற்றுக் கொண்டிருந்தால் இந்த நிலை வந்திருக்காது என்பது தான் என்னுடைய அபிப்பிராயம். பொதுவாக போன வருஷம் எத்தனை நாட்கள் டிமாண்ட்ஸ்க்காக ஒதுக்கப்பட்டதோ அதை விடக் குறைவாக இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய ஆலோசனை என்னவென்றால் நம்முடைய பட்ஜெட் கூட்டம் 20-ந் தேதி பிப்ரவரியில் ஆரம்பித்து டிமாண்ட்ஸ் பொறுத்தவரையில் குறைந்தது 30 நாட்கள் இருந்தால் தான் நன்றாக இருக்கும். அப்போது தான் எல்லா மானியங்களின் மீதும் நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்ல முடியும்.



1973 மார்ச் 27] [திரு. கே. டி. கே. தங்கமணி]

இன்று அனிமல் அஸ்பண்டிரிக்காக ஒதுக்கியிருந்தோம். இந்த அனிமல் அஸ்பண்டிரியோடு வேறு இலாகாக்களையும் இணைத்தால் எப்படி கருத்துச் சொல்ல முடியும். அந்த அளவுக்குச் சொல்ல முடியாது.

இந்த அனிமல் அஸ்பண்டிரித் துறையில் இருக்கும் ஊழியர்கள் தங்களுடைய சங்கத்தை அங்கீகரிக்கவேண்டுமென்று கோரிக்கை வைத்து இருக்கிறார்கள். நான் அந்த விவரத்திற்குள் போக விரும்பவில்லை. திரு. ஏ. கே. சுப்பையா அவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையில் அதை அரசு கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஜெயிலும், அட்மினிஸ்டிரேஷன் ஆப் ஜஸ்டிஸும் என்று வருகிற போது ஜெயிலுக்கு 3 கோடி ரூபாய் ஒதுக்கி யிருக்கிறோம். அட்மினிஸ்டிரேஷன் ஆப் ஜஸ்டிஸுக்கு 3 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். இந்த மாதிரி இருக்கிறபோது. அந்த நிர்வாகத்தில் யார் யார் பணியாற்றுகிறார்கள், என்னென்ன பணிகளை அந்தத் துறை செய்து கொண்டு வருகிறது என்பதற்கு ஒரு குறிப்பு வேண்டாமா? இந்தச் சபைக்கு அந்த அளவிற்கு மரியாதை கொடுத்து இருக்க வேண்டுமென்று கருத்து சொல்கிற போது. ஏதோ டிமாண்ட் இவ்வளவு என்று கேட்டு விட்டு, வெட்டுப் பிரேரணைகளை அனுமதித்து விட்டு, பிறகு அதன் மீது விவாதம் நடத்திவிட்டுப்போவது என்பது முறையானது அல்ல. இந்த இரண்டு இலாகாவும் மிகமிக முக்கியமான இலாகா. இந்த இரண்டு இலாகா மீதும் ஒரு குறிப்புரை வைத்தால் கருத்துச் சொல்ல நன்றாக இருக்கும்.

அட்மினிஸ்டிரேஷன் ஆப் ஜஸ்டிஸ் என்று வருகிறபோது ஒன்றிரண்டு விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். ஜஸ்டிஸில் நிர்வாகம் தலையிடாமல் இருப்பதற்காகச் சொல்கிறேன். இன்றைக்கு லா கமிஷன் ரிப்போர்ட் வந்திருக்கிறது. அந்த ரிப்போர்ட்டில் சி.பி.ஐ. பல இன்வெஸ்டிகேஷனைச் செய்கிறார்கள். அதிலே மாநில அரசு நடவடிக்கை எடுப்பது என்று சொன்னால் அது உள்ளபடியே சரியாகாது என்று சொல்லியிருக்கிறார்கள். இது பற்றி தமிழ் நாடு அரசின் கருத்து என்ன? அதே மாதிரியாக பெட்டி கேசஸ் டிஸ்போசல் சம்பந்தமாக லா கமிஷன் ரிப்போர்ட் சொல்லி யிருக்கிறது. கேரளாவில் சென்று பார்த்தால் நல்ல முறையில்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 மார்ச் 27

நடைபெறுகிறது என்று சொல்கிறார்கள். போலீஸ் இலாகா அங்கே செம்மையாக நடைபெறுகிறது, என்று சொல்லியிருக்கிறார்கள். அது பற்றி இந்த அரசின் கருத்து என்ன?

இன்னொன்று நம்முடைய நீதி இலாகாவைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். நாட்டிலுள்ள நீதி, நிர்வாகம் தனித்தனியே இயங்கவேண்டுமென்று வைத்திருக்கிறோம். இந்த இடத்திலே நாட்டிலே நம்முடைய எக்சிகியூடிவ், நிர்வாகம் அதிகமாக தலையிடுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். விவரம் வேண்டுமானால் இந்த இடத்தில் சொல்வது பொருத்தமாக இருக்காது. விவரங்களை என்னால் தர முடியும். அரசுத் துறையிலிருந்து பல ஜில்லா அதிகாரிகளுக்கு இந்த மாதிரி தலையீடு வந்திருக்கிறது அந்தத் தலையீட்டைக் குறைக்க வேண்டும். அந்தத் தலையீட்டின் காரணமாக அவர்கள் அரசியல் வாதிகள் போல் மாறிவிடும் நிலையேற்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம். லார்ட் சீப் ஜஸ்டிஸ் ஹெர்பர்ட் அவர்கள் சொன்னார்கள். "Justice must not only be done, but must be deemed to bedone"

அப்படி வருகிறபோது ஹைக் கோர்ட்டில் ஒரு விஷயம் நடந்தது. கேரளா ஹைக்கோர்ட்டில் பிரதம நீதிபதி அவர்கள் வயதைக் குறைத்துக் கொடுத்து விட்டார்கள் என்று விவகாரம் கிளப்பினார்கள். அந்த அறிக்கையின் பேரில் கன்டம்ட் ப்ரோசீடிங் வந்தது. அதில் சீப் ஜஸ்டிஸ் விசாரிக்கப்படவேண்டும் என்று சொல்லி, அந்தக் கோர்ட்டில் எடுத்துச்சொல்லப்பட்டது என்னவென்றால் இங்கே புள்ள கன்டம்ட் ப்ரோசீடிங்கில்

"Prosecutor, the witness and also the Judge are the same"

என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

அந்த இடத்தைப் பார்க்கிற நேரத்தில் இங்கே முன்னாள் சபா நாயகர் அவர்கள் ஒரு ரிட் போட்டு இருந்தார்கள். அந்த ரிட்டிலே "There was a lot of unwarranted remarks" பத்திரிக்கைகளில் செய்தி வந்திருக்கிறது. அதைத்தான் சொல்கிறேன், "unwarranted remarks about the person of the speaker". அந்த ஸ்பீக்கர் போட்ட இன்னொரு மனுவை அதே ஜட்ஜ் எடுத்துக்



1973 மார்ச் 27] [திரு. கே. டி. கே. தங்கமணி]

கொள்வது என்பது எந்த அளவுக்கு நியாயமாக இருக்கும் என்று கேட்கிறேன். எந்த அளவுக்கு அது சரியாக இருக்க முடியும்? அதே மாதிரி ஒரு ரிட்டிலே ரெஸ்பான்டென்ட்டாக ஒருவர் இருக்கக்கூடிய நிலையில் (குறுக்கீடு) . . . (திரு. என். கணபதி எழுந்தார்) நான் ரொம்ப கேர்புல்லாகத்தான் பேசுகிறேன்.

நான் மிகவும் guarded ஆக, கோளாறு வராமல் பேசிக் கொண்டிருக்கிறேன். ஆகவே குறிக்கிட வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு நான் முக்கியமாக பேச விரும்புவது சட்டமன்றம், சிறைச்சாலை இந்த மானியங்களைப் பற்றித்தான். சட்ட மன்றத்தைப் பற்றி பேசும்போது பல உறுப்பினர்கள் பல வசதிகளைக் கேட்டார்கள். நான் புதிதாக சலுகைகள் வேண்டும் என்று கேட்கின்றவன் அல்ல. நாம் சில விஷயங்களை ஏற்கனவே வற்புறுத்தியிருக்கிறோம். அவைகள் என்னவாயிற்று, நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டதா என்று தெரியவில்லை.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள், தலைவர்கள் உட்கார்ந்து பேசுவதற்கு இங்கே 'லாபி' கிடையாது. இந்த 'லாபி' வெராண்டாவாக இருக்கிறது. இந்த வெராண்டாவில் யார் வருகிறார்கள், யார் போகிறார்கள் என்று தெரியவில்லை. ஏதாவது உட்கார்ந்து குறிப்பிட்ட விஷயங்கள் பற்றி எதிர்க்கட்சித் தலைவர்களும் உறுப்பினர்களும் பேசுவதற்கு முடியவில்லை. 'லாபி' நமக்கு கிடைக்கின்ற வரையிலாவது, எதிர்க்கட்சித் தலைவர்கள், எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் உட்கார்ந்து பேசுவதற்கு ஒரு 'ரூம்' கொடுக்கவேண்டும். அதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். சென்ற வருடத்தில்கூட இதே பிரச்னையை எழுப்பியிருக்கிறேன். அது அநேகமாக கவனிக்கப் படும் என்று நினைத்தேன். ஏனோ இன்னும் கவனிக்கப்படாமல் இருக்கிறது.

அதேமாதிரி எதிர்க்கட்சிகளுக்கு ஆபீஸ் கொடுத்திருக்கிறார்கள். அதில் இன்றைக்கு டெலிபோன் கிடையாது. எதிர்க்கட்சி ஆபீஸ்களுக்கு டெலிபோன் எக்ஸ்டென்ஷன் கொடுக்க வேண்டும். அல்லது டெலிபோன் தனியாகக் கொடுத்து, இந்த அளவுக்கு டெலிபோன் அனுமதிக்கலாம்; அதற்கு மேல் போகக்கூடாது, என்று ரெஸ்டிரிக்ட் செய்யலாம் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 மார்ச் 27

அடுத்து நான் குறிப்பிட விரும்புவது, I am generally opposed to deputations. இங்கே நிர்வாகம் இருக்கிறது. இந்த நிர்வாகத்திற்கு நீங்கள் தலைவராக இருக்கிறீர்கள். இந்த மானியத்தில் சபாநாயகரைப் பற்றி விமர்சனம் செய்யலாம். சபாநாயகருக்கு இன்னும் அதிகாரம் வேண்டும் என்று சொல்லலாம். சபாநாயகர் தலைமையில்தான் இந்த நிர்வாகம் இருக்க வேண்டும். வெளியிலிருந்து டெபுடேஷனில் வருகிறவர்களைக் குறைக்க வேண்டும். டெபுடேஷனைக் குறைக்காவிட்டால் இங்கே இருப்பவர்களுக்குப் பதவி உயர்வு (பிரமோஷன்) இல்லாமல் போய்விடும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். முதல் கூட்டத்திலேயே சொன்னேன். இதெல்லாம் நிபுணத்துவம் படைத்த வேலையில்லை. நிபுணத்துவம் இல்லாத வேலைகளில் அடிக்கடி எக்ஸ்டென்ஷன் கொடுப்பது சரியில்லை. எக்ஸ்டென்ஷன் கொடுப்பதால் வரக்கூடிய அபக் கேடுகள் அதிகம். அப்படி எக்ஸ்டென்ஷன் கொடுக்கப் படுபவர்கள் தங்களுடைய கடமையையே மறக்கின்ற நிலைமை ஏற்பட்டுவிடும் என்ற காரணத்தால் யாருக்கும் எக்ஸ்டென்ஷன் கொடுக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பிறகு சபாநாயகரைப் பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். பிரிவிலேஜ் மோஷன் என்பது மிக முக்கியமான விஷயம். அது வெறும் தனிப்பட்டவர்கள் பிரச்சினையல்ல. ஒரு உறுப்பினர் பிரிவிலேஜ் மோஷன் கொடுத்து அதைச் சபாநாயகர் நிராகரிக்கின்ற நிலைமை ஏற்பட்டால், அந்த உறுப்பினரையாவது கூப்பிட்டு வைத்து சபாநாயகர் அறையில் விவாதித்து நிராகரித்தால் அது உறுப்பினருக்கு அளிக்கப்படும் மரியாதையாக இருக்கும். அப்படியில்லாது மற்ற லெட்டர்கள் அனுப்பப்படுவது போல, பிரிவிலேஜ் மோஷன் நிராகரிக்கப் பட்டது என்று கடிதம் அனுப்புவது உறுப்பினர்களுக்கு அவ்வளவு மரியாதை அளிப்பதாக இருக்காது என்பதைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, சில முக்கியமான விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன்:

The Manager's post in the Legislators' Hostel should be revived for proper supervision. Tube lights should be put for less consumption of electricity.



1973 மார்ச் 27] [திரு. கே. டி. கே. தங்கமணி]

A night duty doctor must be provided in the Government Estate.

கவர்ன்மெண்டு எஸ்டேட்டில் இருக்கக்கூடிய வீடுகள் உறுப்பினர்களுக்குக் கிடைக்கக்கூடிய வகையில் அவர்களுக்கு பிரையாரிடி இருக்க வேண்டும். நாடாளுமன்றத்தில் இருக்கின்ற உறுப்பினர்களுக்கு அப்படித்தான் செய்கிறார்கள்.

கடைசியாக ஜெயில் நிர்வாகத்தைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். ஜெயில் நிர்வாகத்திற்கு 3 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். ஜெயிலில் இருக்கின்ற பல விவகாரங்களுக்கு நான் இப்போது போக விரும்பவில்லை. ஜெயிலில் இருக்கின்ற சிப்பந்திகளுடைய விஷயம் என்ன என்பதைச் சொல்லுகிறேன். ஒன்று இன்றைக்கு ஒவ்வொரு சிறையிலும் இருக்கக்கூடிய ஊழியர்களுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும் என்ற 2, 3 உறுப்பினர்கள் வெட்டுப் பிரேரணை கொடுத்திருக்கிறார்கள். குறிப்பாக மதுரை ஜெயிலை எடுத்துக் கொண்டால், அங்கே 1,000 பேர் கைதிகள் இருக்க வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் 1,000-க்கு மேற்பட்ட கைதிகள் வைக்கப் பட்டிருக்கிறார்கள். அங்கே 100 வார்டர்கள் இருக்க வேண்டும். ஆனால் 68 வார்டர்கள்தான் இருக்கிறார்கள். சரியான ஸ்கேலின் அடிப்படையில் வார்டர்களைப் போட வேண்டும். இப்போது மதுவிலக்கு கேஸ்கள் இல்லை. ஆகவே வார்டர்களின் எண்ணிக்கையைக் குறைக்கிறோம் என்றால், அது சரியாகாது. மதுவிலக்கு கேஸ்கள் இல்லை என்றாலும், வேறு பலவித கேஸ்களில் கைதிகள் வருகிறார்கள். இதைக் கணக்கில் கொண்டு ஸ்டிரெங்த்தை அதிகப்படுத்த வேண்டும்.

இன்னொரு குறை, இந்த இலாக்காவில் பகல் பூராவும் வேலை செய்கிறார்கள் வார்டர்கள். இரவு டியூடிக்கு மூன்று வார்டர்கள். மாலை 6 மணியிலிருந்து 8 மணி வரையில் ஒருவர். 8 மணியிலிருந்து 10 மணி வரை ஒருவர், 10 மணியிலிருந்து 12 மணி வரை ஒருவர். மீண்டும் 6 மணியிலிருந்து 8 மணி வரை வேலை செய்தவர், இரவு 12 மணியிலிருந்து 2 மணி வரையிலும், இரவு 8 மணியிலிருந்து 10 மணி வேலை செய்தவர், மீண்டும் இரவு 2 மணியிலிருந்து 4 மணி வரையிலும், இரவு 10 மணி யிலிருந்து 12 மணி வரையில் வேலை செய்தவர், மீண்டும் இரவு

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 மார்ச் 27

4 மணியிலிருந்து 6 மணி வரையிலும் வேலை செய்ய வேண்டும் என்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். இப்படி ஏற்படுத்தியிருப்பதால், அவர்கள் ஒழுங்காக இரவில் தூங்க முடியாத அளவுக்கு நிலைமை ஏற்படுகிறது. இந்த முறையை மாற்றி, போலீசில் வைத்திருப்பது போல முறையை வைத்து, 3 பேர் நைட் டியூடி வார்டர்கள் என்பதை 4 பேராக வைத்தால், நிர்வாகத்தில் நல்ல நிலைமை இருக்கும். இன்னொன்று சில இடங்களில் 'டபிள் நைட்' போடுகிறார்கள். 1946-ல் நான் சிறையில் இருந்தபோது, ஒருவருக்கு 'டபிள் நைட்' போட்டதற்காக சீப் வார்டரை சஸ்பெண்டு பண்ணினார்கள். இப்போது மீண்டும் 'டபிள் நைட்' போடுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதை மாற்ற வேண்டும்.

அடுத்து இன்றைக்கு பதவி உயர்வு இந்த இலாக்காவில் கொடுப்பதில் பல குறைபாடுகள் இருக்கின்றன. மதுரையில் ஒரு அடெண்டெண்டை சீப் வார்டராக ஆக்க முயற்சி நடக்கிறது. சென்னையில் இருந்த ஒருவர் வார்டராகி, சீப் வார்டராகி, இப்போது ஜெயிலர் ஆகிவிட்டார். இப்படி சில தலையீடுகளால், பதவி உயர்வு கிடைக்க வேண்டியவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்காமல் போய் மன வருத்தம் ஏற்படும் நிலை அந்த இலாக்காவில் ஏற்பட்டுள்ளது. இதைத் தடுத்து நிறுத்த வேண்டும். இரண்டு உதாரணங்கள் கொடுத்தேன். வேறு விவரங்கள், பெயர் போன்றவை வேண்டுமென்றாலும் கொடுக்க முடியும். இந்த மாதிரி நிலைமைகள் இருக்கக்கூடாது. பணியாற்றுகின்றவர்களுக்கு உற்சாகம் ஊட்டுகின்ற முறையில் இருக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து.

அடுத்தபடியாக, கைதிகளைப் பற்றி எடுத்துக்கொண்டால், இன்றைக்கு அதிகமான சந்தேகக் கேஸ்கள் போடுகிறார்கள். புதிதாக என்ன ஏற்பட்டிருக்கிறது என்றால், மதுவிலக்கை ரத்து செய்துவிட்டாலும், எப்படியாவது சில கேஸ்கள் போட வேண்டும் என்று வைத்திருக்கிறார்கள். அதனால் ஒருவர் கையில் ஒரு பாட்டில் சாராயத்தைக் கொடுத்து, இவர் சாராயத்தை வெளியே விற்கப் போனார் என்று 'இன்டைரக்ட் ப்ரொஹிபிஷன்' கேஸ்கள் ( inderect prohibition cases ) பல வந்து கொண்டிருக்கின்றன. அந்த மாதிரி கேஸ்கள் எல்லாம் நிறுத்தப்பட வேண்டும்.



1973 மார்ச் 27] [திரு. கே. டி. கே. தங்கமணி]

அடுத்து 'வாட்ச் கேங்'கில் இருப்பவர்கள் ஞாயிற்றுக் கிழமையிலும் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. வார்டுகளில் மட்டுமல்லாமல், ஜெயில் சூபிரெண்டு, மற்றும் அதிகாரிகள் வீடுகளை இவர்கள் கவனிக்க வேண்டியிருக்கிறது. இவர்கள் இந்த மாதிரி வாரத்தில் ஏழு நாட்களும் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே அவர்களுக்கு விசேஷ சலுகை கொடுக்க வேண்டும்.

கைதிகளுக்கு மாதம் ஒரு முறை 28 கிராம் எண்ணெய் கொடுக்கிறார்கள். இதை மாதம் இரண்டு முறை என்று ஆக்கலாம். நான் அதிகமாகக் கேட்கவில்லை. 50 கிராம் என்று ஆக்கி, 15 நாளைக்கு ஒரு தடவை 25 கிராம் கொடுத்தால் அது கைதிகளுக்கு உதவியாக இருக்கும். கைதிகளுக்கு பீடி கொடுப்பது என்று இருக்கிறது. எத்தனை பேருக்குக் கிடைக்கிறது என்பது மர்மமாக இருக்கிறது.

இன்னொரு விஷயம். இப்போது பல பேர் ஜெயிலுக்கு வருகிறார்கள். மாணவர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், அரசியல் வாதிகள் எல்லோரும் ஜெயிலுக்குப் போகிறார்கள். எந்த ஆட்சி வந்தாலும் அந்த இயக்கம் நிற்கும் என்று நான் நினைக்கவில்லை. அப்படி வருகின்றபோது அவர்களுக்கு என்று ஒரு தனியான வகுப்பு ஏற்படுத்த வேண்டும். ஸ்பெஷல் கிளாஸ் வேண்டாம், 'சி' கிளாஸும் வேண்டாம், இரண்டுக்கும் மத்தியில் ஒரு கிளாசில் வைத்தால் நன்றாக இருக்கும்.

இன்னொன்று, இந்த அதிகாரிகளை மாற்றுவது சம்பந்தமானது. அதிகாரிகளை மாற்றுவதில் மேலே இருக்கக்கூடிய அமைச்சர்கள் செய்யக்கூடிய சில காரியங்கள் இருக்கின்றனவே, அவற்றை நான் இந்தச் சபையில் வன்மையாகக் கண்டிக்கிறேன். எனக்குத் தெரியும். மதுரையில் ஆறு மாதம்தான் ஒரு ஜெயில் சூப்பிரெண்டு இருந்தார். சூப்பிரெண்டாக இருந்த அவர் மேல் என்ன குற்றம் என்றால், சுதந்திர தின வெள்ளி விழாவில் பல கைதிகளுக்கு ரெமிஷன் கிடைத்தது. சூப்பிரெண்டு தனக்கு இருக்கிற அதிகாரத்தைவைத்து ரெமிஷன் கொடுத்ததில், அமைச்சருக்கு வேண்டாத ஒருவருக்கு விடுதலை கொடுத்து வெளியே அனுப்பி

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 மார்ச் 27

விட்டாராம். அது ஒரு காரணம். இன்னொன்று, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூன்று பேர் ஜெயிலுக்குள்ளே போய் கைதியை இன்டர்வியூ பண்ணினர்களாம் இந்த குரூப்பேண்டு அனுமதியின் பேரில். இன்னொன்று, ஒரு பைத்தியக்காரன் சிறையில் இறந்து போய்விட்டானாம். இப்படி அமைச்சர்கள் நேரடியாக தலையிட்டு அவரை மாற்றியிருக்கிறார்கள். அப்படியானால் 11–2–73 அன்று அமைச்சர் மதுரை ஜெயில் உள்ளே போகிறார். அப்படி அவர் போகிறபோது அவர்கூட 30, 40 பேர் போகிறார்கள். அவர்கள் யார், யார் என்று பட்டியல் எடுக்க முடியவில்லை. கேட்கிப்பரால். உள்ளே போய் அவர்கள் கைதிகளோடு பழகுகிறார்கள். இப்படி மதுரை ஜெயில் அலுவலர்களிடையே terrific demoralisation ஏற்பட்டிருக்கிறது. மதுரைச் சிறையில் நான் 1945-ல் இருந்திருக்கிறேன்.

நானும் ஜெயிலிலே பலமுறை போய் பார்த்திருக்கிறேன்; ஜெயிலிலும் இருந்திருக்கிறேன். நான் சிறையிலே இருந்தபோது சூப்பரின்டென்டென்ட் அறையிலோ அல்லது ஜெயிலர்
ந.ப. 12–00 அறையிலோதான் யாரும் வந்து பார்ப்பார்கள. அந்தமாதிரி தான் நான் பார்க்க வேண்டுமென்று விரும்பினாலும் இந்த முறை தான் இருந்தது. இப்போது நிலைமை அப்படி அல்ல. நாடாளுமன்ற உறுப்பினர் கல்யாணசுந்தரம் வந்தபோதும், நாடாளுமன்ற உறுப்பினர் காத்தமுத்து வந்தபோதும், சமீபத்தில் எம்.ஜி.ஆரும் இவர்களைப் போன்ற மற்றும் பலரும் வந்தபோதும் முன்னால் இருந்த முறைப்படி பார்க்க முடியவில்லை. எல்லோரையும் ஒரே இடத்தில் வைத்துப் பேச வேண்டுமென்று சொல்கிறார்கள். இது மேலிடத்து உத்தரவு என்று நினைக்கிறேன். அண்மையிலே 15 நாள் ஜெயிலிலே இருந்தேன். அப்போது இப்படித்தான் செய்தார்கள். எங்களைப் போன்றவர்களின் 'பிரஸ்டிஜை' உடைக்க வேண்டுமென்று சாதாரண கைதிகளாக ஆக்க வேண்டுமென்று நினைத்து இந்த குறிப்பிட்ட இலாகா செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தக் குறையை நிவர்த்திக்க வேண்டும். இல்லையென்றால் அதனால் பெரும் சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

இன்னும் ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன். இப்போது மதுரைக்கு ஒரு ஹைகோர்ட் வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி



1973 மார்ச் 27] [திரு. கே. டி. கே. தங்கமணி]

அரசாங்கம் என்ன முடிவு செய்யப் போகிறது என்று தெரியவில்லை.

இப்போது ஜெயில் சூப்பரின்டென்டென்டுகள் பலர் இருக்கிறார்கள். ஒரே ஒரு டி.ஐ.ஜி. தான் இருக்கிறார். மூன்று டி.ஐ.ஜி. களைப் போடலாம். அந்த மூன்று பேரில் சீனியராக இருக்கும் ஒருவரை ஐ.ஜி. யாகப் போடலாம். இப்போது போலீஸ் இலாகாவிலிருந்து அங்கே இருக்கின்ற டி.ஐ.ஜி. யை ப்ரொமோட் செய்து போடுகிறார்கள். இது சம்பந்தமாக போலீஸ் இலாகாவில் என்ன விதிமுறைகளை வைத்திருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. ஆனாலும் இந்த குறிப்பிட்ட இலாகாவிலே மூன்று டி.ஐ.ஜி. களைப் போட்டு அவர்களில் சீனியராக இருப்பவரை ஐ.ஜி.-யாகப் போட வேண்டும். இனி வருங்காலத்திலாவது இதைப்பற்றி அரசாங்கம் முடிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் எங்கள் கட்சியின் சார்பிலே கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களில் கொடுத்திருக்கின்ற பூரா விஷயங்களையும் சொல்லிவிடவில்லை. நேரம் ஆகிவிட்டதால் முடித்துக்கொள்கிறேன். முக்கியமாக இந்த இலாகாவிலே இருப்பவர்கள் நெருக்கடியான நிலைமையில் பணியாற்றுகிறார்கள். பெரும்பாலும் அமைச்சர்களின் தலையீடு அதிகமாக இருக்கிறது. அது அனுமதிக்கப்படக் கூடியதாக இல்லை என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, இந்த முக்கியமான 4 மானியங்களிலும் என்னுடைய கட்சியின் சார்பிலே கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

முதலிலே நமது ஸ்டேட் லெஜிஸ்லேச்சர் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். இங்கே பேசிய எல்லா அங்கத்தினர்களும் சட்டசபை உறுப்பினர்களுக்கு அதிகமான வசதிகள் வேண்டுமென்று வலியுறுத்திக் கூறினார்கள். அதைப்பற்றி நான் மேற்கொண்டும் வலியுறுத்திக் கூற வேண்டுமென்று நினைக்கவில்லை.

ஆனால் பொதுவாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்னென்ன தேவை என்பதை நான் என்னுடைய கருத்தாக இங்கே சொல்லிக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் பணி என்றால் அது ஒரு உன்னதமான பணி என்று நாம் எல்லோரும் நினைத்து இங்கே வந்திருக்கிறோம். பல்லாண்டு காலமாக இந்தப் பணியிலே இருக்கின்றவர்கள் எவ்வளவு நல்லமுறையில் செயலாற்றிக் கொண்டிருக்கிறவர்கள் என்பதையும் அவர்களுக்குக் கொடுக்கின்ற ஊதியம் குறைவாக இருக்கிறது என்றும் சொன்னார்கள். அதைப்பற்றி எல்லாம் இந்த இலாகாவினர் பரிசீலித்து, அதற்கு வேண்டிய முடிவுகளை மேற்கொள்ள வேண்டுமென்று மட்டும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நமக்கு எவ்வளவு தேவை என்பதைச் சொல்வதற்காக நாம் இங்கே வரவில்லை. அதை நாம் இங்கே சொல்வது நியாயமானதல்ல என்றுதான் நான் நினைக்கிறேன். ஆனாலும் இலாகாவினர் அதைக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அதிலே எங்கள் கட்சிக்கு ஆட்சேபணை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக, நமது சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த அவையிலே எப்படியெல்லாம் நடந்துகொள்கிறார்கள் என்பதை நாம் நன்றாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். சில சந்தர்ப்பங்களிலே நாம் பொறுமையை இழக்கக்கூடிய அளவுக்கு உணர்ச்சி வசப்பட்டு பல கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருப்பதைக் கேட்டுக்கொண்டிருக்கும் சபாநாயகர் அவர்கள் சங்கடப்படுகிறார்கள். சில சமயங்களிலே நாம் உட்கார்ந்துகொண்டே உணர்ச்சி வசத்தோடு கருத்துக்களை பரிமாறிக்கொள்வதைக் கண்டு, சபாநாயகர் அவர்கள் "நீங்கள் எல்லாம் உட்கார்ந்து பேசுவது சரியல்ல" என்று அடிக்கடி நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதைத் தவிர்ப்பதற்கு என்னென்ன செய்யவேண்டுமென்று நாம் யோசிக்க வேண்டும். மற்ற சில துறையினருக்கு 'ரெஃப்ரெஷர் கோர்ஸ்' வைத்திருக்கிறார்களே அதைப் போன்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வைத்து, சட்டசபையிலே எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று பயிற்சியளித்தால்கூட நல்லதாக இருக்கும் என்று கருதுகிறேன். நாம் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளலாம்; நல்லமுறையிலே விவாதங்களை நடத்தலாம்.





இங்கே ஆளும் கட்சியினரும் இருக்கிறோம்; எதிர்க்கட்சியினரும் இருக்கிறோம். ஆனால் ஆளும் கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் எதிரிகள் போல் இருக்கக்கூடாது. நமக்குள் கருத்து வேறுபாடு இருக்கலாம். அதை நியாயமான முறைகளிலே விவாதிக்கலாம். இந்த அவையிலே நாம் எல்லாம் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். இந்த மன்றத்திலும் சரி, வெளியிலேயும் சரி, ஆளும் கட்சி எம்.எல்.ஏ.க்களும் எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.க்களும் எல்லோரும் சரிநிகர் சமானம் என்ற முறையிலே நாம் நடந்துகொள்வது பொருத்தமாக இருக்கும்.

இன்னும் சட்டமன்றத்திலே நடக்கின்ற வேறு சில கருத்துக்களைப் பற்றியும் குறிப்பிட விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் பல முக்கியப் பிரச்சினைகளைப்பற்றி விவாதிக்க 'அட்ஜொர்ன்மெண்ட் மோஷன்' கொடுக்கிறோம். அப்படிக் கொடுக்கப்படுகின்ற பல அட்ஜொர்ன்மெண்ட் மோஷன்களுக்கு சபாநாயகரின் அறையிலேயே அனுமதி மறுக்கப்பட்டு விடுகிறது. அதற்குத் தலைவருக்கு உரிமை இருக்கிறது; இல்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால் முக்கியமான விஷயங்களைப்பற்றி கொடுத்திருக்கும் அட்ஜொர்ன்மெண்ட் மோஷன்களை இந்த அவையிலே கொண்டுவந்து, இன்னின்ன அங்கத்தினர்கள் இந்த விஷயத்தைப்பற்றி விவாதிக்க ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள்; அதற்கு இன்னின்ன காரணங்களால் அனுமதி மறுக்கிறேன் என்று சபாநாயகர் அறிவித்தால் அதைக் கொண்டு வந்த அங்கத்தினர்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கும். சபாநாயகரின் அறையிலே அனுமதி மறுக்கப்படுவதால் அந்த முக்கிய விஷயங்களைப்பற்றி நாங்கள் அக்கறை கொள்ளவில்லை என்று மக்கள் தவறாக நினைத்துக் கொள்கிறார்கள். ஆகவே, இந்த மன்றத்திலே அதை அறிவித்து அதன் பின்னால் அனுமதியை மறுப்பது என்ற முறையை சபாநாயகர் கடைப்பிடிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எனக்கும் அது ஒரு தர்மசங்கடமாகத்தான் இருக்கிறது. அதைப்பற்றி 'ரூல்ஸ் கமிட்டி'யில் நாம் பேசிக்கொள்ளலாம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** நான் அதை ஒரு குற்றச் சாட்டாகச் சொல்லவில்லை. நாங்கள் அந்தமாதிரியான விஷயங்களை அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்தோமா

இல்லையா என்று மக்கள் எங்கள் மீது சந்தேகப்படுகிறார்கள். இதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். இப்போது பாலிடெக்னிக் மாணவர்கள் போராட்டம் நடத்தினார்கள். பலரும் கைது செய்யப்பட்டார்கள். அது சம்பந்தமாக நாங்கள் அட்ஜொர்ன்மெண்ட் மோஷன் கொடுத்தோம். ஆனால் அது அவையில் வராமலேயே போய் விட்டது. அதனால் மாணவர்களுக்கு வேண்டி நாங்கள் ஒன்றும் செய்யவில்லை என்று அவர்கள் நினைக்க வேண்டியிருக்கிறது. ஆகவேதான் இந்தக் கருத்தை நான் சொன்னேன்.

அடுத்தபடியாக, நமக்கு ஸ்பீக்கர் இடம் வேக்கண்டாக இருக்கிறது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. எலெக்ஷன் எப்போது நடைபெறும் என்று தெரியவில்லை. சபாநாயகர் இடம் முக்கியமான இடமாக இருப்பதால் உடனடியாக அதற்குத் தேர்தல் நடத்த வேண்டும். அதிலே சங்கடங்கள் ஒன்றும் இல்லை. முன்பு வழக்கு நடந்து கொண்டிருந்தது. அதனால் எலெக்ஷன் நடத்த முடியவில்லை. இப்போது வழக்கு முடிந்துவிட்டது. ஆகவே, எலெக்ஷன் நடத்துவதில் சங்கடம் ஒன்றும் இல்லை. அதற்கு இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதை ஒரு குற்றச்சாட்டாகவே நான் சொல்ல விரும்புகிறேன். இது ஒரு முக்கியமான விஷயமாக இருப்பதால் இதற்கு முதலிடம் கொடுக்க வேண்டும். இப்போது Deputy Speaker is performing the functions of the Speaker. சட்டப்படி எல்லா பொறுப்புகளையும் சரிவர நிறைவேற்ற வேண்டுமானால் இதை உடனடியாக நடத்த வேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நமது சட்டமன்ற விடுதியைப்பற்றி ஒரு சில கருத்துக்களைக்கூற விரும்புகிறேன். புதிதாக இப்போது 6 மாடிக் கட்டடம் கட்டி வைத்திருக்கிறார்கள். அதிலே நாம் தங்கிக் கொண்டிருக்கிறோம். எங்களுக்கு ஒரு 'டெர்ம்' காலத்திலே ஒரு குறிப்பிட்ட ரூமை ஒதுக்க வேண்டும். அந்த டெர்ம் முழுவதும் வாடகை இல்லாமல் தங்கிக் கொள்வதற்கு வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உத்தரப்பிரதேசத்திலும் மற்றும் பல மாநிலங்களிலும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் உறுப்பினர்களாக இருக்கின்ற காலம் முழுவதற்கும் வாடகை இல்லாமல் தங்கிக் கொள்வதற்கு



நிரந்தரமாக ஒரு அறையை ஒதுக்கியிருக்கிறார்கள். அதைப் போன்று நமது தமிழகத்திலும் ஏற்பாடு செய்ய வேண்டும். ஆகவே, அந்தக் காரியத்தை இந்த இலாகா பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அந்த விடுதி எவ்வளவு மோசமாக இருக்கிறது என்பதை நான் கூற வேண்டிய தேவையில்லை. அடிக்கடி இந்த இலாகா காரியதரிசி அவர்களும், சம்பந்தப்பட்ட அமைச்சரவர்களும் அந்த விடுதி எப்படி நடக்கிறது என்று சென்று பார்த்தால் அதைப்பற்றித் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு இருக்கும். அந்த விடுதியிலே இன்று பல இடங்கள் அழுக்கடைந்து, பாழடைந்து இருக்கின்றன. பலரும் எச்சிலை படிக்கட்டுகளிலே துப்புகின்ற நிலையைப் பார்க்கிறோம். சட்டமன்ற உறுப்பினர்களுடைய அந்த விடுதியின் எந்தப் பகுதியிலே சென்று பார்த்தாலும் அருவருக்கத்தக்க முறையில் தான் இருக்கின்றது. சுத்தம் என்பது சிறிதுமில்லை. ஆனால் சுத்தம் செய்வதற்கு வேண்டிய அலுவலர்கள் இல்லையா என்றால், இருக்கின்றார்கள். ஆனாலும் இந்த அருவருக்கத்தக்க நிலைதான் அந்த விடுதியில் இருக்கின்றது.

அடுத்து, உணவருந்த என்று இரண்டு உணவு விடுதிகள், 'காண்டீன்கள்' இருக்கின்றன. ஆனால் அங்கேயும் போதிய வசதிகள் இல்லை. சுகாதாரக் குறைவினை சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. அந்த அளவிற்கு அந்தக் காண்டீன்களில் சுகாதாரம் என்பதே இல்லை. கை கழுவுவதற்காக என்று வைக்கப்பட்டுள்ள குழாய்களெல்லாம் பழுதடைந்திருக்கின்றன. அந்த 'பேஸின்களும்' கரை படிந்து அழுக்குப்படிந்து அந்தப் பக்கத்திலேயே போக முடியாத அளவிற்கு நிலைமை இருக்கின்றது. எனவே இவற்றையெல்லாம் தினமும் சுத்தம் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்—ஒரு முறை இல்லை, நாளைக்கு இரண்டு முறை சுத்தம் செய்ய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

குறிப்பாக, புலால் உண்ணும் பகுதிதான் மிகமிக அருவருக்கத்தக்க முறையில் ஈக்கள் மொய்த்துக்கொண்டு இருக்கின்றது. அங்கேதான் சுகாதாரக் கேடு அதிகமாக இருக்கிறது. வெஜிடேரியன் மெஸ்ஸைப்பற்றி ஒரு வார்த்தை. நான் யாருடைய உணர்ச்சியையும் புண்படுத்த வேண்டும் என்று இதைச் சொல்ல

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1973 மார்ச் 27

வில்லை. வெஜிடேரியன் உணவினைத் தயாரிப்பதற்கென்றே உள்ளவர்கள் அவற்றைத் தயார் செய்துகொடுத்தால் அது வரவேற்கத்தக்கதாக இருக்கும். ஆனால் மாறாக 'நான்-வெஜிடேரியன்' உணவினைத் தயாரிப்பவர்களே மரக்கறி உணவினையும் தயாரித்துக் கொடுக்கிறோம் என்று சொன்னால் அது வரவேற்கத் தக்கதாக இல்லை என்பதைக் கோடிட்டுக் காண்பிக்கக் கடமைப் பட்டு இருக்கின்றேன்.

பழைய ஹாஸ்டலில் உள்ள சில பிரச்சனைகளைச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாகச் சொல்லப் போனால் அது சீராகப் பராமரிக்கப்படாமலேயே இருக்கின்றது. இந்த இரண்டு ஹாஸ்டல்களையும் பராமரிப்பதற்கு என 'மேனேஜர்' ஒருவரை நியமித்து ஆவன செய்ய வேண்டும்.

இப்போது அறைகளிலுள்ள படுக்கை விரிப்புகளை, தலையணை உரைகளை மாற்றுவதே இல்லை. எல்லாமே மிகமிக அழுக்கடைந்து, பழையதாக இருக்கின்றன. வாரம் ஒரு முறை மாற்றினால்கூடப் பரவாயில்லை. இப்படி அழுக்கடைந்த உரைகளையும் படுக்கை விரிப்புகளையும் உபயோகிப்பதில் பல அங்கத்தினர்கள் சங்கடப் படக்கூடிய நிலைமை இருக்கின்றது. இந்த அளவிற்குச் சுகாதாரக் கேடுகள் நீடிக்கப் பட வேண்டுமா என்று யோசித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இது மட்டுமல்ல. அங்குள்ள டெலிபோன் வசதிக்குறைவைப் பற்றியும் சொல்லத்தான் வேண்டியிருக்கின்றது. டெலிபோன் வசதியைச் செய்து கொடுத்திருக்கின்றார்கள். ஆனால் அவை இல்லாமலேயே இருந்துவிடலாம் போல இருக்கின்றது. காரணம் அவை எதுவும் சரிவா இயங்கவில்லை. யாரையாவது கூப்பிட வேண்டுமானால் அது குதிரைக் கொம்பைத் தேடிக்கொண்டு போவதுபோலத்தான் இருக்கும். பல முறை அங்குள்ள 'என் கொயரி'யைக் கேட்போம். பதில் கிடைக்காது. காத்துக் கொண்டு இருப்போம். இப்படி அவதிப்படும், அல்லல்படும் நிலைமைதான் அங்கே இருக்கின்றது.

கோடிக்கணக்கான ரூபாய் செலவுசெய்து இவற்றையெல்லாம் நாம் வைத்திருக்கின்றோம். ஆனால் இப்படிப்பட்ட தவிர்த்திடக் கூடிய குறைகளினால் அவற்றின்பலன் நமக்குக் கிடைக்காமல்



1973 மார்ச் 27] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

போய்விடுகின்றது. இப்படிப்பட்ட சின்னஞ்சிறு காரியங்களை இலாகாவிலுள்ளவர்கள் செய்யத் தவறிவிடுவதன் காரணமாக இன்று இந்த நிலைமை இருக்கின்றது. ஒரு வேளை வெளியே இருந்துகொண்டு பார்க்கின்றவர்களுக்கெல்லாம், அங்கத்தினர்கள் மாடமாளிகை கூட கோபுரங்களிலே இருந்து கொண்டிருக் கின்றார்கள் என்று எண்ணலாம், ஆனால் உள்ளே வந்து பார்க்கும் போது அது எவ்வளவு கேவலமாக இருக்கின்றது என்பதைப் பார்க்கலாம். யாரைத் தொலைபேசியில் கூப்பிடவேண்டுமானாலும் கூப்பிட முடிவதே இல்லை. அந்த அளவிற்கு நாம் கூப்பிடும் போது பதில் வருவதில்லை.

இன்னும் 'ஓல்டு ந்யூ ஹாஸ்டலில்' ஆபீஸ் அடெண்டர் கிடையாது. அங்கே ஒவ்வொரு அறைக்கும் டெலிபோன் வசதி செய்து தரப்பட வேண்டும். அப்போதுதான் அந்த ஹாஸ்டலில் தங்க முடியும். இன்றைக்கு அந்த ஹாஸ்டலில் தங்குவதற்கு இடமே கிடைப்பதில்லை. காரணம் பல அதிகாரிகள் அங்கே நிரந்தரமாகத் தங்கியிருக்கின்றார்கள். எனவே மெம்பர்களுக்கு அங்கே இடம் கிடைப்பதில்லை. ஆனால் ஏன் அதிகாரிகள் அங்கே தங்கியிருக்க வேண்டும் என்று தெரியவில்லை. அவசியமானால் அவர்கள் வேறு இடங்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம். அவர்கள் வாடகைக்கு இடங்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள அவர்களுக்கு வாய்ப்பு இருக்கின்றது. எனவே அவர்கள் இங்கே நீண்ட நெடுங்காலமாக ஏன் தங்கவேண்டும் என்று அறிய விரும்புகிறேன். இதை அரசாங்கம் கவனிக்க வேண்டும். அவர்கள் இப்படி அங்கே நிரந்தரமாகத் தங்குவது என்றால் அந்த ஹாஸ்டல் சட்ட மன்ற உறுப்பினர்களுக்காக இருக்கின்றதா அல்லது அதிகாரிகளுக்காக இருக்கின்றதா என்ற ஐயப்பாட்டினை வெளிப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்னும் ஒன்று, அந்த ஹாஸ்டலில் "காமன் பாத் ரூம்"ஸ் 'காமன் லெவோடரீஸ்' என்று இவையெல்லாம் பொதுவாகத்தான் அமைக்கப்பட்டிருக்கின்றன. எனவே இவையெல்லாம் உள்ள அறைகளோடு இணைக்கப்படும்படி ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இது முன்பு ஒரு சமயம் ஆலோசிக்கப்பட்டது. இதைச் செய்ய முடியும் என்றுதான் அப்போது சொன்னார்கள்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1973 மார்ச் 27

அடுத்து அங்கே உள்ள 'டிபன் கேரியர்', டம்ளர்களைப் பார்த்தால், அவற்றில் கொண்டுவரும் உணவுப் பண்டங்களை எப்படிச் சாப்பிடுவது என்றே தெரியவில்லை. இவை எல்லாம் சிறு சிறு விஷயங்கள்தான். ஆனால் சுகாதாரத்தைப் பொறுத்தவரை இல்லை. இவற்றையெல்லாம் கவனிக்க வேண்டும்.

அடுத்து, அங்குள்ள ப்யூன்களுக்கு நைட் அலவன்ஸ் தரப்பட வேண்டும். அதுபோல் அங்குள்ள அலுவலக அஸிஸ்டெண்டுகளும் நாளுக்கு 12 மணி நேரத்திற்குமேலே பணியாற்றுகின்றார்கள். அவர்களுக்கும் 'நைட் அலவன்ஸ்' கொடுக்கப்பட வேண்டும்.

மேலும் அங்குள்ள தோட்டம் பராமரிப்பே இல்லாமல் இருக்கின்றது. ரோடுகளும் பள்ளமும் படுகுழியுமாக இருக்கின்றன. இவற்றையெல்லாம் சீராக்க இலாகா வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

அதுபோல மருத்துவ வசதியும் இருக்க வேண்டும். இதுபற்றிப் பல அங்கத்தினர்கள் குறைபட்டுக்கொண்டார்கள். அவசரத்திற்கு அங்கே ஒரு மருத்துவ வசதியும் செய்துதரப்பட்டால் நல்லதாக இருக்கும்.

அடுத்து, மாலை நேரங்களிலே சட்டப்பேரவை கூடுவதை இப்போது பல நாட்களில் பார்க்கின்றோம். எங்களுக்கு இது கஷ்டமாக இருக்கின்றது. பல நேரங்களில் மாலை 7 அல்லது 8 மணி அளவிற்கும் சில நேரத்தில் அதற்கு அப்பாலும் நடவடிக்கை நீண்டுவிடுகின்றது. இதனால் நமக்கு மட்டுமின்றி அதிகாரிகளும் அலுவலர்களும் பல கஷ்டங்களுக்குள்ளாகின்றார்கள். இனியாவது மாலை நேரத்தில் வைத்துக்கொள்ளாமல் இருக்கவேண்டும். அவசியம் என்று வரும்போது முக்கியமான 'டிமாண்டுகளின்'-மீது இரண்டு நாட்கள் வேண்டுமானால் விவாதத்தினை வைத்துக்கொள்ளலாம். ஆனால் மாலை நேரங்களில் வேண்டாம். 'பிஸினெஸ் அட்வைசரி கமிட்டி'யில் 'நாங்கள் அவசர அவசியமாக முடிவுசெய்துவிட்டோம்' ஆகவே மன்றத்தில் கூறக்கூடாது என்ற சட்டப்பிரச்சனைகளை இங்கே கொண்டு வராமல் மனிதப் பிரச்சனை என்ற முறையில் இந்த அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒருவேளை நாங்கள் 50 வயதைக் கடந்தவர்கள் என்பதால் அதிகமாகக் கஷ்டப் படுகிறோமோ என்னவோ. காப்பி குடிக்கக்கூட நேரம்



1973 மார்ச் 27] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

கிடைப்பதில்லை. "காண்டீ"னிலிருந்து காப்பியை வாங்கிக் கொண்டுவந்தால் அது ஆறி விடுகின்றது. இரண்டு பர்லாங்கு தூரத்திலுள்ள அந்தக் காண்டீனுக்கு நாமே போய்வருவதற்கும் கஷ்டமாக இருக்கின்றது. எனவே உள்ளேயே ஒரு காண்டீனை வைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். பல சட்ட மன்றங்களிலே இந்த மாதிரி இருக்கின்றது. எனவே இதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்து, இங்குள்ள வாட்ச்-அண்டு-வார்டு பணியாளர்களில் கான்ஸ்டபிள்களுக்கு ரூ. 1.50, ஹெட் கான்ஸ்டபிள்களுக்கு ரூ. 2, எஸ்.ஐ.க்கு ரூ. 2.50 என்றும் பாட்டா கொடுக்கின்றார்கள். அவர்களும் இரண்டு வேளை வேலை செய்ய வேண்டியிருக்கிறது. விலைவாசி உயர்வினால் அவர்களுக்குக் கொடுக்கப்படும் இந்த அலவன்ஸ் போதுமானதுதானா என்று யோசித்து இதைக் கூட்டிக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, என் கட்சிக் காரியாலயத்தைப்பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். இது 1965-லோ அல்லது 1967-லோ வெள்ளையடிக்கப்பட்டது. பிறகு அடிக்கப்படவில்லை.

அடுத்து எங்களுக்குக் குடி நீர் வேண்டுமானால் லெவேட்டரி யிலுள்ள குழாயிலிருந்துதான் தண்ணீரைப் பிடித்து வைக்க வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே குடி தண்ணீர் பிடிப்பதற்கெனத் தனிக் குழாய் ஒன்று போட்டுத்தர வேண்டும்.

இதுபோன்று கட்சி அலுவலகத்திற்கு உள்ள எலெக்ட்ரிஸிடி, டெலிபோன் செலவுகளை ஒரு உச்ச அளவு நிர்ணயம்செய்து அதை அரசாங்கமே ஏற்றுக்கொண்டு அதிகமாகப் போனால் அதைக் காரியாலயமே கொடுக்க வேண்டும் என்ற ஒரு ஏற்பாட்டைச் செய்தால் நல்லதாக இருக்கும்.

அடுத்து பஸ் பாஸைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். 'கட்சிச் செயலாளர்' என்று ஒவ்வொரு கட்சி அலுவலகத்திலும் 'பார்ட்டி ஆபீஸ் செக்ரடரி' என்று ஒருவர் பணியாற்றுகின்றார். அப்படிப் பட்ட சிப்பந்திக்கு பஸ் பாஸ் கொடுத்தால் நலமாக இருக்கும். அல்லது அவர்களுக்கு இதற்காக ஏதாவது அலவன்ஸ் கொடுக்க முடியுமா என்று யோசிக்க வேண்டும்.

அடுத்து வெகுகாலம் ப்யூன்லாக இருந்தவர்களுக்கு நியமனம் கொடுக்கவில்லை என்று சொல்கின்றார்கள். இதையெல்லாம் அரசு நல்ல முறையில் ஆய்வு செய்ய வேண்டும்.

அடுத்து, இங்குள்ள 'ப்ரஸ் காலரி'-பற்றி ஒரு வார்த்தை. 'ப்ரஸ் காலரிக்கு' உள்ள இடம் மிகமிகக் குறைவாக இருக்கின்றது. அதிகாரிகள் அங்கே வந்து உட்கார்ந்து விடுகின்றார்கள். இதனால் பத்திரிகையாளர்களுக்கு அதிக நெருக்கடி ஏற்பட்டுவிடுகின்றது. ஆகவே 'ப்ரஸ் காலரியில்' வேறு அதிகாரிகளை அனுமதிக்கக்கூடாது. அவர்களுக்காக இடம் ஒதுக்க வேண்டும். வேண்டுமானால் இன்னும் அதிகமான இடத்தை அதிகாரிகளுக்கு ஒதுக்கித் தரலாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். நேற்றைய தினம் நிருபர்கள் எல்லாம் அதிகாரிகளிடத்தும் சொன்னதாகத் தெரிவித்தார்கள். இரண்டு, மூன்று நாட்களாகவே அவர்களுக்கு போன் செய்ய வசதி இல்லாமல் இருக்கிறது. இதையும் நிவர்த்தி செய்ய வேண்டும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்ததாக நீதித் துறையைப்பற்றி விரிவாகப் பேசுவதற்கு நேரம் இல்லாத காரணத்தினால் என் தொகுதியைப்பற்றிய ஒரு பிரச்சினையைச் சொல்கிறேன். குழித்துறையில் ஒரு சப் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் அமைய வேண்டும் என்பதாக பார் அசோசியேஷன் முயற்சி எடுத்து பல கோரிக்கைகளை அனுப்பி யிருக்கிறார்கள். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. அங்கே ஏற்கனவே ஸ்பெஷல் பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் இருக்கிறது. ஆகவே குழித்துறையில் 2-வது கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டை அமைப்பதில் சங்கடம் இருக்காது. அதை அங்கே ஏற்படுத்துவதும் பொருத்தமாக இருக்கும். அதை அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இந்த இலாக்காவில் நியமனம் பெறுபவர்கள் நல்ல வழக்கறிஞர்களாக இருக்க வேண்டும். சிறப்பாகச் செயல்படுகிற வழக்கறிஞர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த உத்தியோகங்கள் வழங்கப்பட வேண்டும். கட்சிக் கண்ணோட்டத்தோடு பார்க்காமல் திறமையின் அடிப்படையில் நீதித்துறைக்கு வருகிற அதிகாரிகள் அமைய வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்த விரும்புகிறேன். அண்மையில் ஒய்வு





பெற்ற நீதிபதி அவர்கள்—திரு. ராமமூர்த்திகூட—நீதிபதிகள் நியமனத்திலே அரசாங்கம் தலையிடுகிறது என்பதாகச் சொல்லி யிருக்கிறார்கள். இம்மாதிரிப் பேச்சுக்கு இடம் கொடுக்காமல் இந்த அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஹைக்கோர்ட்டிலே நியமனம்பெறவேண்டிய வேகன்சிக்கள் இருக்கின்றன. 'பெண்டன்சிகள்' இல்லை என்று சொல்ல முடியாது. நிறைய ரிட் பெட்டிஷன் கேஸ்கள் எல்லாம் இருக்கின்றன. ஆகவே வேகன்சிகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் தமிழில் தீர்ப்புகள் வர ஊக்கமும், ஆக்கமும் கொடுக்க வேண்டும். டெப்போசிஷன்கள் எல்லாம் தமிழில் எழுத வேண்டும். இன்னும் எல்லாவற்றையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துத்தான் கொடுக்கவேண்டும் என்று இருக்கக்கூடாது. இங்குள்ள நீதிபதிகள் எல்லோரும் [illegible] வர்கள்தான். ஆகவே தமிழில் அதிக அள[illegible] உய[illegible]ன்றத்தில் வரும்படியாகச் செய்ய வேண்டும்.

அடுத்து லீகல் எய்டு புவ[illegible]ன்று எடுத்துக்கொள்[illegible]லும் மத்திய அரசு என்ன என்னவே[illegible] செய்ய இருக்கிறது. [illegible]மும் அதிகமான அளவுக்கு ஏழைகளு[illegible] வழக்காட உதவி [illegible]ய்து தர வேண்டும் என்பதாகக் கே[illegible]க்கொண்டு, நேரம் [illegible]லாத காரணத்தினாலே இத்துடன் [illegible] பேச்சை [illegible]த்துக் கொள்கிறேன்.

61613

மாண்புமிகு திரு. செ. மாதவன்: த[illegible]ளே, நீதித் துறைபற்றியும், சிறைத்துறைபற்றியும் இங்கே பேசியவர்கள் சில நல்ல கருத்துக்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நீதித்துறை சுதந்திரமாகச் செயல்பட வேண்டும், நிர்வாகத் தலையீடு கொஞ்சங் கூட இருக்கக்கூடாது, கட்சி உணர்ச்சிகளுக்கு இடம் கொடுத்து விடக் கூடாது என்றெல்லாம் சொன்னார்கள். கட்சி உணர்ச்சிகளுக்கு இடம் கொடுத்துவிட்டால் ஜனநாயக அமைப்பே குலைந்துவிடும் என்பதுதான் இந்த அரசாங்கத்தின் கருத்தும் ஆகும்.

தமிழக நீதித்துறை செம்மையாக நடைபெற வேண்டும், சுதந்திரமாகச் செயல்பட வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு கிடையாது. இந்தத் துறைபற்றிப் பேசுகிறபோது தன்னைப்

[திரு. செ. மாதவன்] [1973 மார்ச் 27

பற்றியும், தன் கட்சியைப்பற்றியும் எண்ணிக்கொண்டு சொல்வது நல்லது அல்ல. இந்திய நாட்டிலேயே தமிழ் நாட்டின் நீதித்துறை தான் எல்லோராலும் பாராட்டப்பெற்று வருகிறது என்பதனை நான் இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன். அண்மையில் ஓய்வு பெற்ற நீதிபதி அவர்கள் கூறியதாகத் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கூடச்சொன்னார்கள்.

நான் அறிந்தவரை நீதிபதிகளை நியமிப்பதிலே அரசாங்கத்திற்கு அதிகாரம் கூடாது என்றுதான் அவர் சொன்னதாக நினைவு. அது அரசியல் அமைப்புச் சட்டத்தில் உள்ள பிரச்சினை. நாம் அரசியல் அமைப்புச் சட்டத்தை எந்த அளவிற்கும் மீறி, எதுவும் செய்யவில்லை என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

நீதிபதிகள் எப்படி எப்படிப் பணியாற்ற வேண்டும், அவர்கள் எந்த எந்த வழக்குகளை நடத்த வேண்டும் என்பதைப்பற்றிக் கூடச் சுதந்திரமாக அவர்களே முடிவு செய்துகொள்ள விட்டு விடுவதுதான் நல்லது என்று கருதுகிறேன். நீதித்துறையில் தவறு நடந்தாலும்—நீதித் துறையும் தவறு செய்துவிடக்கூடிய துறை தான் என்பதை எல்லோரும் வாதம் செய்கிறார்கள். என்றாலும் நீதித்துறை மோசமான துறை என்று காட்ட வாய்ப்பு இல்லாதபடி, அது நல்லவகையில் முன்னேறிச் செயல்பட வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் கருத்து என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, ஏழைகளுக்கு வழக்காட சட்ட உதவி அளிக்க வேண்டும் என்பதுபற்றி இந்த அரசாங்கமும் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. இதற்காக ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரை ஏற்பாடுசெய்து அவர்கள் இப்போது ஒரு சட்டமே தயாரித்துத் தந்திருக்கிறார்கள். விரைவில் அது பரிசீலிக்கப்பட்டு முடிவு எடுக்கப்படும். ஏழைகளுக்குச் சட்ட உதவி கொடுப்பதில் இந்த அரசு கொஞ்சங்கூடத் தயக்கம் காட்டாது என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நீதிமன்றங்களுக்குக் கட்டடங்கள் கட்டப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் ஏராளமாக இருக்கின்றன. இந்த நான்கைந்து ஆண்டுகளில் பல புதுக் கட்டடங்களைக் கட்டுவதற்கு அனுமதி



1973 மார்ச் 27] [திரு. செ. மாதவன்]

தந்திருக்கிறோம். பல கட்டடங்கள் கட்டப்பட்டு இருக்கின்றன. எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் புதுக் கட்டடங்கள் கட்டப்பட வேண்டுமென்ற கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் படிப்படியாகத்தான் செய்யும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து பழமொழிகூட வரக்கூடிய அளவில் சப்-மாஜிஸ்ட்ரேட் என்றால் அவர்கள் சப் மாஜிஸ்ட்ரேட்டாகவே இருக்கிறார்கள். ப்ரமோஷனுக்கு வாய்ப்பே இல்லை என்றும் சொல்லப்பட்டது. அவர்களை டிஸ்ட்ரிக்ட் முன்சீபாக மாற்றலாமா என்பது யோசிக்கப்பட்டு வருகிறது. திரு. கணபதி அவர்கள்கூட ஒரு நல்ல கருத்தைச் சொன்னார்கள். ஏழெட்டு ஆண்டுகள் சப் மாஜிஸ்ட்ரேட்டாகப் பணியாற்றியவர்களை டிஸ்ட்ரிக்ட் முன்சீபாக மாற்றுகிறபோது சர்வீஸ் கமிஷனுக்கு ரெபர் பண்ணுகிறார்கள். அங்கே இவர்களில் சிலர் தேர்ந்தெடுக்கப் படாமல் போகிற நிலைகூட இருக்கிறது என்றார்கள். இது சர்வீஸ் கமிஷன் விஷயமாகும். சர்வீஸ் கமிஷனைக் கலந்து ஆலோசித்து, இதுபோலக் குறிப்பிட்ட சில ஆண்டுகள் சப்-மாஜிஸ்ட்ரேட்டாகப் பணியாற்றியவர்கள் எல்லாம் டிஸ்ட்ரிக்ட் முனுசிப் ஆக வரக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்துவதுதான் நியாயம் என்று கருதுகிறேன்.

நிர்வாகத் தலையீடு நீதித்துறையில் இருக்கிறது என்றார்கள். அது ஒரு மாயை. நான் எதிர்க்கட்சியில் இருந்தபோதுகூட எனக்கும் அப்படித்தான் தோன்றியது. நடைமுறையில் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு எனக்கு நீதித்துறை நிர்வாகத் துறைக்கே எதிராக இருக்கிறதோ என்றுகூடத் தோன்றும். காரணம், அரசாங்கம் கொண்டுவருகிற சட்டங்கள் எத்தனையோ அங்கே அடிபட்டுப் போவதைப் பார்க்கிறோம். மக்களுடைய நன்மைக்காக நாம் இப்படிச் செய்கிறபோது அவர்கள் இதற்கு எதிராகத் தீர்ப்புக் கொடுத்துவிடுகிறார்களே என்ற கோபம் வந்த நேரம்கூட உண்டு.

ஆனாலும் நீதித்துறை சுதந்திரமாகச் செயல்பட வேண்டும் என்கிற ஒரே ஒரு கருத்தினால் அரசாங்கத்திற்கு எதிரான தீர்ப்புகள் வந்தாலும்கூட அதைப் பொருட்படுத்தக்கூடாது. நிர்வாகத் துறையின் தலையீடின்றி அது சுதந்திரமாகச் செயல்பட

[திரு. செ. மாதவன்] [1973 மார்ச் 27

வேண்டும் என்றேதான் அரசாங்கம் கருதி வருகிறது—இந்த அரசைப் பொறுத்தவரை நீதித்துறைக்குள் தலையிட்டு அதன் சுதந்திரத்தைப் பறிக்க விரும்பவில்லை. அரசாங்கத்திற்கு எதிரான கொள்கை வெளிப்படக்கூடிய தீர்ப்பு வந்தாலும், அது சுதந்திரமாகச் செயல்படவேண்டும் என்றே நாங்கள் விரும்புகிறோம்.

சிறைத்துறை மானியத்தைப் பொறுத்தவரை பேசும்போது கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்தான் சற்றுக் கோபமாகப் பேசினார். எல்லோரும் சிறைச்சாலையில் அதிக வசதிகள் செய்துதரப்பட வேண்டும் என்றார்கள். நமது அரசு வந்த பிறகு, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னால் சிறைச்சாலை வசதிகளை அதிகப்படுத்தப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. உணவு முறையில், உடை முறையில், அவர்களுக்குத் தொழில் வாய்ப்பினை ஏற்படுத்தித் தரும் முறையில் பல வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

பரோல் கொடுக்கிறோம். இந்தக் கட்சி, அந்தக் கட்சி என்ற வேறுபாடு இன்றி—அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், பார்க்காது, 5 ஆண்டுகள் சிறையில் இருந்து விட்டால்—அமைச்சரிடத்தில் வரவேண்டாம்—பரோல் அவர்களே கொடுக்கலாம் என்று செய்திருக்கிறோம். ஒரு முறை கொடுத்து இரண்டு ஆண்டுகள் கழிந்துவிட்டால் மீண்டும் அவர்களே எங்களைக் கேட்காது பரோல் கொடுக்கலாம் என்று செய்திருக்கிறோம். இதில் கட்சி மனப்பான்மை இல்லை. எதிர்க்கட்சித் தலைவர்கள் வந்து சொல்கிறபோதுகூட உடனே அவர்கள் கோரிக்கையை நிறைவேற்றுகிறோம். குறிப்பாக ஒன்று சொல்வேன். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். கொலை செய்த கைதியை பரோலில் விட வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் கேட்கிறார். உடனடியாகக் கொடுத்து விடுகிறோம். கட்சிக் கண்ணோட்டத்தோடு நாங்கள் இதைப் பார்க்கவில்லை. இருந்தாலும் அவர் எதிர்க்கட்சியாயிற்றே என்று எண்ணாமல், அவருக்கும் அவர் கேட்கின்ற காரியத்தைத் தான் விதிகளுக்கு உட்பட்டுச் செய்கின்றோம். அதிலே அரசியல் கட்சி என்றே கிடையாது. எந்தக் கட்சி என்று நான் விவரம் கூறினால், திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கோபித்துக் கொள்வார்கள். ஆகவே, அதைச் சொல்லாமல் விட்டு விடுகிறேன்.



1973 மார்ச் 27] [திரு. செ. மாதவன்]

எந்தக் கட்சியாக இருந்தாலும், திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களே கையெழுத்துப் போட்டுக் கொடுத்தாலும், வேறு யார் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தாலும் அதிலே நியாயம் இருக்குமானால், தவறு இல்லாமல் இருக்குமானால், விதிக்குட்பட்டுச் செய்துதான் இருக்கிறோம். அமைச்சருக்கு வேண்டியவர், வேண்டாதவர் என்று பேசுவது சுவையாக இருக்கலாமேதவிர, அது தவறானது, உண்மைக்கு மாறானது என்று சொல்ல விரும்புகிறேன்.

(திரு. நா. வீராசாமி—தலைமை)

இந்தத் துறையில் பிரமோஷன்பற்றிச் சொன்னார்கள். விதிமுறைகளிலிருந்து தவறாமல், மீறாமல் நடக்கவேண்டுமென்பது தான் அரசினுடைய கொள்கையாகும். எங்கேயாவது தவறுகள் நடந்திருக்குமானால், அது கவனத்திற்குக் கொண்டு வரப்படுமானால், நிச்சயமாக நடவடிக்கை எடுப்போம்.

மதுரை சிறைச்சாலையைப்பற்றியெல்லாம் கூறினார்கள். அண்மையில் அங்கே சென்றுவிட்டு வந்தார்கள். தகவல் கொடுத்திருக்கிறார்கள். அமைச்சர் ஒரு முடிவிற்கு வந்து நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று சொன்னார்கள். எந்தச் சிறைச்சாலையாக இருந்தாலும், தவறினால் கண்டிப்பதற்கு, நடவடிக்கை எடுப்பதற்குத்தான் மக்கள் எங்களை அனுப்பி வைத்திருக்கிறார்கள். யாரோ ஒரு அதிகாரி, அந்தக் கட்சிக்காரருக்குச் சலுகை கொடுத்துவிட்டார். அந்தக் கட்சிக்காரர் கோபித்துக் கொள்வார் என்று நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்றால் நான் மக்கள் பிரதிநிதி அல்ல. அதற்குப் பயப்படவும் தயாராயில்லை. ஒரு கைதி, அதுவும் 6 மாதத் தண்டனை, பெண்ணைக் கற்பழித்தார் என்று குற்றம். அதையும் அமைச்சருக்கு வேண்டாதவன் என்று சொன்னார். அவருக்குத் தண்டனை 6 மாதம். 3 மாதம், அவருக்கு இன்டிப்பெண்டன்ஸ் டே ரெமிஷனும் ரெமிஷன் கிடைத்திருக்கிறது. அந்த 3 மாதம் போதாது என்று சிறை அதிகாரி, ரொம்பக் காருண்யத்தோடு, இதற்காகத் தன்னுடைய அதிகாரம் அத்தனையையும் பயன்படுத்தி, 20 நாளைக்குமேல் 'ரெமிஷன்' கொடுத்திருக்கிறார். பெண்ணைக் கற்பழித்தவனுக்கு, அதுவும் சிறுமியைக் கற்பழித்தவனுக்கு,

[திரு. செ. மாதவன்] [1973 மார்ச் 27

6 மாதத்திற்குள்ளே ரெமிஷனுக்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. ஏன் இப்படிப்பட்ட வாய்ப்பு ஏற்படுத்த வேண்டுமென்ற காரணத்தை. . . . .

**திரு. கே. டி. கே. தங்கமணி :** பொதுவாக, சிறையிலே இருக்கக்கூடிய பெரிய அதிகாரி எவ்வளவு தண்டனை என்று பார்த்து, அந்தத் தண்டனைக்கு எவ்வளவு ரெமிஷன் என்று கொடுப்பாரேயொழிய எந்தக் குற்றம் என்றெல்லாம் பார்ப்பது கிடையாது. அதேமாதிரியாகத்தான் இன்றைக்கும் தூக்குத் தண்டனைக்குள்ளானவர்கள், ஜன்ம தண்டனைக் கைதிகளாக்கப் படுகிறார்கள். மோசமான கொலையாக இருந்தாலும், அதையும். . . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** 1.00 மணிக்கு வாக்கெடுப்பு எடுக்க வேண்டும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் கிளாரிபிகேஷன் கேட்க வேண்டுமென்றால், அமைச்சர்கள் பதில் சொல்லிமுடித்து, நேரமிருந்தால், கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** புதிய விவாதத்தைச் சொன்னார்கள். எங்களுடைய கொள்கை அந்தக் கணக்கிலே கொடுக்கக்கூடாது என்பது. மோசமான குற்றங்களாக இருந்தால் கொடுக்கக் கூடாது என்பதுதான் சட்டம். யாரோ ஒருவர் சொல்வது, எப்படி விறுவிறுப்பாகக் காரியம் நடந்தது தெரியுமா ? அந்தக் கைதியை ஒருவர் சென்று பார்க்கப் போகிறார், அவரை இண்டர்வியூ செய்வதற்காக.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

அந்த நபர் ஒரு பிட் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார். அந்த காகிதத்தையே கொண்டுவந்திருக்கிறேன். சிறைத்துறைக் கண்காணிப்பாளருக்கு எழுதப்பட்டிருக்கிறது. அங்கேயே, சிறையிலிருந்த ஒரு காகிதத்திலேயே எழுதிக் கொடுத்திருக்கிறார். அந்த சிறைத்துறைக் கண்காணிப்பாளர் அந்தப் பேப்பரிலேயே பரோல் கையெழுத்துப் போட்டிருக்கிறார். எந்தக் கட்சி, யார் என்று சொன்னால் அதற்கும் திரு கே. டி. கே. தங்கமணி அவர்கள் கோபித்துக் கொள்வார்கள். ஆக; கட்சியினுடைய தலைவரோ, அல்லது கட்சியைச் சார்ந்தவர்களோ, தனிப்பட்டு, 'ரேப் கேசுக்காக' சென்று பார்க்கக்கூடிய நிலை இருப்பது வருத்தப்பட வேண்டிய ஒன்று. அதிலே போய். . . .



1973 மார்ச் 27]

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இதிலே மர்மம் இருக்க வேண்டியதில்லை. எந்தக் கட்சிக்காரர், யார் என்று சொல்லி விட்டால், ரொம்ப விவரமாகத் தெரிந்துகொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எல்லா விவரமும் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களுக்குத் தெரியும். முதலிலே, திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கையெழுத்துப் போட்டுக் கொடுத்திருக்கிறார். அவருடைய கட்சிக்காரர்கள் கையெழுத்துப் போட்டார்கள். கொலைக் குற்றம் செய்தவர், 8 ஆண்டுகளுக்குத் தண்டிக்கப்பட்டவர் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார். இப்பொழுது சொல்லிக்கொண்டிருந்த கைதியைப் பார்க்கச் சென்றவர் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டத் தலைவர். அவர்தான் கையெழுத்துப் போட்டிருக்கிறார். நான்கு வரியிலே, அந்தத் தாளும் சிறை அதிகாரி கொடுத்து எழுதித் தரச்சொல்லி, அங்கேயே அவ்வளவு காருண்யத்தோடு உத்தரவு போட்டிருக்கிறார். சிறைக்குள்ளே சென்று பார்க்கக்கூடாதா என்கிறார்கள்.

கைதிகளைக் கொடுமைப்படுத்துகிறோம் என்று சொன்னார்கள். இந்த அரசு வந்ததற்குப் பிறகுதான் அவர்களைப் பார்க்கத் தனி இடத்தை அமைத்திருக்கிறது. முன்பு கம்பிக்குள் நின்றுதான் பார்க்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினராக நான் இருந்தேன். அப்பொழுது சிறையில் இருந்தேன். என்னுடைய தாயார் என்னைப் பார்க்க வந்தார்கள். விரட்டி விரட்டி அடித்தார்கள். கம்பிக்கு முன்னால் நின்றுதான் பார்த்தேன். அதை மாற்றி, ஒவ்வொருவரும் தங்கிப் பார்ப்பதற்கு ஒரு கூடமே ஏற்பாடு செய்து இருக்கிறோம்.

ஆனால், இந்தத் தலைவர்கள் சென்றிருக்கிறார்களே. அவர்களுக்கு என்ன வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது, சிறைக்குள்ளே. ½ பர்லாங் முன் சென்று, சூப்பரிண்டெண்டன்ட் இருக்கக்கூடிய கட்டடத்திலே, ஜெயிலர் கட்டடம் இருக்கிறது, கைதிகளைப் பார்ப்பதற்குத் தனியாக ஒரு கட்டடம் இருக்கிறது. இவற்றை யெல்லாம் தாண்டி, சிறைத்துறை அதிகாரி இருக்கும்போது காரணமற்று ஒரே சமயத்திலே 29 பிரிசனர்களைப் பார்க்கும் வாய்ப்பைக் கொடுத்து, அங்கேயே இருக்கச் செய்து எல்லா வசதிகளையும் செய்து கொடுத்திருக்கிறார்கள். யாருடைய கட்சியோ என்பதற்காகச் சொல்லவில்லை.

[திரு. செ. மாதவன்] [1973 மார்ச் 27

சிறைக்குள்ளே சட்டம் நிலை நாட்டப்பட வேண்டும். யாராக இருந்தாலும் சட்டம் ஒன்றுதான். நான் கேட்டேன் அங்கு சென்றிருந்தபோது. 'அவர்கள் முறைக்கின்றார்களே, நான் என்ன செய்வது', என்று சொன்னார்கள். நான் நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர். நான் ஒரு கை பார்த்து விடுவேன். சட்டமன்றத்திலே சொல்லுவேன்' என்று சொல்கிறார்கள் என்று சொன்னார். நான் சொன்னேன், அதற்கெல்லாம் பயப்படாதீர்கள். நானே சொன்னாலும், சட்டப்படிதான் நடக்க வேண்டும். சட்டத்திற்கு உட்பட்டு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொன்னேன்.

அந்த பைலை எல்லாம் புரட்டிப் பார்த்தேன். ரெமிஷன் கொடுத்த பைல், இண்டர்வியூ கொடுத்த பைல், எல்லாம் பார்த்தேன். பயங்கரமாக இருக்கிறது. இண்டர்வியூ கேட்கும்போது யார் யாரைப் பார்க்கவேண்டுமென்று எழுதிக் கொடுக்க வேண்டும். இவர்கள் எழுதிக் கொடுத்த கைதிகளுக்கும் பார்க்க அனுமதிக்கப்பட்ட கைதிகளுக்கும் சம்பந்தமே கிடையாது. அவ்வளவு சுதந்திரம். அதுவும் எதிர்க்கட்சி அங்கத்தினர் என்பதற்காகச் சொல்லவில்லை. யாராக இருந்தாலும், இவ்வளவு சுதந்திரம், சட்டத்தை மீறி, காருண்யமாக, சிறைத் துறை அதிகாரி அளித்திருப்பாரானால் அது தவறு.

அமைச்சர்மீது பழி போடவேண்டுமென்று, வேண்டியவர், வேண்டாதவர் என்றெல்லாம் சொல்வது தவறு. நாங்கள் ஆட்சியிலே இருந்தாலும், வேறு யார் ஆட்சியிலே இருந்தாலும் தவறைக் கண்டிக்கத் தயாராக இருக்க வேண்டும். அவரைத் தண்டிக்க வேண்டுமென்பது எங்களுடைய கொள்கை அல்ல, கோரிக்கை அல்ல. அப்படிப்பட்ட தவறுகள் நடக்காமல் இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்த நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன என்று தெரிவித்து, சிறைச்சாலை முன்னேறுவதற்காக ஏராளமான வசதிகள், வாய்ப்புகள் செய்து தந்திருக்கிறோம் என்று சொல்லி, வெட்டுத் தீர்மானங்கள் இல்லாமல், இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.



1973 மார்ச் 27] [திரு. செ. மாதவன்]

***மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால்நடை மானியக் கோரிக்கையின்மீது, அதற்காக ரூ. 5 கோடியே சொச்சம் ஒதுக்கப்பட்டிருந்தாலும் அது போதுமானதல்ல. மேலும் அதிகமாகக் கால்நடை வளர்ச்சிக்காகச் செலவழிக்கப்பட வேண்டும், திட்டமிட்ட வளர்ச்சிக்கு வழி செய்ய வேண்டுமென்ற கருத்தைப் பல அங்கத்தினர்கள் எடுத்து வலியுறுத்தியிருப்பதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆனால், உள்ளபடியே கால்நடைத் துறைக்காக ஒதுக்கப்பட்ட இந்தத் தொகையுடன் ஏறத்தாழ ரூ. 8 கோடி அளவுக்கு பால் பெருக்கத் திட்டத்தின்மூலமாக, தமிழ் நாட்டிலே, அண்மைக் காலத்திலே பால் பெருக்கத்தை ஏற்படுத்துவதற்கான செயல்கள் நடைமுறைக்கு வரத் தொடங்கி இருக்கின்றன என்பதையும் 2, 3 ஆண்டுக் காலத்திலே நல்ல பலனைக் காணலாம் என்பதையும் நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

அது மட்டுமல்லாமல், Small Farmers Development Agency. என்ற அந்த அமைப்பு மூலமாகவும்
Marginal Farmers Development Agency
என்ற அந்த அமைப்பு மூலமாகவும் 25 சதவிகிதம் உதவித் தொகையாகவும், 33 சதவிகிதம் உதவித் தொகையாகவும் சப்சிடி யாகத் தந்து, ஏறத்தாழ ரூ. 30 லட்சம் அளவுக்குப் பல்வேறு மாவட்டங்களில் கால்நடை வளர்ச்சிக்காக உதவித் தொகை மட்டும் ரூ. 30 லட்சம் அளவுக்குத் தந்து ஏறத்தாழ ரூ. 1 கோடி, ரூ. 1½ கோடி அளவுக்கு கால்நடை வளர்ச்சிக்கு இந்தச் சிறு விவசாயிகள் திட்டம், நடுத்தர விவசாயிகளுடைய வளர்ச்சித் திட்டம் ஆகியவைகள் மூலமாகப் பணியாற்றப்படுகிறது என்ப தையும் நான் நினைவூட்டிக் கொள்கிறேன்.

அதேபோல், கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களும், ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களும் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுவதற்காக, ஸ்டேட் பாங்குகள்மூலமாக, தேசியமயமாக்கப் பட்ட வங்கிகளின்மூலமாக ஏறத்தாழ ரூ. 1 கோடியே 27 லட்சத்தைக் கடனாகப் பெற்று, அவைமூலமாகக் கால்நடை வளர்ச்சி நடைபெறுகிறது என்பதையும் நான் நினைவூட்ட விரும்புகிறேன். 1972–73-வது ஆண்டில், ரூ. 1 கோடியே 27 லட்சம் அளவுக்குத் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் கோழி

[திரு. க. அன்பழகன்] [1973 மார்ச் 27

வளர்ப்புக்காகவும், கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களுக்காகவும் கடன்கொடுக்க முன்வந்திருக்கிறது என்பதை நினைக்கும்போது, கால்நடை வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க ஒரு பெருக்கத்தை ஏற்படுத்தும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம் என்பதை இது எடுத்துக்காட்டும்.

அது மட்டுமல்லாமல், மிகவும் முக்கியமாக கால்நடைகளுடைய தரத்தை உயர்த்துவதற்காக உயர்தர இனக் காளைகள் வரவழைக்கப்பட வேண்டும், சிந்தி இனக் காளைகள்மட்டும் போதுமான பயன் தராது என்ற கருத்தை அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள்.

ஜெர்சி, ப்ரீசியன் இனக் காளைகளையும், ரெட்டேன் இனக் காளைகளையும் ஏறத்தாழ 25-வது நம் நாட்டுக்கு இறக்குமதி செய்ய வேண்டுமென்று ரூ. 2 லட்சம் அளவிலே ஒரு திட்டம் தந்திருக்கிறோம். மேலும் அதைவிட அதிகமாகவும் இறக்குமதி செய்ய வேண்டுமென்ற ஆலோசனையை நாம் மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறோம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல் ஆடுகளுடைய தரத்தை உயர்த்துவதும் மிக முக்கியமான பணி என்ற அடிப்படையிலே மிகச் சிறந்த கம்பளம் தரக்கூடிய நீலகிரி ஆடுகளினுடைய தரத்தை உயர்த்துவதற்காக ரஷ்யாவிலிருந்து வரவழைக்கப்பட்ட மெரினோ ஆடுகளோடு சேர்த்துக் கலப்பு இனம் ஒன்றை உருவாக்குகின்ற திட்டம் நடைபெற்று வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கொடைக்கானல் பகுதியிலே கம்பளி மட்டுமன்றி இறைச்சியும் தரக்கூடிய ஆடுகளை உருவாக்க காரிடேல் என்ற இன ஆடுகளைச் சேர்த்து ஒரு இனத்தை உருவாக்க மேற்கொள்ளும் வகையில் மன்னனூர் ஆராய்ச்சிப் பண்ணையிலே திட்டம் நடைபெற்று வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

காங்கேயம், உம்பளாச்சேரி போன்ற இனங்கள் உழைப்புக்கேற்ற இனங்கள் என்ற வகையிலே அவற்றை நல்ல முறையிலே வளர்ப்பதற்குச் சில செயல்முறைத் திட்டங்கள் இருக்கின்றன. மந்தியா ஆட்டு இனத்தோடு ஒரு கலப்பினத்தை உருவாக்கு



1973 மார்ச் 27] [திரு. க. அன்பழகன்]

வதற்கும் இராமநாதபுரத்தில் உள்ள கிழக்கரிசல் ஆட்டு இனத்தைப் பரவலாகக் கிடைக்கச் செய்வதற்கும் திட்டங்கள் இருந்து வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பள்ளப்பட்டி தொகுதியிலே ஒரு ஆட்டுப் பண்ணை வைக்க வேண்டுமென்ற கருத்தை அந்தத் தொகுதி உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். பண்ணை வைக்கப்படுவதே ஆட்டு வளர்ச்சியிலே நல்ல நாட்டம் செலுத்தி அவற்றை வளர்ப்பதற்காகத்தான் ஆட்டு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தால் அவற்றிற்கு எல்லாவிதமான உதவிகளையும் செய்வது பற்றிப் பரிசீலிக்கலாம், அங்கே உள்ள கொழுக்கட்டைப் புல்லுக்கும் தகுந்த பயன் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காங்கேயம் இனத்திற்கு என்று ஒரு தனிப் பண்ணை துவக்கப்பட வேண்டுமென்று திரு. கோவை செழியன் அவர்கள் தெரிவித்தார்கள். காங்கேயம் இனத்திற்காக அப்படி ஒரு தனிப் பண்ணை அவசியந்தானா என்பது பரிசீலிக்கப்படும். இன்றைக்கும் நம்முடைய பண்ணைகளிலே காங்கேயம் இனம் நல்ல முறையிலே வளர்க்கப்படுகின்றன. ஆகவே தேவையானால் அதைப் பற்றி அரசாங்கம் பரிசீலித்து முயற்சி செய்யலாம்.

ஒரு காலத்திலே நடைபெற்ற ஐ.சி.டி.பி., இன்டென்சிவ் கேட்டில் டெவலப்மெண்ட் புராஜக்ட் முறையை இடையிலே மூன்று நான்காண்டுக் காலமாகக் கைவிடப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதற்கு மிக முக்கியமான காரணம், தரமான கால்நடைகள் அங்கு உற்பத்ியானாலும் வெளி மாநிலங்களுக்கு விற்கப்படுகின்ற நிலைமை ஏற்பட்டதால் அந்தத் திட்டத்தின் விளைவுகளின் பலன்களை நம்முடைய மக்கள் அனுபவிக்க முடியவில்லை என்பதனால், அந்தத் திட்டம் இடையிலே கைவிடப்பட்டது. தரமுள்ள கால்நடைகள் மிகுதியாகக் கிடைப்பதற்காகவும், தரமில்லாத கால்நடைகள் வளர்ச்சி ஏற்பட்டுவிடாமல் இருப்பதற்காகவும், மீண்டும் ஐ.சி.டி.பி. [illegible] 15 லட்ச ரூபாய் செலவில் அடுத்த ஆண்டிலிருந்து [illegible] பகுதிகளிலே கொண்டுவருகின்ற திட்டத்தை அரசு ஏற்றுக் [illegible].

கீ வில்லேஜ் சென்டர்ஸ், மைய கிராம வளர்ச்சித் திட்டத்திற்காக இரண்டரை லட்ச ரூபாய் செலவு ஆகிறது. ஒரு வட்டத்திலே ஏற்கனவே கைவிடப்பட்ட பழனி வட்டத்திலும், திண்டுக்கல் வட்டத்திலும், அதை நிறைவேற்றுவதற்காக மறுபடியும் செயல்முறையிலே கொண்டுவருவதற்காக நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வந்திருக்கிறது.

அது மட்டுமல்லாமல் கோழி வளர்ப்பிலும் மிகப் பெரிய வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமென்று அரசு முனைந்துள்ளது—போதுமான முட்டை உற்பத்தியில்லை என்று இங்கே பேசிய பலரும் சொன்னார்கள்—கோழி வளர்ப்பு உற்பத்தியை மட்டுமல்லாமல், முட்டை உற்பத்தியை அதிகமாக்கக்கூடிய முறையிலே ஹைலன் இனக் கோழிமூலம் அதிகமாக உற்பத்தி செய்யலாம் என்று திரு. எ. ஆர். மாரிமுத்து அவர்கள் சொன்னார்கள். அதைத்தவிர ஒயிட் லகான் என்ற கோழி இனத்தைக்கொண்டு முட்டை உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஏற்ற வகையில் தரமான வகையான தீனியை வழங்கினால் 210 முட்டை வரையில் கிடைக்கும் என்று தெரிவிக்கிறார்கள். அந்த முறையிலே கோழி வளர்ப்பு கார்ப்பரேஷன், பவுல்ட்ரி டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன், ஏற்படுத்த இசைந்து அரசு ஏறத்தாழ 50 லட்சம் ரூபாய் மூலதனக் கடன் வழங்கி, வங்கிகள் மூலமாக 1½ கோடி முதல் 2 கோடி ரூபாய்வரை கடன் பெற முடியும் என்ற அளவிற்கு ஏறத்தாழ 2½ கோடி ரூபாய் அளவிற்கு அதைச் செயல்படுத்துகிற திட்டத்தைத் தீவிரமாக்குவதற்காக கார்ப்பரேஷன் அமைப்பதன்மூலமாகக் கோழி வளர்ப்புத் துறையிலே ஒரு புதிய ஊக்கம் பிறக்கும் என்று அரசாங்கம் கருதுகிறது.

எல்லா இடங்களிலும் கால்நடை மருந்தகங்கள் துவக்கப்பட வேண்டுமென்று கேட்டார்கள். கடந்த ஆண்டிலே பல இடங்களிலே புதிய மருந்தகங்கள் துவங்க அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டிலே 25 இடங்களிலே கால்நடை மருந்தகங்கள் ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கால்நடை வளர்ச்சியிலே கிராம மக்களுக்கு ஈடுபாடு அதிகமாக வேண்டுமென்பதற்காக செங்கற்பட்டு மாவட்டத்திலே படப்பை என்ற கிராமத்திலே ஒரு கால்நடை வளர்ப்பு முகாம்





தோற்றுவிக்கப்பட்டது. சென்ற ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்திலே நட்டாத்தி என்ற இடத்திலே அத்தகு முகாம் ஏற்படுத்தப்பட்டது. இந்த ஆண்டிலே தஞ்சை மாவட்டத்திலே வடசேரி என்ற இடத்திலே அண்மையிலே முகாம் அமைக்கப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுவரையில் கோழிக் குஞ்சுகளை உற்பத்திசெய்து வழங்குவதற்காகக் கப்பலூர் என்ற இடத்திலும், காட்டுப்பாக்கம் என்ற இடத்திலும் கோயம்புத்தூர் பகுதியிலும் சில அமைப்புகள் இருந்தாலும் தஞ்சை மாவட்டத்திலே ஒரு அமைப்பை ஏற்படுத்துவதன் மூலம், திருச்சி, தஞ்சை ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் கோழி வளர்ப்பு அமைப்புகள் நல்ல முறையில் தோன்றியிருக்கின்ற நேரத்திலே பேருதவியாக இருக்கும் என்று அரசு ஏற்றுச் செயல்படுத்தத் தீர்மானித்துள்ளது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** ஏற்கனவே கோழி வளர்ப்பிலே லாஸ் வந்திருக்கிறது, அதையும் பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** கூட்டுறவு இயக்கத்திலே நஷ்டம் வந்ததாகச் சொல்கிறார்கள். அவர்கள் சொல்வது 1968–69-ம் வருஷத்திலே இருக்கலாம். இப்பொழுது நஷ்டமில்லை. கணக்கு இருக்கிறது. கோழிக் குஞ்சுகளை அதிகமாக உற்பத்தி செய்து வழங்கக்கூடிய முறையிலே ஒரத்தநாடு பண்ணையிலே ஒரு அமைப்பை ஏற்படுத்த அரசு கருதியிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

கோழிகளுக்குத் தீவனம் கிடைப்பதிலே கோயம்புத்தூர் மாவட்டத்திலே அரசூரிலே உள்ள கோழித் தீவனம் உற்பத்தி செய்யும் நிலையத்தைக் கூட்டுறவு சொஸைடியினரே எடுத்துக் கொள்ளக் கேட்டிருக்கிறார்கள். அதனாலே அவர்கள் நல்ல முறையிலே கோழித் தீவனம் உற்பத்தி செய்து அதனுடைய விலை அதிகமாக ஏறாத நிலையில் வழங்குவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று நம்புகிறேன்.

சென்னையிலும் மற்ற இடங்களிலும் ஏற்கனவே உற்பத்தியாகிற கோழித் தீவனத்தைப் போல் நான்கு மடங்கு அதிகமாக உற்பத்தியாக்குவதற்கான திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டம் விரைவிலே அமுலாகும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். விலை அதிகமாக இருக்கிற நேரங்களிலே பிண்ணாக்கு போன்ற கோழித்

[திரு. க. அன்பழகன்] [1973 மார்ச் 27

தீவனத்திற்கான மூலப் பொருட்களை விலை குறைவாக இருக்கின்ற நேரத்திலே வாங்கி வைத்துக்கொண்டு பிறகு தீவனங்களை வழங்குகிற முறையை மேற்கொள்ளலாமா என்பது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. வேளாண்மைத் துறையின் ஒத்துழைப்பின் மூலம் இதைச் செய்ய முடியும். அந்த அளவிற்கு விலை ஏறாமல் பார்த்துக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேரம் இல்லாத காரணத்தினால் குறிப்பாகச் சொல்லிவிட விரும்புகிறேன். கால்நடை மருத்துவர்கள், வெட்டர்னரி சர்ஜன்ஸ், அவர்களுக்கென்று ஒரு வெட்டர்னரி கவுன்சில் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அது எப்படிப் பட்ட சட்ட திட்டத்தின்படி ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதைப் பற்றி ஐ.சி.ஏ.ஆர். ஒரு மாதிரிச் சட்டத்தை அனுப்பி யிருக்கிறார்கள். அதிலே சில திருத்தங்களை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த இலாகா கருதுகிறது. வெட்டர்னரி கவுன்சில் ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கால்நடைத் துறையிலே பணியாற்றுகின்ற கால்நடை உதவியாளர்கள், லைவ் ஸ்டாக் அஸிஸ்டெண்ட்ஸ், அடிப்படையிலே மக்களிடத்திலே மிக நெருக்கமான தொடர்புடன் பணியாற்றக் கூடியவர்களாக இருக்கிறார்கள். கால்நடை உதவியாளர்கள் அவர்களுக்கு இருக்கக்கூடிய ஊதிய விகிதத்தை உயர்த்த வேண்டுமென்று கேட்டார்கள். அரசாங்கம் கடந்த இரண்டு திங்களாக அதைப் பரிசீலனை செய்தது. கால்நடை உதவியாளர்கள் இரண்டாவது தரம், செகண்ட் கிரேடு, இன்றைக்கு அவர்கள் தனித்தன்மையுடன் பணியாற்றுகிறவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்குச் சம்பள விகிதம் ஊக்கந் தருவதாக இல்லை. ஆனால் வேலையின் அமைப்பு, நேச்சர் ஆப் தி ஒர்க் தனித்தன்மை யுள்ளதாக இருக்கிறது. அதை அரசாங்கம் பரிசீலனை செய்து பார்த்ததின் பலனாக அவர்களுக்குத் தனியாக மாதம் ரூ. 15 ஸ்பெஷல் பே என்ற முறையிலே வழங்குவதற்குத் தீர்மானித்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுடைய இன்றைய ஊதிய விகிதம் 210–5–245–10–325 என்று இருக்கிறது. அவர்களுக்கு 15 ரூபாயை ஸ்பெஷல் பே என்ற முறையில் ஏப்ரல் 1-ம் தேதியிலிருந்து அரசு வழங்குகிறது.



1973 மார்ச் 27] [திரு. க. அன்பழகன்]

அதேபோல லைவ் ஸ்டாக் கிரேட் ஒன் தரம் ஒன்று என்ற பதவியில் உள்ளவர்கள் ஊதிய விகிதம் மேற்படி பதவிகளில் பதவி உயர்வு பெறுவதற்கு வாய்ப்பு இல்லாத காரணத்தினால் உயர்த்தப்பட வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். அவர்களுக்கு 275–10–375–15–450 என்ற அடிப்படையில் ஏற்கெனவே சம்பளம் அமைந்திருந்தது. அந்தச் சம்பளத்தை 300–15–420–20–500 என்ற விகிதத்திற்கு உயர்த்துவதற்கும் அரசு முன் வந்திருக்கிறது. ஏனென்றால் லைவ் ஸ்டாக் கிரேட் டூ என்ற பணியில் உள்ளவர்கள் தான் லைவ் ஸ்டாக் கிரேட் ஒன் என்ற பதவிக்கு உயர்கிறார்கள் என்கிற காரணத்தினால் அந்தப் பதவியில் உயர்ந்ததற்குப் பின்னாலும் அதில் பெற வேண்டிய ஊதிய உயர்வுகளை இப்படிப் பட்ட ஊதியத்தாலே தான் வழங்க முடியும் என்ற அடிப்படையில் 25 ரூபாய் அளவில் அடிப்படைச் சம்பளத்தை உயர்த்தி யிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மினியல் ஸ்டாப் என்ற முறையில் தற்காலிகமாகப் பணியாற்றுகிறவர்களில் கடந்த ஆண்டு 850 பேர்களுக்கும், அதற்கு முதல் ஆண்டு ஏறத்தாழ 450 பேர்களுக்கும் வேலை நிரந்தரம் செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் 350 பேர்கள் அல்லது 380 பேர்கள் பாக்கியிருக்கிறார்கள். இந்த ஆண்டு முடிவிற்குள்ளாக அவர்களையும் வேலையில் நிரந்தரமாக்க அரசாங்கம் ஒத்துக் கொண்டிருக்கிறது. குறைகளைப் போக்குவதற்கு அரசாங்கம் நிச்சயமாக முன் வரும்.

இந்தத் துறையிலே பணியாற்றுகிறவர்கள் மக்கள் குறைப் படாத வகையில் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இங்கே பேசிய அங்கத்தினர்கள், எதிர்க்கட்சித் தலைவரவர்கள் எடுத்துத் தெரிவித்த கருத்துக்களுக்கெல்லாம் விளக்கமாகப் பதில் சொல்ல இயலாவிட்டாலும் குறிப்பேட்டில் ஏறியுள்ளவை அனைத்தும், உரிய முறையில் பரிசீலிக்கப்பட்டு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்வதுடன் இந்த மானியத்தின்மீது வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தாமல் இருக்க வேண்டுமென்று உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவரவர்களே, சட்ட மன்ற மானியக் கோரிக்கையின் மீது எழுந்த விவாதத்தில் மாண்புமிகு

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1973 மார்ச் 27

உறுப்பினர்கள் கூறிய கருத்துரைகள் அத்தனைக்கும் மறுமொழி தருவதற்கான அளவிற்கு நேரமில்லையென்றாலும் ஒரு சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த அவையினுடைய தன்மையைப் பற்றியும் இங்கே ஏற்படுத்தப்பட வேண்டிய வசதி வாய்ப்புகள் பற்றியும் உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டுக் காட்டினார்கள். மிகக் குறைவான உறுப்பினர்களைக் கொண்டு இந்த மன்றம் அமைக்கப்பட்ட காலத்தில் மிகக் குறைந்த வசதிகளோடு அமைக்கப்பட்டதன் காரணமாக இந்த நிலைமை. இப்போது பல்வேறு வகைகளில் வளர்ந்தோங்கி நிற்கிற இந்த அவை சமாளிக்க முடியாத அளவிற்கு அமைந்திருக்கிறது என்பதனைக் காண்கிறோம். 70, 80 ஆண்டுகளுக்கு முன்பு இந்த மண்டபம் ஒரு சிலருக்காக அமைக்கப்பட்டது. இப்போது 234 உறுப்பினர்கள் கொள்ளத்தக்க அளவிற்குப் பேரவை அமைந்திருக்கிற காரணத்தினால் உறுப்பினர்கள் தங்குவதற்கேற்ற வசதி வாய்ப்புகளை ஏற்படுத்த இந்த கோட்டையில், சுற்றுப்புறத்தில் போதுமான அளவிற்கு இடமில்லை என்பதை உணர்கிறேன்.

இங்கே உறுப்பினர்கள் இந்த அவையை விட்டு வெளியே செல்வார்களானால் கூடிக் கலந்து உரையாடுவதற்கு ஏற்ற வசதியில்லை என்று அறிகிறோம். அந்த வகையிலே இங்கே இருக்கிற இட வசதியை வைத்துக் கொண்டு நாம் எந்த அளவிற்கு வசதிகளைப் பெருக்கலாம் என்பதில் நாட்டம் செலுத்தி வருகிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜோதி அம்மாள் அவர்கள் குறிப்பிடும்போது, பெண் உறுப்பினர் தங்குவதற்கேற்ற அத்தகைய அறையில் வசதிகள், வாய்ப்புகள் இல்லை என்றும் ஈஸிசேர் ஒன்று இருக்கிறது என்றும் குறிப்பிட்டார்கள். அது திருமதி கிளப்வாலா ஜாதவ் அம்மையார் கேட்டதன் காரணமாக அங்கே இந்த ஈஸிசேர் கொண்டு வந்து போடப்பட்டது. ஆகவே, அதில் ஓய்வு பெறவேண்டுமென்று விரும்புகிறவர்களுக்கு, அம்மையார் அவர்கள் எடுத்துச் சொல்லிய மாதிரி வசதி வாய்ப்புகளைப் பெருக்குவதற்கு எந்த வகையில் இருக்கிற இடத்தில் பெருக்க முடியுமோ அந்த அளவிற்கு வசதிகளைப் பெருக்க வேண்டுமென்பதில் நாட்டம் செலுத்தும் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.



1973 மார்ச் 27] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இங்கே அவை கூடுவதைப்பற்றிக் குறிப்பிட்டு திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் அவை கூடக்கூடிய நாட்களை உயர்த்த வேண்டுமென்று சொன்னார்கள். இதில் நாம் அதிகமான அளவு கவனம் செலுத்திக் கொண்டு வருகிறோம். 1962-ம் ஆண்டில் 40 நாட்கள் கூடிற்று என்றால், 1967 இல் 51 நாட்கள் கூடிற்று. 1966 இல் 50 நாட்கள், 1970 இல் 61 நாட்கள், 1971 இல் 63 நாட்கள், 1972 இல் 60 நாட்கள் கூடிற்று. இந்த ஆண்டு பார்த்தால் 60 நாட்கள் வரைக்கும் கூடும். பிஸினஸ் அட்வைசரி கமிட்டியிலே இந்த விவாதங்களை எந்த அளவிற்கு வைத்துக் கொள்ளலாம் என்று அனைவரும் சேர்ந்து ஒரு ஒத்த முடிவு எடுத்தால் அதற்கேற்றபடி பணிகளையாற்றி, மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் கலந்து கொள்வதற்கேற்ற வசதிகளைச் செய்ய முடியும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

முக்கியமான சட்ட மன்ற மானியத் தொகை வருகிற காலத்திலே கடைசி நாளாக இருக்கிற நிலையிலும் உறுப்பினர்கள் இந்த அளவிற்குத் தான் இங்கே வந்திருக்கிறார்கள் என்கிறபோது, உறுப்பினர்களுடைய வசதி, வாய்ப்புகள், நேரங்கள், பொறுப்புகள் எல்லாம் ஏராளமாக இருக்கின்றன என்ற இலக்கணத்தினுடைய அடிப்படையிலே சொல்லலாம். ஆகவே உறுப்பினர்களுக்குச் சில வகைகளில் இருக்கிற வசதிக் குறைவின் காரணத்தினால் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறோமே தவிர மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொல்லிய மாதிரி பெருமைப்படத் தக்க அளவிற்கு இந்தப் பேரவை மேன்மேலும் பேரும் புகழும் பெறத்தக்க அளவிற்கு நாட்களை அதிகப்படுத்துவதில் ஆட்சேபணையில்லை. பி.ஏ.சி. விதி முறைகளை எந்த அளவிற்கு அமைத்துக் கொள்ளலாம், முக்கியமான விவாதங்களில் உறுப்பினர்கள் சீரிய கருத்துக்களை வழங்க வாய்ப்பு வசதிகளை எப்படி ஏற்படுத்தலாம் என்ற முறையிலும் ஈடுபட வேண்டுமென்று விரும்புகிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் இங்கே வந்து நாள்தோறும் கையெழுத்துப் போடுகிற நிலைமை இல்லாமல் 5 நாட்களுக்கு ஒரு தடவை அல்லது 7 நாட்களுக்கு ஒரு தடவை கையெழுத்துப் போடுகிற நிலைமையை ஏற்படுத்தினால் நல்லது என்று குறிப்பிட்டார்கள். பாராளுமன்றத்தில் அப்படி இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். பாராளுமன்றத்தில் அப்படி இல்லையென்று,

கூறிக் கொள்கிறேன். சென்ற ஆண்டு இப்படிப்பட்ட கருத்து எடுத்துச் சொல்லப்பட்ட வகையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் பற்றி நாங்கள் எழுதிக் கேட்டு பாராளுமன்றச் செயலாளர் அதற்குப் பதில் எழுதியிருக்கிறார். I am directed to state that Lok Sabha attendance register showing the names of Members is kept in the lobby. Members are expected to sign the register daily. என்று இருக்கிறது. ஆனால் நடைமுறையில் என்ன வைத்திருக்கிறார்கள். 14 நாட்களுக்கு ஒரு தடவை கையெழுத்துப் போட்டு 13 நாட்கள் இருந்தோம் என்று சொன்னால் அபௌவ் சஸ்பிஷன் என்ற அளவிற்கு வைத்து நம்பத்தான் வேண்டுமென்ற பெருந்தன்மையைக் கடைப்பிடித்து வந்ததாகக் குறிப்பிடுகிறார்கள். நாள்தோறும் கையெழுத்துப் போட வேண்டுமென்ற நிலைமையிலேயே இந்த அவை இவ்வளவு குறுகியதாக இருக்கிற நிலைமையிலே, 5 நாட்களுக்கு ஒரு தடவை என்று இருந்தால் போதும் என்றால், கோரத்திற்கு ஆட்களைப் பிடிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டு பேரவைக் கோரமாகக் காட்சி அளிக்கவேண்டிய நிலைமை ஏற்படும். ஆகவே இந்த முறைகளிலிருந்து தவிர்த்து பொறுப்புணர்ச்சியோடு கடமை செய்ய இது உதவும். மாண்புமிகு உறுப்பினர் திரு. எட்மண்ட் அவர்கள் இந்தப் பிரச்சினையைக் கிளப்பினார்கள். இப்போது அவர் இங்கு இல்லை. அந்த வகையில் எந்த முறையை வகுக்கலாம் என்று பார்க்கவேண்டும்.

வேறுபல வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டார்கள். உறுப்பினர்கள், மற்றவர்கள் தங்குவதற்கு ஏற்ற வசதிகளை எந்த அளவிற்குச் செய்யலாம் என்று பார்க்கிறபோது, தலைமைச் செயலகத்தைப் பெரும் அளவிலே விரிவுபடுத்திக் கட்டுகிறபோது இந்தச் சட்ட மன்றமும், இதைச் சுற்றி உறுப்பினர்கள் தங்குவதற்கு, கட்சிகள் அறைகள் அமைப்பதற்குத் திட்டமிட்டு ஏற்ற வகையில் புதிதாக வசதியோடு கூடிய மன்றம் அமைக்கப்படும் என்ற அளவிலேதான் அரசு எண்ணிக்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய கருத்துக்களை உள்ளத்தில் வைத்துக் கொண்டு, விடுதியைப் பொறுத்த வரையிலும், வசதிகளை வாய்ப்புகளைச் செய்ய வேண்டுமென்றால், எப்படி வசதி





வாய்ப்புகளைச் செய்யலாம் என்று கண்டறிந்து அந்த வசதி வாய்ப்புகளைச் செய்ய வேண்டும் என்று கூறுவதற்கு ஹவுஸ் கமிட்டி வைத்திருக்கிறோம். அடிக்கடி கூட வேண்டுமென்றிருக்கிறது. கூட மறுக்கிறார்கள். இருப்பவர்களும் அக்கறை செலுத்த வேண்டும். அவர்கள் கூட்டி வழி வகைகளைக் காணுவார்களானால் நல்லது. வழி வகைகளை ஏற்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இந்த அவைக் குழுவினர் மிக அக்கறையோடு, முறையோடு சில பல பணிகளையாற்றி இந்த வசதிகளைப் பெருக்க வேண்டுமென்பதை நான் ஒப்புக் கொள்கிறேன்.

சில கட்டுப்பாடு திட்டங்களைக் கொண்டு வர அவைக் குழுவினர் வழி முறைகளை வகுக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஏற்படுத்தப்பட்ட வசதிகளை மாண்புமிகு உறுப்பினர்கள் மட்டுமேதான் நுகர வேண்டுமென்று வைத்திருப்பார்களானால் இருக்கிற வசதிகள் போதுமானதாக இருக்கக் கூடும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட வசதிகளையெல்லாம், உறுப்பினர்கள், அவர்களைப் பார்க்க வந்தவர்கள், மற்றவர்களெல்லாம் அனுபவிக்க விடுவதன் காரணமாக உறுப்பினர்கள் தங்குகிற உறுப்பினர்கள் விடுதி என்பதை விட சத்திரமாக மாறிவிட்ட நிலைமை இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர்கள் குறைபட்டுக் கொள்கிறார்கள். நமக்கு நாமே கட்டுப்பாடு, விதிகள் ஏற்படுத்திக் கொண்டால்தான் முடியும்.

ஸ்கிரீன்கள் இல்லை என்று சொன்னார்கள். அங்கே வந்து தங்குகிற விருந்தினர்கள், மற்றவர்கள், விண்டோ ஸ்கிரீனைப் படுக்கையாகப் பயன்படுத்திக் கொண்டு, போகும்போது அந்த ஸ்கிரீனும் போய் விடுகிறது என்று குறிப்பிடுகிறார்கள். அந்தக் குறைபாடுகள் ஏற்படாத அளவிற்குப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு நம்மிடத்தில் இருக்கிறது. அந்த வகையில் உறுப்பினர்களெல்லாம் பல்வேறு முறைகளைக் கையாள வேண்டுமென்று கருதுகிறேன்.

தொலைபேசியைப் பொறுத்த வரையிலும் 1968 இல் 27 ஆயிரம் ரூபாயாக இருந்தது, ஒரு லட்சத்து 40 ஆயிரம் ஆகி இப்போது 1972–73 இல் ஒரு லட்சத்து 96 ஆயிரம் செலவாகியிருக்கிறது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1973 மார்ச் 27

இந்த வசதி வாய்ப்புகள் எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன. சம்பளங்களை உயர்த்த வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். மற்றைய மாநிலங்களை ஆராய்ந்து பார்த்ததில் மூன்று மாநிலங்களில்தான் 400 ரூபாய் மாதத்தில் வாங்குகிறார்கள். மகாராஷ்டிராத்தைத் தவிர மற்ற மாநிலங்களில் 350, 300 என்ற அளவில்தான் இருக்கிறது. படியை உயர்த்த வேண்டுமென்றும் சொன்னார்கள்.

"ஈயென விரத்த லிழிந்தன் றதனெதிர்
ஈயே னென்ற லதனினு மிழிந்தன்று
கொள்ளெனக் கொடுத்த லுயர்ந்தன் றதனெதிர்
கொள்ளே னென்ற லதனினு முயர்ந்தன்று"

என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள்.

20 ரூபாய் படியை 25 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஏதேனும் கொடுக்காமல் இந்தத் தொடர் கூட்டத்தை முடிப்பது அழகாக இருக்காது. ஆகவே 20 ரூபாய் படியை 25 ரூபாயாக ஆக்கியிருக்கிறோம் என்று கூறி முடித்துக் கொள்ளுகிறேன். (ஆரவாரம்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 7-க்குக் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணைகளை வற்புறுத்துகிறார்களா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். பொன்னப்ப நாடார்....

**திரு. கே. டி. கே. தங்கமணி:** ஒரு மணிக்கு கில்லெட்டின். நேரடியாகக் கோரிக்கைகளை வாக்கெடுப்புக்கு விடுவதுதான் சரி. வெட்டுப் பிரேரணைகளைப் போட வேண்டியதில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நாம் ஆரம்பித்து விட்டோம்.

திருவாளர்கள் ஆர். பொன்னப்ப நாடார், நா. வெ. குருசாமி, கே. எஸ். கோதண்டராமையா, ஏ. ஆர். மாரிமுத்து, ஆ. கு. சுப்பையா, கே. எ. வகாப் ஆகியோரின் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.



1973 மார்ச் 27]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 7—மாநிலச் சட்ட மன்றம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 36,15,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 21-க்கு திருவாளர்கள் கு. அ. பொம்மன், கே. எ. வகாப், ஏ. ஆர். மாரிமுத்து, சோ. அழகர்சாமி, ஆர். பொன்னப்ப நாடார் ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 21—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,26,59,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 13-க்கு டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. கே. எ. வகாப், திரு. என். டென்னிஸ் ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,30,12,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 14-க்கு திரு. என். டென்னிஸ், திரு. கே. எ. வகாப் ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,16,64,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

(6) அறிவிப்பு

**தமிழ் நாடு 1973-ம் ஆண்டு நிதி ஒதுக்க (2-ம் எண்) சட்ட முன்வடிவு**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஓர் அறிவிப்பு. தமிழ் நாடு 1973-ம் ஆண்டு நிதி ஒதுக்க (2-ம் எண்) சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

(7) **அரசினர் சட்ட முன்வடிவு**

**தமிழ் நாடு 1973-ம் ஆண்டு நிதி ஒதுக்க (2-ம் எண்) சட்ட முன்வடிவு**

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1973-ம் ஆண்டு நிதி ஒதுக்க (2-ம் எண்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது. பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிந்து மீண்டும் நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை கூடும். வணக்கம்.

**பின்னர், பேரவை பிற்பகல் 1.04 மணி அளவில் ஒத்தி வைக்கப்பட்டது.**



(8) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders*—Nil.

B. *Reports, Notifications and Other Papers.*

@ 142. Policy Note on Dairy Development Department 1973–74 (English and Tamil).

† 143. Speech of Hon. Dr. M. Karunanidhi, Chief Minister presenting the Final Supplementary Estimates for the year 1972-73 (English and Tamil).

† 144. Demands for Grants for Further Expenditure and Detailed Supplementary Estimates thereof for the year 1972–73 (English and Tamil).

† 145. Notice on Demands for Further Grants during the year 1972–73 (English and Tamil).

£ 146. Policy Note on Demand No. 21—Animal Husbandry 1973–1974 (Tamil).

---

@ Despatched to Members on 24th March 1973.
† Laid on the Table of the House on 26th March 1973.
£ Despatched to Members on 26th March 1973.

## இணைப்பு I

[16-ம் பக்கத்தில் வெள்ளிக் குறியிட்ட வினா எண் 531-க்கான விடையைக் காண்க.]

**விடை :—**

(அ) 1971–72 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட கடன் விபரங்கள் :—

| | |
|---|---|
| எல்லாபுரம் நிலவள | ரூ. 10,26,419 (பத்து லட்சத்து இருபத்தி ஆறாயிரத்து நானூற்றி த்தொன்பது.) |
| கும்மிடிபூண்டி நிலவள வங் | 6,00,942 ஆறு லட்சத்து தொள் ளாயிரத்து நாற்பத்தி ரெண்டு) |

(இ) எல்லாபுரம் நிலவள வங்கி.—எல்லாபுரம் நிலவள வங்கி 1972–73-க்கு, நிர்ணயிக்கப்பட்டுள்ள கடன் வழங்கு குறியீடு ரூ. 20,00,000. இதில் 28–2–1973 முடிய ரூ. 3.35 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

மின்சார மோட்டார், டவுனுடன் ( down ) கூடிய 500 குழாய் கிணறுகள் அமைக்க இந்த வங்கிக்கு கீழ்நீர் இயக்குனர் Director of Ground-water அவர்களின் அனுமதி கிடைத்துள்ளது. ஆகவே மேற்படி 500 குழாய் கிணறுகளுக்குக் கடன் வழங்க கடன் மனுக்கள் சேகரிக்க துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2. கும்மிடிப்பூண்டி.—1972–73 ஆம் ஆண்டிற்கு கும்மிடிப் பூண்டி நிலவள வங்கி கடன் வழங்குவதற்கு ரூ. 20.00 லட்சம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவ்வங்கியில் 865 'ஏ' வகுப்பு அங்கத்தினர்களும், 972 'பி' வகுப்பு அங்கத்தினர்களும் உள்ளனர். இவர்கள் பங்குத் தொகையாக ரூ. 1,31,612 செலுத்தி யுள்ளனர். இதில் அரசு செலுத்தியுள்ள பங்குத் தொகை ரூ. 25,000-மும் அடங்கும்.

வங்கியில் கூட்டுறவுத் துறை முதுநிலை ஆய்வாளர் ஒருவர் மேலாளராகப் பணிபுரிகிறார். தற்போது மெம்பர்களின் கடன் பாக்கி ரூ. 16 லட்சம் உள்ளது. இது ரூ. 20 லட்சத்தை







அடைந்தவுடன் கூட்டுறவு சார் பதிவாளர் ஒருவரை மேலாளராகப் பணியில் அமர்த்தத் திட்டமிட்டுள்ளது. வங்கி அலுவலகர்கள் மற்றும் கூட்டுறவு சார் பதிவாளர் (நிலவள வங்கிகள்), கும்மிடிப்பூண்டி, கடன் மனுக்கள் சேகரித்து பரிசீலனை செய்து, விரைவில் கடன் வழங்கத்தக்க தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாண்டில் 28—2—1973 முடிய இந்த வங்கி ரூ. 6.16 இலட்சம் கடன் வழங்கியுள்ளது.

## இணைப்பு II

[31-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### மானியக் கோரிக்கை 21—கால்நடை வளர்ப்பு—கால்நடை மருத்துவக் கல்வி ஆராய்ச்சித் துறைகள்.

### 73–74 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 5,26,59,700

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

கோரிக்கை எண் 21—கால்நடை வளர்ப்புத் துறையின்கீழ் ரூ. 5,26,59,700-க்கு மேற்படாத ஒரு தொகையை அரசிற்கு வழங்குமாறு இப்பேரவையை வேண்டிக் கொள்கிறேன்.

கால்நடை வளர்ப்புத் துறையின் முக்கியக் குறிக்கோள் கறவை மாடு ...ள், ஆடுகள், பன்றிகள், கோழிகள் உட்பட கால்நடைச் செல்வத்தைப் ...யனும் வளமும் மிகும் வகையில் பெருக்குவதாகும். இக்குறிக்கோள் நிறைவேற, கால்நடைகளில் கலப்பு இனம் பெருகச் செய்வதிலும், கால் நடைகளைப் பேணுவதிலும் அவற்றிற்குத் தீவனமும், இரையும் வழங்கு வதிலும் புதிய அறிவியல் முறைகள் பின்பற்றப்படும். மேலும், கால் நடை நோய்களைத் தடுக்கவும், அவற்றிற்கு சிகிச்சை அளிக்கவும், உரிய ...சதிகள், அனைத்தும் செய்து தரப்படும். இந்த நோக்கத்துடன் பணி ...ற்றும் கால்நடை வளர்ப்புத் துறை நடவடிக்கைகளின் இறுதிக் குறிக் கோள், நமது மாநிலத்திலுள்ள இழுவை மாடுகளின் ஆற்றலை உயர்த்து வதும், நமது மாநில மக்கள் உடல் நலனும், வலிமையும் உடையவராகத் திகழ அவர்களுக்கு உயரிய சத்துக்களடங்கிய உணவை போதுமான அளவு கிடைக்கச் செய்ய, பால் பொருட்களின் உற்பத்தி, முட்டை, இறைச்சி, கோழி இறைச்சி, பன்றி இறைச்சி ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருக்கி மக்களுக்கு வழங்குவதுமாகும்.

[1973 மார்ச் 27

நமது மாநிலத்தின் பொருளாதாரம் பெருமளவுக்கு வேளாண்மையைச் சார்ந்துள்ளது. வேளாண்மையின் செழிப்பும், கால்நடைச் செல்வத்தின் வளமும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையனவாகும். நமது மாநிலத்தின் கால்நடைகளின் தொகை மிகப் பெருமளவில் உள்ளது. கால்நடைகளில் பசு, எருது எண்ணிக்கை 108·59 லட்சமாகும். எருமைகளின் தொகை 27·24 லட்சமாகும். செம்மறி ஆடுகளின் தொகை 66·21 லட்சமாகும். வெள்ளாடுகளின் தொகை 37·71 லட்சம். பன்றிகளின் தொகை 4·75 லட்சம். கோழிகளின் தொகை 112·26 லட்சம். இப்புள்ளி விவரங்கள் 1966-ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட கால்நடைகள் தொகை கணிப்பை ஒட்டியதாகும். ஆனால், கால்நடைகள் இவ்வளவு பெருந்தொகையாக இருப்பது கால்நடைகளின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள பெருக்கத்தைக் காட்டுகிறதே ஒழிய, கால்நடைகளின் தரத்தில் அடைந்த முன்னேற்றத்தைக் காட்டவில்லை. நம்மிடம் இவ்வளவு ஏராளமான எண்ணிக்கையில் கால்நடைகள் இருந்துங்கூட, கால்நடைகள் தரத்தை உயர்த்தும் முறையை நாம் முன்னமே அனுசரியாமல் விட்டுவிட்டதால், கால்நடை உற்பத்திப் பொருள்களை நாம் பயன்படுத்துகின்ற அளவானது தொடர்ந்து கவலைப்படும் வகையில் மிக மிகக் குறைவாகவே உள்ளது. அதாவது, ஒரு மனிதனுக்கு நாள் ஒன்றுக்கு சரிவிகித உணவாக 300 கிராம் பால், 8·40 கிராம் முட்டை, 40 கிராம் மீன் உட்பட இறைச்சி தேவை எனக் கருதப்படுகிறது. ஆனால் நாள் ஒன்றுக்கு சராசரியாக நாம் ஒவ்வொருவரும் உட்கொள்ளும் பால், முட்டைகள், இறைச்சியின் அளவு முறையே 63 கிராம், 1 கிராம், 26 கிராம் ஆகும். இதைப் பார்க்கும்போது தற்போது கிடைக்கக்கூடிய பால், முட்டை அளவு முறையே ஐந்து மடங்காகவும் ஒன்பது மடங்காகவும் இறைச்சி குறைந்தது இரு மடங்காகவும் உயர்த்தப்பட வேண்டும்.

நமது கால்நடைகளின் தரத்தை உயர்த்தவும், அவை மிகுந்த பயன் தரும் வகையில் அவற்றை மேம்படுத்தவும், இத்துறை சில ஆண்டுகளாகப் பல நடவடிக்கைகளை எடுத்து வந்துள்ளது. அவற்றில் குறிப்பிடத்தக்க சில திட்டங்கள் பின்வருவன: மையக் கிராமத் திட்டங்கள், செயற்கை முறை கருத்தரிப்புத் திட்டங்கள், கால்நடை வளர்ச்சி மும்முரத் திட்டங்கள், கோழி வளர்ச்சி மும்முரத் திட்டங்கள், முட்டைகள், கோழிகள்—உற்பத்தி விற்பனை மும்முரத் திட்டங்கள், பன்றி வளர்ப்புத் திட்டங்கள், கோமாரி ஒழிப்புத் திட்டம் ஆகியன. அரசு, குறிக்கோள்களை மிக விரைந்து எய்தும் வகையில், வரும் ஆண்டுகளில் செயற்படுத்துவதற்காகப் பல திட்டங்களை உருவாக்கியுள்ளது.

### நிர்வாக அமைப்பு.

துறையின் அலுவல்களைப் பெருமளவு பரவலாக்கி, தொடராகவும், ஒரு சீராகவும் கட்டுப்பாட்டு அதிகாரம் செலுத்தும் வண்ணம் இத்துறை 1—1—1970 முதல் சீரமைக்கப்பட்டுள்ளது. இத்துறை, அலுவல் அடிப்படையில் பணியாற்றி வந்ததற்கு மாறாக, 1—1—1970 முதல் வட்டார அடிப்படையில் பணியாற்றத் தொடங்கியது. திருத்தி அமைத்த அமைப்பிற்கிணங்க இம்மாநிலம் ஆறு வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு வட்டாரமும் வட்டாரத் துணை இயக்குநர் ஒருவர் தலைமையின்கீழ் இயங்குகிறது. இந்த ஆறு வட்டாரங்களின் தலைமையிடங்களாவன:—சென்னை,



1973 மார்ச் 27]

வேலூர், கோயம்புத்தூர், தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி ஆகியனவாகும். சென்னையிலுள்ள வட்டாரத் துணை இயக்குநரைத் தவிர, மற்ற வட்டாரத் துணை இயக்குநர் ஒவ்வொருவருக்கும் உதவியாக வல்லுநர்கள் மூவர் உள்ளனர். கோழிகள் வல்லுநர் ஒருவர், கால்நடைகள் வல்லுநர் ஒருவர், கால்நடை நோய் ஆய்வுப் பணி குறித்த வல்லுநர் ஒருவர்—ஆக ஒரு வட்டாரத்தில் மூன்று வல்லுநர்கள் வீதம், இம்மாநிலத்திலுள்ள ஐந்து வட்டாரங்களில், பதினைந்து வல்லுநர்கள் பணியாற்றுகின்றனர். வட்டாரத் துணை இயக்குநரின்கீழ் கால்நடை வளர்ப்பு உதவி இயக்குநர்கள் 59 பேர் உள்ளனர்; இவர்கள் ஒவ்வொருவரது அதிகார வரம்பும் தோராயமாக வருவாய்க் கோட்டம் ஒன்றின் அதிகார வரம்புக்கு நிகரானதாகும். இந்த உதவி இயக்குநர்கள் கால்நடை நோய்கள் பற்றிய ஆய்வு, அவற்றிற்கு சிகிச்சை அளித்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டிருப்பதோடு கோழிகள், கால் நடைகள், செம்மறி ஆடுகள், பன்றிகள் இவற்றின் வளர்ச்சிப் பணி, செயற்கை முறை கருத்தரிப்புப் பணி, மையக் கிராம வளர்ச்சிப் பணி, மற்றும் ஏனைய வளர்ச்சிப் பணியைச் சார்ந்த நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கும் பொறுப்பு வகிக்கின்றனர். சமுதாய வளர்ச்சி வட்டாரம் ஒவ்வொன்றிலும் கால்நடை மருந்தகம் ஒன்றுக்குக் குறையாமல் உள்ளது. இவைகள் கால்நடை உதவி மருத்துவர் இருவரால் நிர்வகிக்கப்படுகின்றன. ஒருவர் கால்நடை நோய்க்கு சிகிச்சையளிக்கும் பணியையும், இன்னொருவர் வளர்ச்சிப் பணியையும் மேற்கொள்கிறார். இத்தகைய சமுதாய வளர்ச்சி வட்டாரங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட கால்நடை மருந்தகங்கள் இருக்குமானால், ஒவ்வொரு மருந்தகத்திலும் கால்நடை நோய்க்குச் சிகிச்சையளிக்கும் பணியையும், வளர்ச்சிப் பணியையும் கவனித்துக் கொள்ள கால்நடை உதவி மருத்துவர் ஒருவர் மட்டுமே உள்ளார். ஊராட்சி ஒன்றிய அளவிலும், கிராம அளவிலும், கால்நடை வளர்ப்புப் பணியைக் கால்நடை வளர்ப்பு வளர்ச்சிப் பணி அலுவலர்கள் கவனிக்கின்றார்கள். இவர்கள் ஒரு கிளை நிலையத்திற்கு ஒருவர் வீதம் உள்ளனர். ஒரு கிளை நிலையத்தின்கீழ் சுமார் ஆறு முதல் பத்து கிராமங்கள் உள்ளன. இத்துறை, திருத்தியமைக்கப்பட்டதற்கு முன்னதாக பல்வேறு அமைப்புகள் மூலம் செய்யப்பட்ட எல்லா வகைப் பணிகளும், அதாவது, மைய கிராமப் பணி, செயற்கை முறை கருத்தரிப்புப் பணி போன்றவை அனைத்தும் தற்போது இந்த வளர்ச்சிப் பணி அலுவலர்களால் கவனிக்கப்பட்டு வருகின்றன. இத்துறையின் பல்வேறு நிறுவனங்களிலும் பணிபுரிகின்ற கால்நடை மருத்துவர்கள், அலுவலர்கள் முதலானோர் எண்ணிக்கை பின்வருமாறு:—கால்நடை உதவி மருத்துவர் 916 பேர்; கால்நடை மருத்துவம்—கால்நடை ஆய்வாளர்கள் 91 பேர்; முதல் நிலை கால்நடை உதவியாளர்கள் 745 பேர்; இரண்டாம் நிலை கால்நடை உதவியாளர்கள் 2,176 பேர்; கீழ்க்கண்ட இடங்களில் மாவட்டக் கால்நடைப் பண்ணைகள் ஆறு, பண்ணைக் கண்காணிப்பாளர்களின் தலைமையில் அமைந்துள்ளன; இவற்றில், ஹோசூரில் உள்ள பண்ணை, கோழிக்குஞ்சு பொறிக்கும் அதிகாரி-கண்காணிப்பாளர் என்ற தரம் உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர் ஒருவரது பொறுப்பிலுள்ளது.

1. ஹோசூர்—தருமபுரி மாவட்டம்.
2. புதுக்கோட்டை—திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
3. ஒரத்தநாடு, ஈச்சங்கோட்டை, கொருக்கை—தஞ்சாவூர் மாவட்டம்.

4. அபிஷேகப்பட்டி—திருநெல்வேலி மாவட்டம்.

5. உதகமண்டலம்—நீலகிரி மாவட்டம்.

6. செட்டிநாடு—இராமநாதபுரம் மாவட்டம்.

கீழ்க்கண்ட இடங்களில் பண்ணைக் கண்காணிப்பாளர்களின்கீழ் செம்மறி யாட்டுப் பண்ணைகள் இரண்டு உள்ளன :—

சின்னசேலம்—தென் ஆர்க்காடு மாவட்டம்.

சாத்தூர்—இராமநாதபுரம் மாவட்டம்.

காட்டுப்பாக்கத்தில் கோழிக்குஞ்சு பொறிக்கும் பணி அலுவலர்—கண்காணிப்பாளரது நிர்வாகத்தின்கீழ் கோழிப்பண்ணை ஒன்று உள்ளது.

ஆக மொத்தத்தில் கால்நடை வளர்ப்புத் துறையின் கட்டுப்பாட்டு அதிகாரத்தின்கீழும், மேற்பார்வையின்கீழும் 9 பெரிய பண்ணைகள் உள்ளன. அவற்றில் ஆறு பண்ணைகள் கால்நடைப் பண்ணைகள் ; இரண்டு செம்மறி ஆட்டுப் பண்ணைகள் ; ஒன்று கோழிப்பண்ணை ஆகும்.

இவை தவிர, மாநிலம் முழுவதற்கும் வெக்கை நோய் ஒழிப்புத் திட்டத்தின் பொறுப்பில் வெக்கை நோய் குறித்த அலுவலர் ஒருவர் உள்ளார். பல்வேறு செம்மறி ஆடு-கோழி கூட்டுறவுச் சங்கங்களின் பொறுப்பில் கூட்டுறவுச் சங்கங்கள் துணைப்பதிவாளர் ஒருவர் உள்ளார். கால்நடைகள் குறித்த புள்ளிவிவரத் தகவல்களைச் சேகரித்து கால்நடை வளர்ப்புத் துறைக்கு வழங்குவதற்காக கால்நடை வளர்ப்பு புள்ளிவிவர அலுவலர் ஒருவரும் உள்ளார். சென்னை, செங்கற்பட்டு மாவட்டங்களில் கோழித் தீவனம் உற்பத்தி செய்து வழங்கும் பொருட்டு சென்னை நந்தனத்தில் தீவனம் தயாரிப்புப் பிரிவு ஒன்று தனியாக இருக்கிறது.

தற்போது இம் மாநிலத்தில் கால்நடை மருத்துவ மனைகள் 35 உள்ளன ; அவற்றில் சைதாப்பேட்டை, திருநெல்வேலி, கோயம்புத்தூரி லுள்ள மூன்று கால்நடை மருத்துவ மனைகளும், மருத்துவ ஆய்வுக் கூடங்களுடன் முழுமையான மருத்துவ மனைகளாக தரம் உயர்த்தப் பட்டுள்ளன ; இன்னும் கால்நடை மருத்துவ மருந்தகங்கள் 497-ம், தனி மருத்துவமனை ஆய்வுக்கூடங்கள் 13-ம் இம்மாநிலத்தில் உள்ளன.

துறையின் திட்ட நடவடிக்கைகள் பெருமளவில் உயர்ந்துள்ளதால் துறையின் இயக்குநருக்கு உதவியாக, திட்டமிடுதல், வளர்ச்சிப் பணிகள் குறித்து கால்நடை வளர்ப்புத் துறை இணை இயக்குநர் ஒருவர் நியமிக்கப் பட்டுள்ளார். திருத்தியமைக்கப்பட்ட பின்னர், துறையின் நிர்வாக அமைப்பைக் காட்டும் விளக்க வரைபடம் ஒன்று இத்துடன் இணைக்கப் பட்டுள்ளது.



## வளர்ச்சித் திட்டம்.

துறையால் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான திட்டங்களும் நடவடிக்கை களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

**கால்நடை வளர்ச்சி.**—இம் மாநிலத்தில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட இனப் பெருக்கக் கால்நடை இனங்களாவன :—

(1) காங்கேயம்.

(2) உம்பளாச்சேரி.

(3) ஹலிகார்.

(4) ஆலம்பாடி.

(5) பர்கூர்.

(6) புலிக்குளம்.

இந்தக் கால்நடைகள் இழு வகை கால்நடைகளாகவே இருப்பதால், குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமே இவை காணப்படுகின்றன. காங்கேயம் இனக்காளை நமது மாநிலத்திற்கு நல்ல பெயரைப் பெற்றுத் தந்துள்ளது. இவைகள் கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள தாராபுரம் வட்டத்தில் உற்பத்தி ஆகின்றன. உம்பளாச்சேரி இனக்காளை, தஞ்சாவூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டத்தில் காணப்படுகிறது. ஹலிகார், ஆலம்பாடி, பர்கூர் இனக்காளைகள் தருமபுரி மாவட்டத்தின் வெவ்வேறு பகுதிகளில் காணப்படுகின்றன. புலிக்குளம் இனக்காளை, மதுரை மாவட்டம், கம்பம் பள்ளத்தாக்கில் காணப்படுகின்றது. இவ்வாறு பல இடங்களில் பரவ லாகக் காணப்படும் நல்ல இனக் கால்நடைகள் தவிர, நமது மாநிலத்தில் உள்ள கால்நடைகள் அனைத்தும் இனம் தெரியாது தேய்ந்த கால்நடை களாகும். எருமைகளைப் பொறுத்தமட்டில், நமது மாநிலத்தில் நல்ல இனமே கிடையாது. இருப்பவையனைத்தும் இனம் தெரியாத எருமை களாகும். ஆனால், எருமை வளர்ப்புத் திட்டங்களைத் தொடர்ந்து செயல் படுத்தியதன் பலனாக, தரமான முர்ரா எருமைகள் இம்மாநிலத்தில் பரவலாகக் காணப்படுகின்றன. இதுபோலவே, தரமான சிந்தி இனக் காளைகளையும், வெளிநாட்டு இனக் காளைகளையும் கொண்டு இனக்கலப்பு செய்து தோன்றிய கால்நடைகளும் கோயம்புத்தூர், மதுரை, செங்கற்பட்டு ஆகிய பால் உற்பத்திப் பகுதிகளிலும் நீலகிரி, கோடைக்கானல் போன்ற மலைப்பகுதிகளிலும் காணப்படுகின்றன.

உள்ளூர் கால்நடை இனங்களை நம் நாட்டிலேயே உள்ள தரமான பொலி காளைகளுடன் சேர்த்தும், உயர்தர வெளிநாட்டு இனக் காளை களுடன் சேர்த்தும் இனவிருத்தி செய்து அவற்றின் தரத்தை உயர்த்தும் பொருட்டு, எவ்வாறு வளர்க்க வேண்டும் என்பதை விவசாயிகளுக்கு எடுத்துரைக்கவும் சிறந்த பொலி காளைகளை உற்பத்தி செய்து விவசாயி களுக்கு வழங்கும் பொருட்டும், இம்மாநிலத்தில் கால்நடைப் பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டன.

[1973 மார்ச் 27

பல்வேறு கால்நடைப் பண்ணைகளில் மேற்கொள்ளப்பட்ட பணிகளும், அவற்றின் பயன்களும் கீழ் வருமாறு :—

(i) கால்நடைகளைத் தெரிந்தெடுத்து வளர்க்கவும், உயர் இனக் கால்நடையைப் பெருக்கவும் உள்நாட்டினத்தையும், அயலினத்தையும் சேர்ந்த உயர்ந்த பயன் தரக்கூடிய, உயர் இனவகைக் கறவை மாடுகளை அறிமுகப் படுத்துதல்.

(ii) இனப் பெருக்கத்திற்காக நல்ல தரமான பொலி காளைகளைத் தனியார்களுக்கும், உழவர்களுக்கும், அரசு நிலையங்களுக்கும் வழங்குதல்.

(iii) தீவனம் வளர்த்தல், இனப் பெருக்கம் செய்தல், நிர்வாகத் திறமை, தொழில் நுட்பத்திறன் குறித்துக் கால்நடை இனப் பெருக்கம் செய்வோர்க்கு விளக்கப் பணியாற்றுதல்.

(iv) மாணவர்களுக்கும் வேளாண்மையில் ஈடுபட்டோர்க்கும் பயிற்சி நிலையமாகப் பணியாற்றுதல்.

(v) நல்ல தரமான கால்நடையையும், கோழி இனத்தையும் உற்பத்தி செய்யும் நோக்கத்துடன் கால்நடைகள், செம்மறியாடுகள், கோழி இனங்கள், பன்றிகள் வளர்ச்சி குறித்து ஆராய்ச்சி நடத்துதல்.

(vi) கால்நடைத் தீவனப் பண்ணைகள் அமைப்பதற்காக கிராம மக்களுக்கு விதைகளைப் பெருக்கி வழங்க கூடுதல் பயன் தரும் பொருத்தமான தீவன பயிர்களைப் பயிரிடுதல்.

தீவனம் பயிரிடப்படுகின்ற பரப்பு, உற்பத்தி செய்யப்பட்ட தீவனம், தானியம், பால், கால்நடைகளின் இருப்பு, கால்நடைப் பண்ணைகளின் வருவாய்—செலவு ஆகியவைபற்றிய விவரங்களை I–IV-வது இணைப்புகளில் காணலாம். இனப் பெருக்கத்திற்காக விற்கப்பட்ட காளைகளின் எண்ணிக்கை, அவற்றின் மதிப்பு ; கால்நடைப் பண்ணைகளிலிருந்து பல்வேறு நிறுவனங்களுக்கு மாற்றப்பட்ட காளைகளின் எண்ணிக்கை ஆகியவற்றின் தொடர்பான விவரங்கள் இணைப்பு V-ல் கொடுக்கப்பட்டுள்ளன. கால்நடைப் பண்ணைகளில் உள்ள வசதிகள்,—குறிப்பாக தீவன உற்பத்தியைப் பெருக்குவதற்கான வசதிகள் ; பாசனத்திற்கான நீர்நிலை வசதிகள் ; டிராக்டர்கள் போன்ற உழவு கருவிகள் ஆகியவை போதா. எனவே, அவற்றை நிறைவு செய்ய வகை செய்யப்பட்டு வருகின்றது.

நமது பசுக்களின் இனப் பெருக்கத் திறன் மிகக் குறைவாக உள்ளபடியால், செயற்கைக் கருத்தரிப்பு முறையை மேற்கொண்டு, உயர்தர வெளிநாட்டுக் காளைகளின் விந்துவை நமது பசுக்களுக்குச் செலுத்தி பெருமளவில் கலப்பினங்களை உற்பத்தி செய்தாலன்றி பால் உற்பத்தியில் விரைவான முன்னேற்றம் காண முடியாது.



1973 மார்ச் 27]

சராசரியாக ஒருவர் பயன்படுத்தும் பாலின் அளவும் உயராது. இதற்கு அடிப்படையாக, உடனடித் தேவைகளைச் சரிக்கட்டும் அளவுக்கு வெளிநாட்டுப் பொலி காளைகள் இருத்தல் வேண்டும். அதற்கு இறக்குமதி ஒன்றே வழி. மேலும், அடுத்துவரும் ஆண்டுகளில் தொடர்ச்சியாக உயர்தரக் காளைகளை உற்பத்தி செய்யும் வகையில், நமது கால்நடைப் பண்ணையில் அயலினத்தைச் சேர்ந்த இனப்பெருக்கத்திற்கான பசுக்களும் இருக்க வேண்டும். எனவே, அயலினக் காளைகளையும், நல்ல இனக் கிடேரிகளையும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்காக, 1973–74-ஆம் ஆண்டில் போதிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கலப்பினக் கன்றுகள் பிறந்து நன்கு பராமரிக்கப்பட்டு அவை விரைவில் இன உற்பத்தியைத் தொடங்கும் வகையில், சரியான முறையில் வளர்க்கப் பட்டால், கலப்பினத்தின் பலன் கிடைக்கும். சேலத்தில் உள்ள சிறு உழவர்கள், உழவுத் தொழிலாளர்கள் நிறுவனம் தெரிந்தெடுக்கப்பட்ட கன்றுகளின் வளர்ப்புக்கு உதவித் தொகை அளிக்கிறது.

இன்றுள்ள நிலையில் உழவர்கள் பசுக்களுக்குத் தீவனம் அளிக்கும் முறையில் முன்னேற்றம் ஏற்பட்டாலன்றி தற்போதைய இனப் பெருக்க வசதிகளினால் உரிய பலன் கிட்டாது. தீவனப் பயிர்களைப் பயிரிடுவதில் பயிர் சுழற்சி முறையைப் பயன்படுத்துவதற்கும், வசதி வாய்ப்புகள் உள்ள இடங்களில் தீவனப் பயிர்கள் மட்டுமே பயிரிடவும் உழவர்களுக்கு ஊக்கமளிக்கப்படுகிறது. உழவர்களுக்கு வழங்கப்படுவதற்காக கால்நடைப் பண்ணைகளில் தீவனப் பயிர் விதைகள் அதிகமாகக் கிடைக்கச் செய்வதன் மூலமும், 1973–74-ஆம் ஆண்டில் விசேஷ தீவன உற்பத்திப் பிரிவுகளை நிறுவுவதன் மூலமும் இதில் போதிய நாட்டம் செலுத்தப்படும்.

**மையக் கிராமத் திட்டம் :—**

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னால் மையக் கிராமத்திட்டத்தின் மூலம் மும்முரக் கால்நடை வளர்ப்புத் திட்டம் ஒரு வரையறை செய்யப் பட்ட பகுதிகளில் அமுல் செய்யப்பட்டு வந்தது. அத்திட்டத்தின் வாயிலாக, கால்நடைகள் மிகவும் கவனத்தோடு கண்காணிக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப் பட்ட பகுதிகளில் உள்ள கால்நடைகள் ஒவ்வொன்றையும் அடையாளந் தெரிந்து பதிவு செய்து, அவற்றிற்கான தீவன வசதிகளையும் மிக நல்ல முறையில் செய்து கொடுக்கப்பட்டது. 1969-ம் ஆண்டு இறுதியில் இது போன்ற மையக் கிராமங்கள் 75-ம் அவற்றைச் சார்ந்த 650 துணை நிலையங்களும் இருந்தன.

1—1—1970 முதல், இந்தத் துணை நிலையங்கள் அனைத்தும் கால்நடை வளர்ப்புத்துணை நிலையங்களாக மாற்றப்பட்டு ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்பட்டன. இதுவரையில் மையக் கிராம வட்டாரங்களில் இருந்து வந்த கால்நடை மருந்தகங்களில் செயற்கை முறையில் கருத்தரிப்பு செய்யப்படுகின்றது. இந்தக் கால்நடை மருந்தகங்களும் கால்நடை மருத்துவமனைகளும் கால்நடை மருந்தகம்—மையக் கிராம கால்நடை [illegible] என மாற்றியமைக்கப்படுகின்றன. 1971–72-ல் திறக்கப்பட்ட நான்கு நிலையங்களையும் சேர்த்து, தற்பொழுது மொத்தம் 138 நிலையங்கள் செயல்படுகின்றன. 1971–72-ஆம் ஆண்டில் செய்து முடிக்கப்பட்ட பணி[illegible] களின் விவரங்களை VI-ஆம் இணைப்பில் காணலாம்.

தற்போதைய ஏற்பாட்டில், பணி முனைப்பாகச் செயல்படும் தன்மை குறைந்துவிடுவதால், 1973–74-ஆம் ஆண்டில் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த பழனி, திண்டுக்கல் பகுதிகளில் இத்திட்டத்தை முதலில் இருந்த நிலைமைக்கே கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது.

**கால்நடை வளர்ச்சி மும்முரத் திட்டம்:**

சில ஆண்டுகளுக்கு முன்னால் கால்நடை வளர்ச்சி மும்முரத் திட்டம் என்ற ஒருங்கிணைந்த திட்டம் அமுலாக்கப்பட்டது. அத்திட்டத்தின் வாயிலாக பால் உற்பத்திப் பெருக்கத்திற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 5-வது ஆண்டின் இறுதியில், தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் பால் உற்பத்தியை 33 சதவீதம் உயர்த்தும் நோக்கத்தோடு இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

கோயம்புத்தூர், மதுரை, சைதாப்பேட்டை ஆகிய இடங்களில் இத் திட்டம் மூன்று பிரிவுகளாக பணியாற்றி வந்தன. இத்திட்டம் 1—1—1970 முதல் மையக் கிராமத் திட்டத்தில் உள்ளது போல் கால்நடை மருந்தகம் கால்நடை மருத்துவமனை—மையக்கிராம நிலையம் என்ற பெயரில் தொடர்ந்து பணியாற்றி வருகின்றன என்றாலும் இந்தக் கால்நடை மருந்த கங்கள் கால்நடை மருத்துவமனைகள் இனப் பெருக்கப் பணிகளை மட்டுமே கவனிக்க இயலுகின்றது. 1973–74-ஆம் ஆண்டில், கால்நடை வளர்ச்சி மும்முரத்திட்டத்தை மீண்டும் கொண்டு வருவதுபற்றி பரி சீலிக்கப்பட்டு வருகிறது.

**ஆநிரைக் காப்பகம் :**

கோவில்கள், மடங்கள், அனாதை இல்லங்கள் போன்ற அற நிறுவனங் கள், ஒரு குறிப்பிட்ட அளவுக்கு கால்நடை வளர்ப்பில் ஈடுபடுமாறு ஊக்கமளிக்கப்படுகின்றன. இதனால், பால் உற்பத்தி பெருக்குவதற்கும் அண்டையிலுள்ள பகுதிகளில் கால்நடை வளர்ப்புக்கு வழிகோலவும் உதவி வந்தன.

1971–72-ல் 20 ஆநிரைக் காப்பகங்கள் இருந்தன. தற்பொழுது, 19 ஆநிரைக் காப்பகங்கள் இத்துறையின் மானியத்தை பெறுகின்றன. தமிழ்நாட்டில் உள்ள ஆநிரைக் காப்பகங்கள் அங்கு வளர்க்கப்பட்டுவரும் கால்நடைகளின் எண்ணிக்கை, 1971–72-ல் உற்பத்தி செய்யப்பட்ட பாலின் அளவு ஆகியவை அடங்கிய பட்டியலை இணைப்பு VII-ல் காணலாம்.

**பால்வற்றிப் பசுக்கள் பண்ணை, அலமாதி :**

1958-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இப்பண்ணை, சென்னையிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும், பால் வற்றிய கால்நடைகள் வைத்துள்ளவர் களுக்குப் பயனுள்ள வகையில் செயல்பட்டு வந்தது.

இந்திய அரசு, மத்திய எருமை இனப் பெருக்கப் பண்ணை ஒன்றை ஏற்படுத்த விரும்புவதால், இப்பண்ணையை தனது பொறுப்பின்கீழ்க் கொண்டுவர விரும்பியது. இந்த மத்தியப் பண்ணையினால் இம்மாநிலத் திற்கு நல்ல பயன்கிட்டுமாகையால், இதை இந்திய அரசுக்கு மாற்றுவதென



முடிவு செய்யப்பட்டுள்ளது. எனினும், பால்வற்றிய பசுக்கள் பண்ணையை அமைப்பதற்குப் பொருத்தமான மற்றோர் இடத்தைத் தெரிந்தெடுப்பது பற்றிப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

**செம்மறியாடு வளர்ச்சி :**

இம்மாநிலத்தில் 66·21 லட்சம் செம்மறியாடுகளும் 37·71 லட்சம் வெள்ளாடுகளும் உள்ள காரணத்தால், கூடுதலான செம்மறியாட்டு வளர்ப்புப் பண்ணைகள் ஏற்படுத்த வழிவகை செய்யப்பட்டு வருகிறது.

கால்நடை வளர்ப்புத்துறையின்கீழ், சின்னசேலத்தில் ஒன்றும், சாத்தூரில் ஒன்றுமாக இரண்டு செம்மறியாட்டுப் பண்ணைகள் உள்ளன. ஹோசூர், செட்டிநாடு, புதுக்கோட்டை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணைகளிலும் செம்மறியாடு வளர்ப்புப் பிரிவுகள் உள்ளன. இந்த இரண்டு செம்மறியாட்டுப் பண்ணைகளும் ஏனைய பண்ணைகளுடன் இணைந்த செம்மறியாட்டுப் பிரிவுகளும், கிராமப்புறங் களில் செம்மறியாடுகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக சில தரமான செம்மறியாட்டுக் கிடாக்களை வழங்கியுள்ளன. நவீன முறைகளில் செம் மறியாடு வளர்ப்பதற்கான மாதிரி நிலையங்களாகவும் இவை விளங்கு கின்றன.

தற்பொழுது, செம்மறியாட்டு இன வளர்ச்சி— கம்பள நெசவுக் கூட்டுறவுச் சங்கங்கள் எட்டும், செம்மறியாட்டு இனவளர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்கள் 42-ம் ஆக மொத்தம் 50 சங்கங்கள் உள்ளன.

39 செம்மறியாடு வளர்ப்போர் கூட்டுறவு சங்கங்களுக்கு வேளாண்மை மறுநிதி உதவிக் கழகம் உதவி அளிப்பதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு, வேளாண்மை மறுநிதி உதவிக் கழகத்தின் ஏற்பளிப்பு பெறப்பட்டுள்ளது. இத்திட்டம் விரைவில் நிறைவேற்றப்படவிருக்கிறது.

இத்திட்டத்துக்காகும் மொத்தச் செலவு ரூ. 50·95 லட்சம் ஆகும். இத்தொகையில் ரூ. 38·21 லட்சம் தொகை வேளாண்மை மறுநிதியுதவிக் கழகம் வழங்கும் கடனாகும். எஞ்சிய தொகை மாநில நிதியிலிருந்து அளிக்கப்படும். இந்த 39 செம்மறியாட்டு இனவளர்ச்சி சங்கங்களின் பட்டியல் இணைப்பு VIII-இல் கொடுக்கப்பட்டுள்ளது.

செம்மறியாடுகளின் எண்ணிக்கை சுமார் 66·21 லட்சமாக இருந்த போதிலும் குடற்புழு நோய் காரணமாக உற்பத்தித் திறன் குறை வாகவுள்ளது. இந்நோய் காரணமாக மொத்தத்தில் 60 சதவீத ஆடுகளை இழக்க நேரிடுகின்றது. இந்நோயைத் தடுக்கும் நோக்கத்துடன் 1972–73-ஆம் ஆண்டில் ரூ. 69,000 செலவில் எல்லா ஆடுகளுக்கும் பெருமளவில் மருந்து கொடுக்கும் இயக்கம் மேற்கொள்ளப்பட்டது.

## பன்றி வளர்ப்பு:

நம் மாநிலத்தில் சுமார் 5 லட்சம் நாட்டுப் பன்றிகள் உள்ளன. கலப்பின வளர்ச்சி மூலம் உள்ளூர் பன்றிகளைத் தரம் உயர்த்த யார்க்ஷயர் வெள்ளைப் பன்றிகள் பெருமளவில் வளர்க்கப்பட்டு, இன விருத்திக்காக வழங்கப்படுகின்றன. ஹோசூர், புதுக்கோட்டை, ஒரத்தநாடு, செட்டிநாடு, திருநெல்வேலி ஆகிய இடங்களிலுள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணைகளிலும், சின்ன சேலத்திலுள்ள ஆட்டுப் பண்ணையிலும், அலமாதியிலுள்ள பால் வற்றிய பசுப் பண்ணையிலும் பன்றி இன வளர்ச்சிப் பிரிவுகள் உள்ளன. இவற்றினின்றும் 1971–72-ல் இனவளர்ச்சிக்காக 796 அயலின யார்க்ஷயர் பன்றிகள் விற்கப்பட்டன. பன்றியிறைச்சி மிகுந்த சத்துள்ள உணவாவதுடன், குறைந்த விலையில் கிடைக்கிறது. பன்றியிறைச்சிக்குக் கழகங்கள் ஏற்படுத்தியதின் மூலம் பன்றியிறைச்சியை உட்கொள்ளும் பழக்கம் பரவி வருகிறது. இம்மாநிலத்தில் மொத்தம் 54 பன்றியிறைச்சிக் கழகங்கள் உள்ளன.

## கோழி இன வளர்ச்சி:

கோழி இன வளர்ச்சி மூலம் நாட்டின் சத்துள்ள உணவு உற்பத்தியை மிகவும் விரைவிலும், எளிதாகவும் பெருக்க முடியும். அதே சமயத்தில் நம் உணவில் கூடுதலான சத்தும் கிடைக்கும். சரியான தொழில் நுட்ப முறைகளுடனும், தொழிலுக்குத் தேவையான முதலீட்டு ஏற்பாடுகளுடனும் நவீன அறிவியல் முறைகளில் கோழி வளர்ப்புப் பண்ணைகளை நடத்தினால் இத்தொழில் வருமானம் தரத்தக்க தொழிலாக இருக்கும்.

தற்போது தருமபுரி மாவட்டத்தில் ஹோசூரிலும், செங்கற்பட்டு மாவட்டத்தில் காட்டுப்பாக்கத்திலும், மதுரை மாவட்டத்தில் கப்பலூரிலும் ஆக மூன்று பெரிய அளவிலான, கோழிக் குஞ்சு பொரிக்கும் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றிலும் திங்கள் ஒன்றுக்கு 20,000 கோழிக் குஞ்சுகளை உற்பத்தி செய்யவேண்டும் என்பது இலக்கு. கால்நடை வளர்ப்புத் துறையின் நிர்வாகத்தின்கீழ் மாநிலத்தின் பல்வேறு இடங்களில் 38 கோழி இன வளர்ச்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. கடந்த மூன்றாண்டுகளில் மூன்று குஞ்சு பொரிக்கும் நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்ட கோழிக் குஞ்சுகளின் எண்ணிக்கை, 38 கோழி இன வளர்ச்சி நிலையங்களின் உற்பத்தி செய்யப்பட்ட முட்டைகளின் எண்ணிக்கை ஆகியவை இணைப்பு IX இல் கொடுக்கப்பட்டுள்ளன.

முக்கியமான சத்துக்கள் அனைத்தும் அடங்கியுள்ள "சமன் இரை" கிடைப்பதுதான் கோழி இனவளர்ச்சிக்கு மிக முக்கிய அடிப்படைத் தேவையாகும். சென்னை, அரசூர் ஆகியவிடங்களிலுள்ள "கோழி இரை கலப்புப் பிரிவுகள்". உடனடியாக பயன்படுத்தக் கூடியதாக கோழி இரைப் கலவையை உற்பத்தி செய்கிறது; கோழி வளர்ப்போருக்கும், அரசு கோழி வளர்ப்புப் பிரிவுகளுக்கும் இந்தக் கோழி இரைக் கலவை வழங்கப்படுகிறது. 1971–72 ஆம் ஆண்டில் 1,519 டன் கோழி இரை உற்பத்தி



செய்யப்பட்டு 1,516 டன் இரை கோழி வளர்ப்போருக்கு விற்பனை செய்யப்பட்டது. 1972–73 இல் 31–12–1972 வரை 1,255 டன் உற்பத்தி செய்யப்பட்டு 1,249 டன் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இலவசமாக மக்காச் சோளம் வழங்குவதன் மூலம் உலக உணவு வழங்கு இயக்கம் இந்த இரண்டு கோழி இரை கலப்புப் பிரிவுகளுக்கு உதவி செய்து வருகின்றது. கோழியின வளர்ச்சி மும்முரத் திட்டத்தின்கீழ் விருதுநகரில் ஏற்படுத்தப்பட்ட கூட்டுறவு சங்கம் சமன் இரையை உற்பத்தி செய்து கோழி வளர்ப்போருக்கு வழங்குகிறது. இந்தக் கூட்டுறவு சங்கம், கோழி இரைக் கலப்புப் பிரிவு ஆகியவற்றை மேம்படுத்த எண்ணியுள்ளது. வேளாண்மை மறுநிதி உதவிக் கழகத்திடமிருந்து நிதியுதவி பெறுவதற்கான செயற் குறிப்புகள் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளன. தென் ஆர்க்காடு, மதுரை மாவட்டங்களில் உள்ள சிறு உழவர்கள் வளர்ச்சி நிறுவனங்கள் முறையே சின்ன சேலத்திலுள்ள செம்மறி ஆட்டுப் பண்ணையிலும் கப்பலூரிலுள்ள குஞ்சு பொரிக்கும் நிலையத்திலும் கோழி இரை கலப்புப் பிரிவுகளை ஏற்படுத்த நிதி உதவி அளித்துள்ளன; சேஷன்சாவடியில் கோழி இரை கலப்புப் பிரிவு ஒன்று ஏற்படுத்த சேலம், சிறு உழவர்கள்–வேளாண்மை தொழிலாளர்கள் வளர்ச்சி நிறுவனம் நிதியுதவி வழங்கியுள்ளது. உலக உணவு வழங்கு இயக்கத்தினரோடு செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் படி உலக உணவு வழங்கு இயக்கத்தின் மக்காச் சோளம் விற்பனை மூலம் கிடைக்கும் நிகர தொகை கோழியின வளர்ச்சிக்காக பயன்படுத்தப்படும். எனவே, கிராம அளவு கோழிக் குஞ்சு நிலையம்–கோழியின இரைக் கிடங்கு ஒன்றை படப்பையில் கட்டுவதற்காக அரசு ஏற்கெனவே ஒப்பளிப்பு வழங்கியுள்ளது; மேலும் இரையை எடுத்துச் செல்வதற்கும் வீடு வீடாக சென்று அவற்றை வழங்குவதற்கும், விளம்பரம், வளர்ச்சிப் பிரிவுகள் ஆகியவற்றிற்குப் பயன்படுத்த டெம்போ வண்டி ஒன்று, இயல் ஊர்திகள் இரண்டு வாங்கவும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இவற்றிற்காகும் செலவு ரூ. 2.43 லட்சமாகும்.

1973–74 ஒரத்தநாட்டிலுள்ள, மாவட்டக் கால்நடைப் பண்ணையில் மற்றொரு பெரிய அளவிலான கோழிக் குஞ்சு பொறிக்கும் நிலையம் ஒன்று ஏற்படுத்தப்படும். ஒரு நாள் வயதுடைய குஞ்சுகளை மக்கள் அதிகமாக விரும்பிக் கேட்பதால் அத்தேவையைப்பூர்த்தி செய்ய ரூ. 3 லட்சம் செலவில் இந்நிலையம் ஏற்படுத்தப்படும்.

கோழிப் பண்ணையை அமைப்பதில் கோழிப் பண்ணை தொடங்குவோருக்கு ஊக்கம் அளிப்பதற்காக கோழிக் குஞ்சுகளுக்கு அவை கோழியாக வளரும் வரை முறையாக அம்மை குத்துதல், அவற்றின் உடலிலிருந்து உண்ணிகளையும், பூச்சிகளையும் நீக்குதல் ஆகிய வசதிகள் செய்து தரப்படும். இதனால் கோழிக் குஞ்சுகள் நோயின்றி ஆரோக்கியமாக இருக்கவும், வளர்ச்சியடைந்த ஆரோக்கியமான கோழிகள் உழவர்களுக்குக்கிடைக்கவும் கோழிக் குஞ்சுகள் நோய்வாய்ப்பட்டு அதிக அளவில் இறந்து போகும் தொல்லைகள் இருக்காமல் செய்யவும் இம்மாநிலத்தில் கோழிக் குஞ்சு வளர்ப்புப் பிரிவுகளை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு முதல் படியாக நான்காவது திட்டத்தில் 1973–74 ஆம் ஆண்டில் ரூ. 2 லட்சம் செலவில் செங்கற்பட்டு கோழியின வளர்ச்சி நிலையத்தில்

கால்நடை சொந்தக்காரரின் இல்லத்திலேயே கிடைக்கின்றது. சென்னையில், சென்னை கால்நடை வளர்ப்புத்துறை உதவி இயக்குநர் பொறுப்பின் கீழ் இயலூர்தி கால்நடை மருத்துவப் பிரிவு ஒன்று செயல்படுகின்றது.

### வெக்கை நோய் (Rinderpest) ஒழிப்புத் திட்டம்.

வெக்கை நோய் எளிதில் பரவக்கூடிய கொடிய நோயாகும். எனவே, இந்திய அரசிடமிருந்து முழு உதவி பெறும், எல்லைக் கண்காணிப்பு—சோதனைச் சாவடித் திட்டம் ஒன்று தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டது. மாநில எல்லைகளில் நோய் கண்காணிப்பு அல்லது தடுப்பு மண்டலம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு, எல்லைகளில் வரும் கால்நடைகள் அனைத்திற்கும் தடுப்பூசிகள் போடப்படுவதுடன், வெளி மாநிலங்களிலிருந்து வரும் கால் நடைகளில் கொள்ளை நோயால் பாதிக்கப் பெற்றவை எவையெனக் கண்டு பிடித்து, அவை நம் மாநிலத்திற்குள் வராமல் தடுக்கப்பட்டு வருகிறது. இம்மாநிலத்திற்குள் வருகிற கால்நடைகளுக்குச் சோதனைச் சாவடிகளில் தடுப்பூசிகள் போடப்படுகின்றன. மூன்று சோதனைச் சாவடிகள், 2 கண்காணிப்புப் பிரிவுகள் ஆகியவற்றை அமைப்பதற்கு 1970–71-ம் ஆண்டில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. மேலும் 2 சோதனைச் சாவடிகள், 2 கண்கானிப்புப் பிரிவுகள் ஆகியவற்றை அமைப்பதற்கு 1971–72-ம் ஆண்டில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. மாநில அரசால் நிறுவப்பட்டவை உட்பட, தற்போது மொத்தம் 8 சோதனைச் சாவடிகளும், 4 கண்காணிப்புப் பிரிவுகளும் கீழ்க்கண்ட இடங்களில் உள்ளன :—

### சோதனைச் சாவடிகள்.

1. திம்பம் .. .. .. கோயம்புத்தூர் மாவட்டம்.
2. தெப்பக்காடு .. .. .. நீலகிரி மாவட்டம்.
3. ஓசூர் .. .. .. .. தருமபுரி மாவட்டம்.
4. திருவலம் .. .. .. வட ஆர்க்காடு மாவட்டம்.
5. திருவொற்றியூர் .. .. செங்கற்பட்டு மாவட்டம்.
6. எளாவூர் .. .. .. செங்கற்பட்டு மாவட்டம்.
7. பாகளூர் .. .. .. தருமபுரி மாவட்டம்.
8. சோளிங்கபுரம் .. .. வட ஆர்க்காடு மாவட்டம்.

### கண்காணிப்பு மண்டலங்கள்.

1. கோபிச் செட்டிப்பாளையம் .. கோயம்புத்தூர் மாவட்டம்.
2. திருத்தணி .. .. .. செங்கற்பட்டு மாவட்டம்.
3. போடி நாயக்கனூர் .. .. மதுரை மாவட்டம்.
4. செங்கோட்டை .. .. திருநெல்வேலி மாவட்டம்.





### கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம், இராணிப்பேட்டை.

இந் நிலையம் 11–12–1972 வரை, கால்நடை மருத்துவக் கல்வி—ஆராய்ச்சி இயக்குநரின் பொறுப்பில் இருந்தது. வெக்கை நோய்த் தடுப்பு மருந்தின் உன்ம வளர்ச்சியைப் பொறுத்தவரை, அது களப் பணிகளின் பொறுப்பாயுள்ள இயக்குநர் அலுவலகத்தின் பொறுப்பிலும், மேற்பார்வையிலும்தான் இருக்க வேண்டும் என்ற திட்டக் குழுவின் செயல் பிரிவினர் தெரிவித்த கருத்தின் அடிப்படையில், நிலையத்தின் பொறுப்பு 12–12–1972 முதல் கால்நடை வளர்ப்புத் துறையின் கட்டுப்பாட்டிற்கு மாற்றப்பட அரசு ஆணையிட்டது.

இந் நிலையம் 23 வகை உயிரியல் பொருட்கள், சீரங்கள், நோய்க்குறியினை அறிய உதவும் பொருட்கள். எதிர்தாக்குதலைக் காட்டும் பொருட்கள் ஆகியவற்றைத் தயாரிக்கின்றது. நோய்க் கட்டுப்பாடு திட்டத்திற்காகத் தமிழ் நாட்டின் தேவை முழுமையும் பூர்த்தி செய்கின்றது. இவ்வகையான மருந்துகளை ஏனைய மாநிலங்களுக்கு விற்பதன் மூலம் இந்நிலையம் ஆண்டொன்றுக்கு ரூ. 2 லட்சம் ஈட்டுகின்றது. இந் நிலையத்தால் தயாரிக்கப்பட்டு நமது மாநிலத்திற்கு இலவசமாகவும், ஏனைய மாநிலங்களுக்கு விலைக்கும் வழங்கப்பட்ட மருந்துகளின் மதிப்பு கீழே தரப்பட்டுள்ளது:—

| ஆண்டு. | தயாரிக்கப்பட்ட மருந்துகளின் மதிப்பு. | நமது மாநிலத்திற்கு இலவசமாக வழங்கப்பட்ட மருந்துகளின் மதிப்பு. | ஏனைய மாநிலங்களுக்கு விலைக்கு விற்கப்பட்ட மருந்துகளின் மதிப்பு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் லட்சங்களில்.) | | |
| 1969–70 .. .. .. | 7·79 | 6·79 | 1·37 |
| 1970–71 .. .. .. | 8·21 | 8·78 | 2·24 |
| 1971–72 .. .. .. | 12·20 | 9·57 | 1·87 |
| 1972–73 (31—12—1972 முடிய). | 9·53 | 18·81 | 0·75 |

சிறு நீரகங்களின் செல்களில் நோய் நுண் இருமிகளை வளரச் செய்யும் புதிய தொழில் நுட்ப முறையைப் பின்பற்றி வெக்கை நோய்த் தடுப்பு மருந்து தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள ஓரே நிறுவனம் இந்நிலையம் தான். தடுப்பு மருந்துகள் தயாரிப்பதைத் தவிர, மருந்துகளின் தரத்தை மேம்படுத்தல், புதிய நோய்கள், அவற்றிற்கான மூல காரணங்கள் ஆகியவற்றை கண்டறிதல் அவற்றைக் கட்டுப்படுத்தல் ஆகிய பணிகளையும் நிலையம் மேற்கொண்டுள்ளது.

திட்டத்தின்கீழ், இந் நிலையத்தின் 1973–74-க்கான பணித் திட்டம் பின்வரும் இனங்களை உள்ளடக்குகின்றது :—

| திட்டம். | செலவு. (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 1. மத்திய உன்ம வளர்ச்சி ஆய்வுக்கூடம் நிறுவுதல் .. | 1·00 |
| 2. கோழியின நோய்த்தடுப்பு மருந்து உற்பத்திப் பிரிவில் கூடுதலான வசதிகள் செய்தல். | 0·98 |
| 3. இந் நிலையத்தில் கலப்பு மந்தைப் பிரிவினை ( Unit of PPLO free flock ) வளர்ச்சி பெறச் செய்தல். | 1·32 |
| 4. நோய்குறி கண்டு பிடிக்கும் பொருட்களைத் தயாரித்தல். | 0·71 |
| 5. முட்டை அடிப்படையிலான ஒரு முறை மட்டும் பயன்படுத்தக் கூடிய தடுப்பு மருந்து. | 1·42 |
| 6. கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் கூடுதல் வசதிகள் செய்தல். | 0·75 |
| 7. நாய் நோய்த் ( Distemper ) தடுப்பு மருந்து தயாரித்தல். | 0·77 |
| மொத்தம் .. | 6·95 |

### இத்துறையின் ஏனைய இன்றியமையாத வளர்ச்சிகள்

1. காளைகளின் இன வழி ஆராய்ச்சி.

சிவப்புச் சிந்தியினக் காளைகளின் உற்பத்திக்கான ஒருங்கிணைக்கப்பட்ட கால்நடை இனப்பெருக்கத் திட்டத்தின்கீழ், சிவப்புச் சிந்தியினக் காளைகளின் இன ஆராய்ச்சித் திட்டத்திற்கு ரூ. 13·37 லட்சத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. 1972–73-லும் 1973–74-லும் ஒசூர், மாவட்டக் கால்நடைப் பண்ணையில் இதனைச் செயற்படுத்துவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முழுச் செலவும் நான்காவது திட்டத்தின் கீழ் மத்திய அரசால் ஏற்கப்படுகின்றது. சிவப்புச் சிந்தியினக் காளைகளை மதிப்பிடுவதற்கு இத்திட்டம் மத்திய அரசால் தொடங்கப்பட்டுள்ளது.



### திட்ட நிதி ஒதுக்கம் :

நான்காம் திட்டத்தின்கீழ் ஆன திட்டச் செலவு ஆண்டு வாரியாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| ஆண்டு. (1) | வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (2) | ஆன செலவு (3) |
|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்.) | |
| 1969–70 .. .. .. .. .. | 21·94 | 5·92 |
| 1970–71 .. .. .. .. .. | 8·62 | 11·89 |
| 1971–72 .. .. .. .. .. | 25·79 | 22·27 |
| 1972–73 .. .. .. .. .. | 28·45 | 34·61 (எதிர் பார்க்கப்படுகிறது.) |

திட்டத்தின்கீழ் பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்குப் பின்வரும் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன :—

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 1. கால்நடை வளர்ச்சி .. .. .. .. .. | 33·28 |
| 2. கோழியின வளர்ச்சி .. .. .. .. .. | 5·95 |
| 3. செம்மறியாட்டின வளர்ச்சி .. .. .. .. | .. |
| 4. பன்றி வளர்ப்பு .. .. .. .. .. | 0·22 |
| 5. கால்நடை மருத்துவ உதவி .. .. .. .. | 14·17 |
| 6. கால்நடை நோய்த்தடுப்பு நிலையம், ராணிப்பேட்டை .. | 13·45 |
| மொத்தம் .. .. | 67·07 |
| இந்திய அரசு முழு உதவி பெற்ற திட்டங்கள் .. | 7·88 |
| ஆக மொத்தம் .. .. | 74·95 |

# தமிழ் நாடு சட்டப் பேரவை

புதன்கிழமை, 1973 மார்ச் 28.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### இலவச கண் சிகிச்சை முகாம்கள்

*539 வினா.—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972 ஜூன் திங்களில், தமிழ்நாடு முழுவதும் இலவச கண் சிகிச்சை முகாம்கள் துவங்கப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) இதற்கான விவர அறிக்கை ஒன்று (*) அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

THIRU K. T. K. THANGAMANI: There is a short notice question.

MR. DEPUTY SPEAKER: The concerned Minister is not present.

*540 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்குப் விடையளிப்பாரா —

கண்ணொளி வழங்கும் திட்டத்தின் கீழ் டிசம்பர் 1972 முடிய பயனடைந்தோர் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: டிசம்பர் 1972 முடிய 1 42,269 பேர்கள் கண்ணொளி வழங்கும் திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளார்கள்.

திரு. கா. வேழவேந்தன்: துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கண்ணொளி வழங்கும் திட்டத்தின் மூலமாக இலட்சக்கணக்கான ஏழை எளிய மக்கள் பயன் பெற்று வருகிறார்கள். ஏற்கெனவே கண் சிகிச்சை முகாம்களில் அறுவை

* 273–276-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

சிகிச்சை பெற்றவர்களுக்குப் பெருவாரியானவர்களுக்கும் கண்ணாடிகள் வழங்கப்படுகின்றன. வெளியேயிருந்து அப்படிக் கண்ணாடி வாங்க முடியாமலிருக்கும் ஏழை எளியவர்களுக்கும் இந்த முகாம்களில் கண்ணாடிகள் கிடைப்பதற்கான வழிவகை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஏறத்தாழ ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மருத்துவ மனையில் கண் சிகிச்சை நிபுணர்கள் உள்ளனர். சில வட்ட மருத்துவ மனைகளில் கண் சிகிச்சை செய்வதற்கென தனியாக நிபுணர்கள் யாரும் இல்லை. அப்படி ஒரு வட்டத்திலே உள்ளவர்களுக்கு இந்த சிகிச்சைக்குப் பின்னர் ஏதாவது தனிப்பட்ட முறையில் கஷ்டம் ஏற்படுமானால், கண்ணைப் பொறுத்த வரையில், அவர்கள் மாவட்ட மருத்துவ மனைக்குச் சென்று அந்த சிகிச்சையைப் பெற வேண்டும். ஆனால், கூடுமானவரையில், இந்தக் கண் சிகிச்சை நடைபெற்று ஆறு ஏழு நாட்கள் தங்க வைத்திருந்து அனுப்பும் காரணத்தால் இந்தச் சிகிச்சையினால் எந்தக் குறையும் ஏற்படுவதில்லை. வேறு விதமான குறைகள் ஏற்படுமானால் அவைபற்றி கவனிப்பதற்கு என்ன செய்வது என்று ஆலோசிக்கலாம்.

திரு. அ. இராசமாணிக்கம்: இதுபோன்ற திட்டங்கள் வேறு எந்த மாநிலத்திலாவது நடைபெறுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: நம்முடைய மாநிலத்தில் நடைபெறுகிற முகாம்களைப்பற்றிதான் நான் பதில் சொல்ல முடியும். மற்ற மாநிலங்களில் வேறு எங்கும் இப்படி நடைபெறுவதாக நான் அறியவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்தக் கண்ணாடி எங்கிருந்தாவது நன்கொடையாக வருகிறதா? முன்பு 'ஐ பாங்கு'-க்குக் கண்ணாடி டொனேஷனாக வந்து கொண்டிருந்தது. அந்த முறை இப்பொழுது இருக்கிறதா? இருந்தால் எவ்வளவு என்று தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: சில இடங்களில் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்தவர்கள் அல்லது அரிமா சங்கத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய ஆர்வத்தால் கண்ணாடிகள் வாங்கித்தர முன்வருகிறார்கள். ஆனால், பெரும்பாலான இடங்களில் அரசாங்கமே இந்த சிகிச்சை முகாம்களை நடத்தும் காரணத்தால் அரசாங்கத்தின் சார்பிலேயே வரவழைக்கப்பட்டு வழங்கப்படுகின்றன.

DR. H. V. HANDE: While generally this is a welcome scheme, may I know whether the Government is aware of the fact because up-to-date facilities are not available in the free camps, it is better and safer to see that this cataract becomes ripe and then operated as it is done in the hospitals also, even though





there is a thery that is can be operated before it is ripe. Will the Government come forward with an assurance that no target is fixed and persons who are not eligible for the operation are not unnecessarily pressurised with this operation, so that the ultimate result will be successful for the public?

THE HON. THIRU K. ANBAZHAGAN: Sir, it seems the present camps are not visited by the Hon. Member DR. Hande. About 1,200 or 1,500 people come there for getting operated. But after checking about 60 to 70 per cent of them are refused to be operated and only about 25 or 30 per cent in certain camps and about 40 to 50 per cent of the people who come there after a preliminary check-up near their own native places in their own villages, are operated. People who are not having cataract in a riped condition are not at all operated.

திரு. சொ. காவேரிமணியம்: இந்தக் கண் சிகிச்சை முகாமில் பணிபுரிகின்ற அலுவலர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள்? இந்த முகாம்கள் மாவட்ட ரீதியாக ஒன்றியத்தின் மூலமாக நடத்தப்படுமா? இதனுடைய நன்மைகள் பேரூராட்சி வரைக்கும் நீடிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே இப்பொழுது நடைபெறுவதே ஒரு மிகப் பெரிய ஏற்பாடாகும். ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரும் அந்த மாவட்டத்தில் எந்த எந்தப் பகுதியில் இப்படி 400 பேர்கள், 500 பேர்களை ஒரு வாரம் தங்க வைப்பதற்கும் 1,800 முதல் 3,000 பேர்களுக்கு வேறு கண் சிகிச்சை வழங்குவதற்கும் வாய்ப்பு வசதி இருக்கிறதோ அதைப் பொறுத்து மாவட்ட ஆட்சித் தலைவர் தீர்மானித்து அந்த இடத்தில் உள்ள பேரூராட்சி மன்றத் தலைவர், ஒன்றியத் தலைவர் ஆகியோருடைய ஒத்துழைப்பையும் பெற்று இதனை நடத்துகிறார்கள். இப்போதே மாநிலம் முழுவதும் ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு செயல்படுகிறது. இரண்டு மண்டலங்களுக்கு சென்னை அரசாங்கக் கண் மருத்துவ மனையினுடைய கண்காணிப்பாளர் டாக்டர் அப்ரஹாம் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார். மூன்று மாவட்டங்களுக்கும் மதுரை மருத்துவக் கல்லூரியின் கண் மருத்துவப் பேராசிரியர் டாக்டர் வெங்கடசாமி அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஐந்து மண்டலங்களில் பரவலாக இந்தக் கடமை நடைபெற்று வருகிறது.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஆறு லட்சம் பேர் கண் பார்வை இழந்திருக்கும் இந்த நேரத்தில் அவர்களுக்குப் பார்வை அளிக்கும் இந்த நல்ல திட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றிக் கொச்

டிருக்கும்போது அதை ஏதோ கண்ணுடி வியாபாரிகளுக்கு உதவி செய்வதற்காக இந்த அரசாங்கம் இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறது என்று மக்கள் மத்தியில் தவறுன எண்ணத்தை உண்டாக்கக்கூடிய முறையில் பேசி வருகிறுர்களே அப்படிப்பட்டவர்கள்மீது நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** அவர்களேகூட இப்பொழுது அப்படிப் பேசுவதில்லை. அங்கத்தினர்கள்தான் அவர்கள் பேசுவதாகச் சொல்கிறுர்கள். பல இடங்களில் போய் கண் சிகிச்சை பெற்றவர்களைப் பார்த்துவிட்டு வந்த யாரும் அப்படிக் குறை சொல்வதாக நான் அறியவில்லை.

**திரு. க. உரோ. எட்மண்ட்:** தலைவர் அவர்களே, சில தனியார் நிறுவனங்கள் கூட அப்பேர்ப்பட்ட கண் சிகிச்சை முகாம்களை நடத்திக்கொண்டு வருகிறுர்கள். என்னுடைய தொகுதியில் உள்ள தாரங்கதாரா இரசாயனத் தொழிற்சாலையினர் திருச்செந்தூர் தலைமை மருத்துவ மனையில் இந்தக் கண் சிகிச்சை முகாமை நடத்தி வந்தார்கள். அப்பேர்ப்பட்டவர்களைப் பாராட்டுகின்ற வகையில் அரசாங்கம் ஏதாவது செய்கிறதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தனியார்கள் நடத்துகிற முகாம்களானுலும் அரசாங்க மருத்துவர்கள்தான் அதற்கும் ஒத்துழைக்க வேண்டியிருக்கிறது. இப்பொழுது அரசாங்கம் நடத்துகிற இந்த முகாம்களுக்கும் தனிப்பட்ட நிறுவனங்களும் நன்கொடை வழங்கியிருக்கின்றன. ஆகவே, நன்கொடை வழங்கியும், ஒத்துழைத்தும், பணியாற்றியும் அல்லது தங்கள் நேரத்தைச் செலவிட்டும் யார் யார் ஒத்துழைத்தாலும் அவர்களுக்கெல்லாம் அரசாங்கம் நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறது. கண்ணொளி பெற்றுத் திரும்புகிற மக்களும் அதைவிட மிகப் பெரிய அளவு நன்றி செலுத்துகிறுர்கள்.

**திரு. எம். தேவராசன்:** உதகையில் நடைபெற்ற கண் சிகிச்சை முகாமிற்கு டாக்டர் வெங்கடசாமி அவர்கள் வராததால் எதிர்பார்த்த அளவிற்கு அது வெற்றி பெறவில்லை. அமைச்சர் அவர்கள் கலந்துகொண்ட நிகழ்ச்சியில் கூட அதை எடுத்துக் கூறியிருக்கிறுர்கள். எனவே மீண்டும் டாக்டர் வெங்கடசாமி அவர்களை அங்கு அனுப்பி இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** அப்படி ஒரு தவறுன கருத்து வளருவது நல்லதல்ல. டாக்டர் வெங்கடசாமி அவர்கள் இப்படித் தொண்டு செய்கிற முறைக்கு வழிகாட்டி. ஆனுல் இந்த முறைகளில் அறுவை சிகிச்சை நடத்து





வதற்காகப் பயிற்சி பெற்றவர்கள் ஏறத்தாழ 15, 20 டாக்டர்கள் மிகச் சிறந்தவர்
களாக இருக்கிறுர்கள். ஆகவே யாருடைய திறமையும் குறைவு உடையதல்ல.
ஆனுல் டாக்டர் வெங்கடசாமி அவர்களின் பெயர் அறிமுகமாகியிருப்பதால்
அவர்கள் வரவில்லை என்ற எண்ணம் ஏற்பட்டிருக்கலாம். அந்தக் கருத்தை
மாற்ற நாம்தான் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

**திரு. கே. ஆர். கிருஷ்ணன்:** இப்படி கண்ணொளி வழங்கும் திட்டம் நிறை வேற்றப்படுவதைப் போல் காது கேளாதவர்களுக்கும் இப்படிப்பட்ட தொரு திட்டத்தை வழங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** காது கேட்காமல் இருப்பதால் சில
அனுகூலங்களும் இருக்கின்றன. சில வம்புகள் வராது. அப்படிக் காது கேட்க
வேண்டுமென்ருல் அதற்கான சில கருவிகள் இருக்கின்றன. அதையும் மீறி
நோய் ஏதாவது இருந்தால் இப்போது இ.என்.டி. நிபுணர்கள் உள்ள மருத்துவ
மனைகளில் சென்று தகுந்த சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம்.

**DR. H. V. HANDE:** Is the Government aware of the fact
that the Headquarters Hospitals are already conducting cataract
operations. The blindness is due to cataract. The cataract
operations can make the patient all right. Will the Government
be pleased to tell us whether the present arrangement is in addi-
tion to the facilities that are already available in the Headquarters
Hospitals. May I know whether the Government have follow-up
to know the percentage of failure and percentage of success in
operations?

**THE HON. THIRU K. ANBAZHAGAN:** First of all, the hon.
Member said that cataract does not make total blindness. I may
inform the member that cataract causes total blindness. Unless
the patients are operated, they have no other go. They cannot
get sight. They have no other go except operation. The poor
people are not able to go to big cities and towns and get treatment.
They have to stay there 10 to 12 days. The present arrangement
is to help the poor people in the remote villages to get the treat-
ment. Only after operation, they are getting sight with the
facility of glasses. The percentage of failure is about 1 or 0.5 per
cent. It is very rare. It may be due to some defect with the
gentleman who come for treatment. Follow-up is made in Taluk
Hospitals. We will look into it in future.

DR. H. V. HANDE : I have not said about total blindness I am talking about the permanent blindness. I want to know whether such cases are also treated ?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Even the total blindness is removed only because of the operation.

**திரு. கு. காமாட்சி :** கிராமங்களில் இருக்கிற சில பெரியவர்களும், தாய்மார் களும் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற இந்தக் கண் ஒளி இழப்பு பூர்வ ஜென்மத்தில் செய்த பாவம், ஆண்டவன் எழுதிய எழுத்து என்றெல்லாம் சொல்லி இந்த சிகிச்சை பெற வர மறுக்கிறார்கள். ஆகவே அந்த மூட நம்பிக்கையைப் போக்க அரசு ஏதாவது பிரசாரத்தை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அதற்குத்தான் 175 பேர்கள், முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் இங்கு இடம் பெற்றிருக்கிறார்கள். மற்றவர்களும் அதற்கு ஒத்துழைக்கலாம்.

**திரு. சி. ஆறுமுகம் :** இந்த கண் சிகிச்சை முகாம்களை நாம் பரவலாக நடத்திக் கொண்டிருந்தாலும் கூட தாலுக்கா தலைநகரங்களில் உள்ள மருத்துவ மனைகளில் கண் சிகிச்சைப் பிரிவுகளை அமைப்பதற்கு அரசுக்கு எண்ணமுண்டா? ஏதாவது குறிப்பு உண்டா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அரசாங்கத்திற்கு குறிப்பு உண்டு. ஆனால் அவற்றை எல்லாம் நிறைவேற்றுவதற்கு நிதி நிலை இடம் தந்து நிறைவேற்ற சில ஆண்டுகளாகும். தொடர்ந்து ஒவ்வொரு கட்டமாக வட்ட மருத்துவ மனைகளில் அவை பரப்பப்படும்.

**திரு. ஏ. எம். இராஜா :** நாட்டில் ஆறு இலட்சம் பேர்கள் பார்வை பழுதுபட்டவர்களாக இருக்கிறார்கள். இப்போது ஆண்டு ஒன்றுக்கு 50,000 பேர்களுக்குத்தான் கண் சிகிச்சை முகாம்கள் மூலம் கண் ஒளி வழங்கி வருகிறார்கள். ஆகவே இதை இன்னும் அதிகப்படுத்தி விரைவில் இந்த ஆறு லட்சம் பேர்களுக்கும் கண் ஒளி வழங்கும் முறையில் ஆண்டு ஒன்றுக்கு ஒரு லட்சம் பேர்களுக்காவது கண் ஒளி வழங்குவதற்கு நம் அரசு தனியாக நிதி ஒதுக்கி உதவி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இந்தக் கண் சிகிச்சை முகாம்களில் சிகிச்சைக்காக வந்தவர்களுடைய எண்ணிக்கை அதிகம். அறுவை சிகிச்சை பெறக் கூடிய அந்த நிலையில் இருந்து வாய்ப்பினை தேடிக் கொண்டவர்களுடைய



எண்ணிக்கை நான்கில் ஒருவர். அப்படி நான்கில் ஒருவருக்கு சிகிச்சை நடைபெறுமானால் மற்றவர்களுக்கு, அதைச் செய்ய முடியாதவர்கள் மேலும் இரண்டு திங்கள் அல்லது மூன்று திங்கள் கழித்து அந்த வட்டாரத்தில் முகாம் நடக்கும் போது அங்கு வருவார்களேயானால் அப்போது நூற்றுக்கு ஐம்பது பேர்களுக்கு அந்த சிகிச்சை செய்யக்கூடிய நிலைமை இருக்கும். அப்போது வாய்ப்பு கிடைக்கும். அறுவை சிகிச்சை தவிர வேறு பலவிதமான கண் நோய்கள் உடையவர்களும் அங்கு சிகிச்சை பெற்றுக்கொள்கிறார்கள். அவர்களை வெளி நோயாளிகளாக வைத்து சிகிச்சை வழங்க முடிகிறது. அதேபோல் க்ளாக்கோமா கண் வியாதி ஏற்பட்டவர்களுக்கும் சிகிச்சை வழங்கப்படுகிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இந்த மாதிரியான கண் சிகிச்சை காம்ப்கள் நாடு பூராவும் அமைக்க வேண்டுமென்றும், வெளிநாடுகளில் கூட அதிகமான ஆப்பரேஷன்ஸ செய்துள்ள காந்தி பக்தர் டாக்டர் மோடி அவர்கள் ஏதாவது ஒரு காம்ப்க்கு அழைக்கப்படுவார்களா ?. அவருடைய உதவியைப் பெறவும் ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** டாக்டர் மோடி அவர்களுடைய நல்ல நோக்கத்தையும் அவர்களுடைய இந்த ஆர்வத்தையும் நான் வரவேற்கிறேன். ஆனால் அவர்கள் நடத்துகிற இந்த அறுவைச் சிகிச்சை காம்ப்கள் அதிகமான அளவிற்கு பின்னரும் சிகிச்சை அளித்து கவனிக்கப்பட வேண்டிய நிலைக்கு ஆளாக்கிவிடுகிறது என்று மருத்துவத் துறை வல்லுனர்கள் தெரிவிக்கிறார்கள். அந்த முறையில் நாம் நடத்துகிற முகாம்கள்தான் பெரிய அளவிற்குப் பாதுகாப்பு உள்ளதாக ஏழைகளுக்கு இருக்கிறது.

**திரு. கா. வேழவேந்தன் :** இந்த நல்ல திட்டத்திற்காக இந்த மாதம் 2-ம் தேதி வரையில் ரூ. 44,77,240 வசூலாகியிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இதில் சென்ற ஆண்டு முதல் அமைச்சர் அவர்களின் பிறந்தநாளின்போது அவர்களுக்கு மாலை அணிவிக்கச் சென்றவர்கள் மாலைக்குப் பதிலாக நிதி கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆளும் கட்சி உறுப்பினர்கள் ஒரு மாதச் சம்பளத்தைக் கொடுக்க வேண்டுமென்று கொடுத்திருக்கிறார்கள். அப்படி எல்லாக் கட்சி உறுப்பினர்களும் ஒரு மாதச் சம்பளத்தைக் கொடுப்பதற்கு ஒரு திட்டத்தை அரசு வகுக்குமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** ஒத்துக்கொண்ட கட்சி உறுப்பினர்கள் கொடுக்காமல் இருந்தால் திரு. வேழவேந்தன் அவர்களுக்கும் அந்தப் பொறுப்பு இருப்பதால், அது முழுவதையும் வசூலித்துத் தரவேண்டுமென்று இப்போது கேட்டுக்கொள்கிறேன்.

[1973 மார்ச் 28

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** தலைவர் அவர்களே, கண் இழந்தவர்களுக்கு கண் ஒளி கொடுக்கிற ஒரு பொறுப்பை இந்த அரசாங்கம் ஏற்றுக் கொண்டு நடத்திவருகிற காரணத்தால், இந்த க்ளாக்கோமா வருகிறவர்கள் கண்களை இழக்க வேண்டிய ஒரு நிலை ஏற்படுகிறது. ஆகவே இந்தக் 'கார்னியல் க்ராப்டிங்' செய்ய அரசாங்க மருத்துவ மனைகளில் அரசு முன்வந்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** அது சிறந்த அனுபவமுள்ள மருத்துவர்கள் மட்டும் நடத்துகிற ஒன்றாக இருக்கிறது. எல்லாயிடங்களிலும் அதைப் பரவலாக நடத்த முடியவில்லை. ஆனால் சென்னை கண் மருத்துவ மனையில் அதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதாக நான் அறிகிறேன்.

**திரு. கே. ஏ. வகாப்:** சிறப்பாக நடத்தப்படுகிற இந்த கண் ஒளி வழங்குகிற திட்டத்தில், வட ஆற்காடு ஸி.எம்.ஸி. போன்ற வைத்திய விடுதிகளில் வெளி நாட்டு மருத்துவர்கள் வந்து பார்க்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் வாய்ப்பு அளித்து இங்கும் அப்படிச் செய்ய வாய்ப்பளிக்க வேண்டும். அதோடு இந்த அம்சத்திற்கு மத்திய அரசிடம் உதவி பெற்று, மக்களுக்குச் செய்யப்படும் சிறப்பான சேவை என்பதை வலியுறுத்தி அதற்கு உதவி பெற அரசு முயலுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** இப்போது நாம் தொடங்கயிருக்கிற இந்தத் திட்டத்தை மத்திய அரசைச் சேர்ந்த மருத்துவ வல்லுநர்கள் அல்லது அந்தத் துறையைச் சார்ந்த அதிகாரிகள் பார்த்துச் சென்றிருக்கிறார்கள். ஆனால் இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு உதவுவதற்கு முன்வர வேண்டும் என்று தமிழக அரசு கேட்டுக்கொள்ளலாம். இதுவரையில் கேட்காததற்குக் காரணம் இதைச் செம்மையாக நடத்தி இதுபற்றிய அனுபவத்தைப் பெற்றுக் கொண்டு தெரிவிக்க வேண்டும் என்பதாகும். ஸி.எம்.ஸி. மருத்துவ மனை போன்ற மருத்துவ மனையில் உள்ளவர்கள் அவர்கள் முன்வந்து நடத்துவார்களேயானால் அரசாங்கம் வரவேற்கும்.

**திரு. த. சோலையா:** தலைவரவர்களே, தமிழ்நாட்டில் பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு கண் சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்னும் அளிக்கப்பட வேண்டியவர்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள், அது எத்தனை ஆண்டுகளுக்குள் அந்த சிகிச்சை கொடுக்கப்பட்டு முடியும் என்று அரசு அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, இது முடிவு அடைகிற ஒரு காரியம் அல்ல. ஏற்கனவே உள்ள புள்ளி விவரப்படி 6 லட்சம் பேர் சிகிச்சை பெறவேண்டியவர்கள் இருந்தார்கள். இரண்டு ஆண்டுகளில் 2 லட்சம்



1973 மார்ச் 28]

பேருக்கு சிகிச்சை அளிக்க முடிந்தாலும், இந்த இடைக்காலத்தில் புதிதாக 50-55 வயதை அடைந்தவர்கள் கண் பார்வை மங்கி சிகிச்சை பெற வேண்டிய கட்டத்திற்கு வரக்கூடும். இதுவும் ஒரு தொடரும் வரலாறாகத்தான் இருக்கும்.

**திரு. கு. பெரியசாமி:** தலைவரவர்களே, ரக்த சேமிப்புத் திட்டம் இருப்பது போல், கண் சேமித்து கண்ணொளி வழங்கும் திட்டத்திற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** அப்படி ஒரு நோக்கம் உண்டு. எந்த அளவு செயல்படுகிறது என்னும் விவரம் இதை ஒட்டியது அல்ல. அதற்குத் தனியாகக் கேள்வி போட்டால் விவரம் அறிந்து தெரிவிக்கிறேன்.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, தமிழ் நாட்டு மக்கள் ஒவ்வொரு ஆண்டும் முதலமைச்சர் பிறந்த நாள் வருகின்றபோதும், வாழ்க்கையில் பின் தங்கியவர்களுக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் நிவாரணம் அளிக்கும் வகையில் நல்ல திட்டம் வரப் போகிறது என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். முதலமைச்சர் பிறந்த நாள் விழாவின் போது, பிச்சைக்காரர்கள் மறு வாழ்வுத் திட்டம், கண்ணொளி வழங்குத் திட்டம் ஆகியவற்றை உருவாக்கி செயல்படுத்தி வருகிறோம். இப்படிப்பட்ட நல்ல திட்டங்கள் அவர் பிறந்த நாள் விழாவின் போது அறிவிக்கப்பட்டிருப்பதால், நம்முடைய முதலமைச்சரின் பொன் விழா இப்போது வரப் போகிறது. இந்த நாட்டில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு, பின் தங்கிய மக்களுக்கு என்ன நல்ல செய்தியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்க இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, அவர் பிறந்த நாள் வருகிற போதுதான் அறிவிக்கப்பட வேண்டும். அந்தப் பிறந்த நாள் வருகிற போது அவர் சிந்திப்பார். பல பேர் அவருடைய பிறந்த நாளை முன்கூட்டியே நினைவு வைத்துக்கொண்டு, திட்டங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சித்த மருத்துவத்தை வளர்ச்சி செய்ய அவருடைய பிறந்த நாள் விழாவைப் பயன்படுத்த வேண்டுமென்று அவர்களைப் பலர் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவரவர்களே, இது வரையில் இந்த கண்ணொளி சிகிச்சைப் பெற்றுக்கொண்டவர்களில் எத்தனை பேர் 60 வயதிற்கு மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள். 40 வயதுக்குக் கீழே இருப்பவர்களும் அந்தச் சிகிச்சையைப் பெற்று இருக்கிறார்களா? அந்த 40 வயதுக்குக் கீழே இருப்பவர்களுக்கு அந்த நோய் வராமல் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? காரணம் என்ன என்று ஆராயப்பட்டு, அதைத் தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

[1973 மார்ச் 28

MR. DEPUTY SPEAKER : Almost a probe.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, இந்தக் கண் நோய் உடையவர்களில் 100-க்கு 60 பேர் 50 வயதிற்கு மேற்பட்டவர்கள். சில பேர் 40-45 வயதிலே இந்த நோய்க்கு உள்ளாகிருர்கள்.

*Government Hospital for Veeraganur*

* 541 Q.—THIRU M. MARIMUTHU : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether there is any proposal to open a Government Hospital at Veeraganur ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இல்லை.

காச நோயாளிகளுக்கு மில்லில் அரைக்கப்பட்ட அரிசி

* 542 வினு—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் காச நோய் மருத்துவ மனையில் நோயாளிகளுக்கு கைக் குத்தல் அரிசிக்குப் பதில், மில்லில் குத்தப்பட்ட அரிசி வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து அரசுக்குக் கோரிக்கை ஏதேனும் அண்மையில் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில் அதற்கு அனுமதி அளிக்கப்பட்டுவிட்டதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) ஆம்.

(இ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, இந்தக் காச நோயாளிகளுக்குக் கொடுக்கப்படும் கைக்குத்தல் அரிசி காடு முரடாக இருப்பதால் சாப்பிட முடியாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிருர்கள். இது நீண்ட காலமாக இருக்கிறது என்று அறிகிறேன். அதை உடனடியாக மாற்றியமைக்க அரசு உத்தேசிக்குமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, அவர்களுக்குக் கொடுக்கும் கைக்குத்தல் அரிசி மிகவும் தாக்குறைவாகவும், அல்லது வேறு விதமான மணம் வீசுவதாகவும், தரமாக இல்லை என்றும் சொன்னதாலும், அவர்களுக்கு மில்லில் அரைத்த அரிசி வழங்கலாம் என்று பரிசீலிக்கப்படுவதாக அறிகிறேன். ஆனால் பல்வேறு வகைகளில் கைக்குத்தல் அரிசி நல்லது என்றும், காச நோயாளிகளுக்கு மட்டுமல்ல, நம்மைப் போன்றவர்களும் சாப்பிடக்கூடிய வாய்ப்பு



1973 மார்ச் 28]

இருக்குமாஞல், அது உடல் நலத்திற்கு மிகவும் நல்லது என்றும் சொல்கிருர்கள். சர்தார் வேதரத்தினம் தோற்றுவித்த வேதாரண்யம் குருகுலப் பள்ளியில் அங்கேயுள்ள மாணவர்களுக்கு கைக்குத்தல் அரிசி உணவையே வழங்கி வருகிருர்கள். அந்த குருகுலத்தில் இருக்கிற மாணவர்கள் நல்ல திடகாத்திரம் உள்ளவர்களாக, மற்றவர்களை விட அதிக வலுவுள்ளவர்களாக இருப்பதாகத் தெரிவித்திருக்கிருர்கள். எனவே, அதனால் ஏற்பட்டுள்ள நற்பலனை அறிந்த பிறகு, அந்தக் கைக்குத்தல் அரிசியைப் பொதுவாகக் கைவிட்டு விடக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் ச. மு. பழனியப்பன் :** தலைவரவர்களே, கைக்குத்தல் அரிசியின் தவிட்டில் தான் பி வைட்டமின் இருப்பதாகச் சொல்கிருர்கள். மீண்டும் இந்தக் கருத்தை அந்த காச நோயாளிகளுக்கு எடுத்துச் சொல்லி, அவர்களைக் கைக் குத்தல் அரிசி சாப்பிட வேண்டுமென்று கூற அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** ஆனுல் அவர்களுக்குக் கிடைத்த அந்தக் கைக்குத்தல் அரிசி சரியாகப் புழுங்கப்படாத காரணத்தால் நாற்றம் வீசுவதாக இருக்கலாம். It emanates bad smell and it is also full of stones and clay என்று தெரிவித்து இருக்கிருர்கள். பொதுவாகவே, இந்தக் கைக்குத்தல் அரிசி பக்குவமாகப் புழுக்கி, அதற்குப் பிறகு தயாரித்தால் தான் அது நல்ல முறையில் இருக்கும். அது பற்றி கவனிக்கும் படி நான் கேட்டுக்கொள்வேன்.

*Duration of School and College Courses*

* S.N. Q. 5.—THIRUMATHI ALDA M. FOWLER : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to introduce the scheme of 10-year School course, 2-years Intermediate course and 3-year Degree course in the State;

(b) if so, the present stage of the proposal; and

(c) the probable academic year from which the scheme will be implemented ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ), (இ) & (உ) பள்ளிப் படிப்பு, கல்லூரிப் படிப்பு ஆகியவற்றின் தற்போதைய ஆண்டு வரம்பை மாற்றுவது தேவையா என்பது ஆய்விலுள்ளது. தேவை என்று முடிவு செய்யப் பட்டால், எந்த ஆண்டு முதல் மாற்றலாம் என்பது குறித்தும் முடிவு செய்யப் படும்.

THIRUMATHI ALDA M. FOWLER : I would request that an English translation of the answer be given to me later so that I would know what the answer is.

MR. DEPUTY SPEAKER : The answer is positive. It is under the consideration of Government.

THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN : It is under consideration of Government. After taking a decision it will be implemented. When it will be implemented will be decided later on. All the Vice-Chancellors of Southern Universities are consulted. They have not yet given their opinions. After receiving their opinions, a decision will be taken.

THIRUMATHI ALDA M. FOWLER : The tenth standard level, should be stepped up and brought to the level of the eleventh standards, so that the tenth standard child does not leave the standards, so that the tenth standard child does not leave the school as an immature person. So the standards, curricula, etc. have also to be stepped up and these things need phasing out and time for preparation. So will that also be given due consideration?

THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN : Mr. Deputy Speaker, Sir, that point also will be taken into consideration. The present pattern is 11 plus 1 plus three years totalling 15 years. The " to be changed pattern " is ten plus 2 plus three totalling 15 years. When a decision is taken, the view expressed by the hon. Members will also be taken into consideration.

DR. H. V. HANDE : May I know whether Government is aware that in Kerala and Mysore, the boys are able to get B.A. degree in ten plus 1 plus 3 years. Ten years is for S.S.L.C. 1 year for P.U.C. and 3 years for degree. In other words boys in Tamil Nadu lose one year because of the present educational pattern here. If so, will the Hon. Minister give some sort of assurance...............

THIRU N. VEERASAMI : In Kerala, P.U.C. is 2 years. Many students in my Institute are studying for that.

THIRU R. PONNAPPA NADAR : It is for the Hon. Minister to answer and not for the hon. Member.



DR. H. V. HANDE : In Andhra also, there is the higher secondary which is equal to PUC and from the higher secondary in the school, they go to degree classes. They take 11 years for going to degree classes whereas in Tamil Nadu we take 12 years for going to degree classes. Thus we lose one year and this affects our boys competing for medical college admissions in Delhi, etc. So will the Hon. Minister give a clarification as to whether all the States in India, whether all the Education Ministers will have a conference on the pattern of education to be given to our boys and girls in the State, so that a uniform policy would be adopted and so that this sort of frequent tinkering with educational pattern affecting the future of the students will not be there. May I also know whether a uniform pattern for all the States will be arrived at? Will the Hon. the Minister take steps in that direction?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஆந்திரப்
பிரதேசம், கர்நாடகம், கேரளம் ஆகிய 3 மாநிலங்களில் 15 ஆண்டுகள் இருக்
கின்றன. 10--2--3, 10 ஆண்டு பள்ளிப் படிப்பு, 2 ஆண்டு இன்டர்மீடியட்,
3 ஆண்டு பட்டப்படிப்பு என்று 15 ஆண்டுகள் இப்போது இருக்கின்றன. தமிழ்
நாடு, பாண்டிச்சேரி, குஜராத் ஆகிய இடங்களில் 11 ஆண்டு பள்ளிப்படிப்பு,
1 ஆண்டு புகுமுக வகுப்பு, 3 ஆண்டு பட்டப் படிப்பு என்று 15 ஆண்டுகள்
இருக்கின்றன. பீகார் 11--2--2 என்று 15 ஆண்டுகள் வைத்திருக்கிறார்கள்.
ஓரிசாவில் 12--3 என்று 15 ஆண்டுகள் வைத்திருக்கிறார்கள். அருணாசலப்
பிரதேசம் 13-2 என்று 15 ஆண்டுகள் வைத்திருக்கிறார்கள். 14 ஆண்டுகள்
உள்ளவை, 11 ஆண்டுகாலம் பள்ளிபடிப்பு, 3 ஆண்டுகாலம் பட்டப்படிப்பு
என்று பஞ்சாப், அரியானா, மத்திய பிரதேசம், மேற்கு வங்காளம், ராஜஸ்தான்,
மேகாலயம், இமாசலப் பிரதேசம், மணிப்பூர், சண்டிகார், திரிபுரா, கோவா,
டெல்லி, அந்தமான் நிக்கோபார் தீவுகள், லட்சத் தீவுகள் ஆகிய இடங்களில்
உள்ளது.

அண்மையில் நடைபெற்ற கல்வியமைச்சர்கள் மாநாட்டில் பட்டப்படிப்பு
வரை 15 ஆண்டுகள் இருக்க வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது.
எல்லா மாநிலங்களிலும் அதன்படி பட்டப்படிப்பு கொண்டுவர வேண்டு
மென்றும், பள்ளிப்படிப்பு 10 ஆண்டுகள் இருக்க வேண்டுமென்றும், அதற்குப்
பிறகு 2 ஆண்டுகாலம் உயர்நிலைப்பள்ளியில் வைத்தாலும் வைக்கலாம் என்றும்
சொல்லி இருக்கிறார்கள். அதற்குப் பிறகு 3 ஆண்டுகாலம் பட்டப்படிப்பு
என்று சொல்லியிருக்கிறார்கள். இதை ஓரளவுக்கு எல்லோரும் ஒப்புக்கொண்
டிருக்கிறார்கள். 15 ஆண்டுகாலம் படிக்க வேண்டுமென்பதை எல்லாக் கல்வி

[1973 மார்ச் 28

யமைச்சர்களும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். 14 ஆண்டுகாலப் படிப்பு என்று இருக்கும் மாநிலங்களிலும் 15 ஆண்டுகள் ஆக்க வேண்டுமென்ற அந்த மாநாட்டில் கேட்டுக்கொள்ளப்பட்டது. அந்த மாநில கல்வியமைச்சர்களும் அதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

மு.ப.
9-30 **திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, இது சம்பந்தமாக துணை வேந்தர்கள் என்ன கருத்தைத் தெரிவித்தார்கள்? அதிலே அரசாங்கம் என்ன கருத்தைக் கொண்டிருக்கிறது? மேற்கொண்டு துணைவேந்தர்களிடம் கருத்து கேட்கப்பட்டிருக்கிறதா? அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, தமிழகத்தி லுள்ள மூன்று பல்கலைக் கழக துணைவேந்தர்களிடமும் இதுபற்றிய கருத்துக் களைக் கேட்டிருக்கிறோம். அவர்களுடைய பதில் எதிர்பார்க்கப்படுகிறது; வந்த வுடன் தக்க முடிவு மேற்கொள்ளப்படும்.

**திரு. கு. திருப்பதி :** பி.யு.சி. ஒரே வருடப் படிப்பாக இருப்பதால் மாண வர்கள் எல்லாப் பாடங்களையும் அந்த ஒரு வருடத்திற்குள் படிப்பது கஷ்டமாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, பட்டப்படிப்புக்கு 11--2--2 என்று ஆண்டுகளை நிர்ணயிக்க அரசு முடிவு செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இவ்வளவு நேரம் நடைபெற்ற விவாதமே அதைப்பற்றித்தான். 10--2--3 என்று நிர்ணயிக்கலாம் என்று ஒரு திட்டம் தரப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். உடனடியாக முடிவு செய்துவிட முடியாது. அதற்காகப் பாடத் திட்டங்களை மாற்றியமைக்க வேண்டும்; புத்தகங்களைத் தயாரிக்க வேண்டும். அதற்கு ஓரிரு ஆண்டுகள் ஆகும். அதைப்பற்றி அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

**திரு. என். கே. பழனிசாமி :** சார், மத்திய கல்வி போர்டு பட்டப்படிப்புக்கு 11--2--2 என்று மொத்தம் 15 ஆண்டு இருக்க வேண்டுமென்று சிபாரிசு செய் திருக்கிறதா? அதுபற்றிய விபாம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** முதலில் சொல்லப்பட்டது 10--2--3 ஆண்டுகளாக இருக்கவேண்டுமென்று. சில மாநிலங்களில் அந்த முறை நடைமுறையில் இருக்கிறது. எஸ்.எஸ்.எல்.சி. வரையிலான படிப்புக்கு 10 ஆண்டு படிப்பை 11 ஆண்டாக்குவதிலும், 11 ஆண்டு படிப்பை 10 ஆண்டாக் குவதிலும் சில விசேஷ ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். இப்போது நாம் எஸ்.எஸ்.எல்.சி.-க்கு 11 ஆண்டு என்று வைத்திருக்கிறோம். இதை 10 ஆண்டு ஆக்கவேண்டுமென்றால் இப்போது எஸ்.எஸ.எல்.சி. படித்தவர்களை எந்தெந்த



1973 மார்ச் 28]

வேலைகளுக்குத் தேர்ந்தெடுக்கிறோமோ அந்தத் தகுதிகளை எல்லாம் 10 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. படிப்பவர்கள் பெறச் செய்யவேண்டும். இதிலே சில சிரமங்கள் இருக்கின்றன. அதைப்போலவே மற்ற மாநிலங்களுக்கும் சிரமங்கள் இருக்கும். ஆகவேதான் இவையெல்லாம் பரிசீலிக்கப்பட்டு ஒரு முடிவு எடுக்கப்பட இருக் கிறது.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவரவர்களே, இந்த 10 ஆண்டு பள்ளிப் படிப்பு, 2 ஆண்டு இன்டர்மீடியேட் படிப்பு, 3 ஆண்டு டிகிரி கோர்ஸ் படிப்பு என்ற முறையிலே நம்முடைய தமிழ்நாடு பல ஆண்டுகளாக மாணவர்களைப் பயிற்றுவித்து வந்திருக்கிறது. இன்றைக்குத் துணைவேந்தர்களாக இருக்கிற வர்கள் அந்த முறையில் தேர்ந்து வந்தவர்கள்தான். ஆகையால் இந்த முறை யில் அவர்களுக்கு ஆட்சேபணை இருக்காது. இருந்தாலும் அரசு அதை வற் புறுத்தி பழைய முறையைக் கொண்டுவர ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** துணைவேந்தர்கள் மறுக்க மாட்டார்கள் என்றுதான் அரசு கருதுகிறது. இருப்பினும் இந்த முறையை நடைமுறைப்படுத்துகிறவர்கள் துணைவேந்தர்கள்தான். ஆகவே, அவர்களுடைய கருத்துக்களைக் கேட்டறிவது பொருத்தமாக இருக்கும் என்று கருதி, அவர்களைக் கேட்டிருக்கிறோம். அவர்களின் கருத்துக்களை அறிந்த பிறகு தக்க ஏற்பாடு செய்யப்படும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், டில்லி, பஞ்சாப், மேற்கு வங்காளம் ஆகிய இடங்களில் பட்டப்படிப்பு 14 ஆண்டுகளாக இருக்கிறது. அவர்கள் எந்த வருஷத்திலிருந்து 15 ஆண்டு படிப்பாக மாற்றுவார்கள்? இல்லையென்றால் நம்முடைய அரசாங்கமும் 14 ஆண்டாக மாற்றுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நாம் 15 ஆண்டாக இருப்பதை 14 ஆண்டாக மாற்றுவதற்கும் அதைப்போல அவர்கள் 14 ஆண்டாக இருப் பதை 15 ஆண்டாக மாற்றுவதற்கும் ஓரிரு ஆண்டுகள் ஆகும். இதைப்பற்றி அண்மையில் நடைபெற்ற கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் வலியுறுத்தப் பட்டது. எல்லா மாநிலங்களிலும் பட்டப்படிப்புக்கு 15 ஆண்டுகள் இருக்க வேண்டும் என்பதை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அதற்குத் தக்கபடி மாற்றி யமைத்து, அந்தந்த மாநிலங்களில் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்.

**திரு. எஸ். ஆறுமுகம் :** தலைவரவர்களே, இப்போது 15 ஆண்டுகள் படித்து பி.ஏ. பட்டம் பெற்றிருக்கிறார்கள். பட்டப்படிப்புக்கு 14 ஆண்டுகள் என்று ஆக்கினால் 15 ஆண்டுகள் படித்தவர்களுக்கு ஏதாவது சிறப்புப் பட்டம் வழங்கப் படுமா?

[1973 மார்ச் 28

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இந்த கேள்வியில் பொருளில்லை. ஓராண்டு கூடுதலாகப் படித்ததினால் சிறப்புப் பட்டம் ஒன்றும் கொடுக்க முடியாது. அதற்கு மேற்பட்ட இரண்டாண்டு படிப்பாகிய எம்.ஏ., எம்.எஸ்ஸி., பட்டங்களை அவர்கள் பெறலாம்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, இந்த மாதிரியான மாற்றங்களை அடிக்கடி செய்தால் பல சங்கடங்கள் ஏற்படும். ஆகவே, இந்த மாற்றங்களை மேற்கொள்வதற்கு முன்பு துணைவேந்தர்களுடனும், கல்வித் துறை வல்லுநர்களுடனும் கலந்து பேசி முடிவு செய்யப்படும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, 12 உறுப்பினர்களைக் கொண்ட 'டாஸ்க்போர்ஸ்' குழுவினர் பட்டப்படிப்பை 10--2--3 ஆண்டுகளாக வைக்கலாம் என்று பரிந்துரைத்தார்கள். அந்தக் குழுவிலே இருப்பவர்கள் எல்லாம் சிறந்த கல்வி நிபுணர்கள்தான். டாக்டர் மால்கம் ஆதிசேசையா, டாக்டர் சண்முகசுந்தரம், டாக்டர் மத்தூர், டாக்டர் ராமச்சந்திரன் போன்ற கல்வித் துறை வல்லுநர்கள் எல்லாம் அதில் இடம் பெற்றிருக்கிறார்கள். அவர்கள்தான் சிபாரிசு செய்திருக்கிறார்கள். அதைப்பற்றி தான் துணைவேந்தர்களிடம் கருத்து கேட்டிருக்கிறோம். துணைவேந்தர்களின் கருத்து பெறப்பட்டதும் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. சொ. காவேரிமணியம்:** பட்டப்படிப்புக்கு முன்பு 11--2--2 என்று இருந்தது. அது பின்னால் 11-1--3 என்று மாற்றப்பட்டிருக்கிறது. இவ்வாறு மாற்றுவதற்கு கல்வித் துறை வல்லுநர்கள் என்ன சிபாரிசைத் தெரிவித்தார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அப்போது சென்னை பல்கலைக் கழகத் துணைவேந்தராக இருந்த டாக்டர் ஏ. எல். முதலியார் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்கள். 1956-57-ம் ஆண்டில் இந்தமுறை புகுத்தப்பட்டது. பட்டப் படிப்புக்கு மாணவர்களைத் தகுதி படைத்தவர்களாக ஆக்குவதற்கு ஓராண்டு 'ப்ரீ யூனிவர்சிட்டி கோர்ஸ்' படிப்பை வைக்கவேண்டுமென்று சிபாரிசு செய்தார்கள். ஆனால் அந்த எண்ணம் எதிர்பார்த்த பலனைத் தரவில்லை என்று பின்னர் தெரிய வந்துள்ளது. அதனால்தான் இப்போது மீண்டும் மாற்றியமைக்க வேண்டுமென்று யோசனை செய்துகொண்டிருக்கிறோம்.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, இப்போது டிகிரி கோர்ஸை முடிப்பதற்கு 15 ஆண்டுகள் ஆகின்றன. 5-வது வயதில் பள்ளியில் மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். ஆகவே, டிகிரி கோர்ஸை முடிப்பதற்கு 20 வயது ஆகிவிடுகிறது.



1973 மார்ச் 28]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வாழ்க்கைச் சரித்திரத்தை எல்லாம் ஏன் சொல்ல வேண்டும்? கேள்வியை நேரடியாகவே கேளுங்கள்.

**திரு. நா. வீராசாமி:** இப்போது 20 வயதில்தான் பட்டப்படிப்பை முடிக்க முடிகிறது. அதை மாற்றி, 18 வயதில் பட்டப்படிப்பை முடிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** நம்முடைய நாட்டிலே 5 வயதில் குழந்தைகளை பள்ளிகளில் சேர்க்கிறோம். மேலை நாடுகளில் 6 வயதில் தான் குழந்தைகளைப் பள்ளிகளில் சேர்க்கிறார்கள். அங்கும் 15 ஆண்டு பட்டப் படிப்புக்கு வகை செய்திருக்கிறார்கள். ஆகவே, இந்த வயதுதான் குழந்தைகள் கல்வி பெற தகுதியான பருவம் என்று வல்லுநர்கள் முடிவு செய்திருக்கிறார்கள்.

### *Services of Director of Legal Studies lent to Pondicherry*

* 536 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Director of Legal Studies was deputed to Pondicherry in connection with the starting of a Law College during May–June 1972; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம்.

(இ) 1972-73-ல் பாண்டிச்சேரியில் சட்டக் கல்லூரி ஆரம்பிப்பதற்குரிய சாத்தியக்கூறு பற்றி ஆராய்வதற்குரிய ஆணையாளராக, சென்னை பல்கலைக் கழகத்தின் சார்பில் பணிபுரிவதற்கு, சென்னை சட்டக் கல்வி இயக்குநருக்கு 1972 ஜூன் மாதத்தில் அரசு அனுமதி அளித்தது.

**திரு. என். டென்னிஸ்:** தலைவரவர்களே, மதுரை சர்வகலாசாலையில் சட்டக் கல்லூரி இல்லாத குறை இருந்து கொண்டிருக்கிறது. சென்னை சட்டக் கல்லூரியில் இட நெருக்கடி இருக்கிறது. ஆகவே, தென் மாவட்டங்களிலுள்ள மாணவர்கள் சட்டக் கல்வி பெறும் வகையில் மதுரையில் ஒரு சட்டக் கல்லூரியை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, சென்னை சட்டக் கல்லூரியில் இட நெருக்கடி இருப்பதால் மதுரையில் ஒரு சட்டக் கல்லூரியை ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை பல்லாண்டு காலமாக இருந்து வருகிறது. சட்டக் கல்லூரி அமைக்க வேண்டுமென்றால் அதற்குப் போதுமான இடவசதியும், கட்டட வசதியும் இருக்க வேண்டும். மதுரையில் சட்டக் கல்லூரி ஏற்படுத்துவதற்கு இந்த வசதிகள் இல்லாததால் இந்தக் கோரிக்கை தள்ளிப் போடப்பட்டிருக்கிறது.

### *Widening of Ramakrishna Mutt Road*

*537 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the work relating to the widening of the Ramakrishna Mutt Road and the bridge in Mylapore, Madras has been taken up; and

(*b*) if so, when the work will be completed?

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:* இராமகிருஷ்ண மட சாலையை விரிவுபடுத்தும் வேலை மட்டும் வேகமாக நடைபெறுகிறது. விரைவில் அவ்வேலை முடிவுறும்.

இராமகிருஷ்ண மட சாலைப் பாலத்தை விரிவுபடுத்தும் வேலைக்கான தொழில் நுணுக்க முறைப்பற்றிப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. எவ்வளவு விரைவில் அவ்வேலையை ஆரம்பிக்க முடியுமோ அவ்வளவு விரைவில் அவ்வேலை ஆரம்பிக்கப்படும்.

### *Bridge across Adyar near Kottur*

*538 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have sanctioned any scheme for the construction of a road bridge across Adyar river near Kottur; and

(*b*) if so, the details thereof?

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:* (அ) ஆம்.

(இ) ரூ. 26.00 இலட்ச மதிப்பீட்டுச் செலவுக்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதிக அகலமுள்ளதாக அமையுமாறு, திட்டம், நெடுஞ்சாலை ஊரகப்பணித் தலைமைப் பொறியாளரால், மாற்றப்படுகிறது.





### *Assignment of lands in Payanur village*

*543 *Q.*—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that pattas have been assigned to certain gazetted Police Officers working in Madras City in Payanur village, Chingleput district as landless individuals in October 1971; and

(*b*) if so, the details thereof and the basis on which such allotments were made?

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:* (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

DR. H. V. HANDE: May I know whether any gazetted Police Officer has applied for a plot and got it which was meant for landless people, either in 1970–71 or in any part of the last three years? If so, whether any action has been taken against that particular official? May I know the name of the official also?

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:* தலைவர் அவர்களே, இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக 1967 இல் இதுபோல போலீஸ்காரருக்கும், போலீஸ் அதிகாரிகளுக்கும் நிலம் கொடுக்கப்பட்டதாக அரசுக்குத் தகவல் வந்தது. நிலம் பெறுவதற்கு அவர்கள் தகுதி இல்லை என்று சொல்லி கொடுத்த நிலத்தை அரசாங்கம் ரத்து செய்துவிட்டது.

### *Drought affected area of Dharapuram*

*544 *Q.*—THIRU A. R. MARIMUTHU: Will the Hon. the Minister for Revenue be pleased to state the improvements affected under the Special Rural Works Programme in the Chronic Drought areas included in the "Dharapuram Tract" viz. Sankari taluk, Tiruchengode taluk, Dharapuram taluk, Palani taluk and Udumalpet taluk?

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:* எப்போதுமே வறட்சியால் பாதிக்கப்படுகிற பகுதிகளுக்கான மத்திய அரசு பொறுப்பேற்கும் சிறப்பு, கிராமப் பணிகள் திட்டம், சங்ககிரி, திருச்செங்கோடு, தாராபுரம், பழனி, உடுமலைப்பேட்டை ஆகிய வட்டங்களைக் கொண்ட தாராபுரம் பகுதியில் செயற்படுத்தப் படவில்லை.

*திரு. ஏ. ஆர். மாரிமுத்து:* இம்மாதிரி நிரந்தரமான வறட்சி மிக்க பல பகுதிகளுக்கும் இந்தத் திட்டங்களை நிறைவேற்ற அரசு யோசிக்குமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இது மத்திய அரசின் திட்டம். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அவர்கள் 2 மாவட்டங்களை எடுத்துக்கொண்டு இரண்டு, இரண்டு கோடி ரூபாய் ஆக 4 கோடி ரூபாய செலவிடக்கூடிய திட்டங்களை அனுமதித்தார்கள். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு மாவட்டம் எடுத்துக் கொண்டால் போதும் என்பதாக அதற்கு 4 கோடிக்கு திட்டம் வகுக்க அனுமதி அளித்துள்ளார்கள்.

**திரு. இ. எஸ். தியாகராசன்:** திருத்தணி வட்டம் ஆந்திராவில் இருந்து வந்த காரணத்திஞல் மிகவும் பிற்பட்டதாக இருப்பதால் அதனை இதோடு சேர்க்க முடியுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பிற்பட்ட பகுதி என்பதற்காக அல்ல, நிரந்தரமாக எப்போதும் வறட்சியால் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ள பகுதி என்கிற அளவில்தான் புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டு, அந்தப் பகுதி மக்களுக்கு ஊக்கம் அளிக்கிற வகையில் அமைக்கப்படுகிற திட்டங்கள் இவை.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** திருப்பூர் பகுதியோடு சேர்ந்தாற்போல உள்ள அரவக்குறிச்சி ஒன்றியம், பரமத்தி ஒன்றியம் வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதால் இந்த வறட்சிப் பகுதிகள் எல்லாவற்றையும் சேர்த்து ஒரு சிறப்புத் திட்டத்தை அமைத்து, மத்திய அரசு பணம் கொடுக்காவிட்டாலும் மாநில அரசே அதனை நிறைவேற்ற முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இது மத்திய அரசு பணம் கொடுக்க ஒப்புக் கொண்டிருக்கிற திட்டம், ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தர்மபுரி மாவட்டத்தை மட்டும் எடுத்துக் கொள்ள ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். மற்ற பகுதிகளுக்கு இதனை விஸ்தரிக்க முடியாது. ஆயினும் நமது மாநிலத்தில் ஒவ்வொரு ஆண்டும் எந்தப் பகுதி வறட்சியால் பாதிக்கப்பட்டு விடுகிறதோ அங்கங்கே நமது மாநில அரசு தனித்தனித் திட்டங்களைப்போட்டு செயல்படுத்துகிறது.

**புலவர் சி. பழனிச்சாமி:** வறட்சியான பழனிப் பகுதிகளில் என்ன என்ன வறட்சி நிவாரணத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டிருக்கின்றன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அது இந்தக் கேள்வியில் அடங்காது. இதில் இராமநாதபுரம், தர்மபுரி மாவட்டங்கள் தான் அடங்கியிருக்கின்றன.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, under Rural Works Programme, roads are laid in rural areas. But they are not metalled properly then and there. As such, when the metalling work is taken up, there will be no roads at all. May I know from the Hon. Minister whether the road forming and metalling will be done simultaneously?





THE HON. THIRU P.U. SHANMUGAM: There is a High Power Committee to look after all these things. I hope they will look after them.

THIRU B. VENKATASWAMY: According to the statement given by the Hon. Minister for Revenue, it is stated that Dharmapuri is a chronically drought-affected area. May I know whether this Government will ask the Central Government to declare Dharmapuri District permanently as a drought affected area?

THE HON. THIRU P. U. SHANMUGAM: Dharmapuri is more or less a permanent drought affected area. Dharmapuri people are lucky enough to note that it has been included in the Fourth Plan. Ramanathapuram district is deleted. They are unlucky.

**திரு. த. சேலியா:** ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தர்மபுரி மாவட்டத்தை மட்டும் எடுத்துக் கொள்ள மத்திய அரசு சம்மதித்திருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மிகவும் வறட்சியாக இருக்கக் கூடிய இராமநாதபுரம் மாவட்டத்தையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நமது அரசு வற்புறுத்துமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இராமநாதபுரம், தர்மபுரி ஆகிய இரண்டு மாவட்டங்களையும் எடுத்துக் கொண் டிருந்தார்கள். ஐந்தாவது திட்டத்தில்தான் இராமநாதபுரத்தை நீக்கி விட்டார்கள். இராமநாதபுரத்தையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று தான் அரசு சார்பில் சொன்னோம்.

### *Industrially backward areas*

*545 Q.—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the areas in Tamil Nadu which are declared as backward areas; and

(b) the amount of financial assistance given by the Central Government for the backward areas during the period from 1967–1971?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** விவர அறிக்கை@ ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

@ 277–296-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

THIRU B. VENKATASWAMY : Sir, I understand that the Government of India have chosen 5 taluks in Dharmapuri District, namely, Dharmapuri, Hosur, Krishnagiri, Uthangarai and Harur taluks and given 10 per cent subsidy. Regarding power tariff, may I know from the Hon. Minister why these taluks have not been included in the power concession? It has been stated on page 9 of the statement that for new industries to be set up in any of the 40 backward taluks indicated therein will be given a further reduction of 15 per cent power tariff, in addition to the concessions specified in paragraph 1 of the statement. The taluks of Hosur, Dhenkanikota Uthangarai and Harur taluks have not been included in the statement. May I know from the Hon. Minister . . .

DEPUTY SPEAKER : Why such a long question?

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister for Industries whether these taluks will be included under backward areas and given concessional power tariff?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதுபற்றி தனியாகப் பிரச்சினை எழுப்பப் பட்டால் பரிசீலிக்கலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : டென் பர்சென்ட் சப்சிடி ஸ்கீமின் கீழ் உசிலம்பட்டி, திருமங்கலத்திற்கு எவ்வளவு தரப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த இந்தப் பகுதி இந்த ஆண்டுதான் சேர்க்கப்பட்டிருக்கிறது. இனிமேல்தான் அதைப் பற்றிய பிரச்சினை எழும்.

திரு. ஏ. எம். இராஜா : பிற்பட்ட மாவட்டம் என்றால் அந்த மாவட்டத்தில் உள்ள ஒருசில பகுதிகளுக்குத்தான் இந்த டென்பர்சென்ட் சப்சிடி ஸ்கீம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இது அந்த மாவட்டங்கள் பூராவுக்கும் விஸ்தரிக்கப்படுமா? மின்சாரக் கட்டணச் சலுகையும் அளிக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பின் தங்கிய மாவட்டங்கள் அனைத்துக்கும் அந்தச் சலுகை உண்டு. பின் தங்கிய மாவட்டம் என்பதாக ஒன்றுக்கே இருக்கக் கூடாது என்று மாவட்டங்களைச் சுற்றிய பல பிற்பட்ட பகுதிகளை டிராக்ஸ்—எடுத்து அது இராமநாதபுரம், மதுரை, திருச்சி ஆகியவற்றுக்கு வந்தது.



திரு. கா. வேழவேந்தன் : துணைத் தலைவரவர்களே, இந்த பின்தங்கிய மாவட்டங்கள் என்று எடுக்கப்பட்டிருக்கிற வட்டங்களில் செங்கற்பட்டு மாவட்டத்திலே ஒரு வட்டம் கூட எடுக்கப்படவில்லை. திருத்தணி வட்டம் இருக்கிறது, பொன்னேரி வட்டம் இருக்கிறது, மதுராந்தகம் போன்ற வட்டங்கள் பின்தங்கியதாக இருக்கின்றன. சென்னையைச் சுற்றியுள்ள இவ் வட்டங்களில் தொழிற்சாலைகள் இல்லாத காரணத்தினால் இந்த வட்டங்கள் எதிர்காலத்தில் எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சில மாவட்டங்கள் முழுமையாக பின் தங்கிய பகுதிகளாக இருக்கின்றன. பெரும்பாலும் எல்லா மாவட்டங்களிலும் சிலசிலப் பகுதிகள் பின்தங்கிய பகுதிகளாக இருக்கின்றன. நாம் எடுத்த முடிவின்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் பின் தங்கிய பகுதி என்று இல்லாமல், 'கன்டிகுவஸ்' ஆக உள்ள பின்தங்கிய வட்டங்களை மத்திய கோர்வையாக, அரசினர் கேட்டிருக்கிறார்கள். ஆகவேதான், இதை எடுத்து இருக்கிறோம். செங்கற்பட்டில் சில பகுதிகள் பின்தங்கியிருந்தாலும், பெரும் பகுதிகளில் ஏராளமான தொழிற்சாலைகள் இருக்கிற காரணத்தினாலே, மத்திய அரசினுடைய குறிப்புகள், 'பிரின்சிபில்ஸ' ஏற்றுக்கொள்ளப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படுகின்றன, எந்தப் பகுதியும் ஒதுக்கப்படவில்லை.

### *Bristle Fibre Unit at Tenkasi*

*546 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state the steps taken to market the products of the Bristle Fibre Unit, Tenkasi?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தென்காசியிலுள்ள நுண்கயிறு நாறு தயாரிக்கும் நிறுவனத்தில் தயாராகும் கலவையான கயிறுநாறு தற்சமயம் அரசு மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ நிறுவனங்களுக்குத் தேவையான மெத்தை விரிப்புகள் தயார் செய்ய விற்கப்படுகிறது. மெத்தை விரிப்புகள், ரப்பர் நாறு மற்றும் கயிற்றுப் பொருட்கள் தயார் செய்யும் நிறுவனங்களும் தொழில் கூட்டுறவு சங்கங்களும் இதை வாங்குகின்றன.

திரு. என். டென்னிஸ் : இதன் உற்பத்திக்காகப் பல சலுகைகள் கொடுப்பதாகத் தெரிகிறது. ஆனால், அதன் விற்பனை அதிகரிப்பதற்காக அரசு தீவிர நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. ஆகவே, அதற்காக, தீவிர நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா?

[1973 மார்ச் 28

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** விற்பனையைப் பொறுத்த அளவுக்கு 1969-70-லே 15.89 டன்னிலிருந்து, 1971-72-லே 124 டன்னாக உயர்ந்திருக்கிறது. மேலும் மேலும் எங்கெங்கே தேவையோ அங்கேயெல்லாம் அதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது.

### மதுராந்தகம் பகுதியில் கயிறு தொழிற்சாலை

* 547 **வினா—திரு. சி. ஆறுமுகம் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் தொகுதியில் கடலோரப் பகுதியில் தென்னை அதிக அளவில் பயிரிடப்படுவதால் அப்பகுதியைச் சேர்ந்த முகையூர் போன்ற இடங்களில் கயிறு தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையிலிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.

**திரு. சி. ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, தமிழகத்தில் இரண்டாவது கோளாவாக விளங்குகின்ற எங்களுடைய செங்கற்பட்டு மாவட்டத்திலிருக்கும் மதுராந்தகம் பகுதி தென்னை, பனை மிகுதியாக இருக்கிற பகுதியாகும். அங்கு நார் தொழில் போன்ற தொழில்களை ஆரம்பிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இதைக் கருத்திலே கொண்டுதான் சென்ற ஆண்டு ரூ. 10 லட்சம் அப்படித் தொழில்கள் தொடங்க வருகிறவர்களுக்கு தொழில் துறையிலிருந்து கடன் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அங்கத்தினர் அதைப் பயன்படுத்திக்கொள்ள முயற்சி எடுக்கலாம்.

**திரு. சி. ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, அங்கே முதலீடு செய்வதற்கு வசதி வாய்ப்புகள் இல்லாமல் இருப்பதால், அந்தப் பகுதிக் கடலோரப் பகுதியாக இருப்பதால், அரசே முன்வந்து அதை நடத்துவதற்குத் திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அந்த முதலீடுக்காகக் கடன் தருவதாக நான் சொன்னேன். கூட்டுறவுத் துறையிலே முயற்சித்தாலும் உதவி பெறலாம்.

**திரு. சி. ஆறுமுகம் :** அந்தத் தொழிலை ஆரம்பிப்பதற்கு எந்தவிதமான மூலதனமில்லாத பகுதியாகவும், மிகமிகப் பின்தங்கிய பகுதியாகவும் இருப்பதால், அரசே அங்கு தொழிலை நடத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



1973 மார்ச் 28]

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பங்குத் தொகை மிகக் குறைந்த அளவு சேர்த்துக் கொடுத்தாலே, கூட்டுறவுத் துறையிலே ஆரம்பித்து விடலாம்.

**திரு. நா. காசிராமன் :** மதுராந்தகம் பகுதியிலே மிகுந்த நார் கிடைக்கிறது என்று சொன்னார்கள். அதற்கு முன் ஒரு கேள்விக்குப் பதில் அளித்தபொழுது, ரப்பர் கலந்த மெத்தைகளைத் தயாரித்து இப்பொழுது அரசுடைமையாக்கப் பட்டுள்ள பஸ்களில் உபயோகப்படுத்தப்படுகிறது என்று சொன்னார்கள். அதற்குப் பதிலாக, அந்த நார் மெத்தைகளை உபயோகிக்கலாம். அதனால், பல லட்சக்கணக்கான ரூபாய்கள் மிச்சப்படும் என்பதை மனதில் கொண்டு, இந்த மாதிரி தொழிற்சாலையை மதுராந்தகம் பகுதியில் துவக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஏற்கனவே இருக்கிற தொழிற்சாலையிலே இப்படிப்பட்ட பொருள்கள் இப்பொழுது உற்பத்தி செய்து தரப்படுகிறது. இன்னும் அதிகப் பொருள் தேவை யென்றால் பரிசீலனை செய்யலாம்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இந்த காயர் இண்டஸ்ட்ரி அமைப்பதற்கு அவர்கள் பங்கு கொடுத்தால், அதற்குக் கடன் கொடுக்க அரசு முன் வரும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்தப் பங்கைக் கொடுப்பதற்குக் கூட வசதியில்லாதவர்கள் அந்தப் பகுதியிலே இருக்கிற காரணத்தினால், அரசு அங்கு தானே தொழிற்சாலை அமைக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கூட்டுறவுத் தொழில் சங்கங்களிலே மிகக் குறைந்த பங்குத் தொகை போட்டால் போதும். அதை வைத்துக் கொண்டு, அரசாங்கம் ஷேர் காப்பிட்டல் போட்டு தொழிலை எடுத்து நடத்துவது எளிதாக இருக்கும். தென்னந்தோப்பு வைத்திருக்கின்றவர்கள் எல்லாம் ஒன்றாகக் கூடி, நார் கொடுத்து உற்பத்தி செய்ய முன் வரவில்லை யென்பதால், தொழில் கூட்டுறவுமுறை தோற்று விடுகிறது. மூலக் கேள்வியே மதுராந்தகம் பகுதியில் கடலோரப் பகுதியில் தென்னை அதிக அளவில் பயிரிடப்படுவதால், அங்கு தொழிற்சாலை அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறதா என்பது தான். நான் குறிப்பிட்ட அந்தச் சங்கடங்கள் இருக்கிற காரணத்தினால், விவசாயிகள் ஒன்றாகச் சேர்ந்து கூட்டுறவுத் துறையிலே நல்லமுறையிலே நடத்த முடியும்.

## Cauvery Water Dispute

*548 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there were any discussions between officials of the State Government and the Fact Finding Team of the Central Government on the sharing of Cauvery Waters during September 1972; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) & (இ) இந்தக் குழு, பல பகுதிகளில் பாசன நடைமுறை நிலைமைகளைப்பற்றி முழுமையாக அறிந்து கொள்வதற்காக ஒரு சில இடங்களுக்குச் சென்று, பார்வையிட்ட பிறகு, மாநில அரசு அதிகாரிகளுடன் 13—9—1972-ல் விவாதங்கள் நடத்தியது. இந்த விவாதங்களில் எழுப்பப்பட்ட முக்கியமான கருத்துக்கள், கடைகோடிப்பகுதிகளில் உள்ள பொறி மதகுகளில் நீர் ஏன் உபரியாக வருகிறது என்பது, சாகுபடி செய்யப்படும் பயிர் வகைகளை மாற்றுதல் முதலியனவாகும்.

**திரு. என். டென்னிஸ் :** தலைவர் அவர்களே, காவிரியின் மூன்று உப நதிகளிலும் கட்டப்பட்டு வரும் அணைக்கட்டுகளில் 1974 முதல் நீரைத் தாங்கள் தேக்கப் போவதாக மைசூர் முதல்வர் குறிப்பிட்டிருக்கிறார். மத்திய அரசு நியமித்துள்ள ஒரு கமிட்டியின் பரிசீலனையில் விவகாரம் இருக்கும்போது, இந்தக் கருத்து வெளியிடப்பட்டிருக்கிறது. யூனியன் பாசன மந்திரி தலைமையில் விரைவில் ஒரு பொது உடன்பாட்டை ஏற்படுத்தவும், 1974-க்குள் பொது உடன்பாடு ஏற்படாவிட்டால், பழைய ஒப்பந்தத்தையே அமுலாக்க, நீடிக்க, அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** டெல்லியில் 1972-ம் வருடம் மே மாதம் 29-ம் தேதி நடைபெற்ற பேச்சு வார்த்தையிலே ஒரு 'பாக்ட் பைண்டிங் கமிட்டி' நியமிக்க ஒப்புக் கொள்ளப்பட்டு, அதன் விளைவாக, 'பாக்ட் பைண்டிங் கமிட்டி' தன் ரிப்போர்ட்டைக் கொடுத்திருக்கிறது. இந்த மூன்று மாநில அமைச்சர்கள் கலந்து கொண்ட மாநாட்டிலே முக்கியமான 'கன்சன்சஸ்' வாசகத்தை நான் சொல்ல விரும்புகிறேன்.

**The Union Government will assist in arriving at such a settlement in six months and meanwhile no State will take any steps to make the solution of the problem difficult either by impounding or by utilising the water of Cauvery beyond what it is at present.**







ஏனவே, இந்த ஷரத்துப்படி, அவர்கள் தண்ணீரை 'இம்பவுண்ட்' செய்வது சரியல்ல. அந்த ஒப்பந்தத்திற்கு மாறாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது, ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. நம்முடைய முதலமைச்சரவர்கள், மைசூர் மாநில முதலமைச்சருடைய அறிவிப்பு சரியல்ல என்ற கருத்தை ஏற்கனவே தெரிவித்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்தப் பிரச்சினை சம்பந்தமாக ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கூடத் தந்திருக்கிறார்கள். அதையும் கேள்வியிலேயே கேட்கலாம்.

THIRU R. PONNAPPA NADAR : We see a reported speech made by the Mysore Chief Minister as well as the Mysore ex-Chief Minister stating that the 1924 agreement would lapse by 1974 and that the agreement is not valid and binding on account of the reason that the original agreement has been entered into by the erstwhile princely State of Mysore and British Government representing Madras Presidency. What is the view of this Government? Has this matter been considered and what are its details? May I know from the Hon. Minister the view of Government.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்த சட்டப் பிரச்சினையைப் பற்றிய விவாதங்களிலே நம்முடைய தரப்பிலே சொல்லப்பட்ட கருத்து, "நாங்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அந்த ஒப்பந்தம் நிரந்தரமான ஒப்பந்தம். அந்த இரண்டு மாநில அரசுகளையும் கட்டுப்படுத்துகின்ற ஒப்பந்தம். ஒப்பந்தத்தை மாற்றி அமைப்பதற்குக் கூட ஒப்பந்தத்திலே ஷரத்து இல்லை. அதற்குப் பதிலாக 1974-க்குப் பின்னாலே 'சர்பிளஸ் வாட்டர்' இருக்குமானால் அதைப் பகிர்ந்து கொள்வதைப் பற்றி 'ரெவ்யூ' செய்யலாம்" என்பது. இது தான் நம்முடைய தரப்பிலே வாதம் செய்யப்பட்டது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், பேக்ட் பைன்டிங் கமிட்டி ரிப்போர்ட்டும் அவர்கள் கொடுத்து அந்த கெடுவும் இப்பொழுது முடிய இருக்கிறது. இதற்கிடையே முன்னாள் மைசூர் முதலமைச்சர் திரு. வீரேந்திர பாட்டீல் அவர்கள் இந்த 1924 ஆம் வருஷ ஒப்பந்தத்தை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்று நம்முடைய முதலமைச்சர் அவர்களிடத்திலும் மத்திய அமைச்சர் அவர்களிடத்திலும் சொல்லியிருக்கிறார்கள் என்று இந்த பத்திரிகையிலே வந்து இருக்கிறதே, அதைப்பற்றி அரசினுடைய கருத்து என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இந்திய அரசு, காவிரி ஆய்வுக் குழுவின் அறிக்கையை அனுப்பியிருக்கிறது. இதைப்பற்றிப் பேச்சு வார்த்தைகள் நடத்துவது பற்றி முதலமைச்சர்கள் எந்த எந்தத் தேதியில் பேச்சு வார்த்தைகள் நடத்தலாம் என்று கேட்டு மத்திய அமைச்சர் டாக்டர் கே. எல். ராவ் அவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதற்குத் தேதி குறிப்பிட வேண்டியிருக்கிறது. இதற்கிடையிலேதான் மைசூர் மாநில முன்னாள் முதலமைச்சர் அவர்களும் இப்போதைய முதலமைச்சர் திரு. தேவராஜ் அர்ஸ் அவர்களும் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அதைப்பற்றித்தான் நம்முடைய சட்ட அமைச்சர் நம்முடைய தரப்பிலே சொல்லப்பட்ட வாதத்தை இங்கே எடுத்துச் சொன்னார்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலிலே அவர்கள் எந்த நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்ற விளக்கத்தைச் சொல்லவில்லை. மைசூர் மாநிலத்தில் ஹேமாவதி, ஹாரங்கி, கபினி ஆகிய இடங்களில் அணைக்கட்டுகளைக் கட்டிக் கொண்டே இருக்கிறார்கள். அவர்கள் வாட்டரை இம்பவுண்ட் செய்யப் போவதாகச் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். அது மட்டுமல்ல, மேட்டேபிள்ளி என்ற இடத்திலே 500 கோடி ரூபாய் மதிப்பீடு உள்ள லிப்ட் இரிகேஷன் ஸ்கீம் ஒன்றைக் கொண்டுவரப் போவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள், முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே நம்முடைய எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்து மீட்டிங் போட்டார்கள். ஆனால் அங்கே ஒரு பக்கத்திலே வேலை நடந்து கொண்டிருக்கின்ற நேரத்திலே, பேக்ட் பைன்டிங் கமிஷன் அறிக்கையிலே நம்முடைய அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது, அவர்கள் 1974 ஆம் வருடத்திற்குள்ளாக அவற்றை யெல்லாம் கட்டிமுடித்துவிட்டால், 500 கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டத்தைக் கட்டி முடித்துவிட்டால் ஒன்றும் செய்யமுடியாத நிலைமை ஏற்பட்டுவிடும். நம்முடைய நடவடிக்கை என்ன, எப்பொழுது என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் போகிறார்கள் என்பதை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இந்தப் பிரச்னையைப் பொறுத்த வரையில் அரசு தனியாக எந்தக் கருத்தையும் சொல்லவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். ஏற்கனவே இந்தப் பிரச்னை தொடங்கிய பொழுதே இரண்டொரு முறைகள் மத்திய அமைச்சர் முன்னிலையில் மைசூர் முதலமைச்சர், கேரள முதலமைச்சர், தமிழகத்தின் சார்பிலே அமைச்சர்களும் கலந்து கொண்டு நடத்திய பேச்சுவார்த்தைகளையும் அதன் தொடர்பாக அனைத்துக் கட்சித் தலைவர்களும் கூடிக் கலந்து





ஆலோசித்து எந்த நடவடிக்கைகளைத் திரும்பத் திரும்ப எடுத்துக்கூற விரும்பவில்லை. இப்பொழுது ஏற்பட்டிருக்கின்ற சூழ்நிலையிலே நிருபர்கள் கேட்ட பொழுதுகூட நான் மிகுந்த எச்சரிக்கையோடு தான் பதில் சொன்னேன். ஏனென்றால் இப்பொழுது போடப்பட்டிருக்கின்ற கமிட்டியின் அறிக்கையின் மேல் எல்லா மாநிலங்களும்கூடிப் பேசி முடிவு எடுக்கின்ற வரையில் அவரவர்கள் எந்தவித விமரிசனமும் செய்யாமல் இருப்பது நல்லது என்று மத்திய அமைச்சர் முன்னிலையிலே நாங்கள் உறுதி எடுத்துக் கொண்டோம். அதற்கு மாறாக சில அறிக்கைகள் வருமானால் அதற்குப் பதிலளித்து நம்முடைய சார்பிலே அறிக்கைகள் வருமானால் அது ஏற்கனவே எடுத்துக் கொண்ட முடிவிற்கு முரண்பாடாகவும், மத்திய அரசாங்கத்திற்கு ஒரு தர்மசங்கடமான நிலைமையை ஏற்படுத்திவிடவும் கூடும் என்பதால் இதிலே நாம் மிகுந்த கவனத்தோடு இருந்து வருகிறோம். இதிலே இப்பொழுதே விவாதத்தை மேற்கொண்டு 2, 3 அறிக்கைகளைத் தருவது மத்திய அமைச்சர் முன்னிலையில் எடுத்துக் கொண்ட முடிவிற்கு முரணானது. இப்பொழுதே நானோ அல்லது இந்தத் துறையைச் சார்ந்த அமைச்சரோ அறிக்கை விடுவது நல்லதல்ல. வெகு விரைவிலே— இரண்டொரு நாட்களில்—அனைத்துக்கட்சித் தலைவர்களும் கூடி—அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் வசதிப்படும் என்று கருதுகிறேன்—இதைப்பற்றிப் பேசி என்ன நடவடிக்கைகள் எடுக்கலாம் என்பது பற்றி நிச்சயமாக யோசிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவர் அவர்களே, இந்தத் தண்ணீர்ப் பிரச்னை பெரும் பிரச்னையாக இருந்து பலமுறை இந்தச் சபையிலே கொண்டு வரப்பட்டபோதிலும்கூட இப்பொழுது மைசூர் முதலமைச்சர் கூறுகின்ற மாறுபட்ட கருத்து நமக்குச் சாதகமாய் இராது. ஏற்கெனவே மத்திய அமைச்சரிடம் எல்லா மாநில முதலமைச்சர்களும் எடுத்துக் கொண்ட முடிவிற்கு மாறாக ஸ்டேட்மெண்ட் ஆக மைசூர் முதல் அமைச்சரிடமிருந்து வருகிறது என்றால் அது மிகவும் வருந்தப்படக்கூடிய அளவில்தான் இருக்கிறது. இந்த ஒப்பந்தம் ஏற்படுவதற்குள்ளாக அணைக்கட்டுத் திட்டத்தை கட்டிமுடித்து விட்டால் என்று சொல்லிக் கொண்டு அவர்கள் இருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல் இப்பொழுது வாட்டரை இம்பவுண்ட் செய்துகொள்ள வேண்டும் என்று சொல்கிறார்கள் என்றால் அதற்கும் இதற்கும் முரண்பாடாக இருக்கிறது. மத்திய அரசு ஒரு முடிவை எடுத்திருக்கிறது. அந்த முடிவின் படி மைசூர் மாநில அரசு செய்யவில்லையென்றால் மத்திய அரசு அதைப்பற்றித் தக்க நடவடிக்கை எடுக்க இயலாமல் அவர்களோடு சேர்ந்துகொண்டு, நமக்குக் கொடுக்க வேண்டிய தண்ணீரைக் கொடுப்பதற்கு அவர்கள் என்ன முயற்சிகள் எடுக்கப் போகிறார்கள் என்று திட்டவட்டமாக நமக்குத் தெரியவில்லை. எனவே, முதல்

ஏற்கனவே போட்ட கேஸை வாபஸ் வாங்கி விட்டோம், அதை மறுபடியும் கோர்ட்டில் தாக்கல் செய்ய அரசாங்கம் யோசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இவைகள் எல்லாவற்றையும் பற்றி அனைத்துக்கட்சித் தலைவர்கள் கூடிப் பேசி இதற்கு மேல் என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்று முடிவுக்கு வந்துவிடுவது நல்லது என்று நினைக்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: முதலமைச்சர் அவர்கள் ஒன்றைத் தெரிவிப்பார்களா? ஏற்கனவே நாங்கள் கேஸ் போட்டிருந்தோம். அதை வாபஸ் வாங்கிவிட்டோம். நாங்கள் காட்டக்கூடிய அடக்கத்தை அவர்கள் காட்டவில்லை. . .

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர். 'நாங்கள்' அல்ல, 'நாம்' என்று சொல்லுங்கள்.

DR. H. V. HANDE: The restraint which Tamil Nadu is exhibiting is not reciprocated on the other side. Therefore, will the Hon. Chief Minister at least see to it that the entire House expresses its concern on this very serious matter because the position is much worse than what it was before. They are not only building dams at Hemavathi and Harangi, but they are also impounding water for lift irrigation, vast expansion of lift irrigation to the tune of Rs. 500 crores is being undertaken. The Central Government has not told them that they are not going to finance or are going to oppose. They are also giving green signal Originally they had opposed it and they had objected to it. They also said that Central assistance would not be given. Now Central assistance is also given for these schemes. It means that the Central sanction is also there for these schemes. Because of these things, will the Hon. Chief Minister, taking the very grave feelings of the members on all sides, get in touch with the Prime Minister and see to it that something is done, so that the few lakhs of acres in Tamil Nadu, especially Thanjavur District, will not be affected.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் இந்த விஷயத்தில் நம்முடைய தமிழ்நாடு அரசினுடைய அடக்கத்தை மற்ற மாநிலங்கள் காட்டத் தவறியது குறித்து வருத்தம் தெரிவித்தார்கள். அவர்கள், மத்திய அரசு கட்டப்படுவெ



தாகச் சொல்லப்பட்ட திட்டங்களுக்கு எல்லாம் அனுமதி கொடுத்திருப்பதாகவும், அதற்காக நிதியுதவி வழங்குவதாகவும் எடுத்துச் சொன்னார்கள். தஞ்சாவூர் மாவட்டத்தில் காவிரி கழிமுகப் பகுதியிலே ஒரு மாடர்னைசேஷன் ஸ்கீம்—நிறைவேற்றுவதற்காக உலகவங்கி உதவி செய்ய முன்வந்தும் மைசூர் மாநிலத்திலிருந்து எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். அதன் காரணமாக அவர்கள் அனுமதி அளிக்காமல் அந்த உதவியைப் பெறமுடியாமல் நாம் திண்டாடிக் கொண்டிருக்கிறோம். அதே நேரத்திலே இவ்வளவு பெரிய அணைக்கட்டுகளை அங்கே கட்டுவதற்கு—தமிழ்நாட்டிலே எவ்வளவோ எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டும்கூட—அந்த மாநில அரசின் சார்பிலே அவர்கள் நடந்துகொள்வது வேதனையளிப்பதாக இருக்கிறது. இந்த அவையிலே இதைப்பற்றித் தொடர்ந்து கேள்விகளை எழுப்பி விவாதிப்பதின் மூலமாக நிலைமைகள் மோசமாகிவிடக் கூடாது என்று நினைக்கிறேன். ஆகவே, அனைத்துக் கட்சித் தலைவர்கள் அளவில் பேசி முடிவு கண்டால் அந்த அந்தக் கட்சி உறுப்பினர்கள் அந்த அந்த கட்சிகளின் தலைவர்களுக்கு எடுத்துச் சொல்வதற்கும் வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்தையொட்டி, துணைக்கேள்விகள் இதுபற்றி கேட்பது சரியல்ல என்று கருதுகிறேன். ஏனென்றால் இது அடுத்த மாநிலம், மத்திய அரசு சம்பந்தப்பட்டிருக்கின்ற விஷயம்—எச்சரிக்கையாக இருப்பது நல்லது என்று கருதுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: நாம் ஏற்கனவே இதிலே துரிதமாக நடவடிக்கை எடுக்காத காரணத்தினால்தான் ஹாரங்கியை அவர்கள் கட்டியே முடித்துவிட்டார்கள். கட்டி முடித்த பிறகு நடவடிக்கை எடுக்க முடியாது. சுப்ரீம் கோர்ட்டிற்குப் போய்ச் சொன்னாலும்கூட அவர்கள் கட்டி முடித்து விட்டார்களே என்ன செய்யமுடியும் என்று ஸ்டே கூடக் கொடுக்காமல் இருக்கிறார்கள். எனவே அடக்கத்தைக் காட்டுவதைப் பெரிதாகக் கருதக் கூடாது. அரிதத்தைக் காட்டவேண்டும். 1974 ஆம் ஆண்டு வெகு சீக்கிரத்திலே வரப் போகிறது. இன்றைக்கு மைசூர் மாநிலம் பேசிக்கொண்டிருக்கிறது என்றால் நாம் அடக்கமாக இருப்பதுதான் நல்லது என்று இருந்துவிட்டு ஏதோ சாதித்துவிட்டோம் என்று நினைப்பது தவறு. எப்படி மைசூர் மாநிலம் ஸ்டேட்மெண்ட்கள் வெளியிடுகிறதோ அப்படி நாமும் முன்னதாகவே நடவடிக்கைகள் எடுத்திருக்க வேண்டும். எனவே முதலமைச்சர் அவர்கள் சற்று அடக்கத்தைக் காட்டாமல் துரிதமாக உடனடியாக நடவடிக்கைகள் எடுப்பார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துரிதமாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும், துரிதமாக நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டிற்கு இந்தப் பிரச்னையைப் பயன்படுத்திக்கொள்ளக் கூடாது. நிலைமையை யோசித்துப் பார்க்கவேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாநில முதலமைச்சர்கள் செய்து கொண்ட ஒப்பந்தத்திலே நம்முடைய முதலமைச்சர், கேரள முதலமைச்சர், மைசூர் முதலமைச்சர் ஆகியவர்கள் கையெழுத்திட்ட ஒப்பந்தத்திலே "In the meanwhile no State will take any steps to make the solution of the problem difficult either by impounding or utilising the water of Cauvery beyond what it is at present." என்று இருக்கிறது. ஒப்பந்தம் செய்துகொண்டதற்குப் பிறகு கையெழுத்துப் போட்டதற்குப் பிறகு வாட்டர் இம்பவுண்ட் செய்வது இல்லை என்று சொல்லி விட்டு இப்பொழுது இப்படி ஸ்டேட்மெண்ட் கொடுத்தால் என்ன செய்ய முடியும்? அதைத்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள்.

திரு. என். கே. பழனிசாமி : தலைவர்களே, காவிரி திட்டங்களைப் பரிசீலனை செய்த ஆய்வுக்குழு, அதனுடைய அறிக்கையைச் சமர்ப்பித்தும், அதனுடைய நகல் சம்பந்தப்பட்ட எல்லா மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டும், அதற்குப் பிறகு இந்த மாதிரி மைசூர் முதலமைச்சர் அவர்களும், அதற்கு ஆதரவாக மைசூர் ஸ்தாபன காங்கிரஸ் தலைவர், பழைய முதலமைச்சர் அவர்களும் 'இம்பவுண்டு' செய்ய முன் வருகிறார்கள். 'இம்பவுண்டு' செய்வது என்பது அறிக்கையின் நகலில் இருக்கிறதா? அப்படியானால் மத்திய அரசாங்கம் இந்த அறிக்கையை ஒவ்வொரு மாநிலத்திற்கும் அனுப்பாமல், நேரடியாக ஒவ்வொரு மாநிலத்தையும் கூப்பிட்டு சுமுகமாகத் தீர்ப்பதற்குப் பதிலாக, தாண்டப்பட காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர்களே, இந்தப் பிரச்னையில் தமிழ்நாட்டில் இருக்கின்ற எல்லாக் கட்சிகளும் ஒன்றாக இருப்பது போல, கர்நாடகத்தில் இருக்கின்ற எல்லாக் கட்சிகளும் ஒன்றாக இருக்கின்றன. இந்த உண்மையை நாம் மறந்துவிடக் கூடாது. இதில் பழைய காங்கிரஸ், புதிய காங்கிரஸ், முன்னேற்றக் கழகம், வேறு கட்சி என்ற அளவில்கூட பிரித்துப் பார்க்க வழியில்லை. இங்கே எல்லாக் கட்சிகளும், கம்யூனிஸ்டு கட்சி உள்பட இந்தப் பிரச்னையில் ஒன்றாக இருப்பது போல, கர்நாடக மாநில நலன்களை மனதில் வைத்துக்கொண்டு அங்கேயிருக்கின்ற எல்லாக் கட்சிகளும் ஒன்றாக

இருக்கின்றன. இதில் கட்சித் தகராறு ஒன்றும் கிடையாது. அந்த அறிக்கை நமக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. அதை இந்த அரசின் சார்பில் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். இன்னும அது முடியவில்லை. விரைவில் தேதி தந்து அது பற்றி யோசிக்கின்ற நிலைமைகளை எல்லாம் அரசின் சார்பில் எடுத்துக் கொண்டிருக்கிறோம். விரைவில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி ஏற்ற முடிவை எடுக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): தலைவரவர்களே, அண்மையில் மைசூர் மாநில முதலமைச்சர் அவாகள் விடுத்துள்ள ஸ்டேட்மெண்டை ஆட்சேபித்து மத்திய அரசாங்கத்திற்கு, குறிப்பாக பிரதம மந்திரிக்கு, ஏதாகிலும் நம்முடைய மாநில அளவில் புகார் செய்யப்பட்டதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இந்த ஸ்டேட்மெண்டைக் குறித்து நிருபர்களுக்குப் பேட்டியில் தந்த பதிலைத் தவிர புகார் எதுவும் செய்யவில்லை. சில நேரங்களில், பத்திரிக்கையில் வந்த ஸ்டேட்மெண்டு களை, நாங்கள் இந்த எண்ணத்தில் தரவில்லை என்று வாதிடக்கூடிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால், என்ன ஸ்டேட்மெண்ட் தந்தார்கள் என்பதை அறிவதில், உண்மையைக் கண்டறிவதில் இந்த அரசு கவனமாக இருக்கிறது.

*Boeing air service to Coimbatore*

* 549 *Q.*—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the State Government have addressed the Central Government for the provision of Boeing air service to Coimbatore; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) ஆம். இந்தியன் ஏர்லைன்ஸ் நிறுவனத்துடன் இதுகுறித்து ஆலோசிக்கப்பட்டதாகவும், கோயம் புத்தூர் விமானதளம் போயிங் விமானப்பணி நடத்துவதற்கு ஏற்றவகையில் இல்லை என்றும் இந்தியன் ஏர்லைன்ஸ் தெரிவித்துள்ளதாகவும் ஐந்தாவது திட்டக் காலத்தில் இது ஆய்வு செய்யப்படும் என்றும் இந்திய அரசு தெரிவித்துள்ளது.

### மத்திய பாசன ஆராய்ச்சி நிலையம்

* 550 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசின் திட்டக்குழு தமிழகத்தில் பயிர்ப்பாசன ஆராய்ச்சி நிலையம் ஏதேனும் நிறுவியுள்ளதா?

(இ) ஆம் எனில், எங்கே எப்போது நிறுவபபட்டுள்ளது?

(உ) அதன் முக்கிய குறிக்கோள் யாது?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ), (இ) & (உ) தமிழ்நாட்டில், மத்திய திட்ட ஆணைக்குழுவினால் பாசன ஆராய்ச்சி நிலையம் எதுவும் நிறுவப் படவில்லை. எனினும், மாநில அரசு கீழ்க்கண்ட இரண்டு நிலையங்களை நிறுவியுள்ளது :—

(1) பாசன ஆராய்ச்சி நிலையம், பூண்டி, செங்கற்பட்டு மாவட்டம்.

(2) பாசன நீரைக் கையாளுதல் குறித்த ஆராய்ச்சி நிலையம், காட்டுத் தோட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.

நீரியல் குறித்த முறையான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காகப் பூண்டியில் 1945 ஆம் ஆண்டில் பாசன ஆராய்ச்சி நிலையம் ஒன்று நிறுவப்பட்டது. இம் மாநிலத்தில் குறிப்பாக காவிரி கயவாய்ப் பகுதியில் மண்வளம் பாசன நீரைக் கையாளுதல் குறித்த பிரச்சினைகளில் ஆய்வு குறித்த ஆராய்ச்சியை மேற் கொள்வதற்காக 1971-ல் தஞ்சாவூர் மாவட்டத்தில் நீர்நிர்வாக ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட்டது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவரவர்களே, தமிழகத்தில் தண்ணீர் மிகக் குறைவு. ஆதலால் பாசனத் துறையில் ஆராய்ச்சி நடத்தி தண்ணீரை மிச்சப்படுத்த என்ன வழி என்பதைக் கண்டுபிடிப்பது அவசியம். ஆதலால் உடனடியாக இந்திய அரசாங்கத்திற்கு இதைத் தெரிவித்து ஒரு ரிசர்ச் இன்ஸ்டிடியூட் ஆரம்பிக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** துணைத் தலைவரவர்களே, இப்படி வரும் என்று எதிர்பார்த்து ஏற்கனவே தஞ்சை மாவட்டத்தில் காட்டுத் தோட்டத்தில் வாட்டர் மானேஜ்மெண்ட் ஸ்கீம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அதைத் தொடர்ந்து இப்போது பட்டுக்கோட்டையில் ஒன்றும் ஏற்படுத்தப் பட்டு வருகிறது. இப்போது பி.எ.பி.-ன் கீழ் கோவையில் ஒன்று நிறுவப்பட்டு ஆராய்ச்சி முறையாக நடைபெற்று வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.



[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### (2) அறிவிப்புகள்

#### (அ) அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டம் ஒத்திவைக்கப்படுவது குறித்து

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இன்று நடைபெறுவதாக இருந்த அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டம் 30—3—1973-க்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இப்போது சட்டப் பேரவை விதி 41-ன் கீழ் திருமதி டி. என். அனந்தநாயகி அவர்கள் ஒரு அவசர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னையை மாண்புமிகு கல்வி, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. என். கே. பழனிசாமி :** தலைவரவர்களே, சென்ற சட்டமன்றக் கூட்டத்தில் ராஜமன்னார் கமிட்டியின் அறிக்கையை விவாதிக்க ஒரு நாள் ஒதுக்குவதாகச் சொன்னீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கவன ஈர்ப்பு பிரச்னை முடியட்டும். அதற்குப் பிறகு நீங்கள் கேள்வியைக் கேட்கலாம்.

### 3. கவன ஈர்ப்பு.

#### மாணவர்களிடையே ஏற்பட்ட மோதல் காரணமாக அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மூடப்பட்டிருப்பது குறித்து

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I wish to call the attention of the Hon. the Minister for Education and Local Administration to a matter of urgent public importance, namely, the closure of Annamalai University due to some clash between two groups of students. தலைவரவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அடிக்கடி நடக்கக் கூடிய நடவடிக்கை. . .

MR. DEPUTY SPEAKER : The hon. Member may just read the notice. After the reply was given by the Hon. Minister, the hon. Member can ask for clarification.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலுள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 6,000 ஆகும். அதில் 4,000 பேர்கள் கலை, அறிவியல் பிரிவைச் சேர்ந்தவர்கள்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1973 மார்ச் 28

6—3—1973 அன்று ஒரு பிரிவைச் சேர்ந்த சுமார் 40 கலை, அறிவியல் பிரிவு மாணவர்கள் கல்லூரி விடுதியினை நோக்கி கல்வீச்சு நடத்தினர். விடுதியில் தங்கியிருந்த எதிர்த்தரப்பு மாணவர்களினால் இது எதிர்க்கப்பட்டது. இதன் விளைவாக கலை, அறிவியல் பிரிவைச் சேர்ந்த சுமார் 700 எதிர்தரப்பு மாண வர்கள் பல்கலைக் கழக எல்லைக்குள் ஓர் ஊர்வலம் நடத்திச் சென்று பல்கலைக் கழகப் பதிவாளரின் அலுவலகத்தின் முன்பு கூடி, திரு. மாசிலாமணி என்ற ஒரு மாணவர் மேலும் அவரைச் சார்ந்த ஏனைய மாணவர்கள் மேலும் மற்றவர் களைத் தாக்கியதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரினர். அன்று மாணவர்கள் தங்கள் வகுப்புகளுக்குச் செல்லவில்லை. 8—3—73 அன்று, அவர்கள் பல்கலைக் கழக பதிவாளருக்கும், துணைவேந்தருக்கும் ஓர் விண்ணப்பம் விடுத்தனர். 8—3—73 அன்றும் 9—3—73 அன்றும் அவர்கள் வகுப்புகளுக்குச் செல்லவில்லை. அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பதிவாளரின் வேண்டுதலின் பேரில் 6—3—73 அன்று மாலை 7-00 மணியிலிருந்து பல்கலைக் கழகச் சூழலில் போலீஸ் பாதுகாப்பும் பாராவும் அளிக்கப்பட்டன. மாசிலாமணி மீதும் ஏனையவர் மீதும், தாக்குதல் நடத்தியதற்கு வழக்குப் பதிவு செய்யப்பட்டு போலீசாரால் புலன் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பதிவாளர் மேற்படிச் சச்சரவுகள் மாண வர்களிடையே உள்ள தனிப்பட்ட விரோதங்களினால் மட்டுமே ஏற்பட்டவை என்றும் இதற்கும் பல்கலைக் கழகம் அல்லது கல்வி பற்றிய விஷயங்களுக்கும் ஒரு தொடர்பும் இல்லை என்றும் அரசிற்குத் தெரிவித்துள்ளார். மேலும் தொழில் நுட்பம், விவசாயம், பட்டமேற்படிப்பு வகுப்புகள் ஆகியவைகள் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. ஏனைய வகுப்புகளுக்குப் படிப்பிற்கான விடுமுறை 10—3—73 லிருந்து முன்னதாக விடப்பட்டது. தற்பொழுது கொந்தளிப்பு ஏதுமின்றி சூழ்நிலை அமைதியாக உள்ளது.

மேலும் பாட திட்டங்கள் முடிக்கப்படாத வகுப்புக்களை 26—3—73 லிருந்து 31—3—71 வரை நடத்த தற்சமயம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவரவர்களே, எங்களுக்கு வருகின்ற தகவல் எல்லாம் இரு சாரார் மாணவர்களின் மோதலோடு நிற்காமல், வெளியே யிருந்து இரு சாரார் சார்பிலும் ஆட்கள் அனுப்பும் சூழ்நிலையிருப்பதால், அடிக்கடி தகராறுகள் ஏற்பட்டு மாணவர்கள் மத்தியில் வெட்டு, குத்து நடந்து கொண்டிருக்கிறது என்பதுதான். இதைச் சீர்படுத்த, வெளியிலிருந்து ஆட்கள் உள்ளே வராத அளவுக்குச் சரியான முறையில் பாதுகாப்பு ஏற்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1973 மார்ச் 28]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, முன்பு இப்படிப்பட்ட தகராறுகள் ஏற்பட்டபோது சிதம்பரம் நகரைச் சார்ந்த முக்கிய மாணவர்கள், எல்லாக் கட்சிகளையும் சார்ந்த பெரியவர்களைக் கூட்டி வைத்து, சமாதானக் குழு அமைக்கப்பட்டு அவர்கள் மூலமாக அமைதியை நிலைநாட்ட முயற்சிகள் எடுக்கப்பட்டது. சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு என்று ஒரு குழுவைக்கூட அமைத்திருந்தார்கள். அதையும் மீறி இப்படிப்பட்ட விளைவுகள் சில சமயங்களில் ஏற்பட்டு விடுகின்றன. இந்தத் தடவை நடந்தது, மாணவர் களுக்கிடையே ஏற்பட்ட தகராறு என்றும், வெளியிலிருந்து வெளியார் அனும திக்கப்படாத அளவுக்கு நிலைமை இருந்தது என்றும் கூறப்பட்டிருக்கிறது. இப்போது அமைதியான சூழ்நிலை இருக்கிறது. 26-ம் தேதியிலிருந்து கல்லூரி யின் பாட திட்டங்கள், கல்லூரி வகுப்புகள் மீண்டும் திறக்கப்பட்டு, படிப்படி யாக நடைபெற்று வருகின்றன.

(ஆ) திரு. கே. எம். குரியன் அவர்களின் மரணத்தை அடுத்து மெட்ராஸ் ரப்பர் தொழிற்சாலை மூடப்பட்டிருப்பதும். தொழிற்சங்க கோரிக்கைகளை நிர் வாகத்தினர் ஏற்க மறுப்பதும் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் இப்போது மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு சட்டமன்ற 41-வது விதியின் கீழ் ஒரு அவசர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னையைக் கொண்டுவருவார்.

**Thiru K. T. K. THANGAMANI:** Mr. Deputy Speaker, Sir, I call the attention of the Honourable the Minister for Labour to a matter of urgent public importance, namely, the closure of the Madras Rubber Factory since the death of Thiru K. M. Kurian and refusal of the management to accept the demands of the Union.

***மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மின்சார வெட்டின் காரணமாக சென்னை இரப்பர் தொழிற் சாலை நிர்வாகத்தினர் 15—2—1973 முதல் 70 சதவிகித அளவு வரையிலான தொழிலாளரைப் பணிக்குறைப்பினால் வேலையிலிருந்து நிறுத்தினர். அவ்வாறு தொழிலாளர்கள் வேலையிலிருந்து நிறுத்தப்பட்டது 13—3—73-க்குள் 30 சத விகிதமாகக் கணிசமான அளவிற்குக் குறைக்கப்பட்டது 13—3—1973-ல் பணிக் குறைப்பினால் தொழிலாளரை வேலையிலிருந்து நிறுத்துவது குறித்து நிர்வாகத் தினர், தொழிலாளர்கள் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். ஆனால் முடிவேதும் எடுக்கப்படவில்லை. 14—3—73-ல் மொத்தம் 1,553 தொழிலாளர் களில் 1,100 தொழிலாளர்கள் வேலைக்கு வருமாறு அழைக்கப்பட்டனர். ஆனால்

[திரு. என். வி. நடராசன்] [1973 மார்ச் 28

வேலையிலிருந்து நிறுத்தப்பட்ட தொழிலாளர் சிலர் நிர்வாகத்தால் வேலைக்கு அழைக்கப்பட்டவர்களைத் தடுத்தனர். அதன் விளைவாக வேலை ஸ்தம்பித்து விட்டது. ஆகவே, நிர்வாகம் தொழிலாளர்கள் அனைவரையும் பணிக்குறைப் பினால் வேலையிலிருந்து நிறுத்துவதாக அறிவித்தது. பின்னர் தொழிலாளர் பிரதிநிதிகள் நிர்வாகத்தினர் பிரதிநிதியைச் சந்தித்து வேலையிலிருந்து நிறுத்தப் பட்ட காலத்தில், வேலை வாய்ப்பளிப்பதில் தொழிலாளர்கள் அனைவருக்கும் அவரவர் துறைகளில் சுழல் முறையில் சமவாய்ப்பு அளிக்கப்பட வேண்டுமென்று கோரிக்கை விடுத்தனர். வேறு வகையில் சொல்லுவதானால், தொழிலாளர்கள் அவரவர் குறைகளில் சுழல் முறையில் வாரத்திற்குக் குறைந்தது மூன்று நாட் களுக்காவது பணிபெற விரும்பினர். நிர்வாகத்தினர் பான்பரி பிரிவு (Banourary) போன்ற பிரிவுகளில் தொழிலாளர்களுக்கு மாற்று வேலை வாய்ப்பளிக்க ஒப்புக்கொண்டனர். ஏன் என்றால் கிடைக்கும் மின்சக்தி 25 சதவிகிதத்தைக் கொண்டு அப்பிரிவு மட்டுமே இயங்க முடியும். இதைக் கொண்டு நிர்வாகம் எல்லோருக்கும் வாய்ப்பினை அளிக்க முன் வந்தது. ஆனால் தொழிலாளர் அதனை ஏற்கவில்லை.

15—3—73-ல் முதல் முறை மாற்றுப் பணியில் தொழிலாளர் சிலர் நிர்வாகத் தினரால் அழைக்கப்பட்டனர். ஆனால் அத் தொழிலாளர்கள் பணிக்கு வரவில்லை. மாறாக தொழிற்சாலை வாயிலில் மறியல் செய்தனர். அறிக்கைப் பலகையில் அறிவிப்பு ஒட்டுவதற்குக்கூட அதிகாரிகள் அனுமதிக்கப்படவில்லை என்று தொழிற்சாலை நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர். ஆனால் காலை 9-30 மணிக்கு "சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்த நமது அன்பார்ந்த தலைவர் திரு. கே. எம். குரியன் அவர்கள் கேளாஞ்சேரியில் 14—3—1973 புதன்கிழமை விடியற்காலையில் காலமானார் என்பதை மிகவும் ஆழ்ந்த வருத்தத்துடன் தெரி வித்துக்கொள்ளுகிறோம். அவரது ஆன்மா சாந்தியடைய நம்முடைய மரியாதை யைத் தெரிவிக்கும் வகையில் தொழிற்சாலை காலை 9-30 மணியிலிருந்து இன்று முழுவதும் மூடப்பட்டிருக்கும்" என்று நிர்வாகத்தினர் அறிவித்தனர். ஆகவே 15—3—73 அன்று தொழிற்சாலை விடுமுறை நாளாக மூடப்பட்டிருந்தது. மேலும் தொழிலாளர்கள் பிரதிநிதிகளில் சிலர் அப்போது அங்கிருந்த பணி யாளரமைப்பு உதவி அதிகாரியை அணுகி, அந்தநாள் ஊதியத்துடன் கூடிய விடுமுறைநாளா அல்லவா, எந்த அடிப்படையில் விடுமுறையாக அளிக்கப் பட்டது என்று கேட்டனர். பொருத்தமான மறுமொழி அளிப்பதற்காகப் பணியாளரமைப்பு உதவி அதிகாரி, ஏனைய அதிகாரிகளுடன் கலந்தாலோசிக்க அவகாசம் தேவை எனச் சொன்னார். 15—3—73-ஆம் நாள் மாலை, தொழி லாளர்கள் தொழிற்சாலையை விட்டுப் போகாததால், அவர்களை வெளியேற்ற நிர்வாகத்தினர் மாலை 6-30 மணிக்குக் காவல் துறையின் உதவியை நாடினர்.



1973 மார்ச் 28] [திரு. என். வி. நடராசன்]

16—3—73 முதல் இந்த முட்டுக்கட்டை நிலை தொடர்கிறது. பணிக்குறைப் பினால் தொழிலாளர்கள் வேலையிலிருந்து நிறுத்தப்படுவதற்கு நிர்வாகத்தால் அறிவிப்பு ஏதும் அளிக்கப்படவில்லை என்று தொழிலாளர்கள் கூறுகின்றனர். ஆனால் அறிவிப்புகள் கொடுக்கப்பட்டும்கூட, வாரத்திற்குக் குறைந்தது மூன்று நாட்களுக்குத் தொழிலாளர்களுக்கு அவரவர் பிரிவுகளில் சுழல் முறையில் வேலை வாய்ப்பளிப்பதாக உத்தரவாதம் அளிக்கப்பட்டாலன்றித் தொழிலாளர் வேலைக் குத் திரும்பாததோடு மாற்று வேலை வாய்ப்பினையும் விரும்பவில்லை என நிர்வா கத்தினர் கூறுகின்றனர்.

25—3—73 அன்று காலை நிர்வாகத்தைச் சேர்ந்த ஒருவர் தொழிற்சாலைக்குள் போகும்பொழுது, சில தொழிலாளர்களால் தடுக்கப்பட்டதாகவும், அதை யொட்டி ஏழு தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டதாகவும் தெரிகிறது. கைது செய்யப்பட்ட தொழிலாளர்களை விடுதலை செய்யவேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பி அன்று மாலை காவல் நிலையத்தை நோக்கி ஊர்வலம் ஒன்று சென்ற தாகவும், காவல் நிலையம் தாக்கப்பட்டதாகவும் ஒழுங்கை நிலைநாட்ட குறைந்த அளவு பலத்தைக் காவல் துறையினர் பயன்படுத்தியதாகவும் தெரிகிறது.

இதற்கிடையே தொழிலாளர்-நிர்வாகத்தினர்க்கிடையே உள்ள பிரச்சினை களைத் தீர்க்க நாளை 29—3—73 அன்று பேச்சுவார்த்தை நடத்தும்படி தொழி லாளர் நலத் துறைச் செயலாளரைக் கேட்டுக்கொண்டு இருக்கின்றேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: ஸார், 1,500 தொழிலாளர்கள் பணியாற்றும் இந்த மெட்ராஸ் ரப்பர் தொழிற்சாலையில் மின்வெட்டு காரணமாகப் பாதகம் ஏற்படவில்லை. அங்கே ஜெனரேட்டர்ஸ் இருக்கின்றன.

இந்தக் குரியன் அவர்கள் இறந்ததையொட்டி அந்தத் தொழிற்சாலை மூடப் பட்டு, பிறகு போலீஸ் பாதுகாப்பினைக் கோரி, அதற்குப் பிறகு சங்கத்தின் தலைவர், உதவிக் காரியதரிசி இவர்களைக் கைது செய்தது மட்டுமின்றி அமைதி யாக வெளியே கூடியிருந்த தொழிலாளர்கள் மீது தாக்குதல் நடத்தி ஆறு பேருக்குமேலே பலமான அடிபட்டு மருத்துவ மனையில் இன்று இருக்கின்றார் களே, இப்படிப்பட்ட நிலைமை வருவதற்கு முன்பு அங்கே அரசு என்ன நட வடிக்கை எடுத்தது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, பல முறை நிர்வாகத்தினர் தொழிலாளர் பிரதிநிதிகளை அழைத்துப் பேச்சு வார்த்தைகள் நடத்தினர். ஆனால் அது வெற்றிபெற வில்லை. எனவே நாளைக்கு இறுதியாகப் பேசச் சொல்லியிருக்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இது போன்ற நிலைமைகளை நீக்கும் முறையில் கைது செய்யப்பட்ட தொழிலாளர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா ? இன்றைக்கு அந்தப் பகுதியே ஒரு போலீஸ் கோட்டை மாதிரி இருக்கின்றதே, இந்த நிலைமை மாற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : நாளை நடைபெற இருக்கும் பேச்சு-வார்த்தைகளையொட்டி எந்த விதமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை அரசு பரிசீலிக்கும்.

### (4) 1972-73-ம் ஆண்டுக்கான இறுதித் துணை நிதி நிலை அறிக்கையின் மீது பொது விவாதம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1972-73-ம் ஆண்டுக்கான இறுதித் துணை நிதி அறிக்கையின் மீது பொது விவாதம்.

திரு. என். கே. பழனிசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, சென்ற சட்டமன்றத் தொடரில் இராஜமன்னார் கமிட்டி அறிக்கையின் மீது விவாதம் செய்வதற்கு ஒரு நாள் ஒதுக்குவதாகச் சொல்லப்பட்டது. எனவே இந்தத் தொடரில் அதுபற்றி விவாதம் செய்வதற்குச் சந்தர்ப்பம் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்றைக்கு ஒரு மணிக்குக் 'கில்லெட்டின்'. எனவே சுருக்கமாகப் பேச வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

*THIRU K. M. SUBRAMANIAM : Sir, I congratulate the Government for having come forward with a request for supplementary grant for Rs. 6 crores in the matter of famine relief. I am confining to this aspect alone. Due to unforeseen circumstances, floods came to Madras City and several huts were damaged, some totally and some partially. The way in which money is distributed to the hut owners calls for serious consideration I am afraid that there has been terrible mismanagement in the matter of distribution of flood relief.



[Thiru K. M. Subramaniam]

So far as T. Nagar constituency is concerned, I find that some hut owners whose huts were not damaged got relief whereas genuine cases did not get relief. I have made personal representations three or four times to Tahsildar and one to Collector also. But even today it has not been settled. Some people think that this sort of unfortunate thing should happen since it helps them to make money.

I know instances where some leaders of the ruling party went to Tahsildar and demanded 100 and 200 tokens and gave them to their persons, who presented the token and received cash the next day. This sort of thing has happened. The Tahsildar asks for some certificate from the Councillors, that the distribution had been done correctly. Why should there be a certificate from the Councillor. It means that something is wrong somewhere.

I know cases of hutowners, whose huts had been destroyed still not getting relief in spite of lapse of three months. It is unfortunate. I hope and trust that the Chief Minister will take this into consideration and order grants for such cases. The Collector is good, he asked the Tahsildar to inspect. But that has not been done

Those vociferous members of the ruling party get the money. I support the supplementary grant. But I want that the Government should set up a departmental enquiry to see that this money is properly distributed. Even though the Collector is which the officers had made money. I am prepared to prove it where it is wanted. I request the Hon. Minister to look into this it is wanted. I request the Hon. Minister to look into this question and do the needful. With this, I finish my speech.

திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர் மு.ப. 10-30
களே, மாண்புமிகு முதல்வர் அவர்களால் இந்த மாமன்றத்தில் கொண்டு வரப்பட்டிருக்கும் துணை நிதி நிலை அறிக்கையை ஆதரித்து எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

முதலாவதாக, இந்த நாட்டிற்கு நல்ல பல திட்டங்களைத் தந்திருக்கும் இந்த அரசைப் பாராட்டிக் கொள்வதோடு கூட எனது மாவட்டத்தைப் பொறுத்த வரையிலே நாகர்கோயில் மருத்துவ மனையிலே ஒரு ஸ்டர்லைசேஷன்

வார்டு கட்டுவதற்கு 1,08,000 ரூபாய் ஒதுக்கி இருப்பதற்காகவும் அதைப் போல கோதையாறு திட்டத்தில் பறயாற்றின் மீதுள்ள குமரி அணையையும், சோழத் தட்டு அணையையும் செப்பனிடுவதற்கும், சீர்திருத்துவதற்கும் 9,50,000 ரூபாய் ஒதுக்கி இருப்பதற்காகவும், பத்துக்காணி பழங்குடி மக்களுக்கு ஒரு புதிய இல்லம் கட்டிக் கொடுப்பதற்காகப் போதிய நிதி ஒதுக்கி இருப்பதற்காகவும் இன்னும் நாகர்கோவிலிலே ஒரு மண் வள ஆய்வுச் சோதனைக் கூடம் அமைப் பதற்காக ரெக்கரிங் செலவுக்காக 84,400 ரூபாயும் நான்-ரெக்கரிங் செலவுக்காக 1 லட்ச ரூபாய் ஒதுக்கி இருப்பதற்காகவும், இன்னும் குழித்துறையில் தீயணைப்பு நிலையம் அமைப்பதற்காக ரெக்கரிங் செலவுக்காக 51,750 ரூபாயும் நான்-ரெக்கரிங் செலவுக்காக 1,98,600 ரூபாயும் ஒதுக்கி இருப்பதற்காகவும் நன்றி செலுத்திக் கொண்டு எனது தொகுதியில் செய்ய வேண்டிய சில வேலைகள் பற்றி இன்று எடுத்துக் கூற விரும்புகிறேன்.

எனது தொகுதியைப் பொறுத்த வரையிலே இன்னும் குடி நீர்ப் பிரச்னை சரிவரத் தீர்க்கப்படாமல் இருக்கிறது. அண்மையில் அந்த மாவட்டத்திற்கு வருகை தந்த குடி நீர் வாரியத் தலைவர் அவர்களிடம் இதனைப் பற்றி விரிவாக விளக்கியிருக்கிறேன். எனது தொகுதியைப் பொறுத்த வரையிலே உலக்கருவி குடிநீர் திட்டம் ஆய்வில் இருக்கிறது. இந்தத் திட்டத்தை நல்ல முறையில் கூடிய விரைவில் ஆய்வு செய்து, அதோடு நில்லாமல் அதற்குத் தகுந்த நிதி உதவி ஒதுக்கி இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு கூட எனது தொகுதியில் இருக்கிற தேரூர், கொட்டாரம், அழகிய பாண்டியபுரம் போன்ற பேரூராட்சிகளிலும், தாமரைக்குளம், குலசேகரன்புதூர், அருமநல்லூர், ஞானம் போன்ற ஊர்களிலும் குடி தண்ணீர்ப் பிரச்னை தீருவதற்குக் குடி நீர் வாரியத்தின் மூலமாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு கூட, நாங்கள் பஞ்சாயத்து யூனியனிலிருந்து கூட இந்தக் குடி நீர்த் திட்டத்தை நிறைவேற்ற வேண்டு மென்று சொன்னால் அதற்குக் கூட அதிகாரிகள் சில இடங்களிலே சிகப்பு நாடா முறையிலே தடங்கலாக இருக்கிறார்கள்.

உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால் எனது பஞ்சாயத்து யூனியன் உட்பட்ட ஸ்ரீபத்மநாபநல்லூரில் இருக்கும் பயணிகள் விடுதியில் நல்ல கிணறு இருக்கின்றது. அந்த விடுதியோ 10, 12 வருஷங்களாக யாரும் பயன்படுத்த முடியாத நிலைமையில் இருக்கிறது. அந்தக் கிணற்றையாவது எங்கள் பஞ்சா யத்து யூனியனிடமோ அல்லது குடி நீர் வாரியத்திடமோ ஒப்படைத்தால் மேல் நிலை நீர் தொட்டி கட்டி அந்த ஊருக்குத் தண்ணீர் கொடுக்கலாம் என்று





சொல்லி அந்தக் கிணற்றை ஒப்படைக்கும்படி 2, 3 வருஷங்களாக பி.டபிள்யூ.டி. டிபார்ட்மெண்டிற்கு எழுதியும் கூட இது வரை மாற்றித் தரப்படவில்லை. இவை களெல்லாம் இந்தச் சிகப்பு நாடா முறையால் ஏற்படக் கூடியது என்று கூறி கூடிய விரைவில் மாற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு கூட எனது கன்னியாகுமரி நகரியம் வளர்ந்து வருகிற இடம். முக்கியத்துவம் வாய்ந்த இடம். உலகத்தின் பல பகுதிகளிலுள்ள இந்துக்கள் புனித நீராடி அன்னையைத் தரிசிக்க ஆயிரமாயிரம் பயணிகள் வந்து போகி றார்கள். அதோடு சமீபத்தில் விவேகானந்தர் நினைவுச் சின்னம் ஏற்படுத்தப் பட்டதால் இந்த நினைவுச் சின்னத்தைப் பார்ப்பதற்கும், தரிசிப்பதற்கும் பல்லாயிரக்கணக்கான பயணிகள் தினமும் வந்து போகிறார்கள். சமீபத்திலே இரயில் இணைப்புக் கூட அங்கு போடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகையினால் அந்த நகரியத்திற்குத் தகுந்த நிதி உதவி என்ற வகையிலே சுமார் 10 லட்ச ரூபாய் ஒதுக்கி அந்த நகரியத்தை நல்ல முறையில் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாகக் கூறவேண்டுமானால், ஒரு மாதிரியாக உள்ள அங்குள்ள மீனவர் குடிசைகளை அகற்றி நல்ல குடிசைகளைக் கட்டிக் கொடுத்தால் பார்ப்பதற்கு அழகாக இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அங்குள்ள மருத்துவ மனையையும் விஸ்தரித்துத் தரவேண்டுமென்றும், அங்கு ஒரு விமான நிலையம் அமைத்தால் கூட உபயோகமாக இருக்கும் என்றும் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

எனது தொகுதியில் பல ரோடுகள் செப்பனிடப்படாமல், முன்பு திருவி தாங்கூர்-கொச்சி ராஜ்யத்தில் எப்படியிருந்ததோ அந்த முறையில் இருக்கிறது. அதைச் செப்பனிட்டுத் தரவேண்டும்.

இன்னும், லீபுரம், குளச்சல் போன்ற துறைமுகங்களை விஸ்தரித்துத் தர வேண்டுமென்றும், குமரி முதல் நீரோடி கிராமம் வரை கடல் அரிப்பைத் தடை செய்வதற்கு உடனடி வழி வகுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் ச. மு. பழனியப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களால் இந்த மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற இறுதி துணை நிதி நிலை அறிக்கையை வரவேற்று ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன்.

[டாக்டர் ச. மு. பழனியப்பன்] [1973 மார்ச் 28

இதிலே பல்வேறு துறைகளிலே கூடுதலான நிதி கோரப்பட்டு அதற்கு இந்த மன்றத்தினுடைய அனுமதியினைக் கேட்டிருக்கிறார்கள். இதிலே ஒரு சில தலைப்புகளிலே மட்டும் ஒரு சில கருத்துக்களைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்த, அந்த நலத் துறையைச் சேர்ந்த மானியத்திற்காக 22,92,600 ரூபாய் கோரியிருக்கிறார்கள். இதிலே இந்தக் கூடுதலான நிதி கோருவதற்குக் காரணம், இன்னும் கூடுதலான உபகாரச் சம்பளத்திற்காக அருகதை உள்ள மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் அதிகமாக வருகிற காரணத்தினாலும், பல புதிய ஜாதிகளைப் பின் தங்கிய பட்டியலில் சேர்க்க வேண்டுமென்ற காரணத்தினாலும் இப்படிப்பட்ட கூடுதல் செலவாகியிருக்கிறது என்று காரணம் சொல்லியிருக்கிறார்கள். இப்படி அவர்கள் இந்தப் பட்டியலிலே பல புதிய ஜாதிகளைச் சேர்க்கிற நிலைமை இருந்து வருகிறது.

இந்த நேரத்தில் இதுபற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கோவை மாவட்டத்திலும், சேலம் மாவட்டத்திலும், மதுரை மாவட்டத்திலும் இருக்கிற கவுண்டர் ஜாதியைச் சேர்ந்தவர்கள் வெளிக்குப் பார்ப்பதற்கு ஒவ்வொரு மாவட்டத்திலேயும் ஒரு சிலர் வசதி படைத்தவர்களாகவும், நல்ல முறையிலே கல்வி அறிவு படைத்தவர்களாகவும் இருந்தாலும் உண்மையில் அந்த ஜாதியைச் சேர்ந்தவர்கள் பின் தங்கிய நிலையில் இருக்கிறார்கள். இந்த மூன்று மாவட்டங்களிலும் பெரும் எண்ணிக்கையில் இருக்கிற இவர்கள் ஏறக்குறைய 10 லட்சம் முதல் 15 லட்சம் வரையிலே இருக்கிறார்கள். அந்த அளவிற்கு எண்ணிக்கை வரும் என்று புள்ளி விவரம் கூறுகிறது. இவர்களில் 100-க்கு 98 பேர் மிகவும் ஏழைகளாக இருக்கிறார்கள். ஏதோ மாவட்டத்திற்கு அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒரு சில பேர் வசதி படைத்தவர்களாக இருக்கலாம். அதை வைத்துக்கொண்டு இந்தச் சமூகத்தைச் சேர்ந்த அனைவருமே வசதி படைத்தவர்கள், கல்வியில் முன்னேற்றம் அடைந்தவர்கள், பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைந்தவர்கள் என்ற தப்புக் கணக்கிலே இருக்கிறார்கள். எதிர்காலத்திலேயாவது இந்த கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்தவர்களைப் பின் தங்கிய பட்டியலில் சேர்த்து அவர்களுடைய குழந்தைகளும், பிள்ளைகளும் எதிர்காலத்திலே கல்வி அறிவு பெற வாய்ப்புக் கிடைக்கிற அளவிலேயும் இந்த அரசாங்கம் இந்த கவுண்டர் சமூகத்தைப் பின் தங்கிய வகுப்புப் பட்டியலிலே சேர்க்க ஆவன செய்யவேண்டும்.

இவர்களிலே 100-க்கு 98 பேர் அன்றாடக் கூலிகளாக இருக்கிறவர்கள். ஆண்களாக இருந்தால் 2 ரூபாய் கூலி, பெண்களாக இருந்தால் 1 ரூபாய், 1½ ரூபாய் கூலி, ஆக இவர்கள் கூலி வேலை செய்துகொண்டிருக்கிறவர்கள். இன்றைன்று



1973 மார்ச் 28] [டாக்டர் ச. மு. பழனியப்பன்]

கூட அவர்கள் இங்கு சொன்னார்கள். பின் தங்கிய வகுப்பாருக்குகாக கமிஷன் ஏற்பட்ட நேரத்தில் இந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் அந்தக் கமிஷனிடத்தில் என் குறைகளைச் சொல்லவில்லையென்று கேட்கிறார்கள். இப்படி ஒரு கமிஷன் பின் தங்கிய வகுப்பாருக்காக அமைக்கப்பட்டது, அந்தக் கமிஷனில் தங்கள் குறைகளைச் சொல்லவேண்டுமென்ற விவரம்கூடத் தெரியாத வாயில்லாப் பூச்சிகளாக உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட பிற்பட்ட சமூகத்தைப் பின் தங்கிய வகுப்பிலே சேர்த்து நல்ல முறையிலே கல்வி வசதியும், பிற வாய்ப்பு வசதிகளையும் ஏற்படுத்தித் தரவேண்டும். சாதாரணமாக மாநிலத்தில் படித்தவர்களின் எண்ணிக்கை ·40 சதவீதத்திற்கு மேற்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள்.

ஆனால், இந்தச் சமூக மக்களை எடுத்துக்கொண்டால் 10-லிருந்து 12 சதவீத பேர்கள்தான் படித்தவர்களாக இருக்கிறார்கள். அதுவும் பெண்களை எடுத்துக் கொண்டால் 4, 5 சதவீதம்கூட பள்ளிக் கூடத்தைத் தாண்டியவர்களாக இருக்க மாட்டார்கள். அந்த அளவிற்குக் கல்வித் துறையில் பின் தங்கியவர்கள், பொருளாதாரத்தில் பின் தங்கியவர்கள். எதிர்காலத்தில் இந்த அரசு பின் தங்கியவர்கள் பட்டியலில் இந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களைச் சேர்க்க வேண்டும் என்று இந்த மாமன்றத்தில் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். ஏதோ ஒரு சில பேர் வசதி படைத்தவர்கள் இருக்கிறார்கள், நாங்கள் மறுக்க வில்லை. இதை வைத்துக்கொண்டு இந்தச் சமூகத்தில் உள்ள அனைவரையும் புறக்கணிப்பது தவறு. அவர்களுக்கும் இந்தச் சமூகத்தில் சம வாய்ப்பு என்ற முறையில் நல்ல வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். பள்ளிப் படிப்பை முடித்தவர்கள் இந்தச் சமூகத்தில் 4, 5 சதவிகிதம் கூடக் கிடையாது. கல்லூரியில் அடி எடுத்து வைப்பவர்கள் அரை சதவிகிதம் கூட இருக்காது. இந்தச் சமுதாயத்தை முன்னேற்ற அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதிலே சுகாதாரம், மருத்துவத்திற்கும் தொகை கோரியிருக்கிறார்கள். கோவை மருத்துவ மனையிலே ஒருசில குறைகள் இருப்பதாகச் சொன்னார்கள். ஹவுஸ் சர்ஜன்களுக்கு குவார்ட்டர்ஸ கிடையாது. போஸ்ட் மார்ட்டம் செய்யக் கூடிய இடம் மருத்துவமனை துவக்கப்பட்ட காலத்தில் எப்படி இருந்ததோ அதே அளவில்தான் இன்னும் இருக்கிறது. மாணவர்களுக்குப் போதிக்கும் நிலைமையில் அந்தப் பிணப் பரிசோதனை செய்யும் இடத்தை இன்னும் விரிவு படுத்தி நல்ல முறையில் சீர்திருத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

பொதுப்பணித் துறையை எடுத்துக்கொண்டால் பவானி ஆற்றில் ஒரு சிறு அணை இருக்கிறது. 150 வருஷத்திற்கு முன்பு கட்டப்பட்ட கொடிவேரி என்ற அணை இருக்கிறது. அதிலிருந்து தண்ணீர் போகின்ற தட்டப்பள்ளி, அரக்கன் கோட்டை வாய்க்கால்கள் சீர்கேடான நிலைமையில் இருக்கின்றன. அவை தூர் எடுக்கப்படாமல் இருக்கின்றன. அந்த இரண்டு வாய்க்கால்களையும் தூர் எடுத்தால் 56,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். அந்த இரு வாய்க்கால்களிலும் தூர் எடுத்து அடுத்த ஆண்டிலாவது நல்ல முறையில் தண்ணீர் செல்ல வழி செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில் கோபியில் இருக்கும் மருத்துவ மனையில் கூடுதலான படுக்கை வசதி செய்துகொடுத்துப் பெரிதாக்க வேண்டும். அங்கு ஒரு ரத்த சேமிப்பு நிலையத்தையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி :** இந்த அவையின்முன் வைக்கப்பட்டிருக்கும் துணை மானியக் கோரிக்கையை ஆதரித்துச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அரசு அத்தியாவசியமான செலவுகளுக்காக, அவசரமான செலவுகளுக்காக நல்ல முறையில் அவ்வப்போது செலவுகளைச் செய்திருப்பது பாராட்டுக்குரியது.

சம்பா பருவத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்க விதைகள், உரங்கள் வாங்கி உழவர்களுக்குக் கொடுப்பதற்காக ஒரு கோடி ரூபாய் செலவழித்திருப்பது பாராட்டுக்குரியது.

தொழில் கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்குப் படிப்பு உதவித் தொகை வழங்க ஒரு லட்சம் ரூபாயும், வேலையற்றோருக்குத் தொழில் கொடுக்கும் முறையில் தொழில் வளர்ச்சிக் கழகத்திற்கு 35 லட்சம் ரூபாயும் ஒதுக்கியிருப்பது பாராட்டுக்குரியது. இப்படித் தொழில் வளர்ச்சிக் கழகத்திற்கு ஒதுக்கியிருப்பது வேலையற்றோருக்கு வேலை கொடுப்பது இவற்றில் எந்த அளவுக்குப் பயன் ஏற்பட்டிருக்கிறது என்பது தெரிந்தால் நன்றாக இருக்கும்.

தஞ்சை, தென்னாற்காடு, திருச்சி மாவட்டங்களில் மாவட்ட வேளாண்மைத் திட்டங்களின்கீழ் சிறு பாசனத் திட்டங்களின்கீழ் 89 லட்சம் ரூபாய் குழாய்கள் வாங்குவதற்காகச் செலவழிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. அந்தத் தொகை திரும்பவும் உழவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் என்ற கருத்தையும்





கூறியிருக்கிறார்கள். அதே சமயத்தில் உரிமை பெறாத விசைத் தறிகளை ஒழுங்குபடுத்த 77 ஆயிரம் ரூபாய் செலவழிக்கப்பட்டதாகவும் அந்தப் பணம் திரும்ப வசூலிக்கப்படமாட்டாது என்றும் கூறியிருக்கிறார்கள்.

இந்த விசைத்தறிகளால் கைத்தறியாளர்களுக்கு எந்த அளவுக்குப் பாதகம் ஏற்பட்டது என்பதெல்லாம் தெரியும். அந்த விசைத்தறியாளர்கள் எவ்வளவோ லாபத்தை அடைந்தவர்கள். அவர்களுடைய தறிகளை ஒழுங்குபடுத்துவதற்காகச் செலவழிக்கப்பட்ட பணத்தை நாம் திரும்ப வசூலிக்க வேண்டும். அதே நேரத்தில் நம்முடைய உழவர்களுக்காகக் குழாய்கள் அமைக்கக் கொடுத்த பணத்தைத் திரும்ப வசூலிக்கக்கூடாது. அது உழவர்களுக்குச் செய்யும் பெருத்த நன்மையாக இருக்கும்.

மாடுகளுக்கு ஏற்படக்கூடிய கோமாரி நோயைத் தடுக்க 51,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதே சமயத்தில் பேபி மில்லர் ட்ரக்—மிக்மால் மருந்தால் நம்முடைய நாட்டில் எவ்வளவு குழந்தைகள் இறந்தார்கள் என்று நமக்குத் தெரியும். இதைத் தடுக்கத் தேவையான அளவு பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் ஒரு ரூபாய்கூடச் செலவழிக்கப்படவில்லை. இதை எல்லாம் முன்ஜாக்கிரதையாகக் கவனித்துத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தனி அதிகாரிகளைப் போட்டுக் கூடுதலான பணியாளர்களைப் போட்டு, அடல்ட்ரேஷனைத் தடுக்க நடவடிக்கை எடுத்தால் சிலாக்கியமாக இருக்கும். மாடுகளுக்கு வரக்கூடிய நோயைத் தடுக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கும்போது இதற்கும் ஏன் நடவடிக்கை எடுத்துக் கொள்ளக்கூடாது, கூடுதல் தொகை ஒதுக்கக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.

பஞ்சத் தணிப்புக்காக இராமநாதபுரம் மாவட்டத்திலே இரண்டு லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அருப்புக்கோட்டையில் புதிதாகக் கண்மாய்களை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று பல ஆண்டுக் காலமாகக் கூறி வந்தும் இதுவரை எடுத்துக் கொள்ளப்படவில்லை. இதிலே விட்டுப்போனாலும் வரக்கூடிய ஆண்டிலாவது நாலைந்து கண்மாய்களையாவது ஏற்படுத்தித் தரவேண்டும். ஒரு கண்மாய்க்கு ரூ. இரண்டு, மூன்று லட்சத்திற்கு மேல் போகாது. ஆக, ரூ. 16, 17 லட்சத்திற்கு மேல் போகாது. இந்த ஆண்டிலாவது அந்தக் கண்மாய்களை ஏற்படுத்த முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புயல் நிவாரணத்திற்காக 6 கோடி ரூபாய்வரை ஒதுக்கி உடைந்துபோன கண்மாய்கள், பாலங்கள், ரோடுகளைச் செப்பனிட நல்ல திட்டம் போட்டிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை இந்த நேரத்தில்

கூறுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். இராமநாதபுரத்தின் கீழ்ப்பகுதி என்று சொல்லத்தக்க முதுகுளத்தூர், அருப்புக்கோட்டை ஆகிய இடங்கள் புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அங்கிருக்கக் கூடிய ரோடுகள், கண்மாய்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அந்த ரோடுகள், கண்மாய்களைச் செப்பனிடும் பணியை எடுத்துக்கொள்ளவில்லை. இந்த ஆண்டி லாவது அந்தப் பணியை எடுத்துக் கொள்ளவேண்டும். குறிப்பாக தொப்பலாக் கரை ரொட்டியார்பட்டிக்குக் குறுக்கு வழி ரோடு, சுத்தமடம், கஞ்சம்பட்டி, மறவர்குடி வழி ரோடு வெள்ள காலத்தில் மிகவும் பழுதடைந்திருக்கின்றன. பஞ்சாயத்தோ, பஞ்சாயத்து யூனியனோ பணம் செலவழித்து அதைப் பழுது பார்க்க முடியவில்லை. அந்தப் பகுதி மக்கள் ஏழ்மையுடனும், பிற்போக்காகவும் இருக்கும் மக்கள், அரசு இதற்கு அதிகமான பணத்தை ஒதுக்கிச் சீர்செய்து தரவேண்டுமென்று சொல்லிக்கொண்டு மொத்தத்தில் இந்தத் துணை மானி யத்தை ஆதரித்து என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு இறுதித் தருவாயில் இறுதித் துணை மதிப்பீடு என்ற வகையில் 64 கோடி ரூபாய் அளவிற்கு ஒரு கோரிக்கையை இந்த அவைமுன் வைத்திருக்கிறார்கள்.

இந்த ஆண்டு இறுதியாவதற்கு மூன்று நாட்கள்தான் இருக்கின்றன. இந்த நிதி நிலை அறிக்கையை இந்தக் கூட்டத் தொடர் ஆரம்பமான நாளில் வைத் திருந்தால்கூட வரவேற்கத்தக்கதாக இருந்திருக்கக்கூடும். இப்போது, 64 கோடி ரூபாயைச் செலவழித்துவிட்டு இந்த மன்றத்தின் ஒப்புதலை வாங்க முதல் அமைச்சர் அவர்கள் வந்திருக்கிறார்களேதவிர இந்த எஸ்டிமேட்டை இந்த மன்றம் பரிசீலனை செய்து அதற்கு ஆதரவு அளிப்பதற்காக இந்தத் தீர்மானம் இங்கு வைக்கப்படவில்லை. இந்த ஆண்டு முதல் நிதி நிலை அறிக்கையை இந்த மன்றத்தில் வைத்தபோது 1.80 கோடி ரூபாய் மிச்சமுள்ள ஒரு நிதி நிலை அறிக்கை இந்த மன்றத்தில் வைக்கப்பட்டது. அதற்குப் பின்னால் ஏறத்தாழ 50 கோடி ரூபாய் செலவுசெய்த பிறகும்கூட இந்த நிதி நிலை அறிக்கையைப் பார்க்கும்போது இன்னும் ஒரு மிச்சமான நிதி நிலை அறிக்கையைப் பார்க்கும் போது நிச்சயமாக இந்த இலாகா எந்த முறையில் இந்த நிதி நிலை அறிக்கையைத் தயாரித்திருக்கிறது, இதற்கென்று அடிப்படைக் கோட் பாடுகள் இருக்கின்றனவா, கணக்கு வரம்பு இருக்கிறதா என்று ஐயப்பட வேண்டிய நிலைதான் இருக்கிறது.



இந்த முறையில் தயார் செய்வதற்கு இதற்கு என்று ஒரு பிரத்தியேகமான திறமை வாய்ந்த இலாகா தேவையா என்று ஐயப்படவேண்டிய நிலையில் இருக்கிறோம். இனிமேலாவது இம்மாதிரியாக 50, 60 கோடி ரூபாய் என்று எஸ்டிமேட் இல்லாத தொகையைச் செலவுசெய்தாலும் இன்னும் மிச்சமுள்ள நிதி நிலை அறிக்கையைக் கொண்டுவருகிறோம் என்றால் இந்த அறிக்கையைத் தயார் செய்ததில் ஏதோ கோளாறு இருக்கிறது என்பதை இந்த அரசாங்கத் திற்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, தொழில் துறையில் பிற்பட்ட பகுதிகளுக்கு என்று நிறுவப் பட்ட மூன்று தொழில் நிறுவனங்களுக்காகச் செலவு செய்வதற்காக மூன்று லட்சம் ரூபாய்க்கு இந்த நிதி நிலை அறிக்கையில் வகைசெய்யப்பட்டிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் நான் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வேன், இந்தப் பிற்பட்ட பகுதிகளைத் தேர்ந்தெடுக்கிற முறையில் இந்த அரசுக்கு ஏதாவது முறைகள் இருக்கின்றனவா? உண்மையிலேயே பிற்பட்ட பகுதிகள் தான் தொழில் துறையில் பிற்பட்ட பகுதிகளாக இருக்கிற பிரதேசங்கள் என்று தேர்ந்தெடுக்கப்படுகின்றனவா அல்லது மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர் களது விருப்பம்போல் அவர்களுக்கு வேண்டிய பிரதேசங்களைத்தான் இந்த அரசு பிற்பட்ட பகுதிகள் என்று தேர்ந்தெடுக்கிறதா என்பதை அறிய விரும்பு கிறேன். எனது மாவட்டம் தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய மாவட்ட மாகும். ஆனால் மத்திய அரசினால் எடுத்துக்கொள்ளப்படுகிற திட்டமானாலும் சரி அல்லது மாநில அரசினால் எடுத்துக்கொள்ளப்படுகிற திட்டமானாலும்சரி இதுவரை ஒரு நிறுவனமாவது அரசாங்கச் சார்பில் எங்கள் பகுதியில் ஸ்தாபிக்கப்படவில்லையென்று சொல்லும்போது நிச்சயமாக இவைகளை அமைப் பதில் ஒரு அடிப்படை இல்லை என்பதை இந்த அரசாங்கத்திற்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இனிமேலாவது பிற்பட்ட பகுதிகளில் தொழில் நிறுவனங்களை அமைக்கும்போது கன்னியாகுமரி மாவட்டம் தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டமாக இருப்பதால் அரசியல் கண்ணோட்டம் இல்லாது அந்தப் பிரதே சத்தில் தொழில் நிறுவனங்களை அரசாங்கம் அமைக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தொழிலாளர் நலத் துறைக்காக ரூ. 47 லட்சம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. ஜீப்ஸ் வாங்குவதற்கும், மற்ற வாகனங்கள் வாங்குவதற் காகவும் ஒரு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது, அதை வரவேற்கிறேன். காரணம், லேபர் இன்ஸ்பெக்டர்ஸ், லேபர் ஆபீசர்கள் இவர்கள் தங்கள் பணிகளை ஒழுங்காகச் செய்ய வேண்டுமென்றால் அவர்களுக்கு வாகனங்கள் அளிக்கப்பட

வேண்டும். வாகனங்கள் இல்லாமலிருக்கும் சூழ்நிலையில் அவர்களால் ஒழுங்காக வேலைகளைச் செய்ய வாய்ப்பில்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். எனவே இந்த முறையில் எல்லா மாவட்டங்களிலும் லேபர் இன்ஸ்பெக்டர்களுக்கும், லேபர் ஆபீசர்களுக்கும் வாகனங்கள் அளிக்கப்பட வேண்டும். டெக்னிக்கலி க்வாலிபைட் பர்ஸன்ஸுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும் ஒரு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே நம் அரசாங்கம் ஒரு திட்டத்தை வகுத்திருக்கிறது. அந்த அடிப்படையில் பல ஆயிரக்கணக்கான அப்ரென்டிஸ்கள் பல இலாகாக்களில் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். அப்படி அப்ரன்டிஸ்களாக வேலை செய்பவர்களை நிரந்தரமாக வேலையாட்கள் தேவைப் பட்டால் அதில் அவர்களை நியமிக்காமல் Once a mortgagee is always a mortgagee என்று சொல்லப்படுவதைப் போல் Once an apprentice -trainee is always an apprentice-trainee என்ற முறையில் அவர்கள் குறைந்த சம்பளத்தை வாங்கிக்கொண்டு அப்ரன்டிஸ்களாக வேலை செய்துகொண்டிருக்கிறார்கள் என்ற வருந்தத்தக்க நிலையாகும். நிரந்தர வேலை வாய்ப்பு வரும்போது அப்ரன்டிஸகளாக இருப்பவர்களுக்கு முதல் இடம் அளித்து அவர்களுக்கு நிரந்தரமான வேலை அளிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக விவசாயத்திற்காகவும் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்கெனவே மரச்சீனி தீவிரச் சாகுபடித் திட்டம் என்ற ஒரு திட்டம் இருந்தது. ஆனால் சில அதிகாரிகள் ஏதோ தவறு செய்ததால் இந்தத் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது. அதிகாரிகள் செய்த தவறுகளுக்காக அந்தத் திட்டத்தை அரசாங்கம் கைவிட வேண்டாம் என்று கேட்டுக் கொள்வதோடு, மீண்டும் பரிசீலனைசெய்து அந்தத் திட்டத்தை அந்தப் பிரதேசத்தில் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கொக்கோ பயிரிடுவதற்கு நாம் பணம் கொடுத்தோம், விவசாயிகள் ஏராளமாகப் பயிரிட்டிருக்கிறார்கள். ஆனால் அதை வாங்க மார்க்கெட்டில் ஆள் இல்லை. எனவே அதற்கு அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். டிரான்ஸ்போர்ட் இலாகாவிற்கும் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. போனஸ் 4 சதவிகிதம் என்பதை 10 சதவிகிதமாக உயர்த்தியதால் கூடுதல் நிதி தேவைப்படுகிறது என்று காரணம் சொல்லப்படுகிறது. 10 சதவிகிதம் போனஸ் என்று இதுவரையிலும் கொடுக்கப்படவில்லை. பல்வேறு வகைகளில் 10 சதவிகிதம் கொடுக்கிறார்கள். ஆனால் பல தொழிலாளர்கள் போனஸ் வாங்குகிற நிலையில் இன்று இல்லை. போனஸ் வாங்க வைத்திருக்கிற நிபந்தனைகளைப் பார்க்கும்போது 50 சதவிகிதம் தொழிலாளர்கள்





கூட இந்த நன்மையைப் பெறக்கூடிய அளவில் இல்லை. ஆகவே இந்த இலாகாவில் வேலை செய்கிற எல்லாத் தொழிலாளர்களுக்கும் இந்த 10 சதவிகிதம் போனஸ் கிடைக்கக்கூடிய முறையில் இதை அமல்படுத்த வேண்டும். போனஸ் சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டபோது டிரான்ஸபோர்ட் இலாகாவைச் சேர்ந்த தங்களுக்கு வேண்டிய சங்கங்களை வைத்துத் தீர்ப்பு ஏற்பட்டது. ஆனால், அந்தத் தீர்ப்பிற்குத் தொழிலாளர்கள் கட்டுப்படவில்லை. இந்தத் தீர்ப்பை எதிர்த்துக் கன்னியாகுமரியில் வேலை நிறுத்தம் ஏற்பட்டதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர் விரும்புகிறேன். மேலும் இம்மாதிரிப் பிரச்னைகள் இல்லாத முறையில் எல்லாத் தொழிற் சங்கங்களையும் அழைத்துப் பேசித் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாடி பில்டிங்குக்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. பாடி பில்டிங்கை தனியார் நிறுவனங்களுக்குக் கொடுத்து செய்வதாகக் காண்கிறோம். ஆனால், அரசாங்க வொர்க்ஷாப்பை விஸ்தரித்து அங்குள்ள தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுத்தால் நன்றாக இருக்கும். முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். 1970-ல் என்று நினைக்கிறேன். இந்த பாடி பில்டிங்கைச் செய்யும், மதறாஸ், நாகர்கோவில் இந்த இரண்டு தொழிற்சாலைகளிலும் வேலை வாய்ப்பு இல்லாமல் ஐடில் லேபர் என்ற முறையில் ரூ. 3.81 லட்சம் இலாகாவிற்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் அட்மினிஸ்ட்ரேட்டிவ் டிலே என்று கூறுகிறார்கள். சேஸிஸ் வாங்குவதில் ஏன் அட்மினிஸ்ட்ரேட்டிவ் டிலே ஏற்பட்டது? இதில் டிலே ஏற்படுவதற்குக் காரணம் இல்லை. ஏதோ ஒரு மர்மம் இதில் இருக்கிறது. ஆகவே முதல் அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

இலாகாவிற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.
அடுத்தபடியாக, பாரஸ்ட் இந்தத் தருணத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். ஏழு ஆண்டுகளுக்கு மேலான ரப்பர் தோட்டத்தைப் பராமரிப்பதற்காக இங்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ஏழு ஆண்டுகளுக்கு மேலான ரப்பர் தோட்டத்தைப் பராமரிப்பதற்கு இப்போது ஏற்பாடு செய்திருக்கிற ஏற்பாடுகள் தேவை இல்லை. 100 ஏக்கர்களுக்கு ஒரு ரேஞ்ச் ஆபீசர் நியமிக்கிறோம். 100 ஏக்கர்களுக்கு ஒரு ரேஞ்ச் ஆபீசர் என்பது ஏழு ஆண்டுகளுக்கு மேலான ரப்பர் தோட்டத்திற்குத் தேவையில்லை. அதற்கு ஒரு பீல்ட்மேன், குறைந்த சம்பளத்தில் போட்டால் போதும். அப்படிச் செய்தால் இலாகாவிற்குப் பெருத்த லாபம் ஏற்படும். பெரும் பகுதி பணம் லான்ட் அக்விஸிஷனுக்கு காம்பன்சேஷன் கொடுக்கிற வகையில் வழக்கு மன்றங்களில் தீர்ப்பு அளித்ததால் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1973 மார்ச் 28

இந்தச் சந்தர்ப்பத்தில் நான் ஒன்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். திருநெல்வேலி-திருவனந்தபுரம் ரெயில்வே லைன் வேலை தொடங்கியிருக்கிறது. அதற்காக நில ஆர்ஜிதம் செய்வதற்காக ஒரு இலாகா அங்கு அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்காகவும் இங்கு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் நான் ஒன்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். லான்ட் அக்விஸிஷன் செய்யும்போது நியாயமான மார்க்கெட் ரேட் விவசாயிகளுக்கு, குடியானவர்களுக்குக் கொடுப்போமானால் நிச்சயமாகப் பல வழக்குகள் வழக்கு மன்றங்களுக்குப் போகாது. அதற்குப் பதிலாக ரெவின்யூ இலாகா குறைந்த நிரக்கை நிர்ணயிப்பதால் ஏழைகள், பாதிக்கப்பட்டவர்கள் கோர்ட்ஸ்க்குச் சென்று நிவாரணம் தேடுகிற முறையிருக்கிறது. ஆகவே, திருநெல்வேலி—திருவனந்தபுரம் ரெயில்வேக்கு நிலம் ஆர்ஜிதம் செய்யும்போது அரசாங்கம் அந்த அதிகாரிக்கு ஒரு தாக்கீது கொடுக்க வேண்டும். இன்று இருக்கிற மார்க்கெட் விலையை அனுசரித்து அவர்களுக்குப் பணம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

மு.ப. 11–30 **திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவரவர்களே, இந்தத் துணை மானியத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இன்று இந்தத் துணை மானியத்தின் விளைவாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டு பல நல்ல திட்டங்களை வகுத்து இருக்கிறார்கள். இந்தத் துணை நிதி நிலை அறிக்கையின் விளைவாக நாம் எந்தெந்த வகையில் இந்த நாட்டிலே முன்னேற்றம் காண முடியும், எந்தெந்தச் சமுதாயத்திலே இருக்கின்ற எந்தெந்த அங்கங்களுக்கு முதலிடம் கொடுப்பதன் விளைவாக முன்னேற்றம் காண முடியும் என்ற வகையில், நல்ல வகையில், நல்ல ஆரோக்கியமான ஒரு பொருளாதாரத்தின் அடிப்படையில் நாம் திட்டங்களை வகுத்து, நிதி நிலை அறிக்கையில் அதற்கான ஒதுக்கீடுகளைச் செய்கிறோம்.

ஆனால், நம்முடைய நாட்டில் துர்ப்பாக்கியமான ஒரு நிலை இன்றுள்ள அரசியலால் ஏற்பட்டிருக்கிறது. அண்மையில் இந்த அவையினுடைய அதிகாரத்தைக் குறைக்கப் பார்க்கும் வகையில் இந்த மாநிலத்திலே இருக்கிற ஒரு பெரிய கட்சியின் தலைவர், நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிற இந்த நேரத்தில் மத்திய அரசு பல மானியங்களை மாநில அரசுக்கு வழங்குகிறது, அப்படி வழங்குகிற நேரத்தில் இந்த மாநில அரசு அதை எந்த வகையில் செலவு செய்கிறது என்பதை மத்திய அரசு கண்காணிக்க வேண்டுமென்று வெளியே இருக்கின்ற ஒரு கட்சியின் தலைவர் பேசுகிறார் என்றால், அவர்களுக்கு எவ்வளவு தூரம் ஜனநாயகத்தில் நம்பிக்கை இருக்கிறது என்பதை நான் கேள்விக் குறியாக எழுப்ப ஆசைப்படுகிறேன்.



1973 மார்ச் 28] [திரு. எம். ஏ. லத்தீப்]

நான் மிகத் தெளிவாகச் சொல்கிறேன். இன்று இந்த ஆட்சி செய்கிற காரியங்களுக்கு அவர்கள் பதில் தரவேண்டிய இடம் இந்தச் சட்டமன்றம்தான். இந்தச் சட்ட மன்றத்தின் அதிகாரங்களை, உரிமைகளைக் குறைக்கும் வகையில் வெளியே இருக்கும் யாரோ ஒருவர் மத்திய அரசுக்கு அழைப்பு விட்டு இதை நீங்கள் கண்காணிக்க வேண்டுமென்று கூறுகிறார்கள் என்றால் அதை நிச்சயமாக இந்த அவை பகிரங்கமாக, மிக வன்மையாகக் கண்டிக்கக் கடமைப்பட்டிருக்கிறது. அதைத்தான் இந்த விவாதத்திலே கலந்துகொண்டு பேசுகிற நேரத்தில் நான் கண்டிக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன், இந்த மாமன்றத்திலே உள்ள உறுப்பினர் என்ற முறையில்.

நான் தெளிவாகவே சொல்கிறேன். நம்முடைய காங்கிரஸ் கட்சித் தலைவராக இருக்கும் திரு. இராமையா அவர்கள் திண்டுக்கல்லில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகிறபோது—மத்திய அமைச்சர்கள், தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் முன்னிலையில்—அங்கே அமைச்சர்கள் இல்லாமல் இருந்தால் அது வேறு விஷயம்—அவர் அப்படிக் கேட்டிருக்கிறார். அவர்களுடைய செயற் குழுவிலும் மத்திய அமைச்சர்கள் இரண்டு பேரையும் வைத்துக் கொண்டு மத்திய அரசு மாநில அரசுக்கு அளிக்கும் மானியத் தொகைகளை எவ்வாறு செலவழிக்கிறது என்பதைக் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டு இருக்கிறார்கள். இதைக் கேட்டுக்கொண்டு அந்த இரண்டு அமைச்சர்களும் வீற்று இருக்கிறார்கள் என்றால் எவ்வளவு தூரம் அரசியல் சட்டம், ஜனநாயகம் இங்கே உதாசீனப்படுத்தப்படுகிறது என்பதை நாம் வேதனையோடு கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் மிகுந்த பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் இவ்வாறு பேசியதற்கு, நீங்கள் விவாதத்திற்குப் பதில் அளிக்கும்போது அதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று உங்களை நான் மிகுந்த பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இராமையா அவர்கள் பேசிய பேச்சு சாதாரணப் பேச்சு அல்ல. அது மிகுந்த அரசியல் சட்ட விளைவுகளை ஏற்படுத்தும் பேச்சு என்பதால் அதைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், என்னுடைய உள்ளத்தில் சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சட்டமன்றத்திற்கு இருக்கும் உரிமைகளைப் பாதிக்கும் என்ற வகையில் எனக்கு அச்சம் இருக்கிறது. மத்திய அரசு தரும் மானியங்களைச் செலவுசெய்வதை கண்காணிக்க வேண்டுமென்றால் அது எந்த அளவுக்கு இந்த மன்றத்தின் உரிமைகளைப் பாதிக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். மத்தியில் ஆட்சி செய்யும் காங்கிரஸ் கட்சியின் தலைவர்

மத்திய அமைச்சர் இரண்டு பேர் முன்னிலையில் இப்படிப் பேசுகிறார் என்றால், தமிழ்நாடு முதலமைச்சர் அருள்கூர்ந்து அதைக் குறித்து விளக்கம் தரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** உறுப்பினர் அவர்கள் ஏதோ அவர்களுடைய உரிமையில் தலையிடுவதாகச் சொல்லக் கூடாது. மத்திய அரசு கொடுக்கும் மானியங்களை மாநில அரசு எப்படி செலவுசெய்கிறது என்பதைக் கண்காணிக்க வேண்டுமென்றுதான் சொல்லி இருக்கிறார்கள். அது எந்த அளவுக்கு இந்த மன்றத்தின் உரிமையைப் பாதிக்கும் என்று எனக்குப் புரியவில்லை.

**திரு. எம். ஏ. லத்தீப் :** அம்மையாருக்கு இது எல்லாம் புரியாது. நிச்சய மாக புரியாது. நான் சொல்வது என்னவென்றால் அங்கே சொல்லப்பட்ட அந்த வார்த்தைகளின் பொருள் என்ன? அவர்களுடைய கருத்தின் பொருள் என்ன என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அம்மையார் அவர்கள் இதை மறுக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். ஏனென்றால் இந்த மாநிலத்திற்கு ஒதுக்கப்படுகின்ற பணத்தை இந்த அரசு எப்படிச் செலவுசெய்கிறது, எப்படிப் பயன்படுத்துகிறது என்பதைக் கணக்குக் கேட்கவேண்டிய பொறுப்பு இந்தச் சட்டமன்றத்திற்குத்தான் உண்டு. மத்திய அரசாங்கத்திற்கு அந்தப் பொறுப்பு இல்லை. அதை விட்டுக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம்—திருமதி அனந்த நாயகி வேண்டுமென்றால் விட்டுக் கொடுத்து விடலாம் என்று சொல்லலாம்—எனக்கு இல்லை என்பதைமட்டும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, இந்த நல்ல நேரத்தில், இது ரொம்ப நல்ல நேரம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், பிற்பட்ட நலத் துறை அமைச்சர் அவர்களும் சேர்ந்து உட்கார்ந்து இருக்கிறார்கள். இது நல்ல நேரம் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** முகூர்த்த நேரமா?

**திரு. எம். ஏ. லத்தீப் :** இரண்டு நாளைக்கு முன்பு ஒரு செய்தி வருகிறது. முதலமைச்சர் அவர்கள் அருள் கூர்ந்து சொல்ல வேண்டும். இந்த அவையில் நாங்கள் வந்த பிறகு மிகமிகச் சிறுபான்மையினராக இருக்கிற உருது முஸ்லீம் களுக்காக எவ்வளவு வாதாடி இருக்கிறோம். இந்தச் சட்ட மன்றத்தில் எவ்வளவு பேசியிருக்கிறோம். வெளியே இருக்கும் சில அரசியல் கட்சிக் காரர்கள், நேற்று முன் தினம் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்'ஸில் எழுதியிருக்கிறார்கள் "பிட்ரேயல் ஆப் தி இந்தியன் முஸ்லீம் லீக் லீடர்ஸ்" என்று. அந்தக் கம்யூனிட்டிக்கு நாங்கள் பிட்ரேயல் செய்து இருக்கிறோம், அந்தச் சமுதாயத் திற்கு மாபெரும் துரோகத்தைச் செய்து இருக்கிறோம். இன்று இருக்கும்



திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆமாம் சாமிகளாக முஸ்லீம் லீக் கட்சி யைச் சார்ந்தவர்கள் சட்டமன்றத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள்' மிகத் தாழ்ந்த நிலையில் இருக்கும் உருது மொழி பேசும் முஸ்லீம் மக்கள் கோரும் கோரிக்கைகளைத் திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்தாற்போல் உதாசினம் செய்து வருகிறது, அதைத் தட்டிக் கேட்க முடியாமல் இருக்கி றார்கள், மௌனிகளாக முஸ்லீம் லீக் கட்சியினர் இருக்கிறார்கள் என்ற குற்றச் சாட்டைப் பத்திரிகையில் 2 தினங்களுக்கு முன்பு திருச்சியில் உட்கார்ந்து கொண்டு அரசியலில் செல்லாக் காசாகிவிட்டவர்கள் இன்று பேசும் நிலை இருக் கிறது. அதைத்தான் நான் திருப்பித் திருப்பிச் சொல்கிறேன். உங்களுடைய இதயத்தில் இடம் இருக்கிறது. எங்களுக்குத் தெரியும். அந்த இடத்தில் கருணை பிறந்து, அரசியல் செல்லாக் காசினர் கூறும் கூற்றை முறியடிக்கும் வகையில், அருள் கூர்ந்து அந்தக் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

நான் மீண்டும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன், முதலமைச்சர் அவர் களே, தாங்கள் இருக்கும்போதுதானே எங்களால் கேட்க முடியும், நீங்கள் இருக்கும்போதுதானே அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரமுடியும். பக்கத்தில் பிற்பட்ட நலத் துறை அமைச்சரும் வீற்று இருக்கிறார்கள். ஒரு நல்ல முடிவை இன்றைக்கு அறிவியுங்கள். அதைத்தான் நான் பல முறை சொல்லியிருக்கிறேன். 1½ லட்சம் மக்கள்தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தச் சலுகைகளைப் பெறும்வகையில் சமுதாயத்தில் மிகவும் கீழ் நிலையில் இருக்கக்கூடியவர்களைக் கைதூக்கி விடுங்கள். அதற்கான நடவடிக்கைகளை எடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். இதைத்தான் அன்று சட்டமன்றத்தில் பேசிய எல்லாத் தரப்பு உறுப்பினர்களும் வலியுறுத்தினார்கள். டாக்டர் ஹாண்டே அவர்களும், மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய திருமதி அனந்த நாயகி அவர்களும் சொன்னார்கள். சௌடி சுந்தரபாரதி சொன்னார்கள். கே. டி. கே. தங்கமணி சொன்னார்கள். எங்கள் கட்சியின் சார்பாகச் சொல்லப் பட்டது. காங்கிரஸ கட்சியின் சார்பாக திரு. ஜேம்ஸ் அவர்கள் சொன்னார்கள். ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் எல்லோரும் சொன்னார்கள். ஆகவே தயவு செய்து நீங்கள் அதை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உருது பேசும் முஸ்லீம்கள் பின்தங்கியவர்கள் என்று அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உங்களுடைய உள்ளத்திலே இருக்கின்ற அந்த அருள், உங்கள் உள்ளத்திலே தங்கிவிட்டு இருக்கும் கருணையோடு கலந்து தமிழ்நாடு முழுவதும் பாவிக் கருணைமயமான சூழ்நிலையை ஏற்படுத்தி, சில அரசியல் புல்லுருவிகள் காட்டுகின்ற அந்த இழிவான நிலையிலிருந்து எங்களைக் காப்பாற்றுகின்ற வகையில் அதை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எம். ஏ. லத்தீப்] [1973 மார்ச் 28

கடைசியாக, என்னுடைய தொகுதியில் உள்ள சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். பாம்பாறு திட்டம் பற்றிச்சொல்ல விரும்புகிறேன். இன்று நாட்டில் மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது. நீர் வளம் இல்லை என்ற நிலைமை இருக்கிறது. பொதுவாக ஜவ்வாது மலையில் 40—70 மைல் ஓடுகின்றது. நீர் எல்லாம் அந்த பாம்பாறு வழியாகச் சென்று சாதாரணமாகச் சில இடங்களில் உள்ள ஏரிகளுக்குச் செல்கிறது. அது பயன் அற்றுப் போய்விடுகிறது. அங்கேயுள்ள பொதுப்பணித் துறை மூலமாக ஒரு நல்ல திட்டத்தைக் கொடுத்து இருக்கிறார்கள். அவர்களெல்லாம் பார்த்து மிகவும் "வயபிள்" திட்டம், மிகவும் அனுபவப் பூர்வமான திட்டம், லாபகரமான திட்டம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, ஜவ்வாது மலையிலிருந்து வரும் பாம்பாற்றில் ஒரு நீர்த் தேக்கம் ஏற்படுத்தினால் நல்லதாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் அன்றைய தினம் பாம்பாறுத் திட்டம் என்று சொன்னவுடனேயே நான் மிகவும் சந்தோஷப்பட்டேன். ஆனால் அதைச் சொன்னவுடனேயே என்னைப் பார்த்து அது உங்கள் ஊரிலுள்ள பாம்பாறு அல்ல என்று சொல்லிவிட்டார். ஆகையினால் அந்தத் திட்டத்தை அருள்கூர்ந்து ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, உருது முஸ்லிம், உருது முஸ்லிம், உருது முஸ்லிம், அதை மறந்து விடாதீர்கள், அதை மறந்து விடாதீர்கள் என்று முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, அதற்கான அறிவிப்பைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

DR. M. MOSES : Mr. Deputy Speaker, Sir, a total sum of Rs. 5.27 crores is being requested under the Grant 'Public Health', on account of growing magnitude of expenditure on 'Family Planning'. At present, the propaganda which has been done regarding Family Planning is not reaching that strata of society where it is most needed. I request the Government to take particular interest to see that the propaganda which is done is reaching the persons in the lower strata of society, so that people will be benefitted by them. The Headquarters Hospital at Nagercoil Town is not developed corresponding to the growth of the population in the town. The present number of beds is not sufficient to meet the demands of the people. A few more, say 100 beds will benefit the people.

In addition to increasing the bed strength, specialists should also be posted there. I, therefore, request that specialists in all branches of medicine and surgery should be posted there in order



1973 மார்ச் 28] [திரு. ஏ. சி. நரசிம்மன்]

தரம் உயரவில்லை. எனவே, இந்தத் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் தனியார் நிறுவனங்களில் உயர்ந்தபட்சச் சம்பளம் இவ்வளவுதான் என்று நிர்ணயம் செய்யவேண்டும். நான் சீப் செக்ரட்டரியைச் சொல்வதற்குக் காரணம் நமக்கெல்லாம் இங்கே அரசாங்கத்தில் பெரிய அதிகாரி அவர்தான். அவர் சம்பளத்திற்குமேல் தனியார் நிறுவனங்களில் சம்பளம் கொடுத்து வருகிறார்கள். அவர்கள் அரசாங்கத்தின் உயர்ந்த பதவியைவிட அதிகச் சம்பளம் பெறுகின்ற நிலைமை இருந்து வருகிறது. இப்படிப்பட்ட நிலைமை மாற்றி அமைக்கப்பட வேண்டும். அதற்காக உயர்ந்தபட்சச் சம்பளம் இவ்வளவுதான் என்று நிர்ணயித்து அதற்காக ஒரு சட்டம் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ரிடையரான அதிகாரிகள், ஆர்.டி.ஓ. அல்லது ஒரு கமர்ஷியல் டாக்ஸ் ஆபீஸராக இருந்து ரிடையர் ஆனவர், அல்லது இன்கம் டாக்ஸ் டிபார்ட்மெண்டில் உத்தியோகம் செய்து ரிடையர் ஆனவர், இவர்கள் எல்லாம் தனியார் துறை நிறுவனங்களில் வேலை தேடி அமர்ந்து கொள்கிறார்கள். இப்படி அந்தந்த இலாகாக்களில் இருப்பவர்களை ரிடையர் ஆன பிறகு வேலைக்கு அமர்த்திக்கொள்வதன் காரணமாக அவர்களைப் பயன்படுத்திக்கொண்டு அவர்கள் தங்களுடைய வேலையை எல்லாம் எளிதில் முடித்துக்கொள்ள முடிகிறது. எனவே ரிடையரானவர்கள் எந்தத் தனியார் துறை நிறுவனங்களுக்கும் வேலைக்குப் போகக்கூடாது என்று ஒரு சட்டத்தையும் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எந்த நிறுவனமும் வேலை கொடுக்கக் கூடாது என்றும் சொல்லப்படவேண்டும்.

அரசாங்கச் சிப்பந்திகளில், பொதுவாக ஒரு பி.டி. ஆசிரியர் இருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அந்த ஆசிரியருக்குச் சம்பளம் ரூபாய் 400 என்றால் தனிப்பட்ட முறையில் பத்து மாணவர்களுக்கு டியூஷன் சொல்லிக் கொடுத்து அதன்மூலமாக மாதம் ஒன்றுக்கு ரூ. 300 அல்லது ரூ. 400 பெறுகின்ற அளவுக்கு இருக்கிறார்கள். சில ஆசிரியர்கள் 50 மாணவர்களுக்குமேல் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாக மாதம் ஒன்றுக்குத் தனிப்பட்ட முறையில் ரூ. 600, ரூ. 700 வரையில் கிடைக்கின்ற நிலைமை இருக்கிறது.

அதேமாதிரி டாக்டர்களை எடுத்துக்கொண்டால், ஆஸ்பத்திரிகளில் சிவில் அஸிஸ்டெண்ட் சர்ஜன்கள் இருக்கிறார்கள். அவர்கள் அரசாங்கத் துறையில் பணி செய்து கொண்டிருக்கும்போதே, தனிப்பட்ட முறையில் வைத்தியம் செய்து வருகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூபாய் 100, 200, சிலருக்கு ரூபாய் 1,000 வரையில் சம்பாதிக்கும் வாய்ப்பு இருக்கிறது. அப்படிப்பட்ட டாக்டர்களும் வேலையிலிருக்கிறார்கள்.

[1973 மார்ச் 28

திரு. ஏ. சி. நரசிம்மன் : பேரவைத் துணைத்தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள துணை மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய ஒரு சில கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பொதுவாக, நம்முடைய அரசுச் சிப்பந்திகள் எவ்வப்பொழுது சம்பள உயர்வு கோருகிறார்களோ, அவ்வப்போதெல்லாம் நம்முடைய அரசும் அவர்களுக்குச் சம்பள உயர்வு கொடுத்துக்கொண்டு வருகிறது. இதனால் அடிக்கடி அவர்களுக்கு சம்பள உயர்வு கொடுக்கும்போது எல்லாம் விலைவாசி உயர்வதும், மீண்டும் அவர்கள் கோரிக்கை வைப்பதும், மீண்டும் அவர்களுக்குச் சம்பள உயர்வு கொடுப்பதுமாக இருப்பதைக் கண்டுவருகிறோம். இதன் பயனாக நாட்டில் என்ன நடக்கிறது என்றால் ஓரளவு அரசு ஊழியர்கள் வேண்டுமானால் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ளலாம். ஆனால் அதே நேரத்தில் கிராமங்களிலுள்ள அல்லது சிறு நகரங்களிலுள்ள கடைகளில் வேலை செய்கின்ற தொழிலாளர்கள், குமாஸ்தாக்கள் அவர்களுடைய நிலைமையைப் பார்க்கப் போனால், சாதாரணமாக ஆரம்பத்தில் அவர்களுக்கு ரூபாய் 20 முதல் ரூபாய் 30 வரையில் கொடுப்பார்கள். அதற்குப் பிறகு திறமையான குமாஸ்தாக்கள் என்றால் ரூபாய் 100 கொடுப்பார்கள். அதற்கு மேல் அவர்களுக்கு யாரும் சம்பளம் கொடுப்பதில்லை. ஆகையினால் அந்த ஊழியர்கள் அரசாங்கத்தில் ஒரு வாட்ச்மேன் வேலை கிடைத்தால்கூட 150 ரூபாய் கிடைக்குமே என்று அந்த வேலைக்குப் போகலாம் என்று இருக்கின்ற வேலையை விட்டுவிட்டு அரசாங்கத்தில் வேலை கேட்டுக்கொண்டு வருகிறார்கள். ஆகையினால் அரசாங்க ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு கொடுக்கக்கூடாது என்று சொல்லவில்லை, ஆனால் அந்த ஏழை குமாஸ்தாக்களுக்கு எந்த விதமான சம்பள உயர்வும் இல்லை. ஆகையினால் அவர்களுக்குக் குறைந்த பட்ச ஊதியம் என்று நிர்ணயித்து அது அவர்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும். விவசாயக் கூலிகளுக்குக் குறைந்தபட்ச ஊதியம் ஏற்பட்டிருப்பதுபோல் இந்தமாதிரிக் கடைகளில் பணிசெய்யும் ஊழியர்களுக்கும் குறைந்த பட்சச் சம்பளத்தை நாம் நிர்ணயிக்கவேண்டும்.

அதே நேரத்தில் சில பெரிய தனியார் துறை நிறுவனங்களில் சம்பளத்திற்கு வைத்துக்கொள்கிறார்கள். சம்பளம் என்றால் நம்முடைய சீப் செக்ரட்டரியின் சம்பளத்திற்கு அதிகமாகச் சில தனியார் நிறுவனங்களில் கொடுக்கிறார்கள். அப்படி மேலே உள்ளவர்களுக்குமட்டும் அதிகமாகச் சம்பளம் கொடுக்கின்ற காரணத்தால் அங்கே கீழேயுள்ள சிப்பந்திகளுக்கு அதிகச் சம்பளம் கொடுக்காமல் அவர்கள் தடைசெய்து வைத்து விடுகிறார்கள். ஒரு சிலர்மட்டும் அங்கு சம்பள உயர்வு பெற்றுக்கொண்டு அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்ந்து கொண்டிருக்கிறதேதவிர அவர்களுக்குக் கீழே உள்ளவர்களுடைய வாழ்க்கைத்



1973 மார்ச் 28] [திரு. அ. இராசமாணிக்கம்]

அப்போதுதான் உற்பத்தியைப் பெருக்குவதற்கு வேளாண்மையிலே ஈடுபட்டிருக்கின்றவர்களுக்கு ஊக்கம் ஏற்படும் ; அதனால் நாட்டிலே உணவுப் பொருட்களின் உற்பத்தி பெருக வழிவகை இருக்கும்.

பாசனத்திற்காக 2.64 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பாசனத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை என்னுடைய தொகுதியிலுள்ள வேட்டைக்காரன்விடுப்பு, விளுந்தமாவடு என்ற பகுதிகளிலே சற்றேறக்குறைய ஆயிரத்துச் சில்லரை எக்கர் நிலங்களுக்கும் கிடைக்க வேண்டும். அந்தப் பகுதியிலிருக்கின்ற நிலங்கள் சாகுபடி செய்வதற்குத் தகுதியான நிலங்களாக இருந்தும் பாசனம் இல்லாததால் சாகுபடி செய்ய முடியாமல் இருக்கிறது. அவர்களுக்கு இறைவைப் பாசனம் செய்வதற்கு வசதி செய்து கொடுத்தால் நெல் சாகுபடி செய்வதற்கு வாய்ப்பு இருக்கும். ஆகவே, அதை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ளத்தால் சேதம் அடைந்த பல சாலைகள் பேணப்பட்டு வருவதாக இருந்தாலும் இன்னும் பல சாலைகள் அந்தப் பகுதிகளில் இணைக்கப்படாமல் துண்டிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை எல்லாம் இணைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோலவே என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற பல கிராமங்களிடையே வேதாரண்யம் கால்வாய் ஓடிக்கொண்டிருக்கிறது. ஏறக்குறைய 42 மைல் நீளம் உள்ள கால்வாய் அது. பல கிராமங்களை அந்தக் கால்வாய் துண்டிக்கிறது. வடலூர், நர்த்தனமங்கலம், குறிச்சி, ஆய்மழை, வடக்குப் பொய்கைநல்லூர், தெற்குப் பொய்கைநல்லூர் கிராமங்கள் துண்டிக்கப்படுகின்றன. அவைகளை எல்லாம் இணைக்கின்ற வகையில் வேதாரண்யம் கால்வாயின் குறுக்கே பாலம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மருத்துவ மனைக்கென்றும், மருத்துவத் துறைக்கென்றும் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியில் நாகையில் மாவட்ட மருத்துவமனை இருக்கிறது. அங்கே இப்போது இருக்கின்ற படுக்கைகள் போதவில்லை. தினம் தினம் கூட்டம் அதிகமாக வந்துகொண்டிருக்கிறது. எனவே, அங்கே இரண்டு வார்டுகளைப் புதிதாக அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு அங்கே இருக்கின்ற மாவட்ட மருத்துவ அதிகாரிக்கும், மற்ற மருத்துவமனை அதிகாரிகளுக்கும் வீடுகள் கட்டிக்கொடுப்பதற்காக ஒரு திட்டத்தை அரசுக்கு அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது. அதைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. இ. எஸ். தியாகராசன்] [1973 மார்ச் 28

அதோடு இன்றைய தினம் நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் மேற்கொண்டிருக்கிற அரும்பணிகள் காரணமாக—நாட்டிலே கண்ணொளி இழந்த மக்களுக்குக் கண்ணொளி அளித்து, பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளித்து—இதுபோன்ற பல நல்ல திட்டங்களைத் தீட்டித்தந்து வழிவகை செய்துகொண்டிருக்கிறார்கள். அதனால் ஏழை எளிய மக்கள் எல்லாம் பயன்பெற்று வருகிறார்கள். இப்படிப்பட்ட நல்ல பல காரியங்களைச் செய்துவருகின்ற டாக்டர் கலைஞர் அவர்களை நான் பாராட்டுகிறேன். இப்படிப்பட்ட நல்ல பணிகளோடு தமிழ் வளர்ச்சியிலே டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சி மேலும் பல காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. அ. இராசமாணிக்கம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தாக்கல்செய்திருக்கின்ற துணை மதிப்பீடுகளின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்புக் கிடைத்தமைக்கு முதலில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அறுபத்திநான்கு கோடியே முப்பத்தெட்டு லட்சம் ரூபாய் இந்தத் துணை மதிப்பீடுகளின்மூலம் நல்ல பல காரியங்களுக்காகக் கேட்டிருக்கிறார்கள். அவைகளிலே முக்கியமாகக் கூறப்பட்டிருப்பது, வெள்ள நிவாரணப் பணிகளுக்காக 6.09 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகை எல்லா மாவட்டங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டாலும் தஞ்சை மாவட்டத்தில் குறிப்பாக எனது தொகுதியின் கடைக்கோடிப் பகுதி மிகவும் தாழ்ந்திருப்பதால் அந்தப் பகுதிக்கு அதிகத் தொகை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதி தாழ்ந்திருப்பதால் எப்போது வெள்ளப் பெருக்கு ஏற்பட்டாலும் அங்கே தண்ணீர் சூழ்ந்துகொள்கிறது. எனவே, அங்கே அதிகத் தொகை ஒதுக்கி நிவாரணப் பணிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டு கோடி முப்பத்துமூன்று லட்சம் ரூபாய் வேளாண்மை பயிர்ப் பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு ரூபாய் செலவு செய்து உற்பத்தியைப் பெருக்கினாலும் இந்தப் பயிர்ப் பாதுகாப்புத் தவறிவிட்டால் உற்பத்தியாகின்ற பொருட்கள் அழிகின்ற சூழ்நிலையைத்தான் பார்க்கிறோம். அதற்கு இந்தத் தொகையைச் செலவழிப்பதோடு வேளாண்மையில் உற்பத்தி செய்கின்ற பொருள்கள் அழிகின்ற நிலைமை ஏற்பட்டால் அதை உற்பத்தி செய்தவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கின்ற வகையிலே பயிர் இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால்



1973 மார்ச் 28] [Dr. M. Moses]

to enable the people to have benefit in all the branches. At present the Radiology and Clinical Laboratory wings of the Hospital are not working properly. The patients coming at odd hours are not able to get the advantage of the wings.

Regarding Water Supply Scheme in Nagercoil Town, I wish to point out that the Scheme was completed in 1945. It was supposed to serve a population of 55,000 people. Now the population in Nagercoil has increased to more than three lakhs. Nothing has been done to meet the difficulties. A number of small villages surrounding Nagercoil has been given new connections. But at the same time, nothing has been done to improve the source of water supply. I request the Government to pay special attention to improve the source of water supply at Mukkudal.

திரு. அ. சின்னசாமி: தலைவரவர்களே, ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர். இப்பொழுது பேசிக்கொண்டிருக்கின்ற உறுப்பினர் அவர்கள் எந்தத் தொகுதியிலிருந்து வெற்றி பெற்றார் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதையெல்லாம் கேட்கக்கூடாது.

டாக்டர் எச். வி. ஹாண்டே: துணைத் தலைவர் அவர்களே, டாக்டர் மோஸஸ் அவர்கள் எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர். நாகர்கோவில் தொகுதியிலிருந்து தேர்ந்து எடுக்கப்பட்டவர். அங்கத்தினர் அவர்கள் சபை நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தால் டிஸ்கஷனுக்கு உதவியாயிருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Thiru R. PONNAPPA NADAR: It is an insult to the hon. Member and to the Hon. House.

Dr. M. MOSES: I request that special attention should be given to improve the water supply in Nagercoil Town. It is a common sight to see women standing in queues with pots to get water from very early morning every day. Some people are even buying water. The scarcity of water is a big problem in Nagercoil. I request the Government to pay special attention to improve the water supply to my town.

Thank you.

[திரு. அ. இராசமாணிக்கம்] [1973 மார்ச் 28

இதைப்போல நல்ல பல திட்டங்களுக்காகவும், வேலை வாய்ப்புகளுக்காகவும் ஒதுக்கப்பட்டிருக்கிற இந்த இறுதித் துணை மதிப்பீடுகளை ஆதரித்து வரவேற்று அமர்கிறேன்.

* திருமதி த. ந. அனந்தநாயகி: கனம் துணைத் தலைவரவர்களே, இந்த இறுதித் துணை மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இதை இறுதித் துணை மானியக் கோரிக்கை என்று கொண்டுவந்திருக்கிறார்கள். அதனால் இனி வராது என்று நினைக்கிறேன். மானியக் கோரிக்கைகள் என்றால், எத்தனை முறை கொண்டுவருவார்களோ தெரியவில்லை. இந்த இறுதித் துணை மானியக் கோரிக்கையில் 64 கோடி ரூபாய்க்குமேல் கேட்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டு வரவு-செலவுத் திட்டமே மொத்தம் 365 கோடி ரூபாய்தான்.
மு.ப. 11-30 இப்போது 64 கோடி ரூபாய்க்குமேல் துணை மானியக் கோரிக்கை என்று சொல்லியிருக்கிறார்கள். இது மூன்றாவது துணை மானியக் கோரிக்கை என்று நான் நினைக்கிறேன். இப்படித் துணை மானியக் கோரிக்கை என்று சொல்லியே வரவு-செலவுத் திட்டத்தில் பாதிக்குமேல் வந்துவிடும் போலிருக்கிறது. இப்படித் துணை மானியக் கோரிக்கைகளைக் கொண்டுவருவதாக இருந்தால், வரவு-செலவுத் திட்டத்தை எப்படித் தயாரிக்கிறார்கள் என்பது ஒரு கேள்விக்குறியாக இருந்து கொண்டிருக்கிறது. இதேமாதிரி 1972-73 வரவு-செலவுக் கணக்கினைப் பார்த்தால் எதிர்பார்த்தது ரூ. 397 கோடி ஆனால் கிடைத்தது ரூ. 441 கோடி. கிட்டத்தட்ட ரூ. 44 கோடி அவர்களுக்கும் தெரியாமல் வரவாக வந்திருக்கின்றது. செலவைப் பார்த்தால் அதுவும் இப்படித்தான் இருக்கின்றது. செலவையாவது கட்டுப் படுத்தியிருக்கிறார்களா என்றால் இல்லை. ரூபாய் 394 கோடி செலவழிக்கப் போகிறோம் என்று சொல்லிவிட்டு செலவழித்த தொகை ரூ. 439 கோடி. ரூபாய் 45 கோடிக்கு மேலே செலவுசெய்திருக்கிறார்கள்.

இது எதைக் காட்டுகின்றது என்றால் அவர்களுடைய பட்ஜெட் 'இஸ் ஃபுல் ஆஃப் எர்ரர்ஸ்' என்றுதான் சொல்லவேண்டியிருக்கின்றது. ஒரு வரவு-செலவுத் திட்டத்தில் இவ்வளவு தவறுகள் செய்யவேண்டுமா என்று கேட்கின்றேன். ரூபாய் 44 கோடி என்றால் கிட்டத்தட்ட பன்னிரண்டில் அல்லது ஒன்பதில் ஒரு பகுதி என்ற அளவிற்கு 'வேரியேஷன்' வித்தியாசம் இருக்கின்றது என்றால் என்ன அர்த்தம்? யோசிக்க வேண்டாமா? வரவு-செலவுத் திட்டத்தில் இன்னும் கட்டுப்பாடோடு இருக்க வேண்டும் அரசாங்கம் என்பதைத்தான் இது காட்டுகின்றது. ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால் 1970-71 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கை எடுத்துப் பார்த்தால் 'கேபிடல்', மூலதனச் செலவில் 59



1973 மார்ச் 28] [திருமதி த. ந. அனந்தநாயகி]

சதவிகிதம் 'ஸேவிங்ஸ்' இருக்கின்றது. பிறகு எதற்காக அதிகமாகக் கோரிக்கை கொடுக்கின்றீர்கள் இப்படி? செலவழிப்பதற்காகக் கேட்கின்றார்கள், ஆனால் செலவழிப்பதில்லை. விளம்பரத்திற்காகச் செலவு செலவு என்று கேட்டுவிட்டு இறுதியில் பார்த்தால் ஒன்றும் இல்லாது போய்விடுகிறதோ என்று ஐயப்பாடு அடையவேண்டியிருக்கின்றது. காரணம் 1970-71-ல் 'ஸேவிங்ஸ்' 59 சதவிகிதம் என்று சொல்லுகின்றார்கள். இப்போது துணை மானியக் கோரிக்கைகள் என்று வருகின்றது. ஏதாவது அவசர அவசியத்தின் அடிப்படையில் கேட்டால்கூடப் புரிந்துகொள்ளலாம். ஆனால் இருக்கும் 46 டிமாண்டுகளிலுமா இப்படித் துணை மானியம் என்று கேட்கவேண்டும்? எதிர்பாராது புதிய பணிகள் வந்திருக்கின்றன என்று இருந்தால் அவற்றுக்குத் துணை மானியம் என்று கேட்கலாம். ஆனால் 46 டிமாண்டுகளிலும் எதிர்பாராது புதிய பணிகள் என்று சொல்லி இப்படித் துணை மானியம் என்று கேட்டுக்கொண்டிருந்தால் வரவு-செலவுத் திட்டத்தில் இந்த இலாகா என்னதான் செய்துகொண்டு இருக்கின்றார்கள் என்று தெரியவில்லை. அவர்கள் ஒழுங்காகத் தேவைகளைக் கணக்கிடாத காரணத்தினால், ஒவ்வொரு முறையும் இப்படி 46 டிமாண்டுகளிலும் துணை மதிப்பீடு கோருகின்றார்கள் என்றால் இது கண்டிக்கத்தக்கதாகும்.

1970-71 துணை மதிப்பீட்டிலும் என்ன செலவு செய்யப்பட்டிருக்கின்றது என்றால், ஆடிட்டர்-ஜெனரல் அறிக்கையில் 'தி ஸேவிங்ஸ் வேரி ஃப்ராம் 13 டு-52 பெர்ஸெண்ட்' அதாவது 13 லிருந்து 52 சதவிகிதம் வரையில் பல மானியக் கோரிக்கைகள்மீது துணை மானியம் கேட்டும் செலவழிக்கப்படாமல் பணம் மிச்சப்படுத்தப்பட்டிருக்கின்றது என்று சுட்டிக்காட்டியிருப்பதைப் பார்க்கிறோம். இதற்கு என்ன காரணம் என்றால், அந்தந்த இலாக்காக்களில் மானியத்திற்குப் பணம் ஒதுக்கீடு கேட்கும்போது அதிலுள்ள உட்பிரிவில் ஒவ்வொன்றிலும் எவ்வளவு மிச்சப்படும் என்று 'கால்குலேட்' பண்ணி அதை உடனடியாகச் செயல்படுத்துவதில்லை.

இந்த மானியத்திற்கு இவ்வளவுதான் தேவை இதற்குமேலே தேவைப் படாது என்று முன்பே கண்காணித்துக் கொண்டிருந்தால் இப்படித் துணை மானியக் கோரிக்கைகள் என்று மாதக் கடைசியில் கொண்டுவர வேண்டிய நிலை இருக்காது. கடைசியில் என்ன ஆகிறது என்றால் 1971-ல் மார்ச் மாதம் 31-ம் தேதியன்று அவர்கள் ரூ. 79 கோடி ஸரெண்டர் செய்திருக்கிறார்கள் செலவு செய்யாமல். என்ன அர்த்தம் இதற்கு?

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1973 மார்ச் 28

மார்ச் 31-ம் தேதிவரையில் செலவுசெய்து பார்த்து விட்டு கடைசியில் ரூ. 79 கோடியை 'ஸரெண்டர்' செய்கிறோம் என்றால் இவ்வளவு பெரிய தொகையைச் செலவு செய்யாமல் அலட்சியமாக விட்டிருக்கலாமா? எப்படி இவ்வளவு பெரியதொரு தொகை மிச்சப்படுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். இப்படி மிச்சப்படுத்திவிடுவது, இன்னொரு புறத்தில் துணை மானியம் கேட்கிறது என்றால் இவ்வளவும் அரசாங்கத்தில் விளம்பரத்திற்காகத் துணை மானியம் என்று கேட்கின்றார்களே தவிர, வேலை செய்வதற்காகக் கேட்கின்றார்கள் என்று எண்ணத்தோன்றவில்லை. உண்மையிலேயே இந்த நிலை வருந்தத்தக்கதாக இருக்கின்றது.

அடுத்து வரும்போது 'ரெகன்ஸிலியேஷன்' என்று சொல்லும்போது The departmental figures of expenditure should be reconciled with those of the Accountant-General every month.

ஒவ்வொரு மாதமும் நாம் செலவு பண்ணும் பணமும் அக்கவுண்டண்டு-ஜெனரல் ஆபீஸோடு அவர்களுடைய ஃபிகர்லோடு 'ரெகன்சைல்' பண்ண வேண்டும். ஆனால் இந்த முறையில் பார்க்கும்போது கூட்டுறவுத் துறையில் பல மாதகால மாக இது ரெகன்சைல் பண்ணப்படாமலேயே இருக்கிறது. இப்படிப் பல மாத காலம் ரெகன்ஸைல் பண்ணப்படவில்லை யென்றால் நாம் செலவு பண்ணும் பணம் ஒழுங்காகக் கணக்குக் காட்டமுடியுமா என்பது ஒரு கேள்விக்குறியாகி விடும்.

ஆகவே இலாகா சரியான காலத்தில் கணக்கு வழக்கைக் கொடுக்க ஒரு 'கோட்' வைத்துக்கொள்ளுவது மிகமிக அவசியம். இதுபோல இந்தத் துணை மானியக் கோரிக்கைகளில் கேட்டு இருக்கும் சில இனங்களைப் பார்க்கும்போது சிரிப்புத்தான் வருகின்றது.

உதாரணமாக சர்லேயில் 'ட்ராஃபிக்' முறைப்படுத்துவதற்காக, ட்ராஃபிக் ஸிக்னலுக்கு எதிரே பெயிண்ட் அடிப்பதற்கு பெயிண்ட் வாங்க என்று துணை மானியக் கோரிக்கையில் இருக்கிறது. இது என்ன ரொம்ப முக்கியமான அவசரமான செலவா? இதற்கு எவ்வளவு பெயிண்ட் ஆகும் என்று அப்போது கணக்குப் போட்டிருக்க முடியாதா? ட்ராஃபிக் ஸிக்னலுக்குப் போடுவதற்குக் கூட பெயிண்ட் வாங்கத் துணை மானியக் கோரிக்கையை வைக்கிறோம் என்றால், வேதனையாக இருக்கிறது.

அடுத்து, எக்ஸைஸ், ஆயத் தீர்வை காரணமாக, கள்ளுக்கடை, சாராயக் கடை இவற்றைக் கண்காணிக்க காவல் துறையினரைக் கூடுதலாகப் போடு வதற்காகப் பணம் கேட்டு இருக்கின்றார்கள். இது வரவேற்கத்தக்கதுதான்.





1973 மார்ச் 28] [திருமதி த. ந. அனந்தநாயகி]

ஆனால் என்ன நிலைமை என்றால் கண்ணை மூடிக்கொண்டு எங்கே பார்த்தாலும் கள்ளுக் கடை, சாராயக் கடை, ஒயின் ஷாப், பிராந்தி ஷாப் என்று கட்டுப்பாடில்லாமல், மூன்று கடைகளில் ஒரு சாராயக் கடை அல்லது கள்ளுக் கடை அல்லது ஒயின் ஷாப் என்று திறந்துவிட்டார்கள். இதற்கு ஒரு கட்டுப்பாடு இருக்கக் கூடாதா?

ஆரம்பத்தில் சொன்னார்கள், கோவில்களுக்கு அருகில் இருக்காது, மருத்துவமனை களுக்கு அருகில் இருக்காது, தேவாலயங்களுக்கு அருகில் இருக்காது, பள்ளிக் கூடங்களுக்கு அருகில் இருக்காது, குடிசைப் பகுதிகளுக்கு அருகாமையில் இருக்காது என்று சொல்லப்பட்டது. ஆனால் இன்றைக்கு சென்னை முழுதும், சென்னை மட்டுமில்லாமல் மற்ற இடங்களிலேயும் தமிழகம் முழுவதிலும் ப்ராஞ்ச் ஷாப்ஸ் என்று கள்ளுக் கடைகளையும், சாராயக் கடைகளையும் ஒயின் ஷாப் களையும் திறந்திருக்கின்றார்கள். தங்களுக்கு அதிகாரம் இருக்கின்றது என்ற காரணத்தினால் வீட்டுக்கு வீடு, வீதிக்கு வீதி கள்ளுக்கடைகளையும், சாராயக் கடையையும் திறக்க அரசாங்கம் அனுமதி கொடுக்கும் என்றால், இது நாட்டை மிகமிக அவல நிலையில் கொண்டுபோய்விடும் என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

செய்தித்தாளில் பார்த்தேன், மாம்பலம் பகுதியில், வேலை செய்துவிட்டு வீட்டுக்கு வரும் ஒரு பெண்ணை நடு ரோட்டிலேயே ஒருவன் குடித்துவிட்டு அவளிடம் வம்பு செய்யும் அளவிற்கு சென்னையிலேயே நடைபெறுகின்றது என்றால் மற்ற மற்ற இடங்களிலே என்ன நடக்கும் என்பதை எண்ணிப்பார்க்க முடிகின்றது. கடைகளைத் திறப்பது என்றால் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை யோடு நிறுத்திக்கொண்டால் பரவாயில்லை. இது என்னவென்றால் ஏதோ சத்துணவு கொடுப்பதுபோல எங்கே பார்த்தாலும் கடைகளைத் திறந்துவைத்துக் கொண்டுபோவது மிகமிக வருந்தத்தக்கதாகும்.

இது இப்படியென்றால் கள்ளுக்கடை, சாராயக் கடைகளை எடுத்தவர்களுடைய நிலையைப் பார்க்கும்போது பரிதாபத்திற்குரியதாக இருக்கின்றது. ஆரம்பத்தில் மூன்று மடங்கு, நான்கு மடங்கு என்று எடுத்துவிட்டு இப்போது திண்டாடு கின்றார்கள். விடவும் முடியவில்லை தொடர்ந்து நடத்திச் செல்லவும் முடியவில்லை அவர்களால். சாதாரணமாக முடியவில்லை என்றால் ஒரு மாத நோட்டீஸ் கொடுத்துவிட்டு விட்டுவிடக்கூடிய நிலையில் அக்ரிமெண்ட் இருந்திருக்க வேண்டும். ஆனால் இந்த அரசாங்கம் புதுமாதிரியாக ஒரு அக்ரிமெண்ட்டைப் போட்டு இருக்கின்றார்கள். நடத்த முடியவில்லை என்றால் விட்டுவிடலாம் ஆனால் அடுத்து ஏலத்திற்கு விடும்போது அவர்கள் குறைவாக இதை ஏலத்திற்கு எடுத்தால் வித்தியாசப்படும் தொகையை முதலில் எடுத்துவிட்டு முடியாது

விட்டுப்போகிறாரே அவர் கட்ட வேண்டும் என்று இருக்கிறது. அவர் கட்ட முடியவில்லையென்றால் விட்டிலுள்ளதை ஜப்தி செய்வது என்றெல்லாம் ஆகி விடுகிறது. இப்படி முதலில் எடுத்தவர்களெல்லாம் தூக்குப் போட்டுக் கொண்டு சாகலாமா அல்லது பைத்தியம் பிடித்துத் தெருவில் அலைவதா என்று இருக்கின்றார்கள். இப்படிப்பட்ட நிலை நீடிக்க வேண்டுமா என்று யோசித்துப் பார்க்க வேண்டும். ஆகவே எங்கெங்கே முடியவில்லை என்று விட்டுவிடுகி றார்களோ .....

**திரு. நா. வீராசாமி:** துணைத் தலைவரவர்களே, இப்படி நஷ்டப்பட்டவர் களெல்லாம் அரசாங்கத்தை அணுகி இப்படி நஷ்டம் ஏற்பட்டுவிட்டது என்று சொன்ன நேரத்தில் அவர்களிடம்கூட பணத்தை வாங்கிக்கொண்டு சலுகை காட்டப்படுவதாக அன்றைக்கு உறுப்பினர் அவர்களோடு சேர்ந்திருந்தவர்கள் குற்றம் சாட்டிப் பேசினார்களே ...

**திருமதி த. ந. அனந்தநாயகி:** ஏதோ அடுத்தவர்கள் பேசுகின்றதைப் பற்றிக் கவலைப்படுவதைப்போலப் பேசுகின்றீர்களே, நீங்கள் அப்படிப்பட்ட பேச்சுக்கு மதிப்பு வைத்தீர்களா என்ன இதற்கு மதிப்புவைத்துப்பேச? 'ஆட்சியை விட்டு இறங்கு' என்று சொன்னார்களே, இறங்கினீர்களா என்ன? 'ஆளும் கட்சியே ராஜினாமா செய்' என்று சொன்னார்கள். செய்துவிட்டார் களா என்ன?

**திரு. நா. வீராசாமி:** 'இறங்கு', 'இறங்கு' என்று சொல்லுகின்றார்கள். இறங்குவதாக இல்லை.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் பேசிக்கொண்டு இருக்கும்போது சென்னையில் ஏராளமாகக் கள்ளுக் கடைகளையும், சாராயக் கடைகளையும் திறந்து விட்டார்கள், தெருவிற்குத் தெரு திறந்துவிட்டார்கள் என்றெல்லாம் சொன் னார்கள். அம்மையார் அவர்கள் பேசிக்கொண்டு இருக்கும்போது, நான் அதிகாரிகளிடம் எவ்வளவு கடைகள் சென்னையில் திறக்கப்பட்டிருக்கின்றன என்று கேட்டேன். சென்னை நகரம் முழுவதற்குமாக மொத்தம் 95 கடைகள் தான் இருக்கின்றன. கள்ளுக்கடைகள் 50, சாராயக் கடைகள் 45, பிராந்திக் கடைகள் 45. இவைதான் சென்னை நகரம் முழுவதற்குமாக உள்ள கடைகள். பிறகு எப்படி தெருவிற்குத் தெரு கடைகள் இருக்கின்றன என்று சொல்லுகின் றார்கள் என்று தெரியவில்லை.

அடுத்து ஒன்றைச் சொன்னார்கள், கள்ளுக்கடை, சாராயக்கடைகளை எடுத்த வர்கள் நஷ்டப்பட்டு விட்டார்கள் என்று சொல்லி அக்ரிமெண்டைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். இப்படி ஏலம் எடுத்தவர்களிலே இரண்டு மூன்று விதம்



இருக்கின்றார்கள். ஒரு சிலர் பணம் கட்டினார்கள் ஆனால் அடுத்த நாள் ஏலம் எடுக்க வராமலேயே விட்டுவிட்டார்கள். சிலர் இரண்டு மூன்று மாதம் கட்டிவிட்டுப் பிறகு ஓடிவிட்டார்கள். மீதம் சிலர் ஆறு மாதகாலம் கழித்து விட்டுவிட்டார்கள். இப்படிப் பலவிதமான கேடகரிஸ் இருக்கின்றன. இவர் களுக்கு எந்தவிதமான சலுகைகளைக் கொடுக்கலாம் என்று அங்கத்தினர் கருது கின்றார் என்று அங்கத்தினரிடமிருந்தே தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சிலபேர் உடனே போய்விடுகிறார்கள். சில பேர் 6 மாதம் கழித்துப் போய்விடுகிறார்கள். ஏலம் எடுத்தவர்கள் தங்களால் அதை நடத்த முடியாது என்று எப்போது கைவிடுவதற்கு முன்வந்தாலும் அவர்கள் ஒரு மாத நோட்டீஸ் கொடுத்தால் போதும் என்று இருப்பதுதான் நியாயமானது. அப்படி இன்றி ஒன் சைட் அக்ரிமெண்டாக—கடையை பத்தாயிரத்திற்கு ஒருவர் ஏலம் எடுத்தார் என்றால், அவர் அதைக் கைவிட்ட வுடன் மறுபடியும் ஏலம் விடுகிறபோது 5 ஆயிரத்திற்குத்தான் போயிற்று என்றால் நடுவில் ஏற்படுகிற 5 ஆயிரத்தை முதலில் ஏலம் எடுத்தவர்தான் அந்த வருஷத்திற்குக் கொடுக்க வேண்டும் என்பது நியாயமாகாது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** விளக்கத்திற்கு நன்றி. சிலபேர் ஏலம் கேட்பதற்கான டெபாசிட் தொகை 200-ஐக் கட்டி ஏலம் எடுக்கிறார்கள். மறு நாளே விட்டுவிட்டுப் போய்விடுகிறார்கள். சிலபேர் 3 மாதம், சிலபேர் 6 மாதம் என்று கடையை நடத்திவிட்டு ஓடிவிடுகிறார்கள். மறுபடியும் அந்தக் கடையை ஏலம் விடுகிறபோது எந்த அளவுக்குக் குறைவாகப் போகிறதோ அந்தத் தொகையை முன்னால் ஏலம் எடுத்தவர்களிடம் வாங்கக் கூடாது, அது கள்ளுக் கடை ஏலம் எடுத்தவர்களை மிகவும் பாதிக்கும் என்று உறுப்பினர் சொன் னார்கள். இதுபற்றிப் பரிசீலித்து அரசாங்கம் ஒரு நடவடிக்கை எடுத்தால் அப்போது இந்தக் கடைக்காரர்களிடம் லஞ்சம் வாங்கிக்கொண்டு விட்டு விட்டார்கள் என்று சொல்லமாட்டோம் என்கிற உத்தரவாதத்தை அளித்தால் அதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** எங்கள் உத்தரவாதத்தைக் கேட்டு ஆட்சி நடத்த முடியுமா? எதிர்க்கட்சியில் உள்ள நாங்கள் இன்றைக்கு இருக்கக் கூடிய விஷயங்களைத்தான் எடுத்துச் சொல்வோம். நாங்கள் சொல்வதை வைத்து நீங்கள்தான் பரிசீலிக்க வேண்டும்.

**திரு. என். கணபதி:** துணைத் தலைவர் அவர்களே, ஏலம் விடுகிறபோது ஒருவர் ஒரு கடையை ரூ. 4,999-க்குக் கேட்கிறார். மற்றொருவர் ரூ. 5,000 என்று ஏலம் கேட்டுக் கடையை எடுத்துவிட்டு மறுநாளே ஓடிவிடுகிறார்

என்றால் திரும்ப அந்தக் கடை ஏலத்திற்கு வருகிறபோது ரூ. 2,000-த்திற்குத் தான் போகிறது என்றால், பொறுப்பற்ற முறையில் ஏலம் கேட்ட ஒருவரால் அரசாங்கம் ரூ. 3,000 நஷ்டப்பட வேண்டுமா, என்ன ?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அதற்காக ஒரு வருஷத்திற்கும் வாங்க வேண்டுமா, என்ன ?

**மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி :** காண்டிராக்டுக்கு விடுவது என்பதே ஒரு வருஷத்திற்குத்தான். முன்னாலும் இதுபோன்ற அக்ரிமெண்டு தான் இருந்தது. சர்க்கார் ஏலம் கேட்கிறவர்களுடைய நலனை மட்டும் கருதி அக்ரிமெண்டு செய்துகொள்ள வேண்டும் என்றால் சர்க்காரின் இண்டரஸ்ட் என்ன ஆவது ? ஐயாயிரத்திற்கு ஏலம் எடுத்துவிட்டு 10 ஆயிரம் சம்பாதிக்கிற போது அரசாங்கம் அந்தப் பணத்தைக் கேட்கிறதா ? ஐயாயிரம் என்று கேட்டு நஷ்டம் வரும்போல் இருந்தால் ஓடிவிடுவது என்றால் சர்க்கார் நஷ்டப் படவேண்டுமா ?

**திரு. நா. வீராசாமி :** கள்ளுக்கடைகளையே திறக்கக் கூடாது என்று சொன்னவர் கள்ளுக்கடை ஏலம் எடுத்தவர்களுக்காக வாதாடுகிறார்களே....

* **திருமதி த. ந. அனந்தநாயகி :** நீங்கள் திறந்துவிட்டீர்கள். திறந்த பிறகு அவை ஒழுங்காக நடைபெற வேண்டும் என்பதில் எதிர்க் கட்சியில் உள்ளவர்கள் கவனம் செலுத்தக் கூடாதா என்ன ? மூடக்கூடிய அதிகாரம் எங்களுக்கு இருந்தால் நாங்கள் நாளைக்கே மூடிவிடுவோம். அந்த அதிகாரம் இல்லையே. கள்ளுக்கடை ஏலம் எடுக்கிறவர்கள் பொறுப்பற்ற முறையில் ஏலம் கேட்கிறார்கள் என்பதற்காக அரசாங்கமும் பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்வது சரியல்ல. இங்கே கடை ஏலம் எடுத்தவர்களுடைய பெண்டு, பிள்ளைகள் கஷ்டப்படுவதை நாம் பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி :** அரசாங்கம் ஏலம் என்று விடுகிறபோது, ஓபன் ஏலமாக விடுகிறபோது ஒருவர் ஏலம் எடுக்கிறார் என்றால் அவர் எல்லா நிலைமைகளையும் தெரிந்துகொண்டுதான் ஏலம் எடுக்க வேண்டும். அரசாங்கத்தைப் பொறுத்தவரை அதிக வருமானம் வரக்கூடிய அளவிற்குத் தான் ஏலமே விடுகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அரசாங்கம் வருமானத்தையே நோக்கமாகக் கொண்டிருந்தால் அது அரசாங்கமே இல்லை. We must always have the welfare of the people at heart. மக்களுடைய நலனையும் கருதியாக வேண்டும். ஒரு கடை என்றால் மொத்தமாக ஒரு உயர்ந்த பட்ச வரம்பை வைத்துவிடுவது.





**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஏலம் விடுவதில் உச்சவரம்பு என்று நிர்ணயிப்பது இல்லை. இன்ன ரூபாய்க்குக் குறைவாகக் கடையை விடக் கூடாது என்பதாகக் கீழ்மட்டத் தொகைதான் நிர்ணயிக்கப்படும். ஒரு கடைக்கு 10 ஆயிரம்தான் அதிக வரம்பு என்றால் 10 ஆயிரம் கேட்கிறவருக்குக் கடை போய்விடும், 10,500 கேட்கத் தயாராக இருப்பவருக்கு அந்தக் கடையை எடுப்பதற்கு இயலாமல் போய்விடும். ஏலம் மும்முரமாக இருக்கும் நேரத்தில் ஒருவர் கடையை 50 ஆயிரத்திற்கு ஏலம் எடுப்பார். அவரே இரண்டு மாதம் கழித்து ஏல மும்முரம் தணிந்த பிறகு கடையயை நடத்த முடியவில்லை என்று கைவிட்டு, திரும்ப ஏலத்திற்கு வருகிறபோது, தன் சொந்தக்காரர், தன் மகனை வைத்தே 20 ஆயிரத்திற்கு ஏலம் எடுத்தால் அரசாங்கத்திற்கு 30 ஆயிரம் நஷ்டம் ஏற்படுகிறது. அவர்களே இப்படிப்பட்ட தவறுகளைச் செய்யக் கூடாது என்றுதான் இந்த முறை கையாளப்படுகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இது மிகக் கடுமையான முறை. இதைப் பரிசீலிக்க வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இவ்வளவு சொன்ன பிறகும், அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கஷ்டப்படுகிற கள்ளுக்கடை ஏலக்காரர்கள் சார்பாக அம்மையார் அவர்கள் பேசுகிறபோது நாங்கள் ஓரளவு பரிசீலிக்கத் தொடங்கினால் அவர்கள் குறைசொல்ல மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** நாங்கள் ஏலக்காரர்கள் சார்பாகப் பேசுவோம். காவல்காரர்கள் சார்பாகப் பேசுவோம். மக்களுடைய கஷ்டங்களை எடுத்துச் சொல்லுகிறோமே தவிர, கள்ளுக்கடை ஏலக்காரர்களுக்காகப் பேசுவதாக குத்திப் பேசக் கூடாது. தவறுகளைக் கண்டிக்கிறோம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பரிசீலிக்க வேண்டும் என்று நீங்கள் சொன்னது கள்ளுக்கடை ஏலக்காரர்களைப்பற்றித்தான். அதைக் குறிப்பிட்டுச் சொன்னேனே தவிர, குத்திப் பேசவில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** நீங்கள் பேசியது எனக்குப் புரியும்.

**திரு. ந. தருமலிங்கம் :** பாயின்ட் ஆப் ஆர்டர். துணைத் தலைவர் அவர்களே, எப்போதுமே பேசிக்கொண்டே இருப்பது முறைதானா ?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** எப்போதுமே பேசிக்கொண்டே இல்லை. கொடுத்திருக்கிற பத்து நிமிடத்தில்தான் பேசிக் கொண்டிருக்கிறேன்.

**திரு. ஜி. ராஜாராம்:** கொடுத்த நேரத்தில் எதையோ பேசிக் கொண்டே இருந்தால் . . . ஒன்றும் புரியாமல் . . . .

**திருமதி த. ந. அனந்தநாயகி:** ராஜாராம் பெரிய அறிஞர். நான் பேசுவது அவருக்குப் புரியக் கூடியதாக இல்லாமல் இருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் பேசும்போது அமைச்சர்கள் விளக்கம் கேட்கிறார்கள். அதற்கு அவர்கள் பதில் சொல்கிறார். மற்ற உறுப்பினர்கள் அதைப்பற்றிக் குறுக்கிட்டுச் சொல்வது நல்லதல்ல.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதுமாத்திரம் அல்ல. மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் பேசும்போது மற்ற உறுப்பினர்களைப்பற்றி அவர் ஏதாவது குறிப்பிட்டால் தன்னிலை விளக்கம் என்பதாக அந்த உறுப்பினர் குறுக்கிடலாமே தவிர, மற்றபடி மாண்புமிகு உறுப்பினர்கள் குறுக்கிடாமல் அமைச்சர்களோடு விட்டுவிடுவதுதான் நல்லது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அதோடு அமைச்சர் அவர்கள் மெயின் ஷாப்புகள் பற்றித்தான் அதிகாரிகளைக் கேட்டுச் சொல்லியிருக்கிறார்கள். ப்ராஞ்சு கடைகள் எவ்வளவு இருக்கின்றன என்கிற விவரத்தையும் அதிகாரிகளிடத்தில் கேட்டு அவர் சொல்லலாம். நகரபூரா இன்றைக்குக் கள்ளுக்கடை, சாராயக் கடைகளாகத்தான் இருக்கின்றன.

அடுத்து, சட்டமன்றத் துறைக்காகவும் கோரிக்கை கேட்டிருக்கிறார்கள். நான் மிக வேதனையோடு தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்க்கட்சிக்காரர்கள் உட்காருகிற லாபிகளில் ஸி.ஐ.டி.-க்கள் வருகிறார்கள். பொறுப்புள்ள சட்டமன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதை லாபியிலும் கூடவா ஸி.ஐ.டி-க்களைப் போட்டு புலனாய்வு செய்ய வேண்டும். இதை நான் மிகமிக வன்மையாகக் கண்டிக்கிறேன். துணைச் சபாநாயகர் அவர்கள் இதுபற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்குள்ளே சி.ஐ.டி.-க்கள் வரக்கூடாது. சட்டசபை நடக்கும்போது, சட்டசபை வேலை நடக்கும்போது, சட்டசபை அங்கத்தினர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதை அறிவதற்காக, இங்கே உள்ளேயே ஸி.ஐ.டி.-யை விடுவது மிகமிக வருந்தத்தக்கது என்று சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் ஏற்கனவே சொன்னீர்கள். அதற்குப் பிறகு அவ்வாறு நடந்திருக்காது என்று கருதுகிறேன். ஆளும் கட்சி உறுப்பினர்கள்கூட அங்கு உட்காருகிறார்கள்.



**திருமதி த. ந. அனந்தநாயகி:** ஆளும் கட்சி எம்.எல்.ஏக்கள் கூட இருந்திருக்கலாம். சி.ஐ.டி.-களுக்கு என்ன வேலை அங்கு? ஆளும் கட்சி உறுப்பினர்கள் அங்கு வந்தாலும்கூட, சி.ஐ.டி.-களுக்கு என்ன வேலை? Even yesterday I saw C.I.Ds. in the lobby. I take strong objection to that.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நீங்கள் புரிந்துகொள்கிற அளவுக்கு இருந்தால் அவர் சி.ஐ.டி. யாக இருக்க மாட்டார். (சிரிப்பு).

**திருமதி த. ந. அனந்தநாயகி:** உங்கள் ஆட்சியில் நாங்கள் சி.ஐ.டி.ஸ்களை கண்டுபிடிக்க முடிகிறது என்றால், நாங்கள் எவ்வளவு கெட்டிக்காரர்கள் என்று எங்களைப் பாராட்ட வேண்டும். (சிரிப்பு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விசிட்டர்சைக் கூட சி.ஐ.டி. என்று சொல்லாதீர்கள். அவர்களையும் சி.ஐ.டிஸ். என்று சொல்லாதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அடுத்து, நேற்றையதினம் எங்களுக்குத் தினப்படி ரூ. 5-ஐத் தாராளமாக உயர்த்தியிருக்கிறோம் என்று கூறியது ரொம்ப வருந்தத்தக்கது. ரூபாய் 10, ரூ. 5 என்று கொடுப்பதற்கா, நாங்கள் நேற்று கேட்டோம்? எங்களுடைய அந்தஸ்தைப் பார்க்க வேண்டாமா? பணக் கஷ்டம் என்றால், கேட்காதீர்கள் என்று சொல்லிவிடுங்கள். நீங்கள் கொடுக்கிற ரூ. 20-ஐயும் திருப்பிக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். என்னமோ, அறநிலைய அமைச்சர் ரூ. 10 அதிகமாகக் கொடுக்கப் போகிறோம் என்று சொல்கிறமாதிரி, ரூ. 5 அதிகமாகக் கொடுப்போம் என்று சொல்கிறீர்கள்? எத்தனை நாளைக்கு கொடுக்கப் போகிறீர்கள்? 60 நாளைக்குக் கொடுக்கப் போகிறீர்கள். பிற மாநிலங்களிலே எப்படி இருக்கிறதோ, அதைப் பார்த்து, எங்களுக்குக் கொடுங்கள். வெளியே தலைகாட்ட முடியவில்லை (சிரிப்பு). எங்களைப் பார்த்து எல்லோரும் சிரிக்கிறார்கள் (சிரிப்பு). சட்டசபைக்கு போகிறீர்களே, ரூ. 5 கேட்கத்தான் போகிறீர்களா என்று கேட்கிறார்கள் . . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** கேரளாவிலே ரூ. 10 தான் படி என்பது எனக்குக் கிடைத்த தகவல்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** மத்தியப் பிரதேசத்திலே ரூ. 60 என்பது எனக்குக் கிடைத்த தகவல். (சிரிப்பு) மகாராஷ்டிரத்திலே ரூ. 40 என்பது எனக்குக் கிடைத்த தகவல். 60 நாளைக்கு செலவழிப்பதிலே உங்களுக்கு என்ன ஆகப்போகிறது After all you are going to pay for sixty days.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அடுத்த தடவை அம்மையார் மத்திய பிரதேசத்தில் நிற்பது நல்லது என்று கருதுகிறேன். (சிரிப்பு).

**திருமதி த. ந. அனந்தநாயகி:** என்னால் நிற்கமுடியும்; உங்களால் நிற்க முடியாது. (சிரிப்பு) நான் அகில இந்தியக் கட்சியைச் சேர்ந்தவள். தயவு செய்து அந்த ரூ. 5-ஐ வாபஸ் வாங்கிக்கொள்ளுங்கள். இல்லையென்றால், சரியாக ஆலோசித்து, எல்லா மாநிலங்களுடைய விவரத்துடன் பரிசீலனை செய்து, அவசரமாகச் சொல்லாமல், சற்று காலதாமதமாகச் சொன்னால்கூட நன்றாக இருக்கும் என்று வருத்தத்தோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இந்த சத்துணவு விநியோகத்தினை அரிசன நல இலாகாவிலிருந்து மகளிர் நலத்துறைக்குக் கொடுத்திருப்பதைப் பார்த்தேன். ரொம்ப வரவேற்கத் தக்கது. அதையும் மாதர் சங்கங்களின் மூலமாகக் கொடுக்க வசதி செய்தால், தாய்மை உள்ளத்தோடு, சற்று தவறுகள் இல்லாமல் அவை கொடுக்கப் பெற வாய்ப்புகள் இருக்கும். ஆகவே, மாதர் சங்கங்கள் மூலமாக சத்துணவினை ஏழைக் குழந்தைகளுக்கு விநியோகிப்பது மிக மிக அவசியம் என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

அடுத்து, பஞ்சாயத்து, நகரசபைகளுக்கெல்லாம் நாம் பணம் கொடுத்து வருகிறோம். Unutilised and utilised grants amount to Rs. 23 lakhs ரூபாய் 23 லட்சம் நாம் சில வேலைகளுக்காக மானியங்கள் கொடுத்தோம். அதை இலாகாக்கள், பஞ்சாயத்துக்கள் பயன்படுத்தாமல் இருக்கின்றன. அந்த நிலை இருக்கும்போது, அத்தகைய பஞ்சாயத்துக்களுக்கு, பஞ்சாயத்து யூனியன்களுக்கு நாம் கொடுக்கிற மானியத்தைப் பார்த்தால், அதை ஒழுங்காகச் செலவழிக்கிறார்களா என்பதைக் கண்காணிக்க வேண்டும்.

இன்றைக்கு பரமக்குடி நிலையைப் பார்த்தீர்கள். நாராயணன் செட்டியார் கடையிலே ரூ. 10 பாக்கிக்காக தி.மு.கழகத் தலைவர் சிப்பந்திகளோடு சென்று உள்ளே இருக்கிற உணவுப் பொருள்களை . . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தி. மு. கழக நகரசபைத் தலைவர் சென்றதாகச் சொன்னார். அந்த நேரத்திலே அவர் செல்லவில்லை. அவர் மதுரையிலே எஸ்.பி.யோடு இருந்தார். வழக்கு நடக்க இருக்கிறது. தலைவர் சென்றார் என்று தவறாக இணைக்க வேண்டாமென்று சொல்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவர் தி.மு. கழகத்தைச் சேர்ந்தவர். உங்களுடைய நகரசபையிலே ரூ. 10 பாக்கிக்காக கெடுபிடி செய்கின்ற நிலை. அங்கு ஊரே அல்லோலகல்லோலப்பட்டுக்கொண்டிருக்கிறது. தந்தி மேல் தந்தி வந்து கொண்டிருக்கிறது. ஊரிலே குப்பை எடுக்காதே, தண்ணீர் கொடுக்காதே என்று முனிசிபாலிட்டி வேறுவிதமாக நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. இப்படி எல்லாம் இருக்கிறதென்றால், மக்களுக்கு எப்படி நன்மை

செய்ய முடியும்? இதற்கா இத்தனை கோடி ரூபாய் மானியம் கொடுக்கிறோம்? இதற்கா நாம் வரவு-செலவுத் திட்டம் தீட்டி, காரியங்களைச் செய்கிறோம்? No body should take high handed action ரூபாய் 100 கணக்கில் பலரிடம் பாக்கியிருக்கும்போது, ஒரு தனி நபருக்காக, செட்டியாரின் கடையிலே இப்படிச் செய்திருக்கிறார்கள். என்ன இருந்தாலும் ஆதிக்கத்திற்கு இடம் கொடுக்க முடியாது என்று மக்களாக அந்தப் போராட்டத்தை நடத்தியிருப்பது நம்முடைய நிர்வாகத் திறமையைக் காட்டுகிறது. ஆகவே, தயவு செய்து இருக்கக்கூடிய ஒவ்வொரு ஊராட்சிக்கும் சொல்லிவிடுவது நல்லது. குறிப்பாக, டவுன்ஷிப் என்று சொல்லியிருக்கிறோம். அவைகளால் ஒருவித பலனும் கிடையாது. வரிகள்தான் அதிகமாக இருக்கின்றன. எந்தவித வசதியும் கிடையாது. இப்படி இருந்தால் நல்லதல்ல என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

மின்சார வெட்டு இருக்கிறது. இந்நிலையிலே டீசல் எண்ணெய்யும், கிரசின் எண்ணெய்யும் மிக அவசியமாகத் தேவைப்படுகிறது. டீசல் கிடைத்தாலும்கூட, லாரியிலே பம்ப் பண்ண மின்சாரம் கிடைக்கவில்லை. நாள் பூராவும், 24 மணி நேரம் டீசல் கொடுத்தால்தான் லாரிகளை நிரப்பி எல்லா மாவட்டங்களுக்கும் அனுப்ப வசதி இருக்கும். அடிக்கடி மின்சார வெட்டு வந்து விடுகிறது, மின்சாரம் நின்று விடுகிறது, பம்ப் செய்ய முடியவில்லை. ஆகவே, குறைச்சலாக டீசல் கிடைக்கிற அவல நிலை இருக்கிறது. காரணம், அன்றைக்கே நெய்வேலி நிலக்கரியைப் பயன்படுத்தி இருந்தால் இந்த நிலை வந்திருக்காது. அன்றைக்கு ஒரு பைசா, இரண்டு பைசாவுக்கு பார்த்து, கோலார் கொடுக்குமா, மைசூர் கொடுக்குமா குறைந்த விலையில் என்று .....

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இந்த டீசல் பம்புகளுக்கு மின்வெட்டைத் தளர்த்த வேண்டுமென்ற கோரிக்கையினை அரசாங்கம் ஏற்று, அவர்களுக்கு 10% வெட்டு அனுமதித்தால் போதும் என்ற உத்தரவு அண்மையிலே பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பட்ஜெட் போடத் தெரியவில்லையென்பதாகவும் அதற்கு ஒரு உதாரணத்தையும் அவர்கள் காட்டினார்கள். ரோடிலே பெயின்ட் அடிப்பதற்கு முன்கூட்டியே எவ்வளவு என்று நிர்ணயிக்கத் தெரியாதா என்று கேட்டார்கள். நான் கூட்டிப்பார்த்தேன், 'மிஸ்லேனியஸ்', பல்வகைச் செலவினத்திலே, கோடிக்கணக்கிலே வரவு செலவினத்தில் ரூ. 8,000 அதிகம் செலவாகியிருக்கிறது. ரூ. 8,000 எங்கே,

கோடி ரூபாய் எங்கே. சிறிய தொகையாக இருந்தாலும், சட்டப்பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம் என்பதற்குப் பாராட்ட வேண்டியவர்கள், இப்படிப் பதாலாமா என்று கேட்க விரும்புகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சிறுசிறு செலவுகள், வரவு-செலவிலே இப்படி வரும் என்று சொல்கிறார்கள். ரூ. 8,000, ரூ. 8,000 என்று பலவற்றை சேர்த்தால் பல கோடி ரூபாய் வரும். சிறுசிறு செலவுகளைக் கண்காணிக்காமல் இருக்கிற இலாகாவை, நிர்வாகத் தவறைக் குறை சொல்லாமல் என்னைக் குற்றம் கூறுவது தவறு என்று சொல்ல விரும்புகிறேன்.

இறுதியாக ஒரே ஒரு பிரச்னை. மைலாப்பூர் பிரச்னை. பல பாலங்களைச் சீர் செய்யப்போகிறோம் என்று சொல்கிறீர்கள். 6 மைல் நீளமுள்ள கூவம் நதியில் 3 பர்லாங்தான் சுத்தப்படுத்தி இருக்கிறார்கள் 6 வருஷத்திலே. 3 பர்லாங் தூரத்திற்குத்தான் உல்லாசப் படகு போகும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஹாங்காங் நாட்டைப் பாருங்கள். நெருக்கடியைப் போக்க ப்ரீ சர்விசாக, நகர்புற மக்களுக்கு ஒரு போக்குவரத்து சாதனமாக இருக்கிறது. உல்லாசப் படகை விடுகிறோம் என்று 3 பர்லாங் தூரத்திற்குத்தான் விட்டிருக்கிறார்கள். மற்ற இடங்களிலே எப்பொழுது விடுவார்களோ, அது ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம். ஆனால் வருஷா வருஷம் துணை மானியத்திலே இதுபற்றி வருகிறது, வரவு-செலவுத் திட்டத்திலே வருகிறது.

மைலாப்பூரில் முண்டகக்கண்ணியம்மன் என்ற பிரிட்ஜ் ஒன்று என்றைக்கு இடிந்து விழுமோ என்ற நிலையில் இருக்கிறது. திருவள்ளுவர் கோயிலைப் புதுப்பிப்பதற்காக அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிறது அந்தத் திருவள்ளுவர் கோயிலுக்குப் போகிற வழியில் இருக்கிற இந்த முண்டகக்கண்ணியம்மன் பிரிட்ஜை சீர்படுத்த, பாதுகாக்க அரசாங்கம் முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. தொ. க. சிறைமீட்டான்:** அம்மையார் அவர்கள் பரமக்குடி சம்பவத்தைப் பற்றிச் சொன்னார்கள். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.** எந்தத் தகவலையும் முதலமைச்சரிடத்திலே சொன்னால், அவர் பதில் சொல்லும்போது சொல்வார். முதலமைச்சரே சொன்னார், உறுப்பினர்கள் குறுக்கிட வேண்டாமென்று. தனிப்பட்ட முறையிலே உங்களை ஒன்றுமே சொல்லவில்லை.





*** திரு. எஸ். அழகுத் தேவர்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நமது தமிழக முதல்வர் அவர்கள் கொண்டுவந்த இந்த துணை மானியத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முன்வந்திருக்கிறேன்.

**(திரு. நா. வீராசாமி தலைமை)**

நமது தமிழக அரசு பல திட்டங்களை நல்லமுறையிலே தமிழகத்திற்கு தந்து, பல திட்டங்களை அளிக்கும்போது, என்னுடைய தொகுதிக்கும் அந்த பரவலான திட்டத்தை அளிக்கவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். ஆனால், எனது தொகுதியில் இராசபாளையம் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்தது 36 கிராமம். அந்தக் கிராமத்திலே போக்குவரத்து சரியான முறையிலே இல்லை. சில கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் இல்லாததால் போக முடியாத நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட கிராமங்களுக்கெல்லாம் இணைப்புச் சாலைகள் போட்டுத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எங்கள் பகுதியில் உள்ள வெம்பக்கோட்டை யூனியனில் 119 கிராமங்கள் இருக்கின்றன. அவைகளுக்கு எல்லாம் இணைப்புச் சாலைகள் இல்லாமல் இருக்கின்றன. இதைப்பற்றி நான் பொதுப்பணித் துறை மானியத்திலே பேச வேண்டுமென்று நினைத்தேன், சந்தர்ப்பம் கிடைக்கவில்லை, இப்பொழுது சொல்கிறேன். அந்த இணைப்புச் சாலைகளை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, மேற்கு இராமநாதபுரம் ஜில்லா மிகவும் பிற்பட்ட பகுதியாக இருக்கிறது. அந்தப் பகுதியிலே இணைப்புச் சாலைகள் இல்லாமல் இருக்கின்றன. அவற்றையும் தமிழக அரசு செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குடிநீர் வழங்குவதைப் பொறுத்தவரையில் குடிநீர் வாரியத்தின் மூலமாக சில கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கப்படாமல் இருக்கிறது. எனவே அந்தப் பகுதிகளுக்கும் குடிநீர் வசதியைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாத்தூரைப் பொறுத்தவரையில் அநேக கிராமங்களுக்கு ரோடு வசதி இல்லாமல் இருக்கிறது. அந்தக் கிராமங்களுக்கும் ரோடு வசதியை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று நான் தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, சாத்தூர் தாலுக்காவும், ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுக்காவும் சேர்ந்த பகுதிக்கு ஒரு அணைக்கட்டு தேவை. அந்த அழகர்கோயில் அணைக்கட்டைக் கட்டித் தரவேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கேட்டுக்கொண்டிருக்கிறோம் இந்த வருஷத்திலே இல்லாவிட்டாலும்கூட அடுத்த பட்ஜெட்டி

லாவது பணத்தை ஒதுக்கி அதைக் கட்டித்தரவேண்டுமென்று தமிழக அரசை நான் கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்திலே எவ்வளவோ செய்தாலும்கூட அந்தப் பிராந்தியத்திலே இந்த அணைக்கட்டைக் கட்டித்தந்தால்தான், மேற்கு இராமநாதபுரம் ஜில்லாவைப் பொறுத்தவரையில் நல்ல முறையிலே அது பயன்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வீடு கட்டும் திட்டம் என்னுடைய பிராந்தியத்திற்கு விஸ்தரிக்கப்படவில்லை. என்னுடைய தொகுதியிலே பெரும்பாலும் பின்தங்கிய மக்களும், அரசு ஊழியர்களும் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வீட்டு வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே சில கிராமங்களுக்கு குடிநீர் வசதி, ரோடு வசதிகள் இல்லாமல் இருக்கின்றது. இந்த அரசு அதற்கு ஆவன செய்துதரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சில கிராமங்களிலே ஆஸ்பத்திரி வசதிகள் இல்லாமல் இருக்கின்றது. அங்கே எல்லாம் ஆஸ்பத்திரிகளை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** இன்றைக்கு ஒரு மணிக்குள் வாக்கெடுப்பு நடத்தியாகவேண்டும். இன்னும் 3 தலைவர்கள் பேச இருக்கிறார்கள். சுருக்கமாகப் பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. மணலி சி. கந்தசாமி:** தலைவர் அவர்களே, இந்த துணை மானியக் கோரிக்கையின்மீது சில கருத்துக்களைச் சொல்வதற்காக எழுந்து நிற்கிறேன்.

இப்படி துணை மானியம் 64 கோடிக்கு வருவது அதிகப்படியானது என்பது தான் என்னுடைய கருத்து. நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்ற நேரத்திலேயே அடுத்த வருஷத்திலே எவ்வளவு வரும் என்று நல்ல முறையிலே கணித்து சரியான நிதிநிலை அறிக்கையைத் தயாரித்து அளிப்பதுதான் முறையாகும். இப்பொழுது பார்ப்போம். சென்ற ஆண்டு 1 கோடி ரூபாய் மிச்சம் என்று பார்த்து இருக்கக்கூடிய சமயத்திலே இப்பொழுது இந்த 64 கோடி ரூபாயைச் சேர்த்துப் பார்த்தால் அந்த பட்ஜெட் பற்றாக்குறை பட்ஜெட்டாகத் தான் இருக்கவேண்டும். இப்படி பட்ஜெட் தயாரிப்பதை கைவிடவேண்டும். திட்டத்தட்ட ஓராளிற்கு 2, 3 கோடி ரூபாய் அதிகப்படியான செலவினங்கள் என்றால் ஒத்துக்கொள்ள முடியும். 64 கோடி ரூபாய் என்றால் ஏதோ பஞ்சத் தணிப்பு அல்லது எதிர்பாராத வெள்ளத்தையொட்டிய நிவாரண வேலைகள் இவற்றைத்தவிர பாக்கிக்கு எல்லாம் திட்டமிட்ட முறையிலே பட்ஜெட்





போடப்பட்டு இருக்கவேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பின்னாலே வருகிற வருஷங்களிலாவது இதைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டில் மின்சாரப் பற்றாக்குறை இன்னும் தீவிரமாக இருக்கிறது. அதன் காரணமாக இன்றைக்கு டீசல், கிரோஸின் இவற்றின் விலைகள் எல்லாம் ஏறிக்கொண்டே இருக்கின்றன. இந்தத் துணை பட்ஜெட்டிலே இத்தகைய நிலையைச் சரிப்படுத்துவதற்கு என்ன செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படவில்லை. இன்றைக்கு மின்சாரம் ரொம்ப கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படவேண்டிய விஷயமாகும். இந்தச் சட்டசபைக் கூட்டம் முடிந்ததற்குப் பிறகு அதிகப்படியாக மின்சார வெட்டு வரும் என்று பேச்சுகள் வந்துகொண்டிருக்கின்றன. எனவே இதிலே தீவிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பஞ்சத் தணிப்பு, வெள்ள நிவாரணம் இவைகளுக்காக பல கோடி ரூபாய் ஒதுக்கப்படுகிறது. இது அவசியமானது, நியாயமானது என்பதிலே ஆட்சேபணையில்லை. பத்து கோடியோ 5 கோடியோ செலவு செய்யப்பட்டதற்குப் பிறகு அதற்காகச் செய்யப்பட்டிருக்கின்ற வேலைகள் காரணமாக வருகின்ற ஆண்டிலே எந்த அளவிற்கு இந்த ராஜ்யத்தினுடைய வருவாய் பெருகியிருக்கிறது, உற்பத்தி பெருகியிருக்கிறது என்பதையெல்லாம் மதிப்பிடவேண்டும். பெரும்பாலும் பஞ்சத் தணிப்பிற்காக ஒதுக்கப்பட்ட பணம் எப்படிப் போயிற்று, என்ன ஆயிற்று என்று தெரியாத நிலைமை இருக்கிறது.

பஞ்சத் தணிப்புத் திட்டம், வெள்ள நிவாரணத்திட்டம் ஒவ்வொன்றும் எப்படிச் செயல்படுத்தப்பட்டன என்பதை அறிவிக்கக்கூடிய முறையில் தமிழ் நாட்டிலே உள்ள செல்வ நிலை, வளம் எப்படி அதிகரித்து இருக்கிறது அல்லது பின்னாலே அப்படி அத்தகைய நிலைமைகள் ஏற்படாமல் செய்யப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றியெல்லாம் ஒரு அறிக்கை இங்கே வைக்கப்பட்டால் அது நல்ல முறையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி இல்லையென்றால் அது விழலுக்கு இறைத்த நீராகத்தான் போய்விடும்.

உணவுத் துறை சம்பந்தமாக நான் ஏற்கனவே கூறினேன். இப்பொழுதும் கூறுகிறேன். இப்பொழுதும்கூட பெரிய அளவுக்கு திட்டவட்டமாகக் கொள்முதல் செய்ய ஆரம்பியுங்கள். அதற்காகப் பணத்தைச் செலவு செய்யுங்கள். சில மாதங்களுக்குப் பிறகு ஏற்படக்கூடிய உணவு நெருக்கடியைத் தீர்ப்பதற்கு வழி செய்யும். ஏதோ எல்லாம் சரியாகப் போய்விடும் என்று இருந்தால் இன்னும் பெரிய நெருக்கடியாகத்தான் வரும்.

அரிசி விலை ஏறுவதானது பெரிய அளவிற்கு ராஜ்யத்தினுடைய சூழ்நிலையைப் பயங்கரமான அளவுக்கு திசை திருப்பும் நிலைமைக்குக் கொண்டு போய்விடக் கூடிய நிலைமை ஏற்படலாம் என்ற எச்சரிக்கையோடு இருக்கவேண்டும். உணவுத் துறையிலே அதிகப்படியாகச் கொள்முதல் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

இன்றைக்கு ஆயிரம்தான் பேசினாலும்கூட சில அடிப்படை நடவடிக்கைகள் எடுத்தால் அல்லாது, நிர்தாட்சண்யமாக எடுத்தால் அன்றி, இன்றைக்கு இருக்கக்கூடிய பல்வேறு நெருக்கடிகளைத் தீர்க்கமுடியாது. சோஷலிச சமுதாயம் என்று பேசிக்கொண்டிருந்தாலும் அதற்காக இவ்வளவு ரூபாய் என்று செலவழித்துக் கொண்டிருக்கிறோம், அந்தத் திசைவழி போய்க் கொண்டிருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டிருந்தாலும், நிலச் சீர்திருத்தத்தைப் பொறுத்தவரையில் லட்சக்கணக்கான விவசாயிகளுக்கு நிலம் கிடைக்கக் கூடிய முறையிலே—அவர்கள் 40 என்றார்கள், நாங்கள் 30 என்கிறோம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு இருந்தால் நல்லதல்ல—இந்தப் பிரச்னையைத் தீர்க்காவிட்டால் அந்த நெருக்கடி சுற்றிச் சுற்றிதான் வந்துகொண்டிருக்கும்.

கிராம மக்களுடைய வாங்கும் சக்தியை அதிகரிப்பதுதான் சோஷலிச சமுதாயத்தின் அஸ்திவாரமாக இருக்கிறது. இன்றைக்கு இருக்கின்ற நிலையிலே கோயில் நிலங்கள், குடியானவர்கள் இருக்கிற நிலங்களைக் கொடுப்பதற்கு சட்டம் கொண்டுவருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் விலை கொடுத்து வாங்குவதற்குப் பதிலாக சில வருஷங்களுக்கு நியாய குத்தகை பாக்கியைக் கட்டிவிட்டு இயற்கையாகவே அவர்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்ளக்கூடிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்தால்தான் இந்தப் பிரச்னையைத் தீர்க்கமுடியும். நான் கேட்கிறேன். பல லட்சக்கணக்கான மக்களுக்கு இன்றைக்கு நிலம் கொடுத்திருக்கிறீர்கள் என்று சொல்கிறீர்கள்.

சாப்பிடுவதற்கு வழி இல்லாவிட்டால் கூட அரிஜனங்களுக்குக் குடியிருப்பு மனை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை ஒப்புக் கொள்கிறேன். அவர்களுக்கு வாழ்விற்கு வழி இல்லாவிட்டால் சில வருஷங்களில் தந்த குடியிருப்பு மனைக் கட்டுகளை விற்பனை செய்வதற்கான சூழ்நிலை ஏன் ஏற்படாது என்பதைப் பற்றி நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டாமா? அவர்களுக்கு குடியிருப்பு மனை கொடுத்து விட்டோம் என்பது மாத்திரமல்ல. அவர்கள் நிம்மதியாக வாழக் கூடிய விதத்தில், அவர்களுக்கு வளம் தரக் கூடிய விதத்தில் நிலச் சீர்திருத்தசட்டம் திருத்தப்படவேண்டும்.



காங்கிரஸ்காரர்கள் ஆண்ட காலத்திலே இருந்த நிலைமையையும் இப்போதிருக்கிற நிலைமையையும் ஒப்பிட்டுப் பேசிக்கொண்டிருப்பது ஒரு நாளும் பிரச்சினையைத் தீர்க்காது. அவர்கள் போன பிறகு ஆட்சிக்கு வந்திருக்கக் கூடிய கட்சி இந்த ஆட்சியில் தொடர்ந்து நீடிக்கவேண்டுமானால், இன்றைக்கு இருக்கக்கூடிய பிரச்னைகள் தீவிர நிலைமையிலே தீர்க்கப்படவேண்டுமானால் அதற்கேற்ற நிலைமையில் சிந்திக்க வேண்டும். அவர்களைவிட நாங்கள் தேவை என்று சொல்வது பொருத்தமானதல்ல. நெருக்கடி பெரிய அளவிற்கு இருப்பதைப் பார்க்கவேண்டும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

டில்லியில் கம்யூனிஸ்டுக் கட்சித் தொண்டர்கள் அணி வகுத்துச் சென்று இந்திரா காந்தியை பதவியிலிருந்து இறங்குங்கள் என்று சொல்கிற அளவிற்கு கிளர்ச்சி செய்திருப்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இறங்குங்கள் என்று கோஷம் போட்டிருக்கிறார்கள். உங்களால் தேர்தல் வாக்குகளை நிறைவேற்ற முடியாவிட்டால் கீழே இறங்குங்கள் அல்லது வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டும் என்று கோஷம் போட்டிருக்கிறார்கள் என்று பத்திரிக்கையில் படித்து இருக்கலாம். எங்களுடைய போக்கெல்லாம் கட்சிக் கண்ணோட்டத்தோடு அல்ல, சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டுமென்கிறோம். நிலச் சீர்திருத்தம் என்று சொன்னால் சம்பிரதாயத்திற்காக 30-ஐ 15 ஆக்கி விட்டோம் என்பது அல்ல.

எங்களுடைய கணக்குப்படி அத்தனை பேருக்கும் ஒரு ஏக்கர் நிலம் வரவேண்டும். அத்தகைய விதத்தில் நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டு வருவீர்களானால் எந்த அளவிற்கு ஒத்துழைப்பு தரவேண்டுமோ அந்த அளவிற்கு ஒத்துழைப்பு தரத் தயாராக இருக்கிறோம். பல விஷயங்களில் இதைப் பார்க்கிறோம், இது தவறான வழியில் கொண்டு போய்விடும் என்று கூறிக் கொள்கிறேன். முன் அரசோடு ஒப்பிட்டுப் பார்க்க உங்களுக்கு ஓட்டு போடவில்லை. ஒரு ஸ்வீப்பிங் என்ற நிலையில் உங்களைத் தேர்ந்தெடுத்தது இப்படி ஒப்பிட்டுப் பாருங்கள் என்று சொல்வதற்காக அல்ல.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இப்படி நாங்கள் ஒப்பிட்டுப் பாருங்கள் என்று சொல்வது அதை விடச் செய்திருக்கிறோம் என்பதற்காக அல்ல. எதையுமே செய்யவில்லையென்று சொல்லக்கூடாது. எங்களால் முடிந்தவற்றை செய்திருக்கிறோம் என்று நினைப்படுத்தச் சொல்கிறோம்.

திரு. மணலி சி. கந்தசாமி: இதற்கு நீங்கள் செய்ததைச் சொல்லிக் கொண்டிருக்கலாம். ஒப்பிட்டுச் சொல்லவேண்டிய அவசியமில்லை. அதுதான் என்னுடைய அபிப்பிராயம். எதையும் ஒப்பிட வேண்டாம். நமக்கு முன்னால்

இருக்கிற பிரச்சினைகளை எப்படித் தீர்ப்பது என்பதைப் பற்றி உங்களுடைய ஆலோசனைகள், எங்களுடைய ஆலோசனைகள் இவற்றை வைத்துக்கொண்டு ஒரு முடிவிற்கு வரவேண்டுமே தவிர இப்படிச் செய்யக்கூடாது. நம் ராஜ்யத்தைப்பற்றி நாம் அக்கறைப் படுவோம், நம் பிரச்சினைகளைத் தீர்க்கிற வழியில் செயல்படுவோம் என்று செயல்படவேண்டும்.

நிலச் சீர்திருத்தத்தைப் பற்றித் தெளிவாகச் சொல்கிறேன். இந்த விதி விலக்குகள் பொறுத்தவரையில் அப்படி வைத்துக் கொண்டிருக்கிற நிலங்களை நிர்த்தாட்சண்யமாக எடுத்து எல்லோருக்கும் நிலங்கள் கிடைக்கக்கூடிய வகையில் நிலச் சீர்திருத்தத்தைக் கொண்டு வரவேண்டும். கல்விப் பணிக்காக சில ஒதுக்கீடுகள் இருக்கின்றன. கல்விப் பணி என்று சொல்லும்போது ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் விஷயத்தில் முதலமைச்சர் அவர்கள் கருணை காட்ட வேண்டும். 40 ரூபாயை 50 ரூபாய் ஆக்கவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அவர்கள் வயதான ஆட்கள். (மணி அடிக்கப்பட்டது.) அந்த அம்மையார் பேசும்போது பேசாமல் உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** அந்த அம்மையாருக்கு தனிச் சலுகை கிடையாது. அவர் பேசுகிற நேரத்தில் அமைச்சர்கள் குறுக்கிட்டார்கள், உறுப்பினர்களெல்லாம் குறுக்கிட்டார்கள். முதலமைச்சர் அவர்கள் 12-45 மணிக்குப் பேசவேண்டும். மூன்று தலைவர்கள், டாக்டர் ஹாண்டே, திரு. மதியழகன், திரு. பொன்னப்ப நாடார் இவர்கள் பேச இருக்கிறார்கள். அருள்கூர்ந்து சீக்கிரம் முடித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. மணலி சி. கந்தசாமி:** அடுத்தபடியாக பாசன வடிகால் சம்பூர்த்தமாக விஞ்ஞான முறையில் அணுகவேண்டும். நல்ல முறையில் விநியோகம் செய்தால்—தமிழ்நாட்டில் மிகவும் சிறந்த முறையில் எந்தவிதமான பஞ்சமும், வெள்ளமும் ஏற்படாமல், பாசனத்தை அதிகப்படுத்தி லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு வசதி செய்யப்பட வேண்டும் என்ற அடிப்படையில் அதிகக் கவனம் செலுத்தப்பட வேண்டும். குறிப்பாக என் தொகுதியில் இளகாங்கி வடிகால் ஒவ்வொரு வருஷமும் 14 ஆயிரம் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறது.

இந்த மெடிகல் சம்பந்தமாக ஒரேயொரு கருத்தைச் சொல்லி விடுகிறேன். மக்களுக்கு வேண்டிய அளவிற்கு வைத்திய வசதி செய்து கொடுப்பதற்கு உண்மையாகப் பாடுபட வேண்டுமானால், இந்தப் பணத்தை வைத்துக்கொண்டு

நல்லவிதமாகச் செலவு செய்யவேண்டுமானால், ஆந்திராவில் அரசாங்கத்தில் வேலை செய்கிறவர்கள் பிரைவேட் பிராக்டீஸ் செய்யக்கூடாது என்று உள்ளதைப் போல் நாம் கட்டாயமாக முடிவு எடுத்தாகவேண்டும். அப்போது தான் திறமையானவர்கள் வேலை செய்ய முடியும், சர்க்கார் ஆஸ்பத்திரியில் நெருக்கடி குறையும், சர்க்கார் கொடுக்கக்கூடிய பணத்தை மூலதனமாக வைத்துக்கொண்டு வியாபாரம் செய்யக்கூடிய போக்கை நிறுத்த உதவும் என்று தெரிவித்துக்கொண்டு நான் சொல்லியிருக்கிற கருத்துக்களையெல்லாம், முக்கியமாக நிலச் சீர்திருத்தம், உணவு தானிய வியாபாரம் இவைகளில் கவனம் செலுத்த வேண்டுமென்று அறிவுறுத்திவிட்டு உரையை முடித்துக்கொள்கிறேன்.

Dr. H. V. HANDE : At the outset I have to bring to the attention of the Government the point raised by Thirumathi T. N. Anandanayaki, i.e., with regard to the number of people who have been given licences, the manner in which licences were given and the manner in which they are functioning. Quite a number of persons who have accepted this 'yelam' find after a few months that they are not able to proceed further at all. It is for this reason that we mentioned in this House the scrapping of prohibition must stop. But Govrenment did not listen to us. The net result today is that hundreds and thousands of families are suffering.

We were telling the people not to take this trade, not only will it destroy the people who traded but also the people who are taking to drinking. Nobody listened to us. What we feared has come true.

Those who took to this trade are suffering. The people who drink suffer. I understand that a number of families who had taken these licences are on the verge of committing suicide because they are not able to proceed further. I think it would be better to reduce the number of shops. That is No. 1.

Secondly, if they are prepared to surrender according to what is ingrained in the Act, they can surrender as is done in Kerala. There after running for a few months, for the unexpired portion of the 'yelam,' they can surrender to Government and then they can go home. Same could be done here. Otherwise number of families would be ruined.

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1973 மார்ச் 28

Another thing. Number of persons are carrying on in illicit liquor. What is the purpose of Government bringing this legislation? Again and again I say that the scrapping of prohibition is the greatest blunder committed by this Government. It has done harm to them, their party and to the country. Having committed the blunder, having mortgaged the life of the poor people to the liquor, what is the next method of benign killing, mercy killing? That should be properly thought of.

What is the purpose in bringing this scrapping of prohibition? It is to arrest illicit liquor selling. But I have got proof that in Tiruchirappalli there are some persons who are actually engaged in this illicit liquor business. I have got proofs. I shall give their addresses. Since I thought that today this subject will not crop up, I did not bring that. Tomorrow I shall bring those addresses. There in Tiruchirappalli they are getting official patronage also for this. Whether it is at the ruling party level, I leave it for them to decide. How can this patronage be shown? I would urge the total repeal of scrapping of prohibition to end all these. Even now it is not too late to repeal the scrapping of prohibition. Let all these people who have taken this 'yelam' be sorted out and by paying them something, let the Government stop sale of liquor and let them introduce prohibition. Again and again I say, the Chief Minister will not get into trouble; his party will not be in trouble and the number of charges will be stopped. Therefore I would suggest in the interests of the ruling party also, I make an impassioned appeal, that prohibition should be revived. Somehow you have not been able to do that. I can go on speaking on this for hours and hours together but I have no time.

Then with regard to diesel oil, what has the Government done? The Hon. Minister was replying that petrol bunks used current. But what about diesel oil supply? What is the solution? In another four days our mouths will be gagged; tomorrow is the Appropriation Bill and after that there is no discussion and we cannot say anything. It is a very serious matter. The Petrol Bunks are selling petrol in blackmarket, but Government is sitting smug, calm and cool about it. There is not any sign of concern or worry about the matter, I mean about diesel oil.



1973 மார்ச் 28] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

Then there is the Slum Board and there is the Housing Board. The Housing Board has acquired plots. It is the most scandalous thing. Huge sums of money have been paid for worthless land by the Government. ஊழல், ஊழல், ஊழல். That is the talk of the town. This is the biggest scandal. Lands have been acquired by the Government for the Housing Board and that is a very serious matter and extraordinary rates have been given. I do not know why the Government is not taking any action. Huge sums have been paid. Manali is not here; he may know.

ஏழைகளுக்காக இந்த ஆட்சி, தொழிலாளர்களுக்காக இந்தக் கட்சி, டெனன்ட்ஸ்களுக்காக இந்தக் கட்சி என்று சொல்லிக்கொண்டு பெரிய முதலாளிகளுக்கு, கொழுத்த முதலாளிகளுக்குப் பணத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றீர்களே, லட்சக்கணக்கான ரூபாயைக் கொழுத்த முதலாளிகளுக்குப் பணமாகக் கொடுத்திருக்கிறீர்களே ஹவுசிங் போர்டில் இருந்து, இது நியாயமா?

How can this be tolerated? How do you give that money to one man? What is this? Where is the land? This is a fraud on the public. How can you give so much of money? It is a very serious matter.

For instance, I will give a concrete example. I do not speak without examples. There is a place called Kottur. What is the amount that has been paid for acquisition of land? What is the number of acres? 22 acres. I ask anybody to say how much money can be given for 22 acres. Any one can say. It is Kottur. It is just arable land. It is not developed land. How much can be given? (Interruption: It depends on the fertility of the land. Even then how much can be given? Can anyone answer? சொல்லுங்கள். எவ்வளவு கொடுக்கலாம் சொல்லுங்கள். பத்து லட்சம் கொடுக்கலாமா? 50 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். Fifty lakhs have been given for these 22 acres! Fifty lakhs of rupees for 22 acres; for arable land; it is not developed plot. Is it a small money?

**THIRU K. M. SUBRAMANIAM**: Is it one-five or five-zero?

**DR. H. V. HANDE**: It is five-zero. Are you shocked? Is it not shocking? I do not know. Are you shocked at this?

THIRU K. M. SUBRAMANIAM : Very shocking.

THIRU R. PONNAPPA NADAR : May I know who is the owner?

DR. H. V. HANDE : One M.A.C. Arakkattalai.

THIRU SOWDI S. SUNDARA BHARATHI : Sir, can the hon. Member Dr. Hande address other members without addressing the Chair?

DR. H. V. HANDE : No, no. I am addressing through the Chair. Perhaps, Mr. Ponnappa Nadar wants to know how I got the information. It is from an answer to a Starred Question No. 487, answered by the Hon. Minister, Mr. Rajaram.

"(அ) ஆம். 400 கிரவுண்டு. . . .

(இ) மேற்கூறிய நிலமானது எம்.ஏ.சி. அறக்கட்டளையிடமிருந்து ரூபாய் 50,34,691.50 அளிக்கப்பட்டு வாங்கப்பட்டிருக்கிறது." Fantastic; how do you give it? Who authorised you to give? Have you got the right?

தஞ்சாவூரில் கூட அவ்வளவு கொடுக்கமாட்டார்கள்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** நிலத்தின் விலை இடத்திற்கு இடம் மாறுகிறது. கடலூரில் ஒரு நிலம் ஏக்கர் 75,000 ரூபாய்க்குப் போகிறார்கள். சேலத்தில் லட்சம் ரூபாய்க்கு மேல் இருக்கிறது. 50 லட்சம் கொடுத்து விட்டோம், கொடுத்து விட்டோம் என்றால் எவ்வளவு நிலத்திற்கு 50 லட்சம் கொடுத்திருக்கிறோம் என்று பார்க்க வேண்டும். அங்கே ஒரு கிரவுண்ட் 18,600 ரூபாய்க்கு விலைக்குப் போகிறது. நிறைய அதற்கு விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. கொடுப்பதற்கு இடம் இல்லை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** கிரவுண்ட் அந்த விலைக்குப் போனது 50 லட்சம் ரூபாயாக அந்த விலையை உயர்த்திய பிறகா அல்லது அதற்கு முன்பா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** ஒரு விளக்கத்தைக் கொடுக்க விரும்புகிறேன். அந்த நிலத்திலிருந்து எவ்வளவு லாபம் கிடைத்திருக்கிறது என்று பார்க்க வேண்டும். ஹவுசிங் போர்டு விசாரித்துத்தான் செய்கிறது. நஷ்டத்தில் நடக்கவில்லை, லாபத்தில் நடக்கிறது. இந்த நிலம் அட்டாச்டு ஆக இருக்கிறது. இதற்கு எவ்வளவு விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன என்று வேண்டு

மாறுலும் காட்டுகிறேன். பல பேரிடத்திலிருந்து சிபாரிசு வந்திருக்கிறது. அந்த அளவுக்கு நிலத்தை வாங்கியதில் தப்பு இல்லை. அந்த விலை பெறுமான விலைதான்.

THIRU R. PONNAPPA NADAR: May I know whether it was a negotiated purchase or whether it was the court that gave the compensation or an award?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** அவார்டாகக் கொடுக்கப்பட்டது. அதிலே எந்தவிதமான சந்தேகத்திற்கும் இடம் இல்லை. சென்னையிலும், மற்ற இடங்களிலும் நிலம் வாங்கினால் ஹைகோர்ட்டின் தீர்ப்பு எப்படி என்றால் பக்கத்தில் இருக்கும் நிலம் 15,000 ரூபாய்க்கு விற்கப்பட்டிருக்குமானால் அந்த விலைக்குத்தான் வாங்கியாக வேண்டும். கோர்ட்டுக்குப் போனால் அப்படித் தான் தீர்ப்பு கொடுப்பார்கள். இவர்களும் அப்பீலுக்குப் போயிருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, நான் கொடுத்த விடை சரியான விடைதான்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** அரசு நெகோஷியேட் செய்து அவார்டு கொடுத்த பிறகு நிலச் சொந்தக்காரர் கோர்ட்டுக்குப் போனார் அல்லது ஹைகோர்ட்டுக்குப் போய் அதற்குப் பிறகு 50 லட்சம் கொடுக்கப்பட்டதா?

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** அதெல்லாம் ஒன்றுமில்லை. ஏற்கெனவே கொடுத்து விட்டார்கள். பெரிய துடியலூரின் வரிப் பண்ணைக்கு 50 லட்சம் ரூபாயை மொத்தமாகக் கொடுத்து விட்டார்கள். எப்படிக் கொடுத்தார்கள் என்று யாருக்கும் தெரியவில்லை. அந்தப் பகுதியில் ரோடு கிடையாது, ஒன்றுமே கிடையாது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அமைச்சர் அவர்கள் விவரங்களைச் சொன்னார்கள். அதற்குப் பிறகும் மறுபடியும் அவ்வளவு தொகையைக் கொடுத்து விட்டோம் என்று கூறுவது சரியல்ல. அவார்டுபடி கொடுத்த தொகை குறைவாக இருக்கிறது, அதிகமாகக் கொடுக்க வேண்டும், அதற்கு இன்னின்ன ஆதாரம் என்று அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். இதிலே அரசாங்கம் தவறு செய்துவிட்டது என்று சொல்லுவதற்கில்லை. அவர்கள் வழக்குமன்றத்திற்குப் போனாலும் அரசாங்கமும் தாவா பண்ணத்தான் போகிறது. இதிலே அதிகாரிகள் லாண்ட் அக்விசிஷன் ஆக்ட்படி முடிவு செய்கிறார்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** நான் சொன்னது, அவ்வளவு பெரிய இடத்தை எப்படி வாங்க முடியும்? அவ்வளவு டெவலப் பண்ணாத பிளாட்டுகள்...

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** ஒவ்வொரு ஊரிலும் 50 ஏக்கர், 100 ஏக்கர் என்று எடுக்கத் திட்டம் போட்டு நிறைய நிலங்களை வாங்கிக் கொண்டிருக்கிறோம். நான் போய் எங்கே நிலம் இருக்கிறது என்று பார்ப்பதில்லை. தாசில்தார் இருக்கிறார், டெபுடி கலெக்டர் இருக்கிறார், கலெக்டர் இருக்கிறார். கடைசிக் கையெழுத்து ஒன்றுதான் என்னுடைய கையெழுத்து. இடம் எங்கே இருக்கிறது என்பது தெரியாது. அடிக்கல் நாட்டு விழாவுக்கு வேண்டுமானால் ஒரு வேளை போகலாம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** பார்க்காமல் கையெழுத்து போட்டு விட்டதாக அவர்களே தெரிவித்தார்கள்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மந்திரி போய்ப் பார்ப்பதில்லை. ஒன் பர்சனல் இன்டரஸ்ட் இதிலே கிடையாது. மந்திரிகள் போய்ப் பார்ப்பதில்லை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** அடிக்கல் நாட்டு விழாவுக்குப் போகிறேன் என்றார்கள். என்னுடைய குற்றச்சாட்டு எல்லாம் அவ்வளவு பணம் கொடுத்தது தவறு என்பதுதான். நமக்குச் சந்தேகமாக இருக்கிறது. உங்களுடைய பதில் கொஞ்சம் கூடத் திருப்தியாக இல்லை. 50 லட்சம் ரூபாய் ஒரு நபருக்கு ஒரு நாட்டில் கொடுப்பது ரொம்பத் தவறு, கண்டிக்கத் தக்கது. All the papers pertaining to this transaction should be given to Members. அதற்கான நீங்கள் அளித்த விடையில் எந்தவிதமான திருப்தியும் இல்லை என்று சொல்லிக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** லாண்ட் அக்விசிஷன் ஆக்டின் கீழ் மார்க்கெட் வால்யூ என்ன என்று பார்த்து அதிகாரிகள் அவார்டு பாஸ் செய்கிறார்கள். நிலத்தைக் கொடுத்தவர்கள் குறைவாகக் கொடுத்திருக்கிறார்கள் என்று நீதிமன்றத்திற்குப் போகிறார்கள்.

இது மார்க்கெட் ரேட்டா, இல்லையா? என்று பரிசோதிக்க அமைச்சர் அவர்கள் ஒரு வழி சொன்னார்கள். அந்த இடங்களில் ப்ளாட்ஸ் போட்டு விற்றுக் கொண்டிருக்கிறோம். அப்படி விற்றுக்கொண்டிருப்பதால் அதிக விலைக்குப் போகிறது. என்ன விலைக்கு வாங்கினோமோ அதைவிட அதிக விலைக்குப் போகிறது. மார்க்கெட் ரேட்தான் கொடுக்கவேண்டும் என்பது லாண்ட் அக்விசிஷன் ஆக்டின் கீழ் உள்ள ஒன்று. வாங்கினோம். குறைந்த



விலைக்குப் போயிருந்தால் ஏன் அதிக விலை கொடுத்தீர்கள் என்று குற்றம் சாட்டலாம். அதிக விலைக்கு வாங்கவில்லை, மார்க்கட் ரேட்டுக்குத்தான் வாங்கியிருக்கிறோம். அதில் தவறு இல்லை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** பேப்பர்களை எல்லாம் கொடுங்கள். இரண்டு மூன்று உறுப்பினர்கள் சேர்ந்து, திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் . . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண் முகம்** I still insist மார்கெட் ரேட் தான் கொடுக்கவேண்டும் என்பது முன்னாள் அமைச்சர் திருமதி ஜோதி வெங்கடாசலம் அம்மையார் அவர்களுக்குத் தெரியும் என்று நம்புகிறேன். மார்க்கெட் ரேட்டுதான் கொடுக்கவேண்டும் என்பது லான்ட் அக்விஷன் ஆக்டின்கீழ் இருக்கிறது. இது லான்ட் ரிபார்ம்ஸ் அல்ல. அக்விசிஷன் ஆக்ட்படி மார்க்கெட் ரேட் கொடுக்கவேண்டும். வாங்கியதில், மார்க்கெட் ரேட்டில் தவறு செய்திருந்தால் அவார்ட் செய்த ஆபீசர்கள்மீது நடவடிக்கை எடுக்கலாம். குறைவு என்று நீதிமன்றத்திற்குப் போயிருக்கிறார்கள். ப்ளாட் பிரித்துக் கொடுக்கும்போது வாங்கியதை விட இரண்டு மடங்கு விலை வருகிறது. வாங்கியது ரூ. 12,000 என்றால் ரூ. 25,000-க்குப் போகிறதே தவிர அதிகமாகக் கொடுத்து வாங்கி விட்டோம், மார்க்கெட் ரேட்டை விட அதிகம் கொடுத்துவிட்டோம் என்று குற்றஞ்சாட்டுவதில் ஆதாரம் இல்லை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** வாங்கி எவ்வளவு வருடங்களாயிற்று? அப்போது இருந்த மார்க்கட் ரேட் என்ன?

(பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்போது கிரவுண்ட் என்ன விலைக்குக் கொடுக்கப்படுகிறது? சென்னையில் அதிகம் என்று கருதுகிறீர்களா? என் நினைவு ரூ. 10,000-ல் இருந்து ரூ. 11,000-க்குள்ளாக ஒரு க்ரவுண்டுக்குக் கொடுக்கப்படுகிறது. ஸொலேஷியம் வேறு இருக்கிறது. ஒரு க்ரவுண்டுக்கு இவ்வளவு விலை என்று நிர்ணயிக்கப்படுகிறது. இது அதைவிடக் கூடுதலாக இருக்கிறது என்று கருதுகிறார்களா? கூடுதலா இல்லையா என்பதை அறிந்து கொள்வதற்கு ஒரு வகை இருக்கிறது. ஸ்டாம்ப் ஆக்ட்படி அந்த ஏரியாவில் எவ்வளவு விலை கொடுக்கலாம் என்று நிர்ணயிக்கப்படுகிறது. அதைவிட அதிகம் என்று சொல்கிறார்களா? புள்ளிவிவரம் கொடுத்தால் விசாரிக்கத் தயாராயிருக்கிறோம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** ரோடுகள் ஒன்றும் போடவில்லை. ரூபாய் ஒட்டுமொத்தமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

[1973 மார்ச் 28

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இது ஒரு ஸிம்பிள் மாட்டர். அடுத்தவர்களுடைய நேரத்தை ஆக்கிரமிக்கக்கூடாது. ஒரு நிலம் வாங்கிய காசைச் சொல்கிறார்கள். அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். வியாபாரம், நாம் வாங்கி விற்கிறோம் என்று சொல்கிறார்கள். வாங்கிய விலையையும் விற்ற விலையையும் பற்றிச் சொல்கிறார்கள்.

**திரு. கோவை செழியன் :** மொத்தமாக ஐம்பது லட்சம் ரூபாய் 22 ஏக்கருக்கு என்று சொல்லும்போது எல்லோருக்கும் பயம் வருகிறது. கணக்குப் போட்டுப் பார்க்கும்போது ஒரு கிரவுண்டுக்கு ரூ. 12,500 வருகிறது. அடையாறில் இப்போது ஒரு கிரவுண்டு ரூ. 21,000-க்கு விற்கிறது. அடையாறின் பக்கத்தில்தான் கோட்டூர் இருக்கிறது. ரூ. 12,500 தான் வருகிறது.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** அதை வாங்குவது பற்றி ஒப்புக் கொள்கிறோம். வாங்கும்போது, It was an undevtloped plot. அண்டெவலப்ட் ப்ளாட்டுக்கு 12,000 ரூபாய் கொடுத்ததுதான் பிரச்னை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** நான்தான் கிளப்பியது. எனக்கு அவகாசம் இல்லாமல் போகிறது.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** டெவலப்ட் ப்ளாட்ஸ்க்கு மார்க்கெட் வால்யூ போடுகிறோம். அதை ஒப்புக்கொள்கிறோம் நாங்கள். அன்டேவலப்ட் ப்ளாட்டை வாங்கி, ரூ. 12,000-க்கு வாங்கி ரூ. 18,000-க்கு விற்கிறோம் என்றால் அன்டெவலப்ட் ப்ளாட்டுக்கு அப்படிக் கொடுத்தது அதிகப்படியான பணம் என்பது எதிர்க்கட்சியின் வாதம்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** கடலூரில் அண்டெவலப்ட் ப்ளாட்டுக்கு ரூ. 13,000 சொல்கிறார்கள். விலை கம்மியாக வாங்கிக் கொடுத்தால் வாங்கிக் கொள்ள ஹௌஸிங் போர்ட் தயாராயிருக்கிறது. அது 130 மைல் தள்ளி இருக்கிறது. ஒவ்வொரு ஊருக்கும் ஒவ்வொரு விலை இருக்கிறது. டெவலப்ட் ப்ளாட்ஸ் ஆகத்தான் விற்கிறோம். அது ஹௌஸிங் போர்ட் ட்யூட்டி. ஆகவே அதில் ஒரு பிரச்னையும் இல்லை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** அது அன்டேவலப்ட் ப்ளாட் வாங்கிக் கொடுக்க நாங்கள் இல்லை. கோட்டூர் வேறு The whole area is undeveloped அங்கு ஒட்டுமொத்தமாக வாங்கப்பட்டது. அன்டெவலப்ட் ப்ளாட் அது. எங்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை. ஆகவே ஒரு பரிகாரம் என்னவென்றால் என்டயர் பேப்பர்ஸை கொடுத்துவிட்டால் முடிந்து போய் விட்டது.



1973 மார்ச் 28]

**திரு. கே. ஏ. மதியழகன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "33 ஆம் மானியக் கோரிக்கையின் கீழ், 'நகர் வளர்ச்சி நிதி' என்னும் சிறப்புநிதி ஒன்றை ஏற்படுத்துவதற்காக 1.50 கோடி ரூபாய் கோரப்படுகிறது. நகர் நிலவரி, விற்பனை வரி மீதான மேல் வரி ஆகியவை மூலம், சென்னை, மதுரை ஆகிய மாநகரங்களிலிருந்தும், திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய நகரங்களிலிருந்தும் கிடைக்கிற தொகைகளிலிருந்து இந்த நிதிக்கு வரவு வைக்கப்படுகிறது. இந்த நகரங்களிலும் அவற்றின் சுற்றுப்புறங்களிலும் நகர் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக இந்த நிதி பயன்படுத்தப் படும்". "குடிசைப் பகுதி மாற்றி அமைக்கும் திட்டங்களுடன், சென்னை மாநகரில் உள்ள குடிசைப் பகுதிகளில் சுகாதார மேம்பாட்டுத் திட்டங்களுக் காக 2.50 கோடி ரூபாய்க்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. குடிசைமாற்று வாரியத்துக்கு இதற்கென முதல் கட்டமாக 21 இலட்சம் ரூபாய் கொடுக்கப் பட்டது. எஞ்சிய தொகையான 2.29 கோடி ரூபாய்க்கு மானியக் கோரிக்கை 29-ன் கீழ் வகை செய்துள்ளோம்." இந்த ஒரு இனத்தின் அடிப்படையில் மட்டும் சில கருத்துக்களைக் கூறி என் உரையை முடிக்கலாம் என்று கருது கிறேன்.

நான் என்னதான் முடித்தாலும் முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொல் வதற்கு—அவர்கள் பதில் சொல்லவேண்டும் என்பதுதான் என் ஆசை—பத்து நிமிடங்கள் நாங்கள் பேசி அவர்கள் பதில் சொல்லாத வாய்ப்பை இந்த மன்றம் ஏற்படுத்தியிருக்கிறது. இந்த ஒரு விவாதத்தைப்பற்றி மட்டும் சொல்லி முடிக்க தங்கள் அனுமதியை வேண்டுகிறேன். நகர் வளர்ச்சி, குடிசை மாற்று வாரியம் இவைகளுக்கு எல்லாம் நல்ல நோக்கோடு நான்கு கோடி ரூபாய் செலவு செய்யப்படுகிறதென்றாலும் அவைகள் எல்லாம் எப்படிச் செலவு செய்யப்படுகின்றன என்பதைப் பற்றி ஆராயாமல் கொள்கை சம்பந்தமான ஒன்றிரண்டு அடிப்படை விவரங்களை மட்டும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கும், இந்த மன்றத்திற்கும் அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் ரெவின்யூ துறை அமைச்சராக இருந்தபோது சென்னை நகர் வளர்ச்சி யிலும், சென்னை நகரப் புறநகர் பகுதி வளர்ச்சியிலும் அக்கறை செலுத்திய தால்—ஏறத்தாழ சென்னை நகருக்குள்ளே அன்அப்ஜெக்ஷனபிள் என்க்ரோச் மென்ட்ஸ், ஆட்சேபகரமற்ற ஆக்கிரமிப்புகள் என்ற பெயரால் 10,000 பேர் களுக்குக் கொடுக்கும்படியான அளவில், 10,000-மும் புற நகரப் பகுதிகளில், ஆவடி, அம்பத்தூர் போன்ற பகுதிகளில் ஆட்சேபகரமற்ற ஆக்கிரமிப்புகள் மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜரத்னம் அவர்கள் தொகுதியிலும், எங்கள்

கட்சித் தலைவர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் தொகுதியிலும், இன்னும் மாஜி தாம்பரம் நகரசபைத் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான திரு. முனு ஆதி அவர்கள் தொகுதியிலும் 40,000 அன்அப்ஜக்ஷனபிள் என்க்ரோச்மென்ட்ஸ், ஆட்சேபகரமற்ற ஆக்கிரமிப்புகள் இருந்து வந்தன.

அவைகள் எல்லாம் அவர்களுக்கு அளிக்கப்படவேண்டும், ஏழை எளிய மக்களுக்கு அளிக்கப்படவேண்டும் என்பதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, அதற்கான ஒரு பெரிய கோரிக்கை, திரு. ராஜரத்னம் அவர்களும், திரு. எம்.ஜி.ஆர். அவர்களும், குன்றத்தூர் உறுப்பினர் திரு. கோபால் அவர்களும் விரும்பியதன் விளைவாக அவைகள் எல்லாம் கொடுக்கப்படுகிற நிலையில் இருந்த ஒரு நேரத்தில் அமைச்சரவையில் ஏற்பட்ட ஒரு அபிப்பிராய பேதம் காரணமாக இவற்றை ஏழை மக்களுக்குக் கொடுக்கக்கூடாது, இவைகள் எல்லாம் பெரிய தொழில் அதிபர்களுக்கு, தொழிற்சாலைகளுக்குக் கொடுக்க வேண்டும் என்று சொன்னதன் காரணமாக காலம் கடத்தப்பட்டு வந்தது. அது இப்போது எந்தக் கட்டத்தில் இருக்கிறது? கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்வார்கள். ரெவன்யூ துறை அமைச்சர் அவர்களைக் காணோம். அவர்களுடைய புதுப் போக்கைப் பாராட்டுகிறேன். இந்த 40,000 குடிசைப் பகுதிகளுக்கும், சென்னை நகரில் இருக்கும் 10,000 குடிசைப் பகுதிகளுக்கும் இன்று வரையில் கொடுக்காமல் இருப்பதற்கு காரணம் என்ன? கொடுக்கப் பட்டு இருந்தால் 3 ஆண்டுக்காலம் ஆகியிருக்கும். விழா நடத்துகிற கட்டத்தில் வந்தது எந்தக் காரணத்தால் நிறுத்தப்பட்டது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அந்தத் தடை நீக்கப்பட்டு அவைகளெல்லாம் கொடுப்பதற்கான அனுமதி அரசின் சார்பில் கொடுக்கப்பட்டு விட்டது.

திரு. கே. ஏ. மதியழகன்: எப்போது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கடந்த 2 திங்களுக்கு முன்பு.

திரு. கே. ஏ. மதியழகன்: 3 ஆண்டுக் காலத்திற்கு முன்பு நான் ரெவின்யூ அமைச்சராக இருந்தபோது இந்த 40,000 குடும்பங்களுக்கும் பட்டா கொடுக்க வேண்டுமென்று சொன்னேன், கொடுக்கப்படவில்லை. இப்போதுதான் உத்தரவு போட்டு இருக்கிறார்கள். அதுவும் புற நகர் பகுதிகளுக்குத்தான். சென்னையில் இருக்கும் 10,000 குடும்பங்களுக்கும் அது வழங்கப்படவில்லை.



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அவைகளும் இதிலே அடங்கும். குடிசை மாற்று வாரியத்திற்கு தேவைதானா என்று கேட்டுக்கொண்டு, குடிசை மாற்று வாரியத்திற்குத் தேவையில்லையென்றால், அது அரசாங்கத்திற்கும் தேவையில்லையென்றால், அது 'அன்அப்ஜக்ஷனபிள்' என்றால் அது தரப்படும். அதுவும் அந்த உத்தரவில் அடங்கும்.

திரு. கே. ஏ. மதியழகன்: அதைத்தான் நான் சொல்கிறேன். 2 ஆண்டுகளுக்கு முன்பே பட்டா வழங்கியிருக்கலாம். அப்படி பட்டா கொடுக்க வேண்டுமென்று வந்த நேரத்தில், உங்கள் கொள்கை ஏழை எளிய மக்கள் மீது அக்கறை இல்லாத காரணத்தால் இந்தக் காலதாமதம் ஏற்பட்டது.

இன்றைக்கு 1½ கோடி ரூபாய் கேட்கிறார்கள். இவைகளெல்லாம் யாருக்கு? இன்று சென்னையில் இருக்கும்—பேசினார்கள் கிரௌண்ட் 20,000 ஆக்கியிருக்கிறோம் என்று—பெரிய செல்வந்தர்கள், ஏராளமான நிலங்களை, வேறுமாதிரியான நிலங்களை வைத்து இருக்கிறார்கள். அன்று போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது எனக்கேகூட உருக்கமாக இருந்தது. சமதர்ம சிற்பியாக, எங்கேயும் காணாத ஒரு சோஷலிசக் கொள்கையை இந்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள் செய்து இருக்கிறார்கள் என்று சொன்னார்கள்.

சோஷலிசம் என்று சொல்கிறீர்களே, நகர்ப்புற நிலங்களுக்கு உச்சவரம்பு கட்டுவது என்பதில் உங்களுடைய கொள்கை என்ன, அதற்கான ஒரு திட்டம், ஒரு அறிவிப்பு உங்களுடைய நிதிநிலை அறிக்கையில் உண்டா? இதில் என்ன செய்யவேண்டுமென்று கருதிக்கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்க ஆசைப்படுகிறேன். இப்படி 'இன்பிரா ஸ்ட்ரக்சர்' அதற்கு வேண்டிய பணிகள் செய்து, மின்சார வசதி, குழாய் வசதி செய்து சாதாரண நிலங்களை 20,000 என்றும், 50,000 என்றும் ஆக்கும் நிலையில் ஒரு பக்கம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒரு பக்கத்தில் ஏழை எளியவர்கள் பல லட்சக்கணக்கான மக்கள் ஏழைகளாகவே இருக்கும் நிலையில் இருக்கிறார்கள். இந்த அரசின் கொள்கை, அர்பன் லாண்ட் சீலிங்கில் என்ன கொள்கை வைத்திருக்கிறது . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஏதோ ஏழைகளுக்கு நிலம் அளிப்பதை நாங்கள் தடுத்ததாகவும், இப்போதுதான் நிலம் அளிக்க முன்வந்ததாகவும், பணக்காரர்கள், தொழில் அதிபர்களுக்கு இடம் அளித்ததாகவும் சொன்னார்கள். அவர்களுடைய காலத்தில்தான் எம்.ஜி.ஆர்.-க்கு சத்தியா ஸ்டுடியோவிற்கு நிலம் அளிக்கப்பட்டது.

**திரு. கே. ஏ. மதியழகன் :** அவர்கள் கட்சிக்காரர்கள் என்பதற்காகக் கொடுத்து இருப்பார்கள். அல்லது வேறு ஏதாவது காரணங்களுக்காகக் கொடுத்து இருப்பார்கள். அதையும் பிரச்சாரத்திற்காகப் பரிசீலிக்கலாம். அளித்ததில் ஏதாவது தவறு இருந்தால் பரிசீலிக்கக் கடமைப்பட்டிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அவர் ஏற்கனவே அதைப்பற்றி கடற்கரையில் குறிப்பிட்டு, திருப்பிக்கொடுத்து விடுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். எதையெதையோ திரும்பிக்கொடுத்திருக்கிறார், இதைத் திருப்பிக் கொடுக்கவில்லை.

**திரு. கே. ஏ. மதியழகன் :** நான் பேசுவது புற நகர்ப் பகுதிகளிலும், சென்னை நகரில் இருக்கும் 10,000 பேர்களுக்கு பட்டா வழங்குவதில் உள்ள தாமதம் பற்றிக் குறிப்பிட்டேன். அவருக்கு எப்போதும் எம்.ஜி.ஆர். ஞாபகம் தான். சத்யா ஸ்டூடியோ ஞாபகம்தான். நான் அதைக் கேட்கவில்லை. அதை முன்னாலேயே கொடுத்திருக்கலாம் என்றுதான் சொன்னேன். நீங்கள் இந்த விஷயத்தில் என்ன கொள்கை வைத்திருக்கிறீர்கள் என்பதைச் சொல்ல வேண்டும். "ஹி மஸ்ட் ஸ்பெல் அவுட் ஹிஸ் பாலிசி". அர்பன் மனையைப் பற்றி என்ன பாலிசி, என்ன கொள்கை வைத்திருக்கிறது இந்த அரசு என்பதைத் தெளிவுபடுத்தவேண்டும்.

ஐந்து லட்சம் ரூபாய் வரை ஒருவர் வைத்துக்கொள்ளலாம் என்றால், ஒரு குடும்பம் என்றால் எத்தனை கிரௌண்ட்ஸ் வைத்துக்கொள்ளலாம்? இன்றைக்கும் 20 கிரௌண்ட் 50 கிரௌண்ட் என்று வைத்திருக்கிறார்கள். அங்கே நாய்கள் ஜாக்கிரதை 'பிவேர் ஆப் டாக்ஸ்' என்ற போர்டுதான் தொங்குகிறது. அதே நேரத்தில் இன்னொரு பக்கத்தில் குடிசை மாற்றுவாரியத்திற்கு இடம் கிடைக்காமல் இருக்கிறது. இதை மாற்றியமைக்கவேண்டும். (மணியடிக்கப்பட்டது) ஏராளமாகப் பேச அவருக்கு நேரமிருக்கிறது. நான் 1 நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

என்னுடைய கருத்தெல்லாம், நகரச் சொத்துக்களுக்கு உச்சவரம்பு கொண்டு வருவதில் உங்களுடைய கருத்து என்ன? எத்தனை கிரௌண்ட்ஸ் வைத்துக்கொள்ளலாம், அதற்குக் கமிட்டி போட்டீர்களே அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள், அவற்றைச் செயல்படுத்தியிருக்கிறீர்களா என்பதைச் சொல்லவேண்டும். இதைப் பார்த்தால் இப்போது நாக வளர்ப்புக் காரியங்களுக்காக மேலும் பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். பணக்காரர்கள் இன்னும்





பணக்காரர்கள் ஆகவும், ஏழைகள் இன்னமும் கீழ் நிலையில் இருப்பதால் அந்த விவாதத்தை விளக்கமாகச் சொல்லுங்கள். இன்று இல்லாவிட்டாலும், நாளையும் அது தொடர்கதையாக இருப்பதால் ஒதுக்கீடு மசோதாவில் விரிவான கொள்கைகளை அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, ஒரு சில கருத்துக்களை மட்டும் சொல்லிமுடித்துக்கொள்கிறேன். ஐ.எம்.எஸ். லோன் வசூல் சம்பந்தமாக கெடுபிடி இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அரசாங்கம் அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். உதாரணமாக செங்கற்பட்டு மாவட்டத்தில் திருநின்றவூர் என்ற பகுதியில் விவசாயிகளின் மாடு, மற்ற தளவாடங்களை ஜப்தி செய்யும் நிலை இருக்கிறது. இங்கே விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சமயநல்லூர்பற்றி ஒரு கருத்து கூற வேண்டுமென்று நினைக்கிறேன். சமயநல்லூரில் அந்தக் கட்டடம் அப்படியே இருக்கிறது. அங்கேயிருந்து அந்த ஜெனரேட்டர் அகற்றப்பட்டிருந்தாலும் வேறு ஒரு ஜெனரேட்டர் அவசர அவசியமாகக் கொண்டு வந்து அங்கே கரண்ட் உற்பத்தி செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆதலால் அந்த முறையில் உற்பத்தி செய்யவேண்டுமென்று அந்தப் பகுதியில் உள்ளவர்கள் அபிப்பிராயம் தெரிவிக்கிறார்கள். அப்படிச் செய்தால் மதுரை மாநகரில் இருக்கும் மக்களுக்கு, ஆக்கமும், ஊக்கமும் அளிப்பதாக இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

தனியார் துறையில் இருக்கும் பல நிறுவனங்களை தேசிய உடைமையாக்க திட்டமிட்டு இருக்கிறார்கள். அதை வரவேற்கிறோம். ஆனால் அதில் தொழில் செய்து கொண்டிருக்கும் பல ஊழியர்கள் இன்று அவர்களுடைய பதவியிலிருந்து நீக்கம் செய்யப்படுவார்களா அல்லது அவர்களை அரசாங்கம் எடுத்துக் கொள்வார்களா என்ற சந்தேகத்தில் ஆழ்ந்து இருக்கிறார்கள். இது ஒரு முக்கியமான பிரச்னை என்பதால் அத்தனை ஊழியர்களையும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

பல காரணங்களால் தொழில் தகராறு ஏற்பட்டு இருக்கிறது. அவைகளை உடனடியாக பைசல் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாலிடெக்னிக் ஸ்டூடென்ட்ஸ் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இதனால் அவர்களுடைய படிப்பு முடங்கியது மட்டுமல்லாமல் பலவிதமான பெருத்த கஷ்டமும் பயமும் ஏற்படுகிறது. மாணவர்கள் தவறு செய்திருந்தாலும்,

அந்தத் தவற்றைப் பெரிதுபடுத்தாமல், அவர்களுடைய பெற்றோர்கள் படும் கஷ்டத்தை மனதில் கொண்டு, அவர்கள் தவறு செய்திருந்தால் அதை மறந்து நல்ல சீரான முறையில் அவர்களை நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, இந்த அறிக்கையின் 86-வது பக்கத்திலே ஒரு அறிவிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. சக்தி பைப்ஸ்க்காக ரூ. 28 லட்சம் லோன் கொடுத்து இருப்பதாகக் கொடுத்திருக்கிறார்கள். அந்த பாக்டரியை 'ரீ-கன்ஸ்டிரக்ட்' செய்வதற்காக என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதில் 480 தொழிலாளர்கள் பணி புரிகிறார்கள் என்று அறிகிறேன். இதுகாறும் 65 லட்சம் ரூபாய் மொத்தமாக கொடுத்து இருக்கிறோம். இன்னும் அது திறந்து இயங்கவில்லை. இதற்கு இன்னும் அதிகமாகப் பணம் கொடுக்கவேண்டுமா ? இதுவரை செலவு செய்து அது ஒன்றும் முன்னேற்றம் காணுததால் ஏன் அந்த ஒரு நிறுவனத்தை மேற்கொண்டும் ஊக்குவிக்க வேண்டுமென்று குற்றஞ்சாட்ட விரும்புகிறேன்.

பரமக்குடி முனிசிபாலிடியில் நடந்த நிகழ்ச்சியைப் பற்றிக் கூறினார்கள். ஒன்று கூற விரும்புகிறேன். கமிஷனர் சரியான முறையில் நடக்கவில்லை என்று பல புகார்கள், தந்திகள் வந்து இருக்கின்றன. அவர்கள் என்ன செய்து இருக்கிறார்கள் ? ஸ்கேவன்ஜர் தொழில் செய்யக்கூடாது என்றெல்லாம் கூறியிருக்கிறார்கள். அத்தகைய முறையில் ஒரு கமிஷனர் பழி வாங்கும் நிலையில் நடந்து இருப்பார்களானுல் அவர்கள் மீது நிச்சயமாகத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். நாராயணன் செட்டியார் தப்பு செய்திருந்தால் நடவடிக்கை எடுக்க வேண்டியதுதான். கமிஷனர் தவறு செய்திருந்தாலும் நடவடிக்கை எடுக்கவேண்டும். அவர்களை சஸ்பெண்ட் செய்து, எந்தவிதமான நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் நிரம்பப் பேசவேண்டியிருக்கிறது. அவசியம் ஏற்பட்டால் சுருங்கச் சொல்லிக்கொள்கிறேன். இப்படி எங்களுக்குத் தரப்படுகிற நேரத்தில் தான் குறைந்து விடுகிறது. இருப்பினும், முக்கியமான சிலவற்றை மட்டும் நான் எடுத்துச் சொன்னேன். மற்றவற்றை நாளையதினம் விளக்கமாகக் கூறுகிறேன் என்று சொல்லி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, இந்த இறுதித் துணை மானியம் மதிப்பீடுகளில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நிறைய கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். திரு. பொன்னப்ப நாடார்

அவர்கள் குறிப்பிட்டதுபோல் கடைசியாக நேரத்தை நானும் அவருமாகத் தான் பங்கிட்டுக் கொள்ளுமளவிற்கு, இன்னும் பத்து நிமிஷத்திற்குள் என்னுடைய பேச்சை நான் முடிக்க வேண்டியவனாக இருக்கிறேன்.

பல கருத்துக்கள் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டன. குறிப்பாக நம்முடைய டாக்டர் ஹாண்டே அவர்களும் திருமதி அனந்தநாயகி அவர்களும் வலியுறுத்த மதுக்கடைக்காரர்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமங்களைப் பற்றியெல்லாம் மிக விளக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அவைகளை எந்த வகையில் பரிசிலிக்கலாம் என்பது குறித்தும் அரசு ஆராய முயலுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன் தொடக்கத்திலேயே பாதிக்கப்பட்ட பல பேர் அரசுக்கு முறையீடுகள் அளித்தபோது வெளியேயிருந்த சில கட்சித் தலைவர்கள் கள்ளுக்கடைக் காரர்களுக்கு, ஏதோ அவர்களிடமிருந்து கோடிக்கணக்கான ரூபாயைப் பெற்றுக் கொண்டு சலுகைகளை அளிக்கப் பார்க்கின்றார்கள் என்பது போன்ற தவறான பிரசாரங்களை எல்லாம் செய்தார்கள். இப்பொழுது சுதந்திரா கட்சியினுடைய சார்பிலும், கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தங்கமணி அவர்களும், திருமதி அனந்தநாயகி அவர்களும் இப்பொழுது சொன்ன இந்தக் கருத்தின் அடிப்படையில் அவர்களுக்கு ஏதாவது கருணை காட்டியாக வேண்டும், சில குடும்பங்கள் தற்கொலை செய்து கொள்ளுமளவுக்கெல்லாம் போய்விட்டது என்று உருக்கமாக எடுத்துச் சொன்னார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** துணைத் தலைவரவர்களே, எந்தக் கட்சி சார்புடையவர் என்றும் அவர் எந்தக் கட்சியின் சார்பாகச் சொன்னார் என்றும் சொன்னால் நல்லதாகவிருக்கும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, அவர்களுடைய பெயரைச் சொன்னாலே ஆளும் காங்கிரஸ் கட்சி என்று எல்லோரும் புரிந்து கொள்ளுமளவுக்கு இருக்கிறது. இன்றையதினம் தமிழகத்தில் ஆளும் காங்கிரஸ் கட்சிக்கு ஒரு சக்தி இருக்கிறது என்று சொன்னால் அது திருமதி டி. என் அனந்தநாயகி என்று எல்லோரும் புரிந்து கொள்வார்கள். திருமதி டி. என். அனந்தநாயகி என்று சொன்னாலே ஆளும் காங்கிரஸ் கட்சி என்றுதான்பொருள். அதற்குள் என்ன சந்தேகம் வந்து விடப் போகிறது. அதற்குள்ளாகவா வேறு ஒரு கட்சிக்குப் போக வேண்டிய நிலை வரப்போகிறது?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, அவர்கள் கிண்டலுக்காகவே சொல்கின்றார்கள் என்பது எனக்குப் புரிகிறது. எதற்காக எந்த சமயத்தில் எப்படிப்பட்ட நிலைமையில் ஏற்பட்டது என்று எண்ணிப் பார்த்தால் புரியும். உங்கள் கட்சியில் ஏற்பட்ட அவல நிலைமை பிற கட்சிகளிலும் ஏற்படும் என்பதை உணர வேண்டும். அப்படி ஏற்பட்டதுதான் எங்களுடைய கட்சி நிலையும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** துணைத் தலைவரவர்களே, எங்களுடைய கட்சிக்கு ஒன்றும் ஏற்பட்டுவிடவில்லை. நாங்கள் இருந்த இடத்திலேயேதான் இருக்கிறோம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்தத் துணை மதிப்பீட்டில் ஏற்கனவே வரவு-செலவுத் திட்டத்தில் சொன்னதைவிட அதிகமாகக் கோரப்படுகிறது என்றெல்லாம் கூறப்பட்டது. இது ஒன்றும் புதியதில்லை. இறுதித் துணை மதிப்பீடு என்று ஏன் போட்டார்கள், துணை, மானியம் என்று கூறக்கூடாதா என்று சொன்னார்கள். ஆண்டாண்டு—காலமாக ஆண்டு இறுதியில் தரப்படுவது துணை மதிப்பீடு, அது இறுதித் துணை மதிப்பீடு என்றுதான் பெயரிடப்படுகிறது. 1966-67-ல் 62.91 கோடி ரூபாய் துணை மானியம் கோரப்பட்டது. அப்பொழுது பட்ஜெட்டினுடைய மொத்த அளவு 211 கோடி ரூபாய். அந்த நேரத்தில் 62 கோடி இறுதித் துணை மதிப்பீடு கோரப்பட்டது. இப்பொழுது பட்ஜெட்டின் மொத்த அளவு 500 கோடி என்று இருக்கும்போது 64 கோடி ரூபாய்தான் கோரப்படுகிறது என்பதை மறந்து விடக்கூடாது. மத்திய அரசில் கூட பட்ஜெட்டில் கூறப்பட்டுள்ளது, வருவாய் கணக்கிலும் மூலதனக் கணக்கிலுமாகச் சேர்த்து 6,800 கோடி ரூபாய் என்று அறிவித்திருக்கிறார்கள். இருந்தாலும் இப்பொழுது இறுதியில் துணை மதிப்பீடு போட்டு 1,302 கோடி ரூபாய்க்கு மத்திய அரசு ஒப்புதல் கோரியிருக்கிறார்கள். ஆகையினால் இது ஒன்றும் புதியதுமில்லை அசாதாரணமானதுமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

70 கோடி ரூபாயைச் செலவழிக்க முடியாமல் திருப்பித் தந்து விட்டார்கள் என்று சொன்னார்கள். 57 கோடி ரூபாய் வணிகத் துறையில் நின்ற தொகையைக் குறிக்கிறது. சென்ற ஆண்டு வரையில் உணவுக் கட்டுப்பாடு இருந்து அது நீக்கப்பட்டு விட்ட காரணத்தால் அந்தப் பணம் செலவழிக்கப்பட வேண்டிய அவசியமில்லாமல் போய்விட்டது. ஆகவே அதை சரண்டர் என எடுத்துக் கொள்ளக்கூடாது. செலவழிக்க முடியாத நிலைமை ஏற்பட்டதுதான்





காரணம். அதேபோல் ரிசர்வ் பேங்கிற்கு அதிகப் பணம் தரவேண்டுமென்ற நிலைமையில் ஒரு மதிப்பிட்டோம். அதற்குப் பிறகு 40 கோடி ரூபாய் தரவேண்டுமென்ற நிலைமையில் பேச்சுவார்த்தை நடத்தி 11 கோடிதான் தர வேண்டுமென்று ஏற்பட்டதன் காரணமாக அதிலே 29 கோடி ரூபாய் இருந்தது. இது சரண்டர் என்று சொல்ல முடியாது. செலவழிப்பதற்கு வாய்ப்பற்ற நிலை ஏற்பட்டது. இதை சரண்டர் என்று சொல்வதற்கில்லை. திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட எந்தப் பணமும் செலவழிக்கப்படாமல் சரண்டர் செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பல விஷயங்களை நண்பர் மதி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். குடிசை வாழ் மக்களுக்கெல்லாம் அவர்களுடைய இடங்களைப் பட்டா செய்து கொடுக்கிறோம். நகரங்களிலும் நகரத்தினுடைய சுற்றுப்புறங்களிலும் அதை ஒழிக்க முடியுமா என்பதை ஆராய்ந்து வருகிறோம். அதற்காகத் திட்டத்தில் உள்ளது. தொழிற்சாலைகள் அபிவிருத்தி அடைகின்ற நேரத்தில் அவற்றின் தேவையைக் கருத்தில் கொண்டு அதனால் ஏற்படுகின்ற தடைகளுக்குட்பட்டு பரிசீலனை செய்து பார்த்து வரவேண்டிய அவசியமிருக்கிறது. குடிசை மாற்று வாரியம் அதற்கான பணியில் ஈடுபட்டு வேலை செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முக்கியமாக நண்பர் லத்தீப் அவர்கள் எடுத்துச் சொன்ன பிரச்னை, அறிவிப்பு இப்பொழுதே வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். மிக வலியுறுத்தி, மிக உருக்கமாக எடுத்துச் சொன்னார்கள். லப்பை முஸ்லீம்கள் ஏற்கனவே பின்தங்கியவர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். உருது முஸ்லீம்களைச் சேர்க்க வேண்டுமென்ற கருத்தை எடுத்துச்சொன்னார்கள். பிற்பட்டோர் நலக் குழு அறிக்கையில் இதுபற்றிக் கூறப்பட்டிருக்கிறது. சலுகைகளைப் பொறுத்த வரையிலும், அத்தனைபேரும் அவர்கள் லப்பைகளாக இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி லப்பை என்றே கருதப்படுவார்கள். கொஞ்சம் தமிழ் பேசினாலும் லப்பை என்று பிற்பட்டோர் நலக்குழு ஏற்றுக்கொண்டிருக்கிறது. 1921-ம் ஆண்டு அறிக்கையின்படி பொதுவாக முஸ்லீம்கள் 85 முதல் 90 சதம் வரையில் லப்பைகளாகவே கருதப்பட்டு வருகின்றார்கள் என்று கூறுகிறது. அதிலே மீதமுள்ள 10 சதவிகிதத்தினர்தான் உருது முஸ்லீம்களாக இருக்கிறார்கள் என்று அந்தக் கணக்கு அறிவிக்கிறது. வெகு காலமாகவே இருந்து வந்தவர்கள் லப்பை வகுப்பினர். தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் மீதமுள்ள 10 சதவிகிதத்தினர்தான். அவர்களுக்கும் எல்லாச் சலுகைகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. முஸ்லீம் சமுதாயத்தின் சார்பாகவும், இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கின் சார்பாகவும் காயிதே மில்லத் அவர்களும்,

அவருக்குப் பிற்பட்டு வந்த தலைவர்களும், தமிழ்நாட்டிலுள்ள முஸ்லிம் தலைவர்களும் இந்த ஒரு கோரிக்கையை இந்த மன்றத்தில் வாதிட்டிருக்கிறார்கள். ஆகையினால் உருது முஸ்லீம்களும் பிற்பட்டோர் இனப் பட்டியலில் சேர்க்கப்படுவர் என்பதை மகிழ்ச்சியோடு இப்பொழுது நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் : தலைவரவர்களே, நான் எனது கட்சியின் சார்பிலும், என்னுடைய சகாக்களின் சார்பிலும், என் சார்பிலும் முதலமைச்சர் அவர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், அமைச்சரவைக்கும் எனது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்தக் கோரிக்கைக்கு ஆதரவு அளித்த மன்றத்திலுள்ள எல்லாக் கட்சி உறுப்பினர்களுக்கும், இதற்குப் பெரிதும் உதவியாகயிருந்த பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது). நேரமாகிவிட்டது. திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் மற்றவைகளை எல்லாம் நிதி ஒதுக்கீடு மசோதாவில் பேசுகிறபோது நானே சொல்லிக்கொள்கிறேன் என்று கூறி, அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்போது நேரம் ஒரு மணி ஆகிவிட்டது. துணை மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதம் இத்துடன் முடிவுற்றது.

**(5) 1972-73-ம் ஆண்டுக்கான இறுதித் துணை நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு.**

**ஏ. வருவாய்க் கணக்கில் செலவு.**

**நிதிக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"நிதிக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 21,62,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

| குழுக்கள் இயங்குமிடம். | கண் சிகிச்சை முகாம்கள் நடந்த இடங்களின் எண்ணிக்கை. | முகாமுக்கு வந்த மொத்த பிணியாளர்கள். | கண் புரைக்கு அறுவை சிகிச்சை பெற்றவர்கள். | இதர அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கை. | கண் பரிசோதனை செய்து அறிவுரை வழங்கியது. |
|---|---|---|---|---|---|
| சென்னை .. | 20 | 56,099 | 7,583 | 63 | 13,068 |
| மதுரையும் இதர இடங்களும் | 34 | 1,66,986 | 24.192 | 2,620 | 21,263 |
| | 54 | 2,23,085 | 31,685 | 2,683 | 34,331 |





5. இக்கண் சிகிச்சை முகாம்களனைத்தும் அரசால் மட்டுமே நடத்தப்படுகின்றன. நன்கொடைகள் ஏற்கப்பட்டு, அவை சென்னையிலுள்ள சிண்டிகேட் வங்கியில் ' முதலமைச்சர் கண் சிகிச்சை முகாம் ' நிதியில் வரவு வைக்கப்படுகின்றன.

In Tamil Nadu, about six lakhs of people are blind in both eyes and another four lakhs of people are blind in one eye due to cataract. A high percentage of these pepole are above the age of 50. If their eye-sight is restored, nearly 60 per cent of the people can work and earn their livelihood and support their families. To bring light and cheer to the families of these blind persons, it has been arranged from 3rd June 1972, which synohronised with the 49th birthday celebration of the Honourable Chief Minister, to hold a massive programme of eye-camps throughout the State. It is estimated that atleast one lakh of blind people may get relief during the course of this year and the next, by having operations for cataract, Glaucoma, etc., in the "Chief Minister Kalaignar Karunanidhi Free Eye Camps".

2. An appeal for funds for the conduct of eye camps has already been issued by the Minister for Health, and the response to the appeal has been good. In order to credit the amounts realised through public contributions, etc., the Government have constituted a fund called "The Chief Minister Eye Camp Fund". The resources of the Fund are being mobilised by securing donations from the Public, Local bodies, Religious and Charitable Institutions, Cinema Houses and Industrial, Commercial, Transport Organisations, etc. The collection to Chief Minister Eye Camp Fund as on 2nd March 1973 is Rs. 44,77,740.43 paise.

3. It is proposed to organise eye camps in all the 56 Revenue Divisions in the State and conduct 50,000 cataract operations per year. It has also been fixed that 500 cases should be the target for each camp. The operations should be on a prorata basis, i.e. 125 per lakh of persons. The whole State has been divided into Five Zones for the purpose of conducting eye operations. The details of the Districts included in the Zones and the Officers placed in charge of the Zones for supervising the work, are as follows :—

[1973 மார்ச் 28

I. Under Dr. J. E. Abraham, Superintendent, Government Ophthalmic Hospital, Madras :—

(a) Madras, Chingleput and South Arcot Districts.

(b) North Arcot and Dharmapuri Districts.

II. Dr. G. Venkataswamy, Professer of Ophthalmology, Madurai Medical College, Madurai :—

(a) Thanjavur, Tiruchirappalli and East Ramanathapuram.

(b) Coimbatore, Salem and Nilgiris.

(c) Madurai, West Ramanathapuram, Tirunelveli and Kanyakumari.

Five Mobile Ophthalmic Units with necessary staff, have been sanctioned, out of which three units are under the control of Dr. G. Venkataswamy and two units are under Dr. J. E. Abraham. The Government have sanctioned a sum of Rs. 55 per cataract operation for expenditure on medicines, linen, mats, bandage, diet, etc. Apart from this an expenditure of Rs. 0.50 paise has been allowed for every out-patient attending the camp for treatment of minor eye-ailments.

The work carried out by the five Mombile Units, as on 1st March 1973 is as follows :—

| *Units at.* | *Number of Camps conducted.* | *Number of cases treated in O.P.* | *Number of cataract Operations done.* | *Number of other operations like Glaucoma etc. done.* | *Number of refractions done* |
|---|---|---|---|---|---|
| **Madras** .. | 20 | 56,099 | 7,583 | 63 | 13,068 |
| **Madurai etc.,** | 34 | 1,66,986 | 24,102 | 2,620 | 21,263 |
| | 54 | 2,23,085 | 31 685 | 2 683 | 34,331 |

4. All the eye camps are conducted by the Government only and donations are accepted and credited to the "The Chief Minister Eye Camp Fund" in the Syndicate Bank, Madras.



1973 மார்ச் 28]

இணைப்பு II

[163-ம் பக்கத்தில் வெள்ளிக்குறியிட்ட வினா எண் 545-க்கான விடையைக காண்க.]

தமிழ்நாடு அரசு தொழில் துறை

தமிழ்நாட்டின் பின்தங்கிய பகுதிகளில் தொழில்கள் தொடங்குவதற்கு அளிக்கப்படும் சலுகைகள்.

**பின்தங்கிய பகுதிகளில் உள்ள திட்டங்களுக்கான சலுகை வீத நிதி உதவி.**

நிதி நிறுவனங்களிலிருந்து சலுகை வீதங்களில் நிதி உதவி பெறுவதற்காக, இந்திய அரசின் திட்ட ஆணைக்குழு தமிழ்நாட்டின் கீழ்க்காணும் மாவட்டங்களை தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டங்களாக அறிவித்துள்ளது :—

1. தென் ஆற்காடு.
2. திருச்சிராப்பள்ளி.
3. மதுரை.
4. இராமநாதபுரம்.
5. கன்னியாகுமரி.
6. வட ஆற்காடு.
7. தஞ்சாவூர்.
8. தருமபுரி.

இந்த சலுகையில், குறைந்த வீத வட்டி, ஆரம்ப காலத்தில் தவணைத் தொகையைச் செலுத்தாமல் இருப்பதற்கான சலுகை, தொகை செலுத்த வேண்டிய கால அளவை அதிகமாக்குதல் ஆகியவை அடங்கும்.

மேற்சொன்ன மாவட்டங்களில் தொழில்கள் தொடங்குவதற்கு இந்தியத் தொழில் மேம்பாட்டு வங்கி, இந்தியத் தொழில் நிதி உதவி நிறுவனம், இந்தியத் தொழில் கடன் முதலீட்டுக் கழகம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஆகியவற்றை நினைவிற்கொண்டு, நல்ல வணிகக் கொள்கைகள், செயல் கீழே தரப்பட்டுள்ளது :—

குறிப்பிட்ட பின்தங்கிய பகுதிகளில் உள்ள தொழில் திட்டங்களுக்கு இந்தியத் தொழில் மேம்பாட்டு வங்கியும், இந்திய தொழில் நிதி உதவிக் கழகமும் அளிக்கும் சலுகை வீத நிதி உதவி.

**1. விரிவான வரையறைகளும் நிபந்தனைகளும் :**

(a) இந்தியத் தொழில் மேம்பாட்டு வங்கி.

(i) வட்டி வீதம்—½ சதவீத அபராதத்துடன் தற்போதைய 8½ சதவீத வட்டிக்குப் பதிலாக, ஆண்டு ஒன்றுக்கு 7 சதவீதம் (செலுத்தத் தவறுபவர்களுக்கான ½ சதவீத அபராதத்துடன்).

(ii )கடன்களைத் தொடக்கத்தில் காலந்தாழ்த்தித் திருப்பிச் செலுத்துவதற்கான தவணைக் காலத்தை நீட்டித்தல்.—அசல் தொகையின் முதல் தவணையைச் செலுத்துவது குறித்து சாதாரணமாக முதல் தவணையாகிய மூன்றாண்டுக் காலத்துக்கு முதல் தவணைச் செலுத்த வேண்டியதில்லை என்பது நடைமுறையாகும். உதவி பெறும் நிறுவனங்களின் நேர்வில் இந்திய தொழில் மேம்பாட்டு வங்கி இக்கால அளவை 5 ஆண்டுகளாக அனுமதித்துள்ளது.

(iii ) கடன் கரைப்புக்காக நீண்டகால அளவு அனுமதித்தல்.—கடனைத் திருப்பிச் செலுத்துவதற்குச் சாதாரணமாக அனுமதிக்கப்படும் கால அளவு 10–15 ஆண்டாக இருக்கையில், பின் தங்கியுள்ள பகுதிகளில் உள்ள தொழில் திட்டங்களுக்கு 15 முதல் 20 ஆண்டுக்காலம் அனுமதிக்கப்படும்.

(iv ) இழப்புப் பொறுப்பு மூலதனத்துக்குத் தொகை செலுத்துதல்.—அந்தந்த நேர்வுகளின் தகுதியைப் பொறுத்து, இந்திய தொழில் மேம்பாட்டு வங்கி, பின்தங்கிய பகுதிகளில் உள்ள திட்டங்களின், இழப்புப் பொறுப்பு மூலதனத்திற்கு (Risk Capital) அதிகத் தொகைச் செலுத்தலாம்.

(v ) பொதுமக்கள் வாங்காத பங்குகள் போன்றனவற்றை நிறுவனங்கள் தாமே முன்வந்து வாங்குவதற்காக நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் தாகுத் தொகையைக் குறைத்தல்.—பின்தங்கிய பகுதிகளில் உள்ள நிறுவனங்கள், பங்குகள் கடனீட்டுப் பத்திரங்கள் குறித்து உத்திரவாதம் அளிப்பதற்காக அளிக்கப்படும் தாகுத் தொகை 50 சதவீதம் குறைக்கப்படலாம். அதாவது, இத்தாகு வீதம் தற்போது 2½/1½ சதவீதமாக இருக்க அது 1¼/¾ சதவீதம் ஆகக் குறைக்கப்படும்.

(v ) பொறுப்புக் கட்டணத்தைக் குறைத்தல்.—இந்தியத் தொழில் மேம்பாட்டு வங்கி, தற்பொழுது உதவி பெறும் தொழில் நிறுவனங்கள் வாங்கிக் கொள்ளாமல் உள்ள தொகையின்மீது ஆண்டு ஒன்றுக்கு 1 சதவீத பொறுப்புக் கட்டணம் வசூலிக்கிறது. இந்தக் கட்டணம், பின்தங்கிய பகுதிகளில் உள்ள தொழிற்திட்டங்களுக்காக ½ சதவீதமாகக் குறைக்கப்படலாம் அல்லது அசாதாரணமான நேர்வில் முழுவதும் விட்டுவிடப்படலாம்.

(vii ) ஆலோசகர் கட்டணம்.—தொழிற்சாலை பின்னர் ஆதாயத்தில் இயங்கும்பொழுது திருப்பிச் செலுத்த வேண்டும் என்னும் நிபந்தனைக்கு உட்பட்டு ஏற்புடைமை அறிக்கைகள் தயாரிப்பதற்காகத் தொழில்முனைவர்களுக்கு ஆகும் ஆலோசனைப் பணிச் செலவையும் இந்திய தொழில் மேம்பாட்டு வங்கி கொடுத்துவிடலாம்.

(viii ) ஏனைய வரையறைகளும் நிபந்தனைகளும்.—தொழில் தொடங்குவோர் செலுத்தும் தொகை, அவர்களின் பிணைத்தொகை தேவைகள் முதலியவை தொடர்பாக இந்திய தொழில் மேம்பாட்டு வங்கி நெகிழ்வான கொள்கையைப் பின்பற்றி வருகிறது. பின்தங்கிய பகுதிகளில் உள்ள தொழில்கள் தொடர்பாக இதே முறையை இந்திய தொழில் மேம்பாட்டு வங்கி பின்பற்றலாம். சில நேர்வுகளின் தகுதியைப் பொறுத்து இந்தத் தேவைகளைத் தளர்த்தலாம். திட்டத்தின் தொடக்க ஆண்டுகளில் வட்டி செலுத்துவதைப் பொருத்தமான கால அளவுக்கு ஒத்திப் போடவும் இந்தியத் தொழில் மேம்பாட்டு வங்கி சம்மதிக்கலாம்.



( b ) இந்தியத் தொழில் நிதி உதவிக்கழகம்.

(i) வட்டி வீதம்.—அசல், வட்டி ஆகியவற்றின் தவணைகளைச் சரியாகச் செலுத்தியதற்கான ½ சதவீத தள்ளுபடியுடன் தற்பொழுது விதிக்கப்படும் 9 சதவிகித வட்டிக்கு மாறாக, குறைந்த வீத வட்டி அதாவது 7½ சதவிகித (½ சதவீதத் தள்ளுபடியுடன்) வசூலிக்கப்படும்.

(ii) கடன்களைத் திருப்பிச் செலுத்துவதைத் தொடங்குவதில் தொடக்க கருணைக்காலம்.—உதவிபெறும் நிறுவனம் ஒன்று தான் பெற்ற கடனில் அசல் தொகையின் முதல் தவணைத் தொகையை முதல் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு செலுத்தலாம் என்று சலுகை அனுமதிப்பது கழகத்தின் வழக்கமாகும். பின்தங்கிய பகுதிகளில் உள்ள நிறுவனங்களைப் பொறுத்தவரையில் அந்த நிறுவனங்களுக்குக் கடன் வழங்கப்பட்ட நாளிலிருந்து ஐந்து ஆண்டுகள் வரை இச்சலுகை நீட்டிக்கப்படும்.

(iii) கடன் கரைப்புக்கால அளவு.—கடனைத் திருப்பிச் செலுத்துவதற்குச் சாதாரணமாக அனுமதிக்கப்படும் 10—12 ஆண்டு காலத்திற்கு மாறாக, இக்கால அளவு 15/20 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்படும்.

(iv) ஈட்டுத் தொகை அளவு.—50 சதவீத ஈட்டுத் தொகை அளவையே கழகம் தற்பொழுது நடைமுறையில் கொண்டுள்ளது. இந்த ஈட்டுத் தொகை அளவு 30/35 சதவீதமாகக் குறைக்கப்படும். வேறுவகையில் சொன்னால் 1 : 2 என்ற பங்குத்தொகைக் கடன் விகிதாச்சாரம் ஏற்றுக்கொள்ளப்படத் தக்கதாகும்.

(v) தொழில் தொடங்குவோர் அளிக்கும் தொகை.—தொழில் திட்டத்திற்குச் சாதாரணமாக ஏற்படும் தேவைகளைவிட அத்திட்டத்திற்காகும் செலவிற்கேற்ப குறைந்தத் தொகையை தொழில் தொடங்குவோரிடமிருந்து ஏற்றுக்கொள்ள கழகம் தயாராக இருக்கும்.

(vi) நிலையான வட்டியில்லாப் பங்குகளிலும், சலுகைவீத மூலதனத்திலும் பங்குகொள்ளுதல்.—வேறு இடங்களில் தொடங்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது அதிக அளவில் இருக்கும் வண்ணம் பின்தங்கிய பகுதிகளில் மாநிலத்தில் தொடங்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் அந்தந்த நேர்வின் சூழ்நிலையைப் பொறுத்து

பொதுமக்கள் வாங்காத பங்குகளைக் கழகம் தாமே முன்வந்து வாங்க அல்லது, பங்கு மூலதனத்தில் பங்குகொள்ளத் தயாராக இருக்கும்.

(vii) பிற கட்டணங்களில் குறைப்பு.—தாருக் கட்டணத்தைக் குறைத்தல், பொறுப்புக் கட்டணங்கள், விண்ணப்பங்களைப் பகுப்பாய்வு செய்வதற்கான, திருப்பிக் கொடுக்கப்படாத தேர்வுக்கட்டணம், வழக்குரைஞர் ஆலோசனைக் கட்டணம் ஆகியவற்றைப் பொறுத்த வரையில், கழகத்தின் சாதாரணக் கட்டணங்கள் பாதியாகக் குறைக்கப்படும்.

2. மத்திய அரசு மானியம் உதவித் தொகைப் பெறும் பின்தங்கிய மாவட்டங்களில் பகுதிகளில் தொடங்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளும் மேற்கூறிய சலுகைகளைப் பெற தகுதியுடையனவாகும்.

3. தொழிற்சாலை தொடங்குவதற்கான மொத்தச் செலவு ரூ. 1.00 கோடிக்கு அதிகமாக இல்லாத நேர்வுகளுக்கே இச்சலுகைகள் சாதாரணமாகப் பொருந்தும். பெரிய தொழிற்சாலைகளுக்குச் சலுகை நிதி உதவி அளிப்பது குறித்து தெரிந்தெடுத்த அடிப்படையில் கருதிப் பார்க்கப்படும்.

4. மத்திய அரசால், சலுகை முறையில் உதவி அளிக்கத் தெரிந்தெடுக்கப்பட்ட பல்வேறு மாநிலங்களிலுள்ள மாவட்டங்கள் அல்லது மத்திய அரசு நேரடி ஆட்சிப் பகுதிகளில் தொடங்கப்பட்டுள்ள தொழிற்சாலைகள் மட்டுமே. சலுகை முறையில் உதவி பெறத் தகுதியுடையனவாகும்.

**இந்தியத் தொழில் கடனுதவி—முதலீட்டுக் கழகம் குறிப்பிட்ட சில பின்தங்கிய பகுதிகளில் திட்டங்களைச் செயல்படுத்தும் கம்பெனிகளுக்கு ரூபாய் நாணயத்தில் பண உதவி செய்வதற்கான சலுகை வீதங்கள்.**

1. ரூபாய் கணக்கில் கொடுக்கப்படும் கடன்களின் வட்டி வீதம், தற்போது நடைமுறையிலுள்ள 8½ சதவீதம் என்பதற்குப் பதிலாக ஆண்டு ஒன்றுக்கு 7½ சதவீதமாக இருக்கும். பின்தங்கிய பகுதிகளில் திட்டத்தைச் செயற்படுத்தும் தனியார் கம்பெனிகளுக்கு எதிர்பாரா நிகழ்வு வட்டிவீதம் ஏதும் விதிக்கப்படமாட்டாது.

2. பின்தங்கிய பகுதிகளிலுள்ள தொழிற்சாலைகளின் பங்குகளைக் கடன் ஈட்டுறுதி ஆவணங்களை வாங்குவதற்கு உறுதியளிக்கும் நேர்வில், தாருத் தொகையைக் குறைப்பதானது பங்குத் தொகைகள் நேர்வில் இயல்பான 1 சதவீதத்துக்குப் பதிலாக ½ சதவீதமாகவும் கடன் ஈட்டுறுதி ஆவணங்களின் நேர்வில் ¾ சதவீதமாகவும் குறைந்து வசூலிக்கப்படும்.

3. தற்போது சாதாரணமாக வசூலிக்கப்படும் 1 சதவீதத்திற்கெதிராக ஒப்பந்தத் தலைப்புகளில் கையெழுத்திடும் நாளிலிருந்து கடன் குறித்து ½ சதவீத பொறுப்புக் கட்டணம் செலுத்தப்படத்தக்கதாகும்.



4. கடனைப் பெறுவதற்கு இருப்புக்களின் மதிப்பில் குறைந்த அளவாக 30 முதல் 35 சதவீதம் ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதாகும்.

5. கடன்களைத் திருப்பிச் செலுத்தத் தொடங்குவதற்காக அனுமதிக்கப்படும் கருணைக்கால அளவு, தற்போது சாதாரணமாக அனுமதிக்கப்படும் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குப் பதிலாக ஐந்து ஆண்டுகளாக இருக்கும். கடனைத் தற்போது வரையறுக்கப்பட்டுள்ள 10 முதல் 12 ஆண்டுகளுக்குள் திருப்பிச் செலுத்த வேண்டுமென்பதற்குப் பதிலாக 15 முதல் 20 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தலாம் என்று கால அளவு நீட்டிக்கப்படும்.

**இடைக்கக்கூடிய உதவியை, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலம், பின்தங்கிய மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள தொழில் பிரிவுகளுக்கு அளித்தல் :**

பின்தங்கிய பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள புதிய தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்காக வழங்கப்படும் உதவிக்கு மறுநிதி உதவி வழங்க சிறப்புச் சலுகை வட்டிவீதம் 3½ சதவீதத்தையும், பின்தங்கிய பகுதிகளில் உள்ள சிறு-நடுத்தரத் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்ட கடன்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 7¼ சதவீத வட்டியும் வசூலிக்கவும் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி கருதியுள்ளது. இதைச் செலுத்தத் தவறும் நேர்வில் ½ சதவீத, அபராதம் விதிக்கப்படும்.

தவணைத் தொகை செலுத்தாதிருக்க தொடக்கத்தில் அனுமதிக்கப்படும் கால அளவு 2 ஆண்டுகளிலிருந்து 4 ஆண்டுகளாக உயர்த்தப்படும்.

கடன்கரைப்புக் கால அளவு 8 ஆண்டுகளிலிருந்து 10 ஆண்டுகளாக உயர்த்தப்படும்.

பங்குகளை வாங்குவதற்கு உத்தரவாதம் அளிக்கும் நேர்வில், தாருத் தொகையானது 2.5 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகக் குறைக்கப்படும்.

விதிக்கப்படும் பொறுப்புக் கட்டணங்கள் 1 சதவீதத்திலிருந்து ½ சததவீமாகக் குறைக்கப்படும்.

சிறுதொழிற்சாலைப் பிரிவுகளின் நேர்வில், கட்ட வேண்டிய பிணையத் தொகை 25 சதவீதமாகவிருக்கும். நடுத்தர பெரிய தொழிற்சாலைகளின் நேர்வில், கட்டவேண்டிய பிணையத் தொகை, ஒவ்வொரு நேர்வின் தகுதிகளுக் கேற்பத் தளர்த்தப்படும்.

பின்தங்கிய மாவட்டங்களில் தொடங்கப்படும் புதிய தொழில்களுக்கு இந்தியத் தொழில் மேம்பாட்டு வங்கியும்(I.D., B.I.)தமிழ்நாட்டு முதலீட்டுக் கழகமும் (T.I.C.C.) இதுவரை ரூ. 158.83 லட்சம் நிதி உதவி அளித்துள்ளது,

[1973 மார்ச் 28

## இந்திய அரசின் 10 சதவீத உதவித் தொகைத் திட்டம்.

மத்திய அரசால் மானியம் அல்லது உதவித் தொகைப் பெறத் தகுதியுடைய கீழ்க்காணும் பகுதிகளைத் தமிழ்நாட்டில் இந்திய அரசின் திட்ட ஆணைக்குழு தெரிந்தெடுத்துள்ளது. அந்தந்தப் பகுதிகளில் உள்ள தொழிற்பிரிவு ஒவ்வொன்றின் நிலையான மூலதனம் ரூ. 50 லட்சத்திற்கு மேற்படாத புதிய தொழிற் பிரிவுகளின் நிலையான மூலதன முதலீட்டில் பத்தில் ஒரு பகுதி அளவுக்கு இந்த மானியம் அல்லது உதவித்தொகை இருக்கும். ரூ. 50 லட்சத்திற்கும் அதிகமாக உள்ள நேர்வுகள், ரூ. 5 லட்சம் உதவித் தொகை பெறத் தகுதியுடையவையாகும்.

### பகுதி 1.

வட்டங்கள் (துணை வட்டங்கள் உட்பட)

1. இராமநாதபுரம். — இராமநாதபுரம் மாவட்டத்தின் கிழக்கு இராமநாதபுரம் வளர்ச்சி மாவட்டமாக அமைத்துள்ளவை.
2. முதுகுளத்தூர்.
3. சிவகங்கை.
4. பரமக்குடி.
5. திருவாடானை.
6. திருப்பத்தூர்.
7. மேலூர். — மதுரை மாவட்டம்.
8. திருமயம். — திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
9. ஆலங்குடி.
10. குளத்தூர்

### பகுதி 2.

1. தருமபுரி வட்டம். — தருமபுரி மாவட்டம்.
2. ஓசூர் வட்டம்.
3. கிருஷ்ணகிரி வட்டம்.
4. ஊத்தங்கரை வட்டம்.
5. அரூர் வட்டம்.



1973 மார்ச் 28]

6. திருப்பத்தூர் வட்டம். — வட ஆற்காடு மாவட்டம்.
7. வாணியம்பாடி வட்டம்.
8. வேலூர் வட்டம்.
9. வாலாஜாபேட்டை வட்டம்.

### பகுதி 3.

1. அருப்புக்கோட்டை வட்டம். — இராமநாதபுரம் மாவட்டம்.
2. சாத்தூர் வட்டம்.
3. ஸ்ரீவில்லிப்புத்தூர் வட்டம்.
4. திருமங்கலம் வட்டம். — மதுரை மாவட்டம்.
5. உசிலம்பட்டி வட்டம்.
6. நிலக்கோட்டை வட்டம்.
7. திண்டுக்கல் வட்டம்.
8. வேடசந்தூர் வட்டம்.

26—8—1971-லிருந்துதான் செயலுக்கு வந்துள்ள 10 சதவீத உதவித் தொகை திட்டத்தின்கீழ் 23 தொழிற்கூடங்களுக்கு ரூ. 15.11 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

வட்டியில்லா விற்பனை வரிக் கடன்கள் :—

இச்சலுகை கீழ்க்காணும் பின்தங்கிய மாவட்டங்களில் தொடங்கப்படவிருக்கும் நடுத்தர, பெரிய தொழில்களுக்குக் கிடைக்கிறது :—

(1) தென் ஆற்காடு.
(2) திருச்சிராப்பள்ளி.
(3) மதுரை.
(4) இராமநாதபுரம்.
(5) கன்னியாகுமரி.
(6) வட ஆற்காடு.
(7) தஞ்சாவூர்.
(8) தருமபுரி.

இத்திட்டத்தில் இரண்டு பகுதிகள் உள்ளன. 1-வது பகுதியின்கீழ், மேற்குறிப்பிடப்பட்ட எட்டு மாவட்டங்களில் ஏதாவது ஒரு மாவட்டத்தில் தற்போதுள்ள தொழில்களை விரிவுபடுத்துவதால் அல்லது பலதிறப்படுத்துவதால் ஏற்படுத்தப்படவிருக்கிற நடுத்தர, பெரிய தொழில்களின் புதிய பிரிவுகள் வட்டியில்லாக் கடன்களைப் பெறத் தகுதியுடையவையாகும். அவை, புதிய தொழிலுக்காக ஏற்படுத்தப்பட்ட நிலையான இருப்பு மதிப்பில் 25 சதவீத உயரளவிற்கு உட்பட்டு, தற்போதுள்ள தொழில்களுக்கு மூன்று ஆண்டுகள் கால அளவுக்குச் செலுத்தப்பட்ட விற்பனை வரிக்குச் சமமானதாக இருக்கும்.

2-வது பகுதியின்கீழ், மேற்குறிப்பிடப்பட்ட எட்டு பின்தங்கிய மாவட்டங்களில் ஏதாவது ஒன்றில் புதிய தொழில் முனைவர்களால் ஏற்படுத்தப்படவிருக்கிற நடுத்தர, பெரிய தொழில்களின் புதிய பிரிவுகள் ஒவ்வோராண்டும் வட்டியில்லாக் கடனைப் பெறும். அது, அத்தொழிற்சாலைகள் அந்த ஆண்டு செலுத்திய விற்பனை வரிக்குச் சமமானதாக இருக்கும். தொழில் தொடங்கி ஆறு ஆண்டுக் கால அளவுக்கு இச்சலுகை கிடைக்கும். புதிய தொழிலின் பெருமொத்த, நிலையான இருப்புகளின் 8 சதவீத உயரளவுக்குட்பட்டு இக்கடன் வழங்கப்படும்.

இக்கடன்கள் வட்டியில்லாதவை. அவை பதினெட்டாவது ஆண்டிற்குப் பின்னர் மூன்று ஆண்டுத் தவணைகளில் திருப்பிச் செலுத்தப்படத் தக்கவையாகும். எடுத்துக்காட்டாக, 1972-ல் வழங்கப்பட்ட கடன் தொகை 1990, 1991, 1992 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்.

இது காரியத்திற்காகச் செலுத்தப்படும் விற்பனை வரியில் கீழ்க்கண்டவை அடங்கும் :—

(1) மூலப் பொருள்களை வாங்குவதற்காகச் செலுத்தப்பட்ட வரி;

(2) மத்திய விற்பனை வரி உட்பட வேலைநிறைவு பெற்ற பொருள்கள் மீது செலுத்தப்பட்ட வரி.

சலுகை மின் கட்டணம்—

1. தமிழ்நாட்டின் ஒரு இடத்தில் தொடங்கப்பட்ட புதிய தொழிற்சாலைகளுக்கு முதல் ஐந்து ஆண்டுகளுக்குப் பின்வருமாறு சலுகை வீதத்தில் மின் கட்டணம் விதித்து வாங்கப்படுகிறது. முழு மின் கட்டணம் ஆறாவது ஆண்டிலிருந்துதான் செலுத்தப்படத்தக்கதாகும் :—

(1) முதல் மூன்று ஆண்டுகளுக்கு—சாதாரணமான உயர் அழுத்த மின் கட்டணத்தில் 66-2/3 சதவீதம்.

(2) நான்காவது ஆண்டுக்கு—சாதாரணமான உயர் அழுத்த மின் கட்டணத்தில் 80 சதவீதம்.





(3) ஐந்தாவது ஆண்டுக்கு—சாதாரணமான உயர் அழுத்த மின் கட்டணத்தில் 90 சதவீதம்.

2. மாநிலத்தில் கீழ்க்காணும் பின்தங்கிய 40 வட்டங்களில் ஏதாவது ஒன்றில் தொடங்கப்படவிருக்கிற புதிய தொழிற்சாலைகளுக்கு மேலே 1-வது பத்தியில் குறிப்பிடப்பட்ட சலுகைகளுடன் மின் கட்டணத்தில் 15 சதவீதக் குறைப்பு அனுமதிக்கப்படும் :—

| மாவட்டங்கள். | வட்டங்கள். |
|---|---|
| 1. கன்னியாகுமரி. | 1. விளவங்கோடு. |
| | 2. தோவாளை. |
| 2. மதுரை. | 3. நிலக்கோட்டை. |
| | 4. மேலூர். |
| 3. வட ஆர்க்காடு. | 5. ஆரணி. |
| | 6. அரக்கோணம். |
| | 7. போளூர். |
| | 8. திருவண்ணாமலை. |
| 4. இராமநாதபுரம். | 9. இராமநாதபுரம். |
| | 10. கமுதி துணை வட்டம். |
| | 11. முதுகுளத்தூர் வட்டம். |
| | 12. சிவகங்கை வட்டம். |
| | 13. மானாமதுரை துணை வட்டம். |
| | 14. பரமக்குடி வட்டம். |
| | 15. இளையான்குடி துணை வட்டம். |
| | 16. தேவகோட்டை வட்டம். |
| | 17. திருவாடானை வட்டம். |
| | 18. திருப்பத்தூர் வட்டம். |
| | 19. காரைக்குடி துணை வட்டம். |
| 5. சேலம். | 20. சங்ககிரி வட்டம். |
| | 21. ஆத்தூர் வட்டம். |
| | 22. நாமக்கல் வட்டம். |
| 6. திருச்சிராப்பள்ளி. | 23. லால்குடி வட்டம். |
| | 24. உடையார்பாளையம் வட்டம். |
| | 25. திருமயம் வட்டம். |

[1973 மார்ச் 28

| மாவட்டங்கள். | வட்டங்கள். |
|---|---|
| 7. தென் ஆர்க்காடு. | 26. திருக்கோயிலூர் வட்டம். |
| | 27. கள்ளக்குறிச்சி வட்டம். |
| | 28. விருத்தாசலம் வட்டம். |
| | 29. செஞ்சி வட்டம். |
| 8. திருநெல்வேலி. | 30. திருச்செந்தூர் வட்டம். |
| | 31. நாங்குநேரி வட்டம். |
| 9. தஞ்சாவூர். | 32. சீர்காழி வட்டம். |
| | 33. நன்னிலம் வட்டம். |
| | 34. ஓரத்தநாடு வட்டம். |
| | 35. மன்னார்குடி வட்டம். |
| | 36. நாகப்பட்டினம் வட்டம். |
| | 37. திருத்துறைப்பூண்டி வட்டம். |
| | 38. அறந்தாங்கி வட்டம். |
| 10. தருமபுரி. | 39. கிருஷ்ணகிரி வட்டம். |
| | 40. தருமபுரி வட்டம். |

***நீர் பயன்படுத்தும் உரிமைக்குப் பங்குத்தொகை அளித்தலில் சலுகை :—***

தொழில்துறையில் பின்தங்கிய கீழ்க்காணும் எட்டு மாவட்டங்களில் அரசு வாயில்களிலிருந்து நீரைத் திருப்பிப் பயன்படுத்தப் புதிய தொழிலொன்றுக்கு அனுமதியளிக்கும் வாய்ப்புகள் உள்ள இடங்களில் எல்லாம் தொடங்கப் படவிருக்கும் புதிய தொழில்கள், அரசு வாயில்களிலிருந்து எடுத்துக்கொள்ளும் நீர் எவ்வளவாக இருப்பினும் சரி, தொடக்கத்தில் ஆறுண்டு காலத்துக்கு, அவை நீரைப் பயன்படுத்தும் உரிமைக்கு அளிக்கவேண்டிய தொகைக்காக வரையறுத்த தொகையாக ஆண்டுக்கு ரூ. 200 விதித்து வசூலிக்கப்படும் :—

(1) தென்னார்க்காடு.
(2) திருச்சிராப்பள்ளி.
(3) மதுரை.
(4) இராமநாதபுரம்.
(5) கன்னியாகுமரி.
(6) வட ஆர்க்காடு.
(7) தஞ்சாவூர்.
(8) தருமபுரி.



1973 மார்ச் 28]

# GOVERNMENT OF TAMIL NADU.
## INDUSTRIES DEPARTMENT.

### CONCESSIONS AVAILABLE FOR STARTING INDUSTRIES IN THE BACKWARD AREAS OF TAMIL NADU

***Concessional financial assistance for projects in backward areas.***

The following districts in Tamil Nadu have been declared by the Planning Commission of Government of India as industrially backward districts for purposes of concessional finance from the Financial Institutions :—

(1) South Arcot,
(2) Tiruchirappalli,
(3) Madurai,
(4) Ramanathapuram,
(5) Kanyakumari,
(6) North Arcot,
(7) Thanjavur and
(8) Dharmapuri.

The concessions include lower rate of interest, initial repayment holiday and longer term of repayment.

The details regarding concessional finance offered by the Financial Institutions, namely, Industrial Development Bank of India, Industrial Finance Corporation of India, Industrial Credit and Investment Corporation of India and Tamil Nadu Industrial Investment Corporation, Limited, for starting industries in the above districts are furnished below :—

CONCESSIONAL FINANCE BY THE INDUSTRIAL DEVELOPMENT BANK OF INDIA AND INDUSTRIAL FINANCE CORPORATION OF INDIA TO PROJECTS IN SPECIFIED BACKWARD AREAS.

1. *Detailed terms and conditions*—

(a) INDUSTRIAL DEVELOPMENT BANK OF INDIA.

(i) *Rate of interest.*—Seven per cent per annum (with a penalty of ½ per cent for defaults) against the present normal rate of 8½ per cent with a 1/2 per cent penalty.

(ii) *Extension of initial moratorium in the repayment of loans.*—The Industrial Development Bank of India will allow five years moratorium to the assisted concerns for the first repayment of the principal amount of loans, against the normal practice of three years.

(iii) *Longer amortisation period for loans.*—Against the normal repayment period of 10 to 15 years, projects from the backward areas would be allowed a longer period of 15 to 20 years.

(iv) *Participation in risk capital.*—Depending on the merits of the case, the Industrial Development Bank of India may subscribe relatively heavy to the risk capital of projects in backward areas.

(v) *Reduction in the underwriting commission.*—The underwriting commission in respect of public issue of Shares/Debentures made by concerns in backward areas could be reduced by 50 per cent (i.e.) it would be $1\frac{1}{4}$ per cent/$\frac{3}{4}$ per cent instead of $2\frac{1}{2}$ per cent/$1\frac{1}{2}$ per cent at present.

(vi) *Reduction in commitment charges.*—At present, the Industrial Development Bank of India charges a rate of 1 per cent per annum on account of commitment charges on amounts which remain undrawn by the assisted concerns. This charge may be reduced to $\frac{1}{2}$ per cent or waived altogether in exceptional case for projects in the backward areas.

(vii) *Consultants' charges.*—The Industrial Development Bank of India may also bear the cost of consultancy services to prepare feasibility reports for the entrepreneurs initially, subject to reimbursement later when the project reaches the profitability stage.

(viii) *Other terms and conditions.*—The Industrial Development Bank of India already follows a flexible attitude, in respect of promoters' contribution, margin requirements, etc. The Industrial Development Bank of India may continue to adopt similar attitude in respect of projects from backward areas and relax these requirements depending on the merits of each case. The Industrial Development Bank of India may also agree to suitable postponement of the interest payment in the initial years of the project.



(*b*) INDUSTRIAL FINANCE CORPORATION OF INDIA.

(i) *Rate of interest.*—As against the current rate of interest at 9 per cent (with a rebate of $\frac{1}{2}$ per cent for punctual payments of instalments of interest and principal) a lower rate of interest, i.e., $7\frac{1}{2}$ per cent (with a rebate of 1/2 per cent) will be charged.

(ii) *Initial grace period for commencement of repayment of loans.*—The Corporation's normal practice is to allow three years moratorium to an assisted concern for the first repayment of the principal amount of the loan. In the case of undertakings in backward areas, the period would be extended to five years from the date of disbursement of the loan.

(iii) *Amortisation period for loans.*—As against the normal period of 10 to 12 years for repayment of loan, this period would be extended to 15/20 years.

(iv) *Margin of security.*—The present practice of the Corporation is to aim at a margin of 50 per cent. This would be reduced to 30/35 per cent. In other words, an equity; debt ratio of 1 :2 would be acceptable.

(v) *Promoters contribution.*—The Corporation would be prepared to accept a lower contribution from the promoters, to the cost of the project than its normal requirements.

(vi) *Participation in equity and preference capital.*—Depending on the merits of each case, the Corporation would be prepared to consider participation by way of underwriting or otherwise in the share capital of an industrial concern located in a backward areas/State to a greater extent as compared to projects located elsewhere.

(vii) *Reduction in other charges.*—Fifty per cent reduction will be made on the Corporation's normal charges in respect of underwriting commission, commitment charges, non-refundable examination fee for processing of applications and legal charges.

2. Projects in Backward district/areas which would receive grant/subsidy from the Central Government would also be eligible for the above concessions.

3. The concessions will normally be applicable to cases where the total project cost does not exceed Rs. 1.00 crore ; concessional finance for bigger projects would be considered on a selective basis.

4. Only those projects will be eligible for assistance on concessional terms which are located in the districts in the various States or Union Territories selected for such assistance by the Central Government.

INDUSTRIAL CREDIT AND INVESTMENT CORPORATION OF INDIA CONCESSIONAL TERMS FOR RUPEE ASSISTANCE TO COMPANIES IMPLEMENTING PROJECTS IN CERTAIN BACKWARD AREAS.

1. The rate of interest of rupee loans would be at 7 per cent per annum instead of the current normal rate of 8½ per cent. No contingent interest will be charged for private limited Companies implementing project in backward regions.

2. In the case of underwriting of shares/debentures for projects in backward regions, underwriting commission would be charged at half the normal rate of 1 per cent on shares and ¾ per cent on debentures.

3. A commitment charge of ½ per cent will be payable on the loan from the date of signing of the heads of agreement as against 1 per cent normally charged at present.

4. A margin of 30 per cent to 35 per cent would be acceptable in the value of assets for securing the loan.

5. The grace period allowed for starting of repayment of the loans would be five years as against two or three years normally allowed and the repayment of the loan would be spread over 15 to 20 years as against 10 to 12 years normally stipulated.

EXTENSION OF ASSISTANCE AVAILABLE THROUGH TAMIL NADU INDUSTRIAL INVESTMENT CORPORATION, LIMITED, TO INDUSTRIAL UNITS LOCATED IN BACKWARD DISTRICTS.

Special concessional rate of interest at 6½ per cent proposed by the Industrial Development Bank of India for refinance for assistance rendered for starting new project situated in backward



areas and to charge interest at 7 per cent annum for loan given to small and medium sized industries in backward areas. A penalty of ½ per cent will be levied in case of default.

The inital moratorium period will be increased to four years from two years.

The amoratisation period will be increased to ten years from eight years.

The underwriting commission will be reduced to 2 per cent from 2.5 per cent in the case of underwriting of shares.

The commitment charge levied will be reduced to half a per cent from 1 per cent.

In the case of small-scale industrial units, the margin of security will be 25 per cent in the case of medium and large scale industrial units the margin will be relaxed according to the merits of each case.

So far the concessional finance offered by the Industrial Development Bank of India and Tamil Nadu Industrial Investment Corporation, Limited, to new industries started in the backward districts amounts to Rs. 158.83 lakhs.

TEN PER CENT SUBSIDY SCHEME OF GOVERNMENT OF INDIA.

The following areas in Tamil Nadu have been selected by the Planning Commission of the Government of India to qualify for outright grant or subsidy by the centre, amounting to one-tenth of the fixed capital investment of new units having a fixed capital of not more than Rs. 50 lakhs each in the areas ; cases exceeding Rs. 50 lakhs are eligible for a subsidy of Rs. 5 lakhs.

TRACT I.

Taluks (including the sub-taluk)—

| | |
|---|---|
| 1. Ramanathapuram<br>2. Mudukulathur<br>3. Sivaganga<br>4. Paramakudi.<br>5. Tiruvadanai<br>6. Tirupathur | Constituting the East Ramanathapuram Development district of Ramanathapuram district. |

TRACT I—*cont.*

Taluks (including the sub-taluk)—*cont.*

| | |
|---|---|
| 7. Melur | District of Madurai. |
| 8. Thirumayam | District of Tiruchirappalli. |
| 9. Alangudi | |
| 10. Kulathur | |

TRACT II

| | |
|---|---|
| 1. Dharmapuri taluk | Dharmapuri district. |
| 2. Hosur taluk | |
| 3. Krishnagiri taluk | |
| 4. Uthangarai taluk | |
| 5. Harur taluk | |
| 6. Tirupattur taluk | North Arcot district. |
| 7. Vaniyambadi taluk | |
| 8. Vellore taluk | |
| 9. Wallajapet taluk | |

TRACT III

| | |
|---|---|
| 1. Aruppukottai taluk | Ramanathapuram district. |
| 2. Sattur taluk | |
| 3. Srivilliputtur taluk | |
| 4. Usilampatti taluk | Madurai district. |
| 5. Tirumangalam taluk | |
| 6. Nilakottai taluk | |
| 7. Dindigul taluk | |
| 8. Vedasandur taluk | |

Under the 10 per cent subsidy scheme which has come into force from 26th August 1971 only, a sum of Rs. 15.11 lakhs has been sanctioned to 23 units.

## INTEREST-FREE SALES TAX LOANS.

This concession is available to medium and major industries to be set up in the following backward districts :—

1. South Arcot
2. Tiruchirappalli
3. **Madurai**



INTEREST-FREE SALES TAX LOANS—*cont.*

4. Ramanathapuram
5. Kanyakumari
6. North Arcot
7. Thanjavur
8. Dharmapuri

This scheme has two parts. Under Part I, new units of existing medium and major industries which are set up in any one of the eight districts mentioned above, by way of expansion or diversification of the existing industries will be eligible for interest-free loans, equivalent to the sales tax paid for the existing industries over a period of 3 years subject to a maximum of 25 per cent of the fixed assets created for the new unit.

Under Part II, new units of medium and major industries to be set up by new entrepreneurs in any of the eight backward districts mentioned above, will get every year interest-free loan equivalent to the sales tax paid by them during the year. This concession will be available for a period of six years from the commencement of production. The loan will be subject to a maximum of 8 per cent of the gross fixed assets of the new units.

These loans will be interest-free and are repayable in 3 annual instalments after the 18th year. Thus, for a loan given in 1972, the repayment will have to be made in the years, 1990, 1991 and 1992.

The sales tax for this purpose will include—

(i) Tax paid on purchase of raw materials ; and

(ii) Tax paid on sales of finished goods including the Central Sales tax.

## CONCESSIONAL POWER TARIFF

1. New industries set up anywhere in Tamil Nadu are charged concessional power tariff, for the first five years and full tariff is payable only from the sixth year, as follows :—

1. For the first three years ...66-2/3 per cent of the normal H.T. Tariff.

2. For the 4th year ... 80 per cent of the normal H.T. Tariff.

3. For the 5th year ... 90 per cent of the normal H.T. Tariff.

2. New industries to be set up in any of the following 40 backward taluks of the State, will be given a further reduction of 15 per cent in tariff, in addition to the concession specified in paragraph 1 above.

| *Districts.* | *Taluks.* |
|---|---|
| 1. Kanyakumari district ... | 1. Vilavancode taluk |
| | 2. Thovala taluk |
| 2. Madurai district ... | 3. Nilakottai taluk |
| | 4. Melur taluk |
| 3. North Arcot district ... | 5. Arani taluk |
| | 6. Arkonam taluk |
| | 7. Polur taluk |
| | 8. Tiruvannamalai taluk |
| 4. Ramanathapuram district ... | 9. Ramanathapuram taluk |
| | 10. Kamuthi sub-taluk |
| | 11. Mudukulathur taluk |
| | 12. Sivaganga taluk |
| | 13. Manamadurai sub-taluk |
| | 14. Paramakudi taluk |
| | 15. Ilayangudi sub-taluk. |
| | 16. Devakottai sub-taluk |
| | 17. Tiruvadanai taluk |
| | 18. Tirupathur taluk |
| | 19. Karaikudi sub-taluk |



| *Districts.* | *Taluks.* |
|---|---|
| 5. Salem district ... | 20. Sankari taluk |
| | 21. Athur taluk |
| | 22. Namakkal taluk |
| 6. Thiruchirappalli district ... | 23. Lalgudi taluk |
| | 24. Udayarpalayam taluk |
| | 25. Thirumayam taluk |
| 7. South Arcot district ... | 26. Tirukoilur taluk |
| | 27. Kallakurichi taluk |
| | 28. Vridhachalam taluk |
| | 29. Gingee taluk |
| 8. Tirunelveli district ... | 30. Tiruchendur taluk |
| | 31. Nanguneri taluk |
| 9. Thanjavur district ... | 32. Sirkali taluk |
| | 33. Nannilam taluk |
| | 34. Orathanad taluk |
| | 35. Mannargudi taluk |
| | 36. Nagapattinam taluk |
| | 37. Thiruthuraipoondi taluk |
| | 38. Aranthangi taluk |
| 10. Dharmapuri district | 39. Krishnagiri taluk |
| | 40. Dharmapuri taluk |

## WATER ROYALTY CONCESSION

Wherever it is possible to permit a new industry to divert water from public sources, a fixed amount of Rs. 200 per annum will be levied towards the payment of water royalties by new industries

to be set up in the following eight industrially backward districts irrespective of the quantity of water drawn by them, for an initial period of six years :—

1. South Arcot.
2. Tiruchirappalli.
3. Madurai.
4. Ramanathapuram.
5. Kanyakumari.
6. North Arcot.
7. Thanjavur.
8. Dharmapuri.

## தமிழ்நாடு சட்டப் பேரவை

### வியாழக்கிழமை, 1973 மார்ச் 29.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

#### மதுரை மாவட்டத்தில் முதியோர் உதவித் தொகை பெறுவோர்.

* 551 வினா.—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டத்தில் எத்தனை பேருக்கு தற்போது முதியோர் உதவித் தொகை கொடுக்கப்படுகிறது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 4,087 பேர்களுக்கு (31—1—1973 முடிய).

திரு. ந. தருமலிங்கம் : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் ஏதும் இல்லாத அனாதை முதியோர்களுக்கு அரசு உதவித் தொகை அளிக்கிறது. ஆனால், குழந்தைகள் இருந்தும் பேணிக் காக்கப்படாமல் தவிக்கும் முதியோர்களுக்கும் உதவித் தொகை அளிக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்த முதியோர்க்கு உதவித் தொகை அளிப்பதற்குச் சில தகுதிகள் ஏற்கெனவே வரையறுக்கப் பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையில்தான் அளிக்கப்படுகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இப்பொழுது பல வயோதிகர்களுக்குப் பென்ஷன் கிடைக்காமல் இருக்கிறது. ஆதலால், இந்தத் தகுதிகளைப் புனர் பரிசீலனை செய்து இன்னும் அதிகப்படியான பேர்களுக்குப் பென்ஷன் வழங்க அரசாங்கம் தக்க நடவடிக்கைகள் எடுக்குமா?

[1973 மார்ச் 29

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்பொழுது தகுதிகள் என்று வரையறுக்கப்பட்டிருப்பது 65 வயதும் அதற்கு மேற்பட்டும் உள்ள அனாதைகளுக்கும், 60 வயதும் அதற்கு மேற்பட்ட குருடு, தொழு நோய், மன நோய், வாத நோய், முடம் முதலிய காரணத்தினால் உழைத்துப் பிழைக்க முடியாத அனாதைகளுக்கும் முதியோர் பென்ஷன் வழங்கப்படுகிறது. இதை மாற்றுகின்ற உத்தேசம் இப்பொழுது அரசுக்கு இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : மதுரை மாவட்டத்தில் 4,000-க்கும் அதிகமான பேர்களுக்குப் பென்ஷன் கிடைக்கிறது என்றாலும் வயது முதிர்ந்த பெண்கள் மனு போடுவதற்குத் தெரியாமல் மிகவும் சிரமப் படுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கும் முதியோர் பென்ஷன் கொடுக்கும்படி அங்கிருக்கக்கூடிய மாவட்ட ஆட்சியாளருக்கு ஒரு டைரக்டிவ் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதுபோன்ற சங்கடங்கள் வயதான மூதாட்டியர்களுக்கு இருக்குமானால், அவர்களுக்கு உதவி புரியும் வகையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அது சம்பந்தமாக ஆராய்ந்து முடிவுகளை எடுக்குமாறும், அவர்களுக்கு உதவிகரமாகப் பணியாற்ற வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்படுவார்கள்.

திரு. சௌடி எஸ். சுந்தர பாரதி : ஒரு மாவட்டத்திற்கு இத்தனை பேருக்குத்தான் இந்த உதவித் தொகை கொடுக்கவேண்டும் என்ற வரையறை இருப்பதால், எத்தனை தகுதி இருந்தாலுங்கூட, உதவித் தொகை பெறாமல் அனாதை முதியோர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். தகுதி இல்லாவிட்டாலுங்கூட அப்படிப்பட்டவர்களுக்கு உதவித் தொகை கொடுக்க அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வரையறுக்கப்பட்ட தகுதிகள் உள்ளவர்களுக்கு 1972–73-ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப் பட்ட தொகை ரூ. 95 லட்சம் ஆகும். ஆனால், 31—1—1973 வரை ரூ. 71,93,528 தான் அதற்காகச் செலவிடப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தத் தகுதிகள் அடிப்படையில் போட்டுவந்த எல்லா மனுக்களும் கவனிக்கப்பட்டிருக்கின்றன என்றுதான் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆகவே, இந்தத் தகுதி அடிப்படையில் இப்பொழுது அளிக்கப்பட்டு வருகிறது. தகுதியை மாற்றுவதற்கு எந்த உத்தேசமும் இல்லை. ஏனென்றால், ரூ. 95 லட்சம் ஒதுக்கியும் தகுதி அடிப்படையிலே அந்தத் தொகைக்கு வரவேண்டிய மனுக்கள் வரவில்லை.



1973 மார்ச் 29]

திரு. எம். தேவராசன் : தலைவர் அவர்களே, வயதானவர்கள் அலுவலகத்திற்குச் சென்று அந்த உதவித் தொகையைப் பெறுவது கடினமாக இருப்பதால் பண விடைத் தாள் மூலமாக அரசு அனுப்ப ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இது உறுப்பினருக்குத் தெரியாமல் இருப்பது ஏன் என்று தெரியவில்லை. சம்பந்தப்பட்ட வட்டத் தாசில்தார் மணியார்டர் மூலமாக அரசுச் செலவில் இந்தத் தொகையை அனுப்பி வருகிறார்.

திரு. வை. பாலசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, இந்த முதியோர்க்குரிய உதவித் தொகை 1967 ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் அதிகமாகத் தரப்படுகிறது என்று சொல்லப்படுவது உண்மையா? இதற்கு ஏதாவது மத்திய சர்க்காருடைய பங்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இது 1962-ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இதில் ஏற்றத்தாழ்வுகள் எந்த எந்த ஆண்டுகளில் இருக்கின்றன என்றால், 1962-63-ஆம் ஆண்டில் ரூ. 51 லட்சமாக இருந்தது. பிறகு ரூ. 102 லட்சமாக உயர்ந்தது. பிறகு ரூ. 94 லட்சமாயிற்று. அதற்குப் பிறகு ரூ. 95 லட்சமாகியது. இதில் ஏற்றத்தாழ்வுகள் இருப்பதற்குக் காரணம், அவர்கள் முதியோராக இருப்பதால் இடையிடையே அவர்கள் மறைந்துவிடுகிறார்கள் என்பதுதான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் ஒரு சமயத்தில் ஒரு கேள்விதான் கேட்க வேண்டும்.

திரு. கா. வேழவேந்தன் : முதல் அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது இன்னும் தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப் பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன என்று சொன்னார்கள். ஒவ்வொரு மாவட்டத்திற்கும், வட்டத்திற்கும், துணை வட்டத்திற்கும் 90, 100 என்று ஒரு உச்சவரம்பு எண்ணிக்கை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே தகுதியுடைய அனைவருக்கும் இத்தொகை எல்லா மாவட்டத் திலும் தரப்பட நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாவட்டங்களுக்கு என்று எண்ணிக்கை வரையறுக்கப்படவில்லை. உதாரணமாக, சேலம் மாவட்டத்தில் 4,518 பேர்களும், திருச்சி மாவட்டத்தில் 2,202

[1973 மார்ச் 29

பேர்களும், இராமனாதபுரம் மாவட்டத்தில் 3,814 பேர்களும், தென் ஆற்காடு மாவட்டத்தில் 1,584 பேர்களும் முதியோர்க்கான உதவித் தொகை பெறுகிறார்கள். மாவட்டங்களுக்கு இவ்வளவுதான் என்று நிர்ணயிக்கப்படவில்லை.

திரு. மு. சண்முகம் : தலைவர் அவர்களே, முதியோர்கள் உதவித் தொகை பெறுவதில் பலர் தாங்கள் தகுதி உடையவர்கள் என்று தெரிந்து விண்ணப்பம் செய்துகொள்வதில்லை. நாம் எதிர்பார்க்கும் அளவுக்கு அவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வராத நிலைமை இப்பொழுது இருந்து வருகிறது. ஆகவே, அரசாங்கத்தின் சார் பாகவே தைரியமாக முன்வந்து முதியோர்க்கான உதவித் தொகை பெறத் தகுதி உடையவர்கள் எல்லோரையும் கணக்கெடுத்து அவர் களுக்கெல்லாம் உதவித் தொகை வழங்குவதற்கான ஏற்பாட்டை அரசு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : உள்ளபடியே சங்கடம் அனுபவிப்பவர்கள் தாங்களாகவே முன்வந்து உதவித் தொகை கேட்பதுதான் முறையானதாக இருக்கும். நாமே சென்று நிலைமை களை ஆராய்ந்து தருவதில் பல தவறுகள் ஏற்பட்டுவிடக் கூடும்.

திரு. சி. ஆறுமுகம் : இந்த முதியோர் உதவித் தொகை காலத் தோடு கிடைப்பது சங்கடமாக இருக்கிறது. வட்ட ஆட்சித் தலைவர் அந்தந்தப் பகுதியில் உள்ளவர்களுக்கு உடனடியாகக் கொடுத்தால் நலமாக இருக்கும் அல்லவா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தத் தொகையே காலம் போன காலத்தில்தான் கிடைக்கிறது.

திரு. ஏ. சுவாமிதாஸ் : முதியோர்களுக்குப் பென்ஷன் கொடுக்கிற தொகையை நிறுத்திவிட்டு ஆங்காங்கு முதியோர் இல்லங்களைத் திறந்து அவர்களைப் பேண அரசு முற்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது ஒரு நல்ல யோசனை. ஆனால், இப்பொழுது தரப்படுகிற தொகையை உடனடியாக நிறுத்தி விடுவதால் வயதானவர்கள் பாதிக்கப்படுவார்கள். அவைகளை யெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டுதான் அதைப் பரிசீலிக்க வேண்டும்.



1973 மார்ச் 29]

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Chief Minister whether the amount given as pension to the old people will be increased, at least by a little sum?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்பொழுது அதை உயர்த்துவதாக உத்தேசம் இல்லை.

திரு. கே. பி. கந்தசாமி : தகுதியுடைய பல ஏழை எளியவர்களுக்கு ஓடி உதவுகிற அரசு, பல வயோதிகர்கள் இருப்பதைக் கருதி, அவர்க ளுக்கு தகுதி வரம்பு விதிக்காமல், இன்னும் அதிகமான நபர்களுக்கு உதவித் தொகை கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : த[illegible] இல்லாமல் 60 வயதுக்கு மேற்பட்ட எல்லோருக்கும் [illegible]து என்பது இயலாத காரியம். ஏனென்றால், அ[illegible]து வயதுக்கு மே[illegible]ட பல பேர் வசதியோடு வாழ்ந்து [illegible]ண்டிருக்கிறார்கள். அ[illegible]களுக் கெல்லாம் இந்தத் தொகை தர [illegible]லாது என்ற காரண[illegible] சில தகுதிகள் வரையறுக்கப்பட்டுள்ள[illegible]

திரு. நா. வெ. குருசாமி : [illegible]தியோர் பென்ஷன் [illegible]தொகை ஆங்காங்கு கொடுக்கும்போது ம[illegible]கொடுப்பவர்கள், டா[illegible]ரிடம் சர்டிபிகேட் வாங்கித்தான் செய்ய [illegible]டுமென்று விதி [illegible]க்கிறது. அதைத் தளர்த்த முடியுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : [illegible]கு மேற்பட்டவர் களுக்கு குருடு, தொழு நோய், மன நோய், வாத நோய், முடம் என்று தகுதிகள் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. இதையெல்லாம் பார்த் தாலே தெரியும். இதற்கு டாக்டர் சர்டிபிகேட் தேவை என்பது புரியாமல் இருக்கிறது. அப்படி ஒரு கட்டுதிட்டம் இருக்குமானால் அதைப்பற்றி ஆராய அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

திரு. நா. வீராசாமி : 60 வயதுக்கு, மேற்பட்ட ஊனம் உள்ள வர்களுக்கு, மகனோ, மகளோ இல்லாதவர்களுக்கு இந்தப் பென்ஷன் வழங்கப்படுகிறது. பென்ஷன் போகிற தேதியில் மகனோ, மகளோ இல்லாவிட்டாலும் வேறு சொந்தக்காரர்கள் வந்து உட்கார்ந்து கொண்டு அந்தப் பணத்தைச் செலவு செய்கிறார்கள். இதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : குடும்ப விஷயங்களில் நுழைய நான் தயாராக இல்லை.

திரு. த. சோனையா : 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பென்ஷன் கொடுக்கப்படுகிறது. வயது குறைந்தவர்களும் அதிகமாக வயதைக் கூறி பணத்தை வாங்கிக் கொள்கிறார்கள். அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அந்த வயதைப் பொருத்துத்தான் டாக்டர் சர்டிபிகேட் கோரப்படுவதாக அறிகிறேன். அதற்கும் டாக்டர் சர்டிபிகேட் இல்லாமல் வேறு அடிப்படையில் ஆராயலாமா என்பதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. என். கணபதி : முதியோர் தொகை வழங்கப்படுவதில் நம்முடைய நாட்டில் அதிகமாக இருக்கும் அரசியலில் இருக்கும் முதியோர்களுக்கும் அந்தச் சலுகை காட்டப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அரசியலில் உள்ள முதியோர்களைப் பற்றிப் பிரச்சினை இல்லை. அனாதை முதியோர்களைப் பற்றித்தான் பிரச்சினை.

திரு. கோவை செழியன் : 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இப்படி உதவி செய்வது போல் நம்முடைய நாட்டில் 16 வயதுக்கு மேற்பட்டவர்கள் பலர் வேலை இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதை நிவர்த்திக்க தமிழ் நாட்டை வெல்ஃபேர் ஸ்டேட்டாக அறிவித்து விட்டால் இந்தப் பிரச்சினைக்கு இடம் இல்லாமல் போய்விடும். இதுபற்றி மத்திய அரசாங்கத்தை மாநில அரசு அணுகுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போது முதியோர் விவகாரம் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம். இளையோர் விவகாரத்திற்கு இப்போது இடம் இல்லை.

*Tax Structure in the State.*

* 552 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the State Planning Commission is examining the Tax Structure of the State Government; and

(*b*) if so, the details thereof?



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) & (இ) தமிழ் நாட்டிற்கு 1984-ஆம் ஆண்டு முடிய நீண்ட கால நோக்கில் திட்டம் ஒன்றை வகுக்கும் தனது முயற்சியின் ஒரு பகுதியாக மாநில திட்ட ஆணைக்குழு, தற்போதைய வரி அமைப்பு முறையையும் ஆய்வு செய்து வருகிறது.

திரு. என். டென்னிஸ் : தமிழ் நாட்டில் வர்த்தகம், தொழிற் துறை இவற்றில் விதிக்கப்பட்டிருக்கும் வரி உயர்ந்திருக்கிறதா? ராமெட்டீரியல்சுக்கு உள்ள வரி விதிப்பினால் தொழிற் வளர்ச்சி பாதிக்கப்பட்டிருக்கிறதா? பொருளாதாரத் துறையில் அதற்கெல்லாம் வரி விதிக்கக்கூடாது என்பது பற்றி ஆராய திட்டக் குழுவுக்கு ஆணை பிறப்பிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தத் திட்டக் குழுவின் துணைக் குழு நிதி வாயில்களைத் திரட்டுதல், வளர்ச்சி வீதம், மாநில வருவாய், வரி விதிப்புக் கொள்கை ஆகிய இந்தத் தலைப்புகளின் அடிப்படையில் ஆய்வு செய்து வருகிறது. அதற்கு மேலான விவரங்களை இப்போது அளிக்க இயலாது.

திரு. கே. கந்தசாமி : இந்தக் கமிஷன் ஆராய்ச்சி செய்கிறபோது சேல்ஸ் டாக்ஸ் போன்றவற்றில் வரி ஏய்ப்புச் செய்வதைத் தடுக்க முயற்சி எடுத்துக்கொள்ளப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவைகளையும் இந்தக் குழு ஒருவேளை ஆய்ந்திடக்கூடும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : நேர்முக வரிகளை அதிகப்படுத்தி மறைமுக வரிகளைக் குறைக்க ஆலோசனை கொடுக்கப்பட்டிருக்கிறதா? விவரங்கள் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அரசியலமைப்புச் சட்டத்தின் 280-வது பிரிவின்கீழ் அமைக்கப்பட்டுள்ள நிதி ஆணைக் குழுவின் தீர்ப்பின்படி மத்திய அரசின் எந்த வரி வருவாய்களில் மத்திய அரசு மாநில அரசுகளுடன் சட்டப்படி பங்கிட்டுக் கொள்கிறதோ அவை தொடர்பாகவும், மாநில அரசின் வரி அமைப்பு முறையையும் மாநில திட்ட ஆணைக்குழு ஆய்வு செய்து வருகிறது.

தமிழக அரசின் வரிவிதிப்பு முயற்சிகளைச் சீரமைப்பதன் மூலம் மட்டுமின்றி, மத்திய அரசின் வரி வருவாய்களிலிருந்து பெருமளவு பங்கினைப் பெறுவதன் மூலமாகவும், தமிழ் நாட்டின் வளர்ச்சிக்காக

[1973 மார்ச் 29

கூடுதல் நிதிவாயில்களைத் திரட்டுவது குறித்து மதிப்பிடுவதுதான் இந்த ஆய்வின் நோக்கமாகும். இந்த ஆய்வு தமிழ் நாடு அரசின் நிதித் துறையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு நடத்தப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்ன கருத்துக்களும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : ஒரு முனை விற்பனை வரி பற்றி ஆராய ஏற்கனவே ஒரு குழு அமைக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் ஏற்கனவே சொன்னார்கள். ஒரு முனை விற்பனை வரி போடுவதன் மூலம் வெளி மாநிலத்திற்கு ஏற்றுமதி செய்வது, இந்த மாநிலத்தில் ஏமாற்றுவதற்கு வசதியாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இதுபற்றி இந்த இரண்டு குழுக்களும் இணைந்து செயல்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தனியாக கேள்வி கேட்டால் விளக்கமாகப் பதில் சொல்லலாம். அதற்கான விவரங்கள் தற்போது இல்லை. ஒரு முனை விற்பனை வரிக்கு ஆதரவும், அதே நேரத்தில் பல முனை விற்பனை வரிக்கு எதிர்ப்பும் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தும் இருக்கிறது. அதை எல்லாம் ஆராய்ந்துதான் முடிவு செய்யவேண்டும்.

திரு. என். கே. பழனிசாமி : வெல்த் டாக்சிலும், இன்கம் டாக்சிலும் எவ்வளவு பங்கு கிடைத்தது? அதை அதிகப்படுத்த வேண்டுமென்று குழு கேட்டதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நிதிநிலை அறிக்கையிலேயே நான் இதுபற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். மாநிலங்களுக்கு வரி வருவாயைப் பிரித்துக் கொடுப்பதற்கான அடிப்படை விரிவாக்கப்பட வேண்டுமென்றும், வருமானத்தின்மீது விதிக்கப்படுகின்ற கூட்டு நிறுவன வரி மாநிலங்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கும் வரி வருவாய்த் தொகுதிக்குள் அடங்க வேண்டுமென்றும், ஆயத் தீர்வையில் மாநிலங்கள் பெறுகிற பங்கு 50 சதவீதமாக உயர்த்தப்பட வேண்டுமென்றும், இத்தகைய மாற்றங்களின் மூலமே மாநிலங்களின் நிதிநிலை, நிச்சயமற்ற தன்மையிலிருந்து விடுபட முடியுமென்றும் நிதி ஆணைக் குழுவிடம் நமது அரசு எடுத்துக் கூறியிருக்கிறது. வெல்த் டாக்ஸ், இன்கம் டாக்சிலிருந்து எவ்வளவு நமக்குக் கிடைத்திருக்கிறது என்று இப்போது சொல்வதற்கு விவரங்கள் இல்லை.



1973 மார்ச் 29]

திரு. நா. வீராசாமி : நாம் விவசாய வருமான வரியைப் போட்டவுடனே மத்திய அரசாங்கத்திலிருந்து அதேபோல் ஒரு வரியைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இன்கம் டாக்ஸை சிலர் கட்டாமல் ஏமாற்றுவதை மத்திய அரசால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆகவே, நாமே ஒரு இன்கம் டாக்ஸ் முறையைக் கொண்டு வர ஸ்டேட் பிளான்னிங் கமிஷன் யோசனை கூறுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாநில அளவில் வருமான வரி அமைப்பை ஏற்படுத்துவது என்பது கலந்து பேசி எடுக்க வேண்டிய முடிவுகள். அவசரப்பட்டு எதுவும் சொல்லுவதற்கில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, some time back the Fifth Finance Commission came to our State. May I know from the Hon. the Chief Minister whether the State Planning Commission met the Finance Commission and made suggestions to increase the income of our State?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாநிலங்களுடைய வருமானங்களை உயர்த்துவது பற்றி இதுவரை எவ்வளவோ யோசனைகள் சொல்லப் பட்டிருக்கின்றன. அதுபற்றிய விவரங்கள் இல்லை.

திரு. வை. பாலசுந்தரம் : மாநில ஆணைக் குழு தமிழ் நாட்டில் மட்டுந்தான் திட்டங்கள் சீரோடும், சிறப்போடும் செயல்பட்டிருக்கின்றன என்று கூறப்படுவது உண்மையா?

(பதில் இல்லை.)

திரு. கோவை செழியன் : மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்துக்கு நிதி ஒதுக்குகின்றபோது மாநிலத்தினுடைய மக்கள் தொகை, மாநிலத்திற்கு வருகின்ற வருமானம், செலவு அனைத்தையும் மனத்தில் கொண்டு தான் ஒதுக்க வேண்டுமென்று விதி இருக்கிறது. அந்த முறைப்படி தமிழகத்திற்குச் சரியான பங்கு கொடுக்கப்பட்டிருக்கிறதா? மத்திய அரசாங்கத்திடமிருந்து வருமான வரியை வசூலிக்கின்ற உரிமையைப் பெற எல்லா மாநிலங்களோடும் சேர்ந்து தமிழகம் போராட முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எந்த அடிப்படையில் நிதிகள் ஒதுக்கிட வேண்டுமென்ற கருத்தைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அந்த அடிப்படையில் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படுவதில்லை. அதற்காகத்தான் மாநில அரசு

[1973 மார்ச் 29

மத்திய அரசோடு வாதாடிக் கொண்டிருக்கிறது. வருமான வரித் துறையை மாநிலங்களில் அமைப்பது பற்றி திரு. வீராசாமி அவர்கள் கேட்ட கேள்விக்கு ஏற்கனவே பதில் அளித்திருக்கிறேன்.

திரு. ந. தர்மலிங்கம் : இந்த மாநில திட்டக் குழு அங்கத்தினர்கள் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்? இதை நியமிப்பது மத்திய அரசா அல்லது மாநில அரசா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இவற்றைப் பற்றி எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் ஓரளவு தெரிந்து கொண்டு கேட்பதுதான் முறையாகும். மாநிலத் திட்ட ஆணைக் குழு இந்தியாவிலேயே முதல் முதலாக நம்முடைய மாநிலத்தில்தான் நாம்தான் உருவாக்கினோம். நாம்தான் உறுப்பினர்கள், தலைவர், துணைத் தலைவர் ஆகியோரைத் தேர்ந்தெடுக்கிறோம். இந்த மாநில அரசு சார்பில் அமைக்கப்பட்ட திட்டக் குழு இது. 'மாநிலத் திட்டக் குழுவுக்கும் மத்திய அரசுக்கும் தொடர்பு இங்கிருந்து பணம் கேட்டு அவர்கள் பணம் கொடுக்கச் சொல்லவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முதல் அமைச்சர் அவர்களது கருத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் சிறிது கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தமிழ் நாட்டின் தலைநகர் எது என்று கூட துணைக் கேள்விகள் கேட்க ஆரம்பித்துவிட வேண்டாம். மாநில திட்டக் குழு அமைக்கப்பட்டது எவ்வளவு பெரிய விவகாரம் என்பது எல்லோருக்கும் தெரியும்.

*Grants for Panchayat Unions*

*553 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether there is any proposal to increase the grants given to the Panchayat Unions which are financially weak; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆரம்பக் கல்விச் செலவுக்காக, ஊராட்சி ஒன்றியக் குழுக்களுக்கு அளிக்கப்படும் உதவி முறை, ஊராட்சி கல்வி நிதி விசாரணைக் குழுவின் பரிவுரையின் அடிப்படையில், 1—4—1972 முதல் மறுவகைப்பாடு செய்யப் பட்டுள்ளது. வட்டாரங்களின் மறுவகைப் பாட்டினையொட்டி



[1973 மார்ச் 29

ஒன்றியங்களுக்கு, மிக மிகக் குறைந்த வருமானம் உள்ள ஒன்றியங் களுக்கு அதிகம் செலவழிக்கிற வகையில் 95 சதவீதம் அரசு ஏற்றுக் கொள்கிறது, ஐந்தே ஐந்து பங்குதான் ஒன்றியம் ஏற்கிறது. இதனால் பல்வேறு ஒன்றியங்கள் வருவாய் தேடிக்கொள்ள வழிவகை ஏற்படு கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : பழைய சாலைகளைப் பராமரிப் பதற்கும், இணைப்புச் சாலைகள் போடுவதற்கும் இப்போது ஒதுக்கப் பட்டிருக்கிற நிதி, பஞ்சாயத்து யூனியன்களுக்கு போதாது என்ற ஒரு கருத்து இருக்கிறது. ஆதலால் அது சம்பந்தமாக அரசாங்கம் அதிக நிதி உதவி வழங்குவதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆண்டுக்கு ஆண்டு சாலை வசதிகள், மற்றவைகளைச் செய்வதில் நிதி ஒதுக்கீடு ஓரளவிற்கு பெருக்கப்பட்டு வருகிறது. அது மட்டுமல்லாமல், அவர்களுக்குத் தருகிற விகிதாசாரம் கூட ஓரளவிற்கு இப்போது 2-50 ரூபாய் வரை யில் செஸ் வரி வசூலிக்கலாம் என்று குறிப்பிட்டிருக்கிறோம். அதை எவ்வளவுக்கெவ்வளவு உயர்த்திக் கொண்டு போகிறார்களோ அந்த அளவிற்கு கொடுக்கப்படுகிற விகிதாசாரத்தையும் உயர்த்துவது என்று முடிவு எடுத்திருக்கிறோம். ஏற்கனவே ஒரு முறை இருந்தது. 75, 100, 125, 150 என்று இருந்தது. அதை மாற்றி மேற்கொண்டு போகப்போக நாம் கொடுக்கிற விகிதாசாரமும் வளரும் என்று சொல்லியிருப்பதால் ஓரளவிற்கு அதிக நிதி வசதி பெற வாய்ப்பிருக் கிறது. ஆக, இந்த அடிப்படையில் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

திரு. தொ. ப. சீனிவாசன் : அமைச்சர் அவர்கள் 2-50 ரூபாய் வரை செஸ் வரி விதிக்க உத்தரவிட்டிருப்பதாகச் சொன்னார்கள். ஒரு ஒன்றியத்தில் ரூ. 1-50 என்றும் இன்னொரு ஒன்றியத்தில், பக்கத்தி லுள்ள ஒன்றியத்தில் ரூ. 2 என்றும் இப்படி பல்வேறு மாறுபட்ட வகையில் இருப்பதால் மக்களிடத்தில் ஒரு குழப்பமான நிலை ஏற்படு கிறது. எனவே ஒரே சீராக வரி வசூலிக்க வேண்டுமென்று உத்தர விடப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஒரே சீராக வசூலிக்க முடியாது. ரூ. 2-50 வரை என்றுதான் சொல்லியிருக் கிறோம். அந்தந்த ஊராட்சி ஒன்றியத்தின் வருமானம், அதற்குள்ள வசதி வாய்ப்புகள், ஆகியவற்றைக் கணக்கிட்டுத்தான் ஊராட்சி

1973 மார்ச் 29]

கொடுக்கப்படத் தக்க உள்ளூர் செஸ் மேல்வரி இணை மானிய வீதமும், உள்ளூர் செஸ் மேல்வரி வீதத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. பெரும்பான்மையான ஊராட்சி ஒன்றியக் குழுக்களுக்கு ஒதுக்கப்படும் மானியங்கள் இந் நடவடிக்கைகளினால் உயரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

திரு. என். கே. பழனிசாமி : பெருவாரியாக வரட்சிப் பகுதிகளில் உள்ள பஞ்சாயத்து யூனியன்களுக்கு அவை கல்விக்காகச் செலவழிப்பதால் போதுமான நிதி வசதி அபிவிருத்தி வேலைகளுக்குக் கிடைப்பதில்லை. ஆகவே வரட்சிப் பகுதிகளில் உள்ள யூனியன்களுக்கு அதிக உதவி செய்வது அல்லது அந்த யூனியனால் நடத்தக்கூடிய கல்வி ஸ்தாபனங்களை சர்க்காரே ஏற்று நடத்துவதற்கு உத்தேசமுண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஏற்கனவே ஊராட்சி ஒன்றியங்கள் நான்கு வகைகளாக பிரிக்கப்பட்டிருந்தன. இப்போது ஆறு வகையாக பிரிக்கப்பட்டிருக்கின்றன. வழங்கப்படுகிற மானியத்தின் அளவும் ஓரளவிற்கு அதிகமாக ஆக்கப்பட்டிருக்கிறது. அப்படி மாற்றியமைக்கப்பட்ட வகைகளில் கல்விக்காகச் செலவழிக்கிற செலவழிப்புக்கு அதிகமாக அரசு தரும் மானியமாக கிட்டத்தட்ட 265 ஊராட்சி ஒன்றியங்களுக்கு அமையத் தக்க அளவிற்கு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த மாறுதலினால் ஏற்படுகிற விளைவினால் அதிகமான பலன் பெறமுடியும். அவர்களுக்கு வழங்குகிற செஸ் வரிக்கு இணையான மானிய வீதமும் மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. இதனால் 374 ஊராட்சி ஒன்றியங்களுக்கும், கூடுதல் செலவாக ஏழு கோடி ரூபாய்க்கு மேலாகிறது. ஆகவே இப்படிப்பட்ட வகைகளில் பல்வேறு ஒன்றியங்கள் அதிகப்படியான நிதி வசதியைப் பெறமுடியும் என்று எதிர்பார்க்கலாம்.

திரு. எம். இராதாகிருட்டிணன் : நிதி வசதி குறைவாக உள்ள பல ஊராட்சி ஒன்றியங்கள் விளக்குகளுக்குக் கூட பணம் கட்ட வழிவகை இல்லாமல் இருக்கின்றன. ஆகவே அவற்றிற்கு மானியம் ஏதாவது அளிக்க வழிவகை உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதைப் பற்றித் தான் குறிப்பிட்டேன். நான்கு வகைகளாக இருந்தது ஆறு வகைகளாக பிரிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே கொடுக்கப்படும் மானியத்தை விட அதிகமாகும் செலவில் கூட முதல் தரமாக இருப்பவற்றிற்கு அரசாங்கப் பங்கு 60 சதவீதம் ஆகவும் ஊராட்சி ஒன்றியம் 40 சதவீதம் என்று படிப்படியாக ஏறி கடைசி ஆறாவது தர



1973 மார்ச் 29]

ஒன்றிய உறுப்பினர்கள் என்ற முறையில் ஊராட்சி மன்றத் தலைவர்கள் ஒன்றுகூடி அந்தந்த ஊராட்சி ஒன்றியத்தின் நிலையை அறிந்து இந்த விகிதாசாரத்தை நிர்ணயிக்கிறார்கள். ஒரே சீராக இருக்க வேண்டுமென்று வற்புறுத்தினால் வசதியுடைய ஒன்றியங்களோடு போட்டி போடும் அளவிற்கு வசதியற்ற ஒன்றியங்களைக் கொண்டுவர இயலாது. ஆகவே அவர்களுக்கு இந்தச் சலுகை தரப்பட்டிருக்கிறது. இந்த முறையில் அவர்களே நிர்ணயித்துக் கொள்ளும் ஏற்பாடும் இருந்து வருகிறது.

• திரு. த. சோனையா : இராமநாதபுரம் மாவட்டம் பஞ்சத்தாலும் வரட்சியாலும் பாதிக்கப்பட்ட மாவட்டமாகும். அப்படி இருந்தும் கூட அங்கு முதல்தர பஞ்சாயத்து ஒன்றியம், இரண்டாம்தர பஞ்சாயத்து யூனியன் என்று வைக்கப்பட்டிருப்பதால் முதல்தர அல்லது இரண்டாம்தர ஒன்றியங்கள் அந்தவகையில் செலவழிக்க முடியாமல் உள்ள நிதிநிலையில் அவர்கள் மிகவும் திண்டாடுகிறார்கள், சிரமப்படுகிறார்கள். எனவே இராமநாதபுரம் மாவட்டத்தின் நிலையை மனதில் வைத்து 3-வது, 4-வது, 5-வது, 6-வது என்ற வகையில் ஒப்புக் கொள்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 7-வது என்று நாங்கள் வைக்காத காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏழாவதுக்குப் போகாமல் இருக்கிறார்கள். தரம் பிரிப்பதில் ஒரு குறிக்கோள் அல்லது ஒரு முறை வைத்திருக்கிறோம். அதன் அடிப்படையில்தான் தரம் பிரிக்கப்படுகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் வரட்சி நிலை மற்றவைகளுக்கு ஏற்றபடி வேறு பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதனால் நிதி வசதி கிடைக்கிறது பல வகைகளில். வரட்சி நிவாரண பணியின் மூலம் அளிக்கப்பட்ட பெரும் தொகை வேறு எந்த மாவட்டத்தையும் விட இராமநாதபுரம் மாவட்டத்திற்குத்தான் அதிகமாக அளிக்கப்பட்டுள்ளது. அதனால் சாலை வசதிகளைப் பெருக்கமுடியும், அந்த அளவிற்கு வசதி வாய்ப்பினைப் பெருக்கிக் கொள்ள முடியும். பெர் காப்பிட்டா லாண்ட் ரெவன்யூ ரூ. 4-க்கு மேல் போனால் அது முதல் தர ஒன்றியம் என்றும், ரூ. 3–4 வரையில் உள்ளது இரண்டாம் தரம் என்றும், ரூ. 2–3 வரையில் உள்ளது மூன்றாம் தரம் என்றும், ரூ. 1–2 வரையில் உள்ளது நான்காம் தரம் என்றும், 75 காசிலிருந்து ஒரு ரூபாய் வரை உள்ளது ஐந்தாம் தரம் என்றும், 75 பைசாவிற்குக் கீழே உள்ளது ஆறாம் தரம் என்றும் வைத்திருக்கிறோம். தரம் பிரிப்பதில் அந்த இலக்கணத்தை வைத்து செய்யப்படுகிறது.

[1973 மார்ச் 29

வேறு பல வசதிகள் செய்வதில் இராமநாதபுரம் மாவட்டம் கவனிக்கப்பட்டு வருகிறது என்பதை உறுப்பினர் அவர்கள் அவ்வப்போது அறிவார்கள்.

*Low-lying areas in Madurai*

*551 Q.—THIRU K. T. K. THANGAMANI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the steps taken by the Government to prevent the flooding of the low-lying streets during rainy seasons in the City of Madurai?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மதுரையில் மழை தண்ணீர் வடிகால்கள் கட்டுவதற்கு ரூ. 115 லட்சங்கள் செலவாகும் திட்டமொன்று பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி: இதுமாதிரி சென்னை நகரில் லோ லையிங் ஏரியாக்களில் தண்ணீர் தேங்காமல் இருப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. மதுரையில் மதுரை மத்திய பகுதியிலும் பஸ் ஸ்டாண்டிலும் சிறு மழை பெய்தால் கூட தண்ணீர் அதிகம் தேங்கிவிடுகிறது. இதை, திட்ட அடிப்படையில் என்று சொல்லாமல் இந்த ஆண்டிலாவது அதை ஓரளவிற்குக் குறைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மதுரை நகரத்தில் நடுப்பகுதியில் கிட்டத்தட்ட $2\frac{1}{2}$ லட்சம் மக்கள் இருப்பார்கள் என்ற கணக்கின் அடிப்படையில் 1942-ல் ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. இப்போது $5\frac{1}{2}$ லட்சம் மக்கள் மதுரை நகரில் வாழ்கிறார்கள். நாள் ஒன்றுக்கு பத்து மில்லியன் காலன் கழிவு நீர் வருகிறது. எனவே அமைந்திருக்கும் வடிகால் திட்டம் கொண்டு இத்தகைய கழிவு நீரையும் மழை நீரையும் இரண்டும் சேரும்போது அதை அப்புறப் படுத்தமுடியாமல் இருக்கிறது. அதை சீர்படுத்தி அமைத்தால்தான் மழை நீரோடு கழிவு நீர் சேருவதை தடுக்க முடியும். வீதிகளில் உள்ள தண்ணீரை அகற்ற நகராட்சி வடிகால் திட்டத்தை நிறைவேற்ற உத்தேசித்துள்ளது. 1968-ல் ரூ. 5,90,000 செலவில் இந்த வடிகால் திட்டம் நிறைவேற்றப்பட்டது. இப்போது 115 லட்சம் ரூபாயில் திட்டம் ஒன்று பரிசீலனையில் இருக்கிறது. மதுரையில் பல்வேறு பகுதிகளில் மழை நீர் தேங்குவதை கொண்டு செல்லும்



1973 மார்ச் 29]

வகையில், கழிவு நீரைக் கொண்டு செல்லும் அளவிற்கும் தங்கு தடையில்லாமல் கொண்டு செல்ல திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. படிப்படியாக நிறைவேற்றப்படும்.

திரு. த. சோலையா: மதுரையில் தாழ்வான பகுதிகளில் மழைத் தண்ணீர் தேங்கி இருப்பதை அகற்ற திட்டமிடுகிறார்கள். அதில் திடீர் நகர் காமராஜபுரம் போன்றவை சேர்க்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அந்தப் பகுதி சேர்க்கப்பட்டிருக்கிறதா இல்லையா என்பதைப் பற்றிய விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் அறிந்து சொல்லலாம். 115 லட்சம் ரூபாய் திட்டம் ஒன்று தீட்டப்பட்டு பரிசீலனையில் இருந்து வருகிறது. படிப்படியாக நிறைவேற்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

*Bus route roads in Nagapattinam*

*555 Q.—THIRU A. RAJAMANICKAM: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether there is any proposal to take over the bus route roads at present maintained by the Nagapattinam Municipality by the Government? மு.ப 9-30

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நகரங்களின் எல்லைக்குள் இருக்கும் பேருந்துகள் செல்லும் சாலைகளை நெடுஞ்சாலைத் துறையின் பொறுப்புக்கு மாற்றுவதென அரசு தீர்மானித்திருக்கிறது.

*Poison Information and Treatment Centre at Madras.*

*556 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to open a Poison Information and Treatment Centre at the Madras General Hospital; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ): ஆம். இத்தகைய நிலையம் ஒன்று சென்னை பொது மருத்துவமனையில் ஏற்படுத்துதல் பற்றிய செயற் குறிப்பொன்று மருத்துவக் கல்வி இயக்குநர் அரசுக்கு அனுப்பியுள்ளார். அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

[1973 மார்ச் 29

THIRU N. DENNIS: May I know from the Hon. Minister whether such centres will be opened in district centres also?

THE HON. THIRU K. ANBAZHAGAN: Even this proposal is yet to be examined. We have to analyse it properly with the financial commitment and then accept it. If it is accepted in principle then we will ask the Director of Health Services to send proposals for some district hospitals.

*Students of Madurai Medical College.*

*557 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that a number of students of the Medical College, Madurai, were affected by food poison during September 1972; and

(b) if so, the details thereof?

THE HON. THIRU K. ANBAZHAGAN: (a) Yes.

(b) Seventy-one students, out of 590 students, who took the mid-day food on 17th September 1972, suffered from vomiting and giddiness two hours after taking food. The affected persons were admitted in the Government Erskine Hospital, Madurai on 17th September 1972. All the affected students except three were discharged from the hospital on 17th September 1972 itself. Out of the remaining three students, two were discharged on 19th September 1972 and the third on 20th September 1972.

திரு. ச. சங்குமுத்து தேவர் : தலைவரவர்களே, இந்த விபத்து நடந்ததற்கான காரணம் என்ன என்பதை அரசு தெரிவிக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அவர்கள் உணவுக்குப் பின்னால் உண்ட ஐஸ்கிரீம் காரணமாக அந்த விளைவுகள் ஏற்பட்டு இருக்க வேண்டுமென்று கருதுகிறார்கள். ஆனால் அந்த ஐஸ்கிரீம் மாதிரியை எடுத்து, சப்ளை செய்யப்பட்ட இடத்திலிருந்து கிடைத்ததை கிங் இன்ஸ்டிடியூட்டுக்கு அனுப்பப்பட்டது. அப்படி அனுப்பப்பட்ட ஐஸ்கிரீம் பரிசோதனை செய்து பார்த்ததில் culture negative for pathogenic organisms என்று தெரிவித்திருக்கிறார்கள். culture negative என்று தெரிவித்துவிட்டு. Aerobic spere bearers which are usually harmless grown in culture



1973 மார்ச் 29]

என்று அதைப் பற்றித் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் கொஞ்சம் பழைய ஐஸ்கிரீம் சேர்ந்து இருந்ததன் விளைவாக அந்த நிலைமை ஏற்பட்டு இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், மதுரைக் கல்லூரியிலே அந்த ஐஸ்கிரீம் அங்குள்ள ஹாஸ்டலிலிருந்து சப்ளை செய்யப்பட்டதா அல்லது வெளியில் வாங்கிச் சாப்பிட்டார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அது "ஓட்டல் தங்கம்" என்ற விடுதியிலிருந்து சப்ளை செய்யப்பட்டது என்று தெரிகிறது.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : தலைவரவர்களே, மதுரையில் இருக்கிற அந்த மாணவர்கள் விடுதி மாணவர்களால் நடத்தப் படுகிறதா அல்லது அங்கே வழங்கப்படும் உணவு காண்டிராக்ட் மூலமாக வழங்கப்படுகிறதா? அப்படி காண்டிராக்ட் மூலம் வழங்கப் படுவதாக இருந்தால், எதிர் காலத்தில் இப்படி மாணவர்கள் விடுதிக்கு வழங்கப்படும் உணவின் தரம் நல்ல முறையில் இருக்க வேண்டும் என்று வற்புறுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மாணவர்கள் விடுதி காண்டி ராக்டரால் நடத்தப்படுகிறதா இல்லையா என்ற விவரம் இல்லை. ஆனால் ஐஸ்கீரிம் ஓட்டலிலிருந்து வழங்கப்பட்டது என்ற விவரம் இங்கே தரப்பட்டு இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, இது போன்ற விபத்துக்கள் இதற்கு முன்னாலும் பல இடங்களில் நடைபெற்று இருக்கின்றன. ஆகவே, இது போன்ற விபத்துக்களைத் தவிர்க்க மாணவர்கள் தங்குகிற விடுதியில் உணவு வழங்குவதற்கு முன்னதாக அவற்றை டெஸ்ட் செய்து மாணவர்களுக்கு வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஒவ்வொரு கேள்வி கேட்கப்படுகிறபோதும், ஒரு குறிப்பிட்ட இடத்தில் நடை பெறுகிற நிகழ்ச்சியை வைத்துக்கொண்டு, இது போல் விபத்துக்கள் ஏராளமாக ஏற்படுகின்றன என்று ஒரு "அசெம்ப்ஷன்" செய்து கொள்கிறார்கள். இந்த மாதிரி விபத்துக்கள் மாணவர்கள் விடுதியில் மட்டுமல்ல, நாம் ஓட்டலில் சாப்பிட்டு விட்டுப் போனாலும் ஏற்படுகிறது. வீட்டில் சாப்பிட்டாலும் ஏற்படுகிறது. நாம் கொடுக்கும் சத்துள்ள உணவை பக்குவமாக வைத்துக்கொள்ளவில்லை யென்றாலும் ஏற்படுகிறது. இங்கே கேட்கப்பட்ட கேள்விக்குக்

கொடுக்கப்பட்ட பதிலைத் தொடர்புபடுத்திச் சொல்கிறேன். நச்சுப் பொருள் தகவல் சிகிச்சை நிலையம் இந்த மாதிரி உணவில் நஞ்சு கலந்து விட்டால், எந்தெந்த நஞ்சுக்கு எந்தெந்த வகையில் சிகிச்சை அளிப்பது என்று ஆலோசனை சொல்ல அமைக்கப்பட இருக்கிறது. ஆகவே, சமுதாயத்தில் உள்ள, மிகப் பெரும்பாலான மக்களுக்கு உதவி செய்வதற்காக இப்படிச் செய்யக் கருதுகிறோம். இது ஒரு பொதுப் பிரச்னை என்பதை உணர வேண்டும்.

திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி : தலைவரவர்களே, இந்த மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்குச் சப்ளை செய்யக்கூடிய ஐஸ் கிரீமில் நச்சுப் பொருள் கலக்கும் நிலைமையேற்பட்டதால், அதையெல்லாம். தடுப்பதற்காக "புட்அடல்டிரேஷன் ஆக்டை" தீவிரமாக அமல்படுத்துவதன் மூலமாக இத்தகைய கோளாறுகளைத் தடுக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, "புட் அடல்டிரேஷன் ஆக்ட்" என்பது விரிவான ஒன்று. உணவுப் பண்டத்திலே வேண்டுமென்றே தரக்குறைவான பொருள்களைக் கலந்து மக்கள் மத்தியில் விற்பது ஆகியவற்றைத் தடுப்பதற்குப் பயன்படுத்தப் படுகிறது. வீட்டிலே கூட பாலை 10 மணிக்குக் குடிக்க வேண்டியதை, இரவு 1 மணி அல்லது 2 மணிக்குக் குடித்தால், அந்தப் பால் புளித்துப் போவதால் பலவிதமான விளைவுகளை நாம் கூட அனுபவிக்கிறோம். ஆகவே, அதைப்போல் ஒரு பண்டம் ஏதோ ஒரு காரணத்தால் கெட்டுவிட்டிருக்கிறது. அது கூட மிகப் பெரிய விளைவை ஒன்றும் ஏற்படுத்திவிடக்கூடிய தன்மை இருந்ததாகவும், விஷம் இருந்ததாகவும் தெரிவிக்கப்படவில்லை. ஆனால் இவற்றை ஒவ்வொரு நேரத்திலும் அவரவர்கள் பொறுப்புணர்ச்சியோடு கவனித்து வர வேண்டுமென்று இதன் மூலமாக அந்தந்தத் துறையினருக்குத் தெரிவித்துக்கொள்ளலாம்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, இந்த நச்சு கலந்த உணவை உண்ட மாணவர்கள் சிகிச்சை செய்யப்பட்டு வீட்டிற்கு அனுப்பப்பட்டு விட்டார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அதன் பின்விளைவுகள் அவர்களுக்கு ஏதேனும் ஏற்பட்டுள்ளதா என்பதை 6 மாதம் கழித்துப் பரிசோதனை செய்து பார்க்கப்பட்டதா? அப்படி ஏதேனும் பின்விளைவுகள் ஏற்பட்டிருந்தால் அவர்களுக்குச் சிகிச்சை அளிக்க அரசு ஆவன செய்யுமா?



மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பொதுவாக விஷம் ஒரு முறை உடம்பில் ஏறி முறிந்து விட்டால், பின்னர் விஷத்திற்குப் பலம் இருக்காது. ஆனால் இதைப் பொறுத்த வரையில் கடுமையான நச்சு அல்ல. பின்விளைவுகள் அந்த ஐஸ்கிரீம் உண்ட மாணவர்களுக்கு எதுவும் ஏற்படவில்லை. இனிமேல் அவர்கள் ஐஸ்கிரீம் சாப்பிடுவதில் ஜாக்கிரதையாக இருப்பார்கள் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்தக் கேள்விகளையும் பதில்களையும் படித்துப் பார்த்தாலே பயப்படுவார்கள் என்று நினைக்கிறேன்.

*Medical facilities for pensioners at Madurai*

* 558 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that the medical facilities extended to pensioners, have not reached the pensioners in Madurai district; and

(*b*) if so, the steps taken to give effect to the order?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த ஓய்வு பெற்ற சர்க்கார் ஊழியர்களுக்கு பாஸ்-புக் கொடுக்கப்படுமா? கொடுக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு விரைவில் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அவர்களுக்குப் பென்ஷன் தருகிற அந்த அலுவலகத்திலே இந்த பாஸ் புக் அல்லது அதற்கான புக் வழங்க வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்களும் ஒப்புக்கொண்டு வழங்கியிருக்கிறார்கள்.

The Pay and Accounts Officer or Treasury Officers as the case may be\have been authorised to sanction reimbursement of medical expenses incurred by Government officials for their treatment or treatment of members of their families at the instance of the concerned authorised medical attendants by accepting the relevant applications prescribed for the purpose.
என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல், அதற்காக "ஐடன்டிடி கார்டு" வழங்குவதையும் குறிப்பிட்டுள்ளனர்.

[1973 மார்ச் 29

Government pensioners eligible for pre-medical concessions will be supplied with identity cards in the form prescribed in the G.O. at Government cost for taking treatment in Government medical institutions. என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது முறைப்படி கொடுக்கப்படும்.

### மதுராந்தகத்திலுள்ள அரசு மருத்துவமனை

* 559 வினா.—திரு. சி. ஆறுமுகம்: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் நகரிலுள்ள அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சைப் பிரிவு ஒன்று துவக்குவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. சி. ஆறுமுகம் : தலைவரவர்களே, தேசிய நெடுஞ்சாலையில் உள்ள மதுராந்தகத்தில் உள்ள மருத்துவமனையில் அறுவை சிகிச்சை நிலையம் இல்லாததால்—அங்கே அடிக்கடி விபத்துகள் ஏற்பட்டு அதனால் பல பேர் உயிர் இழக்கும் நிலை ஏற்படுகிறது—அங்கே ஒரு அறுவை சிகிச்சை நிலையம் ஏற்படுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அங்கே அப்படியே ஒரு அறுவை சிகிச்சை நிலையம் ஏற்படுத்தப்பட்டாலும் ஸ்பெஷலிஸ்ட் சிகிச்சை மதுராந்தகத்தில் வழங்க இயலாது. அதற்காக வேண்டிய எல்லாவிதமான வசதிகளும் மதுராந்தகத் திற்குப் பக்கத்திலுள்ள செங்கல்பட்டில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. விபத்து வராமல் தடுப்பதற்கு அந்தத் துறையில் உள்ளவர்கள், அந்த ஊரில் உள்ளவர்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அப்படி விபத்து ஏற்பட்டாலும் நண்பர் ஆறுமுகம் போன்றவர்கள் செங்கல் பட்டுக்கு அவர்களை அழைத்துக்கொண்டு போய் எல்லா விதமான ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும்.

### *Working Women's Hostels.*

* 560 *Q.*—THIRU A. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) the number of Working Women's Hostels in the State;

(*b*) the places where they are located; and

(*c*) the total number of inmates in these Hostels?



1973 மார்ச் 29]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) 26 விடுதிகள்.

(இ) செங்கல்பட்டு மேற்கு, கோயம்புத்தூர், சேலம், திருச்சி ராப்பள்ளி, மதுரை நகர், தஞ்சாவூர் கிழக்கு, மேற்கு, கன்னியாகுமரி, சென்னை மாநகர்.

(உ) 1,461 பேர்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, தொழில் துறைகளிலே ஈடுபட்டு சென்னையிலே இருக்கின்ற பெண்களுக்காக நடத்தப்படும் பிரைவேட் ஹாஸ்டலுக்குக் கொடுக்கப்படும் கிராண்ட் எவ்வளவு? கட்டிடத்திற்கு எவ்வளவு grant கொடுக்கப்படும்?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அந்தக் கட்டடம் கட்டுவதற்கான நிலம் மற்றவைகளுக்கான தொகையை ஹாஸ்டல் நடத்துபவர்கள் கொடுக்க வேண்டும். அதற்குப் பின்னல் எந்த மாதிரிக் கட்டடம் கட்டப்போகிறார்கள் என்று டிசைன் போட்டு அனுப்பினால் அதைப் பரிசீலித்து 35,000 ரூபாய் மாச்சிங் கிராண்ட் மாத்திரம் கொடுக்கிறோம்.

திரு. தொ. ப. சீனிவாசன் : மகளிர் இல்லம் ஒன்றை வடாற்காடு மாவட்டத்தின் தலைநகராகிய வேலூரிலே அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இல்லை.

### *Report of Raj Committee.*

* 561 *Q.*—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the State Government have received a copy of the Raj Committee Report; and

(*b*) if so, whether it has been examined?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) இந்த அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த அறிக்கையில் உள்ள எந்தெந்த திட்டங்களை ஏற்றுக்கொள்வது, எந்தெந்த திட்டங்களை ஏற்றுக்கொள்வதில்லை என்ற கருத்தை அரசாங்கம் முடிவு செய்திருக்கிறதா? அப்படியானால் அதன் விவரத்தை அமைச்சரவர்கள் அளிப்பார்களா?

[1973 மார்ச் 29

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அறிக்கையை அரசாங்கம் வருவாய்த் துறை வாரியத்திற்கு அனுப்பி, பரிசீலித்து அவர்கள் கருத்தைக் கேட்டிருக்கிறோம். வருவாய்த் துறை வாரியத்தின் அறிக்கை வந்த பின்னால் அரசாங்கம் அதைப் பரிசீலித்து, அதற்குப் பின்னால்தான் முடிவு செய்யப்படும்.

திரு. கோவை. செழியன் : தலைவரவர்களே, இந்த ராஜ் கமிஷன் ரிப்போர்ட்படி விவசாயத்தில் வருகின்ற வருமானத்தையும் வருமான வரி ஸ்லாப்போடு சேர்த்துக்கொள்வதற்குப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். விவசாய வருமானம் 10 வருடத்திற்கு ஒரு முறைதான் வருகிறது. அந்த வருமானத்தை 10 வருடங்களுக்குச் செலவழிக்க வேண்டும். அப்படி இருக்கும்போது விவசாயத்தில் வருகின்ற வருமானத்தையும் மற்ற வருமானத்தோடு சேர்த்துக் கணக்கிட்டால் இன்னும் அதிகக் கடுமையாக இருக்கும். இந்த விவரத்தை மாநில அரசு மத்திய அரசுக்குத் தெரிவிக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ராஜ் கமிட்டி ரிப்போர்ட் பரிசீலனையில் இருக்கிறது. இதிலே மத்திய அரசின் கருத்து என்னவென்றால் விவசாயத் துறை ஒன்றுதான் வரி போடவேண்டிய துறையாக இருக்கிறது; இந்த துறையில்தான் வரி நிறையப் போட வேண்டிய வாய்ப்பு இருக்கிறது என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். இப்போது வருமான வரி ஸ்லாப்போடு விவசாய வருமானத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசு அறிவித்திருக்கிறது. அதற்கான சட்டம் வரவிருக்கிறது. சட்டத்தினுடைய முழு வடிவமும் வரவில்லை; வந்த பிறகுதான் அதைப்பற்றிச் சொல்ல முடியும். இந்த அரசு இதுபற்றி இன்னும் கருத்து அறிவிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இன்னும் அதிகமாக மேல் வரி போட வேண்டுமென்று கருதியிருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படியானால் விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு இன்னும் அதிகமான கஷ்டங்கள் ஏற்படும் என்பதை அரசாங்கம் ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மேல் வரி என்று நான் சொல்லவில்லை. விவசாயத் துறை ஒன்றுதான் வரி போடப்படாமல் விடப்பட்டிருக்கிறது; அதில் அதிக வரி போட வாய்ப்பு இருக்கிறது என்று ராஜ் கமிட்டியினர் அறிக்கை அளித்திருக்கிறார்கள். இந்த ஒரு



1973 மார்ச் 29]

கருத்தை மட்டும் அவர்கள் தெரிவிக்கவில்லை. வேறுபல கருத்துக்களுடன் திரு. செழியன் அவர்கள் குறிப்பிட்ட கருத்தும் ஒன்றாக இருக்கிறது. மத்திய அரசு அதை ஏற்றுக்கொண்டிருக்கிறது. நமது கருத்தையும் கேட்டிருக்கிறார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, விவசாயத்தைப் பொறுத்த மட்டில் நமது மாநிலத்தில் விவசாய வருமான வரி விதித்திருக்கிறோம். ஆகவே, விவசாயத்திற்கு மேலும் இங்கு வரி விதிக்க வாய்ப்பு இல்லை என்று மத்திய அரசுக்கு நமது அரசு தெரிவிக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : விவசாய வருமான வரி கட்டுபவர்கள் எல்லாம் இதனால் பாதிக்கப்படுவார்கள் என்பதல்ல. வருமான வரி கட்டுகிறவர்களின் விவசாய வருமானத்தையும் கணக்கிலே எடுத்துக்கொள்வார்கள் என்பதுதான் பொருள்; அனைவரும் பாதிக்கப்பட மாட்டார்கள். வருமான வரியை யார் யார் கட்டுகிறார்களோ அவர்களுக்கு விவசாய வருமானத்தையும் கணக்கிட்டு வரி போடப்படும். நாம் விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் விவசாய வருமானத்திற்குக் கணக்கு வைக்கவேண்டுமென்று கட்டாயப்படுத்தவில்லை. ஆனால் இப்போது வரக்கூடிய இந்தச் சட்டத்தினால் விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் கட்டாயமாகக் கணக்கு வைக்க வேண்டுமென்ற துர்பாக்கியமான நிலைமைக்கு ஆளாக்கப்படுகிறார்கள்.

திரு. என். கே. பழனிசாமி : சார், பெரிய பெரிய வியாபாரிகள், முதலாளிகள் எல்லாம் விவசாய வருமானம் என்று சொல்லி வருமான வரி கட்டுவதில் ஏமாற்று செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, இன்கம்டாக்ஸ் கட்டுபவர்களுக்கு இந்த விவசாய வருமானத்தையும் சேர்த்து வரி போடுவது பற்றி சர்க்காரின் அபிப்பிராயம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அப்படிப்பட்டவர்கள் வரி ஏய்ப்பு செய்கிறார்கள் என்பது உண்மைதான். மத்திய அரசாங்கமும் அதைத் தடுப்பதற்காகத்தான் இப்படிப்பட்ட ஒரு புதிய சட்டத்தைக் கொண்டுவரவிருக்கிறார்கள். பல பணக்காரர்கள் தங்களிடம் இருக்கின்ற கறுப்புப் பணத்தை வெள்ளைப் பணமாக்கிக்கொள்வதற்காக, அது விவசாய வருமானத்தில் வந்தது என்று சொல்கிறார்கள். இந்தச் சட்டத்தினால் அது தடுக்கப்படும்.

திரு. ஏ. ஆர். சுப்பையா : விவசாய வருமானத்திற்கு வரி போடவில்லை என்று கருதி ராஜ் கமிட்டி இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறது. ஆனால் நாம் வரி போட்டிருக்கிறோம். ராஜ் கமிட்டியின்

[1973 மார்ச் 29

கருத்துப்படி, அந்தச் சட்டத்தைச் செயல்படுத்தினல் விவசாயிகள் மேலும் கஷ்டப்படக்கூடிய நிலை ஏற்படும். ஆகவே, நம்முடைய மாநிலத்திற்கு விதிவிலக்குக் கொடுக்க யோசனை சொல்லப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நான் முன்பு விளக்கியதை அவர்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்று நினைக்கிறேன். அதை மீண்டும் விளக்குகிறேன். வருமான வரி கட்டுகிற பெரும் பணக் காரர்கள் விவசாயத் துறையிலே வருமானம் வந்ததாகச் சொல்லி, அவர்களிடம் இருக்கின்ற கறுப்புப் பணத்தை வெள்ளைப் பணமாக மாற்றிக்கொள்கிறார்கள். அந்த முறையிலே வரி ஏய்ப்புச் செய் கிறார்கள். அதைத் தடுப்பதற்காக விவசாய வருமானத்தையும் சேர்த்து கணக்கிட்டு, வருமான வரி விதிக்கும்போது இதையும் கணக்கிலே சேர்த்துக்கொள்ள முடிவு செய்யப்பட்டிருக்கிறது. யார் யார் வருமான வரி கட்டுகிறார்களோ அவர்களுக்கு அக்ரிகல்சர் இன்கம் டாக்ஸூம் உண்டு. அதனுல் எல்லோரும் பாதிக்கப்பட மாட்டார்கள்.

திரு. ப. முத்துசாமி : தலைவரவர்களே, கிராமப்புறங்களிலே விவசாயத்திலே ஈடுபட்டிருக்கின்றவர்களில் நூற்றுக்கு 99 பேர் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள். அவர்கள் கணக்கு வைத்துக் கொள்வதில் பல சிக்கல்கள் ஏற்பட்டு, பாதிக்கப்படுவார்கள் என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கிராமப்புறங்களில் இருக் கின்ற அத்தனை விவசாயிகளும்—99 சதவிகிதம் பேரும் கணக்கு வைக்கவேண்டுமென்ற நிலை இதனுல் ஏற்படவில்லை. யார் யார் வருமான வரி கட்டுகிறார்களோ அவர்களுக்குப் பயிர் செய்யும் நிலம் இருந்தால் அதிலே வருகின்ற வருமானத்திற்கும் கணக்கு வைக்க வேண்டும். இந்த வருமானத்திற்கும் சேர்த்து வரி விதிக்கப்படும்.

திரு. சி. ஆறுமுகம் : வருமான வரி கட்டுகிறவர்கள் அத்தனை பேரும் படித்தவர்கள் என்று என்னுல் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஓரளவு தொழில் செய்து, வருமான வரி கட்டுகிறவர்களும் இருக் கிறார்கள். அவர்களுக்கு சிக்கல்கள் ஏற்படும் என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அந்தச் சிக்கல் கட்டாயம் வரும். அதனுல்தான் இந்த அரசு கணக்கு வைக்க வேண்டாம் என்று சொல்லி, "கம்பவுண்டிங்" முறையை வைத்திருக்கிறது.



1973 மார்ச் 29]

அதற்கே இந்த அரசின்மீது எதிர்ப்பு காட்டியவர்கள் இந்தச் சட்டம் வருவதை அறிந்தும் சும்மா இருக்கிறார்களே என்பதைப் பார்க்கும் போதுதான் ஆச்சரியமாக இருக்கிறது.

திரு. எஸ். ஆறுமுகம் : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். நாங்கள் மூன்று ஆறுமுகம் இருக்கிறோம். நீங்கள் பொதுவாக ஆறுமுகம் என்று சொல்லி விடுகிறீர்கள். அதனுல் எந்த ஆறுமுகம் என்று சந்தேகம் வந்துவிடுகிறது. அதனுல் எடப்பாடி ஆறுமுகம், வீர பாண்டி ஆறுமுகம், மதுராந்தகம் ஆறுமுகம் என்று அறிவித்தால் நல்லது என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூன்று ஆறுமுகங்களும் அதிகமாகக் கேள்விகளைக் கேட்காமல் அமைதியாக இருக்கக்கூடியவர் கள்தான். அதனுல் பிரச்னைகள் ஒன்றும் இல்லை என்று நினைக்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : என்னை மதுராந்தகம் ஆறுமுகம் என்று சொல்லிவிடுங்கள். எனக்கு ஆட்சேபணை இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்கள் ஊர் மக்கள் ஆட்சேபணை சொல்லாமல் இருந்தால் போதும்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : சார், வருமான வரி கட்டுகிற வர்கள் வரி ஏய்ப்பில் வைக்கப்படுகின்ற கறுப்புப் பணத்தை விவசாயத்தில் வந்த வருமானம் என்று சொல்லி வெள்ளைப் பணமாக மாற்றிவிடுவதாக அமைச்சரவர்கள் விளக்கம் சொன்னார்கள். அப்படியானுல் அதுபற்றி ராஜ் கமிட்டி ஆராயுமா? நம்முடைய அரசு அதைப்பற்றி என்ன கருத்தைக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, ராஜ் கமிட்டி தமிழ்நாட்டுக்கு வந்து எங்களைச் சந்தித்தபோது இந்தக் கருத்தைத் தெரிவித்தது. தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய பெரும் பணக்காரர்கள் வருமான வரி ஏய்ப்பு செய்வதற்காக ஏதோ கொஞ்சம் நிலத்தை வாங்கி வைத்துக்கொண்டு அதிலிருந்து 10,000 ரூபாய், 20,000 ரூபாய், ஒரு லட்சம் ரூபாய் வருமானம் வந்தது என்று சொல்லி, தங்களிடம் இருக்கின்ற கறுப்புப் பணத்தை வெள்ளைப் பணமாக மாற்றிக்கொள்கிறார்கள். அதைத் தடுக்கவேண்டுமானுல் இப்படிப்பட்ட ஒரு சட்டம் வரவேண்டும் என்று ராஜ் கமிட்டி அறிவித்தது. அதை நமது அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது.

[1973 மார்ச் 29

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இப்போது வர இருக்கின்ற இந்தச் சட்டத்தினால் விவசாய வருமானத்தைப் பெற்றுக்கொண்டிருப்பவர்களில் எத்தனை பேர் பாதிக்கப்படுவார்கள் என்ற விவரத்தை நம்முடைய இலாகாவினர் தயாரித்திருக்கிறார்களா? ஒட்டுமொத்தமாக எத்தனை "அசசீஸ்" இதில் சம்பந்தப்பட்டவர்களாக இருப்பார்கள்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதற்கான விவரம் இல்லை. தமிழ் நாட்டில் இருக்கின்ற "பிளாண்டர்ஸ்" எல்லாம் இதில் வருவார்கள் என்று நினைக்கிறேன்.

கும்முடிப்பூண்டித் துணை வட்ட அலுவலகக் கட்டடம்

* 562 வினா.—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்ட அலுவலகத்திற்கான சொந்தக் கட்டடம் கட்டுவதில் ஏற்படும் தாமதத்திற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : செங்கை மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து, கும்முடிப்பூண்டித் துணை வட்ட அலுவலகத்திற்கு கட்டடம் கட்டுவதற்கான செயற் குறிப்பு இதுவரை அரசுக்கு வரவில்லையாகையால், கட்டடம் கட்டுவதில் காலதாமதம் ஏற்பட்டது என்ற பிரச்சினைக்கு இடமில்லை.

திரு. கா. வேழவேந்தன் : துணைத் தலைவர் அவர்களே, இது ஏற்கெனவே வாடகைக் கட்டடத்தில் நெருக்கடியான சூழ்நிலையில் நடந்துகொண்டிருக்கிறது. இதை அரசு மறுபரிசீலனை செய்து இந்த ஆண்டே இந்த வேலையைத் துவங்க முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தமிழ்நாட்டில் 43 துணை வட்டங்களில் 21 துணை வட்ட அலுவலகம் வாடகைக் கட்டடங்களிலேயே இருக்கிறது. எல்லாவற்றுக்கும் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டும் என்பது தான் அரசின் நோக்கம். நிதிநிலை இடம் தருகிற நேரத்தில் இவை எல்லாம் எடுத்துக்கொள்ளப்படும்.



1973 மார்ச் 29]

மணிமுத்தாறு நீர்

* 563 வினா.—திரு. ச. சங்குமுத்து தேவர் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் மணிமுத்தார் நீர்த் தேக்கத்தில் மேல் பாசனத்திற்காக 50 அடி தண்ணீர் காக்கப்பட வேண்டும் என்று அரசு ஆணை ஏதேனும் பிறப்பித்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) பெருங்கால் ஆயக்கட்டு நிலங்கட்கு நீர் வழங்குவதற்கென ஜூன் முதல் மார்ச் மாதம் வரை மணிமுத்தார் நீர்த்தேக்கத்தில் குறைந்தது 50 அடி உயரம் தண்ணீர் வைக்கப்படல் வேண்டும். தண்ணீர்த் தட்டுப்பாடான காலங்களில் தாம்பிரபரணி ஆயக்கட்டுகளின் பயிர்களைக் காப்பாற்ற மணிமுத்தார் நீர்த்தேக்கத்தின் நீர் மட்டத்தை 50 அடிக்குக் கீழே குறைத்தே ஆகவேண்டுமென ஓர் நிலை ஏற்படின் அவ்வாறு செய்வதற்கு முன், அரசின் ஒப்புதல் பெற வேண்டும். இவ்வாறு இந்நீர்த்தேக்கத்தில் 50 அடிக்கும் கீழ் நீர் மட்டம் குறையுங்கால் பெருங்கால் ஆயக்கட்டு நிலங்கட்கு தலையணை அணைக்கட்டிலிருந்து நீர் வழங்கப்படவேண்டும் என அரசாணை 472, (பொதுப்பணித் துறை), தேதி 16—2—1971-ல் அரசு ஆணையிட்டுள்ளது.

திரு. ச. சங்கமுத்து தேவர் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது 50 அடிக்குக்கீழ் அந்த நீர்மட்டம் குறையும் என்றால் அரசின் அனுமதி பெற வேண்டும் என்று ஆணையிட்டிருப்பதாகச் சொன்னார்கள். இன்றைக்குக் கீழ்ப் பாசனத்திற்காகத் தண்ணீர் விடப்படுவதன் காரணமாக மேற்குப் பாசனம் எவ்விதப் பாதுகாப்பும் இல்லாமல் பாதிக்கப்படுகிறது. இதை அமைச்சர் அவர்கள் கவனிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : ஏற்கனவே, 1965-இல் ஒரு விதி இருந்தது. இந்த நீர்த்தேக்கத்தில், நீர் மட்டத்தின் அளவு பெருங்கால் மதகின் படிக்கட்டுக்குக் கீழே இருக்கும் போதெல்லாம் பெருங்கால் கால்வாய்க்குத் தேவையான நீர், தேவைப்படும்போது, கால்வாயையும் கரைகளையும் தரமாக

[1973 மார்ச் 29

வைத்துப் பேணுவதன் மூலம், தலையணை அணைக்கட்டிலிருந்து பிரியும் பழைய நீர்க்கால் வழியாய் நீர் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்பது அந்த விதியாகும்.

தமிழ்நாடு சட்டமன்ற மதிப்பீட்டுக் குழுவினர் இதனைப் பரிசீலித்து இதுபற்றிக் கீழ்க்கண்டவாறு கூறியுள்ளது. "தாமிர வருணி பாசனத் திட்டத்தின் கீழ் உள்ள பயிர்களைப் பாதுகாக்க வேண்டி குறிப்பிட்ட சில ஆண்டுகளில், தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் மணிமுத்தாறு நீர்த்தேக்கத்திலிருந்து கூடுதலாக நீர் பெற வேண்டியிருந்தது என்றும், அவ்வாறு கூடுதலாக நீர்பெறும் ஒவ்வொரு தடவையும் அரசின் ஆணைகளின் கீழ்தான் அவ்வாறு பெறப்பட்டது என்றும் விவாதங்களின்போது குழுவிற்குத் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும், முன்கார் சாகுபடி குறைக்கப்பட வேண்டும் என்றும், பெருங்கால் ஆயக்கட்டுதாரர்களின் தற்போதுள்ள உரிமைகள் பாதிக்கப்படக் கூடாது என்றும், எல்லாவற்றிற்கும் மேலாக பெருங்கால் ஆயக்கட்டு பாசனத்திற்குப் பற்றுக்குறை இருக்க மணிமுத்தாறு நீர்த்தேக்கத்தில் நீர்மட்டம் 50 அடிக்குக் குறையாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வலியுறுத்தி வந்துள்ளது. இந்த யோசனைப்படிதான் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு ச. சங்கமுத்து தேவர் : கோடைக் காலத்தில் ஏப்ரல், மே மாதங்களில் அட்வான்ஸ் கார் பயிருக்குத் தண்ணீர்விடுவதனால்தான் இந்தப் பிரச்சினையே எழுகிறது, ஆகவே ஏப்ரல், மே மாதங்களில் "அட்வான்ஸ் கார்"க்குத் தண்ணீர் தராமல் இருக்கும்படி செய்வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : அப்படிச் செய்ய முடியாது. நூறு ஆண்டுகளாக இதுபோல அட்வான்ஸ் காருக்குத் தண்ணீர் கொடுக்கப்பட்டு வருவதாகச் சொல்கிறார்கள்.

திரு. ச. சங்குமுத்து தேவர்: மின்சக்திக்குப் பயன்படுகிற பாபநாசம் நீர்த்தேக்கத்தில் இருந்துதான் "அட்வான்ஸ் கார்"-க்குத் தண்ணீர் கொடுத்தார்களே தவிர இந்த மணிமுத்தாறு அணையில் இருந்து அல்ல.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : இதுபற்றி மாண்புமிகு அங்கத்தினருக்குச் சந்தேகம் இருந்தால் என்னிடம் வந்தால் விளக்கமாகப் பேசிக்கொள்ளலாம்.



1973 மார்ச் 29]

## ஆண்டி ஓடை நீர்த்தேக்கத் திட்டம்

* 564 வினா—திரு. வெ. ந. முத்தமிழ்ச்செல்வன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டத்தைச் சேர்ந்த கல்லகம் கிராமம், ஆண்டி ஓடை நீர்த்தேக்கத் திட்டம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மதிப்பீடு தற்போது மேற்பார்வைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது.

திரு. வெ. ந. முத்தமிழ்ச்செல்வன் : துணைத் தலைவர் அவர்களே, சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு துவக்கப்பட்ட இந்தத் திட்டம் இடையில் நின்றுவிட்டது. திரும்பவும் இதற்கு 1971-ம் ஆண்டுதான் நடவடிக்கை எடுக்கப்பட்டது. சுமார் 21 லட்சம் ரூபாய் மதிப்பீடுடைய இந்தத் திட்டத்தை இவ்வாண்டு நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : நான் ஏற்கனவே சொல்லியதுபோல இது மேற்பார்வைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது. தலைமைப் பொறியாளர் பரிசீலித்து, ரெவின்யூ போர்டுக்கு வந்து, அரசாங்கத்திற்கு வந்த பிறகுதான் நடவடிக்கை எடுக்க முடியும்.

## தேனீ வளர்ப்புக்கான உதவி

* 565 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தேனீ வளர்ப்புக்கு அரசு அளித்துவரும் உதவிகள் யாவை?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : கிராமியக்கலை, கைவினை, தொழில் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தேனீ வளர்ப்புப் பிரிவுகளை நடத்த அரசு நிதியுதவி அளிக்கிறது. சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மேலும், தேனீ வளர்ப்பதற்கும், அறிவியல் முறையில் தேன் எடுப்பதற்கும் அரிசனங்கள், பழங்குடி மக்கள், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட மலைச் சாதியினர் ஆகியோருக்கு அரிசன நலத் திட்டத்தின்கீழ் அரசு பயிற்சியளிக்கிறது.

[1973 மார்ச் 29

தேனீ வளர்க்கும் பணியாளர்களுக்கு அவர்கள் வாங்கும் ஊதியத்தைவிட குறைவான அளவில் கதர்-கிராமத்தொழில் ஆணைக்குழு நிதியுதவி அளிக்கிறது. தேனீ வளர்க்கும் பணியாளர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியத்திற்கும் அவர்களின் ஊதியத்துக்காகக் கதர் ஆணைக்குழு வழங்கும் நிதியுதவிக்கும் உள்ள வித்தியாசத் தொகையை அரசு நிகர செலவு மானியமாக அளிக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இந்தத் தேனீ வளர்ப்புத் திட்டமாவது எல்லா ப்ளாக்கிலும் செயல்படவில்லை. எல்லாவற்றுக்கும் கொண்டுவர அரசு ஆணை பிறப்பிக்குமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** 132 இடங்களில் கூட்டுறவு முறையில் ஆரம்பிக்க அப்படி ஒரு திட்டம் இருக்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** பெரிய பட்டணங்களில் தேனுக்கு மிகுந்த கிராக்கி இருக்கிறது. அரசாங்க ஆதரவோடு எடுக்கப்படுகிற தேனை பட்டணங்களில் விநியோகம் செய்ய ஆவன செய்ய முடியுமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** இப்போதே காதி இலாக்கா மூலமாக விற்கப்படுகிறது. இன்னும் கண்காட்சிகள் நடத்தும்போதும் விற்கப்பட்டு வருகிறது.

**திரு. தொ. ப. சீனிவாசன்:** தேனீ வளர்ப்பு என் தொகுதியில் ஒரு திட்ட அடிப்படையில் நடைபெறுவதாக அதிகாரிகள் சொல்கிறார்கள். ஆனால் அதுபோல அங்கே எதுவும் நடைபெறவில்லை. அந்த அமைப்புக்கும் அரசு மானியம் அளிக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** இப்போது விவரம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் சொல்லப்படும்.

**திரு. கோவை செழியன்:** தேன் கூட்டில் ராயல்ஜெல்லி என்று இருப்பது, தேனைப்போல சக்தி வாய்ந்தது. அதை உண்டால் என்றைக்கும் இளமையாக இருக்கலாம். முகம் வசீகரமாக இருக்கும்; பெண்கள் முகம் அழகாகும். ஹார்ட் அட்டாக் வராது— இதை எல்லோரும் சாப்பிட விளம்பரப்படுத்துவார்களா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** உறுப்பினர் அவரும், அவரது துணைவியாரும் பரீட்சித்துப் பார்த்துச் சொன்னால் நன்றாக இருக்கும்.



1973 மார்ச் 29]

**திரு. ரா. ரா. முனுசாமி:** ஊராட்சி ஒன்றியத்தில் இந்தத் திட்டம் புகுத்தப்பட்டு, இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. மீண்டும் ஊராட்சி ஒன்றியத்தில் இதனைப் புகுத்துவார்களா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அதற்கான திட்டம் இருக்கிறது. காதி கமிஷன் இதனை 132 இடங்களில் ஆரம்பித்து அதற்காகப் பணம் செலவிட்டால் ஆண்டுமுடிவில் அவர்கள் அதனைக் கொடுத்துவிடுவதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. ஏ. எம். இராஜா:** தலைவர் அவர்களே, எண்ணெய் வித்தான சூரியகாந்தியை, நம்முடைய நாட்டிலே, வருகின்ற அண்டைக் காலத்திலே மிக அதிகமாகப் பயிரிடுவதற்கு அரசு முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறது. அந்தச் சூரிய காந்தி "கிராஸ் பாலினேஷன்" இல்லாததன் காரணமாக, அதனுடைய மகசூல் குறைந்திருக்கின்றது. இதற்கு ஒவ்வொரு ஏக்கருக்கும் ஒரு தேனீப்பெட்டி இருக்க வேண்டுமென்று விவசாய நிபுணர்கள் கூறுகிறார்கள். ஆகவே, அரசு சூரிய காந்தியைப் பயிரிடுகின்ற ஒவ்வொரு ஏக்கருக்கும் பஞ்சாயத்து மூலமாக, இலவசமாகத் தேனீப் பெட்டி கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அது இப்பொழுது கதர் வாரியம் மூலமாக உள்ள திட்டம் என்று சொல்லிவிட்டேன். ஆகவே, அதிகமாக சூரிய காந்தியைத் தயாரிக்க வேண்டிய வேளாண்மை அமைச்சர் அவர்கள் இதற்கான முயற்சியை எடுப்பார்களானால், எங்கள் இலாகாவின் மூலம் நாங்களும் முயற்சி செய்வோம்.

**திரு. என். டென்னிஸ்:** அரசாங்கத்தின்கீழ் தேனீ வளர்ப்பு வேலையில் பல்லாண்டுகளாக ஈடுபட்டிருந்த பலருக்கு வேலை பிரித்து விடப்பட்டிருக்கிறது. அவர்களைத் திரும்பவும் வேலையிலெடுத்து, தேனீ வளர்ப்புப் பணியை அரசு ஊக்குவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** முன்பொரு கேள்விக்கு நான் பதில் சொல்லியிருக்கிறேன். எடுத்தவர்களில் மிகுதியானவர்களைத் திரும்ப எடுத்திருக்கிறோம். இந்தத் திட்டம் மேலும் வளர்ச்சி பெறுமானால், அவர்களையும் திரும்ப எடுத்துக் கொள்வோம்.

<u>திரு. கே. எ. வகாப் :</u> தலைவர் அவர்களே, இப்பொழுது மார்க்கெட்டுக்கு வருகிற தேன்களில் கலப்படங்கள் இருக்கின்றன. அவற்றைத் தடுப்பதற்கு ஏதாவது முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறதா? கிராமப்புறங்களிலே இது சிறந்த மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது. ஆகவே, அக்கறையோடு வருகிறவர்களுக்கு தனிப்பட்டவர்களுக்கு, மானியங்கள் அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :</u> கலப்படத்திற்குப் பெயர் போனதே தமிழ் நாடுதான். ஆகவே, எதெதிலே கலப்படம் செய்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இதிலே என்ன கலப்படம் செய்திருக்கிறார்கள் என்ற விவரம் எனக்குத் தெரியாது. கதர் வாரியம், காந்தி நிகேதன் ஆகிய இரண்டின் மூலமும் தயாரிக்கப்படுகிற தேன். உண்மையானது, சத்தானது என்று அந்த "டிமாண்டி"லே பேசும்பொழுது சொல்லியிருக்கிறேன்.

இதற்கு மானியம் தரப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். தனிப்பட்டவர்கள் வளர்ப்பதானால், அவர்களுக்கு இனமாக ரூ. 500-ம் கடனாக ரூ. 250-ம் ஆணைக் குழுவால் கொடுக்கப்படுகிறது. அந்தப் பணம் அந்தத் திட்டத்தை ஆரம்பிப்பவர்களுக்கு நிச்சயமாகத் தரப்படும். இதற்காக 31 கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. 87½ சதவிகிதம் அதற்கான பங்கீடு கொடுக்கிறார்கள். மேலும், அந்தச் சங்கத்திற்கு ஊக்கம் அளிக்கிற வகையிலே இதற்காக மூலதனக் கடனாக 35 சதவிகிதம் ஆணைக் குழுவிடமிருந்து கொடுக்கப்படுகிறது. இப்படித் திட்டத்திலே பல முறைகள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் ஆரம்பிக்கத்தான் காதிக் கமிஷன் இந்தத் திட்டங்களையெல்லாம் வைத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> 41-வது விதியின்கீழ் திரு. சுப்பு அவர்கள் கொண்டு வந்திருக்கிற கவன ஈர்ப்புத் தீர்மானம் நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.



## (2) அறிக்கை அளித்தல்

## சட்டவிதிகள் ஆய்வுக்குழுவின் அறிக்கையை அளித்தல்

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> அடுத்து, சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் தலைவர் சார்பாக, அக்குழுவின் அறிக்கையை திரு. ந. கணபதி சட்டப் பேரவைக்கு அளிப்பார்.

THIRU N. GANAPATHY : Mr. Deputy Speaker, Sir, on behalf of the Chairman, Committee on Subordinate Legislation, I present the Fifth Report (Fifth Assembly) of the Committee.

## (3) அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) தமிழ்நாடு, 1973-ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நில உடைமையாளர்களின் உரிமைகளை வாங்கும் உரிமை) சட்ட முன்வடிவு

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :</u> தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1973-ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நில உடைமையாளர்களின் உரிமைகளை வாங்கும் உரிமை) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :</u> தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு, 1973-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (2-ஆம் எண்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/73).

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :</u> தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (2-ஆம் எண்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/73) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

<u>திரு. சி. வே. வேலப்பன் :</u> சட்டமன்ற துணைத் தலைவரவர்களே, இந்த நிதி ஒதுக்க மசோதாவில் இருக்கிற நிலைகளையும் மொத்தமாக நடைபெற்று வருகின்ற நிலைகளைப் பற்றியும் நான் என்னுடைய கருத்தினைக் கூற விரும்புகிறேன்.

[திரு. சி. வே. வேலப்பன்] [1973 மார்ச் 29

இன்றைய ஆட்சியில், ஆட்சி செய்வோர், தங்களுடைய மூலக் கருத்தாகிய சாதிபேதமற்ற சமுதாயத்தை அமைக்க வேண்டுமென்றும், அதன் அடிப்படையிலே நாங்கள் ஆட்சி செய்வோம் என்ற கருத்தையொட்டி ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்தி வருகிறார்கள். அதற்கேற்றாற்போல், யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற கருத்தும், சாதி இரண்டொழிய வேறில்லை என்ற கருத்தும், சாதிகள் இல்லையடி பாப்பா என்று கவிஞர் பாடிய பாட்டும் அப்படிப்பட்ட நிலையிலேயிருந்துதான் அதற்குப் பிறகு இடையிலே புகுந்த சாதி வேற்றுமைகளை அகற்றவேண்டுமென்று கருதிதான் தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் சமுதாய சீர்திருத்த நடவடிக்கைகளாக, சமுதாயத்தை திருத்துவதற்காக, சமுதாயத்தில் சாதி இருள் கவ்விக் கொண்டிருந்ததை அறிவு என்ற சுடர் கொண்டு நாட்டிலே நல்லதொரு விழுச்சியை ஏற்படுத்தினார்கள்.

அதை ஏற்றுக்கொண்ட அண்ணா அவர்களை மக்கள் ஆட்சிப் பொறுப்பிலே அமர்த்தினார்கள். அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும், எந்தக் கருத்தை நாட்டிலே சொல்லி வந்தார்களோ, அவற்றை நடைமுறையிலே செயல்படுத்த வேண்டுமென்று, சாதிகளை ஒழிக்க வேண்டுமானால், சுயமரியாதைத் திருமணங்கள் சட்டப்படி செல்லுபடியாக்கப்பட வேண்டுமென்று அதை சட்டமாக்கினார்கள். கலப்புத் திருமணங்களை ஊக்குவிக்க பதக்கங்கள் வழங்கினார்கள். மக்களை மகிழ்வித்தார்கள். அப்படிப்பட்ட நிலையில் சாதி சமயம் கடந்த சமுதாயப் பூங்காவாக அண்ணா காலத்தில் தி.மு.க. ஆட்சிப் பொறுப்பை ஏற்று மக்களுக்காக செயலாற்றி வந்தது. இன்றைய ஆட்சியாளர்கள் அண்ணா வழி ஆட்சி நடத்துகிறோம் என்று சொல்லிக்கொண்டு சுயமரியாதைச் சமுதாயத்திற்கு சவக் குழி தோண்டுகிற வகையிலே ஆட்சியை நடத்தி வருகிறார்கள். இந்த ஆட்சியாளர்கள் கலப்பு திருமணத்தின்மூலம் பிறக்கிற குழந்தைகளை எந்தப் பிரிவில் சேர்க்க இருக்கிறார்கள் என்ற சந்தேகம் நமக்கு எழத்தான் செய்கிறது. சமுதாயத்தில் பல சாதிகள் இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. ஆனால் அதிலே உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்றெல்லாம் பிரித்து, இதற்கு அரசாங்கம் நிதி உதவி அதிகமாகக் கொடுக்கும், ஒத்தாசை செய்யும் என்று சொல்கிறது. ஒன்று சாதியை வளர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கிறது என்று வைத்தால், சாதிக்கு சாதி பிரித்து உதவிகள் வழங்கலாம். இல்லையென்றால், சாதிகளை ஒழிக்கிற வகையில் கொள்கை கடைபிடிக்கிற கலப்புத்



1973 மார்ச் 29] [திரு. சி. வே. வேலப்பன்]

திருமணங்களை, இரண்டு வேறு சாதிகளைச் சேர்ந்தவர்கள் கலப்புத் திருமணம் செய்து கொண்டு இருந்தால், அவர்களுக்குப் பிறக்கிற குழந்தைகளுக்கு எந்த நியதியை ஏற்படுத்துகிறது என்பதை நினைக்க வேண்டியதாக இருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில் தந்தை பெரியாருடைய எண்ணத்தையும் அண்ணா அவர்களுடைய எண்ணத்தையும் இந்த ஆட்சியாளர்கள் நிறைவேற்றத் தவறி விட்டார்கள், செய்யத் தவறிவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டையும் சொல்ல விரும்புகிறேன். சாதி பேதமற்ற......

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்குப் பிறக்கின்ற குழந்தைகளை எந்தப் பிரிவில் சேர்க்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் விரும்புகிறார். பெரியார் அவர்கள் சொன்னார் என்று கூறினார். பெரியார் அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார், அண்ணா அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்?

திரு. சி. வே. வேலப்பன்: தந்தை பெரியார் அவர்களும் அண்ணா அவர்களும் சாதியே கூடாது என்றுதான் ஏற்படுத்தினார்கள். நான், என்னுடைய கருத்தைச் சொல்கிறேன். சாதிகள் என்பது கூடாது. "பார்வார்ட்", "பாக்வார்ட்" என்று பிரிக்கின்ற நிலை சாதிகளை வளர்ப்பதற்குத் தவறுகளை செய்யத்தான் ஊக்குவிக்குமேயொழிய குறைக்கிற நிலை இல்லை. என்னுடைய கருத்தெல்லாம் நாட்டில் இருக்கிற அத்தனை மக்களும் ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற நிலையில் வருமான அடிப்படையில் கருதப்படவேண்டும். நாம் ஒரு சிலரை உயர்ந்த ஜாதி என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். அந்த ஜாதியில் இருக்கிறவர்கள் கூடப் பலர் பரம ஏழைகளாக இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த அரசினுடைய நிலை என்ன என்று கேட்கிறேன். இந்த நிலைமையை வளரவிடுவோமானால் இன்னும் 10 ஆண்டுகளுக்குப் பிறகு அந்த ஜாதிகளை விட்டு அவர்களாகவே ஜாதிகளை மாற்றிக்கொண்டோம் என்று இப்படிப்பட்ட தவறான நிலைமைகள் ஏற்படும் என்பதைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட நிலைகளில் சலுகைகள் அளிக்கவேண்டும், அறிவித்திருக்கவேண்டும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, ஜாதியின் பேரால் வேண்டாம், பொருளாதார அடிப்படையிலே எல்லோருக்கும் சலுகைகள் அளிக்க வேண்டுமென்று பேசிக்

கொண்டிருக்கிறார்கள். பெரியாரின் கருத்து எது என்று எனக்குத் தெரியாது. தெரிந்து கொள்ளவேண்டுமென்ற ஆசையினால் இது பெரியாரின் கருத்தா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. சி. வே. வேலப்பன் : தந்தை பெரியாரின் கருத்தின் வழி வந்தது என் கருத்தாகும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நான் தெரிந்து கொள்ள விரும்புவது, பெரியாரை எங்களுக்கு அதிகம் தெரியாது, இது பெரியாரின் கருத்தா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. சி. வே. வேலப்பன் : எனக்கு அதிகம் பெரியார் அவர்களைத் தெரியாவிட்டாலும் தெரிந்த வரை அந்த ஒழுங்கு முறைப்படி, நடைமுறைப்படி நடப்பவன் என்ற எண்ணத்தில் சொல்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, சமுதாயத்தில் பிற்படுத்தப்பட்டோர், முன்னேறியோர் என்ற பிரிவு இருக்கக் கூடாது. அது எத்தனையோ ஆண்டு காலத்திற்குப் பிறகு வரவேண்டிய ஒன்று. பொருளாதார அடிப்படையில் இந்தச் சலுகைகள் வழங்கப்படுவதைத் தவிர்த்து, இன்றுள்ள பிற்படுத்தப்பட்டோர்களுக்குச் சலுகைகள் வழங்கப்படுவது, தாழ்த்தப்பட்டோர்களுக்குச் சலுகைகள் வழங்கப்படுவது பெரியார் ஆதரிக்கிற கருத்தல்லவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. சி. வே. வேலப்பன் : நான் சொல்கிற கருத்தில் பிற்பட்டோராக இருந்தாலும், எந்த வகுப்பாரைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், வருமான அடிப்படையில் வைத்து விட்டால் அவர்களும் இந்த கேட்டகரியில் வந்துவிடுகிறார்கள் என்று சொல்கிறேன். அப்படிப்பட்ட முறையிலே செய்யவேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பெரியார் அவர்கள் கருத்தையும் அண்ணா அவர்கள் கருத்தையும் நாங்கள் மாற்றி விட்டோம். என்று சொன்னார்கள். இது பெரியார் அவர்களின் கருத்தா என்று கேட்கிறேன். இது பெரியார் கருத்தா அல்லது அவருடைய கருத்தா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. சி. வே. வேலப்பன் : தலைவரவர்களே, பெரியார் அவர்கள் ஜாதிகள் கூடாது என்று சொன்னார்கள். அண்ணா அவர்களும் கூடாது என்று சொன்னார்கள். அதன் அடிப்படையில்தான் ஆட்சி



ஏற்று நடத்துகிறோம். அப்படிப்பட்ட முறையில் அந்த வழி வந்தவர்கள் இன்னும் ஜாதிக்கு ஜாதி பிரித்துக் கொண்டிருப் போமானால் எப்படி ஜாதிகளை ஒழிக்கப் போகிறார்கள் என்று கேட்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படியானால் ரிசர் வேஷன் வேண்டாமென்று சொல்கிறார்கள் இல்லையா?

திரு. சி. வே. வேலப்பன் : நான் சொல்கிற கருத்தில் எந்த ஜாதியில் இருப்பவர்கள் உயர்ந்தவர்கள் என்று கருதுகிறோமோ அந்த ஜாதிகளிலும் ஏழைகள் இருக்கிறார்கள். எல்லா ஜாதிகளிலும் ஏழைகள் இருக்கிறார்கள். பலதரப்பட்ட ஜாதிகளிலும் ஏழைகள் இருக்கிறார்கள். அதை அடிப்படையாக வைத்துச் சொல்கிறேன். ஏழைகள் முன்னேறவேண்டுமானால் அத்தகைய வருமானம் குறைந்தவர்களாக இருப்பவர்களுக்கெல்லாம் அரசு இப்படிப்பட்ட சலுகைகளை அளிக்கும் என்ற நியதியை ஏன் ஏற்படுத்தக் கூடாது என்று கேட்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பிற்படுத்தப்பட்டோர் ரிசர்வேஷனை பிரித்துக் கொடுக்கக்கூடாது என்பது தான் உங்களுடைய கருத்தா?

திரு. சி. வே. வேலப்பன் : நான் சொல்கிறபடி பிற்படுத்தப்பட்டோரும் பலன் பெறுகிறார்கள். நீங்கள் யாரை வாழ்க்கையில் முன்னேறியிருக்கிறார்கள் என்று ஜாதியைப் பிரித்திருக்கிறீர்களோ அவர்களும் பொருளாதாரத்தில் தாழ்த்தப்பட்டவர்களாக இருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இப்போதிருக்கிற நிலையில் பிற்படுத்தப்பட்டோர் மட்டும் சலுகை பெறுகிறார்கள். எல்லோரும் சலுகை பெற வேண்டும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்குச் சலுகை கூடாது என்ற உங்களுடைய கொள்கையைப் பெரியோரின் கொள்கை என்று திணிக்கவேண்டாம். பெரியாரை உங்களுக்கு அதிகம் தெரியும், எங்களுக்குத் தெரியாது. ஆகவே உங்களுடைய கொள்கை என்று ஏற்றுக்கொள்கிறோம்.

திரு. சி. வே. வேலப்பன் : ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பதை ஒப்புக்கொள்வார்களானால், நான் சொல்கிற இந்த கருத்தில் பிற்படுத்தப்பட்டோர் சலுகை பெறுகிறார்கள். பிற்படுத்தப்

[திரு. சி. வே. வேலப்பன்] [1973 மார்ச் 29

பட்டோரிலும் வசதி படைத்தவர்கள் இருக்கிறார்கள். இந்த அரசு விவசாயத் துறையில், விவசாயத் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு நல்ல பல காரியங்களைச் செய்யவில்லை என்பது என் கருத்தாகும்.

கூட்டுறவு என்ற துறையை வைத்து அதன் மூலம் பல சலுகைகளைக் கொடுக்கிறார்கள். அமைச்சர்கள் குறுக்கிடலாம். குறுக்கிடாமல் இருந்தால் என் கருத்தைச் சொல்வதற்கு வாய்ப்பாக இருக்கும். கூட்டுறவு என்ற துறையில் அதற்குச் சலுகை கொடுக்கிறார்கள். நீங்கள் கூட்டுறவுத் துறையை வெறுக்கிறீர்களா என்ற கேள்வி எழக்கூடும். நாங்கள் வெறுக்கவில்லை. கூட்டுறவுத் துறையில் ஊக்கம் கொடுப்பதைப்போல தனியார் துறையிலும் அவர்கள் ஊக்கம் கொடுத்து நல்ல காரியங்களைச் செய்திருக்க வேண்டும். ஆனால் செய்யவில்லை. அது மட்டுமல்ல, மந்திரிக்கழகு, வரும் பொருள் உரைத்தல் என்று சொல்வார்கள். இப்போது இந்த நிலையைப் பார்த்தால் அதற்கு என்ன அர்த்தம் என்றே புரிந்து கொள்ள முடியாத நிலையில் இருந்து வருகிறோம்.

மின்சாரத் தட்டுப்பாடு வருகிற நிலை தெரியாமல் வந்ததற்குப் பிறகுகூட அதைத் தெரிவிக்க வேண்டிய அளவிலே தெரிவித்து விவசாயிகளை, மற்ற துறையில் இருப்பவர்களைக் காப்பதற்கு உஷாராக இருந்து அவர்கள் வைத்த பயிரை எடுப்பதற்கு இந்த அரசு அவர்களுக்கு ஒத்தாசை, உறுதுணை புரியவில்லை, முன்பே அறிவிக்க வேண்டிய அறிவிப்பை அறிவிக்கவில்லை என்ற நிலையில் சொல்லிக் கொண்டு, இப்படிப்பட்ட நிலையில் விவசாயிகள் பயிர் செய்து இப்போது திடீரென்று மின்சாரத் தட்டுப்பாடு வந்ததனால் அவர்கள் தத்தளிக்கிறார்கள். நான் ஊருக்குச் செல்லவேண்டுமானால் கூட இன்று போவதை விட்டு மறு நாள் போகலாம். ஆனால் பயிருக்கு தினசரி தண்ணீர் விட்டாக வேண்டும். அப்படிப்பட்ட முறையில் மின்சார தட்டுப்பாடு என்பதற்காக அதிகமாகக் குறைப்பதை நிறுத்தி பயிருக்கு அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று சொல்வதோடு, மின்சாரம் கிடைக்காத காரணத்தினால் ஆயில் என்ஜின் வைத்து பயிர் செய்கிறார்கள், அவர்களுக்கு டீசல் போன்ற இப்படிப்பட்ட எண்ணெய் வழங்கப்பட வழிவகை செய்ய வேண்டும்.

விவசாயி நாட்டின் முதுகெலும்பு என்று ஏற்றுக்கொள்கிறோம். அவர்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று நான் தெரிவித்து, விவசாயிகளுக்கு மின்சாரம் குறைந்தது 12 மணி நேரமாவது கொடுக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.



1973 மார்ச் 29] [திரு. சி. வே. வேலப்பன்]

என்னுடைய தொகுதியில் இது போன்ற நிலைமை மிக அதிகமாக இருக்கிறது. இந்த நிலைகளைச் செய்ய வேண்டும். விவசாயியை ஊக்குவிக்க வேண்டுமானால், அவர்கள் தெரிந்தோ, தெரியாமலோ செய்கிற தவறுகள் இருக்குமானால் பரிசீலித்து முறைப்படி வழங்க வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும். செய்ய இந்த அரசு தவறியிருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.

நெசவுத் தொழிலைப் பற்றிச் சொல்லும்போது, விவசாயம் நாட்டின் முதுகெலும்பு என்றால், அடுத்தது நெசவு என்கிறோம். மனிதனுக்கு உணவு, உடை இருக்கவேண்டும். அடுத்து இருக்க இடம் வேண்டும். உள்ளத்தில் நாணயம், ஒழுக்கம் வேண்டும். அப்படிப்பட்ட நிலையில் இருப்பவர்கள் தான் நாட்டில் மனிதர்களாக வாழ முடியும் என்று சொல்கிறோம். மானத்தைக் காக்கிற நெசவாளர்கள் நூல் கிடைக்காமல் அல்லல் படுகின்ற நிலைமை இருக்கிறது. அந்த நிலை போக வேண்டுமானால்,—மாநில அரசு எங்களிடத்தில் அதிகாரம் இல்லையே என்று தப்பித்துக் கொள்வார்கள், அது அல்ல நம் நோக்கம், மத்திய அரசுக்கு அந்த அதிகாரம் இருந்தாலும், மாநில அரசு பெற உரிமை இருக்கிறது.

அதைச் செய்யாமல் நீங்கள் நூல் வேண்டுமானால் மத்திய அரசைக் கேளுங்கள், அல்லது அப்படியில்லையானால் மாநில சுயாட்சி கேட்டுக் கொண்டிருக்கிறோம், கிடைத்ததற்குப் பிறகு எல்லா சலுகைகளையும் செய்வோம் என்று சொல்லி தப்பித்துக் கொள்வதில் பயன் இல்லை. அப்படியானால் மாநில சுயாட்சியை நீங்கள் ஆதரிக்கவில்லையா என்ற கேள்வி எழக்கூடும். நாங்கள் மாநில சுயாட்சி மட்டுமல்ல, தனி மனிதன் சுயாட்சிக்கு பாதுகாப்பு வேண்டுமென்ற கருத்து கொண்டவர்கள். இதுதான் நாங்கள் எப்பொழுதுமே கொண்டிருக்கிற நிலை. ஆகவே, இதைத் தட்டிக் கழிப்பதன் மூலம் ஏதோ மேடைக்கு வருகிற ஒரு நாட்டியக்காரியை ஆட விடுவோமானால் அவள் அப்படி ஆடத் தெரியாத நிலையில் இருந்து, இது மேடையா, அழகாக இல்லையே என்று பார்ப்பது போல அரசுப் பொறுப்பையேற்றிருப்பவர்கள் தப்பித்துக் கொள்ளக்கூடிய நிலைமையில் இது போல சொல்லப்படுகிறது.

நெசவாளர்கள் தங்களுக்கு வேண்டிய நூல்களைக் கேட்டு முறையாக அறிக்கைகள் அனுப்பி, போராட்டத்தில் ஈடுபட்டால் அவர்களைக் கைது செய்கிற நிலைமை, அப்படிப்பட்ட நிலைமையிலே என்னைக் கூட கைது செய்திருந்தார்கள். இதைச் சொல்வதற்குக் காரணம் அப்படிப்பட்ட நிலைகளிலே ஏதோ ஒரு மூலையில் தவறு

ஏற்படுமானல் சேலத்தில் அம்மாபேட்டைப் பகுதியில் ஒரு சில தவறுகள் நடந்து விட்டதற்காக, பஸ் கொளுத்தப்பட்டதற்காக யாரைக் கைது செய்தார்கள், கொளுத்தியவர்களையா என்ருல் இல்லை, அவர்கள் கைது செய்து பொய் வழக்கு போட்டவர்கள் யார் என்று பார்ப்போமானல் அவர்கள் வெளியூர்க்காரர்களாக இருக்கிருர்கள். சிலர் விழுப்புரத்தைச் சேர்ந்தவர்கள், மதுரையைச் சேர்ந்தவர்கள், தர்மபுரியைச் சேர்ந்தவர்கள் இப்படிப்பட்டவர்களெல்லாம் இதிலே இருக்கிருர்கள்.

அப்படி உள்ளே இருப்பவர்களை விடுதலை செய்கிற அளவிற்கு இந்த அரசு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று சொல்கிற போது இதையெல்லாம் கூர்ந்து கவனித்து ஆவன செய்ய வேண்டும். இன்றைய நிலையில் அவர்களை நாம் காப்பாற்றியாக வேண்டும். நூல் வழங்குவதில் இந்த அரசு நல்ல நிலை எடுத்துக் கொள்ள வேண்டும். பொறுப்பெடுத்து செய்ய வேண்டும், என்று கேட்டு இந்த வாய்ப்பினை நல்கிய துணைத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. கோவை செழியன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த நிதி ஒதுக்கீட்டு மசோதாவின்கீழ் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அரசு விவசாயிகளுக்கு, தொழிலாளர்களுக்கு மற்றுமுள்ள பல இனங்களுக்கெல்லாம் கடந்த சில ஆண்டுகளாக என்னென்ன காரியங்களைச் செய்து வந்திருக்கிறதென்பதை விரிவான அளவிலே விளக்க முடியாவிட்டாலும், உண்மையான சில சாதனைகளை இங்கே குறிப்பிடுகிறேன். மன மாச்சரியங்களோடு அதைப் பார்த்தால், மாமியார் உடைத்தால் மண் குடம், மருமகள் உடைத்தால் பொன் குடம் என்ற அளவிலே பார்க்க முடியுமே தவிர உண்மையான விளக்கங்களைப் புரிந்து கொள்ள முடியாது. நான் இங்கே சில கருத்துக்களை எடுத்துச் சொல்கின்றபோது, அந்தக் கருத்துக்களால் நாட்டுக்கு என்ன நன்மை விளைகிறதென்பதை கொஞ்சம் சிந்தித்துப் பார்த்துத் தீரவேண்டும். இந்த மசோதாவின் மீது ஒரு சில கருத்துக்களை மட்டும் சொல்லி நான் அமர்ந்து விடுகிறேன்.

விவசாயத்துறையைப் பொறுத்த வரையில், இந்த அரசாங்கம் எவ்வளவோ செய்திருக்கிறது. சிற்சில தடங்கல்களை மட்டும் உடனடியாக நிவர்த்தி செய்தால் மிக வசதியாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து. விவசாயிகளுக்கு இந்த அரசாங்கமும், ரிசர்வ் பேங்கும், மற்றுமுள்ள ஸ்தாபனங்களும் நிறைய பணம் தருகிறது.



அந்தப் பணமெல்லாம் உடனடியாக விவசாயிகளுக்குக் கிடைக்கின்ற வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும். எல். டி. பாங்க் மூலமாக கடன் தருகிருர்கள். அந்தக் கடன் தொகை எல்லாம் உடனடியாக கிடைக்கச் செய்யவேண்டும் என்பதை நான் வலியுறுத்திச் சொல்லிக்கொள்கிறேன். அதே போல் விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு விலை நிர்ணயம், விலை உத்தரவாதம் இல்லாத நிலைமை இருந்து வருகிறது. அந்தப் பொருள்களுக்கு பிரைஸ் கேரண்டி செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் மார்க்கெட்டிங் வசதிகளையும் விவசாயிகளுக்கு ஏற்படுத்தி தருவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்து தரவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். நான் இந்த மன்றத்தில் பல முறை குறிப்பிட்டிருக்கிறேன். கவன ஈர்ப்பு மூலமாகவும் இந்தக் கோரிக்கையைச் சொல்லியிருக்கிறேன்.

கோவை மாவட்டத்தில் "சொலானம் இலஞ்ஞி பொலியா" என்ற ஒரு வகை பூண்டு பயங்கரமான விளைவை உண்டாக்கி வருகிறது. பல்கலைக் கழகத்திற்கும் அரசாங்கத்திற்கும் சொல்லி வருகிருேம். இன்னும் சரியான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். பல்கலைக் கழகத்திலும் அரசாங்கத்திலும் என்ன சொல்கிருர்கள் என்ருல் போதிய மருந்துகளை மத்திய அரசாங்கம் வெளிநாட்டிலிருந்து தருவித்துத் தரவில்லை என்று. மத்திய அரசாங்கம் இதைச் செய்யாது. ஆண்டுதோறும் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள ஸ்காட்ச் விஸ்கியை இறக்குமதி செய்வார்கள். ஆனல் மருந்துகளை வாங்குவதற்கு முற்பட மாட்டார்கள். இதற்குப் பணமில்லை என்று சொல்கிருர்கள். வெளிநாட்டு விஸ்கி நமக்குத் தேவையில்லை. இந்தியன் விஸ்கியே போதும். ஆனல் மருந்துகள் தேவை. இதை மத்திய அரசாங்கத்திலிருக்கின்றவர்கள் அனுதாபத்தோடு கவனிக்க வேண்டுமென்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதே போல் தமிழக அரசாங்கம் நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாக 15 ஸ்டேண்டர்ட் ஏக்கர் என்று நிர்ணயம் செய்திருக்கிருர்கள். 15 ஸ்டேண்டர்ட் ஏக்கர் எப்படி பிரிக்கப்பட வேண்டும் என்று பார்த்தால் தரம் அடிப்படையிலும் தீர்வை அடிப்படையிலும் பிரிக்க வேண்டும். தீர்வை $1\frac{1}{4}$ ரூபாய்க்குக் கீழே இருந்தால் 4 ஏக்கர் என்று வைத்திருக்கிருர்கள். குறிப்பாக பி.ஏ.பி. பாய்கின்ற பகுதிகளில் இரண்டு வருடத்திற்கு ஒரு முறை என்று சொல்லி ஆண்டில் மூன்று மாதங்களுக்கு மட்டுமே தண்ணீர் வருகின்றது "டெயில் எண்டுக்கு" தீ

தண்ணீர், கிடைப்பதில்லை. இந்த பூமிக்கும் 1–60 சாதாரண ஏக்கர் ஒரு ஸ்டேண்டர்ட் ஏக்கர் என்று நிர்ணயித்து வருகிறது. வருடத்திற்கு 11 மாதம் தண்ணீர் கிடைத்து ஒரு ஏக்கர் $1\frac{1}{4}$ லட்சம் $1\frac{1}{2}$ லட்சம் என்ற விலை போகின்ற பூமியும் இருக்கிறது. அதற்கு ஒரு ஏக்கர் ஒரு ஸ்டேண்டர்ட் ஏக்கர் என்று வைத்திருக்கிறார்கள். ஒருன் முட்டையிடாத பூமிக்கு 1.60 ஏக்கர் ஒரு ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று வைத்து நிர்ணயிப்பது கூடாது என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். ரெவின்யூ போர்டு மெம்பர் அவர்கள் இங்கே வந்திருக்கிறார். அவர் இதைக் கொஞ்சம் அனுதாபத்தோடு ஆராய்ந்து எங்களுடைய அமைச்சர்களுக்குச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் பி.ஏ.பி. தண்ணீர் அல்லது லோயர் பவானி தண்ணீர் வருடத்திற்கு ஒரு முறை விட வேண்டும் என்று இருக்கும் நிலையை மாற்றி முன்பு போல் மூன்று வருடத்திற்கு ஒரு முறை என்றே வைத்து அது பாய்கின்ற பகுதிகளை அதிகப்படுத்தினால் மேற்கொண்டு இரண்டு லட்சத்து எழுபத்து ஐயாயிரம் ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி கிடைக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கருத்தை நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. சாதிக் பாட்சா அவர்களும் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை உடனடியாக நிறைவேற்றுவதற்கு ஆவன முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்களிடமும், ரெவின்யூ அமைச்சர் அவர்களிடமும் பல முறை நான் முறையிட்டுக் கொண்டிருக்கிறேன். இந்த மைனர் இனும் நிலங்கள் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருப்பதால் பல ஏழை விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். இந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே அதற்கான ஒரு மசோதாவைக் கொண்டு வரவேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன். கிராமங்களிலேயுள்ள ஏழை ஹரிஜனங்களுக்கு உடனடியாக வீட்டு நிலத்தை பட்டா செய்து கொடுப்பதோடு ஒரு குடும்பத்திற்கு ரூபாய் 500 வீதம் வீடு கட்டிக் கொள்வதற்காகக் கொடுத்து உதவவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ரூரல் பகுதிகளில் ரோடுகள் போடுகின்றபோது ஜனத்தொகை 1,000-க்கு மேல் இருந்தால் அங்கே தார் ரோடு போடலாம் என்று இருக்கிறது. பத்து மைலுக்கு அந்த ரோட்டில் ஒரு ஆயிரம் பேர் உள்ள கிராமம் ஒன்று மட்டுமே இருந்தால் அங்கு தார் போடப்



படும். இல்லாவிட்டால் தார் இல்லாமல் அப்படியே விட்டு விடப்படும். அதை விட்டு பத்து இடங்களில் 500, 500 பேராக ஜனத்தொகை உள்ள பல ஊர்கள் இருந்தால் அதைக் கணக்கில் எடுத்துக் கொண்டு அங்கெல்லாம் தார் போட்டுக் கொடுக்கும்படி செய்தால் அது நல்ல முறையில் வசதி செய்ததாகவிருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆயிரம் ஜனத்தொகை என்று வைத்தால் பல கிராமங்களுக்குத் தார் ரோடு வசதி கிடைக்காமல் போய்விடுகிறது. இந்த நிலை மாற்றியமைக்கப்பட வேண்டும்.

கடைசியாக, இரண்டொரு கருத்தைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். எம்பிளாய்மெண்ட் வாய்ப்பை பொறுத்த வரையில் தனியார் துறைகளும், அரசு ஆதரவுடன் நடைபெறுகின்ற நிறுவனங்களும், ஆட்கள் எடுக்கின்றபோது, 1962-ஆம் ஆண்டின் சட்டப்படி, எம்பிளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சின் மூலமாகத்தான் எடுக்க வேண்டும் ஆனால் நடைமுறையில் அப்படி எடுக்கப்படவில்லை. இங்கே அதிகாரிகளாக வருகிறவர்கள் என்ன செய்கின்றார்கள். உதாரணமாக திருச்சி ஹெவி பாய்லர் தொழிற்சாலையை எடுத்துக் கொண்டால், சன்ஸ் ஆப் தி சாயில் என்பதற்கு இடமேயில்லை. தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு அங்கே வேலையில்லை.

இதை நான் இங்கு சொல்கிறபோது ஏதோ குறுகிய மனப்பான்மையில் பேசுவதாகக் கருதக் கூடாது. பீகார் மாநிலத்தில் அங்குள்ள (மைனஸ்) சுரங்கங்களில் எடுக்கின்ற, அமைகின்ற பணியாளர்களை எல்லாம் பீகாரிகளாகத்தான் போட வேண்டுமென்று அந்த மாநிலத்தின் முதலமைச்சர் சொன்னதை பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். சன்ஸ் ஆப் தி சாயில் என்ற அடிப்படையில்தான் என்று சொல்லியிருக்கிறார். அதே போல் தமிழ்நாட்டில் இருக்கின்ற எல்லா நிறுவனங்களிலும் தமிழர்களாகத்தான் இருக்க வேண்டும், அதிலும் குறிப்பாக ரூபாய் 500-க்கு கீழ் சம்பளமுள்ள பதவிகள் அப்படித்தான் இருக்க வேண்டும். நம்முடைய அமைச்சரவை இதில் கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதைத்தான் "பூமி புத்திராஸ்" என்று மலேசியாவில் சொல்கிறார்கள்.

அடுத்தபடியாக, இன்னொரு கருத்தை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாட்டில் உற்பத்தியாகின்ற பொருள்களை மட்டுமே நமது அரசாங்கம் மற்ற அமைப்புகள், வாரியங்கள் வாங்க

வேண்டும் என்று அவைகளுக்கு பிரைஸ் பிரபிரன்ஸ் கொடுத்து அதற்கான உத்தரவை தமிழக அரசு அனுப்பி இருக்கிறது. டி.ஓ. 18795/பி.ஓ./51/67, தேதி 28—11—1967. இந்த உத்தரவுப்படி பிரைஸ் பிரிபரன்ஸ் கொடுக்க வேண்டுமென்றிருக்கிறது. கேரள அரசாங்கம் அதைக் கடை பிடித்து வருகிறது.

குறிப்பாக, மின்சார வாரியத்தைப் பற்றிச் சொல்கிறேன். மின்சார வாரியம் வாங்குகின்ற பொருள்களைப் பொறுத்த வரையில் தமிழ் நாட்டில் உற்பத்தியாகின்ற பொருள்களை வாங்கினால் நமக்கு இரு முனையில் விற்பனை வரி கிடைக்கிறது. பிரைஸ் ஒரே பிரைஸ், அந்தப் பொருள் தமிழ்நாட்டிலும், வடநாட்டிலும் உற்பத்தியாகின்றபோது, மின்சார வாரியத்திலிருக்கின்ற சில அதிகாரிகள் இன்றையதினம் வட மாநிலங்களில் உற்பத்தியாகின்ற சில பொருள்களையே வாங்குகிறார்கள். அதற்கு என்ன காரணமென்று அறிய விரும்புகிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அந்த அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இங்கேயே அந்தப் பொருள்கள் உற்பத்தியாகின்றபோது, வடநாட்டு ஆலைகளைத் தேடிப் போகவேண்டிய அவசியமென்ன? எத்தகைய அதிகாரிகளாக இருந் தாலும் சரி, உடனடியாக அவர்களை வெளியே அனுப்புங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(திரு. நா. வீராசாமி தலைமை)

தயவுசெய்து நான் பேசுகின்ற பேச்சுக்களை அமைச்சர்களாவது கேட்டு பதில் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் ஏதோ பேசிக்கொண்டே இருக்கிறேன். அமைச்சர்கள் எங்கேயோ எதையோ பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : கேட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

* திரு. கோவை செழியன் : ஆகவே, அத்தகைய முறை கையாளப் பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழ் நாட்டிலிருக் கின்ற சேஷசாயி மீட்டர்ஸ், இந்தியன் மீட்டர்ஸ் போன்ற நிறுவ னங்கள் இருக்கின்றபோது அவற்றையெல்லாம் விட்டு இங்கு கிடைக்கக்கூடிய பொருள்களை வெளி மாநிலத்திலிருந்து ஏன் வர வழைக்க வேண்டுமென்று அறிய விரும்புகிறேன். இது உடனடியாக நிறுத்தப்படுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு ஒரே ஒரு பிரச்சினையைப் பற்றி கூறி





முடித்துக் கொள்கிறேன். தாழ்மையோடு எங்களுடைய கட்சியின் தலைவரும், முதலமைச்சருமான டாக்டர் கலைஞர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர் மாண்புமிகு திரு. வேலப்பன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதை வருத்தத்தோடு மறுக்கவேண்டியவனாக இருக் கிறேன். அண்ணா அவர்களும், பெரியார் அவர்களும் ஜாதி ஒழிய வேண்டும் என்று சொன்னார்கள். தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட நிலையில் உள்ளவர்களுக்கு வாழ்க்கையில் சில உத்தரவாதங்கள் தர வேண்டுமென்பதற்குத்தான் போராடினார்கள். கம்யூனல் ஜீ.ஓ. வந்தது. எல்லோருக்குமாக ஒரு நிலை என்று வைக்கப்படுமேயானால் தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட நிலையில் உள்ளோருக்கு எந்தவிதமான மேம்பாட்டிற்கான வழி இல்லாமல் போய்விடுமே என்று செய்யப் பட்ட ஒரு காரியத்தைக் கைவிடுவது நல்லதா என்று கேட்க விரும்பு கிறேன்.

தமிழகத்திலே மிகமிகப் பிற்போக்கான ஒரு இனம் இருக்கின்றது மு. ப.
என்றால் அது கொங்கு வேளாளர் இனம்தான். Edmund Thurston 10-30
என்ற ஒரு ஆங்கிலேயர் எழுதியிருக்கின்றார். "இந்தியாவிலேயே இந்த இனம்தான் மிகமிகப் பிற்போக்கான இனம்" என்று. என் வயதுள்ள ஒருவனைப் பார்த்து (அந்த இனத்தில் உள்ள ஒருவரைப் பார்த்து) என் தாத்தா கல்லூரியில் படித்தவர் என்று சொல்ல முடியாது. நேற்று நமது பெருமதிப்பிற்குரிய டாக்டர் கலைஞர் அவர்கள் முஸ்லீம் இனத்திற்குச் சில சலுகைகளைக் கொடுப்பதாக அறிவித்தார்.

அது போல, இந்த கொங்கு வேளாளர் இனத்திற்குக் கொடுத்தால் ஏழேழு தலைமுறைக்கும் நமது கலைஞர் அவர்களை அவர்கள் மறக்க மாட்டார்கள். என்றென்றும் தங்களை மனத்தில் இருத்தி வாழ்த்து வோம் என்று மிகத் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன். கோவை, திருச்சி, மதுரை மாவட்டங்களிலேயெல்லாம் இந்த இனத் தவர்கள் ஏராளமாக இருக்கின்றார்கள். அனைவருமே விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்கள். இவர்களுக்கு இதைத் தாங்கள் செய்தால் உலகம் உள்ளளவும் நமது முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களை மறக்க மாட்டார்கள், யாரோ எதையோ சொல்லிவிட்டுப் போகட்டும், ஆனால் நாங்கள் மறக்க மாட்டோம் என்று சொல்லி தயவுசெய்து இதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையினை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் தூக்கி வைத்துப் பேசி சலுகைகள் கேட்பது என்பது எல்லோருக்கும் பழக்கமாகிவிட்டது. பாயிண்டைச் சொல்லுங்கள். இதெல்லாம் அவசியமில்லை.

திரு. க. சுப்பு : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இந்த மசோதாவின்மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஏற்கெனவே ஒவ்வொரு துறைக்கும் வேண்டிய மானியக் கோரிக்கைகள் வழங்கியாகிவிட்டன. அப்போது விடுபட்டுப் போன சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நம் அரசாங்கத்தில் பணிபுரியும் ஊழியர்களைப் பொறுத்தவரையில் ஒருசில முறையீடுகள் வந்திருக்கின்றன. அதுபற்றிக் குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழகத்தில் ஆசிரியர்கள் உட்பட சுமார் ஆறு லட்சம் பேர் அரசு ஊழியர்களாகப் பணிபுரிகின்றனர். அவர்களுக்கு அடிக்கடி அகவிலை ஈட்டுப்படி உயர்வு கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று இருந்தாலும் அறிவிப்புக்களைத்தான் கொடுத்திருக்கின்றார்களே தவிர பணம் அவர்கள் கைக்கு வரவில்லை. இதுபற்றி அரசு ஊழியர்கள் பல துண்டுப் பிரசுரங்களைக்கூட வெளியிட்டிருக்கின்றார்கள். உதாரணமாக 1970 பிப்ரவரி முதல் 1973 பிப்ரவரி வரையில் 37 மாதங்களுக்கு மாதம் ரூ. 15 வீதம் கொடுத்தால் அது மட்டும் நபர் ஒருவருக்கு ரூ. 555.

இதுபோன்று 1971 செப்டம்பர் முதல் 1973 பிப்ரவரி வரையில் மாதம் ரூ. 7 வீதம் பதினெட்டு மாதங்களுக்கு நபர் ஒருவருக்கு ரூ. 126-ம், 1972 ஆகஸ்டு முதல் 1973 பிப்ரவரி முடிய ரூ. 7 வீதம் ரூ. 49-ம் கொடுக்கப் போவதாக அறிவித்திருந்தும் இந்தத் தொகைகளிலிருந்து இது வரையில் அவர்களுக்குக் கொடுத்து இருப்பது ஒவ்வொருவருக்கும் ரூ. 110 தான். பாக்கி உள்ளது ரூ. 620 இருக்கின்றது. இதன்படி ஆறு லட்சம் பேருக்குக் கணக்கிட்டுப் பார்த்தால் ரூ. 3,20,00,000 என்ற கணக்கு ஆகின்றது. அகவிலை உயர்வின ஈடுகட்டக் கொடுக்கின்றோம் என்று அரசாங்கத்தில் சொல்லப்பட்டதே தவிர ஊழியர்களுக்கு அது இன்னும் கொடுக்கப்படாமலேயே இருக்கின்றது. விலையோ நாளுக்கு நாள் ஏறிக் கொண்டு போகின்றது. இதை அவர்களுக்குக் கொடுக்காமல் "நாங்கள் அதை பிராவிடெண்டு பண்டு நிதியில் சேர்த்து விட்டோம்" என்றால் என்ன அர்த்தம் என்று புரியவில்லை. போட்



டிருப்பது வரியில்லாத பட்ஜெட்டாக இருந்தாலும் இப்படி ரூ. 3,20,00,000-யை விட்டு வைத்திருப்பதானது மறைமுகமான வரி போடுவது போலத்தான். கேரள அரசை நேற்று நமது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் உதாரணத்திற்குக் காண்பித்தார்கள். அங்கே உள்ள அரசு ஊழியர்களுக்கு, மத்திய அரசு ஊழியர்களுக்கு எந்த அளவிற்கு அகவிலை ஈட்டுப்படி என்று கொடுக்கப்படுகின்றதோ அதையே கொடுத்து வருகின்றார்கள். உறுப்பினர்களுக்கு தினப்படியின் அளவைக் கூட்டித் தரவேண்டும் என்று கேட்டபோது அங்கே பத்து ரூபாய்தான் அளிக்கப்படுகின்றது என்று கேரளத்தினைச் சுட்டிக்காண்பித்தார் முதல்வர் அவர்கள்.

நேற்று அங்கத்தினர்கள் சில வசதிகளைக் கோரினார்கள். அவற்றைத் தங்களுடைய சொந்த நன்மைக்காகக் கேட்கின்றார்கள் என்று எடுத்துக்கொண்டு விடக்கூடாது. ஆளும் கட்சியிலுள்ளவர்களுக்கும் சேர்த்துத்தான் சொல்லுகின்றேன், சில வசதிக் குறைவுகள் இருக்கின்றன, அவை போக்கப்பட வேண்டும் என்று. பல சிக்கல்களுக்கிடையில், வசதிக் குறைவுகளுக்கு இடையிலேதான் அங்கத்தினர்கள் பணியாற்றி வருகின்றார்கள், இதை அரசு பரிசீலிக்க வேண்டும். இதைவிடுத்து ஏதோ தங்களுக்காகக் கேட்கின்றார்கள் என்று எண்ணிவிடக்கூடாது. அப்படி எண்ணிப் பார்க்கத் தவறி விடும்போதுதான் கோளாறுகள் ஏற்படுகின்றன. ஆளும் கட்சியில் கூட ஒருசிலர்தான், செல்வாக்கு உள்ளவர்கள்தான், வாரியத்தின் தலைவராகவோ அல்லது வங்கித் தலைவராகவோ போகலாம். அனைவருக்குமே அந்த வாய்ப்புகள் கிட்டுவதில்லை. எனவே அவற்றைச் சுட்டிக்காண்பித்து, அங்கத்தினர்களுக்குச் சில வசதிகளைச் செய்து தரவேண்டும் என்று நேற்று கேட்டுக்கொண்ட நேரத்தில், கேரளத்தைச் சுட்டிக்காண்பித்து அங்கே பத்து ரூபாய்தான் கொடுக்கின்றார்கள் என்றுகுறிப்பிட்டார்கள். அங்கே இரயில் பாஸ் கொடுத்திருக்கின்றார்கள். மேலும் பல வசதிகளைச் செய்து தந்திருக்கின்றார்கள். ஆகவே இதற்கு கேரளத்தைச் சுட்டிக்காண்பிக்கும்போது, அங்குள்ள ஊழியர்களுக்கு மத்திய அரசு கொடுக்கும் அகவிலை உயர்வு ஈட்டுப் படியைக் கொடுக்கின்றார்களே, அதை இங்கே செயல்படுத்தக்கூடாதா? ரூபாய் மூன்று கோடியே இருபது லட்சம் என்பது ஒரு பெருந்தொகை. இதைக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து அரசுத் துறைகளில் "ஃபேவரிடிஸம்". எந்த ரூபத்தில் வந்தாலும் ஏற்றுக்கொள்ளக்கூடாது. இது அரசுக்குக் கெட்ட பெயரைத்தான் கொண்டுவருகின்றது. நிர்வாகத்தையே இது அழித்துவிடும். ஒருவர் மூன்று ஆண்டுகாலத்திற்குமேலே—கெஜட் பதிவு பெற்றவர்—ஒரு இடத்தில் இருக்கக்கூடாது என்று இருக்கின்றது. "எனக்கு வேண்டியவர், ஆகவே அவர் மூன்று ஆண்டு காலத்திற்கு மேலும் அங்கேதான் இருப்பார்" என்று சொன்னால், மற்றவர் அங்கே வந்தால் அந்த வேலையைப் பார்க்கமாட்டார்களா? பார்ப்பார். ஆனால் தாங்கள் சொல்லுவதை அப்படியே ஏற்று நடத்தமாட்டார்கள்.

மதுரையில் ட்ரெஷரி ஆபீஸர் ஒருவர், இராமதாஸ் என்று. பெயர். எட்டு ஆண்டுகாலமாக அங்கேயே நிறுத்தி வைத்திருக்கின்றார்கள். இவர்தான் அங்கேயே இருக்க வேண்டும், தன்னை யாரும் மாற்றுவதற்கு யோசனை சொல்லக்கூடாது என்பதற்காக அவர் தன் கீழ் உள்ளவர்களையெல்லாம் மாற்றிக்கொண்டே இருக்கின்றார். அது கூட இல்லை. கல்யாணம் ஆகாத பெண்களையெல்லாம் கண்டபடி மாற்றுகிறார் என்று புகார்கள் இருக்கின்றன. அங்கே உள்ள என்.ஜி.ஓ-க்கள் எல்லாம் இதற்காக நோட்டீஸ் போட்டு மேலதிகாரிகளுக்குத் தெரிவித்திருக்கின்றார்கள். ஏன் இப்படிற் மூன்று ஆண்டு காலத்திற்கு மேலே அவர் அங்கே இருக்கவேண்டும்? இது பற்றி விண்ணப்பம் ஒன்று முதலமைச்சர் அவர்களுக்குக்கூட வந்திருக்கின்றது. சொல்லுகின்றார்கள், மாண்புமிகு அன்பில் தருமலிங்கத்திற்கு சொந்தக்காரரர் என்று. இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் வர வேண்டிய அவசியம் இல்லை. யாராக இருந்தாலும் மூன்று ஆண்டுகளுக்கு மேலே ஏன் வைத்திருக்க வேண்டும்?

அடுத்து, சில துறைகளில் வேலை சரிவர நடைபெறவில்லை. தமிழில் மொழிபெயர்த்துக் கொடுக்கின்றார்கள். ஆங்கிலத்தில் இருப்பதை. இதற்காக ஒரு துறை இருக்கின்றது. மிகவும் அழகாகத்தான் மொழிபெயர்த்துக் கொடுக்கின்றார்கள். இது மேலும் வளர்ச்சி பெறவேண்டும் என்றுதான் விரும்புகிறோம். தமிழுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும், தமிழாசிரியர்களுக்கெல்லாம் தலைமை ஆசிரியர் பதவிகள் கொடுக்கப்பட வேண்டும் என்று சொல்லப்படும் இந்த நேரத்தில் இந்தத்துறையில் நிலைமை மிகவும் பரிதாபத்திற்கு உரியதாக இருக்கின்றது.



இங்கே செக்ரடிரியேட்டில் மூன்று அஸிஸ்டெண்டுகள்—ஒரு சூப்பெரிண்டெண்டு என்று இருக்கும்போது அங்கே ஏழு பேருக்கு ஒருவர் என்றுதான் இருக்கின்றது. இவர்களுடைய பிரச்சனைகள் வெளியே வருவதில்லை. அவர்களுக்குப் ப்ரமோஷன் வாய்ப்பும் இல்லை. அங்கே சூப்பெரிண்டெண்டாக உள்ளவர் ஆபீஸராக வர வேண்டுமானால் 15 ஆண்டுகள் ஆகின்றது.

சொல்லப்போனால், ஒரு உயர் நிலையிலுள்ள அதிகாரி அங்கே அதிகாரியாக இருக்கின்றார். அரசியல் பேசுகின்றார் ஊழியர்களிடையே. ஊழியர்களுக்கு அங்கே என்ன மரியாதை ஏற்படும்? அப்படி ஒரு அதிகாரி இருந்துகொண்டிருக்கின்றார். அந்த அதிகாரியின் பேரிலேகூடத் தவறில்லை:

அங்கே உள்ள டைரெக்டர் ஒரு ஸீனியர்-மோஸ்ட் ஆபீஸர். அவருக்கு ஐ.ஏ.எஸ். "கன்ஃபெர்ம்" ஆகவில்லை. எம்.ஏ. படித்தவர், தமிழ் எம்.ஏ. என்ற காரணத்தினாலோ என்னவோ, அவருக்கு ஐ.ஏ.ஏஸ். "கன்ஃபெர்ம்" ஆகவில்லை. அவருக்கு ஜூனியர்கள் எல்லாம் ஐ.ஏ.எஸ். என்று ஆகிவிட்டார்கள். மாண்புமிகு நாவலருக்கு பி.ஏ.-வாக இருந்தவர்கள் எல்லாம் கலெக்டராக வந்திருக்கின்றார்கள். அதெல்லாம் சரிதான். ஆனால் இவருக்குக் கிடைக்கவில்லை. எனவே இவருக்கு ஒரு "ஃப்ரஸ்ட்ரேஷன்" இருக்கின்றது. இவருக்குக் கீழே வேலை பார்ப்பவர்கள் எல்லாம் பின் எப்படி இருப்பார்கள்?

அங்குள்ள ஊழியர்களுக்கு அதிக வேலைப்பளுவும் இருக்கின்றது. ஆனால் அதிக நேரம் உழைத்தாலும் ஓவர்டைம் அலவன்ஸ் என்று ஒன்றும் கிடையாது அவர்களுக்கு, மிகவும் சிரமப்பட்டு வேலை பார்க்கின்றார்கள். ப்ரமோஷன் ஆப்பர்சூனிட்டீஸ் ஒன்றும் இல்லை. அவர்கள் மேல்படிப்பு படிக்க வேண்டுமென்றால் அதற்கும் பெரிமிஷன் கிடைப்பதில்லை.

இவர்கள் குறைகள் எல்லாம் "சம்பளக் கமிஷனின்" முன்பு சொல்லப்படவில்லை. காரணம் தலைவருக்கு, மேலதிகாரியாக உள்ளவருக்கு இதிலும் ஆர்வம் இல்லை. எனவே, இதையெல்லாம் கவனித்து அவர்கள் குறைகளைக் களைய வேண்டும்.

அடுத்து, மருத்துவத் துறையில் நாம் இந்தியாவின் மற்ற மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப்பார்க்கும்போது மிகச் சிறப்பான முறையில் இருந்தாலும் நர்ஸ்களைப் பொறுத்தவரையில் அவர்க

ளுடைய "ஓர்க் லோடு" மிக அதிகமாக இருக்கின்றது. காலை 6–30 மணிக்கு வந்தால் இரவு 8-30 மணி வரையில் பணியிலிருக்க வேண்டியிருக்கின்றது. அவர்கள் குடும்பம் நடத்தக்கூட முடியாத அளவிற்கு வேலைப்பளு அதிகமாக இருக்கின்றது அவர்களுக்கு. செவிலியர்களைத் திருமணம் செய்துகொள்ள யோசனை செய்யக்கூடிய அளவிற்கு அவர்களுக்கு வேலைப்பளு இருக்கின்றது. நாட்டிலே எவ்வளவோ "ட்ரெய்ன்டு நர்ஸஸ்" வேலையின்றி இருக்கின்றார்கள். எனவே, கூடுதலாக நர்ஸ்களை நியமித்தால் அவர்களுக்கு வேலை கொடுத்ததுபோலாகும், அதே நேரத்தில் திறமையும் அதிகமாகும். அது இல்லாமல் ஒவ்வொரு நர்ஸும் 20 வேலைகள் பார்ப்பது என்றால் எப்படிப் பார்க்கமுடியும். அவர்கள் நோயாளிகளை எப்படிப் பார்த்துக்கொள்ள முடியும்? எனவே செவிலியர்களுடைய வேலைப் பளுவைக் குறைப்பதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்ய வேண்டும்.

கல்லூரி ஆசிரியர்கள், பேராசிரியர்கள் இவர்களைப் பொறுத்த வரையில்—இப்பொழுது ஆரம்பப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் ஒரு சட்டம் கொண்டுவரப் போகிறோம்—பென்ஷன் வாங்குவதிலே ஒரு உயர்நிலைப்பள்ளியிலே பணியாற்றிய தலைமை ஆசிரியர் ஓய்வு பெற்றபின் வாங்கக்கூடிய ஊதியத்தைவிட அவர்கள் வாங்குவது குறைவாக இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு அனுமலி இருக்கிறது. அதையும் இந்த அரசு பரிசீலனை செய்யவேண்டும்.

இப்பொழுது கல்விக்காக அதிகமான அளவிற்குப் பணம் ஒதுக்கப்படுகிறது. அது வரவேற்கத்தக்கதுதான். ஆனால் அதிகமாகச் செலவழிக்கக்கூடிய பணம் முறையாகப் போய்ச் சேருகிறதா என்பதைப் பார்க்கவேண்டும். இதிலேபோய் வேண்டிய ஆட்களா இல்லையா என்பதையெல்லாம் பார்ப்பது ரொம்பத் தவறானது. பல கல்விக் கழகங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. உசிலம்பட்டியிலே கள்ளர் கல்விக் கழகம் இருக்கிறது. அங்கே முன்னாலே எல்லாம் சரியாக நடந்துகொண்டுதான் இருந்தது.

புகுமுக வகுப்பிலே நூற்றுக்கு நூறு பேர்கள் பாஸ் பண்ணினார்கள், அந்த அளவிற்கு மிகவும் பெருமையாகப் போய்க்கொண்டிருக்கிறது. ஆனால் அங்கே இப்பொழுது தகராறு ஏற்பட்டு, அது இரண்டாகப் போய் அங்கே கல்விக் கமிட்டிகள் இரண்டு கமிட்டிகள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். இப்பொழுது அங்கேயுள்ள முதல்வர், இன்னும் மற்றவர்கள் எல்லோரையும் கூண்டோடு கைலாசம் என்ற முறையிலே—அத்தனை பேர்களையும் சஸ்பெண்ட்





செய்து வைத்து அவர்கள் எல்லோரும் இன்றைக்கு அலைமோதிக் கொண்டிருக்கிறார்கள். இதிலே எல்லாம் அரசியல் இல்லாத முறையில் அரசாங்கம் நடந்து கொள்ளவேண்டும்.

அங்கே சம்பளம் சரியாக வரவில்லை, வேலை பார்த்ததற்கு இரண்டு மூன்று மாதங்களாகவே சம்பளம் வரவில்லை. அங்கேயுள்ள செல்வாக்குப் படைத்தவர்கள் இருக்கிறார்களே அவர்கள் போலீஸிலே புகார் கொடுத்து என்ன என்னமோ செய்து கொண்டிருக்கிறார்கள். இது எல்லாம் அரசாங்கத்திற்குத்தான் பழி வந்து சேரும். . . .

திரு. ஏ. ஆர். பெருமாள் : தலைவர் அவர்களே, உசிலம்பட்டியிலே உள்ள அந்தக் கல்வி நிலையத்தில் 100-க்கு 100 பேர்கள் தேர்வு பெற்றதாகவும் இப்பொழுது அங்கே தகராறு ஆகிவிட்டது என்றும் சொன்னார்கள். அதற்கு எல்லாம் காரணமே திரு. சுப்பு அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : தவறான ஒரு தகவலை சட்ட மன்றத்திற்குத் தருவது சரியல்ல. ஏதாவது தூக்கி அமுக்கிவிடவேண்டுமென்று நினைத்தால் எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லி விடுவது, எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று கலர் கொடுப்பது எல்லாம் சரியல்ல. கல்லூரி முதல்வர், தலைமை எழுத்தர் அந்த 9 பேர்களுமா, அத்தனை பேர்களுமா எங்களுடைய கட்சிக்காரர்கள்? யாருமே எங்கள் கட்சி இல்லை. இப்படி வந்துவிடுமோ என்றுதான் நான்கூட இதையெல்லாம் சொல்வதில்லை. சட்ட மன்றத்திலே இப்படி அவர்கள் பொய்யான புகார்கள் சொல்வதால் அவர்களுக்கு இடைஞ்சல் வருவது என்ற நிலைமை ஏற்பட்டால் அது சரியல்ல. இதனால், அரசாங்கத்திற்குக் கெட்ட பெயர் வரக்கூடாது. யாரோ சொல்வதாக எண்ணிக்கொண்டு தவறாக சொல்கிறேன் என்று நினைக்கக்கூடாது. எனவே, இதையும் அரசாங்கமே எங்கே எப்படி நடந்து இருக்கிறது என்பதையெல்லாம் பார்த்து கல்லூரிகளிலே இப்படிப்பட்ட நிலைமைகள், ஊடுருவல்கள் இருந்தால் மோசமாகி விடும் என்பதை உணர்ந்து—இதிலே நான்கு பேர்கள் கோபித்துக் கொள்வார்கள், அவர்கள் வோட்டுப் போடுவார்கள் என்றெல்லாம் பார்க்காமல்—நல்ல முறையிலே பரிசீலனை செய்யவேண்டும்.

அருப்புக்கோட்டை, ராஜபாளையம், மதுரையிலே ஜக்கம்பட்டி ஆகிய இடங்களிலேயுள்ளவர்களுக்கெல்லாம் ஸ்டேபிள் பைபர் தான்

[திரு. க. சுப்பு] [1973 மார்ச் 29

வேண்டியிருக்கிறது. ஆனால், 40 ஆம் நெம்பர் நூல் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஜக்கம்பட்டியில் அது தேவையில்லை. அதை வாங்கி விற்றுக்கொண்டிருக்கிறார்கள். இதனால், புதிய புதிய நெருக்கடிகள் வந்துகொண்டிருக்கின்றன. இதையெல்லாம் கவனித்து துரிதமாக நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். நல்லசாமி : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கீட்டின்மீது சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படு கிறேன். பல நண்பர்கள் ஒரு விங்கிலே ஓர்க் லோட் அதிகமாக இருப்பதைப்பற்றி—திரு. சுப்பு அவர்கள்கூட, பேசும்பொழுது செவிலியர்களுக்கு ஓர்க் லோட் அதிகமாக இருக்கிறது என்றும், அதை அரசு கவனிக்கவேண்டுமென்றும் சுட்டிக் காண்பித்திருக் கிறார்கள்—பேசினார்கள். இந்த மாதிரி அரசு ஊழியர்களிடத்திலே சில விங்குகளைப் பொறுத்தவரையில் அதிலே இருக்கக்கூடியவர் களுக்கு வேலை அதிகமாகவும், சில விங்குகளைப் பொறுத்தவரையிலே அவர்களுக்கு வேலை கொஞ்சம் குறைவாகத்தான் இருக்கிறது. வேலையினுடைய தன்மைகள் அப்படி இருக்கின்றன. இதை நிறைவு செய்ய வேண்டுமானால் ஒவ்வொரு இடத்தையும் பரிசீலனை செய்தாக வேண்டும். அதிகமாகச் சம்பளம் வாங்கக்கூடியவர்களும், அதே நேரத்திலே வாழ்க்கைக்கே போதாத சம்பளம் வாங்கக்கூடியவர் களும் இந்தியா பூராவும் இருப்பதை நாம் பார்க்கிறோம்.

இந்தியா சுதந்திரம் அடைந்து 25 ஆண்டுகள் ஓடியும், ஏற்றத் தாழ்வுகள் இருக்கக்கூடிய நிலைதான் இருக்கிறது. தத்துவ சோஷ லிஸம் பேசக் கூடிய தலைவர்கள் இருக்கிறார்கள், விஞ்ஞான சோஷ லிஸம் பேசக்கூடிய தலைவர்கள் இருக்கிறார்கள். மாடர்ன் சோஷலிஸம் பேசக்கூடிய தலைவர்களும் இருக்கிறார்கள். ஜனநாயக சோஷலிஸம் பேசக்கூடிய தலைவர்கள் இருக்கிறார்கள். பாதி சோஷலிஸம் பேசக்கூடிய தலைவர்களும் உண்டு. சோஷலிஸம், சோஷலிஸம் என்று 25 ஆண்டுகாலமாக பேசிய தலைவர்கள் எல்லாம் இப்பொழுது சோஷலிஸத்தைப்பற்றிப் பேசுவதை விட்டிருக்கிறார்கள். இனிமேல், சோஷலிஸத்தைப் பற்றிப் பேசினால் தங்கள்மீது கல்லெறிவார்கள் போலிருக்கிறது என்று நினைக்கிறார்கள்.

ஆளுங்கட்சி கூட்டத்தைப் பார்த்தவுடனே சில காலிகளைத் தூண்டிவிட்டு கல்லெறியச் செய்வதுபோல், அடுத்த கூட்டம் சோஷலிஸம் பற்றிப் பேசினால் கல்லெறியக்கூடிய காலம் வந்துவிடும்



1973 மார்ச் 29] [திரு. எஸ். நல்லசாமி]

போல் இருக்கிறது. அதையெல்லாம் உணர்ந்து தமிழ் நாட்டு முதலமைச்சர் அவர்கள் சோஷலிஸத்தை இங்கே கொண்டு வரக் கூடிய முறையிலே இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே ஜனநாயக ரீதியிலே சோஷலிஸத்தை அறிவித்து இருக்கிறார்கள். இந்தியாவி லேயே தமிழ்நாட்டு நிதிநிலை அறிக்கைதான் முன்னோடியான நிதிநிலை அறிக்கையாக இருக்கின்ற வகையில் இன்றைய தினம் அதை அறிவித் திருக்கிறார்கள். அந்த முறையிலே தமிழ்நாடு இன்னும் முன்னோடி யாக, இந்தியாவிற்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கக்கூடிய முதல் மாநிலமாக இருக்கக்கூடிய வகையிலே ஏற்றத் தாழ்வுகள் இல்லாத சமுதாயத்தை அமைத்தாக வேண்டும். அதற்கான சட்டங்களை வகுத்து விரைவாகக் கொண்டுவர வேண்டும். அதைச் செய்ய நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்களால்தான் முடியும். அவர் களுடைய காலத்திலேதான் சோஷலிஸப் பாதையிலே இந்த நாடு நடந்தாக வேண்டும். புரட்சி செய்து, ரத்தம் சிந்தி சோஷலிஸம் வரக்கூடிய நிலைமையில்லாமல் ஜனநாயக முறையிலே சோஷ லிஸத்தை இந்த நாட்டிற்கு அறிமுகப்படுத்தி அதை நடைமுறைக்குக் கொண்டுவர முடியும்.

சுதந்திரம் பெற்று இருபத்தைந்து ஆண்டுகள் ஆகியும்கூட இன்றைக்கு எச்சிலைப் பொறுக்கக்கூடிய முறையிலே நாய்கள் போல், நரிகள் போல் பகுத்தறிவு படைத்த மனிதர்கள் எச்சிலை எடுத்துச் சாப்பிடுகிறார்கள் என்று சொன்னால் அதை மாற்றியமைப்பதற்கு ஒரே ஒரு தலைவர், ஒரே ஒரு தனித் தலைவர், திறமையுள்ள தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களால்தான் முடியும். திராவிட முன்னேற்றக் கழகத்தால்தான் முடியும். ஆகவே, இந்தச் சந்தர்ப்பம் பொன்னான காலம்.

நாம் எப்படிப்பட்ட சீர்திருத்த புரட்சிகரமான சட்டத்தைக் கொண்டுவந்தாலும் எதிர்வரிசையிலே உள்ள டாக்டர் ஹாண்டே அவர்கள் எதிர்க்க முடியாது. மக்கள் புரட்சிக் கனலை வெளியிலே கிளப்பி விட்டார்கள். அதை அறிந்து நாம் சீர்திருத்தச் சட்டங் களைக் கொண்டுவந்தாக வேண்டும். மக்களுக்கு விரோதமான சட்டங்களாக இல்லாமல் அன்றாடம் உழைக்கக்கூடிய மக்களுக்கு நன்மைகள் செய்யக்கூடிய சட்டங்களை விரைவிலே கொண்டுவந்தாக வேண்டும்.

நிலச் சீர்திருத்தம் செய்யப்படும் என்று பறைசாற்றி, ஒன்றும் பலன் கிடைக்காத காரணத்தினால் இன்றைக்கு இந்த அரசு வந்த தற்குப் பிறகு மறுபரிசீலனை செய்து நிலச்சீர்திருத்தச் சட்டங்களை

நல்ல முறையிலே கொண்டு வந்திருக்கிறோம். உழைப்பவர்களுடைய சக்தியை வாங்கிக்கொள்ளக்கூடிய கூட்டங்கள்தான் இன்றைக்கு நிலங்களிலே இருக்கின்றார்கள். அந்த முறையை மாற்றியமைக்க வேண்டுமானால் கூட்டுறவு முறையைக் கொண்டுவந்தாக வேண்டும். கூட்டுறவு முறையிலே விவசாயத்தை ஆரம்பிக்க வேண்டும். உழைக்கிறவர்களுக்குத்தான் அந்தச் சக்தி நேரடியாகச் செல்லவேண்டும். அந்தச் சக்தியைப் பிடுங்கிக்கொள்ளக்கூடிய முறையை மாற்றி கூட்டுறவு முறையிலே விவசாயம் ஏற்படச் செய்யவேண்டும். இதற்கு நம்முடைய அரசு வழிவகை காணவேண்டும். (மணியடிக்கப்பட்டது)

அடுத்து, எனக்குத் தீராத ஆசை. அதைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்திலே கரும்புச் சாகுபடி செய்வதற்கு ஏராளமாக நிலங்கள் இருக்கின்றன. சர்க்கரை உற்பத்தி செய்வதற்கு தஞ்சை மாவட்டம் சிறந்த மாவட்டமாகும். குறைந்த பட்சம் நான்கு லட்சம் ஏக்கராவிலே கரும்பு விளைவித்து நல்ல சாகுபடி செய்யலாம். மேலும், அந்த மாவட்டத்திலே இன்னும் 10, 15 சர்க்கரை உற்பத்தி செய்யும் மில்கள் வைக்கலாம். நிறையச் சர்க்கரை உற்பத்தி செய்து நாமும் கமர்ஷியல் கிராப் மாவட்டத்தை பயன்படுத்திக்கொள்ள வேண்டும். விரைவிலே அந்த மாவட்டத்திலே சர்க்கரை மில்களை ஆரம்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு மணி அடித்துவிட்டதால் இத்துடன் என்னுடைய கருத்துக்களை முடித்துக்கொள்கிறேன்.

திரு. மு. பழனிவேலன் : தலைவரவர்களே, நிதி ஒதுக்கீடு சட்ட முன்வடிவுமீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்

தமிழக அரசினுடைய இந்த பட்ஜெட்டை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். இந்தத் தொடர் கூட்டத்திலே போலீஸ் மானியக் கோரிக்கை மீது நடைபெற்ற விவாதத்திலே என்னுடைய பகுதியைச் சேர்ந்த மாண்புமிகு பேரவை உறுப்பினர் அவர்கள், என்னுடைய பகுதியிலே காவல் துறையினர் வன்முறை செய்தார்கள், கழகத் தோழர்கள் வன்முறையில் ஈடுபட்டார்கள் என்று வன்முறைச் சம்பவங்களைப் பற்றியெல்லாம் இந்த மாமன்றத்திலே பேசினார்கள். உண்மைக்குப் புறம்பான தகவல்களை அன்றைக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிற நேரத்திலே உள்ளபடியே ஆளும்கட்சியாக இருந்த காரணத்தினால், உடனுக்குடன் பதில் சொல்ல முடியாத காரணத்தினால் அதற்கு ஒரு விளக்கத்தை மட்டும் இந்த நேரத்திலே கொடுத்தால் சரியாக இருக்குமென்று கருதுகிறேன்.



வேலூரிலே நம்முடைய தமிழகத்தின் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் வருவதாக இருந்து அந்த நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டதை நாடு நன்றாக அறியும். என்ன காரணத்தினால் அந்த நிகழ்ச்சி நடைபெறவில்லை என்பதை நாட்டு மக்களும் அந்தப் பகுதி மக்களும் நன்றாக அறிவார்கள். அவர் இங்கே பேசுகிற நேரத்தில் அங்கே காவல் துறையினர் வன்முறையில் ஈடுபட்டார்கள் என்று சொன்னார்கள். அங்கே கழகத் தோழர்கள் வன்முறையில் ஈடுபட்டார்கள் என்று சொன்னார்கள். அங்கே ஈடுபட்ட அதே மாண்புமிகு உறுப்பினர் இங்கே வந்து பேசுகிற நேரத்தில் அப்படிச் சொன்னார்கள்.

ஆனால், அதற்குப் பின்னாலே அந்தப் பகுதியிலே அவருடைய கூட்டம் நடைபெற்றது. அந்த மாண்புமிகு திரு. வேலப்பன் அவர்கள் கட்சியைச் சார்ந்த மாநில அமைப்பாளர் அங்கே நடைபெற்ற பொதுக்கூட்டத்திலே மாண்புமிகு திரு. வேலப்பன் அவர்களும் அந்தக் கூட்டத்தில் பேசிய பேச்சைக் கேட்டால் யார் வன்முறை புரிந்தார்கள் என்று நாடு அறியும். அந்தக் கூட்டத்தில் அவர்கள் பேசினார்கள், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை என்னுடைய தொகுதிக்கு வர முடியாமல் செய்து விட்டேன் என்று பேசினார்கள். அதேபோல, சென்னை சைதாப்பேட்டை தொகுதியில் பேசுகிற நேரத்தில் சொன்னார்கள், நான் முதல்வர் அவர்களுடைய தொகுதியில் பேசுகிறேன். ஆனால், இந்த முதல்வர் அவர்கள் என்னுடைய தொகுதியில் பேசிவிட்டு உயிரோடு திரும்பிச் செல்ல முடியாது என்று பேசியிருக்கிறார்கள். எங்களுடைய கழகத் தோழர்களெல்லாம் தங்கள் உணர்ச்சிகளை வெளிப்படுத்தியிருந்தால் நடந்திருப்பது வேறொன்றாக அன்றைக்கு இருந்திருக்கலாம். ஆனால், அவர்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற கொள்கைகளுக்கேற்ப அமைதியாக இருந்தார்கள். அதற்குப் பிறகு பல இடங்களில் இதைப் போல பேசிக்கொண்டிருக்கிற அவர் இங்கே வன்முறையைப் பற்றிப் பேசுகிறார்கள்.

அது மட்டுமல்ல, இங்கே பேசுகிற நேரத்தில் எங்கள் பகுதியில் தனியார் பள்ளியில் முதல்வர் அவர்கள் பேச வந்த காரணத்தினால் தான் இப்படிப்பட்ட சம்பவம் நடந்தது என்று சொன்னார்கள். அவ அவருக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அவருடைய கட்சியினுடைய தலைவர் சேலத்திலே நடைபெற்ற ஒரு கூட்டத்தில் சொன்னார்கள். சேலம் சி.எஸ்.ஐ. மைதானத்தில்

நடைபெற்றதை நினைவுபடுத்தி, அவர் கழகத்திற்கு நினைவுபடுத்து வதை விட்டு அவருடைய கட்சித் தலைவருக்குச் சொல்லவேண்டும் என்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடி, ஆசிரியர் பிரச்னையில் இந்த அவை, இந்த மாமன்றம் தனி முடிவு எடுத்திருந்தது. அதே போல இந்த தமிழக அரசு நல்ல நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதற்காக நான் உள்ளபடியே பாராட்டுகிறேன். ஆசிரியர்களைப் பொறுத்த அளவிலே என்னுடைய கருத்து என்னவென்றால் தமிழக அரசிலே பணியாற்றுகிற மற்ற அலுவலர்களைப் போல ஆசிரியர்களும் மாநில அளவிலே மாறுதல் செய்யப்பட வேண்டுமென்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே கம்யூனிஸ்டு கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் பல ஆண்டுகாலமாக ஒரே இடத்தில் பலர் வேலை செய்கிறார்கள் என்று சொன்னார்கள். என்னைப் பொறுத்த அளவிலே ஒரு ஆசிரியர் ஏறத்தாழ 20, 25 ஆண்டு காலமாக ஒரே பள்ளியில் வேலை செய்கிற காரணத்தினால் அவர் பள்ளியில் வேலை செய்வது கிடையாது. அங்கே அவர் மாணவர் களுக்குச் சரியான முறையிலே கல்வி சொல்லிக் கொடுப்பது கிடையாது. இன்றைக்கு கல்வியின் நிலைமை மோசமானதற்குக் காரணம் ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு தங்களுடைய சம்பள உயர்விற்காக எப்படியெல்லாம் போராடுகிறார்களோ அந்த அளவிற்கு கல்வியின் தரத்தை உயர்த்துவதில் கவனம் செலுத்துவ தில்லை. காரணம், அவர் ஒரே இடத்தில் இருக்கிற காரணத்தினால் இந்த நிலைமை. என்னுடைய பகுதியில் இருக்கிற ஆசிரியர்களெல்லாம் வட்டிக்கடை வைத்திருக்கிறார்கள், லாரி வைத்துக்கொண்டிருக் கிறார்கள். இப்படி பல உப தொழில்களை வைத்துக்கொண்டிருக்கிற ஆசிரியர்கள் பணியாற்றுகிற காரணத்தினால்தான் கல்வித்தரம் உயருவதற்கு வழி இல்லாத நிலைமை இருக்கிறது. ஆகவே, இதில் கவனம் செலுத்தி மாநில அளவிலே மாறுதல் செய்கிற உத்தரவை மாமன்றம் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக என்னுடைய தொகுதியில் இருக்கிற சில குறைபாடுகளை இங்கே சொல்ல ஆசைப்படுகிறேன். என்னுடைய தொகுதி நாமக்கல் நகரமாகும். அது ஏறத்தாழ 8 ஊராட்சி ஒன்றியங்களைக் கொண்ட பகுதி. அந்தப் பகுதியில் தீ பிடித்துக் கொண்டால் அருகில் இருக்கிற சேலம் 32 மைலிலிருந்து அல்லது இந்தப் பக்கம்



திருச்சி 52 மைலிலிருந்து தான் தீயணைப்பு இயந்திரம் வரவேண்டி யுள்ளது. தீ அணைந்த பிறகுதான் வரக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே அங்கே தீ அணைப்பு இயந்திரம் கூடிய தீ அணைப்பு நிலையத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல காவலர் குடியிருப்பதற்காக காவலர் குடியிருப்பு மனையும் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு எந்த மாநிலத்தைக் காட்டிலும் தமிழகத்திலே இருக்கிற மருத்துவத் துறை நல்ல முறையில் இயங்கி வருகிறது என்பதை நாட்டு மக்கள் அறிவார்கள். என்னுடைய பகுதியில் 8 லட்சம் ரூபாய்க்கு ஒரு புதிய மருத்துவ மனை கட்டிக்கொடுத்த இந்த கலைஞர் ஆட்சியைப் பாராட்டுகிறேன்.

அதோடு இந்த மருத்துவ மனையில் ரத்தச் சேமிப்பு நிலையத்தையும் சித்த வைத்திய மருந்தகத்தையும், இதயத் துடிப்புப் பதிவுக் கருவியையும் அமைத்துத் தருமாறு வேண்டிக் கேட்டுக்கொண்டு, எனக்குப் பேசுகிற நல்ல வாய்ப்பு கொடுத்தமைக்காக நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, நிதி ஒதுக்க மசோதா மீது எங்கள் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூற விரும்பு கிறேன்.

ஏறத்தாழ 465 கோடி ரூபாய் அளவிலே பல்வேறு மானியங்களுக் காக நாம் இன்று இந்த மன்றத்தில் மானியங்களை ஒதுக்கியிருக் கிறோம். அதோடு இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவின் சார்பில் 525 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்வதற்கான மசோதாவை இங்கு தாக்கல் செய்திருக்கிறோம். தமிழ்நாடு அரசைப் பொறுத்தவரையில் இது ஒரு சிறந்த அம்சம் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்று சொன்னால் இது வரையிலே பல்வேறு அரசுகள் இந்த நாட்டை ஆண்ட போதிலும்கூட இந்த அளவிற்கு நிதியை எந்த அரசும் ஏற்று இந்த நாட்டை ஆட்சி புரியவில்லை என்று சொன்னால் இது மிகையாகாது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அந்த அளவிற்கு அதிகமான நிதியை இந்த அரசு மீது நம்பிக்கையோடு கொடுத்திருக்கிறோம் என்று சொன்னால் இந்த அரசு பொறுப்போடு இந்தப் பணத்தைச் செலவழித்திட வேண்டுமென்பதுதான் நம்முடைய விருப்பமாகும்.

ஆக, இந்த சந்தர்ப்பத்தில் ஒன்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். கழிந்த ஆண்டு எந்த அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறோமோ, அந்த அளவிற்கு கழிந்த ஆண்டு ஒரு ஊழல் புகார் எழுந்ததையும் இந்த சந்தர்ப்பத்தில் நினைவூட்ட விரும்புகிறேன். ஏனென்றால் பணம் அதிகமாகச் செலவு செய்கிறபோது ஊழல் உயர வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இதைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த சந்தர்ப்பத்தில் இன்னொன்றை கூறிக்கொள்ள விரும்புகிறேன் பொது மக்களும், பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் இந்த ஊழல் சம்பந்தமாக விசாரணை செய்வதற்கு ஒரு கமிஷன் நியமிக்க வேண்டுமென்று சொல்லக்கூடிய கோரிக்கை இந்த நாட்டில் எழுந்த வண்ணம் இருக்கிறது. ஒரு வேளை இந்த அரசுக்கு அதிகாரமா, அல்லது மத்திய அரசுக்கு அதிகாரமா என்ற பிரச்னை இருந்தாலும் கூட இந்த அரசுக்கு அதிகாரம் இருக்கிற அளவிற்கு இந்த ஊழல் விசாரணைக் கமிஷனை இந்த அரசு நியமிக்கவேண்டியது அரசின் பொறுப்பு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏனென்றால் ஏறத்தாழ 465 கோடி ரூபாயை இங்கே செலவு செய்ய இருக்கிற அரசு இந்த அரசு நிரபராதியான அரசு, களங்கமற்ற அரசு, ஊழலற்ற அரசு என்று நிரூபிக்கின்ற கடமை முதலமைச்சரவர்களுக்கு இருக்கிறது. ஒரு வேளை மாநில அரசுக்கு அதிகாரமா, மத்திய அரசுக்கு அதிகாரமா என்று இந்தப் பிரச்னையை புகுத்தி தப்பித்துக் கொள்வதற்கு வழிவகை தேடாமல் நிச்சயமாக ஊழல் விசாரணைக் கமிஷன் நியமிக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த அரசானது ஊழல் விசாரணை செய்வதற்காக ஒரு மசோதாவை இந்த மன்றத்தில் பிரேரணை செய்திருக்கிறது. இந்த மசோதாவிற்கு இங்கு தேவை இருக்கிறதா? ஒரு கமிஷன் நியமிப்பதற்கு ஏற்கனவே பல்வேறு சட்டங்கள் இருக்க இந்த மசோதா தேவையற்ற மசோதா என்று இந்திய அரசியல் கட்சிகளும் எதிர்க்கட்சிகளும் கூறிக்கொண்டேயிருக்கும்போது இந்த மசோதாவை வாபஸ் செய்யவேண்டியது இந்த அரசாங்கத்தின் முதற் கடமை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, ஊழலைப் பற்றி கமிஷன் போட வேண்டுமென்றார்கள். இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறோம். வாபஸ் வாங்குங்கள் என்று சொல்



கிறார்; இது ஒன்றுக்கு ஒன்று முரணானது இருக்கிறது. ஊழலைப் பற்றி குற்றம் சாட்டுகிறவர்கள், இப்படிப்பட்ட மசோதா நிறைவேறி உயர்நீதி மன்ற நீதிபதி முன்னால் எங்கள்மீது ஊழல் குற்றச்சாட்டுகளை தைரியம் இருக்கிறவர்கள் சொல்லி 7 ஆண்டு சிறைத் தண்டனை மு.ப.
வாங்கிக் கொடுக்கலாம். இல்லையானால் அவர்களுக்கு 3 ஆண்டு 11-00
தண்டனை கிடைக்கும். அந்தத் தைரியம் இல்லாமல் மசோதாவை வாபஸ் வாங்கு என்று சொல்லுவது கோழைத்தனமே தவிர வேறு அல்ல.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இது பற்றித் தங்கள் அனுமதியின் பேரில் ஒரு விளக்கம் கூற விரும்புகிறேன்.

இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரை நாங்கள் வன்மையாக எதிர்க்கிறோம். இதில் இருக்கும் பிரிவுகள் அத்தனையும் இதிலே யார் குற்றம் புரிந்தார்களோ அவர்களைப் பாதுகாக்க உகந்ததாகத்தான் இருக்கிறது. குற்றம் சாட்டியவர்களைத் தண்டிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த மசோதா வந்திருக்கிறது. பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் இந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இந்தச் சட்டம் தேவையில்லை, ஆகவே வாபஸ் பெற வேண்டுமென்று எல்லாக் கட்சிகளின் சார்பாகவும் வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் இதற்காகப் போடப்பட்ட குழுவின் கூட்டங்களிலும் கலந்து கொள்ளாமல் பகிஷ்கரித்திருக்கிறார்கள் என்பது எங்களுடைய உணர்வை ஜனநாயக முறையில் தெரியப்படுத்த வேண்டுமென்ற முறையில் தெரிவித்திருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : இந்த மசோதாவை நாங்களும் பகிஷ்கரித்தோம். இதைப்பற்றி ஏற்கனவே தெளிவாக விளக்கிக் கூறியிருக்கிறோம். இப்போது அரசாங்கத்தின்மீது பல குற்றச் சாட்டுகள் கூறப்பட்டிருக்கின்றன. இந்த நேரத்தில் இந்த மசோதாவைக் கொண்டு வருவதன் மூலம் பொதுமக்களுடைய மனத்தை திசை திருப்புவதற்குத்தான் இது பயன்படும் என்பதற்காகத்தான் எடுத்துச் சொன்னோமே தவிர, தைரியத்தைப் பற்றிப் பிரச்னை ஒன்றும் இதிலே இல்லை. சிறைக்கு இப்போதே வேண்டுமானாலும் அனுப்புங்கள், பத்தாண்டுகள் வேண்டுமானாலும் சிறைத்தண்டனை கொடுங்கள்.

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்</u> : அவர்களையே சொன்னதாக டாக்டர் ஹாண்டே அவர்கள் எடுத்துக் கொண்டு பதில் சொல்லுகிறார்கள். யாராக இருந்தாலும் சரி, எங்கள்மீது ஊழல் குற்றச் சாட்டுச் சொல்பவர்கள் தாராளமாகக் கொடுக்கலாம் என்றுதான் சொன்னேன். குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டுமென்பதுதான் நோக்கம்.

கமிஷன் போட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். கமிஷன் விசாரிக்கலாமே தவிர, தண்டனை கொடுக்க முடியாது. தண்டிக்கும் அதிகாரம் இல்லை. தண்டிக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. எங்கள் மீது குற்றச் சாட்டை எங்கோ கொண்டு போய்க் கொடுத்த வீரர்கள் இந்தக் குற்றச்சாட்டுகளை இனிமேல் கொண்டு வந்து இங்கே கொடுத்தால் நீதிபதி நியமிக்கப்பட்டு, விசாரித்து, நாங்கள் குற்றவாளிகள் என்றால் 7 ஆண்டு தண்டனை எங்களுக்கு வாங்கிக் கொடுக்கட்டும். அதற்கு ஏன் தைரியம் இல்லை என்றுதான் கேட்டேன்.

<u>திருமதி த. ந. அனந்தநாயகி</u> : அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவைப் பற்றிச் சொன்னார்கள். அது கறுப்பு மசோதா என்ற காரணத்தால் நாங்கள் எல்லோரும் சேர்ந்து பகிஷ்கரித்தோம். இந்த மசோதாவில் ஊழல் புகாரைக் கொடுப்பவர்கள் ஊழல்கள் நிரூபிக்கப் படாவிட்டால் மூன்று ஆண்டுகள் தண்டனை விதிக்கப்பட வேண்டுமென்று இருக்கிறது. இதற்கு ஐ.பி.சி.-யிலேயே பிரிவு இருக்கிறது. அப்படி இருக்கும்போது, இதிலே குறிப்பாக இப்படிப் போட்டு புகார் கொடுப்பவர்களைப் பயமுறுத்தித் தடுக்க இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் இந்த மசோதா வரவில்லை என்ற காரணத்தால் எதிர்க்கட்சிகள் பகிஷ்கரித்திருக்கின்றன.

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u> : ஊழல் புகாரை டில்லியில் கொடுத்தவர்கள் பிரச்சினை மட்டுமல்ல அது. இந்த நாட்டில் உள்ள 4½ கோடி மக்களின் பொதுவான பிரச்சினை அது. காவிரி நீர்ப் பிரச்சினைக்கு எதிர்க்கட்சியினரை அழைத்தார்கள். அரசு கட்சியினரும் கலந்து தீர்மானம் நிறைவேற்றினார்கள். அதுபோல் இதுவும் பொதுப் பிரச்சினை. ஆகவே, எதிர்க்கட்சிகளும், பொதுமக்களும் விரும்புகிற அளவுக்கு விசாரணைக் கமிஷனை நிறுவுவதற்குத் தடையாகக் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்த மசோதா தேவையற்றது என்று



எதிர்க்கட்சித் தலைவர்களும், மற்றவர்களும் கூறும்போது இதை வாபஸ் பெறுவதில் எந்த இடையூறும் இல்லை என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த அரசுக்கு 500 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. நல்ல முறையில் சமதர்ம சமுதாயம் ஏற்பட செயல்பட வேண்டும். அரசியல் கண்ணோட்டத்தோடு செலவு செய்யாமல் பொதுவான மக்கள் பிரச்சினை தீர இந்த நாட்டில் சமதர்மத்தை உருவாக்க, ஏற்றத்தாழ்வு மாற, தொழிலாளர்கள் பிரச்சினையை அகற்ற இந்தப் பணத்தைப் பயன்படுத்த வேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தொழிலாளர்கள் எல்லாம் எந்த அளவுக்கு இந்த மின்வெட்டால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துக்கூற விரும்புகிறேன். "லே ஆஃப்" செய்து கொண்டே இருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் தங்களுடைய வாழ்க்கையை நடத்த முடியாத நிலையில் இருக்கிறார்கள். பஞ்ச நிவாரணம் என்ற முறையில் அந்தத் தொழிலாளர்களுக்கெல்லாம் முழு ஊதியம் கொடுக்க ஆவன செய்ய வேண்டும்.

இன்று இருக்கும் நிலையில் உணவுப் பண்டங்களை உற்பத்தி செய்கின்றவர்களுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை. வாங்கிச் சாப்பிடுகின்றவர்களுக்கும் நியாயமான விலையில் பொருள்கள் கிடைக்கவில்லை. இடைத்தரகர்கள்தான் குறுக்கிட்டு அதிக லாபம் அடைகிறார்கள், கள்ள லாபம் அடிக்கிறவர்கள், லஞ்சப் பேர்வழிகள் தான் லாபம் அடைகிறார்கள் (மணி அடிக்கப்பட்டது)

இன்னும் ஐந்து நிமிஷம் கொடுங்கள். இந்த அரசாங்கத்தில் கொள்ளை அடிப்பவர்கள்தான் ஆதாயம் அடைகிறார்களே தவிர, ஏழை எளியவர்கள் வாழ வழி இல்லை.

கன்னியாகுமரி ஜில்லாவைப் பொறுத்தவரை உள்ள நிலைமையை இப்போதுதான் அமைச்சர்களிடம் கூறினேன். ஒரு படி அரிசி 3 ரூபாய், 3½ ரூபாய் வரை விற்கிறது. ரிடைல் விலை நிர்ணயிக்கப்பட வில்லை. ரிடெய்ல் விலை நிர்ணயிக்கப்பட வேண்டும். ஏழைகளுக்கு அரசு கார்டு மூலம் விநியோகிக்க வேண்டும். ஃபேர் பிரைஸ் ஷாப் என்று நடத்துவது பூராவும் கொள்ளை லாபம் அடிக்கக்கூடியவை

யாகத்தான் இருக்கின்றன. ஆகவே, ஃபுட் கார்ப்பரேஷன் மூலமாகவோ அல்லது கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவோ விநியோகிக்க வேண்டும்.

கல்விக்காக 100 கோடி ரூபாய் அளவுக்குக் கணிசமாக ஒதுக்கியிருக்கிறோம். இந்த ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக்கு குறைவான மாணவர்கள்தான் இருக்கிறார்கள். ஒரு பக்கத்தில் கள்ளுக்கடையைத் திறந்துவிட்டார்கள். ஒரு பக்கத்தில் பள்ளிக்கூடத்தைத் திறந்திருக்கிறார்கள். மாணவர்கள் பள்ளிக்கூடத்திற்குப் போகாமல் கள்ளுக்கடைக்குப் போகிறார்கள். மேலும் படித்தால் கூட வேலை இல்லை. அதனால் மாணவர்கள் பள்ளிக்கூடத்திற்குப் போகத் தயங்குகிறார்கள். படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

டிரான்ஸ்போர்ட் இலாகாவில் ஒரு புது ஜீ.ஓ. போட்டிருக்கிறார்கள். கண்டக்டர்களாக 25 வயது முதல் 30 வயது வரை இருக்க வேண்டுமென்று இருந்ததை மாற்றி 20 முதல் 27 வயது உள்ளவர்கள்தான் கண்டக்டர்களாக நியமிக்கப்பட வேண்டுமென்று ஜீ.ஓ. பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதனால் 27 வயது முதல் 30 வயது வரை உள்ளவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அப்படிப் பாதிக்கப்பட்டவர்களுக்காவது உடனடியாக வேலை கொடுக்க விதிவிலக்கை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்.ஜி.ஓ-க்களுக்குப் பத்து ரூபாய் பஞ்சப்படியாகக் கொடுத்திருக்கிறோம். அதைக் காசாகக் கொடுக்காமல் பிராவிடண்ட் ஃபண்டில் சேர்த்துக் கொள்வோம் என்று கூறியிருக்கிறார்கள். இப்போதுள்ள விலைவாசி உயர்வை விட, இப்போதுள்ள பஞ்சத்தை விட இனி வரப்போவதில்லை. ஆகவே, அந்தத் தொகையை காசாகக் கொடுக்க அரசாங்கம் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. எம். செல்வராஜ் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அவைமுன் வைக்கப்பட்டிருக்கும் நிதி ஒதுக்க மசோதாவின்மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

தமிழகத்தில் கடந்த ஆறு ஆண்டு காலமாக திராவிட முன்னேற்றக் கழக அரசு நல்ல முறையில் நிர்வாகம் செய்து நாட்டில் இருக்கும் ஏழை எளியவர்கள், பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இந்த அரசைப் பாராட்டுகின்ற நிலைமையைப் பார்க்கிறோம்.



இன்றையதினம் இங்கிருக்கின்ற சில எதிர்க்கட்சிக்காரர்கள் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக சில குற்றச்சாட்டுக்களை எல்லாம் தெரிவித்திருக்கிறார்கள். எனக்கு முன்பு பேசிய திரு. ஜேம்ஸ் அவர்கள் கூடக் குற்றச்சாட்டுகளைச் சொன்னார்கள். அதற்கு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தகுந்த பதிலை அளித்தார்கள். பொதுவாக, பொதுவாழ்வில் ஈடுபட்டிருக்கிறவர்கள் நல்ல முறையில் செயல்பட வேண்டும், நாட்டுமக்கள் மதிக்க வேண்டுமென்பதற்காக ஒரு சட்டத்தைக் கொண்டு வரும்போது அதைக் கறுப்புச் சட்டம் என்று சொல்லி பகிஷ்கரிக்கும் நிலைமையைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

இந்த நாட்டிலே பல சட்டங்கள் இருக்கின்றன. சில சட்டங்கள் தான் செயல்படுகின்றன. உள்ளபடியே ஊழல் இருக்குமானால் நிச்சயமாக இந்தச் சட்டத்தின்மூலம் தண்டிக்கப்படுவார்கள். ஊழல் நிரூபிக்கப்படவில்லை என்றால் யார் புகார் கொடுத்தார்களோ அவர்கள் மூன்றாண்டுக் காலம் தண்டனை பெறுவார்கள். இன்றைக்குப் பலபேர் வேண்டுமென்றே தனக்கிருக்கும் காழ்ப்புணர்ச்சி காரணமாக அரசியல்வாதிகள் மீது புகார்களைக் கூறி வருவதைப் பார்க்கிறோம். ஆகவே, புகாரைக் கொடுத்துவிட்டு தெரியாமல் கொடுத்து விட்டோம் என்று தப்பித்துக்கொள்ள முடியாது. அதன் காரணமாகத்தான் 3 வருட தண்டனை என்று வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அதை எதிர்ப்பது அவ்வளவு சரியல்ல என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, எனக்கு கொடுத்திருக்கிற நேரம் குறைவாக இருப்பதால் என் தொகுதிபற்றிய சில குறைகளை மட்டும் இங்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தென் ஆர்க்காடு மாவட்டத்தில் நூறாண்டுகளாக கண்டிராத விதத்தில் வெள்ளம் காரணமாக பெரும் அளவில் சேதம் ஏற்பட்டு அதனால் விவசாயிகள் பலரும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பல ஏரிகள் உடைக்கப்பட்டுள்ளன. பல பெரிய அணைகள் எல்லாம் உடைந்து ஆற்றின் திசையே மாறக்கூடிய அளவிற்கு பல சங்கடங்கள் உண்டாக்கப்பட்டு விட்டன. ஆனால் இவைகளில் நமது மாண்புமிகு முதல் அமைச்சர், டாக்டர் கலைஞர் அவர்கள் உடனடியாகத் தலையிட்டு பாதிக்கப்பட்ட இடங்களை எல்லாம் வந்து பார்த்து, அவர்களது வீட்டில் அவர்களது மகனின் திருமணம் இருந்த போதிலும் கூட மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களை அங்கு அனுப்பிவைத்து எங்கெங்கு எவ்வளவு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று பார்த்துவரச் செய்து போதுமான நட

வடிக்கைகளை அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களைப் பாராட்ட நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஏறத்தாழ ஒன்றரைக் கோடி ரூபாய் அளவிற்கு, மணலால் மேடிடப்பட்ட இடங்களில் இருந்து மணலை அகற்ற, சர்க்கார் செலவில் அதை அப்புறப்படுத்தும் நிலையில் சீர் செய்து வருகிறார்கள். எங்கள் மாவட்டத்தில் 60 சதவிகிதம் மணல் மேடிட்டிருக்கிறது. அந்த மணலை அப்புறப்படுத்தி அந்த நிலங்களை மீண்டும் விவசாயத் திற்குப் பயன்படுத்தக்கூடிய அளவிற்கு மாற்றித் தந்திருக்கிறார்கள். அதற்காக எங்கள் மாவட்டத்தின் சார்பில் இந்த அரசுக்கும், எங்கள் பாராட்டுதல்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறோம்.

இதற்காக ஒரு சில யோசனைகளையும் இந்த சந்தர்ப்பத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். சில மாவட்டங்களில் சிலர் கன்ஸர் வன்ஸி டிவிஷன் என்று வைத்திருக்கிறார்கள். ஆனால் தென் ஆற்காடு மாவட்டத்தில் அப்படி ஒரு இலாகா கிடையாது. ஓடுகிற ஆறுகள் திசை மாறுகிறது அல்லது திசை மாறப்போகிறது என்று முன் கூட்டியே அறிந்து அப்படி மாறிவிடாமல் தடுத்து நிறுத்துவதற்கான ஏற்பாடு செய்யப்படுகிறது. வெள்ளப்பெருக்கு ஏற்பட்டாலும் தடுத்து நிறுத்தப்படுகிறது. ஏற்கனவே பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களிடம் இதுபற்றி விண்ணப்பம் கொடுத்திருக் கிறோம். எனவே தென் ஆர்க்காடு மாவட்டத்தில் ஒரு ரிவர்கன்ஸர் வன்ஸி டிவிஷனை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்கள் விருத்தாசலம் தொகுதியில் வெல்லிங்டன் ரிசர்வாயர் என்ற ஒரு பெரிய ஏரி இருக்கிறது. அது கட்டப்பட்டு அறுபது ஆண்டுகளாகின்றன. அதில் ஆறு அல்லது ஏழு அடி அளவிற்கு தூர் ஏற்பட்டுவிட்டது. அந்த மண்ணை வாருவதென்றால் ஏராளமான பணம் செலவாகும். எனவே அதை அகலப்படுத்தி வாய்க்காலைச் சீர் செய்யும் ஒரு திட்டம் பற்றி பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் விருத்தாசலத்திற்கு வருகை தந்து அந்த மாநாட்டிலேயே அறிவித்தார்கள். அதற்காக அவர்களுக்கு என் நன்றியைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு நிதி மசோதா தாக்கல் செய்யும்போது, அவர்களின் மானியக்கோரிக்கையின் போது ஏறத்தாழ 13 லட்சம் ரூபாய்



அளவிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதை அதிகப்படுத்த வேண்டும். இருபத்தைந்து லட்சம் ரூபாய் அளவிற்கு என்று கூட சொல்லிவிட்டு வந்திருக்கிறார்கள். எனவே கூடுதல் தொகை ஒதுக்கி அத்திட்டத்தைச் செயல்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விருத்தாசலம் வட்டத்தில் சர்க்கரை ஆலை ஒன்றிருக்கிறது பெண்ணாடத்தில்.

அருணா சர்க்கரை ஆலை ஒன்றரை கோடி ரூபாய் அளவிற்கு செஸ் ஆகக் கொடுத்திருக்கிறார்கள். ஷுகர் கேன் ஸெஸ் பண்டில் உள்ள பணத்தை வேறு தலைப்பிற்கு மாற்றாமல், சாலைகளுக்கும், வடிகால் வசதிகளுக்கும், வாய்க்கால்களுக்கும் செலவு செய்யப்போகிறோம் என்றெல்லாம் சொன்னார்கள் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள்.

ஏறத்தாழ இருபது மைல் நீளமுள்ள வாய்க்காலை—தஞ்சையில் எப்படி வாய்க்கால்களை சீர்செய்ய திட்டம் போட்டிருக்கிறார்களோ, அதேபோல்—சீர்செய்தால், ஒன்றரைக் கோடி ரூபாய் செலவில் செய்தால், 24,000 ஏக்கர்களுக்கு இரண்டாவது சாகுபடிக்கு தண்ணீர் கொடுப்பதற்கு அங்குள்ள விவசாயிகளுக்கு உறுதி அளிக்க முடியும். எனவே ஐந்து வருடத் திட்டம் என்று போட்டாவது அதை நிறை வேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஷுகர் கேன் ஸெஸ் பண்ட் இருக்கிறது. ஆண்டுக்கு இருபது இலட்சம் ரூபாய் கொடுக்கிறார்கள். ஆலையைச் சார்ந்தவர்கள் பொதுப்பணித் துறைக்கும், அரசுக்கும் எழுதியிருக்கிறார்கள், அதையும் நிறைவேற்றித் தரவேண்டும்.

கருவேப்பலங்குறிச்சியில் இருந்து கூத்தாடும் பிள்ளையார்கோவில் வரை, தடுப்புச் சுவர் கட்டித்தர வேண்டும். சௌந்தர சோழபுரம்—திருச்சி ஜில்லாவை இணைக்கும் வகையில் பாலம் ஒன்று கட்டித் தர வேண்டும். ஒன்றியங்களில் இருந்து தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி யிருக்கிறார்கள். அதேபோல் கருவேப்பலங்குறிச்சி—திருச்சி ஜில்லாவை இணைக்கும் பாலத்தையும் கட்டித் தரவேண்டுமென்று கேட்டு எனக்கு பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி : தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கல் மசோதாவின்மீது நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. சௌடி. எஸ். சுந்தர பாரதி] [1973 மார்ச் 29

முதன்முதலாக, பாசனம் பற்றி, ராமநாதபுரம் ஜில்லாவில் நாரணக்காவேரி கால்வாய்ச் சீரமைக்கும் திட்டத்தை இந்த ஆண்டு எடுத்துக்கொண்டிருப்பதாக இருக்கிறது. அருப்புக்கோட்டை தாலூகாவில் கேவாய்க்குளம் என்ற ஒரு கண்மாய் இருக்கிறது. ஜமீன் காலத்தில் ஒரு கண்மாயாக இருந்து வந்தது. இரண்டரை மைல் நீளமுள்ளது. அந்தக் கண்மாயும் வேறு இரண்டு மூன்று கண்மாய்களும் இந்தத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்படவில்லை ஆகவே, இந்தக் கண்மாய்களுக்கு தண்ணீர் சப்ளை செய்யும் விதத்தில் நாரணக்காவேரி கால்வாயிலிருந்து சப்ளை சானல்ஸ் அமைத்துக் கொடுக்கவேண்டும். அந்த முறையில் திட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மீனளத்துறை. மீனவர்களுக்கு கூட்டுறவு சொஸைடீஸ் இருக்கின்றன. அவை பெரும்பாலும் மீனவர்களுக்கு உதவக் கூடிய நிலையில் இல்லை என்று சொல்கிறார்கள். பெரிய காண்ட்ராக்டர்ஸ் தங்கள் குடும்பங்களைச் சார்ந்தவர்களை அந்த சொஸைட்டீஸில் மெம்பர்களாக சேர்த்துக்கொண்டு ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இந்தத் துணை மானியக் கோரிக்கையில் கூட அவைபற்றி ஆய்வு செய்வதற்காக ரூ. 1,500 ஒதுக்கப்பட்டிருக்கிறது.

எனவே, கூட்டுறவுத் துறையில் உள்ள மீனவர்களுக்கான சொஸைட்டிகள் மீனவர்களின் நலன்களுக்காகப் பயன்படுகின்றனவா என்பதையும் ஆய்வு செய்யவேண்டும். கூட்டுறவுத் துறையின் மூலம் ஏற்படுகிற அந்தப் பலன்—அவர்களின் நலனுக்காக ஏற்படுத்தப் பட்டவை—மீனவர்களுக்குத்தான் போய்ச் சேரவேண்டுமென்ற நிலையை ஏற்படுத்த வேண்டும். நீதித் துறையைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு தாலூகாவிற்கும் ஒரு கோர்ட் இருக்கவேண்டுமென்ற கோரிக்கை பல நாட்களாக இருந்து வருகிறது. ஆந்திராவிலே கூட அந்த முறையில்தான் நடத்தி வருகிறார்கள். சிவில் விவகாரங்களுக்கு வெகுதூரம் செல்லாமல் அந்தந்தத் தாலூகாவில் உள்ள கோர்ட்டு களிலேயே பரிகாரம் தேடிக்கொள்ளலாம். எனவே அரசு அது பற்றியும் பரிசீலிக்க வேண்டும்.

அடுத்து, மின்சாரத் துறை பற்றி எனக்கு வந்துள்ள புகார் பற்றி சொல்கிறேன். விருதுநகர் உட்கோட்டத்தில் ஐந்து மணி நேரத் திற்கு விவசாயிகளுக்கு மின்சாரம் கிடைக்கிறது. ஆனால் அருப்புக் கோட்டை கோட்டத்தைப் பொறுத்தவரையில் மூன்று மணி நேரத்திற்குத்தான் கிடைக்கிறது. அதனால் பல கோளாறுகள் ஏற்படு



1973 மார்ச் 29] [திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி]

கின்றன. ஆகவே விருதுநகர் உட்கோட்டமாக இருந்தாலும் சரி அல்லது அருப்புக்கோட்டை கோட்டமாக இருந்தாலும் சரி எல்லா யிடங்களிலும் மின்சாரம் ஐந்து மணி நேரத்திற்கு விவசாயத்திற்காக கொடுக்கும்படிச் செய்யவேண்டும்.

ட்ராக்டர்பற்றி ஒரு வேண்டுகோள். விவசாயத்திற்காக உப யோகிக்கும் ட்ராக்டர்கள், ட்ரேலர்கள். இவற்றிற்கு எந்தவிதமான வரியும் வாங்கக்கூடாது. ட்ரேலர்களுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை, பெர்மிஷனுக்காக, ரூ. 150 கட்டவேண்டுமென்ற ஒரு முறை இருந்து வருகிறது. பிட்னஸ் சர்டிபிகேட் வாங்கவேண்டுமென்றால் ட்ராக்டர்களுக்கு ஆண்டுக்கு ஒரு முறை ஆர். டி. ஒ.-யிடம் சென்று ரூ. 150 கட்டி பெர்மிஷன் வாங்கவேண்டுமென்ற நிலை இருக்கிறது. ஆனால் இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ரூ. 300 வசூலிக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஏன் இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் இப்படி அதிகப்படியாக வசூல் செய்கிறார்கள். இரண்டு மடங்கு வசூலிக்கிறார்கள் என்பதை அரசு பரிசீலிக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப் பரிசீலித்து, அதில் தவறு இருந்தால் அது ஏன் இருக்கிறது என்பதை கவனித்து, அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவ சாயம் சம்பந்தப்பட்ட முறைகளிலே இருக்கக்கூடிய ட்ராக்டர்கள். ட்ரேயிலர்கள் யாரிடம் இருந்தாலும் அவர்களிடமிருந்து எந்த விதமான வரியும் வாங்கக்கூடாது. பிட்னஸ் சர்டிபிகேட் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை வாங்குவதற்காக ரூ. 150 வசூல் செய்யப் படுகிறது. அதைக் கூட வசூலிக்கக் கூடாது என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

தேர்தல் காலங்களில் விவசாயிகளுக்கு மிகுந்த கஷ்டங்கள் ஏற்படுகின்றன. மாண்புமிகு உதவி சபாநாயகர் அவர்களுக்குக் கூடத் தெரியும். அங்கே மிளகாய் செடி மற்ற மற்ற பயிர்களுக்கு தீ வைத்து விடுகிறார்கள். மாடுகள் எரிக்கப்படுகின்றன. இப்படி நிலைமை ஏற்படுகின்ற நேரத்தில்—இந்த மாதிரி கஷ்டங்கள் அவர் களுக்கு தேர்தல் காலங்களில் ஏற்படுவதால்—அதைப் போக்கு வதற்கு "கிராப் இன்ஷூரன்ஸ்" வேண்டுமென்று பல ஆண்டுகால மாகச் சொல்லி வருகிறோம். உடனடியாக அந்த ஸ்கீமைக் கொண்டு வர முடியவில்லை என்றாலும், இப்படி எதிர்பாராத இழப்பு தேர்தல் காலங்களில், அல்லது வேறு காரணங்களினால், கொடுமைப்படுத்தப் பட்டால், அந்த விவசாயிகளுக்குப் பாதுகாப்பு கொடுப்பதற்கு வேண்டிய ஒரு திட்டத்தை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி] [1973 மார்ச் 29

முதலமைச்சர் அவர்கள் இங்கே இருப்பதால் ஒரே ஒரு கருத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன். அதாவது, இந்த மேற்கு மலைத் தொடர் கழகம்—இந்த நீர் வளத்தையும், மற்ற இயற்கை வளத்தையும் நல்ல முறையில் பயன்படுத்துவதற்காக இப்படி ஒரு கழகம் அமைக்கலாம் என்றும், அப்படி ஏற்படுத்தினால் அது நல்லது என்றும் ஒரு கருத்தை முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதனுடைய சாத்தியக்கூறுகளைக் குறித்து அண்டை மாநிலங்களாக உள்ள மைசூர், ஆந்திரம், கேரளம் போன்ற மாநிலங்களோடு ஏதேனும் தொடர்பு கொள்ளப்பட்டிருக்கிறதா, அப்படியானால் அவர்களுடைய கருத்து என்ன என்பதைக் குறித்து ஒன்றும் சொல்லப்படவில்லை. இப்படி ஒரு அமைப்பை ஏற்படுத்தினால் நல்லது என்று மட்டும்தான் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி கலந்து கொண்டு இப்படிச் சொல்லியிருந்தால் நலமாக இருந்திருக்கும். இப்போதே நமக்கும் மைசூருக்கும் நிலைமை சரியில்லை. அதில் பல பிரச்னைகள் இருக்கின்றன. அப்படி ஒரு குறை இருக்கிறபோது இப்படி ஒரு அமைப்பு ஏற்படுத்துவது நல்லது என்று ஏற்கனவே அவர்களோடு கலந்து கொண்டு சொல்லியிருக்கலாம். இப்படி நம்மைக் கேட்காமல் ஒரு கருத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்களே என்று அவர்கள் சிந்திக்கக்கூடும். அந்த மாதிரி நிலைமை இல்லாமல் இருப்பதற்கு அவர்களைக் கலந்து கொண்டு ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டும். இதுவரையில் கலந்து கொள்ளாமல் இருந்தாலும், இனிமேலாவது கலந்து கொண்டு அதன் மீது நடவடிக்கை எடுப்பது நலமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாகவே நாம் சொல்லி வருகிறோம். நதித் தண்ணீரை யாரும் சொந்தம் என்று சொல்லக்கூடாது. ஒரு மாநிலத்திற்குத்தான் அது சொந்தம் என்று உரிமை இருக்கக்கூடாது. அதை ஒரு "நேஷனல் வெல்த்தாக" கருத வேண்டும். இப்படி ஒரு கொள்கையை அனுஷ்டிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படி ஒரு கோரிக்கையை எழுப்பினால் ஒரு மாநிலத்திற்கும் மற்றொரு மாநிலத்திற்கும் இந்த மாதிரியான பிரச்னைகள் வராது. எல்லா மாநிலங்களும் நல்ல முறையில் அவற்றைப் பயன்படுத்திக்கொள்ள வழியேற்படும். ஆகவே, இப்படிப்பட்ட ஒரு கொள்கையை முன் வைத்து, அந்தக் கொள்கையின் அடிப்படையில் திட்டங்களைப் பரிசீலித்தால் நலமாக இருக்கும். இதைப்பற்றி முதலமைச்சர் அவர்கள் தங்களுடைய கருத்தைச் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. ஏ. சுவாமிதாஸ்—தலைமை.)



1973 மார்ச் 29] [திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி]

கைத்தறியைப் பற்றி ஒரு வேண்டுகோள். முடிந்த அளவுக்கு கைத்தறித் தொழிலாளர்களின் கஷ்டத்தைப் போக்குவதற்காக பாடுபடுவோம் என்று சொன்னார்கள். எல்லாவற்றையும் தேசியமயமாக்கவேண்டுமென்ற கொள்கை வைத்திருக்கிறபோது, எல்லா மில்களையும் ஏன் தேசியமயமாக்கக் கூடாது என்று கேட்க ஆசைப்படுகிறேன். எல்லா மில்களையும் அரசு சொந்தமாக்கிக்கொண்டு விட்டால், எல்லா நூல்களும் நிச்சயமாக அரசுக்குக் கிடைக்கும். அதனால் அதை எல்லாக் கைத்தறித் தொழிலாளர்களுக்கும் நல்ல முறையில் வினியோகித்து அவர்களின் கஷ்டத்தைப் போக்க முடியும் என்று தெரிவித்துக்கொண்டு, எனக்கு இந்த வாய்ப்பைக் கொடுத்ததற்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

* திரு. வி. பழனிவேல்: பேரவைத் தலைவரவர்களே, நிதி ஒதுக்கீடு மசோதாமீது ஒரு சில வார்த்தைகளைப் பேச விரும்புகிறேன். மின்சாரம். முன் காலத்தில் பக்தர்கள், "அவனன்றி ஓர் அணுவும் அசையாது" என்று சொல்வார்கள். அது மாதிரி இன்று மின்சாரம் இன்றி ஒரு அணுவும் அசையாது என்ற நிலைமையேற்பட்டு இருக்கிறது. நாட்டிலுள்ள அனைவருக்கும் மின்சாரம் மிக மிக முக்கியமானது. தேவையானது என்பதை அனைவரும் நன்றாக அறிந்திருக்கிறார்கள். இந்த மின்சாரத்தை நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது நமது தமிழக அரசு. அதை தேவையான அளவு உற்பத்தி செய்து பயன்படுத்துவதற்கு மத்திய அரசு நமக்குப் போதுமான அளவு உதவி கொடுப்பதற்கு வகை இல்லாமல் சில நெருக்கடிகளை உருவாக்கிக்கொண்டிருக்கிறது. அந்த நிலைமை மாற வேண்டும். அந்த நிலைமை மாறினால் தான் நம்முடைய நாட்டிலே எல்லா தொழில்களும்—விவசாயம் உள்பட, எல்லா வகையான தொழில்களும்—மக்களின் இன்றியமையாத அன்றாட வாழ்க்கைத் தேவைகளை ஒட்டியிருக்கும் காரியங்களும் நல்ல முறையில் விரிவுபடுத்த முடியும். ஆகவே, மத்திய அரசாங்கத்தின் இந்தக் கொள்கையை நாம் எதிர்த்தாக வேண்டும். எதிர்த்து நம் நாட்டில் மின்சாரம் நிறைய உற்பத்தி செய்வதற்கு திட்டங்களை வகுத்து செயல்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய தமிழ் நாட்டில் விவசாயிகளுக்குப் பயன்படும் வகையில் 7 லட்சம் பம்ப்செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுத்திருக்கிறார்கள். என்னுடைய மாவட்டத்தில் ஆத்தூர் பகுதியில் மட்டும் 5,500 பம்ப்செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுத்திருக்கிறார்கள்.

இப்போது 4–5 மணி நேரம் தான் மின்சாரம் கொடுப்பதால் அந்த மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். வசதி படைத்தவர்கள் ஆயில் இன்ஜின் வைத்து ஓட்டுகிறார்கள். அந்த ஆயில் இன்ஜின் ஓட்டு வதற்குக்கூட எண்ணைத் தட்டுப்பாடு இருந்தது. டீசல் போன்ற எண்ணை நல்ல முறையில் கிடைப்பதற்கு நடவடிக்கைகளை மேற் கொண்டு, அதைத் தட்டுப்பாடு இல்லாமல் செய்து கொடுத்ததற்கு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்க வழி செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாசனம். பாசனத்தைப் பற்றி ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல வேண்டியிருக்கிறது. பாசனத்தால் நல்ல பலன் ஏற்படக்கூடிய சில பகுதிகள் இருந்தும் பாசனம் இல்லாத பல பகுதிகள் கிணறு நீரை நம்பியிருக்கும் நிலை இருக்கிறது. அந்த இடங்களில் எல்லாம் மழை காலங்களில் தண்ணீர் வீணாகிப் போய்விடுகிறது. ஆகவே, ஆங்காங்கு ஏரிகளும் குட்டைகளும் கட்டி நீரைத் தேக்கி நல்ல முறையில் பயன் படுத்தினால் கிணறுகளுக்கு தண்ணீர் ஊறுவதற்கு நல்ல வாய்ப்பாக இருக்கும். இப்போது எல்லாம் ஏரிகளில் தண்ணீர் நிரம்பி அந்த நீர் பாசனத்திற்கு விடவேண்டும் என்று இல்லை. ஏரிகளில் நல்ல வகையில் தண்ணீர் நிரம்பி இருந்தால் அதன் காரணமாக கிணறு களுக்கு தண்ணீர் ஊற்று வருகிறது.

அப்படிப்பட்ட நிலையில் ஏரி மதகுகளை அடைத்து விடுவது கூடச் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று கருதுகிறேன். குறிப்பாக ராசிபுரம் பகுதியில் உள்ள விவசாயிகள் அங்கே உள்ள ஏரி மதகுகளை அடைத்து விடுங்கள் என்று கேட்டு, பரீட்சார்த்தமாக அந்த ஏரி மதகுகளை அடைத்துவிட்டதால் அந்தப் பகுதியில் ஏராளமாக தண்ணீர் கிணற்றில் ஊறுவதற்கு வழி இருந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு முறையை வறட்சிப் பிரதேசங் களில் கையாண்டு, அந்தப் பகுதியில் உள்ள ஏரிகளிலிருந்து பாசனத் திற்கு நீர் எடுத்துக்கொள்ளாமல், கிணற்றில் நீர் ஊறுவதற்கு வழி வகுக்கும் முறையில் வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதனால் விவசாயம் செழிக்கவும், சிறக்கவும் வாய்ப்பாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இணைப்புப் பாதைகள்.—விவசாயிகளுக்கு மிகவும் முக்கியமானது இந்த இணைப்புப் பாதைகள் திட்டம்தான். அப்படிப்பட்ட திட்டத்தை தமிழக அரசு நல்ல முறையில் எடுத்துச் செயல்படுத்தி



வருகிறது. இதை இன்னும் விரிவுபடுத்தி, இன்னும் பல இடங் களுக்கும் செய்தால் நல்லது. இதனால் விவசாயிகளுக்கு போக்கு வரத்து கஷ்டம் இல்லாமல் இருக்கும். அந்த நிலையில் இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கண்ணொளி வழங்கு திட்டத்தை கலைஞர் அவர்கள் அறிமுகப் படுத்தி இருக்கிறார்கள். இந்தத் திட்டம் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை. ஏன் உலகத்திலே கூட எந்த நாட்டிலும் எந்த முதலமைச்சரும் இப்படி ஒரு திட்டத்தைக் கொண்டுவரவில்லை. அந்தத் திட்டத்தின் பயனை பல ஆயிரக்கணக்கான மக்கள் பயன் அடைந்திருக்கிறார்கள். அதைப்போலவே கலைஞர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், அடுத்த ஆண்டிலே தங்களுடைய பிறந்த நாள் பரிசாக, ஏழை எளிய மக்கள், உடல் ஊனம் உற்றவர்களுக்கு நல்ல முறையில் வாழ்வளிக்கிற ஒரு திட்டம் வகுத்துத் தரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பகுதியில் தொழில் வளம் மிகவும் அதிகமாக இல்லை. அங்கே சர்க்கரை ஆலை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று பல நாட்க ளாகக் கேட்டுக்கொண்டு வருகிறோம். ஆகவே, அந்தத் திட்டத்தை அங்கே ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது கூட்டுறவுத் துறையிலாவது, தனியார் துறையிலாவது ஏற் படுத்தித் தந்தால் நல்லது, ஆகவே அப்படி ஒரு சர்க்கரை ஆலையை அந்தப் பகுதியில் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு வழங்கும் திட்டம் ஒரு அருமை யான திட்டம். அந்தத் திட்டத்தை கலைஞர் அவர்கள் ஆரம்பித்து வைத்திருக்கிறார். ஆண்டு ஒன்றுக்கு பத்தாயிரம் வீடுகள் கட்டிக் மு.ப.
கொடுக்கத் திட்டம் தீட்டியிருக்கிறார்கள். அது போதாது. ஆண்டு 11-30
ஒன்றுக்கு ஐம்பதாயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு முன் வர வேண்டும். அப்படிச் செய்வதற்கு பல கோடி ரூபாய் செலவானாலும் அதைத் தயங்காது அரசு செலவு செய்ய முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவதியுறுகிற அவர்களுக்கு இந்தத் திட்டத்தை விரைவு படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, தலைவர் அவர்களும் அடிக்கடி மணி அடித்துக் கொண்டிருக்கிறார்கள், ஆகவே நான் தொடர்ந்து பேசுவது முறையல்ல என்று கருதி, இத்துடன் நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

[திரு. வி. பழனிவேல்] [1973 மார்ச் 29

* திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இன்று என்னுடைய பேச்சை இதயத்திலிருந்து நன்றியை வெளி காட்டுகின்ற முறையில் துவக்குகிறேன். அந்த நன்றியானது இந்த நாட்டிலிருக்கின்ற நாற்பது லட்சம் முஸ்லீம் சமுதாயத்தின் நன்றி யாகவும், முஸ்லீம் மக்களுடைய தனிப்பெரும் ஸ்தாபனமாக இருக் கின்ற முஸ்லீம் லீக்கினுடைய நன்றியாகவும், இந்த சட்ட மன்றத்திலி ருக்கின்ற முஸ்லீம் லீக் உறுப்பினர்களுடைய நன்றியாகவும் இந்தத் தமிழக அமைச்சரவைக்கும், மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்க ளுக்கும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. எங்களுடைய இந்தக் கோரிக்கையானது, அதாவது உருது பேசுகின்ற ஒரு சில முஸ்லீம்கள் பிற்பட்ட மக்கள் என்று அறிவிக்கப்பட வேண்டுமென்று 30 ஆண்டு களாக இருந்து வந்தது. மலடிக்கு பிள்ளை ஆசை வெகு நாட்களாக இருந்து வந்தது. அந்த மலடிக்கு ஒரு பிள்ளை பிறந்தால் எவ்வளவு இன்பம் ஏற்படுமோ, வறியவனுக்குச் செல்வம் கிடைத்தால் எவ்வளவு மகிழ்ச்சி ஏற்படுமோ அந்த அளவுக்கு மகிழ்ச்சியில் இன்றைய தினம் தமிழ்நாட்டு முஸ்லீம் சமுதாய மக்கள் இருக்கின்றார்கள் என்பதை முதல்வர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே அவ் வப்போது கலைஞர் அவர்களிடம் எடுத்துக்காட்டி கேட்டு வந்தோம். அப்பொழுது நான் சொன்னது

காத்திருந்தோம், காத்திருந்தோம்,
காலமெல்லாம் காத்திருந்தோம்,
பார்த்திருந்த நல்லரசும்
பாராள வந்த பின்னும்
காத்திருக்க வைக்காமல்
கனிய வைப்பீர் கலைஞர் ஏரே.

இந்தக் கவிதைக்கு அவர் அளித்த பதில்:—

கவிதை கனிந்திருக்கிறது,
கஜானா கனியவில்லை.

இன்றையதினம் கலைஞர் அவர்களுடைய உள்ளம் கனிந்துவிட்டது. கஜானாவும் கனிந்துவிட்டது. அவருக்கு எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

கனிந்தது கலைஞர் உள்ளம்,
களி கொண்டோம் நாங்கள் இன்று,
பணிந்த எம் இதய அன்பை,



1973 மார்ச் 29] [திரு. கே. ஏ. வகாப்]

பாசத்தால் குழைத்து இன்று,
துணிந்த நம் கலைஞருக்கு
தொடுத்து யாம் மகிழ்கின்றோம்,
குனிந்த ஒரு பகுதி மக்கள்,
குதித்தெழச் செய்த டாக்டர்,
கலைஞரே வாழ்க
தமிழக அரசே வாழ்க

என்று நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

இங்கே பேசுகின்றபோது பலவிதமானப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசினார்கள். இங்கே ஊழல் விசாரணைக் குழு அமைக்கப்படுகிறது, அது தேவையற்றது, அதை செயல்பட விடக்கூடாது என்று மதிப்பிற் குரிய அம்மையார் அவர்கள் பேசினார்கள். இது தேவையல்ல, கருப்பு மசோதா என்றும் குறிப்பிட்டார்கள். ஆனால் இப்படிப்பட்ட ஊழல்களை யார் வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும், யார் பேரிலும் சொல்லும் ஒரு நிலைமை உருவாகி வருகின்ற சந்தர்ப்பத்தில் உண்மையிலேயே குற்றம் சொல்லக்கூடிய திராணி உள்ளவர்களுக்கும் சொல்லக்கூடிய தகுதி உள்ளவர்களுக்கும், உண்மையிலேயே குற்றத்தை நிரூபிக்கின்ற திராணி உள்ளவர்களுக்கும், இப்படிப்பட்ட கமிட்டி உதவிகரமாக இருக்கும், அவர்கள் இதை வரவேற்க வேண்டியது மிக அவசியமாகும். வரவேற்காததோடு அந்தக் கமிட்டியே செயல்படக் கூடாது என்று விரும்புகிறார்கள். மக்க ளிடம் சென்று எதையோ பேசுகின்றவர்கள், மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமையைத் தவற விட்டுவிடுகிறார்கள். இங்கே இந்த அவையில்கூட இல்லாத நிலைமையில் போய்க்கொண்டு இருக் கிறார்கள். அவர்கள் இன்று நாட்டில் மக்களை திசை திருப்பிக் கொண்டிருக்கிறார்கள், என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அது மட்டுமல்ல, ஊழல் புகார்களைக் கொடுத்தார் கள், கொடுக்கப்பட்ட ஊழல் புகார்களுக்கு பதில் கொடுக்கப் பட்டது, பதிலுக்குப் பதில் கொடுப்பது என்று செய்து கொண்டிருக் கிறார்கள். சட்ட மன்றத்தில் வந்து முறையாகப் பதில் சொல்லாமல் சந்து முனையில் சிந்து பாடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத்தான் இன்றையதினம் நாட்டு மக்கள் அவர்களைப் பற்றிப் புரிந்து கொண் டிருக்கிறார்கள் என்பதைக் கூறிக்கொள்கிறேன். அவர்கள் சொல்லி யுள்ள ஊழல் புகார்கள் இன்றையதினம் சமுதாயத்தில் மக்கள் மனம் புண்படுகின்ற நிகழ்ச்சிகளாக இருக்கின்றன. குறிப்பிட்டுச் சொல்லப் போனால், கீழக்கரையிலுள்ள ஒரு உயர்நிலைப் பள்ளியைப் பற்றிச் சொல்லி இருக்கிறார்கள். சமுதாயத்திற்குப் பயன்படும்

[திரு. கே. எ. வகாப்] [1973 மார்ச் 29

நோக்கத்தோடு பரந்த மனதுடன் பணியாற்றுகின்ற அப்படிப்பட்ட
பெரியோர்களை இப்படி மனம் புண்படச் செய்கின்றார்கள். மக்க
ளுக்கு நன்மை செய்யவேண்டுமென்று செய்யப்பட்ட பணிக்கு
களங்கம் கற்பிக்கும் முறையில் அந்தக் குற்றச்சாட்டு சொல்லப்பட்
டிருக்கிறது. இதை அண்ணு திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள்
சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
குறிப்பாக அந்தக் கட்சியின் தலைவர்கள் சிந்திக்கவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன். ஆகவே இப்படி ஒரு மசோதா வருகிற
தென்றால் அதை வரவேற்கவேண்டியவர்கள் அவர்களாகத்தான்
இருக்கவேண்டும். ஆனால் குற்றம் சொல்வதற்குத்தான் உரிமை
உண்டு, அதற்கு பொறுப்பு ஏற்றுக்கொள்ளத் தயாராகவில்லை; அது
மட்டுமல்லாமல் இப்படிப்பட்ட பொது ஸ்தாபனங்களில் ஈடுபட்டிருக்
கின்றவர்கள், எம்.எல்.ஏ.-க்களாக இருந்தாலும், நகர மன்ற உறுப்பி
னர்களாகயிருந்தாலும் ஒரு நியதி இருக்க வேண்டுமென்ற முறையில்
தான் அந்தச் சட்டம் உருவாக்கப்படுகிறது. அவர்களுக்கு உண்மை
யிலேயே இந்த சமுதாய மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று
எண்ணம் இருந்தால் ஊழல் உண்மையில் இருக்கிறது என்று நம்பு
வார்களேயானால், அந்தக் கமிட்டி செயல்பட உதவி செய்யவேண்டும்

சட்ட மன்றத்தில் அது சம்பந்தமாக மசோதா வருகின்ற
நேரத்தில் எடுத்துச்சொல்லி உதவிகரமாக இருக்கவேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இன்றையதினம் எந்தப் பிரச்சினையாக இருந்
தாலும் கட்சி கண்ணோட்டத்தோடு பார்க்கும் முறை சமுதாயத்தில்
வளர்க்கப்பட்டு வருகிறது. இன்றையதினம் சமுதாயத்தில் ஆரம்பத்
திலிருந்தே அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, தாழ்த்தப்பட்ட மக்கள்
நிலை குறித்து அருமை நண்பர் வேலப்பன் அவர்கள் கொஞ்ச நேரம்
முன்பு சொன்னார்கள். 100 ஆண்டுகளாக, ஆயிரம் ஆண்டுகளாகத்
தாழ்த்தப்பட்ட நிலையிலேயே உள்ள அந்த மக்கள் நல் வாழ்வு பற்றி
அரசியல் சட்டத்திலேயே வழி செய்திருக்கிறார்கள். அது வேண்டாம்
என்று சொல்கின்றாரா. ஒரு சமுதாயம் பொருளாதாரத்திலும்,
சமுதாயத்தில் உயர்ந்த ஜாதியாராலும் ஒடுக்கப்பட்டு தாழ்த்தப்
பட்டு இருக்கின்ற நிலையிலிருந்து விடுவிக்கவேண்டும் என்று எடுக்கப்
படுகின்ற முயற்சிகளை கை விட்டுவிடவேண்டும் என்று சொல்
கின்றாரா என்று விளங்கவில்லை.

இன்றையதினம் சட்ட மன்றத்தில் 40-க்கும் மேற்பட்ட அங்கத்தி
னர்கள் ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்கள் இருக்கின்றார்கள் என்றால்



1973 மார்ச் 29] [திரு. கே. எ. வகாப்]

அந்த நிலைமை எப்படி உருவாகியது என்பதை எண்ணிப்பார்க்க
வேண்டும். அந்தக் கட்சியினுடைய தலைவர்கள் இதுதான் அவர்க
ளுடைய கட்சிக் கொள்கையா என்று விளக்கவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்தபடியாக ஒரு பிரச்னையைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன்.
வடஆற்காடு மாவட்டத்தைப் பின்தங்கிய மாவட்டம் என்று அறிவித்
திருக்கிறார்கள். அதிலே நான்கு தாலூக்காக்கள்தான் பத்து சத
விகிதம் சப்சிடி பெறலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. எந்த அடிப்
படையில் அப்படி சில தாலூக்காக்களை மட்டும் தேர்ந்தெடுத்திருக்
கிறார்கள் என்று விளங்கவில்லை. பின்தங்கிய தாலூக்காக்களாக
அறிவிக்கப்பட்டுள்ளவை வந்தவாசி, வாலாஜா, செங்கம் போன்றவை
யாகும். தொழில் அடிப்படையிலே செய்யப்பட்டதா அல்லது வேறு
எந்த அடிப்படையில் செய்யப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.
அது எப்படி இருந்தாலும் வடஆற்காடு மாவட்டம் முழுவதும் பத்து
சதவிகிதம் சப்சிடி பெறுகிற ஒரு முடிவுக்கு அதை உருவாக்க
வேண்டும் என்று கோரி இந்த நேரத்தில் இன்னொரு கோரிக்கையை
யும் முன் வைக்க விரும்புகிறேன்.

இப்பொழுது ராணிப்பேட்டையில் ஒரு தொழிற்பேட்டை இருக்
கிறது. மோபட் தொழிற்சாலை ஒன்று இப்பொழுது கிண்டி தொழிற்
பேட்டையில் நடந்து வருகிறது. அது வளர்ந்து வருகின்ற தொழில்.
இப்பொழுது கிண்டியில் 5, 6 ஏக்கர் இடத்தில்தான் அமைந்திருக்
கிறது. அது வளரும் நிலையில் 50, 60 ஏக்கர் தேவைப்படும்.
ஆகையினால் அதை உடனடியாக ராணிப்பேட்டைத் தொழில்
பேட்டைக்கு மாற்றம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்
மறுபடியும் இந்த நேரத்தில் எங்களுடைய நன்றியை கடைசி
முறையல்ல, மறுபடியும், மறுபடியும், முதலமைச்சர் அவர்களுக்கும்,
தமிழக அமைச்சரவைக்கும் உருது பேசுகின்ற முஸ்லீம்கள் சார்பாக,
அளிக்கப்பட்ட சலுகைக்காக நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி: பேரவைத் துணைத் தலைவரவர்களே,
இன்றைய தமிழக அரசு பல்வேறுபட்ட நல்ல பல சாதனைகளை ஏழை
எளிய மக்கள், பிற்பட்ட மக்கள் நலனுக்காகச் செய்யவேண்டுமென்ற
எண்ணத்தில் தீவிர திட்டங்களைப் போட்டு, சமதர்ம சோஷலிசத்தை
நோக்கி நம்முடைய அரசு எந்த அளவுக்கு விரைவாகச் செல்கிறது

என்பதை எல்லாம் நாட்டு மக்கள் மகிழ்ச்சியோடு வரவேற்கிறார்கள் என்ற கருத்தைத் தெரிவித்து, என்னுடைய கருத்துக்களையும் மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் பிற்பட்ட மக்கள், குறிப்பாக "டி நோட்டிஃபைடு கிரிமினல் ட்ரைப்ஸ்" என்று இருக்கக்கூடிய குற்றப்பரம்பரை இனத்தைச் சேர்ந்தவர்கள் 13½ லட்சம் பேர் இருக்கிறார்கள். இந்தியா முழுவதிலும் அவர்கள் 40 லட்சம் பேர் இருக்கிறார்கள். அகில இந்தியாவிலும் இருக்கும் இந்த இனத்தைப் பார்த்தால், நம்முடைய தமிழகத்திலே மூன்றில் ஒரு பகுதியினர் இருக்கிறார்கள். இந்த மக்கள் வாழ்க்கைத்தரத்தை முன்னேற்றுவதற்காக அகில இந்தியாவிற்கும் சேர்த்து 150 லட்சம் ரூபாயை மத்திய அரசு ஒதுக்குகிறது. அதிலே தமிழகத்திற்கு 18½ லட்சம் ரூபாய்தான் கொடுக்கிறார்கள். இது மிகவும் குறைந்த அளவாக இருக்கிறது. சென்ற ஆண்டு இதே நிதிநிலை அறிக்கையின்போது 20—3—1972-லே மாண்புமிகு அமைச்சரவர்களிடம் இதுபற்றி ஒரு மனு கொடுத்தேன்.

மத்திய அரசின் பிரதிநிதியாக வந்திருந்த கமிஷனர் அவர்களிடமும் ஒரு மகஜர் கொடுத்தேன். இந்திய பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களுக்கும் ரெஜிஸ்டர் தபால் ஒன்று அனுப்பினேன். அகில இந்தியாவிலும் இருக்கின்ற குற்றப்பரம்பரையினர் இனத்தைச் சேர்ந்த மக்கள் தொகையின் அடிப்படையில் 50 லட்சம் ரூபாய் கொடுக்க வேண்டும். ஆனால் இப்போது கிடைப்பது 18½ லட்சம் தான். நியாயமாக, சட்டப்பூர்வமாக நமக்குக் கிடைக்க வேண்டிய தொகையைப் பெறவேண்டுமென்று நம்முடைய பிற்பட்ட நலத்துறை அமைச்சரவர்களிடம் தெரிவித்தபோது அதற்கு முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம்; மத்திய அரசிடமிருந்து இன்னும் பதில் வரவில்லை என்று சொன்னார்கள். இதைப்பற்றி நமது தமிழ்நாட்டிலே இருந்து போயிருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலமாகத் தாக்கீது அனுப்பி, உடனடியாக நமக்குக் கிடைக்க வேண்டிய 50 லட்சம் ரூபாய் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த 50 லட்சம் ரூபாயும் கிடைத்தால், மாநில அரசு இந்த குற்றப்பரம்பரையினருக்காகச் செலவு செய்யும் பணம் குறையும்; அம்மக்களுக்குச் சலுகைகள் அதிகரிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பிற்பட்ட இனத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு மத்திய அரசு கொடுத்துவந்த ஸ்காலர்ஷிப்–உதவிப் பணத்தை நிறுத்தி



விட்டார்கள். அதன் விளைவாக பல ஆயிரக்கணக்கான மாணவர்கள் தங்கள் திறமை காரணமாக மத்திய அரசிடமிருந்து பெற்றுவந்த உதவிப் பணம் கிடைக்காமல் அவதியுறுகிறார்கள். எனவே, அந்த உதவிப் பணத்தை மீண்டும் கிடைக்கச் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு 2,000 ரூபாய் வருமானம் உள்ள பிற்பட்ட இனத்தைச் சேர்ந்த குடும்பத்திலிருந்து வருகின்ற மாணவர்களுக்கு அரசின் சலுகை கிடையாது என்று நம்முடைய அரசு உத்தரவு பிறப்பித்துவிட்டது. அதன் பலனாக ஆயிரக்கணக்கான மாணவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நம்முடைய நாட்டில் குறைந்த சம்பளம் பெறக்கூடிய கடைநிலை ஊழியர்களுக்குக் கூட—எல்.ஜி.ஜி.எஸ்.—மாதம் 195 ரூபாய் வருமானம் கிடைக்கிறது. அப்படிப்பட்ட குறைந்த சம்பளம் பெறக்கூடியவர்களின் குழந்தைகள் கூட அரசாங்கம் அறிவித்திருக்கின்ற இந்த வருமான வரம்பினால் சலுகைகளைப் பெறமுடியாமல் ஆகிவிடுகிறது. இந்தச் சட்டத்தினால் பிற்பட்ட மாணவர்களில் பெரும்பாலோருக்குப் படிக்கும் வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே, சலுகைப் பெறுவதற்கான குறைந்த வருமான வரம்பை 5,000 ரூபாய் என்றாவது ஆக்கவேண்டும். அதைப்பற்றி அரசு என்ன முடிவு செய்யப்போகிறது என்று தெரியவில்லை. அண்டை மாநிலமான ஆந்திரபிரதேசத்தில் கூட 5,000 ரூபாய் வரை வருமானம் வரக்கூடிய பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கிறார்கள், என்ற விபரத்தையும் நம்முடைய மாண்புமிகு பிற்பட்ட நலத்துறை அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்குத் தேசிய ஒருமைப்பாட்டைப்பற்றி அதிகமாக விவாதிக்கிறோம்; பேசுகிறோம். ஆனால் நமக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் தண்ணீரைக் கொடுக்க மைசூர் அரசு மறுக்கிறது. நாம் எவ்வளவோ வற்புறுத்திச் சொல்லியும் அவர்கள் காவிரி ஆற்றின் குறுக்கே அணையைக் கட்டிக்கொண்டே இருக்கிறார்கள். மத்திய அரசு அதை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறதுற். கேரளாவில் வீணாக அரபிக்கடலில் போய் விழும் தண்ணீரை நம்முடைய மாநிலத்தில் இருக்கின்ற மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களின் வறண்ட பகுதிகளுக்குத் திருப்பிவிடவேண்டுமென்று நம்முடைய பொதுப்பணித்துறை அமைச்சரவர்களிடம் தெரிவித்தார்கள். நாங்கள் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். கேரள அரசு சரியான பதில் தரவில்லை

என்று சொன்னார்கள். அவர்களுக்கு நாம் அரிசி கொடுக்கிறோம். "மியூச்சுவல் ஹெல்ப்" என்ற முறையிலாவது அரிசிக்குப் பதிலாக அவர்கள் தண்ணீரைக் கொடுக்கலாம்.

இதையெல்லாம் விட்டுவிட்டு சர்வதேசப் பிரச்சினைகளைப்பற்றிப் பேசுகிறோம். தேசிய ஒருமைப்பாடு, இந்தியா ஒரு தேசம், ஒற்றுமை வேண்டுமென்றெல்லாம் பேசுகிறோம். ஆனால் கேரளத்திலே வீணாகப் போகின்ற தண்ணீர் நமக்குக் கிடைக்க வழியில்லை. மைசூரிலே அணை கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் மத்திய அரசாங்கம் வாளா இருந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதில் பிரயோஜனம் இல்லை. அந்த மாநிலங்களுக்குக் கடுமையான எச்சரிக்கை விடவேண்டும். டாக்டர் கலைஞர் அவர்கள் அதற்குத் தீவிர முயற்சிகளை எடுத்து, அதில் வெற்றிகாண வேண்டும். இந்தமாதிரியான நிலைமைகளை எல்லாம் பார்க்கின்றபோது மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று கேட்பது கூடப் பொருத்தமில்லை; தனி மாநிலம் வேண்டுமென்று கேட்கக்கூடிய உணர்ச்சியை ஏற்படுத்துவதாக இருக்கிறது. அதற்கு இடம் கொடுக்காமல் தக்க நடவடிக்கை எடுத்து நியாயமான உணர்வுகளுக்குத் தீர்வுகாண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் குரூப் ஃபோர் சர்வீசுக்கு ஆட்களை நியமிக்கிறார்கள். குரூப் ஃபோர் சர்வீசுக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்கும்போது இண்டர்வியூ வைப்பதில்லை. எழுத்துப் பரீட்சையை வைத்து மார்க் போட்டு, தேர்ந்தெடுக்கிறார்கள். ஆனால் குரூப் ஒன், குரூப் டு, குரூப் த்ரீ சர்வீஸ்களுக்கு எழுத்துப் பரீட்சை நடத்துவதோடு இண்டர்வியூவும் நடத்துகிறார்கள். அந்த சர்வீஸ்களுக்கு எழுத்துப் பரீட்சை, நேரடித் தேர்வு—இரண்டின் மூலம் தேர்ந்தெடுக்கிறார்கள். குரூப் ஃபோர் சர்வீசுக்கு வருகின்றவர்களில் பெரும்பாலோரும் தாழ்த்தப்பட்ட மக்களும், பிற்பட்ட மக்களும்தான். அவர்களுக்குக் குடும்ப சூழ்நிலைகளால் கல்லூரிகளுக்குப் போகமுடியாமல், வேலை செய்து வாழ்க்கை நடத்த விரும்புவதால் இந்தக் குரூப் ஃபோர் சர்வீசுக்குப் பரீட்சை எழுதுகிறார்கள். இதிலே இண்டர்வியூ இல்லாமல் தேர்ந்தெடுப்பதால், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிற்பட்ட மக்களுக்கும் அதிக வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது. ஆகவே, குரூப் ஃபோர் சர்வீசுக்கும் இண்டர்வியூ வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்தபடியாக, இங்கே பேசுகின்ற போது திரு. சுப்பு அவர்கள் உசிலம்பட்டி கல்லூரி விவகாரத்தைப்பற்றிப் பேசினார்கள். அது வீட்டுக்குள்ளே பேசுகின்ற விவகாரம்; வீதிக்கு வரவேண்டாமென்று நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனால் திரு. சுப்பு அவர்கள் அதைப் பற்றி இங்கே பேசியதன் மூலம், என்னையும் இங்கே பேசவேண்டுமென்ற அவசியத்தை ஏற்படுத்தியதற்காக முதலிலே திரு. சுப்பு அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். உசிலம்பட்டியிலே கல்லூரி அமைப்பதற்காக "தலைக்கு ஒரு ரூபாய், தலைவருக்குக் காணிக்கை" என்று எங்கள் பெருமதிப்பிற்குரிய தலைவர் திரு. மூக்கையா தேவர் அவர்கள் ஏழை எளிய மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்கள்.

குற்றப்பரம்பரையைச் சேர்ந்த கள்ளர் இன மக்களும் மற்றும் இலட்சக்கணக்கான மக்களும் அந்த வேண்டுகோளுக்கிணங்க தங்கள் காணிக்கையை அளித்தார்கள். கட்டடமாகவும், சொத்தாகவும், பணமாகவும் மொத்தம் 15 லட்சம் ரூபாய் மதிப்புக்குமேல் பெறப்பட்டன. அதோடு அரசின் உதவியையும் கொண்டு கல்லூரி உருவாக்கப்பட்டது. இந்த நிலையில் பிற்பட்ட இன மக்களுக்குப் பேராதரவாக இருந்து கல்லூரியை நடத்த திறமைமிக்க ஒருவரை தேர்ந்தெடுத்தால் நல்லது என்று கருதி, முன்னாள் பிரின்சிப்பால் செல்லப்பா அவர்களைத் தேர்ந்தெடுத்தோம். ஆனால் அவர்கள் எங்கள் நம்பிக்கைக்கு விரோதமாக நடந்துகொண்டார்கள். திரு. சுப்பு அவர்களுடைய கட்சிக்கு உரியவராகிவிட்டார். அவருடைய தம்பி டி. பாண்டியன் என்பவர் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களிலே ஒருவர். அவரையும், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. பாலதண்டாயுதத்தையும் இரவு வேளைகளிலே அடிக்கடி கல்லூரி விடுதிக்கு அழைத்து வந்து, சாப்பாடு போட்டு கம்யூனிஸ்டு கட்சிக்காரர்கள் "பிரெய்ன் வாஷ்" பண்ணுவது என்று சொல்வார்களே, அப்படி மாணவர்களை பிரெய்ன் வாஷ் செய்து மாணவர்களையும் கல்லூரியையும் கெடுத்துவிட்டார்கள், என்ற விபரத்தை இந்த மன்றத்திலே திட்டவட்டமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது அவர்கள்மீது கிரிமினல் கேஸ் போட்டிருக்கிறார்கள். லட்சக் கணக்கான ரூபாய்க்குக் கணக்கு வைக்கப்படவில்லை. கையாடல் செய்திருப்பதாகக் கருதி, போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள். செக் புக், காஷ் புக் மற்றும் நூற்றுக்கணக்கான ரிக்கார்டுகளை வேலையாட்கள் மூலமாக எடுத்துக் கொண்டுவரச் சொல்லி மறைத்து வைத்திருக்கிறார்கள். செல்லப்பா அவர்களின்

வேண்டுகோளின்பேரில்தான் அப்படிச் செய்யப்பட்டது என்று அவைகளை எடுத்துச்செல்லும்போது பார்த்துக்கொண்டிருந்த கடைநிலை ஊழியர் உசிலம்பட்டி ஆர்.டி.ஓ. அவர்களிடம் எழுத்து மூலம் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார். ஆகவே, இதிலே மிகப் பயங்கரமான முறையிலே அரசியல் விளையாடியிருக்கிறது. உசிலம்பட்டி தேவர்பெருமானின் கோட்டையாக இருக்கிறது. அதை உடைக்க வேண்டுமென்று கருதி, அதை தங்களுக்குச் செல்வாக்குள்ள இடமாக மாற்ற வேண்டுமென்று கருதி முன்னாள் பிரின்சிபால் செல்லப்பாவும், அவருடைய தம்பியும், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும் அங்கே புகுந்து, கல்லூரியை அரசியல் சதிக்கு உள்ளாக்கி கெடுத்துவிட்டார்கள். அது அம்பலமாகிவிட்டது. இப்போது அமைதியான நிலையில் கல்லூரிக்குச் சென்று பாடங்களையெல்லாம் முடித்துவிட்டு, தேர்வுகளுக்குத் தயாராகிவிட்டார்கள். அவர்கள் வேண்டுகோளின் பேரிலே இன்று கல்லூரிக்கும் விடுமுறைவிட்டு மாணவர்கள் இப்போது பரிட்சைக்குத் தயாராகிக் கொண்டிருக்கின்றார்கள் என்று தெரிவித்து முடித்துக்கொள்ளுகிறேன்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, என்னைச் சொன்னதற்காக ஒரு விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் கந்தசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள், பேராசிரியர் செல்லப்பா அவர்கள் தம்பி தா. பாண்டியன் என்றும் அவர் கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர் என்றும். அவர்கள் குடும்பத்தில் பலர் கம்யூனிஸ்டுகள் இருக்கின்றார்கள். திரு. மூக்கையாத் தேவர் அவர்கள் தலைமையிலேதான் அவர் திருமணமும் நடைபெற்றது. இதையெல்லாம் சொல்ல வேண்டிய அவசியத்திற்குட்படுத்தப்பட்டு விட்டேன்.

அங்கே உள்ள கல்விக் கழகமானது சொஸைடி ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்டில் 1967-ல் பதிவு செய்யப்பட்டு அது 1968-ல் நிறுவப்பட்டது. நாங்களும் அதற்காக நன்கொடை கொடுத்திருக்கின்றோம். அதன் நிர்வாகம் நன்கு நடைபெற வேண்டும் என்றுதான் நாங்களும் விரும்பினோம். ஆனால் தேசியத் தலைவர்களின் பெயர்களை இப்படிப்பட்ட நிறுவனங்களுக்கு உபயோகித்துக் கொண்டு, அப்படிப்பட்ட பெயர்களை மூலதனமாக்கிக் கொண்டு சில தவறுகள் நடந்துவிடக் கூடாது என்பதில் நாங்கள் அக்கறை கொண்டு இருக்கிறோம். எனவேதான் சொல்லுகிறோம், தேசியத் தலைவர்கள் பெயர்களை இப்படிப்பட்ட நிறுவனங்களுக்கு உபயோகிக்கக் கூடாது என்று. இந்தக் கல்விக் கழகத்திலிருந்து அரசாங்கம் 1968-லிருந்து இதுவரை



மானியங்கள், உதவித் தொகைகள், கடன்கள் எல்லாம் வழங்கியிருக்கின்றது. இப்படிக் கொடுக்கப்பட்ட தொகைகளின் கணக்குகள் முறையாக ஆடிட் செய்யப்பட்டு அந்தக் கணக்குகள் இதுவரையில் அரசாங்கத்திற்கு வந்து இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

THIRU K. KANDASWAMY : Sir, on a point of order. This matter is pending before a court and it is *sub judice*.

திரு. க. சுப்பு : இருங்கள். நான் சொல்லி முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சுப்பு, உங்களைக் குறிப்பிட்டார்கள் என்று சொன்னீர்கள். அதுபற்றி மட்டும் சொல்லுங்கள்.

திரு. க. சுப்பு : நான் கேட்கிறேன். கல்விக் கழகத்திலிருந்து அந்தக் கல்லூரிக்கு உதவித் தொகைகள், கடன்கள் என்று இப்படி ஏராளமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் அதுபற்றிய ஆடிட் செய்யப்பட்ட கணக்குகள் இதுவரையில் அரசாங்கத்திற்குக் கொடுக்கப்படவில்லை. எனவே, அதைப் பற்றி இந்த மன்றத்தில் சொல்லக் கடமைப்பட்டு இருக்கின்றேன். கல்லூரி முதல்வர் அவர்கள் சஸ்பெண்டு செய்யப்பட்டார். இதற்குப் பிறகு 5—11—72 ஞாயிற்றுக்கிழமை இரவோடு இரவாக கல்லூரிக்குள் நுழைந்து ரெக்கார்டுகளை யெல்லாம் தூக்கிக் கொண்டு போய்விட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கந்தசாமி அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அது நீதிமன்றத்தில் இருக்கின்றது, "ஸப் ஜுடிஸ்" என்று. எனவே அதைவிட்டு நீங்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லுங்கள்.

(திரு. க. சுப்பு அவர்கள், திரு. கே. கந்தசாமி அவர்கள் இருவருமே தங்கள் இருக்கையில் நின்று கொண்டு ஏதோ கூறினார்கள். ஒலிபெருக்கியில் சரியாக தெளிவாகக் கேட்கவில்லை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது ரொம்பப் பெரிய பிரச்சினையாக வளர்ந்து விடக்கூடாது. இது கோர்ட்டுக்குப் போயிருக்கிறது என்கிறார். எனவே, இது சப்-ஜுடிஸ் என்று சொல்லுகின்றார். எனவே, இதை விட்டுவிட்டு மேலே பேசுங்கள்.

THIRU K. KANDASAMY : Sir, I am not yielding. Sir, I have already submitted to the Hon. Deputy Speaker that it is a case pending before the court and on which nobody can argue. When the hon. Member does not give any account for his

[Thiru K. Kandasamy] [1973 மார்ச் 29

money transactions relating to the election, what competence he has got to refer to my College? He has no personal knowledge about the college.

MR. DEPUTY SPEAKER : The hon. Member is dragging in the names of persons like Thiru Chellappa who are outside and not inside the House. It is not right on our part to discuss the activities of persons who have got no chance to defend themselves in this House. So, the hon. Member might drop the matter then and there.

திரு. கே. கந்தசாமி : திரு. சுப்பு அவர்கள் கடந்த தேர்தல் கணக்கை இதுவரையில் சரிவரக் கொடுக்க முடியாத நிலையில்.........

MR. DEPUTY SPEAKER : Personal allegations I do not like to encourge............

THIRU G. R. EDMUND : It is ot only a personal allegation but it is a defarmation.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கந்தசாமி, நீங்கள் தயவுசெய்து உட்காருங்கள். இவ்வளவு நெருங்கிய நண்பர்களாக இருக்கின்றீர்கள். நீங்கள் இப்படி ஒரு வாதத்தில் இறங்குவது அழகல்ல. வேண்டாம். இந்தப் பிரச்சினையை இதோடு விட்டு விடுங்கள்.

திரு. ஏ. ஆர். பெருமாள் : துணைத் தலைவரவர்களே, ஆன் ஏ பாயிண்ட் ஆஃப் ஆர்டர், சபைக்கு வெளியில் உள்ள விஷயங்களை அதிலும் நீதி மன்றத்தின்முன் உள்ள விஷயங்களை திரு. சுப்பு அவர்கள் இங்கே பேசுகின்றார்கள். பேசும்போது இந்த மாமன்றத்திற்குத் தேவைப்படாத விஷயங்களை, மாமன்றத்தின் நடவடிக்கைக் குறிப் பேடுகளில் எழுதப்படக்கூடாத விஷயங்களை அவர்கள் சொல்லியிருக் கின்றார்கள். "முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் பெயரால் ஒரு கல்லூரியை வைத்துக்கொண்டு ஊழல் நடத்தப்படுகிறது" என்று பொருள்படத்தக்க விதத்தில் பேசியிருக்கின்றார்கள். இவையெல்லாம் இந்த மாமன்றத்தின் நடவடிக்கைக் குறிப்பேடுகளில் இடம்பெறக் கூடாத விஷயங்கள். எனவே, திரு. சுப்பு அவர்கள் பேசியவை அவ்வளவையும் நடவடிக்கைக் குறிப்பேடுகளிலிருந்து நீக்கிவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அல்லது அவர் கூறியதன் பேரிலே ஒரு விளக்கம் சொல்ல அனுமதிக்க வேண்டுகிறேன்.



1973 மார்ச் 29]

திரு. சௌடி. சுந்தரபாரதி : துணைத் தலைவரவர்களே, உங்கள் மூலம் ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். இந்தக் கல்லூரி நிர்வாகப் பிரச்சினையில் யாரும் உணர்ச்சி வசப்பட்டு பேச வேண்டிய அவசியம் இல்லை. இதை இந்த அளவோடு விட்டுவிடுவது நல்லது. வெளியே இந்தப் பிரச்சினையைப் பேசி ஒரு முடிவிற்கு வரலாம். சபையில் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள முயல வேண்டாம் என்று மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. பாரதி அவர்கள் கருத்தை வரவேற்கிறேன். வழக்கு நடைபெறுகின்றது என்னும் போது அதுபற்றி இங்கே விமரிசனம் செய்வது நல்லதல்ல. அடுத்து, திரு. கே. என். குமாரசாமி.

திரு. கே. கந்தசாமி : நான் இன்னும் முடிக்கவில்லையே?

திரு. ஏ. ஆர். பெருமாள் : நான் கேட்டுக்கொண்டேன், சில பகுதிகண் குறிப்பேடுகளிலிருந்து நீக்க வேண்டும் என்று.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் பேசுவதற்கு வாய்ப்பளிக்கப்படும்போது இதைக் கவனிக்கலாம்.

திரு. கே. கந்தசாமி : தலைவரவர்களே, கல்லூரி விஷயத்தை விட்டுவிட்டு இன்றைக்கு மில் தொழிலாளர்களைப் பற்றி ஒரு வார்த்தை சொல்லிவிட்டு அமர்ந்துவிடுகிறேன். இன்றைக்கு மின்வெட்டினால் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். எனவே அவர்களுக்குக் குறைந்த பட்சம் என்னென்ன நிவாரணம் அளிக்க முடியுமோ குறைந்தபட்சம் ஒரு குடும்பத்திற்கு 200 அல்லது 500 ரூபாய் நிவாரணமாகக் கொடுத்து உதவ வேண்டும் என்று கேட்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

திரு. கே. என். குமாரசாமி : அவைத் தலைவரவர்களே,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஏழு நிமிஷத்தில் முடித்துக்கொள்ளுங்கள். திருமதி அனந்தநாயகி அவர்களும் பேச வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள்.

சரி, அவர் பேசவில்லை என்று சொல்லுகின்றார். நீங்கள் பேசுங்கள்.

திரு. கே. என். குமாரசாமி : இங்கு உரையாற்றும் வாய்ப்பினை அளித்தமைக்கு நன்றி கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இன்று மின்சாரப் பற்றாக் குறை காரணமாக பல துறைகளில் உள்ள தொழிலாளர்கள் வேலைவாய்ப்பினை, மாத வருவாயை இழந்து, அவர்களில் 100 பேர் தங்களுக்கு ஏற்பட்டுள்ள குறைகளை, இன்னல்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நேரிலே தெரிவிக்க வேண்டும் என்று கோவையிலிருந்து புறப்பட்டு சைக்கிளிலேயே 320 மைல் கடந்து வந்து இருக்கின்றார்கள் சென்னைக்கு. இன்றைக்கு இப்படித் தொழில்களில் பணிபுரிந்துகொண்டு இருப்பவர்களுக்கு மாதம் 15 நாள் வருவாய்கூட இல்லாத நிலையில் மிகவும் சிரமப் பட்டுக்கொண்டு இருக்கின்றார்கள். இப்படிப் பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்களுக் கெல்லாம் நிவாரணம் அளிக்கத்தக்க சாத்தியக் கூறுகளை யெல்லாம் தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலதிபர்களும் அரசும் முன் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். மின்சாரப் பற்றாக்குறையில் விவசாயத்திற்கு நான்கு மணி நேரம்கூட சப்ளை கிடைக்கக்கூடிய நிலையில்லை. இன்றைக்கு நான்கு மணி நேரம்கூட விட்டுவிட்டுப் மின்சார சப்ளை பலயிடங்களில் கிடைக்காத நிலைமை இருக்கிறது. வயல்களில் நெல் காய்கிறது. கரும்பு காய்கிறது. இதைத் தடுப்பதற்கு விவசாயிகள் முன்கூட்டியே ஆயில் என்ஜின்கள் எல்லாம் வாங்கினார்கள் என்றாலும் டீசல் எண்ணெய், மண்ணெண்ணை கிடைக்காத காரணத்தினால், அவற்றையும் பயன்படுத்த முடியவில்லை. இரண்டு மூன்று பேர்களை டிஸ்ட்ரிப்யூடராகப் போட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எப்போது எண்ணை வரும், எப்போது தருவார்கள் என்பதை எதிர்நோக்கி விவசாயிகள் ரோடுகளில் படுத்திருக்க வேண்டிய நிலைதான் இருக் கிறது. உடனடியாக விவசாயிகளுக்கு மண்ணெண்ணை, டீசல் ஆயில் களாவது கிடைக்க வழி செய்ய வேண்டும் என்பதாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பாசனத் திட்டங்களைப் பொறுத்தவரை நமது அரசு மிகவும் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும். 1974 ஆம் ஆண்டு ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டால் தாங்கள் எந்த அணையை வேண்டுமானாலும் கட்டிக்கொள்ளலாம் என்பதாக மைசூர் அரசாங்கம் கருதுகிறது. அப்படி ஆகிவிட்டால் தஞ்சை, திருச்சி மாவட்டங்கள் எல்லாம் அடியோடு காய்ந்துபோகும். ஆகவே முன் னெச்சரிக்கையாக நமது அரசு மத்திய அரசாங்கத்துடன் கலந்து உடனடியாக நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.



கேரள அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்தி அந்தப் பகுதியில் வீணாகிற ஆற்றுத் தண்ணீரை இந்தப் பக்கம் கொண்டு வருவதற்கு நமது அரசு எடுத்துக்கொள்கிற முயற்சி, அக்கறை இது வரை எந்த முடிவையும் கண்டதாகத் தெரியவில்லை. மத்திய அரசாங்க நீர்ப்பாசன அமைச்சர் திரு. கே. எல். ராவ் அவர்கள் இதுபோன்ற பிரச்சினைகளில் மத்திய அரசு உதவ முடியும் என்று தெரிவித்திருக்கிறார்கள். நமது அரசு மத்திய அரசோடு தொடர்பு கொண்டு இதில் நல்லதொரு முடிவு ஏற்பட எல்லா நடவடிக்கை களையும் எடுத்துக் கொண்டாக வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படி நமது தமிழ்நாடு இந்த வருடம் பருவ மழை தவறிய தாலும், மின்சார வெட்டினாலும், டீசல் மண்ணெண்ணை கிடைக்காத தட்டுப்பாட்டினாலும் பெரிய அளவில் பாதிக்கப்பட்டிருக்கிறபோது அரசாங்கக் கடன், கூட்டுறவுக் கடன் ஆகியவற்றைத் தள்ளிவைக்க வேண்டுமென்று விவசாயிகள் கோருகிறார்கள். அதைப்பற்றி அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறபோது அதிகாரிகள் அந்தக் கடனை வசூல் செய்ய ஜப்தி நடவடிக்கைகளை ஆங்காங்கே எடுத்து வரு கிறார்கள். நேற்று வருகிறபோதுகூட மாடுகளை ஜப்தி செய்து பிடித்துக்கொண்டு போவதைப் பார்த்தோம். மின்சார இலாக்கா தண்ணீர் சப்ளைக்குத் தடையின்றி மின்சாரம் கொடுக்க அளித்த உத்தரவாதம் இருக்கிறது. அந்த உத்தரவாதப்படி அவர்கள் மின் சப்ளை செய்ய முடியாத காரணத்தினால்தான் விவசாயம் பாதிக்கப் பட்டிருக்கிறது. இதற்கு மின்சார இலாக்காதான் பொறுப்பே தவிர, எப்படி விவசாயிகள் பொறுப்பாவார்கள்? ஆகவே உடனடியாக ஜப்தி நடவடிக்கையை நிறுத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குடிநீர்ப் பிரச்சினையை எடுத்துக் கொண்டாலும் கூட இன்றைக்குக் குடிநீர் வாரியம் அமைத்துவிட்ட காரத்தினாலேயே அது தீர்ந்து விட்டதாகக் கருத முடியாது. இன்றைக்கும் குடம் தண்ணீர் 10 பைசா என்கிற அளவில் குடிதண்ணீர் சப்ளை செய்தாக வேண்டிய பெரிய முன்சிபாலிட்டிகள் இருக்கின்றன. ஆகவே உடனடியாக எங்கெங்கே குடிதண்ணீர் பிரச்சினை இருக்கிறதோ, அங்கெல்லாம் அதனைப்போக்க நடவடிக்கை எடுத்தாக வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் வறட்சி நிவாரணப் பணிகள் நடக்கும் இடத்தில் கூலி மிகக் குறைவாகக் கொடுக்கப்படுகிறது என்கிற காரணத்தினால்,

வேலை தடைபடுகிறது. $1\frac{1}{2}$ ரூபாய், 2 ரூபாய் கூலி கொடுத்தால் அவர்கள் எப்படிக் குடும்பம் நடத்த முடியும் என்பதைப் பார்க்க வேண்டும்......

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : சிறிது நேரத்திற்கு முன்பாக மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது கூட்டுறவுக் கடனுக்காக ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட்டதாகச் சொன்னது என் காதில் விழுந்தது. கூட்டுறவுக் கடன்களை வசூல் செய்ய 30—6—1973 வரை எந்தவிதமான கெடுபிடி நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என்பதாக அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. இதை மீறி கூட்டுறவுக் கடன்களுக்காக எந்த அதிகாரியாவது, எங்கேயாவது கெடுபிடி நடவடிக்கை எடுத்திருந்தால் சொல்ல வேண்டும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : ஐ.எம்.எஸ். லோனுக்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? திருநின்றியூரில் என்பதாக நான் சொன்னேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஐ.எம்.எஸ். லோன் வேறு. திரு. குமாரசாமி சொன்னது கூட்டுறவுக் கடன். முன்னாலேயே ஒரு முறை சொல்லி நான் மறுத்திருக்கிறேன். இப்போதும் சொன்னார். அதனால்தான் கேட்கிறேன். அவர் சொல்ல வேண்டும், எந்த ஊரில் எந்த அதிகாரி எந்த விவசாயின்மீது கெடுபிடி நடவடிக்கை எடுத்திருக்கிறார் என்பதை.

திருமதி த. ந. அனந்தநாயகி : அமைச்சர் அவர்கள் 30—6—1973 வரை நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று உத்தரவிட்டிருப்பதாகச் சொன்னார்கள். இது மிகக் குறுகிய காலமாக இருப்பதால் இதனைக் கொஞ்சம் அதிகப்படுத்தித் தருவார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அதைப் பின்னால் பார்த்துக்கொள்ளலாம்.

திரு. கே. என். குமாரசாமி : நேற்று கூட சைக்கிள் ஊர்வலம் வரும்போது, நடுவில் தொழிலாளர்கள், குளத்திற்குப் போகிறபோது மாடுகளை அதிகாரிகள் ஜப்தி செய்துகொண்டுபோக, அப்படி அதிகாரிகள் செய்யக்கூடாது என்பதைச் சொல்லிவிட்டு வந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட நடவடிக்கைகளைப்பற்றிச் சொல்கிறேனே தவிர............



திரு. ஆர். பொன்னப்ப நாடார் : கெடுபிடி நடவடிக்கை இல்லை என்று சொன்னார்கள். பிற வசூல் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு தான் வருகிறது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நான் கூட்டுறவுக் கடன்களைப் பற்றிச் சொன்னேன். 30—6—1973 வரை எந்தவிதமான கெடுபிடி நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மீறி நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றால், எங்கே, யார் மீது, யாரால் எடுக்கப்பட்டது என்று தெரிவித்தால் அந்த அதிகாரியின்மீது நடவடிக்கை எடுக்க முடியும் என்பதற்காகத் தான் கேட்கிறேன். அதை திரு. குமாரசாமி சொல்ல வேண்டும்.

திரு. கே. என். குமாரசாமி : விளக்கத்திற்கு நன்றி. அப்படிப்பட்ட நடவடிக்கைகள் இருக்குமானால் அமைச்சர் அவர்களுக்குக் கடிதம் மூலம் எழுதித் தெரிவிக்கிறேன்.

அடுத்து, தமிழ்நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் பயங்கரமாகப் போய்க் கொண்டிருக்கிறது. அதன்காரணமாக லஞ்சம் தாண்டவமாடுகிற சூழ்நிலைதான் இருக்கிறது. உடனடியாக வேலை வாய்ப்பைப் பெருக்க அரசாங்கம் திட்டம் தீட்டியாக வேண்டும். இன்றைக்கு வேலை தேடித்தரும் ஸ்தாபனத்தில் பதிவு செய்து கொண்டுள்ளவர்கள் எத்தனைபேர் என்று பார்க்க வேண்டும். இதற்கு ஏதாவது அரசாங்கம் வழிதேடியாக வேண்டும்.

ஆகவே, இப்படிப்பட்ட பிரச்சினைகள் தமிழ்நாட்டிலே இருப்பதைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் முன்முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். பாசன வசதிகளாலும், தொழில் வாய்ப்புகளை அதிகப்படுத்துவதாலும், அல்லது மக்களுக்கான வேலைகளைத் தேடிக் கொடுப்பதிலேயும் அரசாங்கம் எடுத்துக் கொள்கிற முயற்சிகளிலேயும், குக்கிராமங்களிலே வீட்டுவசதி வாய்ப்பே இல்லாமல் மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அரசாங்கம் மூலமாக என்ன நன்மை ஏற்பட்டிருக்கிறது? ஏதாவது கிராமப் பகுதிகளிலே வீடு கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், 1967-க்கு முன்னாலே ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் வட்டாரத்திற்கும் 20 விடுகள் என்று கட்டிக் கொடுக்கப்பட்டதாக அங்கே இருக்கிற பஞ்சாயத்து யூனியன்காரர்கள் சொல்கிறார்கள். 1967-க்குப் பிறகு அப்படிப்பட்ட திட்டம் போடப்படவில்லையென்று சொன்னால், கிராமம் முழுவதும் புறக்கணிக்கப்படுகிறதா என்று அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

[திரு. கே. என். குமாரசாமி] [1973 மார்ச் 29

ஆகவே, வீட்டு மனைகள் வழங்குதல், வீடுகள் கட்டிக் கொடுக்கின்ற திட்டங்கள், இவற்றை விஸ்தரிக்க முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, தொழிலாளர்களுடைய பிரச்சினைகளிலே, உழைக்கின்ற மக்களுடைய பிரச்சினையிலே அரசாங்கம் முழு கவனம் எடுத்து, அவர்களுக்கு நன்மைகள் அளிக்கின்ற வாய்ப்பை அரசாங்கமானாலும், முதலாளிகளானாலும், அதற்கு அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டு செயலாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சந்தர்ப்பம் அளித்ததற்காக முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்தில் செங்கம் தாலூக்கா மிகவும் பின் தங்கிய பகுதி வெள்ளைக்காரர்கள் ஆண்ட காலத்திலிருந்து அது மிகவும் பின்தங்கிய பகுதி. அந்தப் பகுதியில் இப்பொழுது சிறு சிறு மாற்றங்கள் காணப்பட்டாலும் தண்டராம்பட்டு யூனியனில் பாம்பன் ஆறு என்ற ஒன்று வருகிறது. அங்கு சிறு சிறு அணைக்கட்டுகள் என்பதாகக் கட்டி, 3,000 ஏக்கருக்குப் பாசன வசதி இருக்கிறது. அந்த அணைக்கட்டுகளைத்தான் அங்கே கட்டியிருக்கிறார்களே தவிர, அந்தக் கால்வாய்கள் தூர்ந்துபோய் பல காலமாகியும் இதுவரை தூர் எடுக்கவில்லை. அதிகாரிகளிடத்தில் நாங்கள் சொல்லியும் அவர்கள் கவனிக்கவில்லை: எவ்வளவோ செலவு செய்து அணைக்கட்டுகள் கட்டியும் சிறு தொகை செலவு செய்தால் பாசனத்திற்கு, கால்வாயை ரிப்பேர் செய்வதற்கு முயற்சி செய்தால், நல்ல முறையில் நீர் பாயும்.

இவ்வளவு செலவு செய்தும் தண்ணீர் பாயாமல் வீணாகிறது என்பதை இந்நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் சாத்தனூர் அணைக்கட்டில் இருந்து தீர்வை செலுத்தாதவர்களும் தண்ணீரை எடுக்கிறார்கள். அங்கே போய் பார்க்கும்போது, தேவனூர், பெரியகல்லப்பாடி, புதூர் ஆகிய கிராமங்களில் 20 நாட்களாகவே தண்ணீர் பாயவில்லை. ஒரு கிராமத்திலே 200 ஏக்கர் ஆயக்கட்டு பகுதி என்றால், 250 ஏக்கர் என்று மேலும் 50 ஏக்கருக்குத் தண்ணீரைப் பெறுகிற காரணத்தால், அணைக்கட்டுப் பக்கத்திலே இருக்கிற பகுதிகள் தண்ணீர் பெறமுடியாமல் கஷ்டப்படுகிற நிலைமை இருக்கிறது. இவர்கள் வரியை முழுவதுமே கட்டிவிடுகிறார்கள். ஆனால் வரி கட்டாமல், அணைக்கட்டுப் பகுதியிலே இல்லாதவர்கள் தண்ணீர் பெறுகிறார்கள்.



1973 மார்ச் 29] [திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன்]

சாத்தனூர் அணைக்கட்டில் எவ்வளவு நிலங்கள் இருக்கின்றன, ஒவ்வொரு கிராமத்திலும் சரியான சர்வே செய்து, எத்தனை ஏக்கர் நிலங்களுக்கு நீர் பாய வேண்டும், அதிகமாக எத்தனை ஏக்கர் பாய்கிறது என்ற கணக்கை எடுத்து அதை அடுத்த ஆண்டிலாவது சீர்செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தண்டராம்பட்டித் தொகுதியைப் பொறுத்தவரையில், மேஜர் பஞ்சாயத்து ஒன்றுகூடக் கிடையாது. வியாபார ஸ்தலமோ, தொழிற்சாலையோ கிடையாது. இருந்தாலும், அங்கே இருக்கிற அனைவரும் விவசாயத்தை நம்பி, தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். அதனால், சாத்தனூர் நீர்த் தேக்கத்திலிருந்து ஒரு கால்வாயை வெட்டி அங்கேயிருக்கிற ஏரிகளிலெல்லாம், தண்ணீர் விட்டால், திருவண்ணாமலை சமுத்திர ஏரி வரையிலும் நீர் விட்டால், எங்களுக்குக் கிணற்று நீர் அதிகமாகக் கிடைக்கும், எங்களுக்கு உணவு உற்பத்தியைப் பெருக்க உதவியாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

20 அடி ஆழத்திலேயிருந்த கிணறுகள் இப்பொழுது 40 அடி சென்றுகூட, தண்ணீர் பற்றாக்குறையாக இருக்கிறது. அதிகமாக பம்ப் செட்டுகள் போட்டிருக்கிற காரணத்தால், நீர் ஊற்றுகள் அடியிலே போய்க்கொண்டிருக்கின்றன. அந்தக் காரணத்தினால், வருடத்திற்கு ஒரு முறை கிணறுகளை வெட்டவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆகவே, அந்த நீர்த்தேக்கத்திலிருந்து கால்வாய்களை வெட்டி ஏரிகளுக்கு விட்டால், கிணறுகளில் வற்றாமல் இருக்கும். எனவே, இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தானிப்பாடி தொகுதியில் அரசாங்க மருத்துவமனை ஒன்று இருக்கிறது. அதற்குப் பல ஆண்டுகளாக கட்டிடம் கட்டப்படாமல் இருக்கிறது. ஆகவே, விரைவிலே கட்டிடம் கட்டித்தர ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தண்டராம்பட்டு, திருவண்ணாமலை ஊராட்சியில், என்னுடைய தொகுதியில், அடங்கியுள்ள கிராமங்களில் இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக எல்லா பாடசாலைகளுக்கும் கட்டிடம் கட்டி முடித்துவிடுவோம் என்பதையும் இந்த நேரத்திலே சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்களுடைய தண்டராம்பட்டு, திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்தவரையில், நீர்ப்பாசன வசதி

யுள்ள காரணத்தால், பஞ்சாயத்து யூனியனுக்கு ஓரளவுக்கு வருவாய் வருகிறது. அந்த வருவாயை வைத்து இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள்ளாகக் குடிநீர் திட்டத்தை எல்லாக் கிராமங் களுக்கும் அளிக்க வேண்டுமென்ற முயற்சி எடுக்கவேண்டும். இதற்காகக் குடிநீர் வாரியத்தை வேண்டிய உதவிகள் செய்யவேண்டு மென்று கேட்டிருக்கிறோம். அந்த உதவியைச் செய்தால், எல்லா கிராமங்களுக்கும் 2 ஆண்டுகளுக்குள்ளாக குடிநீர் வழங்க முடியு மென்ற அந்த முறையையும் செயல்படுத்தியதாகும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தண்டராம்பட்டு பஞ்சாயத்து யூனியனில் தான் தலைமை கிராமம் இருக்கிறது. அங்கு ஏறக்குறைய 300 பேர் சம்பளம் வாங்கி பணி புரிகிறார்கள். அங்கே ஒரு சர்க்கார் மருத்துவமனை கூட கிடையாது. எனவே, உடனடியாக, தண்டராம்பட்டில், சர்க்கார் மருத்துவமனை ஒன்றை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, சந்தர்ப்பம் அளித்த தலைவருக்கு நன்றி கூறி இத்தோடு முடித்துக்கொள்கிறேன்.

* திருமதி த. ந. அனந்தநாயகி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வாய்ப்பை அளித்ததற்காக பெருத்த மகிழ்ச்சி. மூட்டையையெல்லாம் கட்டிவிட்டேன் போவதற்கு. நீங்கள் வாய்ப்பு கொடுத்தீர்கள். அதற்காக நன்றி.

இன்றைக்கு இந்த நிதி ஒதுக்க மசோதாவிலே ஒருசில கருத்துக் களை மாத்திரம் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன். இன்றைக்கு ரூ. 465 கோடி பட்ஜெட்டிலே, நியூ சர்வீஸ் என்று பார்த்தால் ரூ. 14 கோடி தான் ஒதுக்கப்பட்டிருக் கிறது. அப்படியென்றால், சாதாரண செலவினங்களுக்காக அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறதேயொழிய புதிய திட்டங்களுக்காகப் பணம் குறைவாக இருக்கிறது என்பதை இந்த அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும். இதனால் வளர்ச்சியிலே கொஞ்சம் தளர்ச்சி ஏற்படும் என்பதைச் சொல்ல ஆசைப்படுகிறேன். புதுப் பணிகள் இல்லை யென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே, சில சலுகைகள் வழங்கவேண்டுமென்று, நம்முடைய முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, தியாகிகளுக்கு பென்ஷன் வழங்கும் திட்டத்திலே, 12—5—1972 தேதிக்குப் பிறகு பென்ஷன் கோரி வருகின்ற அப்ளிகேஷன்களை எடுத்துக்கொள்ளக் கூடாது என்று சொல் கிறார்கள். அன்றைக்குக் கொஞ்சம் நாட்களை நீட்டித்துக்



கொடுத்தார் முதல்வர். இன்றைக்கும் சில தியாகிகளுடைய நிலைமை என்னவென்றால், ரூ. 100 சம்பாதிக்கக்கூடிய தகுதி அவர்களுக்குக் கிடையாது. இன்றைக்கு ரூ. 100 வருமானம் போய், ரிடையர் ஆகி, வேலையில்லாமல் இருக்கிற அரசியல் தியாகிகள் சிலர் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். உங்களுக்குத் தெரியும். இந்த நாட்டிற்காக உடல், பொருள், ஆவி, சுற்றம், அனைத்தையும் தத்தம் செய்யக்கூடிய முறையிலே, சிறந்த தியாகப் பரம்பரையிலே வந்தவர்கள் அவர்கள். (குறுக்கீடு) ஆவியைக்கூட பாதி கொடுத்தாகிவிட்டது, பாதிதான் ஒட்டிக்கொண்டிருக்கிறது உடலிலே. அவர்கள் அதிகம் பேர் இருக்க மாட்டார்கள். இன்னும் கொஞ்சம்பேர்தான் அந்த பென்ஷன் பெறுமல் இருப்பார்கள். அரசாங்கம் கருணை காட்டி, குறிப்பிட்ட நாள் வரையில்தான் மனு எடுப்பது என்று இல்லாமல், அவர்களுக்கு எப்பொழுது அவல நிலை ஏற்பட்டாலும், மனு செய்தால், அதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் என்ற பரந்த மனப்பான்மையோடு தியாகிகளுக்கு மரியாதை செலுத்தினால் மிகமிக வரவேற்கத்தக்கதாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, முதியோர் பென்ஷன் திட்டம். அது ஒரு வெல்பேர் திட்டம். 1967–68-லே எவ்வளவு எண்ணிக்கைக்கு கொடுத்தார் களோ, அதே எண்ணிக்கைக்குதான் இப்பொழுதும் கொடுக்கிறார்கள். அதிலே யாராவது செத்துப்போகிற சூழ்நிலை இருந்தால் தான் தனக்குக் கிடைக்கும் என்று அவர்கள் எண்ணிக்கொண்டிருப்பது ரொம்ப கஷ்டமானது. யாராவது சாவார்களா என்று காத்திருந்தால் இவர்கள் அடுத்த உலகத்திற்குப் போய்விடுவார்கள். அந்த மாதிரி இல்லாமல், தகுதியானவர்கள் அப்ளிகேஷன்கள் தந்தால், அதை தயவுசெய்து, பரந்த மனப்பான்மையோடு ஆராய்ந்து தருவதற்கு இந்த அரசாங்கம் முன் வரவேண்டுமென்று யோசனை கூற விரும்பு கிறேன்.

இன்றைக்கு பல இலாகாக்களுக்கு பல கோடி ரூபாய்கள் நாம் மானியமாக ஒதுக்கி அவை நல்ல முறையிலே செயல்படவேண்டு மென்று செலவழிக்கிறோம். ஆனால் அந்த இலாகாக்களில் உள்ள சில வசதிகளை நாமே பயன்படுத்திக்கொள்ளாமல் அப்படிப்பட்ட வாய்ப்புகளை இழந்துவிடுவது சரியல்ல என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். இசத் நகரிலே ஆல்–இண்டியா ரிசர்ச் இன்ஸ்டிட்யூட் என்ற ஒரு நிறுவனம் இருக்கிறது. தமிழகத்தின் சார்பிலே அங்கே சென்று படிப்பதற்கு 6 இடங்கள் ஒதுக்கப்பட் டிருக்கின்றன.

அந்த முறையிலே தமிழ்நாட்டிலேயிருந்து ஆறு வெட்டர்னரி டாக்டர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பி அவர்கள் அங்கே பயிற்சி பெறுவதற்கான வாய்ப்பை இந்த அரசாங்கம் ஏற்படுத்தித் தருவது கிடையாது. அதனால் யாருக்கு நஷ்டம். நமக்குத்தான் நஷ்டம். நம்முடைய மாநிலத்திற்குத்தான் நஷ்டம் ஏற்படுகிறது. அதே நேரத்திலே மற்ற மாநிலங்கள் அதைப் பயன்படுத்திக் கொள்கின்றன. வெட்டர்னரி டிபார்ட்மெண்டிலிருந்து அந்தப் பயிற்சியைப் பெறுவதற்கு அவர்களை அனுப்பக்கூடிய சூழ்நிலை இருக்ுமானால்—அவர்கள் படிப்பதற்கு முட்டுக்கட்டை போடாமல்—6 பேர்களை சீனியாரிடி பிரகாரம் தேர்ந்தெடுத்து அனுப்பி அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளச் செய்யவேண்டும். நம்முடைய மாநிலத்திலே அப்படி ஆரம்பிக்க வேண்டும். நம்முடைய மாநிலத்திலும் ஆரம்பிக்கவில்லை, அங்கேயும் சென்று படிப்பதற்கு அனுமதிப்பதும் இல்லை என்று சொன்னால் அது சரியல்ல.

கோழி வளர்ப்பதற்காக 2,500 ரூபாய் அரசாங்கத்திலிருந்து கடன் கொடுக்கிறார்கள். அப்படிக் கடன் கொடுக்கும்பொழுது அங்கே போய் கோழி வாங்கு, இங்கே போய் தீனி வாங்கு என்று டெபுடி டைரக்டர் "கம்பல்" பண்ணுவது சரியல்ல. கடலூரிலே போய் கோழி வாங்கு என்று கும்பகோணத்துக்காரரிடம் சொன்னால் அந்தக் கோழியை அவர் அங்கே வாங்கி இங்கே கொண்டு வருவதற்குள் செத்துவிடுகிறது. நாம் அவர்களுக்குக் கடன் கொடுத்தால் அவர்கள் அதை நல்ல முறையிலே பயன்படுத்திக்கொள்கிறார்களா என்று பார்த்துக்கொள்வதுதான் பொறுப்பே தவிர அதிகாரிகள் அவர்களுக்கு வேண்டியவர்களிடத்திலே போய் கோழி வாங்கு, தீனி வாங்கு என்று சொல்வது என்றால் அது இந்த இலாகாவையே துஷ்பிரயோகம் செய்வதுதான், ஆகவே அதையெல்லாம் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மெட்ராஸ் சிடி, என்னுடைய தொகுதியில் உள்ள 100-வது வட்டத்திலே சாக்கடை வசதி கிடையாது, ரோடு வசதி கிடையாது, லைட்ஸ் கிடையாது. சென்னை நகரத்திலேயே இப்படிப் பட்ட நிலைமை இருக்கிறது என்றால் நகர்ப்புறங்களுக்காக பல கோடி ரூபாய் செலவழிக்கிறோம் என்று சொல்கிற நிலையிலே உள்ள நகரத்திலேயே இப்படி இருந்தால் மற்ற இடங்களிலே எப்படி இருக்கும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். கார்ப்பரேஷன் இருக்கிற இடத்திலேயே இப்படி பாதாள சாக்கடை வசதிகள் எல்லாம் இல்லையென்றால் அது மிக மிகக் கொடுமையானது என்பதைத்





தெரிவித்துக் கொள்கிறேன். சென்னை நகருக்கு தண்ணீர் வழங்குவதற்காக இப்பொழுது 4 மெக்கானிக்கல் பில்டர்ஸ்-க்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தாலும்கூட, இப்பொழுது இரண்டு மெக்கானிக்கல் பில்டர்கள் மூலம் சுத்தப்படுத்தப்பட்டு தண்ணீர் வழங்கப் படுகிறது. இது போதாது. இதன் காரணத்தினால் மஞ்சள் காமாலை நோய் வருகிறது. இப்படிப்பட்ட நிலைமையில் சாக்கடைத் தண்ணீர் குடிதண்ணீரில் கலந்துவிடுகிறது. மஞ்சள் காமாலை நோய் மிக மிகக் கொடுமையான நோய். எனவே, சரியாக சுத்தப்படுத்தித் தண்ணீரை வழங்குவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும்.

வட சென்னையிலே கழிவு நீரை யெல்லாம் காசிமேடு பகுதியிலே கொண்டுபோய் கடலிலே கலக்குமாறு செய்து விட்டிருப்பதால், அங்கே நாற்றம் தாங்க முடியவில்லை. 10 வருடத்திற்கு முன்னாலேயிருந்தே அப்படி கழிவுநீரை தனியாக விடுவதற்கு ஒரு திட்டம் கார்ப்பரேஷனிடம் இருந்தது. ஆனால் கார்ப்பரேஷன் எந்த வேகத்திலே செல்கிறது என்பது நமக்கு எல்லாம் தெரியும். சென்னை தலைநகரமாக இருக்கிறது. தலைநகரத்திலேயே இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது என்றால் பிற மாவட்டங்களைப்பற்றிச் சொல்லவே வேண்டாம். அன்னிய நாட்டினர் பல பேர்கள் இங்கே வருகின்றார்கள். அவர்கள் எல்லாம் என்ன நினைப்பார்கள்? சாக்கடை நீரை காசிமேடு பகுதியிலே கடலிலே கலக்க விடுவதால் அங்கே வசிப்பவர்களுக்கு மிகக் கஷ்டமாக இருக்கிறது; மீன்கள் செத்து விடுகின்றன. எனவே அந்தச் சாக்கடை நீரையெல்லாம் பம்பிங் ஸ்டேஷன் போட்டு வேறு முறையிலே அதைப் பயன்படுத்திக்கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே அடையாறிலே ஒரு டோபிகானா வேண்டும் என்று வருடா வருடம் நான் கேட்டுக்கொண்டே இருக்கிறேன். நம்முடைய வீட்டு வசதி அமைச்சர் அவர்களிடத்திலே 2, 3 ஆண்டுகளாகச் சொல்லியும் அவர்கள் கவனிக்க மாட்டேன் என்கிறார்கள். அது பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். இப்படி அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொடுத்தால்தானே அவர்கள் வாழமுடியும். அடையாறிலே ஒரு டோபிகானா விரைவிலே கட்டித்தரவேண்டும். அதைத் தவிர ஏற்கனவே சென்னை நகரிலே பல இடங்களிலே ஏற்படுத்தப்பட்ட டோபிகானாக்கள் எல்லாம் ஒழுங்காகச் செயல்படவில்லை. அதையும் கவனிக்க வேண்டும்.

Rs. 117 lakhs has been spent. Not even 10 per cent of the amount has been spent. They have no schemes; also they have not drawn up any schemes. There is indication of it in the annual plan. They are totally silent. It is all verbiage here. They have not mentioned in specific terms, in the annual plan for 1973-74, the mode and source of procurement of machinery and equipment for the scheme. Not a word about that. From this it is clear that this Government had failed and not taken speedy action to complete this vital scheme. Therefore they have failed the public miserably.

Therefore my complaint against the Government is though it has been cleared by the Centre, they have not done their job properly. When was this cleared by the Planning Commission? Why is there delay? I would like to know the answer from the Hon. Chief Minister while he gives his reply to the debate to-day.

Then, Kundha Hydro-Electric Schemes. The source of my information is the annual plan for 1973-74, pages 136-137. To make it convenient for the Hon. Chief Minister, I have even jotted down the page numbers, it is 136-137. This scheme envisages the installation of a unit of 60 mw. in Power House III and another unit of 50 mw. in Power House IV, one 60 mw. and another 50 mw. in the Power Houses III and IV. This is extra.

The Fourth Plan provision for the scheme is Rs. 198 lakhs. This scheme was cleared by the Government of India and the preliminary works were taken up in 1969-70. Mr. Mathialagan may know better. Certain things were done when he was the Finance Minister. It was expected that the generating units would commence in 1973-74. But the latest indication is that procurement of machinery is still pending from Canada. There is no programme at all for getting the equipment from Canada. It is also indicated that there are no civil works of a major nature. It is highly regrettable that when the preliminary work was started in 1969-70, no expenditure has been incurred so far. Even though the preliminary work was started in 1969-70, no preliminary expenditure has been incurred so far on the scheme. Only a paltry sum of Rs. 50 lakhs has been provided in he Budget estimate for 1973-74. This is an eye-wash and an attempt to hoodwink us. No indication is given as to how it is going to be when the scheme is expected to be completed in 1973-74.

No machinery has been procured till now. It is strange. What is holding up the procurement of machinery? In this context I presume that the Government of India would have released the necessary foreign exchange since they have already approved the scheme. My accusation is that the State Government had been lethargic. If there is difficulty in getting clearance from the Centre, we can very well judge the performance of this Government in taking further action. This is the fiasco on the electricity front. When the Minister replied, he said in two voices and the Chief Minister also was present.

ஏன் இந்த மின்சாரத்திலுடைய உற்பத்தி குறைந்துவிட்டது என்று கேட்டால் குறையவில்லையே என்று சொல்லுகிறார் மேல்சபையிலே

Why do you imagine it has come down? He says because he did not get coal, he did not produce. Well, I would like to know what was the rated capacity and what was the quantum of electricity that was not produced on account of inadequacy of coal? They will never say it?

Very cleverly, intelligently, completely and fully they have withheld that information from the House. That is why I say there is chaos. What is the result? The result is lay-off. There is fantastic lay-off in the labour front. There will be lay-off in the agricultural front and there is going to be a crisis in that front also, in the shape of production crisis, in about two or three months' time.

This is the last day we can speak about this. Tomorrow we have a number of Bills and we cannot speak all these things then. This is the last occasion for us to speak. It is the last day and therefore I would like to refer to all these things. I would like to know what the Chief Minister is going to say. How he is going to promote agricultural production? These poor persons are suffering because of lay-off. There is a crisis in every sphere and every Member will have to encounter this as soon as he goes back to his constituency. We have been sitting here for about 30 days now and we have to face the people in our constituency, whether rural or industrial belt.

Then again, a number of times I have mentioned in this House about the Tamil Nadu Archives. I had written a letter to the Chief Secretary also. I had written, I think, letters to the Chief Minister also. I have raised some question also. But the ques-

Clear out, get out, they say. You are unfit, you are not able to produce electricity.

முழுமை ஆக்கும் விழா என்று பெருமைப்பட்டுக்கொள்கிறீர்கள். But the basic necessity of electricity, you are unable to produce. So many lakhs of people have given mahajars.

The moment I banged the Co-operation Minister, immediately he had tried to liquidate the entire society. His direct agents had interfered. What is the position now? The employees face retrenchment. I have a number of facts. On account of paucity of time I am not touching upon all of them.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் பேசுகின்ற விஷயங்களை எல்லாத் தலைவர்களும் பேசுவதாக இருந்தால் மூன்று மணிக்குக்கூட முடியாது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : பத்து நிமிடம் கூட நான் எடுக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பதினைந்து நிமிடத்திற்கு மேல் ஆகிவிட்டது. உங்கள் பேச்சு நன்றாக இருக்கிறது. ஆனால் நேரம் இல்லை. இரண்டு நிமிடத்தில் முடித்து விடுங்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : ஐந்து நிமிடத்திற்கு மேல் எடுக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் நல்ல பேச்சாளர் பத்து நிமிடத்திலும் பேசலாம், இரண்டு நிமிடத்திலும் முடிக்கலாம்.

Dr. H. V. HANDE : Lastly one point. We want to know one thing from the Hon. Chief Minister, and his ruling party. Are we going to have another Speaker or not?

That we would like to know. How long are they going to conduct this sort of thing? We want to know whether we are going to have another Speaker or this same thing will continue. On ஆறு மாதத்திற்குள் போய்விடுவோம், நமக்கு எதற்கு வம்பு என்று நினைக்கின்றீர்களா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : என்னை ஏன் இழுக்கிறீர்கள்

Dr. H. V. HANDE : This is not against you, Sir.

ஆளும் கட்சியிலே 178 பேர் இருக்கிறார்கள். இந்தத் தமிழ்நாடே 178 பேர்தான் என்று முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி கூறிக் கொண்டிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் ஆறு மாதத்திற்கு மேல் இருக்கமாட்டோம் என்று கருதுகிறாரா? ஆட்சி கவிழ்ந்து போகும், நமக்கு ஏன் வம்பு என்று நினைக்கிறாரா? சபாநாயகர் தேர்தல் கொண்டுவந்தால் ஆட்சி கவிழ்ந்துவிடும் என்று பயப்படு கிறாரா? 1976 வரை இப்படியே நீடித்துக் கொண்டுபோக வேண்டு மென்று கருதுகிறாரா? இதை முதலமைச்சர் அவர்கள் தெளிவாக்க வேண்டும். இன்றைக்குத்தான் கடைசி நாள், நாளைக்கு நாங்கள் பேச சான்ஸ் கிடையாது. ஆகவே, இன்றைக்கே இதைப் பற்றிச் சொல்ல வேண்டும்.

நாங்கள் இந்த மன்றத்தில் பேசுகிறபோது காட்டமாகப் பேசு கிறோம். இங்கேயும் பேசுகிறோம், வெளியேயும் பேசுகிறோம். ரொம்பக் காட்டமாகப் பேசினார் என்று இவரை (திரு. தங்கமணி) உள்ளே தள்ளி விட்டார்கள். இப்போது இன்னொரு முறையையும் கையாள்கிறார்கள். முதலமைச்சரைத் தாக்கி கடுமையாகப் பேசாதே என்று கடிதங்கள் எழுதுகிறார்கள். அதைப் பத்திரிகையில் போடு கிறார்கள். எனக்கு 75 கடிதங்களுக்கு மேல் வந்திருக்கின்றன.

THIRU R. PONNAPPA NADAR: Is it threatening letter or letter of appreciation.

டாக்டர் எச். வி. ஹாண்டே: ஒரு மாதிரி த்ரெட்டனிங் என்று எடுத்துக்கொள்ளலாம். முதலமைச்சரைப் பற்றிக் கடுமையாகப் பேசக்கூடாது என்று எழுதுகிறார்கள். நான் பேசுவதை யார் தடுக்க முடியும்? ஜனநாயகத்தில் பேச்சுரிமை இல்லையா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதைப் போல் யாரோ கடிதம் எழுதினால் நாங்கள் எப்படித் தடுக்க முடியும்?

டாக்டர் எச். வி. ஹாண்டே: உங்கள் பத்திரிகை, உங்கள் ஆட்கள், எனக்குச் சம்பந்தமே இல்லை என்று சொல்லுகிறார்கள். அப்படியானால் "உங்கள் படத்தைப் போடுகிறேன்" என்று எப்படிச் சொல்ல முடியும். எந்தப் பத்திரிகையில்? முரசொலிப் பத்திரிகையில் போட முடியும் என்ற உரிமை இருக்கிறது அவர்களுக்கு. இந்த மாதிரிக் கடிதங்கள் எழுதி எங்களை ஒன்றும் மிரட்ட முடியாது. நாங்கள் முதலமைச்சர் கருணாநிதி அவர்களை அரசியல் ரீதியாகக்

கடுமையாக இந்த மன்றத்திலும் சரி, வெளியிலும் சரி, கண்டிப்போம், எதிர்ப்போம், குறைகளை எடுத்துச் சொல்வோம். அதுதான் சிறந்த பணி.

மதிப்பிற்குரிய கருணாநிதி அவர்களைக் கண்டித்து கடுமையாகப் பேசக்கூடாது என்று ஆயிரக்கணக்கான கடிதங்கள் எழுதினாலும் அந்த மிரட்டல்களுக்கெல்லாம் பயப்படப் போவதில்லை என்று ஆணித் தரமாக சொல்ல விரும்புகிறேன். இந்த மசோதாவை ஏற்றுக் கொள்ளக்கூடாது, இதிலே எவ்வளவோ காரியங்கள் சரியான வகையில் போடப்படவில்லை, பல விஷயங்கள் தவறாக இருக்கின்றன, இவ்வளவு சொன்னாலும் சிரித்துக் கொண்டே இருக்கிறார்கள். ப்ரூட் மெஜாரிட்டி இருக்கிறது என்ற காரணத்தால் நிறைவேற்ற முடியும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இதை ஏற்றுக் கொள்ளக்கூடாது, இதை எதிர்க்க வேண்டுமென்று சொல்லி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : உதவி சபாநாயகர் அவர்களே, மிக முக்கியமான விவாதம் நடக்கக்கூடிய இந்த மசோதாவின் பேரிலே அதிகமான நேரம் கிடைக்காத முறையில் நிலைமை ஏற்பட்டது உண்மையில் வருந்தத்தக்கதுதான். அடுத்த ஆண்டாவது இந்த மாதிரி விவாதம் நடக்கிறபோது விரிவான வகையில் குறிப்பிட்ட அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் பேச அதிக நேரம் ஒதுக்க வேண்டுமென்று முதலில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த விவாதத்திலே கட்சித் தலைவர்கள் மாத்திரந்தான் பேசுவது வழக்கம். டாக்டர் ஹாண்டே அவர்கள் கூடச் சொன்னார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நாங்கள் காலையில் இந்த நிகழ்ச்சியை முடித்துவிட்டு பிற்பகலில் மேலவையிலே நடக்கக்கூடிய விவாதங்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. ஒவ்வொரு நாளும் 2 மணி, $2\frac{1}{2}$ மணி என்று கூட்டிக்கொண்டே போனால் இங்கே பதில் கூறி முடித்துவிட்டு பிறகு அங்கு இரவு 7 மணி 8 மணி வரை நிகழ்ச்சிகள் நடைபெற்று பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, இனிமேல் ஒவ்வொரு கட்சிக்கும் இவ்வளவு நேரம் என்று ஒதுக்கிவிடுங்கள். முதலிலே நாலைந்து பெயரைக் கொடுத்துவிட்டு பிறகு பெயர்களைச் சேர்த்துக் கொண்டே போய்விடுகிறார்கள். அதற்குப் பிறகு தலைவர்கள் பேசுகிறார்கள். இப்படியே இரண்டு மணி வரை ஆகிவிடுகிறது.



திரு. கே. டி. கே. தங்கமணி : நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். நாடாளுமன்றத்தில் ஃபினான்ஷியல் பில் என்றால் அதன்பேரில் எதையும் பேசலாம். அதுதான் இங்கே அப்ரோபிரியேஷன் பில். அப்ரோப்பிரியேஷன் பில்லுக்கு இரண்டு நாட்கள் ஒதுக்கினால் என்ன? (குறுக்கீடு) பிசனஸ் அட்வைசரி கமிட்டி இருக்கிறது என்று தெரியும். ஏற்கனவே நான் சொல்லியிருக்கிறேன். டிமாண்ட்ஸ் பற்றி ஒரு மாத காலம் விவாதிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். கேரளாவில் இன்னும் வோட் ஆன் அக்கவுண்ட் நடந்து கொண்டுதான் இருக்கிறது. ஏன் ஏப்ரல் 1-ம் தேதி முடிக்கவேண்டும், ஏப்ரல் 30-ம் தேதி வரை ஏன் விவாதிக்கக்கூடாது? பல விஷயங்களைப் பற்றியும் இதிலே பேச வேண்டும். இதிலே நேரத்தைக் கட்டுப்படுத்தி நேரத்திற்குத் தகுந்தபடி பேச வேண்டுமென்ற நிலை இருப்பது வருந்தத்தக்கது என்று வற்புறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

ஏற்கனவே, ஒரு விஷயத்தைப் பற்றி டாக்டர் ஹாண்டே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் அதைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். ஒரு அறக்கட்டளைக்கு அதுவும் ஒரு ஏக போக முதலாளிக்குச் சொந்தமான, தனிப்பட்டவருக்கு 22 ஏக்கர் நிலத்திற்கு 50 லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் அந்தப் பகுதி சென்னை நகரத்திலிருந்து ஒதுங்கிய பகுதி. அதுவும் பற்றி சட்டமன்றத்தில் இரண்டு மூன்று தடவை எழுப்பப்பட்டிருக்கிறது. கேள்வி கேட்டதற்குப் பதிலும் வந்திருக்கிறது. ஆகவே, அது சம்பந்தமாக குறைந்த அளவு விசாரணையாவது நடத்த வேண்டுமென்று கூறி அதற்கு மேல் சொல்ல விரும்பவில்லை.

கிட்டத்தட்ட 526 கோடி ரூபாய் செலவு செய்ய ஏற்கனவே ஓட்டளிக்கப்பட்டிருக்கிறது. ஓட்டளித்த பணத்தை எல்லாம் முறையாக செலவழிக்க வேண்டுமென்பது பற்றிய கருத்தைச் சொல்ல வேண்டுமென்றுதான் இந்தச் சந்தர்ப்பத்தை குறிப்பாக எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற முறையில்தான் இந்த அப்ரோப்ரியேஷன் பில் வந்திருக்கிறது என்பதைத் தாங்கள் நன்றாக அறிவீர்கள். இதிலே பேசும்போது சில இலாகாக்களைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன்.

சேல்ஸ் டாக்ஸ் இலாகாவிற்கு 3 கோடி 11 லட்சம் ரூபாய் ஒதுக்கி இருக்கிறோம். அந்த இலாகா எந்த ஒரு வியாபாரியும் டாக்ஸ் எவேஷன் செய்ய அனுமதிக்கக்கூடாது என்பதிலே அரசை விட நான் உறுதியாக இருக்கக்கூடியவன். அந்த மாதிரி ரெய்டு நடந்து பெரிய அதிகாரியே ஒருவர் பெயரில் நடவடிக்கை எடுக்க

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 மார்ச் 29

வேண்டுமென்று சொன்ன பிறகும் அவரை டெம்பரரியாக ப்ரோ மோஷன் கொடுத்திருப்பதாக அறிகிறேன். விவரங்களை வைத்திருக் கிறேன், தனியாக அமைச்சரவர்களிடத்தில் கூறுகிறேன். அந்த மாதிரி நிலைமை வந்தால் எப்படி நம்பிக்கை ஏற்படும்? அந்த டிப்பார்ட்மென்ட் ரெக்கார்ட்ஸ் பூராவும் ஏதோ ஒரு இடத்தில் மறைத்து வைத்து விட்டார்கள். விஜிலென்சும் குற்றச்சாட்டு கூறி யிருக்கிறது. குறிப்பாக, ஜீ.ஓ. எண் 38264/ஆர்/பி2/71-பி டேட்டெட் 2—2—1972. இந்த உத்தரவைப் பாருங்கள். இதன் அடிப்படையில் அது நடக்கிறதா என்பதை நீங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். எனக்கு அதிகாரியின் பேரில் விருப்போ, வெறுப்போ கிடையாது. விஜிலென்ஸ் போட்ட உத்தரவு மீறப்படு கிறது என்றுதான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இது என்னுடைய இலாகா வாக இருக்கின்ற காரணத்தால் முதலமைச்சரிடம் முழுவிவரம் இருக்காது என்ற நிலையில் நான் பதில் சொல்லுவதற்காகத் தலையிடு கிறேன். விஜிலென்சில் அவருக்கு எந்தவித ப்ரோமோஷனும் கொடுக்கக்கூடாது என்று உத்தரவு பிறப்பிக்கவில்லை. விஜிலென்சுக்கு ரெபர் செய்யப்பட்டிருக்கிறது. தற்காலிகமாக ப்ரோமோஷன் கொடுப்பதைத் தடுக்க வேண்டாம் என்று அரசு முடிவு செய்திருக் கிறது. எந்த அதிகாரியாக இருந்தாலும் தண்டனை கொடுக்கப்படும் வரையில் வருகின்ற ப்ரோமோனைக் கொடுக்கலாம் என்ற முறையில் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: The Director of Vigilance has clearly stated not to promote him pending action. என்று எங்களுக்குக் கிடைத்த குறிப்பில் இருக்கிறது.

அப்படியிருக்கும்போது ப்ரமோஷன், டெம்பரரியோ அல்லது பரமெனென்டோ வந்திருக்கிறது என்பதுதான் என் குற்றச்சாட்டு.

அடுத்தாற்போல், உள்ளாட்சித் துறை இருக்கிறது. பெருமள விற்கு அதிகாரம் இல்லை. அதிகாரமில்லாத, உள்ளாட்சித் துறை அதிகமான அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒரு விபரீதமான நிலையை பரமக்குடியில் உருவாக்கி வைத்திருக்கிறது. கமிஷனர் என்ன செய்தார்? ஒரு பலசரக்குக் கடைக்காரர் கொடுக்கவேண்டிய ஒரு சிறிய தொகைக்காக, பத்து ரூபாய்க்காக, முனிசிபாலிட்டிக்கு வர வேண்டிய பாக்கியை வசூலித்த முறையில் நகரத்தை அல்லோலகல்



1973 மார்ச் 29] [திரு. கே. டி. கே. தங்கமணி]

லோலப் படுத்தியிருக்கிறார்கள். கண்டிப்பாக இது விசாரிக்கப்பட வேண்டிய விஷயம். போலீசை வைத்து ஏதாவது செய்திருக்கலாம். முனிசிபல் சிப்பந்திகளை கொண்டு போய் கடைக்குள் புக வைத்து அந்தக் காரியத்தைச் செய்து ஊரில் ஒரு ஹர்த்தால் போன்றவை நடந்து 48 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இன்று காலைப் பத்திரிகையில் பார்த்தேன். 48 பேர்களை ஜாமினில் விடக்கூடாது என்ற நிலை வந்திருப்பதாகத் தெரிகிறது. கமிஷனர் செய்த ஒரு தவறு காரணமாக இவ்வளவு விபரீதமான ப்ரீச் ஆப் லா அண்டு ஆர்டர் நிலை ஏற்பட்டு ஊரில் ஒரு பதட்ட நிலைமை ஏற்பட்டிருக்கும் நிலை வந்திருக்கிறது. ஆகவே கமிஷனர் களுக்கு நல்ல டயரக்டிவ்ஸ் கொடுக்கவேண்டும். இந்த மாதிரியான நிலைமைகளை உண்டாக்கக் கூடாது என்று சொல்லவேண்டும்.

நேற்று இதுபற்றி அனந்தநாயகி அவர்கள் விவரங்கள் சொன்னார்கள். மதுவிலக்கு சரியா இல்லையா என்ற வாதத்திற்குள் நான் போகவில்லை. முதல் ஆண்டில் கள்ளுக்கடைகள், சாராயக் கடைகள் இவற்றினை ஏலத்தில் எடுத்து லாபம் கிடைத்ததில் இப்போது ஐந்து மடங்கு அதிகமாக எடுத்து கடைசியில் முடியாத நிலையில் இருப்பதைத் தெரிந்து ரீ ஆக்ஷனுக்குக் கொண்டுவந்திருக் கிறார்கள். அப்படி வரும்போது ஏற்கனவே கொடுத்த அட்வான்ஸ் பணத்தைப் பிடித்தால் போதும், அரியேர்ஸ் என்று ரிக்கவர் செய்யக் கூடாது என்று சொன்னார்கள். அதுபற்றி முதல் அமைச்சர் அவர் களோட் கருத்து தெரிவித்தார்கள். உண்மையில் பாதிக்கப்பட்டவர் களுக்கு நன்மை செய்யவேண்டும், எக்ஸைஸ்-யைப் பொறுத்தவரை யில், காப்பிட்டல் அவுட்லே ஆன் இன்டஸ்ரியல் டெவலப்மென்ட், 13½ கோடி போட்டிருக்கிறார்கள். இன்டஸ்ட்ரியல் டெவலப்மென்ட் என்று வரும்போது ஆரம்பத்திலேயே சொன்னேன். மிக முக்கிய மான சர்க்கரை ஆலைகளை ஏன் அரசு ஏற்று நடத்தவில்லை அதற்கு மத்திய அரசிலிருந்து ஏதாவது தடங்கல் இருக்கிறதா? யூ.பி. அரசு மத்திய அரசைக் கேட்டார்கள். மத்திய அரசு கண்டிப்பாக நீங்கள் வேண்டுமென்றால் சர்க்கரை ஆலைகளை ஏற்று நடத்திக் கொள்ளலாம் என்று சொல்கிறார்கள். அவர்கள் ஏற்று நடத்திக் கொள்ளவேண்டும் என்பதில் பட்ஜெட் காலத்தில் இல்லாவிட்டாலும் அடுத்தாற்போல் செய்வதற்கும் தடை இல்லை. எனவே, இந்த மாதிரியான தொழில் களை அரசே ஏற்று நடத்தவேண்டும். அதற்குத் தக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 மார்ச் 29

பின்னர், டான்ஸி, பத்தமடையில் உள்ள வுட் வொர்க்கிங் யூனிட் க்ளோஸாகிவிட்டது. 32 பேர்களில் 12 பேர்கள் ஊஸ்டாகியிருக்கிறார்கள். 20 பேர்களை கப்பலூருக்கு டிரான்ஸ்பர் செய்திருக்கிறார்கள். நாகர்கோவிலில் 42 க்ளோஸாகியிருக்கிறது. மதுரையில் இரண்டு யூனிட்ஸ் இருக்கின்றன. தொழிலாளர்கள் 39 பேர்கள் என்றால் ஸ்டாப் 14. ஸ்டாப்க்கு செலவு ரூ. 5,000. பணியாற்றுகிற தொழிலாளர்களுக்கு ரூ. 5,800. எட்டு டி.எம்.-ஸ் இருக்கிறார்கள். அவர்கள் டீ.ஏ. ரூ. 6,000. ஆறு பேர்கள் மதராஸ் யூனிட்டில் இருக்கிறார்கள். திருச்சி, மேட்டூர், அம்பத்தூர், கிண்டி போன்ற பெரிய இடங்களில் கண்டிப்பாக டி.எம்.-ஸ் போடலாம். ஆனால் ஸீனியர் சூப்பரின்டென்டென்ட்ஸைத்தான் போட்டிருக்கிறார்கள்.

டான்ஸி நிர்வாகத்தை தீவிரமாக பரிசீலனை செய்து வேலைமுறைகளை மாற்றியமைக்கவேண்டும். ஏற்கனவே 64 யூனிட்ஸ் இருந்தன. இப்போது 59-ஆக குறைந்திருக்கிறது. அதில் சில ஊனங்கள் ஏற்பட்டுள்ளன.

இப்போது அரசைப் பொறுத்தவரையில் மன்னிப்பு கேட்க வேண்டுமென்ற ஒரு போக்கு வந்திருப்பது ரொம்பவும் வருந்தத்தக்கதாகும். ஏற்கனவே பி.டி. ஆசிரியர்கள் சம்பந்தமாக பல தடவைகள் பேசியாகிவிட்டது. அதைப் பற்றி இப்போது சொல்ல விரும்பவில்லை. பாலிடெக்னிக் மாணவர்கள் மறியல் செய்திருந்தார்கள். சிறையில் இருந்தார்கள். அவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கலாம். விடுதலை செய்யும்போது மன்னிப்பு வாங்கிக்கொண்டுதான் விடுதலை செய்தோம் என்று கமிஷனர் அறிக்கை விடுகிறார்கள். When such a thing is done, let it be done with grace என்ற ஒரு பாயின்ட்டுக்காக வேண்டித்தான் சொல்கிறேன். இல்லை என்றால் அவர்கள்மீது கேஸ் போடுங்கள், ஒரு மாதம், இரண்டு மாதங்கள் என்று தண்டியுங்கள், பரவாயில்லை. உணர்ச்சியுள்ளவர்கள், மாணவர்கள். உணர்ச்சி வேகத்தில் காரியங்கள் செய்கிறார்கள். முடிந்த பிறகு அவர்கள் வீரச் செயல் குன்றிப்போகும் முறையில் அண்டர்டேக்கிங் கொடுக்கவேண்டும் என்ற போக்கு சரியல்ல.

பின்னர், தனிப்பட்ட ஒரு விஷயம். இதுபற்றி முதல் அமைச்சர் அவர்கள் போலீஸ் இலாகா மூலம் விசாரிப்பது நல்லது. எனக்கு ஒரு மகஜர் வந்தது. 19—2—1973-இல் திருமலாபுரம் ஸ்டேஷனில் மத்தியானம் 12 மணிக்கு ஆறு பேர்களும், ஒரு பெண்ணும் கைது செய்யப்பட்டார்கள். இவர்கள் ஏழு பேர்களையும் கைது செய்து போலீஸ் ஸ்டேஷனில் வைத்திருக்கிறார்கள். போலீஸ் சப்-



1973 மார்ச் 29] [திரு. கே. டி. கே. தங்கமணி]

இன்ஸ்பெக்டர் வந்திருக்கிறார். வந்த சப்-இன்ஸ்பெக்டர் தன் நிலையில் இல்லை என்று சொல்கிறார்கள். அந்தப் பெண்ணை தனியாக வைத்திருந்து காலை நான்கு மணிக்கு அனுப்பியிருக்கிறார்கள். மறு நாள் உத்தமபாளையம் சப்-மாஜிஸ்ரேட் கோர்ட்டில் ஆறு பேர்கள் மட்டும் ரிமான்ட்க்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் போலீஸ் ஸ்டேஷனில் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இந்த விவரம் தவறாக இருந்தால் நான் சந்தோஷப்படுவேன். இதைச் சொன்னவர் பொறுப்புள்ளவர். ஒரு இளம் பெண்ணை போலீஸ் ஸ்டேஷனில் வைத்திருந்து என்ன செய்தார்கள் என்று தெரியாது. காலை 4 மணிக்கு அனுப்பியிருக்கிறார்கள். அப்படி அனுப்பிவிட்டு மற்ற மீதி உள்ளவர்களை ரிமான்ட் செய்திருக்கிறார்கள். அந்தப் பெண் ராத்திரி பூராவும் அழுதுகொண்டிருந்ததாகச் சொல்கிறார்கள். இளம் பெண்களை கைது செய்து அங்குள்ள அதிகாரிகள் தவறாக நடக்கிறார்கள் என்பதுதான் இதிலிருந்து தெரிகிறது. இந்தத் தகவல் தவறு என்றால் நான் சந்தோஷப்படுவேன். ரொம்பப் பொறுப்புள்ளவர் இந்த விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே இதுபற்றி விசாரித்து நடவடிக்கை எடுத்தால் மற்றயிடங்களில் அப்படி நடக்காத ஒரு நிலை ஏற்படும் என்பதற்காகத்தான் இந்த விஷயத்தைச் சொல்கிறேன். இதுமாதிரி சில இலாகாக்களில் ஏற்படுகின்றன.

இரவுக் காவலாளர் ஒரு தொழிலாளி. அவர் இறந்துபோய் விட்டார். அவருக்கு கொடுக்கவேண்டிய பணிக்கொடையை கொடுக்க மதுரை அக்ரிகல்ச்சரல் டிப்பார்ட்மென்டில் இருந்து சொல்லியிருக்கிறார்கள். திரு. அந்தோனி அவர்கள் கையெழுத்துப் போட்டு ஒ.மு.கி.யூ. எண் 308919/72/28—9—1972—இறந்தவரின் விதவைகளுக்கு ஏன் அந்தப் பணிக்கொடையைக் கொடுக்கவில்லை? கண்டிப்பாகக் கொடுக்கவேண்டும் என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். ஆனால் இன்னும் கிடைக்கவில்லை. அந்த விதவைகள் எல்லாம் கஷ்டப்படுகிறார்கள். இம்மாதிரி நான்காம் தர சிப்பந்திகள் திடீரென்று காலமானால், ஆக்ஸிடென்டில் இறந்து போனால், அவர்களின் வாரிசுகளுக்கு, விதவைகளுக்கு, பணம் கொடுப்பதில் ரொம்பவும் காலதாமதம் ஏற்படுகிறது. காலதாமதம் இல்லை என்றால் வேறு என்ன? ஒருசமயம் அவர் இறந்துபோகவில்லை என்று சொன்னால் வேறு ஏதாவது வேலையில் வைத்துக்கொண்டு ஏதாவது செய்து கொண்டிருக்கிறார்கள் என்றால் அது ஊழல் விஷயம். ஆகவே இதுகுறித்து பரிசீலிக்கவேண்டும்.

இறுதியாக, இந்த அரசைப் பொறுத்தவரையில் உணவுப் பொருள் மொத்த வியாபாரத்தை அரசாங்கம் ஏற்று நடத்துவதாக இருக்கிறதா இல்லையா? ஏற்று நடத்தவேண்டுமென்று மத்திய அரசு கொள்கை வெளியிட்டு பெரிய பெரிய வியாபாரிகள் எல்லாம் வேலைநிறுத்தம் செய்திருக்கிறார்கள் நாடு பூராவிலும். நாங்கள் அவர்களை ஆதரிக்கவில்லை. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இதுபற்றி உறுதியான முடிவினை எடுத்துவிட்டோமா? பல இடங்களில் உறுதியான முடிவு எடுக்காமல் செய்துகொண்டிருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்கிறேன். இப்போது கூட எப்.ஸி.ஐ. போன்ற கார்ப்பரேஷன்தான் கேரளாவில் நெல் கொள்முதல் நடத்துகிறார்கள். நாங்கள் இதுபற்றி பெரிய பிரசாரம் எல்லாம் செய்து கடைசியாக அச்சுத மேனன் சர்க்காரில் கொண்டு வந்தோம்.
பி.ப. 1-00 அதேமாதிரி இங்கும் எப்.ஸி.ஐ. மூலம் செய்யவேண்டுமென்று கேட்டோம். இங்கு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் செய்கிறோம் என்று சொல்கிறார்கள். எனக்கு கிடைத்த விவரம், பழைய நிலையே திரும்ப வந்துவிட்டது. எந்த 52 பேர்கள், 52 லைசென்ஸ் தாரர்கள் கொள்முதல் செய்து அதன் மூலம் ஊழல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று இச்சபையில் மணலி உட்பட பலர் சொன்னார்களோ அதே விவகாரம் மறுபடியும் திரும்பி வந்திருக்கிறது. மீண்டும் அதே 44 பேர்களுக்கு லைசென்ஸ் கொடுத்து அவர்களே கொள்முதல் செய்வது என்றால் இந்த அரசின் நிலைதான் என்ன? ஏற்கெனவே மொத்த வியாபாரத்தை அரசு ஏற்று நடத்துவதற்காக கார்ப்பரேஷன் அமைக்கிறோம் என்று சொன்னார்கள். இப்போது கார்ப்பரேஷன் வந்த பின்னாலும் பழைய நிலைமையே இருக்கிறது. அந்த 44 பேருக்கு லைசென்ஸ் கொடுக்கும் போக்கு இருக்குமானால் இன்று நாட்டில் உற்பத்தி அதிகமானாலும் கூட அந்த நிலைமை மாறவில்லை.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: 44 பேர், 44 பேர் என்று அடிக்கடி அங்கத்தினர் அவர்கள் பேசுகிறார்கள். அவர்கள் யாரை இப்படிக் குறிப்பிடுகிறார்கள் என்று தெரிவித்தால் பதில் சொல்வதற்கு வசதியாக இருக்கும். 44 பேருக்கு லைசென்ஸ் கொடுத்திருக்கிறோம் அதைச் சொல்கிறார்களா? தயவு செய்து விவரமாகச் சொன்னால் பதில் சொல்ல வசதியாக இருக்கும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: விவரமாகத்தான் சொன்னேன். எங்களுடைய கொள்கை எப்.சி.ஐ. மூலமாகக் கொள்முதல் செய்ய வேண்டுமென்பது. இங்கே சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாகச் செய்வதாகச் சொல்கிறார்கள். இப்போது எனக்குக் கிடைத்து இருக்கும் குறிப்பின் படி நிலைமை என்னவென்றால், சில மில்லர்களுக்கு கொள்முதல் செய்ய லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதாகும்.



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கொள்முதல் செய்வதற்கு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக ஏற்பாடு செய்து இருக்கிறோம். அரசாங்கத்திற்கு என்று ஏஜெண்டுகள் இருக்கிறார்கள். அதை ரத்து செய்யவில்லை. ரத்து செய்ததாகவும் இந்த அவையில் சொல்லவில்லை. அரசாங்கத்திற்கு என்று நியமிக்கப்பட்ட ஏஜெண்டுகள் இருக்கிறார்கள். தவறு செய்த ஏஜெண்டுகள் மீது நடவடிக்கை எடுத்து, ரத்து செய்து இருக்கிறோம். தவறு செய்யாது இருந்த ஏஜெண்டுகளை தொடர்ந்து வைத்திருக்கிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: அப்படியானால் பழைய விவகாரமே நடந்து கொண்டு இருக்கிறது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஏஜெண்டுகள் என்பது இன்று நேற்றல்ல. சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்ட் தமிழ்நாட்டில் என்று ஆரம்பிக்கப்பட்டதோ அன்றிலிருந்து ஏஜெண்டுகள் இருக்கிறார்கள். ஏஜெண்டுகள் தவறு செய்தால் அவர்களைச் சட்டப்படி நீக்கலாம். தவறு செய்யாதவர்கள் ஏஜெண்டுகளாக தொடர்ந்து வைத்துக்கொண்டிருக்கிறோம். புதிதாக யாராவது ஏஜெண்டுகளாக வேண்டுமென்று கேட்டால் அவற்றைப் பரிசீலித்து ஏற்றுக் கொள்கிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: ஏஜெண்டுகள் இருக்கிறார்கள் என்று விவரம் தரப்பட்டதற்கு நன்றி. ஏஜெண்டுகள் போய்விட்டார்கள் என்று நினைத்திருந்தேன். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் வந்த பின்னாலும் அரசு இதை வைத்திருக்க வேண்டுமா? நாம் "ரிவர்ஸ் டைரக்ஷனில்" போய்க் கொண்டிருக்கிறோம் என்று வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அதிக நேரத்தை நான் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. ஓரிரு விஷயங்களைப் பற்றி நான் சொல்லி விட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ள நினைக்கிறேன்.

ரசாயன உர வினியோகம்பற்றி கேட்கும்போதெல்லாம் தேவை இவ்வளவு இருக்கிறது; அதற்குத் தகுந்தபடி கிடைக்கவில்லை என்று சொல்கிறார்களே தவிர, கிடைத்த ரசாயன உரத்தை ஒழுங்கான

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 மார்ச் 29

முறையில் வினியோகிக்கிறார்களா என்பது சந்தேகமாக இருக்கிறது. பாரி கம்பெனி, ஷா வாலேஸ் ஆகியவர்களை ஏஜெண்ட்டுகளாக வைப்பதில் அர்த்தம் என்ன. அதைச் செய்யாமல், இதைச் செய்ய முடியாதா என்று தெரியவேண்டும். வினியோகம் பரிபூர்ணமாக சர்க்கார் பொறுப்பில் இருக்கவேண்டும். அந்த வினியோகப் பொறுப்பு இப்படி ஓரிருவர் கையில் இருப்பதால் தான் இந்தத் தவறுகள் ஏற்படுகின்றன என்ற உண்மையை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அதே சர்க்கரையைப் பற்றியும் சொல்ல விரும்புகிறேன். இங்கே 25,000 டன் மாநிலம் முழுவதிலும் உற்பத்தியாகிறது என்று சொல் கிறார்கள். இந்த 25,000 டன்னில் ஒரு 70 சத விகிதம் லெவியாகப் போய்விடுகிறது. மொத்தம் 30 சதமானம் வெளியில் விற்பதற்கு அனுமதிக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். பீகாரில் கொஞ்சம் கூட குறைவு இருக்கலாம். 8,000 டன் சர்க்கரை நமக்குத் தரப் பட்டிருக்கிறது. அது சரியான முறையில் வினியோகிக்கப்பட்டிருக் கிறதா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. நான் கூட சென்ற ஆண்டு ஜனவரி, பிப்ரவரி மாதத்தில் இந்த அவையில் கேள்வி கேட் டிருக்கிறேன். அப்போது சொல்லப்பட்டிருக்கிறது சர்க்கரை சரி யான முறையில் கோவாபரேடிவ் மூலமாகவும் வினியோகிக்கப்பட வில்லை, அரசாங்க மூலமும் வினியோகிக்கப்படவில்லை, இதே அவை யில் அந்த பதில் சொல்லப்பட்டிருக்கிறது. வினியோகிப்பதறகாக நமக்கு ஒதுக்கப்பட்ட சர்க்கரையின் கதி என்ன என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: சர்க்கரை வினி யோகத்தை பற்றிச் சும்மா இங்கே அடிக்கடி பேசிக்கொண்டிருக் கிறார்கள். மத்திய சர்க்கார் 25;000 டன்னையும் எடுத்துக்கொண்டு போய்விடுகிறார்கள். நமக்கு 9,000 டன்தான் ஒதுக்குகிறார்கள் என்று சொல்கிறோம். அதற்கு ஒன்றும் சொல்ல மாட்டேன் என்கிறீர்கள். இங்கே கொடுக்கப்பட்டதில் வினியோகம் சரியாக இருக்கிறதா என்று கேட்கிறார்கள். எல்லோருக்கும், கார்டு கொடுத்து இருக் கிறோம். சர்க்கரை ஏழை எளியவர்களுக்குக் கிடைக்கும் வகையில் கார்டு கொடுத்திருக்கிறோம். நாம் 15,000 டன் வேண்டுமென்று கேட்டு இருக்கிறோம். அது கொடுக்கப்பட்டால் தட்டுப்பாடு இருக்காது.



1973 மார்ச் 29]

திரு. கே. டி. கே. தங்கமணி: நான் கொஞ்சம் விவரம் தெரிந்து கொள்ளலாம் என்று ஆசைப்படுகிறேன். 25,000 டன் இங்கே உற்பத்தி என்று சொன்னார்கள். அதில் 16,000 டன் மத்திய சர்க்கார் எடுத்துக் கொள்கிறார்கள். எடுத்துக்கொண்டு அதில் 9,000 டன் கொடுக்கிறார்கள். ஆக, 7,000 டன் மத்திய சர்க்காருக்குப் போய் விடுகிறது. அந்த 8,000 டன் லெவி இல்லாது இருக்கிறதே அதன் நிலைமை என்ன? அது எப்படி எங்கே போகிறது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நான் விளக்கிச் சொல்லிவிடுகிறேன். மத்திய அரசாங்கம் தான் ஒவ்வொரு ஆலையிலும் எவ்வளவு உற்பத்தியாகிறது என்று கணக்கு வைத்து இருக்கிறது: மொத்த உற்பத்தியைப் பற்றி நமக்குத் தகவல் இல்லை. மொத்த உற்பத்தியில் தமிழ்நாட்டிற்கு இவ்வளவு கொடுக்கிறோம் என்று கொடுக்கிறார்கள். தமிழ்நாட்டில் 25,000 டன் உற்பத்தியானாலும் 9,000 டன் தான் கொடுக்கிறார்கள். தமிழ்நாட்டிற்குத் தேவையான அளவு கொடுக்கவில்லை என்று தான் நாம் குற்றம் சாட்டுகிறோம். மத்திய அரசாங்கம் எவ்வளவு சர்க்கரையை ஒவ்வொரு ஆலையிலிருந்தும் ரிலீஸ் செய்கிறார்களோ அவ்வளவு தான் நாம் எடுத்துக் கொள்ளமுடியும். தமிழக அரசுக்கும் இதற்கும் சம்பந்தம் கிடையாது. மத்திய அரசு உத்தரவு போட்ட பிறகுதான் அவர்களிடமிருந்து நாம் சர்க்கரையை எடுத்துக்கொள்ள முடியும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த 30 சதவீதம் தான் நமக்கு கிடைக்கிறது என்று சொன்னால், 9,000 தான் கிடைக்கிறது என்று சொன்னால், அதாவது சரியாக வினியோகிக்கப்படுகிறதா, அதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்று பார்க்கவேண்டும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அது தவறு என்று மத்திய அமைச்சர் மோகன் தாரியா அவர்கள் கூட ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அந்த முறை தோல்வி அடைந்து விட்டது என்று சொல்கிறார்கள். முதலமைச்சர் அவர்களும், தொழில் அமைச்சர் அவர்களும் சென்ற மாநாட்டில் பேசுகிறபோது அதை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். முழுவதும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இப்படி 70–30 என்று வைப்பது தவறு என்ற கருத்து ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அதை மோகன் தாரியா ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். தோல்வி அடைந்து விட்டோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இன்னும் 6,000 டன்

கொடுத்தால் இந்தக் கோளாறு இருக்காது. ஏழை எளியவர்களுக்கு கார்டு கொடுத்து இருக்கிறோம். அவர்களுக்குத் தட்டுப்பாடு இல்லை. அவர்களுக்குக் கொடுத்த கார்டை அவர்கள் வேறு ஆட்களுக்கு விற்றுவிடுவதால் தான் இந்தத் தகராறு. உள்ளபடியே தமிழ் நாட்டில் தட்டுப்பாடு ஏழை எளிய மக்களைப் பொறுத்தவரையில் கிடையாது. கிராமத்தில் உள்ளவர்களுக்கு ஜீனி கிடைப்பதில் சங்கடம் இல்லை. நம்முடைய அரசின் கவனத்திற்கு வந்து இருப்பது வேறு வியாபாரம் செய்கிறவர்கள், விசேஷ நிகழ்ச்சிகளுக்கு தேவை உள்ளவர்கள் விஷயத்தில் தான் தட்டுப்பாடு இருக்கிறது. நாம் கேட்கும் அளவுக்குச் சர்க்கரை கொடுத்தால் கள்ள மார்க்கெட் இல்லாமல் செய்ய முடியும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: ஜீனி வினியோகத்தில் நாங்கள் உதவி செய்யத் தயார். 30 சதவிகிதம் எந்த விலைக்கு நமக்கு கொடுக்கப்படுகிறது. இந்த ஆண்டு எப்படியோ நமக்குத் தெரியாது. சென்ற ஆண்டு வந்தது எப்படியென்றால் 60 சதவிகிதம் நமக்கு ஒதுக்கப்பட்டது அது ஜனவரியில் வினியோகிக்கப்படவில்லை.........

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சென்ற ஆண்டைப் பற்றிச் சொன்னார்கள். சென்ற ஆண்டு அப்படி ஏதாவது இருந்தால் தனிப்பட்ட விவாதம் வைத்துக்கொள்ளத் தயார். சென்ற ஆண்டு லெவி சர்க்கரை பூராவையும் எடுத்து சரியான முறையில் வினியோகித்து இருக்கிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: ஜனவரியில் நான் கேள்வி கேட்ட போது, நாங்கள் கூட்டுறவுத் துறை மூலமாக வினியோகம் செய்ய இருக்கிறோம் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு கூட்டுறவுத் துறை மூலமாக செய்யப்பட்டதா என்று கேட்டபோது அது கூட்டுறவுத் துறை மூலமாக வினியோகிக்கப்படவில்லை என்ற மாதிரி பதில் வந்தது. இந்த ஆண்டில் நிலைமையைச் சொல்லவில்லை.

வினியோகத்தைப் பொறுத்தவரையில் நான் வற்புறுத்த விரும்புவது—குற்றசாட்டு அல்ல—இங்கே தமிழகத்தைப் பொறுத்த வரையில் எல்லோருக்கும் போதுமான முறையில், எல்லோருக்கும் நிரவலாக பிரித்துக் கொடுக்கும் முறையில் உத்தரவிட வேண்டும். இதில் ஒன்றும் பெரிய குற்றச்சாட்டு கொண்டு வருவதற்கு இல்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.



ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். Daily Paper Reporters are to get passes in the City as in Madurai and Kerala.
நாங்கள் அது குறித்து ஒரு கடிதம் எழுதிக்கொடுத்து இருக்கிறோம். மதுரையில் பி.ஆர்.சி.யில் கொடுக்கிறார்கள். கேரளாவில் ஸ்டேட் பூராவும் கொடுத்திருக்கிறார்கள். இங்கே சென்னை நகரில் மட்டும் அவர்களுக்குப் பாஸ் கொடுங்கள் என்று கேட்கிறோம். போன வருஷம் அந்த டிமாண்டில் சம்பந்தப்பட்ட அமைச்சர் பேசுகிற போது அது ஓரளவுக்குப் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள்.

ஆகவே, அது பரிசீலனையில் இருக்கிறதா, அரசு அதன் மேல் சீக்கிரமாக ஒரு முடிவு செய்வது நல்லது. அந்தக் கரஸ்பான்டென்ட்ஸ்க்கு பெரிய அளவுக்கு ஊதியம் கிடைக்கக்கூடிய நிலையில் இல்லை. ஆகவே, அந்த டெய்லி பேப்பர் ரிப்போர்ட்டர்ஸ்க்கு பாஸ் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒரே ஒரு விஷயத்தைப் பற்றி வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். இந்த எம்.ஏ.எம். அறக்கட்டளை சம்பந்தமாக ஒரு விசாரணை நடத்த ஏற்பாடு செய்தால் நல்லதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, அடிக்கடி நண்பர் தங்கமணி அவர்கள் இதைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறார். அதை இப்பொழுதே விளக்கி விடுவது நல்லது என்று கருதுகிறேன்.

சீலிங் எல்லாம் வந்தபிறகு அறக்கட்டளைகள் அப்படியே எப்படி இருக்க முடியுமென்று சொல்லப்பட்டது. சீலிங் என்பது விவசாய நிலங்களுக்கு மட்டும்தான். சென்ற ஆண்டே இந்தப் பிரச்னை எழுந்திருக்கிறது. நில ஆர்ஜிதம் செய்யப்படும் நிலங்களுக்கு விலை மதிப்பு நில ஆர்ஜித சட்டத்தின் கீழ் நில ஆர்ஜித அலுவலர் நிர்ணயிக்கிறார். நேற்று எழுப்பிய பிரச்னை குறித்து விசாரித்தேன். அடையார் பகுதியில், பங்களாக்கள் இருக்கும் பகுதியில், வீட்டு வசதி வாரியம் 400 கிரவுண்ட் இடத்தை நில ஆர்ஜிதம் செய்துள்ளது. கிரவுண்ட் ஒன்றுக்கு ரூ. 10,500 நில ஆர்ஜிதச் சட்டத்தின்படி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கு மேல் சட்டப்படி கொடுக்க வேண்டிய சோலேஷியம் கொடுக்கப்பட்டுள்ளது. சொலேஷியம் மொத்தத் தொகை ரூ. 6,56,690.89. இதன்படி கிரவுண்ட் ஒன்று ரூ. 1,675 ஆகின்றது. ஆக, நஷ்டஈடும் சட்டப்படி கொடுக்க வேண்டிய சொலேஷியம் தொகையும் சேர்த்து கிரவுண்ட் ஒன்றுக்கு ரூ. 12,075

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 மார்ச் 29

ஆகிறது. அடையாறு பகுதியில் இந்த மதிப்பு அதிகம் என்று சொல்ல முடியாது. அடையாறு பகுதியில் பத்திரங்கள் பதிவு செய்வதற்காக ஸ்டாம்ப் சட்டத்தின் கீழ் வருவாய் வாரியம் வழங்கிய உத்திரவுபடி நிர்ணயிக்கப்பட்ட விலை கிரவுண்டு ஒன்றுக்கு ரூ. 10,000 வரை உள்ளது. மேலும் நாம் இந்த இடத்தை எடுத்து பிளாட் செய்து விற்றதில் கிரவுண்ட் ஒன்று ரூ. 18,100 வரை விற்றிருக்கிறோம். நிலத்துக்குச் சொந்தக்காரர்கள் அறக்கட்டளை நிறுவனம். நஷ்ட ஈட்டுத் தொகை போதாதென்று நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்து உள்ளார்கள். அது விசாரணையில் இருக்கின்றது.

THIRUMATHI T. N. ANANTHANAYAKI : Sir, may I know the value of the land as per Urban Land Tax Act?

DR. H. V. HANDE : Sir, the Hon. Chief Minister has given the reply but one particular information is lacking. We want the entire file relating to the transction to be placed at our disposal.
அர்பன் லேண்ட் டேக்ஸ் எவ்வளவு என்று தெரிய வேண்டும். அது கோட்டூர்தான்.
It is not Adyar. It is Kottur which is four furlongs away.
அர்பன் லேண்ட் டேக்ஸ் என்ன ரேட் என்று சொல்லவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அடையாற்றிலிருந்து இரண்டு பர்லாங் தூரத்திலிருப்பதால் அது கோட்டூ ராகி விடாது. கோட்டூர் பகுதி என்று அதற்குப் பெயர் இருக்கலாம். மத்திய அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் வீடு கூட அங்கேதான் இருக்கிறது. அந்தப் பகுதியில்தான் கட்டப்பட்டு இருக்கிறது. பழைய கார்ப்பரேஷனில் அந்த இடம் ஏற்படுத்தப் பட்டது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : தலைவரவர்களே, திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் எப்படிக் கட்டினாரோ, எந்த வகையில் எந்த அடிப்படையில் கட்டினாரோ, அதைப்பற்றி எல்லாம் இப்பொழுது நமக்கு கவலையில்லை. அதைப்பற்றி எல்லாம் ஆராயப்போனால் பல்வேறு நிலைமைகள் ஏற்படும். அந்த விஷயத் திற்குள் புகுந்தால் பல விஷயங்கள் வரும். I do not know under what circumstances it was purchased.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த விஷயம் பற்றி நேற்று ஒரு மணி நேரம் கேட்கப்பட்டது.



1973 மார்ச் 29]

திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் பத்து நிமிஷத்தில் முடித்தால் நல்லதாகவிருக்கும்.

திரு. கே. ஏ. மதியழகன் : துணைத் தலைவரவர்களே, எப்படி முடியும்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஏற்கனவே உங்களுடைய கட்சி உறுப்பினர் பேசியிருக்கிறார். 12 நிமிஷம் பேசுங்கள். சரியாக ஒரு மணி 25 நிமிஷத்திற்கு முடித்துவிடுங்கள்.

திரு. கே. ஏ. மதியழகன் : நீங்கள் சொல்வது சரியல்ல. ஒவ்வொரு கட்சித் தலைவருக்கும் அரை மணி நேரம் கொடுத்து வருகிறீர்கள்.

THIRU R. PONNAPPA NADAR : Sir, yesterday I got only five minutes. If this practice is continued, I do not want to speak at all.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் என்னுடைய அதிகாரத்தைத் தவறாகப் பயன் படுத்தக் கூடியவனல்ல. இப்பொழுது இரண்டு நிமிஷம் வீணாகிவிட்டது. நீங்கள் பேசலாம்.

திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, எதற்கெடுத்தாலும் ரேஷன், மின்சாரத்திற்கு ரேஷன், சினிமா கொட்டகையில் ரேஷன், சர்க்கரையில் ரேஷன், ஒலி பெருக்கியில் பத்து மணி வரையில்தான் இரவில் பேசவேண்டும் என்று ரேஷன், கடைசியாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சட்ட மன்றத்தில் கொண்டு வந்துள்ள இந்த நிதி ஒதுக்கீட்டு மசோதாவின் மீது பேசுவதற்குக் கூட ரேஷன் முறையில்தான் பேச வேண்டும் என்ற அளவுக்கு வந்திருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதில் யாரையும் குறை சொல்ல முடியாது. என்னையோ முதலமைச்சர் அவர்களையோ குறை சொல்வது சரியாகாது. பிஸினஸ் அட்வைசரி கமிட்டி கூடித்தான் இந்த விதமான முடிவு எடுக்கின்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அவர் ஒவ்வொரு நாளும் 12½ மணிக்கு மேல் தான் சபைக்கு வருகிறார். அதற்கு முன்னால் யார் யார் எவ்வளவு நேரம் பேசினார் என்பது

அவருக்குத் தெரியாது. அவர் வந்ததற்குப் பின்னால் தனக்கு இவ்வளவு நேரம் வேண்டும் என்று கேட்கிறார். நேற்று நான் பேச நேரமில்லை. நானும் திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் 15 நிமிஷத்தைப் பகிர்ந்து கொண்டு பேச வேண்டிய நிலைமை ஏற்பட்டது. திருமதி அனந்தநாயகி அவர்கள் 40 நிமிடம் பேசியிருக்கிறார்.

திரு. கே. ஏ. மதியழகன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இதிலே யாரையும் குறை சொல்லவில்லை. இன்றையதினம் இந்த அவையில் பேசுவதில் ரேஷன் இருப்பதால் பல முக்கியமான விஷயங்களை எடுத்துக் கூற முடியாத நிலை ஏற்படுகிறது. மற்ற மாநிலங்களிலே எல்லாம் சட்ட மன்றம் 40 நாட்கள், 50 நாட்கள் நடைபெறுகின்றன. நான் 12 மணிக்கு மேல் வந்தேன் என்பது உண்மை ஆனால் ஒரு உறுப்பினர் எப்பொழுது வருகிறார், வருகிறாரா இல்லையா என்பது பெரிய விஷயமல்ல. ஒவ்வொரு கட்சியும் சபையில் தனது கருத்துக்களை எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. இந்த முறை இருக்குமானால் அவர்கள் எப்படி எடுத்துச் சொல்ல முடியும். 450 கோடி ரூபாய்க்கு வரவு-செலவு திட்டம் தீட்டுகிறது இந்த அரசாங்கம். ஒரு கட்சியிடம் பொறுப்பைக் கொடுத்திருக்கிறோம். அந்தக் கட்சியினுடைய ஆட்சி போடப்பட்ட திட்டங்களை சரிவர நிறைவேற்றுகிறதா என்று கண்காணிப்பது எதிர்க்கட்சிகளுடைய பொறுப்பு. எங்களுடைய எண்ணங்களைக் கேட்கின்ற அளவுக்குக்கூட பொறுமையில்லை என்று சொன்னால், இந்த நாட்டில் இருக்கின்ற அவல நிலைமையைத்தான் நினைக்க வேண்டியிருக்கிறதே தவிர யாரையும் குறை கூறவில்லை.

ஒரு உறுப்பினர்: இந்தச் சபையை இன்னும் 15 நாட்களுக்கு அதிகப்படுத்தி வைத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதற்கு நீங்கள்தான் பொறுப்பு. நேரம் குறிப்பிட்டது நீங்கள்தான். பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் எல்லாக் கட்சியினுடைய உறுப்பினர்களும் இருக்கிறார்கள். அவர்களாகச் செய்த முடிவுதான்.

திரு. கே. ஏ. மதியழகன்: அதிலே ஒன்றும் தவறில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் ஏற்படுத்தப்பட்ட முடிவின்படி தான் நடந்து கொண்டிருக்கிறது. இதில் உங்களுக்கும் சங்கடம். எனக்கும் சங்கடமாகத்



தான் இருக்கிறது. ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு அதிக நேரம் கொடுத்து விடுகிறார் என்ற குறை சொல்லிவிடாமல் இருப்பதற்காக அவர்களுக்கு அதிக நேரம் கொடுக்காமல் பார்த்து வருகிறேன். இதற்கெல்லாம் பிஸினஸ் அட்வைசரி கமிட்டிதான் பொறுப்பு. அந்தக் கமிட்டியில் மற்ற கட்சித் தலைவர்களும் என்ன சொல்கின்றார்கள் என்பதைக் கேட்டுத்தான் நான் முடிவு செய்கிறேன். ஒவ்வொரு கட்சிக்கும் எவ்வளவு நேரம், ஒவ்வொரு உறுப்பினருக்கும் எவ்வளவு நேரம் என்று ஆலோசிக்கப்பட்டு முடிவு எடுக்கப்படுகிறது.

டாக்டர் எச். வி. ஹாண்டே: தலைவரவர்களே, பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் ஒத்துக் கொண்டபடி, ஒவ்வொரு கட்சி தலைவர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் எவ்வளவு நேரம் என்று தீர்மானித்தபடி நடக்கவில்லை. அப்படி நடந்திருந்தால் இப்படி வந்திருக்காது. அதற்கு யார் பொறுப்பு? தீர்மானிக்கப்பட்டபடி ஸ்டிர்க்ட்டாக நடந்திருந்தால் சரியாக இருந்திருக்கும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவர் அவர்களே, டாக்டர் ஹாண்டே என்னுடைய பேச்சைக் குறித்துச் சொல்கிறார் என்று கருதுகிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சி எவ்வளவு நேரம் எடுத்துக் கொண்டது, அம்மையார் கட்சி எவ்வளவு நேரம் எடுத்துக் கொண்டது என்று அவர்களுக்கே தெரியும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, நேற்றையதினம் கூட அம்மையார் அவர்கள் மட்டும் நாற்பது நிமிஷம் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த மன்றத்தின் செல்லப்பிள்ளை என்று கூட பெருமையாகக் கூறப்படுகிறது. இந்த மானியத்தில் எதிர்க்கட்சிகளுக்கு உரிய நேரம் கொடுக்கப்படவில்லை என்பது உண்மை.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, நான் இந்த ஒரு நாள்தான் பேசினேன். எத்தனையோ நாட்களில் நான் பேசிக் கொண்டிருக்கும்போதே, தலைவர் அவர்கள் மணி அடித்துக் கொண்டிருந்திருக்கிறார். நேற்று ஒரு நாள்தான், ஆறு தடவை குறுக்கிடு ஏற்பட்டதால் அவ்வளவு நேரம் எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பின்னால் இருக்கிறவர்களுக்கு டைம் கிடைப்பது ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, பின் வரிசையில் உள்ளவர்கள் முன் வரிசைக்கு வருமாறு நான் அழைக்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன்: தலைவரவர்களே, இந்த நிதி ஒதுக்கீட்டிலே 465 கோடி ரூபாய்க்குமேல் கேட்டிருக்கிறார்கள். இந்த நாட்டை நிர்வகிக்கக்கூடிய பொறுப்பு அவர்களிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. நான் பொதுப்படையாக இந்த நிதிநிலை அறிக்கையை பார்க்கின்றபோது, என்னென்ன செலவுகளைச் செய்தார்கள். எத்தனை கோடி ரூபாய் ஒதுக்குகிறார்கள் என்பவைகளை எல்லாம் பார்த்து பொதுவான ஒரு அளவுகோலை வைத்து மூன்று கோணங்களின் அடிப்படையில் பார்ப்பது பொருத்தமாக இருக்கும் என்று நினைக் கிறேன். இந்த 465 கோடி ரூபாயை அந்த மூன்று கோணங்களின் அடிப்படையில் பார்த்து, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஆழ்ந்து சிந்தித்து—எனக்குக் கூட அல்ல—அவரது மனசாட்சிக்கு தக்க பதில் சொல்வது அவரது கடமை என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

இன்று நாட்டு மக்கள் இந்த அரசிடத்திலே பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார்கள். அந்த பொறுப்பை ஏற்றிருக்கிற இந்த அரசாங்கம் இந்த நாட்டு மக்களின் ஏழை எளிய பாட்டாளி மக்க ளின் வறுமையைப் போக்கிட வேண்டும்; அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும்; அவர்கள் வருவாயை அதிகரிக்க வேண்டும். இந்த நாட்டிலே இருக்கக்கூடிய செல்வந்தர்கள்—அவர் கள் சேமித்து வைத்திருக்கின்ற செல்வக் குவியல் தகர்க்கப்பட வேண்டும்.

முதலாவதாக இந்த 465 கோடி ரூபாய் பட்ஜெட்டிலே இந்த நாட்டின் சாதாரண ஏழை எளிய மக்களின் விவகாரம் என்ன ஆயிற்று என்று சொல்லப்படவில்லை. ஏற்கெனவே வளர்ந்திருக்கிற முதலாளிகள் ஏழை மக்களை சுரண்டி வாழ்கின்ற அவர்களின் ஏக போகத்தை தகர்க்க என்ன செய்யப்போகிறார்கள் என்பது முதல் கேள்வி.

இரண்டாவதாக கோடிக்கணக்கான மக்களுக்கு—கள்ளங்கபட மற்ற மக்களுக்கு—நல்ல உடல் உறுதியோடு எங்கள் உடல் உழைப்புத் தருகிறோம் சமுதாயத்தின் மறுமலர்ச்சிக்குக் கொடுக்கிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிற மக்களுக்கு—வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க என்ன உத்தரவாதம் வைத்திருக்கிறார்கள்?



"ரைட் டு ஒர்க்" என்று சொல்லக்கூடிய அந்த கோடிக்கணக்கான மக்களின் உரிமைக்கு இந்த மாநில அரசு எத்தகைய பாதுகாப்பை அளிக்கப்போகிறது என்பது இரண்டாவது கேள்வி.

மூன்றாவது கேள்வி, ஒவ்வொரு பிரஜைக்கும், ஒவ்வொரு சாதாரண குழந்தைக்கும் வயோதிகருக்கும்—யாராக இருந்தாலும்—அத்தியாவசிய தேவையான பொருட்களின் விலைவாசியை இந்த அரசு எந்த அளவுக்குக் கட்டுப்படுத்தி இருக்கிறது? என்னென்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்பது. இந்த மூன்று கோணங் களிலே இந்த பட்ஜெட்டைப் பார்த்தால் இந்த நாட்டின் 4 கோடி மக்களின் தேவையை பூர்த்தி செய்கின்ற அளவுக்கு இல்லை என்பதை திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அளவுகோலை மையமாக வைத்துப் பார்த்தால் இதிலே ஒரு விளிம்பைக் கூட தொடவில்லை என்பது நன்றாகத் தெரியும்.

இந்த ஒரு மாத காலமாக நம்முடைய முதலமைச்சரவர்களின் முன்னால் பல பிரச்சனைகள் எழுப்பப்பட்டிருக்கின்றன. இதற்கு முன்பு கோட்டூர் பக்கத்திலே இருக்கிற ஒரு நிலத்தைப்பற்றிய புகார் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டது. 50 லட்சம் ரூபாய் அந்த நிலத் திற்குத் கொடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். இது ஒரு தாறு மாறான முறைகேடான செயல் என்று நம்முடைய உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்களும், நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்களும் சொன்னார்கள். அதற்கு முதலமைச்சரவர்கள் விளக்கம் சொல்லவேண்டும். இதிலே ஒரு சந்தேகம் ஏற்பட்டப் பிறகு தெளிவான விசாரணை செய்வதில் என்ன நஷ்டம் வந்துவிடப் போகிறது! அப்படி விசாரணை செய்வது குற்றமல்ல. அதற்கு ஒரு காரணத்தைச் சொன்னார்கள். 12,000 ரூபாய் இருக்கிறது; சுப்பிரமணியம் வீடு இருக்கிறது என்று சொன்னார்கள். இங்கேதான் இருக்கிறது விவகாரம். அடையார் பக்கத்திலே அமைச்சர்கள் இருக்கிற இடத்திலே-அமைச்சர் மாதவன் வீட்டுக்குப் பக்கத்தில் எங்கள் கட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு நிலம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. அதன் மதிப்பு 5,000 ரூபாய். அது 5,000 ரூபாய் இருக்குமானால் கோட்டூர் பக்கத்தில் சிதம்பரம் செட்டியார் அவர்கள் வீட்டுக்குப் பக்கத்திலே இருக்கிற நிலத்திற்கு 12,000 ரூபாய் எப்படி வரும் என்று சாதாரண மக்கள்கூடக் கேட்பார்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: எம்.ஜி.ஆர். அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் நிலத்தின் மதிப்பு 5,000 ரூபாய் என்று சொன் னார்கள். அவர்கள் ரெவின்யூ அமைச்சராக இருந்தபோதுதான்

[திரு. ப. உ. சண்முகம்] [1973 மார்ச் 29

அந்த நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. 20,000 ரூபாய்க்கு அந்த நிலத்தை மதிப்பிட்டு 5,000 ரூபாய்க்குக் கொடுக்கலாம் என்று அவர்களே ஃபைலில் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன் : இவ்வளவு ரூபாய் என்று ருஜூப் படுத்துவதற்காகப் பேசிவிட்டால் போதாது. இந்த மன்றத்திலே அதை ருஜூப்படுத்த வேண்டுமென்றால் அந்த ஃபைலை இங்கே கொண்டுவந்து காட்ட வேண்டும். 5,000 ரூபாய் என்று சொல்லியிருக்கிறார்கள். திரு. சண்முகம் அவர்களுக்கு எம்.ஜி.ஆர், எங்களை விட அத்தியந்த நண்பர் அல்லவா! அதனால் 5,000 ரூபாய்க்கு விட்டிருப்பார்கள். ஃபைலைப் பார்த்தால் தெரிந்துகொள்ளலாம். You must take responsibility.

THIRU R. PONNAPPA NADAR : The cat is out of the bag.

டாக்டர் எச். வி. ஹாண்டே : யார் யார் என்ன செய்தார்கள் என்பது மன்றத்திற்குத் தெரியட்டும்.

திரு. கே. ஏ. மதியழகன் : அது 5,000 ரூபாயாக இருக்கும்போது இதற்கு 12,000 ரூபாய் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். "அர்பன் லாண்ட் டாக்ஸ்" என்ன முறையிலே நிர்ணயம் செய்கிறார்கள் என்று அம்மையார் அவர்கள் சந்தடிச் சாக்கிலே கேட்டார்கள். அதை யாரும் கவனித்ததாகத் தெரியவில்லை. அதற்குப் பதில் சொல்ல வேண்டும். இதிலே தவறு நடந்திருக்கிறதா அல்லது லான்ட் அக்விசிஷன் ஆக்டில் உள்ள குறைபாடா என்பது தெளிவாக இல்லை. இதில் இருக்கிற விவகாரங்களைப்பற்றி நான் நேற்று ஒரு பிரச்னையைக் கிளப்பினேன். அர்பன் லான்ட் டாக்ஸைப்பற்றிக் கேட்டால் 50 லட்சம் ரூபாய்க்கு வாங்கினோம்; 70 லட்சம் ரூபாய்க்குக் கொடுத்தோம்; 20 லட்சம் லாபம் என்று சொல்கிறார்களே தவிர, அதற்குச் சரியான பதில் சொல்லவில்லை. நகரப்புறங்களிலே லட்சக்கணக்கான ஏழை எளிய மக்கள் குடியிருக்க நிலம் இல்லாமல் இருக்கும்போது ஒருசில பணக்காரர்களுக்கு நகரப்புறங்களிலே இருக்கின்ற நிலங்களுக்கு அர்பன் லான்டுக்கு ஒரு சீலிங் வைக்கவேண்டுமென்று சொல்லப்பட்டது. அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை. லான்ட் அக்விசிஷன் பற்றி எல்லாம் சொன்னார்கள். ஏக்கருக்கு 20,000 ரூபாய் என்று கொடுத்தோம், 20 லட்சம் ரூபாய் லாபம் என்று சொன்னார்கள் ஏதோ பெரிய வியாபாரிகளைப் போல பெரிய வணிகர்களைப் போல 20 லட்சம் லாபம் பெற்றோம் என்று சொல்கிறார்கள். லான்ட் சீலிங்



1973 மார்ச் 29] [திரு. கே. ஏ. மதியழகன்]

ஆக்ட் வந்திருக்குமானால், நகரப்புறச் சொத்துக்கு உச்சவரம்பு விதிக்கும் சட்டம் வந்திருக்குமானால் ஏழை எளிய மக்களுக்குக் குடியிருப்பு வசதி கிடைத்திருக்கும். இப்போது அது இல்லாமல் போய் விட்டது.

விலைவாசிக் கட்டுப்பாட்டிலே இந்த அரசு தோல்வி அடைந்திருக்கிறது. 35 லட்சம் டன் விளைந்த காலத்தில் படியரிசித் திட்டம் இருந்தது. இப்போது 55 லட்சம் டன் வந்த பிறகு உரிய பணத்திற்குக் கிடைக்கவில்லை ; பொருட்களின் விலை குறையவில்லை. அதற்கெல்லாம் உரிய காரணத்தைச் சொல்ல வேண்டும்; தெளிவான பதில் சொல்ல வேண்டும். விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டுமானால் உணவு தானிய வர்த்தகத்தை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும். கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டது என்னவாயிற்று என்று தெரியவில்லை. இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரும் முடியப் போகிறது. ஏதாவது ஒரு கோடு காட்டியிருக்கிறார்களா என்றால் இல்லை.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : 55 லட்சம் டன் எங்கே போயிற்று என்று முன்னாள் உணவு அமைச்சர் கேட்கிறார்கள். அது எங்கும் போய்விடவில்லை. முன்னாலே நொய்யாகப் போய் விட்டது என்று சொன்னார்கள். அதெல்லாம் அவர்களுக்குத்தான் விளக்கமாகத் தெரியும். இன்றைக்குத் தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் வெளி மாநிலங்களுக்குப் போய்க்கொண்டிருக்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : இடையிலே இருக்கின்ற இடைத் தரகர்களை என்ன செய்தீர்கள்?

DR. H. V. HANDE : Sir, on a point of order. Does the Hon. Minister say that the Government have lost a lot of rice? That means that he has not told the truth. Whether the rice has gone away or whether it has been stolen, it is the business of the Hon. Minister to take responsibility for it He cannot say that somebody has done it. What is the responsibility of the Hon. Minister? It is his business to say the truth as he has taken his oath of allegience under..................

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு உறுப்பினர் மதியழகன் அவர்கள் பேசும்போது உணவுதானிய வர்த்தகத்தை அரசாங்கம் ஏற்று நடத்தவில்லை; விலைவாசியைக் கட்டுப்படுத்த

வில்லை; அரசாங்கம் தலையிடவில்லை என்று கோபப்படுகிறார்கள். அதற்கு என்ன செய்வது? மத்திய அரசு அரிசி வியாபாரத்தை ஏற்று நடத்துவதைத் தள்ளி வைத்திருக்கிறார்கள். பிறகு பார்த்துக்கொள்ள லாம்; அடுத்த சீசனில் பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்கிறார் கள். அவர்கள் சொல்வதற்கு நாங்கள் கட்டுப்பட வேண்டியிருக் கிறது. அதற்கு என்ன செய்வது?

திரு. கே. ஏ. மதியழகன்: என்ன செய்வது, என்ன செய்வது
பி.ப. 1-30 என்று சொன்னால் பிரச்சனை தீர்ந்து விடாது. உணவுதானிய வர்த்தகத்தை அரசாங்கமே ஏற்று நடத்தவேண்டும். இந்த நிதிநிலை அறிக்கையிலே அதற்காக என்ன திட்டத்தைப் போட்டிருக்கிறீர்கள்? அடுத்த சீசனுக்குப் பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்வது நியாயமாக இல்லை; வேண்டுமானால் ஒரு எக்ஸ்கியூசாகக் கருதப்பட லாம். அது ஒரு தெளிவான கருத்தாக அமையவில்லை. இதே மாதிரித்தான் சர்க்கரை ஆலைகளும். இந்தச் சர்க்கரை ஆலைகள் இவ்வளவு சிரமப்பட வேண்டியதில்லை. அரசு ஏற்றுக்கொண்டிருந்தது நம் சர்க்கரை ஆலைகளாக இருந்தால், விவசாயிகளுக்கும் இன்னும் அதிகப் பணம் கொடுக்க முடியும், வாங்கி உபயோகிக்கின்றவர் களுக்கும் இன்னும் குறைந்த விலையில் கொடுக்க முடியும். இப்படி சர்க்கரை ஆலைகளைத் தேசியமயமாக்கும் விவகாரத்தில் உங்கள் கொள்கை என்ன? சொல்ல வேண்டாமா? இதுபோலத்தான் அரிசி ஆலைகள். இவற்றையும் தேசியமயமாக்கும் விஷயத்தில் இந்த அரசின் கொள்கை என்ன என்று கேட்டதற்கு இதுவரையில் சரியான, தெளிவான பதில் சொல்லப்படவில்லை.

இவைகளினால்தான் இந்த நாட்டு மக்களுக்கு, ஏழை எளியவர் களுக்கு நன்மை செய்ய வாய்ப்பு இருக்கின்றதே தவிர, நாம் முன் பிருந்த அரசின் தொடர்பாக இருக்கும் காரணத்தினால்தான் இப்போது பல துறைகளில் இன்னல்கள் ஏற்பட்டுக் கொண்டு இருக் கின்றன. அதே காரணத்தினால்தான் மின்சாரத்தில்கூட நாம் இந்தக் கதிக்கு வந்திருக்கிறோம். மற்ற அமைச்சர்கள்மீது பழி போடுவது அவர்களும் காலத்தில் மழை பெய்யவில்லை என்று சொல்லுவது என்றால், இதில் நம்முடைய பங்கு என்ன, பொறுப்பு என்ன என்பதை யும் கண்டிப்பாக நாம் இந்த நேரத்தில் சிந்திக்கக் கடமைப்பட்டு இருக்கிறோம்.

தொழில் அமைச்சர் அவர்கள் நேற்று தொழிலதிபர்கள் மகா நாட்டில் பேசியிருக்கின்றார், "மத்திய சர்க்காருக்கு ஒரு கொள்கை யும் இல்லை, எதை தேசியமயமாக்குவது என்று தெரியவில்லை. ஏக



போகங்களையெல்லாம் எடுத்துக்கொள்ளுவதா கூடாதா, ஜாயிண்ட் செக்டாரை எப்படி நடத்துவது, ப்ரைவேட் செக்டாரை எப்படி நடத்துவது என்று அவர்களுக்கு ஒன்றும் தெரியவில்லை" என்று இப்படிச் சொல்லியிருக்கிறாரே தவிர இவர்களுடைய நிலை என்ன வென்றால், அவர்களைவிடக் குழப்பமாகத்தான் இருக்கிறது. எதை தேசியமயமாக்குவது, எதைச் செய்யக்கூடாது என்று திட்டவட்ட மான கொள்கை இல்லாமல், தொழில் கொள்கையில் இவர்கள் ஒரு பெருங் குழப்பத்தில் இருக்கும் காரணத்தினால் பெரும் பணக்காரர்கள் இன்னும் பெரும் ஏகபோக தொழிலதிபர்களாக ஆவதையும் ஏழை மக்கள் மேலும் ஏழைகளாக ஆவதையும்தான் பார்த்துக் கொண்டிருக் கிறோம்.

விலைவாசிகள் இப்படி ஏறிக் கொண்டே இருக்கின்றதே? அத்தியா வசியமான பொருள்களின் விலைகளையாவது அரசாங்கம் கட்டுப்படுத் தக் கூடாதா? கடலை எண்ணெய் விலை ஒரேயடியாக ஏறிக்கொண்டிருக் கின்றது. ஏதாவது செய்யக்கூடாதா? கேட்டால் மத்திய அரசின் கன்கரென்ஸ் வேண்டும் என்று சொல்லுவார்கள். வேறு பல மாநிலங்களிலே தைரியமாகச் செய்கின்றார்களே அதுபோல தைரிய மாகச் செயல்படக் கூடாதா?

மின்சாரத்தைப் பொறுத்தவரையில் மாநில அரசுக்கு நிரம்பப் பொறுப்பு இருக்கின்றது. கொஞ்ச நேரம் கொடுங்கள். நேரம் கொடுப்பீர்களானால் நான் இதைப் படித்துக் காண்பிக்கலாம் என்று கருதுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஐந்து நிமிஷத்தில் படித்துக் காண்பிக்கலாம்.

திரு. கே. ஏ. மதியழகன்: ஐந்து நிமிஷங்கள் போதும். மின் சாரத்தைப் பொறுத்தவரையில் அவர்களுக்குப் பொறுப்பு இருக் கின்றது. நாம் ஒன்றும் முறையாகச் செய்யவில்லை. "ஃபால்டி ப்ளானிங்". மின்சாரவெட்டு 25 சதவிகிதம், 45 சதவிகிதம் 75 சத விகிதம் என்றெல்லாம் சொல்லுகின்றார்கள். இது ஜூன் மாதம் தெரியாதா அல்லது ஜூலை மாதம் தெரியாதா? பஞ்சாப் மாநிலக் காரனும், அரியானா மாநிலக்காரனும் வெளிநாடுகளிலிருந்து ஜெனரேட்டர்களை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஏன், நேற்றுக் கூட தொழிலதிபர்களெல்லாம் அமைச்சரிடம் சொல்லியிருக்கின்றார் களே, "எங்களுக்கெல்லாம் கொஞ்சம் முன்பே இப்படிப்பட்ட

நிலைமைகள் வரும் என்று சொல்லியிருக்கக் கூடாதா" என்று; ஹைடல் பவர் உற்பத்தி செய்கிறோம் என்று சொல்லிக்கொண்டு வேறு ஒன்றும் செய்யாமல், இப்போது பருவ மழை தவறிவிட்டது என்ன செய்வோம் என்றால், எவ்வளவு முக்கியமான பிரச்சினை, நிக்சன் அவர்கள்கூடப் பேசியிருக்கின்றார்கள். இதற்குப் ப்ரயாரிடி பேஸிஸில் முதலிடம் கொடுக்க வேண்டும் என்று, அமெரிக்க ஜனாதிபதி நிக்சன் அவர்களே, பேசியிருக்கின்றார்கள். இவ்வளவு பெரிய விவகாரத்தில், மேட்டூரில் தண்ணீர் குறைந்து விட்டது, அங்கே குறைந்துவிட்டது, இங்கே குறைந்துவிட்டது என்று சொல்லி 30 சதவீதம் வெட்டு, 75 சதவீதம் வெட்டு என்று சொல்லிக் கொண்டு இருப்பதைத் தவிர இதற்கு மாற்று என்ன செய்தீர்கள்?

இதைச் சொன்னால், இப்போது அந்த மந்திரிகளைக் கோபித்துக் கொள்ளுகின்றார்கள். அந்த மந்திரிகளைக் கோபித்துக்கொண்டால் எனக்குக் கவலையில்லை. ஆனால் செய்த காரியம் என்ன? எண்ணூர் தெர்மல் ஸ்டேஷனுக்கு நிலக்கரி வேண்டும் என்கின்றார்கள். ஒரு லட்சம் டன் வேண்டும், 30 ஆயிரம் டன்தான் கொடுக்கின்றார்கள் என்றால் இது முதலிலேயே தெரியாதா? பத்து வருஷமாக நிலக் கரியை ஸ்டாக் செய்து வைக்கவேண்டும் என்று பெரிய திட்டம் இருந்து வந்திருக்கிறதே, இந்தத் திட்டத்தைப் பற்றிக் கொஞ்ச மாவது பார்த்தோமா? அன்றாடம் காய்ச்சிகளைப் போல தினம் தினம் வறுமையால் அவதிப்படுகின்றவர்களைப் போல—தினம் தினம் அரிசி வாங்கிச் சாப்பிடுகின்றவர்களைப் போல என்று இருந்தோமே தவிர நிலக்கரி வெளி மாநிலத்திலிருந்துதான் வரவேண்டும் என்று தெரியாதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அந்த நிலக்கரி இங்கு இல்லை என்பது தெரியாதா என்று ரொம்ப நேரமாக அங்கத்தினர் அவர்கள் பேசிக்கொண்டு இருக்கின்றார்கள். இது பற்றி மத்திய அரசுக்கு எழுதியதும், அவர்கள் "தர இயலவில்லை" என்ற கருத்தினைத் தெரி வித்ததும் ஆகிய இந்தச் செய்திகளெல்லாம் சட்ட மன்றத்தில் விளக்கப்பட்டன. இந்த விவரங்கள் அங்கத்தினருக்குத் தெரியாதா என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன்: அவரைப் போல ஞான ஸாகரம் என்று இல்லாவிட்டாலும் . . .

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: யார் யார் ஞான ஸாகரம் என்பது நாட்டிற்குத் தெரியும். . . . மத்திய அரசின் பொறுப்





பினை மறைத்துப் பேசுவதில் எந்தவிதமான பலன் மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குக் கிடைக்கும் என்பது எனக்குத் தெரிய வில்லை.

திரு. கே. ஏ. மதியழகன்: ஏதோ மாஜிப் பேராசிரியர் அவர்கள் ரொம்பத் தெரிந்தவர் போல, மாணவர் ஒருவருக்குச் சொல்லுவது போலச் சொல்லுகின்றார். நான் இதைச் சொல்லுகின்றேன் என்றால் எனது நாட்டு மக்களின் பிரதிநிதியாக அவர்களுடைய உணர்வினைப் பிரதிபலிக்கும் முறையில் சொல்லுகின்றேன். இதைச் சொல்லும் போது, இது தெரியாதா, அது தெரியாதா என்று கேட்டு, அவருக்கு எல்லாம் தெரியும் என்று காண்பித்துக் கொள்ளுகின்றார் என்றால் அவரைப் பாராட்டி மாலையும் அணிவிக்கின்றேன்.

ஆனால் இப்போது உள்ள பிரச்சனை, இப்போது 20 ஆயிரம் டன் தான் நிலக்கரி கொடுக்கின்றார்கள், 10 ஆயிரம் டன்தான் கொடுக் கின்றார்கள், 2 ஆயிரம் டன்தான் கொடுக்கின்றார்கள் என்றால், இந்த மாதத்தில்தான் தகராறு வந்ததா? எவ்வளவு பேர் டெல்லிக்குப் போகின்றீர்கள்? கேட்டிருக்கலாமே? இதற்கு முன்பே ஜாக்கிரதை யாக இருந்திருக்கக் கூடாதா? சரி, அதுமட்டும்தான் காரணமா? ஏன் ரிப்பேர் ஆயிற்று தெர்மல் ஸ்டேஷன்? நீர்சக்திக் கசிவு எனகிறார் அமைச்சர் மாதவன் அவர்கள். இன்னும் மணல் வந்து விட்டது என்கிறார். இதெல்லாம் டிஸைனிலும் தவறு ஏற்பட்டிருக் கின்றது. மெய்ண்ட்டெனன்ஸிலும் தவறு ஏற்பட்டிருக்கின்றது. என்பதைக் காட்டுகிறது. காங்கிரஸ்காரர்கள் காலத்தில் ஏற்பட் டிருந்தாலும் சரி, நாம் எல்லோரும் சேர்ந்திருந்த காலத்தில் ஏற்பட்டிருந்தாலும் சரி அல்லது இப்போது ஏற்பட்டிருந்தாலும் சரி. இருக்கும் நிலைமையை வெளிப்படையாக விமரிசனம் செய்வதன் மூலம்தான் இதை நிவர்த்திக்க முடியும். இதில் கொஞ்சம் முன் ஜாக்கிரதையுடன் இருந்திருக்க வேண்டும் என்று சொல்லுகிறேன். இதைப் பற்றிய நிலைமைகளையெல்லாம் சொல்லும்போது வாரியத்தின் முன்னாள் தலைவர் சொல்லியிருக்கின்றார்.

The present installed hydro capacity of Tamil Nadu grid is about 1,220 MW. Out of this, 537 MW. of installed capacity is dependent on irrigation discharges. Thus, they practically become seasonal stations. The rest of the hydro installation totalling 690 MW. depends on the rainfall and is a varying factor every year.

[திரு. கே. ஏ. மதியழகன்] [1973 மார்ச் 29

From the recent decisions of the Tamil Nadu Electricity Board, it appears that large number of hydro-electric stations are proposed to be built. Even spending a pie on hydro-electric station in Tamil Nadu is going to be an unprofitable outlay.

என்று மின்சார வாரியத்தின் தலைவராக இருந்த திரு. இராதாகிருஷ்ணன் அவர்கள் ஒரு கருத்தரங்கில் பேசிய உரையிலிருந்து இதைச் சொல்லுகின்றேன். இவ்வளவையும் சொல்லிவிட்டு, அவர் இன்றைக்கு வாரியத்தில் பணிபுரிகின்றவர்களுடைய போக்கைச் சுட்டிக்காண்பிக்கும் முறையில்

As immediate measure, absolute discipline among the rank and file of Power Engineering Staff should be maintained. This will definitely create the proper infra-structure to assimilate any short-term or long-term measure that we propose to take. என்று சொல்லுகின்றார்கள். இன்றைக்கு வாரியத்தில் பணி புரிகின்றவர்களிடையே உள்ள கட்டுப்பாடற்ற தன்மை, நிர்வாகச் சீரழிவு இவைகளெல்லாம் சேர்ந்துதான் இன்றைய தட்டுப்பாட்டிற்குக் காரணம் என்று அவர் தெளிவாகச் சொல்லியிருக்கின்றார்கள் இதில். இவற்றையெல்லாம் தள்ளிவிட்டு, பொறுப்புகளைத் தட்டிக் கழித்துக் கொண்டு மத்திய அரசு மீது கோபிப்பதும் மத்திய அரசு அமைச்சர்கள் உங்கள் மீது கோபிப்பதும், இரண்டுபேரும் சேர்ந்து மழை பெய்யவில்லை என்று வானத்தைப் பார்ப்பதும்—இப்படி இருப்பதற்குப் பதிலாக இனி எதிர்காலத்திற்கு ஏற்ற முறையில் திட்டமிட வேண்டிய பொறுப்பில் இருக்கின்றோம். (மணியடிக்கப் பட்டது).

அடுத்து, இன்றைக்கு டீஸல் ஆயில் பற்றுக்குறை பற்றியும், விலை உயர்வினைப் பற்றியும் சொல்லப்படுகிறது. ஹை ஸ்பீட் டீஸல் ஆயில் ரூ. 229, எக்சைஸ் ரூ. 519, சேல்ஸ் டாக்ஸ் ரூ. 100 ஆக 848 ரூபாய் என்று விற்கின்றது. இது போல லோ ஸ்பீட் டீஸல் ஆயில் ரூ. 223 எக்சைஸ் ரூ. 143 விற்பனை வரி ரூ. 100 என்று விற்கின்றது. இன்றுள்ள நிலையில் இந்த சேல்ஸ் டேக்ஸை ரத்து செய்யக் கூடாதா? எவ்வளவோ காரியங்களைச் செய்கிறோம். இன்று அதைச் செய்யக் கூடாதா? இதேபோல ஜெனரேட்டர்கள் வாங்குவதற்கு நாம் டெல்லியைத்தான் கேட்கிறோம். டெல்லிக்குத் தபால் போட்டு விட்டால் வைகுந்தத்திற்குப் போகிற மாதிரி டெல்லியிலிருந்து வருகிறது வருகிறது என்று எவ்வளவு நாளைக்குத்தான் சொல்லிக் கொண்டு இருப்பது ? அவர்களுக்குப் பொறுப்பில்லை என்று சொல்ல மாட்டேன். ஆனால் அவர்கள் அந்தப் பொறுப்புகளை வேக



1973 மார்ச் 29] [திரு. கே. ஏ. மதியழகன்]

மாக விரைவாக நிறைவேற்றுவதற்கு இங்கே நாம் என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றோம்? எனவே இதற்கு வேண்டிய தொலை நோக்கோடு திட்டம் தீட்டாமல்—திட்டத் தவறியதன் விளைவாக இன்று ஏற்பட்டுள்ள இந்தப் பேரபாயத்தை நாட்டு மக்களுக்கு நேரத்தில் தெரிவிக்காமல்
என்று சொல்லிக்கொண்டு, இவ்வளவு பெரிய பொறுப்பிலிருந்து கொண்டு முறையாகச் செயலாற்றுவதற்கு இப்போதாவது விழிப்போடு பணியாற்ற வேண்டும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நான் தங்கள் அனுமதியோடு ஒன்றே ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நான் முன்பு ரெவின்யூ செக்ரடரி என்று சொன்னேன். அது தவறு. ரெவின்யூ போர்டு ரிப்போர்ட் அது. அந்த ரெவின்யூ போர்ட் ரிப்போர்ட்டில்...............

At current prices it is believed that the land leased out to Satya Studios would fetch Rs. 20,000 per ground if sold in small plots of 2 to 3 grounds. என்று போட்டிருக்கிறார்கள். வாடகைக்குக் கொடுத்த காரணத்தால்............

திரு. கே. ஏ. மதியழகன்: இன்னும் 5 ஆயிரம் கூட இல்லை. வாடகைக்கு என்பதனால் ரூ. 2 ஆயிரம் வால்யு என்று போடச் சொல்லிய குறிப்பும் கூட அதில் இருக்கும். அந்த ஃபைலைக் கொடுங்களேன், நான் சொல்லுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: உங்களிடம் ஃபைலைக் கொடுப்பதாக இல்லை.

திரு. கே. ஏ. மதியழகன்: உங்களிடமும் அந்த ஃபைல் நிரந்தரமாக இருக்கப் போவதில்லை.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: எதுவும் யாரிடத்திலும் நிரந்தரமாக இருக்கப் போவதில்லை. ஆனால் ஒன்று. இனி இந்த ஃபைல் உங்கள் கையில் நிரந்தரமாக வரப்போவதில்லை.

திரு. கே. ஏ. மதியழகன்: அது நாட்டு மக்கள் தீர்மானிக்க வேண்டிய விஷயம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : ஃபைலை யார் கையில் கொடுப்பது என்பது இப்போது பிரச்சினை அல்ல. அதிலே என்ன இருக்கிறது? ரெவின்யூ போர்ட் மார்க்கெட் வால்யு 20 ஆயிரம், க்ரவுண்டு என்று சொல்லியிருக்கிறது. அவர்கள் சொன்னார்கள். அறக்கட்டளைகள் மாத்திரம் அல்ல. வாடகைக்கு விடுவது என்றால் மார்க்கெட் வால்யு 2 ஆயிரமாகக் கூட போடச் சொன்னார்கள் என்றார். அந்த எல்லா விவரங்களும் தேவை. We are interested to know the full facts.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : உங்களுக்கு எல்லா விவரங் களும் தேவை தான். இந்த நிலத்தை அப்படியே விற்பதாக இருந் தால்தான் மார்க்கெட் வால்யு 20 ஆயிரம் ஒரு க்ரவுண்டுக்கு என்று ரெவின்யூ போர்டு தெரிவித்திருக்கிறது. நாம் விற்கவில்லை, லீசுக்குத் தான் கொடுத்திருக்கிறோம்.

திரு. கே. ஏ. மதியழகன் : அதைத்தான் கேட்கிறேன். லீசுக்குக் கொடுப்பதாக இருந்தால் அதன் மார்க்கெட் வால்யு இன்னது என்று ரெவின்யூ போர்ட் சொல்லியிருக்கிறதா? The Hon. Minister is misleading the House.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, விலைக் குக்கொடுப்பதாக இருந்தால்—ப்ளாட் பண்ணி விற்கிறது என்றால் ஒரு க்ரவுண்டு 20 ஆயிரம் ரூபாய் என்று தெரிவிக்கப்பட்டது. எம்.ஜி.ஆர்-க்கு நாம் விற்கவில்லை. 30 ஆண்டு காலத்திற்கு லீசுக்குத் தான் வால்யு 5 ஆயிரம் என்று போட்டுக் கொடுத்திருக்கிறோம். அதற்குப் பக்கத்தில் நாம் வாங்கியுள்ள நிலம் க்ரவுண்டு பத்தாயிரம் என்றுதான்.

திரு. கே. ஏ. மதியழகன் : ரெவின்யூ போர்டு கூறியுள்ளது முடி வானது அல்ல. ஒரு நிலத்தின் வால்யு என்பது விற்பதாக இருந்தால் ஒன்று, குத்தகைக்கு அளிப்பதாக இருந்தால் ஒன்று, தானம் அளிப்ப தாக இருந்தால் ஒன்று என்று இல்லை. அதன் மார்க்கெட் வால்யு 20 ஆயிரம் என்று போட்டிருக்கிறபோது, லீசுக்கு விடுவதற்காக என்று அதன் மார்க்கெட் வால்யுவை எப்படி 5 ஆயிரம் என்று ஆக்கினார்கள்? இன்னும் 2 ஆயிரமாகப் போடலாம் என்ற குறிப்பு அந்த ஃபைலில் இருக்கிறது. அதனால்தான் அந்த ஃபைலைக் கொடுக்க மாட்டார்கள்.



மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஒரு நிலத்தை விற்பதாக இருந்தால் அதை வாங்கியவர் அங்கே நிரந்தர மான கட்டிடங்களை எழுப்பலாம். ஆனால் லீசுக்குத் தருகிறபோது அந்த நிலத்தை அவர் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள முடி யாது. நிரந்தரமானக் கட்டிடங்களை அமைத்துக்கொள்ள முடியாது. அரசாங்கத்திற்குத் தேவைப்படுகிறபோது திருப்பித் தந்தாக வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே விற்பதற்கும், லீசுக்கும் உள்ள வேற்றுமையைப் புரிந்துகொள்ள வேண்டும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : புரிந்துகொண்டுதான் கேட் கிறேன். அமைச்சருக்குத்தான் கன்ப்யூஷன். விற்பதாக இருந்தால் ஒரு நிலத்தின் மதிப்பு 20 ஆயிரம் என்கிறபோது, அதை லீசுக்கு விடு கிறபோது எப்படி அந்த நிலத்தின் மதிப்பு 2,000 ஆகக் குறைகிறது? அதற்கு ஒரு விலை, இதற்கு ஒரு விலையா? இது நியாயமாக நடை பெறவில்லை......... You cannot regularise one irregularity by another irregularity.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சட்டமன்றத்தில் எதையும் புரிந்து பேசவேண்டும். விற்கப்பட்ட நிலம் என்றால் வாங்கினவருக்கு அதில் முழு உரிமை வந்துவிடுகிறது. லீசுக்கு என்று பெறுகிறபோது அதில் அவருக்கு முழு உரிமையும் இல்லை. இடைக்காலத்தில் எந்த விதமான நிரந்தரக் கட்டிடத்தையும் அவர் எழுப்ப முடியாது. லீசுக்கு உரிய இலக்கணம் வேறு. விற்பனைக்குரிய இலக்கணம் வேறு.

THIRU K. A. MATHIALAGAN : This is objectionable. The Hon. Minister speakes as if other members do not know anything.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நான் புரிந்துகொண்டுதான் பேசு கிறேன். விற்பதற்கு இருபதாயிரம் என்பது லீசுக்கு என்றவுடன் 5 ஆயிரமாக ஆகிவிடுமா? சுகாதார அமைச்சர் அவர்கள் தான் சரி யாகப் புரிந்துகொள்ளவில்லை. How can the price be suddenly cut down? That is the simple question.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முன்னாள் அமைச்சர் அவர்களே இந்த ஃபைலில் அதிகமான விலைக்குக் கொடுத்துவிட்டோம் என்று எழுதியிருக்கிறார். போர்டில் இருந்தும், கீழே இருந்தும் வந்தது— விற்பதாக இருந்தால் ஒரு க்ரவுண்டின் வால்யு 20 ஆயிரம் என்பது

டாக்டர் எச். வி. ஹாண்டே : ஃபைலை யார் கையில் கொடுப்பது என்பது இப்போது பிரச்சினை அல்ல. அதிலே என்ன இருக்கிறது? ரெவின்யூ போர்ட் மார்க்கெட் வால்யு 20 ஆயிரம், க்ரவுண்டு என்று சொல்லியிருக்கிறது. அவர்கள் சொன்னார்கள். அறக்கட்டளைகள் மாத்திரம் அல்ல. வாடகைக்கு விடுவது என்றால் மார்க்கெட் வால்யு 2 ஆயிரமாகக் கூட போடச் சொன்னார்கள் என்றார். அந்த எல்லா விவரங்களும் தேவை. We are interested to know the full facts.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : உங்களுக்கு எல்லா விவரங்களும் தேவை தான். இந்த நிலத்தை அப்படியே விற்பதாக இருந்தால்தான் மார்க்கெட் வால்யு 20 ஆயிரம் ஒரு க்ரவுண்டுக்கு என்று ரெவின்யூ போர்டு தெரிவித்திருக்கிறது. நாம் விற்கவில்லை, லீசுக்குத் தான் கொடுத்திருக்கிறோம்.

திரு. கே. ஏ. மதியழகன் : அதைத்தான் கேட்கிறேன். லீசுக்குக் கொடுப்பதாக இருந்தால் அதன் மார்க்கெட் வால்யு இன்னது என்று ரெவின்யூ போர்ட் சொல்லியிருக்கிறதா? The Hon. Minister is misleading the House.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, விலைக்குக்கொடுப்பதாக இருந்தால்—ப்ளாட் பண்ணி விற்கிறது என்றால் ஒரு க்ரவுண்டு 20 ஆயிரம் ரூபாய் என்று தெரிவிக்கப்பட்டது. எம்.ஜி.ஆர்-க்கு நாம் விற்கவில்லை. 30 ஆண்டு காலத்திற்கு லீசுக்குத் தான் வால்யு 5 ஆயிரம் என்று போட்டுக் கொடுத்திருக்கிறோம். அதற்குப் பக்கத்தில் நாம் வாங்கியுள்ள நிலம் க்ரவுண்டு பத்தாயிரம் என்றுதான்.

திரு. கே. ஏ. மதியழகன் : ரெவின்யூ போர்டு கூறியுள்ளது முடிவானது அல்ல. ஒரு நிலத்தின் வால்யு என்பது விற்பதாக இருந்தால் ஒன்று, குத்தகைக்கு அளிப்பதாக இருந்தால் ஒன்று, தானம் அளிப்பதாக இருந்தால் ஒன்று என்று இல்லை. அதன் மார்க்கெட் வால்யு 20 ஆயிரம் என்று போட்டிருக்கிறபோது, லீசுக்கு விடுவதற்காக என்று அதன் மார்க்கெட் வால்யுவை எப்படி 5 ஆயிரம் என்று ஆக்கிறார்கள்? இன்னும் 2 ஆயிரமாகப் போடலாம் என்ற குறிப்பு அந்த ஃபைலில் இருக்கிறது. அதனால்தான் அந்த ஃபைலைக் கொடுக்க கேட்டார்கள்.



மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஒரு நிலத்தை விற்பதாக இருந்தால் அதை வாங்கியவர் அங்கே நிரந்தரமான கட்டிடங்களை எழுப்பலாம். ஆனால் லீசுக்குத் தருகிறபோது அந்த நிலத்தை அவர் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள முடியாது. நிரந்தரமானக் கட்டிடங்களை அமைத்துக்கொள்ள முடியாது. அரசாங்கத்திற்குத் தேவைப்படுகிறபோது திருப்பித் தந்தாக வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே விற்பதற்கும், லீசுக்கும் உள்ள வேற்றுமையைப் புரிந்துகொள்ள வேண்டும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : புரிந்துகொண்டுதான் கேட்கிறேன். அமைச்சருக்குத்தான் கன்ப்யூஷன். விற்பதாக இருந்தால் ஒரு நிலத்தின் மதிப்பு 20 ஆயிரம் என்கிறபோது, அதை லீசுக்கு விடுகிறபோது எப்படி அந்த நிலத்தின் மதிப்பு 2,000 ஆகக் குறைகிறது? அதற்கு ஒரு விலை, இதற்கு ஒரு விலையா? இது நியாயமாக நடைபெறவில்லை......... You cannot regularise one irregularity by another irregularity.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சட்டமன்றத்தில் எதையும் புரிந்து பேசவேண்டும். விற்கப்பட்ட நிலம் என்றால் வாங்கினவருக்கு அதில் முழு உரிமை வந்துவிடுகிறது. லீசுக்கு என்று பெறுகிறபோது அதில் அவருக்கு முழு உரிமையும் இல்லை. இடைக்காலத்தில் எந்த விதமான நிரந்தரக் கட்டிடத்தையும் அவர் எழுப்ப முடியாது. லீசுக்கு உரிய இலக்கணம் வேறு. விற்பனைக்குரிய இலக்கணம் வேறு.

THIRU K. A. MATHIALAGAN : This is objectionable. The Hon. Minister speakes as if other members do not know anything.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நான் புரிந்துகொண்டுதான் பேசுகிறேன். விற்பதற்கு இருபதாயிரம் என்பது லீசுக்கு என்றவுடன் 5 ஆயிரமாக ஆகிவிடுமா? சுகாதார அமைச்சர் அவர்கள் தான் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. How can the price be suddenly cut down? That is the simple question.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முன்னாள் அமைச்சர் அவர்களே இந்த ஃபைலில் அதிகமான விலைக்குக் கொடுத்துவிட்டோம் என்று எழுதியிருக்கிறார். போர்டில் இருந்தும், கீழே இருந்தும் வந்தது—விற்பதாக இருந்தால் ஒரு க்ரவுண்டின் வால்யு 20 ஆயிரம் என்பது

[திரு. செ. மாதவன்] [1973 மார்ச் 29

தான். அதுதான் மார்க்கெட் வால்யு. போர்டு ரெக்கமெண்டேஷன். நாம் இங்கே விற்கவில்லை. லீசுக்குத்தான் விட்டோம். லீசுக்கு என்ன விலை வைத்துக் கொடுத்தோம் என்பது வேறு பிரச்சினை. இன்றைக்கு நாம் அந்த இடத்திற்கு அருகில் வாங்கியுள்ள இடத்திற்கு என்ன விலை கொடுத்தோம்? அதுதான் பிரச்சினை. மார்க்கெட் வால்யு 20 ஆயிரம் என்று அப்போதே சொன்ன இடத்தில் நாம் கொடுத்தது ரூ. 10 ஆயிரம் தான். பத்தாயிரத்திற்குத் தான் வாங்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன்: மார்க்கெட் வால்யு 20 ஆயிரம் என்பது லீசுக்கு எப்படி 5 ஆயிரமாயிற்று? விலைக்கு என்றால் ஒரு மார்க்கெட் வால்யு, லீசுக்கு என்றால் ஒரு மார்க்கெட் வால்யு.........

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: விலைக்கு என்றால் வாங்கிய இடத்தில் அவர்கள் எப்படி வேண்டுமானாலும் கட்டிடம் கட்டிக் கொண்டு பயன்படுத்திக் கொள்ளலாம். அதில் எந்தவிதமான கட்டிடமும் எழுப்பக்கூடாது என்கிற நிபந்தனை கிடையாது. லீசுக்கு என்கிறபோது பல நிபந்தனைகள் இருக்கின்றன ......

திருமதி த. ந. அனந்தநாயகி: மார்க்கெட் வால்யுவுக்கு விற்பதாக இருந்தால் 20 ஆயிரம், லீசுக்கு என்றால் அதில் நான்கில் ஒரு பங்காக 5 ஆயிரமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்றால் அங்கேதான் நியாயமான விலை நிர்ணயிக்கத் தவறிவிட்டார்கள் என்பது எங்கள் குற்றச்சாட்டு.

திரு. கே. ஏ. மதியழகன்: அமைச்சர் அவர்கள் வாதம் செய்கிறார்களே தவிர, வாடகைக்கு என்று கொடுக்கப்பட்ட காரணத்தினால் நிலத்தின் மார்க்கெட் வால்யு 5 ஆயிரமாக எப்படிக் கணக்கிடப்பட்டது என்றுதான் கேட்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, may I speak with your permission. I would like to offer a few remarks. I will touch only on a few points.

First of all, let me say that this Government has bungled in its policy regarding power. They have not only bungled but they have also failed in their duty. That is what this House has to take note of. Government has failed in its duty, not only the industrialists been adversely affected but the agriculturists had



1973 மார்ச் 29] [Thiru R. Ponnappa Nadar]

been affected and everybody is affected on account of the imposition of power-cut. Who is responsible for this? I say this Government is fully responsible.

Government had been extending power to villages. This Government ought to have assessed the position and taken steps to see that power generation is being augmented. What has been done by this Government is that they have only taken steps to supply power and not for generation of power. That is my accusation. I saw in the papers that in fifth plan, Rs. 750 crores is being set apart for power generation by Central Government. What is the share which we are getting, which this State is getting, is a matter which will have to be considered. There are good many projects which have been very still in their progress. Regarding Ennore Thermal scheme, several attempts have been made to give one excuse or other.

If only we had taken prompt measures, this situation would not have arisen. That is the charge I am levelling. What has been done now? The Tuticorin thermal project has been given the go-by. That is the reason why we are facing this power shortage now. We were hoping that it would come. But it did not come. I saw a report in the press to the effect that industrialists were not taken into confidence and that is why this malady has arisen. This House has not been taken into confidence. The leaders of opposition parties, the Government could have taken into confidence and on a war-time basis, effective steps could have been taken to generate power. The effects of the power-cut will be witnessed only during the next year. That is the reason why we should do something effective, instead of saying that we have corresponded with the Centre and all that. I charge this Government of lethargy.

Then regarding shortage of kerosene and other food materials, there is acute scarcity and prices are soaring up in the market. Kerosene is not available; food materials are not available in the open market. The Central Government is not co-operating. Now the wholesale wheat trade is taken up by the Central Government. Now, it is up to our Government to take effective measures so that we may send food to all the villages and so that there shall not be any scarcity there.

It has been stated that we are surplus in foodgrains. But then why are prices soaring? Sir, it has been argued that the policy of the Central Government, the currency policy, is to bring out black money and other things which are mainly responsible for the increase in prices and that may be an explanation. I am sorry to say that it is not an acceptable explanation that can be worthy of credit. This Government should have taken steps in the matter of supply of foodgrains and kerosene. These are essential articles and under the powers vested in this Government under the Essential Commodities Act, they could have taken steps to see that the prices do not soar up so high. There it has been bungled by this Governmernt.

Another point is this. It has been stated that MALCO is to be nationalised. What is the atitude of the Central Government is the next question which I wish to ask, whether the Central Government should have a clear-cut policy and the State should have a clear-cut policy and whether we are advocating public sector, corporate sector, joint sector, or co-operative sector. There should be clear thinking and understanding regarding the four sectors.

Nationalisation has been given the go-by by the Central Government Foreign exchange is involved; Italian Government is involved. Therefore the question of MALCO is hanging in the balance. Does it speak well of the Government both Central and State? Because of the lingering policy of the Government this is pending. Either we should have clear-cut policy or abandon this. There is no use dilly-dallying with this industrial policy. I think it is better that both the Governments come to some understanding so that there will be a clear-cut policy regarding industries.

There has been so many explanations offered by the Hon. Minister for Industries and today also I saw in the papers that some remarks have been made by the Hon. Minister for Industries regarding MALCO. Who is to blame is the matter which this House will have to consider. I think it is in the interests of the State that MALCO is nationalised. There is no second opinion regarding this. Our party is also supporting the nationalisation



policy of the Government and we shall not stand upon false prestige and give false hopes to the people. That is the only point which I want to stress.

Then a few words about transport. Sir, many reforms of far reaching character have been made in the Transport Department. As Pongal prize, nationalisation has been announced. What is the effect is the next question we have to ask ourselves. Sir, Nationalisation has failed in a large measure. Several corporations have just been incorporated. What is the effect? There is difference in pay between one corporation and another corporation and corporations and Government and because of this there is grumbling among the workers. The workers of Pallavan Corporation get lesser pay and other allowances as compared to workers in the State Transport. Why should there be such discrimination?

THE HON. THIRU S. RAMACHANDRAN: As far as the Pallavan Corporation and the State Transport Department are concerned, there is no such discrimination in total emoluments.

THIRU R. PONNAPPA NADAR: There is yet another point. There are frequent break-downs, both in the Transport and the Pallavan Corporation. The break-downs are in the increase. I saw a note in the supplementary demand that 23 vehicle inspectors have been appointed. With all these appointments also, the position has not improved. Why is this so? After appointing 23 vehicle inspectors, the break-downs have been on the increase. Is it on account of the effective administration or the efficient administration of this department.

When we get so many break-downs, many buses are left on the road side with a break-down board. There is frequent break downs. In all these things there is bungling in management. I charge this Government. This Government is not doing well in the matter of nationalisation. Not that we oppose nationalisation, but we welcome nationalisation and effective and better management we expect from nationalisation. I think even after the replacement of 91 buses there has been increase and that is the charge which I am going to make.

Regarding police officers, even now personal file has not been abandoned in the police department and I think that will also be abandoned by the Government.

My next point is regarding prohibition. Prohibition has been scrapped and we have gone wet. Sir, the Central Government is going to offer a 50 per cent assistance to all the States which want to impose prohibition. This has been announced by the Centre. Why not we once again take to prohibition.

For, that has been the favourite and pet scheme of not only of the Congress, but your late lamented leader Shri Annadurai. You are followers of that revered leader. You have now departed from his accepted policies. We get Rs. 36 crores as revenue from scrapping of prohibition. I ask you seriously, do you advocate poor people becoming poorer by the drink evil? I appeal once again to our Hon. Chief Minister if prohibition cannot be re-introdued.

We welcome prohibition not only as Gandhians, but because the poor masses, the illiterate masses when they get addicted to this drink evil, we will be spoiling their children and their women

பி.ப 2-00 folk also. Therefore, I appeal to the Chief Minister to see if he could once again re-introduce prohibition in our State.

The next point which I want to stress is about the administrative difficulty which we experience in public services. Sir, in our District there are certain persons who have taken Part II-Malayalam as their language. Such of those persons who have taken Malayalam as Part II are not made eligible for public services. I think for giving proper protection to the linguistic minorities, something should be done. Because of this, many people in our district are suffering. May I request this Government to take into consideration with gratitude the services rendered by them, by the poor community, and do justice to them. I am sure the Government will not do any injustice to them. I am sure the Hon. the Chief Minister will receive it with prompt care which it deserves.

The next point which I want to say is about the levies that were made from 1971. The Hon. the Chief Minister, on the floor of the House has made certain levies to the extent of Rs. 12 crores to meet the refugee problem and other problems. This has become a permanent revenue now. Why not the Government take it away? That is the question which I want to ask. The Central Government have imposed the levy to the extent of Rs. 70



crores and the same they are going to abolish from the 1st April 1973. Why not this Government follow that example? That is the next question I want to ask.

Regarding D.A. that has been given to the Government servants, I want to say this. They have been given D.A. to the extent of Rs. 10 per head. Why not the Government give the amount in terms of money rather than crediting it to G.P.F. account.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:</u> 12 கோடி என்று சொன்னீர்கள், 12 கோடி அல்ல, 2½ கோடி.

THIRU R. PONNAPPA NADAR: I stand corrected, Sir, Another point which I want to say is this. I hope that it will receive sympathetic consideration of the Government. Sir, building grant has not been given to the Kamaraj College at Tuticorin from 1971-72. Their request has not been granted. For 1973-74, Rs. 54 lakhs have been allotted and a sum of Rs. 10 lakhs has been allotted for Government Colleges and a sum of Rs. 5 lakhs has been allotted for Private Colleges. For such a long time, the Government has not paid the grant to that College. I am sure the Government will look into all these things.

The next point I would like to refer is about the delay in the matter of execution of imporant works. There has been inordinate delay in the execution of schemes relating to irrigation. There has been considerable delay in the construction of irrigation projects and channelisation. The target dates have not been kept even. There is slow progress in the execution of work.

For example, take Veeranam Project. At one stage, it was said that it would be executed within the target date. I am sure that such inordinate delays would be avoided in future. With these words, I resume my seat.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:</u> தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கீடு பற்றி காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்களும், மற்றைய கட்சிகளினுடைய தலைவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களை நீண்ட நேரம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

குறிப்பாகப் பல்வேறு மானியங்களைப்பற்றி விவாதித்து நிதி
ஒதுக்கீடு பற்றிய கருத்துக்களை எடுத்துச் சொல்கிற நேரத்திலே,
பொது விவாதத்திலேயும் மானியக் கோரிக்கைகளிலேயும் எடுத்துச்
சொல்ல விட்டுப்போன பல்வேறு பிரச்சினைகளை இந்த நாளிலே
எடுத்துச் சொல்லப் பயன்படுத்திக்கொள்வது முறையாக இருந்து
வந்திருக்கிறது. அந்த வகையில் பல விஷயங்கள் இங்கே எடுத்துச்
சொல்லப்பட்டிருக்கின்றன. நான் அவை எல்லாவற்றிற்கும் தனித்
தனியாக இப்பொழுது பதில் சொல்வது என்பது இயலாத காரியம்.
ஆனாலும் ஒவ்வொரு உறுப்பினரும் தங்களுடைய தொகுதியைப்
பற்றியும் தங்களுடைய தொகுதியிலே நிறைவேற்றப்பட வேண்டிய
காரியங்களைப்பற்றியும் பொதுப்பணித் துறையிலேயும், வேறு பல
துறைகளிலேயும், மருத்துவத் துறையிலேயும், கல்வித் துறையிலே
யும், வேளாண்மைத் துறையிலேயும் நிறைவேற்றப்பட வேண்டிய
காரியங்களை விளக்கமாக இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.
அவைகள் நிச்சயமாகக் குறிப்புப் புத்தகத்திலே இடம் பெற்றிருக்கும்
என்ற அளவிலே அதிகாரிகள் வாயிலாக அவை கவனிக்கப்பெற்று
ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற உறுதியை மாத்திரம்
இந்த மன்றத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக நம்முடைய மன்றத்தினுடைய விவாதங்கள் சில
நாட்கள் சுவையாகவும், சில நாட்கள் மிகச் சூடாகவும் ஆகிக்
கொண்டிருக்கின்ற நிலைமையைக் காண்கிறோம். நான் ஒன்றைச்
சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்
பினர்கள், என்னையும் சேர்த்துத்தான், இங்கு உரக்கப் பேசினாலும்,
மெதுவாகப் பேசினாலும்—50 லட்சம் என்ன ஆயிற்று என்று
கேட்டால், பத்திரிகையிலே 50 லட்சம் என்ன ஆயிற்று என்று தான்
வரும், 50 லட்சம் என்ன ஆயிற்று என்று உரக்கக் கேட்டாலும்
பத்திரிகையிலே 50 லட்சம் என்ன ஆயிற்று என்றுதான் வரும்.
அதற்குச் சிறப்பாகப் பெரிய எழுத்துக்களைப் போட்டு யாரும் வெளி
யிடப் போவதில்லை. ஆனால் பொதுக் கூட்டங்களிலே வேகத்தை
உணர்ச்சி முழக்கங்களை வைத்துக் கொள்வது நல்லது. சில நேரங்
களிலே ஒருவருக்கொருவர் தனிப்பட்ட முறையிலே தாக்குவதைப்
பார்க்கும்பொழுது உள்ளபடியே நான் வேதனைப்படுகிறேன். எந்தக்
கட்சித் தரப்பிலேயிருந்து வந்தாலும், ஆளுங் கட்சித் தரப்பிலே
யிருந்து வந்தாலும், எதிர்க்கட்சித் தரப்பிலேயிருந்து வந்தாலும்,
தோழமைக் கட்சிகள் தரப்பிலிருந்து எதிர்க்கட்சிக்கு வந்தாலும்,
எந்தக் கட்சித்தரப்பிலிருந்து வந்தாலும் தனிப்பட்ட முறையில் ஒரு



வருக்கொருவர் தாக்கிக் கொள்வது, கேலி செய்வது, நாம் நிதியை
ஒதுக்குகின்ற இந்த நேரத்திலே, அவைகளையும் ஒதுக்கிவிடுவது
நல்லது என்று கருதுகிறேன். நிதியை ஒதுக்கி அரசுக்குத் தருகிறீர்
கள், அவைகளை ஒதுக்கி அரசுக்குத் தராமல் அவைக்கு வெளியே
எறிந்துவிடுவது நல்லது என்று நினைக்கிறேன். அதற்கு மாண்புமிகு
உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டும். எந்தத் தரப்பிலே இருக்
கின்றவர்களானாலும், என்னையும் உள்ளிட்டே சொல்கிறேன்,
ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நண்பர் மதி அவர்கள் சொன்னார்கள். மக்கள் நல்வாழ்வுத்
துறை அமைச்சர் சொன்ன விஷயத்தைப்பற்றிக் கூறியிருக்கலாம்,
மாஜிப் பேராசிரியர் என்று கூறுவதால் மனமகிழ்ச்சி ஏற்படப்
போவதில்லை. ஆசிரியர்கள் மாஜியாக ஆவதில்லை: டாக்டர்
ஹாண்டே அவர்கள் டாக்டர் தொழிலை விட்டுவிட்டு முழுக்க
முழுக்க அரசியல் வேலை, கட்சி வேலை செய்தால்கூட அவர்கள்
டாக்டர் ஹாண்டே தான். வழக்கறிஞர்களும் அப்படித்தான். என்
பெயரைச் சொல்லக்கூடாதா என்று அம்மையார் அவர்கள் கேட்
பார்கள், அவர்கள் பெயரையே வைத்துக்கொள்ளலாம், வழக்கறிஞர்
தொழிலை விட்டு முழுக்க முழுக்க அரசியலுக்கு வந்தாலும்
வழக்கறிஞர்தான், பி.ஏ., பி.எல்., எம்.ஏ., பி.எல். படித்தவர்கள்
வழக்கறிஞர்கள்தான். ஆனால் மந்திரிகள்தான் பதவியைவிட்டுப்
போனபிறகு மாஜிகளாக ஆகிவிடுகிறார்கள். மக்களாலும், அறிஞர்
அண்ணா அவர்களாலும் பேராசிரியர் என்று அழைக்கப்பட்டவர்கள்
அவர்கள். நண்பர் மதி அவர்களாலும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.
இப்பொழுது அவர்கள் மாஜி பேராசிரியர் என்று அழைக்கப்பட்ட
தாலே .....

திரு. கே. ஏ. மதியழகன் : ரொம்ப சாமர்த்தியமாக வாதாடிக்
கொண்டிருக்கிறார்கள் முதலமைச்சர் அவர்கள். மாஜிப் பேராசிரியர்
என்று சொன்னதே, எனக்குத் தெரியவில்லை, படித்துவிட்டு உறுப்
பினர் வரவேண்டுமென்றதால். நிலக்கரி கேட்கக்கூடாதா என்று
நான் மூன்று முறைகள் கேட்டபொழுது...அவர்கள்—பேராசிரியர்—
என்பதிலே ஆட்சேபணை இல்லை, பேராசிரியர் இல்லாதவர்களையெல்
லாம் பேராசிரியர் என்று ஒத்துக்கொள்ளும்போது மாண்புமிகு
அமைச்சர் அவர்களை ஒத்துக்கொள்வதிலே எந்தவிதப் பாதகமும்
இல்லை—அவர்கள் தெரியாதா, புரியாதா என்று சொன்னது எனக்குக்

கொஞ்சம் விரசமாக இருந்தது. என்னை மட்டும் முதலமைச்சர் அவர்கள் எடுத்துச்சொல்வது, முன்னாலே அவர்கள் எடுத்துச் சொன்னதற்கு உதவி புரிவதாக இல்லை.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:</u> நான் உட்படத்தான் சொல்கிறேன். மந்திரிகள் பதவிகளைவிட்டுப் போனபின் மாஜி மந்திரிகள் என்று சொல்வார்கள். ஆனால் டாக்டர்கள், வழக்கறிஞர் கள் மாஜியாகி விடுவதில்லை. மன உணர்வுகளை மற்றவர்களைப் புண் படுத்திவிடுகின்ற முறையிலே பரிமாறிக்கொள்ளாமல் இருப்பது நல்லது, நகைச்சுவைக்குப் பரிமாறிக்கொள்ளலாம். தனிப்பட்ட முறை யில் ஒருவருக்கொருவர் தாக்கிக்கொள்வது நல்லது அல்ல. விட்டு விடுவது நல்லது என்று கருதுகிறேன்.

பிற்பட்டோர்பற்றி இங்கே எடுத்துக் கூறப்பட்டது. இந்த அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிற்பட்டோருடைய நலனுக்கும் எடுத்துக்கொண்ட சீரிய முயற்சிகளை யெல்லாம் மாண்புமிகு உறுப் பினர்கள் எடுத்துக்காட்டினார்கள். அதிலே அ.தி.மு.க.-வைச் சேர்ந்த திரு. வேலப்பன் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே பெரியாருடைய கொள்கையும், அண்ணா அவர்களுடைய கொள்கையும் பிற்பட்ட மக்களுக்கு இவ்விதச் சலுகைகள் செய்வது என்பதல்ல, பொருளாதார ரீதியிலே முன்னேறிய சமுதாயம், பின்தங்கிய சமுதாயம் என்று பிரித்து வைத்துக்கொண்டு பொருளாதார ரீதியிலே பிற்படுத்தப் பட்டவர்களுக்கு இவ்விதச் சலுகைகள் வழங்கப்படவேண்டுமென்று சொன்னார்கள்.

இது பெரியாருடைய கொள்கையாக இருந்ததில்லை, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கொள்கையாக இருந்ததில்லை. மற்றும் பிற் படுத்தப்பட்ட சமுதாயத்திற்காக உழைக்கிற வேறு கட்சிகளுடைய தலைவர்களுடைய கொள்கையாக இருந்ததாக அறியவில்லை. ஆகவே, இந்தக் கருத்தை யாரும் ஏற்றுக்கொள்ள இயலாது.

பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலே உருது பேசுகிற முஸ்லீம்களை இணைப்பதைப் பற்றி முஸ்லீம் லீக் கட்சி உறுப்பினர் அவர்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள். நண்பர் கோவைச் செழியன் அவர்கள் கொங்கு வேளாள சமூகத்தைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்ற கருத்தைக் குறிப்பிட்டார்கள். 30 ஆண்டு காலமாக முஸ்லீம் மக்கள் கேட்டு இப்போது நிறைவேறியிருக்கிறது. எந்த ஒரு கோரிக்கையும் கனிந்து, பழுத்த பிறகு நிறைவேறும் என்பதற்கு உருது முஸ்லீம்கள் நேற்றையதினம் சேர்க்கப்பட்டது ஒரு தாரண



மாக இருக்கும். இன்னும் கொஞ்சம் காலம் பொறுத்துக் கொண்டு, அவர்களைப் பற்றியெல்லாம் அரசு பரிசீலிப்பதற்கேற்ற நிலைக்கு அவர்கள் எங்களை ஆளாக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்வேன்.

செழியன் ஒன்று சொன்னார்கள். சன்ஸ் ஆஃப் தி சாயில் என்ற ஒரு பெரிய பிரச்சினையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதை விளக்க மாகப் பேசுவதற்கு நேரமில்லை. பிரதமர் அவர்கள் கூட ஒப்புக் கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். அவர்கள் முழுமையாக ஒப்புக் கொண்டதாக நான் அறியவில்லை. சன்ஸ் ஆஃப்தி சாயில் என்பதற்கு கடைநிலை ஊழியர்களாக இருப்பவர்கள் அந்தந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டுமென்று சொல்லி யிருப்பார்களேயல்லாமல் அதற்கு மேலே உள்ள பதவிகளுக்கு வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் வரக்கூடாது என்ற கருத்தை இன்றுள்ள இந்திய ஒருமைப்பாட்டிற்கு விரோதமாக யாரும் சொல்லியிருப்பார்கள் என்று கருதவில்லை. அப்படி வேறு மாநில முதலமைச்சர்கள் சொல்லியிருப்பார்களானால் அந்தக் கருத்து நம் மாநிலத்தைப் பொறுத்த வரையில் ஒத்து வராது. அந்தக் கருத்து நமக்கு உடன்பாடு அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

நண்பர் சுப்பு பேசுகிற நேரத்தில் 10 ரூபாய் டியர்னஸ் அலவன்சை பிராவிடண்டு பண்டில் சேர்த்தது தவறு என்று சொன்னார்கள். ரூபாய் 300, 200 சம்பாதிக்கக் கூடியவர்கள் இந்த 10 ரூபாயை மீத்து வைக்கவேண்டுமென்று எண்ணுவார்கள். இந்த 10 ரூபாய் தந்து அவர்கள் மீத்து வைக்காமல் இருப்பதைத் தவிர்த்து நாமே மீத்து வைத்து ஒரு ஆண்டு காலம் மீத்து வையுங்கள் என்று சொல்கிறோம். தர வேண்டுமென்ற அனுதாப உணர்வும் அதே நேரத்தில் நம் நிதி நிலைமை நெருக்கடியை உத்தேசித்தும் செய்யப்பட்டிருக்கிறது.

இன்னொன்று சொன்னார்கள். எம்.எல்.ஏ-க்குத் தரப்படுகிற படி மிகக் குறைவு, இது வேறு மாநிலங்களில் அதிகமாக இருக்கிறது என்று இன்றைக்கும் குறிப்பிட்டார்கள். நேற்றையதினம் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொன்னார்கள். ஐந்து ரூபாய் உயர்வு என்று வெளியில் சொல்லக் கேவலமாக இருக்கிறது. ஐந்து ரூபாய் உயர்வா என்று மற்றவர்கள் கேட்கிறார்கள் என்று சொன்னார் கள். நான் இந்தப் படி உயர்வினுடைய சரித்திரத்தைப் பார்த்தேன். ஒரு காலத்தில் 12½ ரூபாயாக இருந்து 2½ ரூபாய் உயர்த்தப்பட்டு 15 ரூபாயானது. அப்போது அவர்களைப் பார்த்து 2½ ரூபாய் தானா என்று யாரும் கேட்கவில்லை. நாம் 5 ரூபாய் தரும்போது, 5 ரூபாய்

தானா என்று கேவலமாகச் சொல்வது, அதெல்லாம் எங்கள் ஜாதகம். இரண்டரை ரூபாய் அதிகமாகக் கொடுக்கும்போது சொல்லவில்லை. ஐந்து ரூபாய் அதிகமாகக் கொடுக்கும்போது, கொடுக்கிற நேரத்தில் கேவலம் என்று பேசுவதாகச் சொன்னார்கள். பதினைந்து ரூபாய் 20 ரூபாயாகி 25 ரூபாயாக ஆக்கப்பட்டிருக்கிறது. இதற்கு நாம் மகிழ்ச்சியடைய வேண்டுமேயல்லாமல் இந்த அளவிற்காவது செய்ய முடிந்ததே என்று மகிழ்ச்சியடைய வேண்டுமேயல்லாமல் இதைக் கண்டிக்கத் தேவையில்லை என்று குறிப்பிட்டுச் சொல்வேன்.

ஐ.ஏ.எஸ். சில பேருக்குக் கிடைக்காத காரணத்தினால் அரசாங்க அதிகாரிகள் யாரோ தாக்கிப் பேசிக் கொண்டிருப்பதாக நண்பர் சுப்பு சொன்னார்கள். நாம் ஐ.ஏ.எஸ். கிடைப்பதில் அக்கறை செலுத்துவதில்லை. ஐ.ஏ.எஸ்:-ஐ யார் யாருக்குக் கொடுங்கள் என்று சொல்கிற இடத்திலே நாங்கள் இல்லை. படித்தவர்கள், அதற்கான தகுதி பெற்றவர்கள் வருகிறார்கள். ஊன்றி கவனிப்பதெல்லாம் இந்த ஐ.ஏ.எஸ்.-இல் எத்தனை தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள். எத்தனை பிற்படுத்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள் என்பதை மிக அதிகமான உன்னிப்போடு கவனித்துக் கொண்டிருக்கிறேன். அதை விடுத்து எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்பதைக் கவனிப்பது இல்லை. அரசாங்க அதிகாரிகள் அரசியல் பேசுகிறார்கள் என்றால், அதுவும் ஐ.ஏ.எஸ். கிடைக்கவில்லையென்று பேசுகிறார்கள் என்றால், ஐ.ஏ.எஸ். கிடைத்ததற்காக அரசியல் பேசினாலும் சரி, ஐ.ஏ.எஸ். கிடைக்காததற்காக அரசியல் பேசினாலும் சரி, அவர்களெல்லாம் வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டியவர்கள் என்பதை மாத்திரம் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நண்பர் ஜேம்ஸ் அவர்கள் சொன்னார்கள், விசாரணைக் குழு எதற்காக என்றெல்லாம் சொன்னார்கள். விசாரணைக் குழுவை நாங்கள் மறுக்கிறோம் என்று சொன்னார்கள். வெளியேயும் சொன்னார்கள். இந்த அவையிலும் சொன்னார்கள். இதைக் கருப்பு மசோதா ரௌலட் சட்டம் என்றுச் சொன்னார்கள். இதனால், மக்களுக்குக் குழப்பம் வந்துவிடக்கூடாது. அவர் ரௌலட் சட்டத்தைப் பற்றி கேள்விப்பட்டிருக்கலாம். விவரம் தெரியாமல் இருக்கலாம். இந்தக் குழுவை நியமிக்கிற நேரத்தில், இதற்காக சட்டங்களை நிறைவேற்றுகிற நேரத்தில், இதுதான் ரௌலட் சட்டம் என்று மக்கள் தவறான கருத்தைக் கொள்ளக்கூடாது. நான் ஜேம்ஸ் அவர்களுக்குச் சொல்வேன். இந்தச் சட்டம் செலக்ட் கமிட்டிக்கு விடப்பட்ட நேரத்தில் வெளியேறினார்கள். வாக் அவுட் செய்தார்கள். ஆனாலும்



காங்கிரஸ் கட்சியால் ராஜஸ்தானிலும், மராட்டியத்திலும் இதே போன்ற சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் மாறுதல் என்னவென்று பார்த்தால் வேண்டுமென்றே அவதூறு என்று குற்றம் சாட்டினால் அப்படிக் குற்றம் சாட்டியவர்களுக்கு மூன்று ஆண்டு காலம் தண்டனை விதிக்கப்படும் என்று நாம் இங்கே சுட்டிக் காட்டி இருப்பதைப் போலவே மராட்டியத்திலும், ராஜஸ்தானிலும் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள்.

ஒரு பெரிய வேறுபாடு என்னவென்றால் நம்முடைய மாநிலத்தினுடைய சட்டத்தில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது அந்தக் குற்றம் நிரூபிக்கப்பட்டு அவர்கள் குற்றவாளிகளாக ஆகிவிட்டால் அவர்களுக்கு 7 ஆண்டுகாலம் தண்டனை விதிக்கப்படும். அவர்களுக்கு 7 ஆண்டு காலம் தண்டனை விதிக்கலாம் என்று சட்டம் நிறைவேற்ற இருக்கிறோம். ஆனால் ராஜஸ்தானிலும், மராட்டியத்திலும் நிலைமை என்னவென்றால், குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது இன்னின்ன குற்றம் என்று நிரூபிக்கப்பட்டு விட்டால் அது சர்க்கார் மூலமாக கவர்னருக்கு அனுப்பப்பட்டு கவர்னர் சட்டசபைக்கு அனுப்பினால் அது சட்டசபையோடு முடிவடைகிறது. ஏழு வருஷம் என்பது அங்கே கிடையாது. அதுமாத்திரமல்ல, மராட்டியத்திலும், ராஜஸ்தானிலும் யார் யார் இந்தப் பொதுப் பணியிலே, பொது வாழ்க்கையிலே இருக்கிறவர்கள் வருகிறார்கள் என்று பார்த்தால், முதலமைச்சரைத் தவிர மற்ற அமைச்சர்கள், மற்றவர்கள் வருகிறார்கள். ஆனால், இங்கே முதலமைசரைச் சேர்த்து நாம் விசாரிக்கலாம். முதலமைச்சர் மீது குற்றம் நிரூபிக்கப்பட்டால் 7 ஆண்டு கால தண்டனை உண்டு என்று இந்தச் சட்டத்தில் இருக்கிறது. இந்தச் சட்டத்தைக் குறைத்துப் பேசுகிறோம். ஆனால், மராட்டியத்தினுடைய சட்டத்தையும், ராஜஸ்தானுடைய சட்டத்தையும் ஆளும் காங்கிரசாக இருக்கிற கட்சி அங்கே நிறைவேற்றி விட்டு இங்கே நம்முடைய மாநிலத்திலே மாத்திரம் இந்தச் சட்டம் வந்தால் இது கருப்பு மசோதா, இது ரௌலட் சட்டம், நாங்கள் வெளியேறுகிறோம். இதை ஆதரிக்க முடியாது என்று கூறுவது பொருத்தமாக இல்லை.

அம்மையார் என்ன சொல்ல விழைகிறார்கள் என்று எனக்குத் தெரியும். அது வேறு மாநிலம், இது வேறு மாநிலம் என்று சொல்வார்கள். நேற்றையதினம் நாங்கள் அகில இந்தியக் கட்சி, மத்தியப் பிரதேசத்திலும் போட்டியிடுவேன் என்று சொல்லியிருக்கிறார்கள். மாநிலங்களைத் தனித்தனியாகப் பிரிப்பது அவசியமில்லை. அகில இந்திய

கட்சியாக இருக்கிற அவர்கள் இந்த மாநிலத்திற்கொன்று, அந்த மாநிலத்திற்கொன்று என்று பேசக் கூடாது என்பதற்காக இதைக் குறிப்பிடுகிறனேயல்லாமல் வேறு அல்ல.

தியாகி மானியத்தைப் பற்றியும் முதியோர் ஓய்வூதியத்தைப் பற்றியும் சொன்னார்கள். தியாகி மானியத்தைப் பொறுத்த அளவில் வேறு மாநிலங்களை விட தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் 7,500 பேர் என்கிற அளவிற்கு நாம் வழங்கி வருகிறோம். இதிலே எந்த விதமான கட்சி மாறுபாடும் இல்லாமல், இன்னும் சொல்லப் போனால், சில பேர்களுக்கு, நற்சான்றுகள் இல்லாவிட்டாலும் கூட, சிறைச்சாலையில் இருந்தார்கள் என்று முன்னாள் அமைச்சர்கள் காங்கிரஸ் கட்சியின் பெரிய தலைவர்கள், தியாகப் பட்டியலில் உள்ளவர்கள் சிபாரிசுக் கடிதங்களை வைத்து பலபேர்களுக்கு இந்த மானியங்கள் நேரடியாக வழங்கப்பட்டிருக்கின்றன. 1966-ம் ஆண்டு இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டாலும் அந்த ஆண்டு 5 பேர் களுக்குத்தான் கொடுக்கப்பட்டது. அறிஞர் அண்ணா அவர்களாலும் அவர்களுக்குப் பிறகும் இதுவரை 7,500 பேர்களுக்கு வழங்கப்பட் டிருக்கிறது. இது குறைவானதல்ல.

அது மாத்திரமல்ல. ஐம்பது ரூபாயை எழுபத்தைந்து ரூபாயாக நாம் ஆக்கியிருக்கிறோம். அவர்கள் இன்னும் காலகெடு தேவை என்று சொன்னார்கள். மூன்று தடவை காலகெடு கொடுத்தாகி விட்டது. இதற்கு மேல் தருவது இயலாத ஒன்றாக இருக்கிறது. முதியோர் ஓய்வூதியத்தைப் பொறுத்த வரையில் 95 லட்ச ரூபாய் ஒதுக்கியது குறைவாகக்கூட இல்லை. ஆனால், 95 லட்ச ரூபாயில் 72 லட்சம் செலவாயிற்றென்றால் வருகிற மனுக்களின் அந்தத் தகுதியைப் பார்த்தால் சாதாரண முதியோராக இருந்தால் 65-க்கு மேற்பட்டு, அனாதையாக இருக்கவேண்டும். 65-க்கு மேற்பட்ட முதியோர் என்றால் கூன், குருடாக, தொழு நோய் உள்ள வியாதியஸ்தர்களாக இருக்கவேண்டும் என்ற தகுதிகள் 1962 இல் நிர்ணயிக்கப்பட்டிருக் கின்றன. அந்தத் தகுதியின் அடிப்படையில்தான் அவைகளை ஆராய் கிறோம்.

மின்சாரத்தைப் பற்றி வெகுவாகப் பேசப்பட்டது. டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். குந்தா திட்டத்திற்கு கனடாவி லிருந்து ஏன் இயந்திரம் வரவழைக்கவில்லை என்று கேட்டார்கள். நாம் வேறு நாடுகளிலிருந்து உதவி பெறவேண்டியிருக்கிறது. மத்திய அரசு இந்த உதவியைப் பெறவேண்டியிருக்கிறது. இரண்டு ஆண்டு களுக்கு முன்பு இந்த இயந்திரங்களை வாங்கத் தயாராக இருந்தும் கூட மத்திய அரசு சார்பில் எடுக்கப்பட்ட முயற்சிகள் கனடாவி



லிருந்து வேண்டாம், அமெரிக்காவிலிருந்து வரவழைக்கலாம் என்ற அளவிற்கு யோசனைகள் செய்யப்பட்டு, பிறகு அது கைவிடப்பட்டு கனடாவிலிருந்து வரவழைக்கலாம் என்ற முடிவிற்கு வந்தார்கள். மத்திய அரசு மூலமாக அந்த இயந்திரம் சீக்கிரத்தில் நமக்குக் கிடைக்குமென்று நம்புகிறோம். அதைப்போலவே 5-வது ஜெனரேட்டர் எண்ணூரில் நிறுவ ஹைதராபாத்திலும், திருச்சி யிலும் உள்ள மத்திய அரசு நிறுவனங்களால் செய்யப்பட்டு வரு கின்றன. விரைவிலே கிடைத்துவிடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நண்பர் தங்கமணி அவர்கள் திருமால்புரம் போலீஸ் ஸ்டேஷனில் நடந்த கொடுமையைப் பற்றிச் சொன்னார்கள். அதுபற்றித் தகவல் இன்னும் வரவில்லை. அப்படி நடைபெற்றிருக்குமானால் உள்ளபடியே அது கண்டிக்கத்தக்கது, வருந்தத்தக்கது. அதிலே யார் ஈடுபட்டிருந் தாலும் தயவு தாட்சண்யம் இல்லாமல் தண்டிக்கப்பட வேண்டியவர்கள். முழு விவரங்களையும் நிச்சயமாக அறிந்து ஏற்ற நடவடிக்கையை எடுப்பேன் என்று தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன்.

நகர்ப்புறச் சொத்துக்களுக்கு உச்ச வரம்பு பற்றி என்ன பதில் சொல்லுகிறீர்கள் என்று நண்பர் மதி அவர்கள் கேட்டார்கள். நான் இந்த நகர்ப்புற சொத்து உச்ச வரம்பு பற்றி டில்லியில் பேசப்பட்ட நேரத்திலும், வேறு சில மாநில முதலமைச்சர்கள் "எங்கள் மாநிலத்தில் கொண்டு வந்து விட்டோம்" என்று சொன்ன நேரத்தி லும், நான் அளித்த பதில்—"இது ஒரு கவர்ச்சிகரமான கோஷமாக இருக்கிறது; நடைமுறைப் படுத்துவதிலே பெரும் சிக்கல்கள் இருக் கின்றன" என்று சொன்னேன். இப்போதும் சிக்கல்களைத்தான் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம்.

நகர்ப்புறச் சொத்துக்கு உச்ச வரம்பு என்பது—ஒன்றான இந்தியா, ஒருமைப்பாடான இந்தியாவில் அகில இந்திய அளவிலே இலக்கணம் வகுக்கப்பட வேண்டுமென்று சொல்லாமல் அந்தந்த மாநிலங்கள் தனித் தனியாக இலக்கணங்களை வகுக்குமானால் மற்றொரு மாநிலத் திற்குப் போய் நாம் வகுத்த இலக்கணம் ஈடேற முடியாமல் செய்ய முடியும்.

உதாரணமாக, பல வீடுகளுக்கு, பல தொழில்களுக்குச் சொந்தக் காரராக இருப்பவரை உச்ச வரம்பின்கீழே கொண்டு வருவோ மானால் அவர் அதையே அடுத்த மாநிலத்தில் அனுபவித்துக்

கொண்டிருக்கின்ற சூழ்நிலையைப் பெற முடியும். ஆகவே, இதற்கு அகில இந்திய அளவில் இலக்கணம் வகுக்க வேண்டும். அந்த அடிப் படையில்தான் நகர்ப்புற உச்ச வரம்பு பற்றிக் கவனிக்க வேண்டும் என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்.

இது நிறைவேற்றப்பட்ட மாநிலங்களிலும் வீடுகளுக்குத்தான் உச்ச வரம்பைக் கொண்டு வந்திருக்கிறார்களே தவிர, சினிமாத் தியேட்டர், தொழிற்சாலைகள் போன்றவற்றுக்கு உச்ச வரம்பைக் கொண்டு வர முடியாத சூழ்நிலையில், சிக்கலில் இருக்கிறார்கள். சில இடங்களில் சட்டமாக்கி விட்டார்கள். நடைமுறைச் சங்கடங் களால் தாமதத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். இதிலே அவசரப் பட்டுச் செய்ய எதுவும் இல்லை.

ஆனால், இந்தக் கொள்கை நமக்கு உடன்பாடான கொள்கை என்பதையும், இதை மறுப்பவர்கள் நாம் அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்வேன். ஆனால், அதே நேரத்தில் அகில இந்திய அளவிலே அடிப்படை இலக்கணம் வகுக்கப்பட வேண்டுமென்பதையும் கூறிக்கொள்ளுகிறேன்.

வேலை வாய்ப்புகளைப் பற்றிச் சொன்னார்கள். ஆண்டு ஒன்றுக்குப் பத்து கோடி ரூபாய் அளவுக்கு படித்தவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க புதிய திட்டங்களை மேற்கொண்டிருக்கிறார்கள். இதற்கு மேல் $7\frac{1}{2}$ கோடி ரூபாய் அளவுக்குப் புதிய திட்டங்களுக்குக்காக மத்திய அரசின் அனுமதியைப் பெற்றிருக்கிறோம். அடுத்த ஆண்டு வேலை வாய்ப்புத் திட்டங்கள் எல்லாம் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழைகளுக்கு இந்த அரசில் எதுவுமே செய்யவில்லை, பணக்காரர் களுக்குத்தான் இந்த அரசு எல்லாம் செய்து கொண்டிருக்கிறது என்று இங்கே சிலபேர் எடுத்துப் பேசினார்கள். பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டம் ஏழைகளுக்காகச் செய்யப்படுகிறதே தவிர, பணக்காரர்களுக்கு அல்ல.

35,000 பேருக்குக் கண்ணொளி வழங்கப்பட்டிருப்பது ஏழைகளுக் காகவே தவிர, பணக்காரர்களுக்கு அல்ல.

அரசு அலுவலர்கள் ஊதிய உயர்வு இந்த ஐந்து ஆண்டுகளில் ஐந்து தடவை அகவிலைப்படி உயர்வு மாத்திரம் அளிக்கப்பட்டிருக் கிறது. அவர்களுடைய கோரிக்கைகள் புறக்கணிக்கப்படவில்லை.



நெடுஞ்சாலைத் துறையில் ஒரு மாத காலத்திற்குள்ளாக சாதாரண மக்களைத் தொடக்கூடிய காரியம் எவ்வளவு செய்திருக் கிறோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நெடுஞ்சாலைத் துறையில் கேங் மஸ்தூர் என்று பணியாற்றக் கூடியவர்கள் 11,685 பேர். இவர்களில் பத்து ஆண்டுகளுக்கு மேல் பணி புரிந்துள்ள 6,700 நபர்கள் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார்கள். இதற்காக அரசுக்கு ஆகும் கூடுதல் செலவு ஆண்டு ஒன்றுக்கு சுமார் 17 லட்சமாகும்.

பொதுப்பணித் துறையில் ஒர்க் சார்ஜ்டு தொழிலாளர்கள் மொத்தம் 8,000 பேர் இருக்கிறார்கள். இவர்களில் 7,000 பேர் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார்கள். பொதுப்பணித் துறையிலும், நெடுஞ்சாலைத் துறையிலும் தற்போது 13,700 பேர் நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர்.

ஆலயப் பணியாளர் 50,000 பேருக்கு ஊதிய விகிதங்கள் சீரமைக்கப்பட்டிருக்கின்றன. 50,000 குடும்பங்கள் மகிழ்ச்சி யடைவார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள்.

இன்னும் சில புதிய அறிவிப்புகளை இந்த நிதி ஒதுக்கீட்டில் அறிவிப்பதன் மூலம் உறுப்பினர்களுக்கும், மற்றவர்களுக்கும் மகிழ்ச்சி தரும் என்று கருதுகிறேன்.

1972 ஏப்ரல் திங்கள் 1-ம் தேதியிலிருந்து குறைந்த பட்ச ஓய்வூதியம் ரூ. 30லிருந்து ரூ. 40 ஆக உயர்த்தப்பட்டது. இத் தொகை குறைவாக இருக்கிறதென்று ஒரு குறைபாடு இருந்து வரு கிறது. ஓய்வூதியம் பெறுபவர்களின் இந்தக் கோரிக்கையை மனதில் கொண்டு 1973 ஏப்ரல் திங்களுக்கான ஓய்வூதியத்திலிருந்து குறைந்த பட்ச ஓய்வு ஊதியம் ரூ. 50 ஆக உயர்த்தப்படுகிறது. (ஆரவாரம்) ஆண்டு ஒன்றுக்கு இதனால் ரூ. 30 லட்சம் அதிகச் செலவாகும். 30,000 பேர்கள் இதனால் பயனடைவர். 30,000 பேர் இந்த அரசை வாழ்த்துவார்கள், இந்த மாமன்றத்தை வாழ்த்துவார்கள்.

DR. H. V. HANDE: Sir, I have been persistently asking on the floor of the House for the increase of pension. On behalf of the pensioners, I thank the Hon. Chief Minister for that.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கடைசி நேரத்திலாவது நன்றிகளைப் பெறுகிறேன். மகிழ்ச்சி.

ஓய்வூதியத்தைப் பொறுத்து மேலும் ஒரு கோரிக்கையையும் அரசு ஏற்க முன் வந்துள்ளது. அதாவது, அரசு ஊழியர்களுக்கு

ரூ. 10 அகவிலைப்படி உயர்வு கொடுத்ததை ஒட்டி, ஓய்வு ஊதியம் பெறுவோருக்கும் ரூ .5 அகவிலைப்படி உயர்வு கொடுக்கப்படும். அக்டோபர் 1973 வரை இத்தொகை அரசிடம் சேமித்து வைக்கப் பட்டு, மொத்தத் தொகையாகக் கொடுக்கப்படும். அதற்குப் பிறகு மாதாமாதம் கூடுதலாக ரூ. 5 கொடுக்கப்படும். குறைந்தபட்ச ஓய்வு ஊதியம் பெறுவோருக்குக் கிடைக்கும் ஓய்வு ஊதிய உயர்வில் அகவிலைப்படி உயர்வு உள்ளடங்கும்.

உதாரணமாக, 40 ரூபாய் பெறுபவர்கள் 45 ஆகி ஐந்து ரூபாய் அதிகமாகப் பெறுவார்கள். 43 ரூபாய் பெறுபவர்கள் 5 ரூபாய் அதிக மாகக் பெற்று பிறகு 2 ரூபாய் அதிகமாகப் பெறுவார்கள். 46 ரூபாய் பெறுபவர்கள் ஐந்து ரூபாய் அதிகமாக, ஆக 51 ரூபாய் பெறுவார்கள்,

இன்னென்றும் சொல்ல விரும்புகிறேன். நெடுஞ்சாலைத் துறை யில் பல பேர் நிரந்தரப் பணியாளர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். அதே போல் நெடுஞ்சாலைத் துறையிலுள்ள கேங் மஸ்தூர்கள் வேலை செய்கிற நேரத்தில், வெயில் கொதிக்கிற நேரத்தில் தாரை எடுத்து ஊற்ற அவர்கள் படுகின்ற கஷ்டத்தை நாம் காரில் செல்லும்போது பார்த்திருக்கிறோம். அவர்கள் காலில் சாக்குத் துணியைக் கட்டிக் கொண்டு வெயில் கொடுமையைப் பொறுக்க முடியாமல் கஷ்டப்படு கிறார்கள். அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்பதற்காக ஓராண்டுக்குக் குறையாது தொடர்ந்து பணியாற்றி வரும் கேங் தொழிலாளர்கள் அனைவருக்கும் வரும் ஆண்டிலிருந்து கிராமக் கைத்தொழில் வாரியம் மூலமாகக் காலணிகள் வழங்கப்படும். ஏறத் தாழ 10,000 தொழிலாளர்கள் இதனல் பயன் அடைவார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நல்ல அறிவிப்புகளோடு இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

“தமிழ்நாடு 1973-ம் ஆண்டு நிதி ஒதுக்க (2-ம் எண்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/73) பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.”

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.



பிரிவு 2, அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(இ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு நிதி ஒதுக்க (3-ம் எண்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/73).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, “தமிழ்நாடு 1973-ம் ஆண்டு நிதி ஒதுக்க (3-ம் எண்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/73) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்” என்று கேட்டுக் கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் முடிவுற்று பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணி அளவில் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-30 மணி அளவில் ஒத்திவைக்கப் பட்டது.

## (4) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

A. *Statutory Rules and Orders.*

89. Notification issued with G.O. Ms. No. 307, Public (Elections), dated the 7th February 1973, in regard to certain amendments to Rules 4 and 5 of the Tamil Nadu Legislators' Hostel (Accommodation) Rules, 1969. [Laid on the Table of the House under section 14 (3) of the Tamil Nadu Payment of Salaries and Removal of Disqualifications Act, 1951 (Tamil Nadu Act XX of 1951).]

B. *Reports, Notifications and Other Papers.*

@ 147. The Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1973 (L.A. Bill No. 9 of 1973).

148. Fifth Report of the Committee on Subordinate Legislation.

---

@ Despatched to Members on 27th March 1973

## தமிழ்நாடு சட்டப் பேரவை

---

*வெள்ளிக்கிழமை, 1973 மார்ச் 30.*

*சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.*

### *1. நீத்தார் நினைவுக் குறிப்பு*

### *பேரவை முன்னாள் உறுப்பினர் திரு. பி. இராசகோபால் நாயுடு அவர்கள் மறைவு குறித்து*

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்*** : காட்பாடி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு சட்டப் பேரவையில் 1962 ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு வரை உறுப்பினராக இருந்த திரு. பி. இராசகோபால் நாயுடு அவர்கள் 28—3—1973-ம் நாளன்று மறைந்ததைக் குறித்து இப் பேரவையின் சார்பில் இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்தவருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

*(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நின்றனர்.)*

### *2. வினாக்கள்—விடைகள்*

### *வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்*

*Central aid for Drinking Water Supply Schemes*

*506 Q.—THIRU K. T. K. THANGAMANI & THIRU V. MALAIKKANNAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Union Government have asked for schemes for the current year under Water Board set up in the State;

(b) if so, the details of the same; and

(c) the financial assistance granted by the Union Government?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (அ) ஆம்.

(இ) நீர் நிலை வாயில்கள் எவையும் இல்லாத கிராமங்கள், தொற்று நோய் பரவியுள்ள கிராமங்கள், போதிய நீர்வசதி இல்லாது மேம்படுத்தப்படவிருக்கிற நீர் நிலைகள் உள்ள கிராமங்கள் ஆகியவற்றிற்கு குடி நீர் வசதிகள் செய்து கொடுக்கும் திட்டம் ஒன்றை வகுக்கும்படி இவ்வரசை மத்திய அரசு கேட்டிருந்தது. இதற்கிணங்க தமிழ் நாடு குடி நீர் வடிகால் வாரியம் ரூ. 1,226 இலட்சம் செலவில் 2,010 திட்டங்கள் வகுத்தது. இவற்றில், ரூ. 310 இலட்சம் செலவிலான 421 திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த 421 திட்டங்களின் பட்டியல்* ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

(உ) நடப்பாண்டிற்காக இந்திய அரசு ரூ. 1 கோடி ஒதுக்கி யுள்ளது. இத் தொகையில், ரூ. 75 இலட்சம் வரை இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இந்த விவர அறிக்கையில் தருமபுரி, இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு இரண்டரைக் கோடி ரூபாய் என்றும், அடுத்து செங்கற்பட்டு, தென்னார்க்காடு, வடார்க்காடு மாவட்டங்களுக்கும் சேர்த்து மூன்று கோடி ரூபாய் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மூன்று கோடி ரூபாயும் நமக்கு மத்திய அரசு கொடுத்துவிட்டார்களா ? அல்லது ரூ. 75 லட்சம் கொடுத்து, இன்னும் ரூ. 25 லட்சம் தான் பாக்கியிருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** என்னுடைய பதிலிலேயே குறிப்பிட்டேன். நாம் திட்டம் தீட்டியது 2,010 திட்டங்கள். அவற்றிற்கு 12 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீடு செய்திருந் தோம். ஆனால், 2,010 திட்டங்களில் 421 திட்டங்களுக்குத்தான் மத்திய அரசு ஒப்புதல் அளித்திருக்கிறது. அவற்றுக்கு மூன்று கோடியே 10 இலட்ச ரூபாய்க்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருக் கிறது. நடப்பாண்டிற்காக மத்திய அரசிடமிருந்து 1 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதில் ரூ. 75 இலட்சம் இதுவரை வழங்கப் பட்டுள்ளது. ரூ. 310 இலட்சம் செலவில் திட்டங்கள் நிறைவேற்றி வருகிறோம். பிறகு அவற்றுக்கான பணம் கிடைத்துவிடும் என்று நம்பிக் கொண்டிருக்கிறோம்.

---

* -ம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப் பெற்று உள்ளது.





**திரு. கே. டி. கே. தங்கமணி :** 12 கோடி ரூபாய்த் திட்டத்தின் விவரம் சபைமுன் வைக்கப்படுமா ? மேலும், 1973-74-ம் ஆண்டுக்கு பாக்கி அவர்கள் கொடுக்க வேண்டிய 9 கோடி ரூபாய் அளவுக்கான திட்டங்களையும் நாம் செயல்படுத்துவோம் என்று மத்திய அரசுக்கு அறிவிக்க முடியுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பொதுவாக, இந்தக் குடி நீர் வடிகால் வாரியம் இந்தத் திட்டங்களை மாத்திரமல்லாமல் மற்ற நகராட்சித் திட்டங்களையும் வேறு பல யூனியன் சார்பாக நிறை வேற்றப்படுகிற திட்டங்களையும் எடுத்துக் கொண்டு அவைகளை முறைப்படுத்தியும் தீவிரப்படுத்தியும் வருகிறது. நீர் நிலை வாயில்கள் எவையும் இல்லாத கிராமங்கள், தொற்றுநோய் பரவியுள்ள கிராமங்கள், போதிய நீர் வசதி இல்லாமல் மேம்படுத்தப் பட வேண்டிய நிலையில் உள்ள கிராமங்கள் ஆகியவற்றுக்குக் குடி நீர் வசதி செய்து கொடுக்கும் அந்தத் திட்டத்தை மாத்திரம் மத்திய அரசு ஒப்புக்கொள்ளுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் கோரியதைப் போல், 2,010 திட்டங்களுக் கான விவரங்களைச் சேகரித்து, முடியுமானால் அவையிலே வைப்பது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** ஒவ்வொரு ஜில்லா அடிப் படையில் எது எது முக்கியமானது, முதன்மையானது என்று ப்ரையாரிடி லிஸ்ட் தயார் செய்வது அந்த அடிப்படையில் இதற்கு சாங்ஷன் வழங்க அரசாங்கம் ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோருகிற அதே அடிப்படையில்தான் திட்டங் களெல்லாம் வகுக்கப் பெற்று அதற்கான அனுமதிகள் கோரப் படுகின்றன.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, இந்தப் பிரை யாரிடி லிஸ்டில் கோவை மாவட்டத்திற்கு நான்கு திட்டங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதில் எந்த அளவுக்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறது, எவ்வளவு பணம் செலவிடப்படுகிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நான் மொத்தமாகத்தான் சொன்னேன். 2,010 திட்டங்களில் 421 திட்டங்களுக்கு ஒப்புதல் கிடைத்திருக்கிறது. நான் தனித்தனியாக விவரங்கள் சொல்வது இயலாது. தனிக் கேள்வி போட்டால் சொல்ல இயலும்.

THIRU B. VENKATASWAMY : In the list given, Hosur and Denkanikota have not been included even though these areas are most backward and there are areas where contagious diseases are spreading. May I know from the Hon. Chief Minister whether Hosur and Denkanikota taluks would be included in the scheme of protected water supply?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஹொசூர், தேன்கனிக் கோட்டை போன்ற இடங்களின் பிரச்சினைகளும் நிச்சயமாகக் கவனிக்கப்படும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, இம்மாதிரியான திட்டங்களைத் தயார் செய்யும்போது எல்லா மாவட்டங்களுக்கும் இந்தத் திட்டங்களின் பயன் கிடைக்கத்தக்க விதத்தில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இயன்ற அளவுக்குத் திட்டங்கள் ஒதுக்கப் படுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் இது நான் ஏற்கெனவே குறிப்பிட்ட சில தகுதிகளின் அடிப்படையில் உள்ள கிராமங்களுக்கு வகுக்கப் படுகின்றன. அப்படிப்பட்ட கிராமங்கள் எல்லா மாவட்டங்களிலும் ஒரே சீராக, ஒரே நிலையான எண்ணிக்கையில் உள்ளனவாக இருக்க முடியாது. இருந்தாலும், இதிலே மிகப் பின்தங்கிய இடங்களை நாம் முன்வரிசைப்படுத்தி இந்தத் திட்டங்களைத் தயாரிக்க வேண்டியிருக்கிறது. இதிலே 2,010 திட்டங்கள் நாம் தயாரித்தும், 421 திட்டங்களுக்குத் தான் மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. ஆகவே, இதை வைத்துக்கொண்டு நாம் எல்லா வற்றிற்கும் திட்டம் தயாரிக்கவில்லை என்று குறை காண முடியாது.

*Assistance from Film Finance Corporation*

* 567 Q.—THIRU KOVAI CHEZHIYAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether it is a fact that the South Indian Film Producers are not benefited by the Film Finance Corporation set up by the Central Government at Bombay?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தென்னிந்தியத் திரைப் பட தயாரிப்பாளர்களிடமிருந்து திரைப்பட நிதியுதவிக் கழகத்திற்கு 31-12-1972 வரை ஐம்பத்தைந்து விண்ணப்பங்கள்



வந்துள்ளன. அவற்றில் ஏழு விண்ணப்பங்கள் திரும்பப் பெறப் பட்டன. ஒன்பது விண்ணப்பங்களைப் பொறுத்தவரையில் கழகம் கடன் வழங்கியுள்ளது. இவற்றிற்கு வழங்கிய மொத்தத் தொகை ரூ. 17,72,684 ஆகும். திரைப்பட நிதியுதவிக் கழகம் வழங்கிய மொத்தக் கடன் தொகையில் இது சுமார் 7½ சதவீதம் ஆகும். இவ்வாறு, பம்பாய் திரைப்பட நிதியுதவிக் கழகம் வழங்கும் கடன் களினால் தென்னிந்தியத் திரைப்படத் தயாரிப்பாளர்கள் ஓரளவுக்குப் பயனடைந்துள்ளனர்.

**திரு. கோவை செழியன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஃபிலிம் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் மூலமாகத் தமிழகத்திற்கு எந்த விதமான பயனும் கிடையாது. இரண்டே இரண்டு படங்களுக்குத்தான் அவர்கள் நிதி உதவி செய்தார்கள். 'கடவுள் தந்த பரிசு' என்னும் படத்திற்கு ரூபாய் மூன்று லட்சமும், 'தாகம்' என்ற படத்திற்கு ரூபாய் ஒன்றரை லட்சமும் தந்தார்கள். முதல் படம் 2,000 அடியோடு நின்றுவிட்டது. ஐந்தாண்டுகள் ஆகியும் அது வெளிவரவில்லை. இன்னொரு படம் இன்னும் வெளியாகவில்லை. ஆக, பம்பாயில் இருக்கிற இந்தக் கார்ப்பரேஷனால் தமிழ்நாட்டுத் தயாரிப்பாளர்களுக்கு எந்த விதமான பயனும் கிடையாது. அங்கேயிருக்கும் இயக்குநர்கள் அத்தனை பேரும் வட நாட்டைச் சேர்ந்தவர்கள். அவர்கள் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அதில் ஐம்பது லட்ச ரூபாயைப் பிரித்து மெட்ராசில் தனியாக ஒரு பிலிம் பைனான்ஸ் கார்ப்பரேஷன் அமைத்து, அதைத் தமிழ்நாடு அரசினுடைய கட்டுப்பாட்டுக்குக் கீழ் கொண்டு வரத் தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்துமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல அங்கே பம்பாயில் இருக்கின்ற இந்தக் கழகத்திற்கு இயக்குநர்கள் எட்டுப் பேர்களில் இரண்டு மூன்று ஆண்டுகளாகத் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களும் இருந்தார்கள். இப்பொழுது அவர்கள் அதிலே இயக்குநர்களாக இல்லை என்று தெரிய வருகிறது. தமிழ்ப் படங்களைப் பொறுத்தவரையில் மிகக் குறைவான அளவுக்கே இந்த நிதி உதவியை அவர்கள் பெற்றிருக்கிறார்கள். அதிலே ஒருவர் 'கடவுள் தந்த பரிசு' என்கிற படத்தை எடுத்தவர் என்று நண்பர் செழியன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தப் படத்தை எடுப்பதற்கு நிதி உதவி பெற்றவர் படம் எடுத்துக் கொண்டிருந்த

போதே காலமாகிவிட்டார். ஆகவே, அந்தப் படம் பாதியில் நின்றுவிட்டது. இன்னொரு படம் தான் அந்த நிதி உதவியைப் பெற்று எடுக்கப்பட்ட 'தாகம்' என்ற படம் ஆகும். அது இன்னும் திரையிடப்படவில்லை என்று தெரிகிறது. இந்த நிதி உதவிகளைத் தமிழ்நாட்டிலுள்ள அல்லது தென்னாட்டிலுள்ள திரைப்பட நிறுவனங்கள் அல்லது திரைப்படத் தயாரிப்பாளர்களும் பெறுவதற்கான வகையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. செழியன் அவர்கள் சொன்ன யோசனையை அரசு பரிசீலிக்கும். அதுபற்றியும் எடுத்துக் கூறும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** முதல் அமைச்சர் அவர்கள் பதிலில் இருந்து சுமார் இரண்டு கோடி ரூபாய் வரையில் கடன் வழங்கியிருப்பதாகத் தெரிகிறது. நமக்கு 17 லட்சம் ரூபாய் தான் கிடைத்தது என்றால் மஹாராஷ்ட்ராவிற்கு எவ்வளவு கிடைத்தது என்ற விவரம் இருக்கிறதா ? இந்த 9 படங்களில் இரண்டு படங்களைப் பற்றித்தானே விவரம் தெரிகிறது. மற்ற படங்கள் இம்மாதிரி உதவி பெற்று அவர்கள் தயாரிப்பதற்கு ஆரம்பித்துவிட்டார்களா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** எல்லா விவரங்களையும் சொல்லி விடுகிறேன். இந்தத் திரைப்பட நிதி உதவி அளிக்கிற நிறுவனம் பம்பாயில் இருக்கிறது. இதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்திப் படங்கள், 46 படங்களுக்குக் கடன் உதவி அளித்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட ரூ. 1,48,00,000 இந்திப் படங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, ரூ. 2,34,00,000-ல் ரூ. 1,48,00,000 இந்திப் படங்கள், 46 படங்களுக்கு அளிக்கப் பட்டிருக்கிறது. வங்காளிப் படங்களுக்கு, 13 படங்களுக்கு ரூ. 33 லட்சம் அளிக்கப்பட்டிருக்கிறது. கன்னடப் படங்கள் மூன்றுக்கு ரூ. ஆறு லட்சம் அளிக்கப்பட்டிருக்கிறது. தமிழ், படங்கள், இரண்டு படங்களுக்கு ரூ. 3,93,000 அளிக்கப் பட்டிருக்கிறது. தெலுங்குப் படங்களுக்கு அளிக்கப்படவில்லை. பஞ்சாபி படங்களுக்கு ஒரு படத்திற்கு ரூ. 3,04,400 அளிக்கப் பட்டிருக்கிறது. மராத்திப் படங்கள் 11-க்கு ரூ.15,45,000 அளிக்கப் பட்டிருக்கிறது, மலையாளப் படங்கள் நான்கு படங்களுக்கு ரூ. 7,69,00 அளிக்கப்பட்டிருக்கிறது. குஜராத்திப் படங்கள் 15-க்கு ரூ. 7,61,000 அளிக்கப்பட்டிருக்கிறது. ஒரியா படங்கள் 5-க்கு ரூ. 6,99,000 அளிக்கப்பட்டிருக்கிறது. ஆங்கிலப்படங்கள் 13-க்கு





ரூ. 3,61,000 அளிக்கப்பட்டிருக்கிறது. ஆக, 113 பேர்களுக்கு இந்தக் கடன் அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. அதில் தமிழ் படங்கள் இரண்டுதான். இந்திப் படங்கள் 46.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** முதல் அமைச்சர் அவர்கள் தந்த பதிலிலிருந்து இந்திப் படங்களுக்கும், வங்காளிப் படங் களுக்கும்தான் அதிகப் பணம் கொடுத்திருக்கிறார்கள். இந்த இரண்டு கோடி ரூபாயில் முக்கால்வாசிக்கு மேல் அவர்கள் பெற்றிருக்கிறார்கள். ஆதலால் தமிழ் படங்களுக்கு அதிகமான பணம் கிடைப்பதற்கு இந்த அரசாங்கம் வேண்டிய நடவடிக் கைகளை மேற்கொள்ளுமா ? இல்லாவிடில் நமது கருத்தை அவர் களுக்குத் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அது ஏதோ இந்தக் கடன் உதவி அளிக்கிற நேரத்தில் கதை என்ன, வசனம் என்ன, டைரக்டர் யார், எந்தக் குறிக்கோளை வைத்து படம் எடுக்கப் படுகிறது, இந்தப் படம் முழுமையாக எடுக்கப்படுமா, ரிலீஸ் ஆகுமா என்று பல கேள்விகள் கேட்டு அந்த அடிப்படையில் பண உதவி வழங்குகிறார்கள். அப்படி வழங்கப்பட்ட ஒரு படம் தமிழ் நாட்டில் பாதியோடு நின்றிருக்கிறது.

**திரு. கோவை செழியன் :** கடன் வாங்குவதில் சிரமம் இருக் கிறது. காரணம், நாற்பது பக்கத்தில் பெரியவரலாற்றுப் புத்தகம் மாதிரி ஒரு கண்டிஷன் வைத்திருக்கிறார்கள் அப்ளிக் கேஷனில். அந்த பாரம் முழுமையாக பில் அப் செய்ய நான்கு நாட்களாகும். கண்டிஷன்ஸ் அதிகமாகப் போடப்பட்டிருக் கின்றன. அதனால் பட அதிபர்கள் யாரும் அணுக முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, அதை எளிதாக்குவதற்கு மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அரசாங்கமும் வலியுறுத்தும். இன்று இந்த அவையில் கேட்கப்பட்ட கேள்விகளும், அளிக்கப்பட்ட பதில்களும் கூட மத்திய அரசை விழிப்படையச் செய்யும் இந்த விஷயத்தில் என்று கருதுகிறேன்.

**திரு. கே. கந்தசாமி :** பம்பாயிலுள்ள இந்தத் திரைப்பட நிதியுதவிக் கழகத்திடமிருந்து உதவி பெறும்போது தமிழ் நாட்டிடம் ஓரவஞ்சமாக நடப்பதை வெளிப்படையாக நாம் உணரலாம். தமிழ்நாட்டின் சார்பாக இருந்த பிரதிநிதிகளையும்

எடுத்து விட்டதாக முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்களை எடுத்தவுடனே அரசு உடனடியாக அதற்கு நிவாரணம் தேடி அவர்களையும் போட வேண்டுமென்று வலியுறுத்தியதா? இல்லை என்றால் இனிமேலாவது வேண்டாத நிபந்தனைகளை நீக்கி தமிழ்நாட்டுக்கு உரிய உதவி கிடைப்பதற்கு அரசாங்கம் முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இருந்த பிரதிநிதிகளை அவர்கள் எடுத்துவிட்டார்களா அல்லது இவர்கள் நியாயம் கிடைக்கவில்லை என்று விலகி விட்டார்களா என்ற விவரம் தெரியாது. இருந்தபோதிலும் இந்த நிலைமை நீடிக்கக் கூடாது என்ற அந்த அளவிற்கேற்ப அரசு தன்னாலான முயற்சிகளை எல்லாம் எடுக்கும்.

**திரு. ஏ. எம். இராஜா:** பொதுவாக இந்தியாவிலேயே பம்பாயிலும், கல்கத்தாவிலும், சென்னையிலும்தான் அதிகமான படங்கள் எடுக்கிறார்கள். அதிலும் பம்பாய், சென்னையில்தான் அதிகமான படங்கள் எடுக்கின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** படங்கள் பற்றி முதல் அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. ஏ. எம். இராஜா:** முதல் அமைச்சர் அவர்களுக்காகக் கேட்கவில்லை, மற்ற உறுப்பினர்களுக்காகத்தான் கேட்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதற்காகத்தான் இங்கே கேட்கிறீர்கள்.

**திரு. ஏ. எம். இராஜா:** ஆக, இரண்டு கோடி ரூபாய் கடன் கொடுப்பதற்காக இந்த பிலிம் பைனான்ஸ் கார்ப்பரேஷன் ஒதுக்கியிருக்கிறது. அதில் தென்னாட்டிலுள்ள நான்கு மாநிலங்களுக்கும் சேர்த்து 17 லட்சம் ரூபாய் ஒன்பது படங்களுக்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் போடப்பட்டிருக்கிற டயரக்டர்சில் தென்னாட்டைச் சேர்ந்தவர்கள் இல்லை என்று முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்படி இந்த டயரக்டர்களைப் போடும்போது தென்னாட்டு அரசுகளைக் கலந்து கொண்டு தென்னாட்டு அரசுகளுடைய பரிந்துரையின் மேல் இந்த டயரக்டர்களைப் போடுகிறார்களா? இல்லையெனில், தென்னாட்டு





அரசுகளுடைய பரிந்துரையின்மேல்தான் டயரக்டர்களைப் போட வேண்டும் என்பதை வலியுறுத்த இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இந்த சினிமாத் துறையைப் பொறுத்தவரையில் எல்லாவற்றையும் அவர்கள் அகில இந்திய ரீதியில் எடுத்துக் கொண்டு தணிக்கைக் குழுவில் கூட நம் அரசைக் கலக்காமல்தான் தணிக்கைக் குழு உறுப்பினர்களையெல்லாம் அங்கு நியமிக்கிறார்கள் அதேபோல்தான் இதுவும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இந்திப் படம், அடுத்தாற்போல் தமிழ்நாட்டில் இருக்கிற தமிழ் படங்கள்தான் வரும் என்று கருத்து சொல்கிறார்களே, அது உண்மையா? அதுபற்றி முதல் அமைச்சர் அவர்களின் கருத்து என்ன?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** சொல்லப் போனால், இந்தி மார்க்கெட்டில் மிகப் புகழ்பெற்று ஓடுகிற இந்திப் படங்கள் கூட தமிழ்நாட்டுக்காரர்கள் தயாரித்த படங்கள்தான்.

**திரு. நா. வீராசாமி:** ஏக இந்தியா என்று பேசக்கூடியவர்கள் எதற்கெடுத்தாலும் இந்திக்கு ஒரு சலுகையும் மற்றவற்றிற்கு ஒரு சலுகையும் என்றுதான் தருவதாக இருக்கிறது. சமீபத்தில் கூட இந்தி வளர்ச்சிக்காக இருபது கோடி ரூபாய் மத்திய அரசு ஒதுக்கியிருக்கிறது இந்தக் குறைபாடுகளையெல்லாம் மத்திய அரசிடம் எடுத்துச் சொல்லி ஏக இந்தியா என்று சொல்கிற நேரத்தில் எல்லோருக்கும் சமமான சலுகைகள் அளிக்க வேண்டுமென்று நம் அரசு மத்திய அரசை வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இதுதான் இதுவரைக் கேட்கப்பட்ட எல்லாக் கேள்விகளுக்கும் நான் பதிலாகச் சொல்லி வந்திருக்கிறேன். இந்த நிறுவனத்தின் சார்பாகவும் தென்னாட்டில் உள்ள படத் தயாரிப்பாளர்களுக்கு நல்ல நீதி வழங்கப்படவில்லை என்பதைப்பற்றி இந்த அரசு முடிந்த வரையில் மத்திய அரசுக்குத் தெரிவிக்கும்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** நிதி உதவி கோரி தமிழ்நாட்டில் இருந்து எத்தனை படத் தயாரிப்பாளர்கள் விண்ணப்பம் அனுப்பியிருக்கிறார்கள்?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தமிழ்நாட்டிலிருந்து 19 பேர்கள் அனுப்பினார்கள். இரண்டு பேர்களுக்குத்தான் கிடைத்தது. ஆந்திராவில் இருந்து ஐந்துபேர்கள் அனுப்பினார்கள். யாருக்கும் கிடைக்கவில்லை. மலையாளத்தில் இருந்து 16 பேர்கள் அனுப்பினார்கள். 4 பேர்களுக்குக் கிடைத்தது.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** முதல் அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திலிருந்து தென் மாநிலங்கள் தங்களுக்குரிய நிதிப் பங்கை இந்தக் கழகத்திடமிருந்து பெற்றுக் கொள்ளவில்லை என்ற பொருள் இருக்கின்ற காரணத்தினால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்கிற முறையில், தென் மாநிலங்களுக்கு என்று ஒரு நிதி உதவிக் கழகம் அமைப்பதுதான் மாற்றுவழி என்பதால் சென்னையில் ஒரு நிதி உதவிக் கழகம் அமைப்பதற்கு மத்திய சர்க்காரை மாநில சர்க்கார் வலியுறுத்துமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மத்திய அரசு சார்பில் அப்படிப்பட்ட நிதி உதவிக் கழகம் ஒன்றை தென் இந்தியத் திரைப்படங்களுக்காக அவர்கள் அமைப்பார்களேயானால் அது வரவேற்கத்தக்க தொன்றாகும். அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் செழியன் அவர்கள் இங்கு எடுத்துச் சொன்னார்கள். அப்படி தென் மண்டலத்திற்காக ஒரு நிதி உதவிக் கழகம் அமைப்பதற்கு அரசு முயற்சி எடுத்துக் கொள்ளும், மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்கிற பணியில்.

**திரு. கு. பெரியசாமி:** ஓரவஞ்சக மனப்பான்மையுடன் அந்த பிலிம் பைனான்ஸ் கார்ப்பரேஷன் நடப்பதாக மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அளித்த பதிலில் இருந்து தெரிய வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முதல் அமைச்சர் அவர்களின் பதிலுக்கு ஒரு அர்த்தம் சொல்லக் கூடாது.

**திரு. கு. பெரியசாமி:** தமிழ்நாட்டுப் படங்களுக்காக, தமிழ்ப் படங்களுக்காக தமிழக அரசு ஏன் ஒரு தனி நிதி உதவிக் கார்ப்பரேஷன் நிறுவக் கூடாது என்று கேட்கிறேன்.



**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தமிழக அரசு அப்படி ஒரு கார்ப்பரேஷன் நிறுவுவதற்கு எந்த உத்தேசமும் இப்போது கிடையாது. ஏனெனில் செமி-பெர்மெனென்ட் தியேட்டர்ஸ் போன்றவை கட்டுவதற்குத் தமிழக அரசு சார்பில் ஒரு நிதி உதவிக் கழகம் ஆரம்பிக்கப்பட்டு அது நடைமுறையில் இருந்து வருகிறது. நிலைமையைத்தான் விளக்கினேன். இது ஓரவஞ்சனையா, இல்லையா என்பது பதிலைப் புரிந்துகொள்பவர்கள் கொடுக்க வேண்டிய ஒன்றே தவிர நான் அந்த வார்த்தையைச் சொல்லவில்லை.

**திரு. வை. பாலசுந்தரம்:** துணைத் தலைவரவர்களே, இப்படிப்பட்ட விளக்கங்களிலிருந்து வடக்கு, தெற்கு என்ற இடக்கான வாதங்கள் ஏற்படுமா என்பதை அரசு அறியுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** வடக்கு தெற்கு என்பது திசையைக் குறிப்பது. அது இடக்கான வாதம் அல்ல.

**Thiru K. S. KOTHANDARAMIAH:** The amount sanctioned for Tamil films is very small and for Telugu films they have not at all given anything. May I know from the Hon. Chief Minister whether the Hon. Chief Ministers of Tamil Nadu Government and the Andhra Pradesh Government will join together and press the Central Government to grant more funds?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தமிழ்நாடு முதலமைச்சரும், ஆந்திர முதலமைச்சரும் சேர்ந்து யோசிக்கலாம். ஆந்திரத்தில் முதலமைச்சர் இல்லை நான் என்ன செய்ய? (சிரிப்பு)

**திரு. ஆ. பரந்தாமன்:** துணைத் தலைவரவர்களே, பம்பாயில் இருக்கிற காரணத்தால்தான் இத்தகைய குறைபாடு இருக்கிறது என்று தெரிகிறது. ஆகவே, பண ஒதுக்கீடு மத்திய அரசு செய்கிற நேரத்தில் அந்தக் கடன் உதவியை மாநிலங்கள் மூலமாகச் செய்ய மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நிலை விளக்கத்தை நாம் அளித்து இருக்கிறோம். அதை எவ்வெவ்வாறு வகுத்து அந்த உதவிகளை வழங்கலாம் என்பது குறித்து மத்திய அரசு தான் யோசிக்க வேண்டும்.

**திரு. செ. கந்தப்பன்:** துணைத் தலைவரவர்களே, மத்திய அரசின் சார்பில் இது போன்ற நிறுவனங்கள் எது ஆரம்பித்தாலும் அது பெரும்பாலும் இந்தி பகுதிகளுக்குத்தான் பயன்படுகிறது.

[1973 மார்ச் 30

'சில்ரன் புக் டிரஸ்ட்' என்று வைத்தார்கள். அது இந்தி புத்தகங் களைத்தான் வெளியிடுகிறது. பூனாவில் 'பில்ம்ஸ் இன்ஸ்டியூட்' என்று வைத்தார்கள். அது இந்திக்காரர்களுக்குத் தான் லாபம் தருகிறது. இது போன்ற நிறுவனங்களை ஏற்படுத்துகிறபோது அகில இந்திய கண்ணோட்டத்தில் அவைகள் செயல்பட வேண்டும். இந்திக் காரர்கள் மட்டுமல்ல, நாமும் டெல்லிக்கு வரி கட்டுகிறோம் என்ற கருத்தை முதலமைச்சர்கள் மாநாட்டில் நமது முதமைச்சர் அவர்கள் வலியுறுத்துவார்களா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** எப்போதுமே இடமும் வழியும் கிடைத்தால் இந்தி ஆதிக்கம் நுழைந்து கொள்ளத் தயாராக இருக்கும். ஆகவேதான் இந்தி ஆதிக்க எதிர்ப்புக் கனலை நாம் அணையாமல் பார்த்து வருகிறோம்.

**திரு. த. சோலையா :** தலைவரவர்களே, திரைப்பட நிதி உதவிக் கழகம் தமிழ்நாட்டுக்குப் போதுமான அளவுக்கு நிதி உதவவில்லை. அதை அறிந்து இருக்கும் எதிர்க் கட்சிக்காரர்கள், அதை ஒரு கோரிக்கையாக வைத்துப் போராடப் போவதாக ஒரு செய்தி கூறப்பட்டு வருகிறது. அந்தப் போரட்டத்தை எங்கே நடத்தப் போகிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** போராட்டம் என்கிற படம் இன்னும் ரிலீஸ் ஆகவில்லை. (சிரிப்பு)

### சைனிக் பள்ளி மாணவர்களுக்கு படிப்புதவி

*568 வினா—**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கோயம்புத்தூரில் உள்ள சைனிக் பள்ளியில் சேரும் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களுக்கு தமிழ் நாடு அரசு உதவிப் பணம் (scholarship) கொடுத்து வருகிறதா ?

(இ) ஆம் எனில், உதவிப் பணம் பெற ஒரு மாணவனுக்கு வேண்டிய தகுதிகள் யாவை ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) தகுதி, பொருளாதார நிலை இவற்றின் அடிப்படையில் உதவித் தொகை வழங்கப்படுகிறது.



1973 மார்ச் 30]

**டாக்டர் ச. மு. பழனியப்பன் :** தலைவரவர்களே, இதிலே மத்திய அரசின் பங்கு எவ்வளவு, மாநில அரசின் பங்கு எவ்வளவு, ஆண்டுக்கு எவ்வளவு பேருக்கு நிதி உதவி இந்த அரசாங்கம் செய்கிறது என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப் பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, முதல்வர், தலைமையாசிரியர், உதவியாளர், ரிஜிஸ்டிரார் ஆகியோர் களின் சம்பளப் பொறுப்பை மட்டும் மத்திய அரசு ஏற்றுக் கொண்டு இருக்கிறது. மற்ற எல்லா வகையான செலவினங் களையும் மாநில அரசு ஏற்றுக்கொள்கிறது. மாநில அரசின் சார்பாக 1973—74-ம் ஆண்டிற்கு ரூ. 9 லட்சம் ஒதுக்கப்பட்டிருக் கிறது. கிட்டத்தட்ட 9-10 லட்சம் ரூபாய்கள் ஆண்டொன்றுக்கு தமிழக அரசால் மானியமாக வழங்கப்படுகிறது.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** துணைத் தலைவரவர்களே, பொருளா தார நிலையைக் கருதி அவர்களுக்கு உதவிப் பணம் கொடுப்பதாகச் சொன்னார்கள். அதை இன்னும் விளக்கமாகச் சொல்ல முடியுமா ? அதாவது மாணவர்களுக்கு உதவித் தொகை அளிப்பது குறித்து.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இந்த மாணவர்களுடைய தாய்-தந்தையர்கள் அல்லது அவர் களுடைய காப்பாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 400 வரை வருமானம் இருக்குமானால் அவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2,050 ஆண்டொன்றுக்கு முதல் ஆண்டில் ரூ. 300 'எக்விப் மெண்ட்' வாங்குவதற்கும், தொடர்ந்து வரும் ஆண்டுகளில் ரூ. 150-ம் தரப்படுகிறது. ஆக முதல் ஆண்டில் ரூ. 2,350-ம், தொடர்ந்து வருகிற ஆண்டுகளில் ரூ. 2,200-ம் தரப்படுகிறது. ரூ. 400-லிருந்து ரூ. 500 வரை வருமானம் உள்ளவர்களுக்கு ரூ. 1,540 ஆண்டொன்றுக்கு, ரூ. 300 முதல் ஆண்டிலும், ரூ. 150 இரண்டாவது ஆண்டிலும் தொடர்ந்து தரப்படுகிறது. ரூ. 500-லிருந்து ரூ. 700 வரை வருமானம் உள்ளவர்களுக்கு ரூ. 1,025 ஆண்டொன்றுக்கு ஒரு மாணவருக்குத் தரப்படுகிறது. ரூ. 700-லிருந்து ரூ. 1,000 வருமானம் உள்ளவர்களுக்கு ரூ. 510 ஆண்டொன்றுக்குத் தரப்படுகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : •[1973 மார்ச் 30
தொகை கொடுப்பதில் பேக்வார்ட் கிளாசுக்கு தலைவரவர்களே, இந்த உதவித்
ஷெட் ல்ட் காஸ்ட்டுக்கு எவ்வளவு என்ற விவரம் எவ்வளவு, ஷெட்
இருந்தால் தர முடியுமா? அமைச்சர் கைவசம்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அது பற்றிய
குறிப்பு இல்லை. தனிக் கேள்வி வேண்டும்.

புலவர் சி. பழனிச்சாமி : தலைவரவர்களே, அந்த சைனிக்
பள்ளியில் இருக்கும் மாணவர்கள் ஒரு முறை தேறவில்லை என்று
சொன்னால் வெளியே அனுப்பிவிடுகிறார்கள். ஒரு முறை தேற
வில்லையென்றாலும் மறுமுறையும் சேர்ந்து படிக்க அரசு ஆவன
செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இவ்வளவு பெரும்
பொருள் செலவழித்தும் கூட நமக்கு இருக்கும் வருத்த மெல்லாம்
ஆண்டு ஒன்றுக்கு 90—95 பேர் தேர்ந்தெடுத்தால் அதில் 3—4
பேரைத்தான் நேஷனல் அகாடமியில் சேர்த்துக் கொள்கிறார்கள்.
ஆகவே, இவ்வளவு பெரும் பொருள் செலவழித்துப் படித்து,
முதல் நிலை எண்ணிக்கை பெற்றவர்களிலே 3—4 பேரைத்தான்
எடுக்கிறார்கள் என்று சொல்கிறபோது, பெயிலாகக்கூடிய
மாணவர்களை மறுபடியும் சேர்த்து வைத்துப் படிக்க வைப்பதால்
பயன் இல்லை.

திரு. கே. கந்தசாமி : துணைத் தலைவரவர்களே, சைனிக்
பள்ளியில் பயிற்சி பெற்றவர்களுக்கு ராணுவத்தில் முதலிடம்
கொடுக்கப்படுகிறது. அவர்கள் தேச சேவையில் ஈடுபடுகிறார்கள்
ஆகவே, அந்தப் பள்ளியில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட
மாணவர்களுக்குச் சலுகைகள் வழங்கி சேருவதற்கான வழிவகை
களை அரசு மேற்கொண்டிருக்கிறதா? அப்படியில்லையென்றால்,
இனியாகிலும் செய்வதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே,
அதிலே யார் வேண்டுமானாலும் சேரலாம். பிற்படுத்தப்பட்ட,
தாழ்த்தப்பட்ட மாணவர்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். ஆனால்
அவர்கள் எந்த விகிதாசாரத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்
என்ற குறிப்பு இல்லை. அங்கே சேருவதற்கு ஒரு வழிமுறை
இருக்கிறது. அகில இந்திய ரீதியில் ஒரு தேர்வு நடத்து



கிறார்கள். அந்தத் தேர்வில் நல்ல எண்ணிக்கை பெற்று
முன்னிலை பெற்றவர்களின் வரிசை முறைப்படி தேர்ந்தெடுக்கப்
படுகிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு அவர்களுடைய
பெற்றோர்களின் வருமானத்தைக் கணக்கிட்டு, நான் முதலில்
குறிப்பிட்டபடி, ஆண்டுதோறும் உதவித் தொகை அளிக்கப்பட்டு
வருகிறது.

திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன் : தலைவரவர்களே, தமிழ்
நாட்டில் இந்த சைனிக் பள்ளிகளில் எங்கெங்கே இருக்கின்றன.
சாத்தனூர் அணைக்கட்டுப் பகுதியில் ஒரு பள்ளி அமைக்க 6
ஆண்டுகளுக்கு முன்பு சர்வே செய்தார்கள். அது என்ன ஆயிற்று
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கோயம்புத்தூர்
மாவட்டத்தில் அமராவதியில் ஒரு பள்ளி இருக்கிறது. அந்த ஒரு
பள்ளியே போதுமானது என்று கருதப்படுகிற காரணத்தால்
வேறு பள்ளி துவங்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, சைனிக் பள்ளியில்
மாணவர்களை எந்த அடிப்படையில் சேர்க்கிறார்கள் என்ற
விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் முதலி
லேயே சொன்னேன். அதற்கு என்று அகில இந்திய ரீதியில் ஒரு
தேர்வு நடத்துகிறார்கள். 'என்ட்ரன்ஸ் எக்சாமினேஷன்" என்ற
முறையில் நடத்துகிறார்கள். அவர்கள் எழுத்து, தகுதி, அறிவுத்
திறமை ஆகியவற்றின் அடிப்படையில் வரிசையாக அவர்களைக்
கணக்கிடுகிறார்கள். வரிசையாகக் கணக்கிட்டவர்களில் முதல்
நிலையிலிருந்து தேர்ந்தெடுக்கிறார்கள். தேவையுள்ளவர்கள்
வரையில் எடுக்கிறார்கள். மற்றவர்களை விட்டுவிடுகிறார்கள்.
அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு அவர்களுடைய பெற்றோர்
களின் வருமானம், வசதிகளைப் பார்த்து, நான் ஏற்கெனவே
சொன்னபடி, உதவித் தொகை வழங்கும் ஏற்பாடு நடைமுறையில்
இருந்து வருகிறது.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, இவ்வளவு சிரமப்பட்டு
படித்துத் தேர்வு பெறுகிறவர்கள் அத்தனை பேருக்கும் வேலை
வாய்ப்பு அளிப்பதில் முன்னுரிமை அளிக்கப்பட்டிருக்கிறதா

[1973 மார்ச் 30

அல்லது வேலை வாய்ப்புப் பெறாதவர்களுக்கு வேறு மாற்றுத் திட்டம் வைத்து, அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க அரசு ஏதேனும் ஏற்பாடு செய்ய இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் :** இதில் வேலை வாய்ப்பு என்பது அல்ல. அவர்கள் 10-வது வகுப்பு படித்ததற்குப் பிறகு 'நேஷனல் டிபன்ஸ் அகாடமியில் சேர்த்துக் கொள்ளப் படுகிறார்கள். பயிற்சி பெற்று பிறகு ராணுவத் துறையில் அதிகாரிகளாக ஆகும் வாய்ப்பு இருக்கிறது. அவர்களை ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்படும் வகையில் நான் முதலில் குறிப்பிட்டபடி தேர்வு நடத்துகிறார்கள், அதிலே 3—5—6 பேர் தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். மற்றவர்கள் எல்லாம் வேறு உயர்நிலைப் பள்ளிகளில் படித்து வரும் மாணவர்களைப் போல், வேறு பல கல்லூரிகளில், வேறு பல இடங்களில் சேருகிறார்கள்.

### மகளிர் பள்ளிகள்

*569 வினா—திரு. டி. வி. சம்பத் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாணவியர் தொகை குறைவாக உள்ள மகளிர் பள்ளிகளில் மாணவர்களையும் சேர்த்துக் கூட்டுக் கல்வி பயிலும் (Co-education) பள்ளிகளாக மாற்றும் செயற்குறிப்ப ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. கா. வேழவேந்தன் :** துணைத் தலைவரவர்களே, இப்படி 10—11 வகுப்புகளில் சேர்த்துக் கொள்ளப்படவில்லையென்றாலும், மாணவர்கள் மாணவியர்கள் நெருக்கடி அதிகமாக இருக்கும் இடங்களில் 8-வது வகுப்பு வரையாவது சேர்த்துக் கொள்ள வேண்டுமென்ற முறையில் திட்டம் வகுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, ஒரு உயர்நிலைப் பள்ளி இருக்கும் ஊர்களில் 11 வகுப்பு வரை மாணவர்களும் மாணவியர்களும் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். மாணவர்களுக்குத் தனியாக உயர்நிலைப் பள்ளி இருக்கும் ஊர்களில் மாணவியர்களும் சேர வேண்டுமென்றால்



1973 மார்ச் 30]

ஆய்வாளர்களின் முன் அனுமதி பெற்றுத்தான் சேர வேண்டும். அப்படி மாணவியர்களைச் சேர்க்கும் உயர்நிலைப் பள்ளிகளில் அவர்களுக்கு என்று தனியாக அவர்களுக்கு ஏற்றபடி வசதிகள் செய்து தர வேண்டும். அங்கே பெண் ஆசிரியர்களும் இருக்க வேண்டும். பெண்களுக்குத் தங்கும் இடம் தனியாக இருக்க வேண்டும். இந்த வகைகளில் அங்கு இருந்தால் மாணவியர்கள் ஆய்வாளர்களின் முன் அனுமதி பெற்று சேர்க்க அனுமதிக்கப் படுகிறார்கள்.

மு.ப. 9-30

**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவரவர்களே, தமிழ் நாட்டில் மாணவர்களும் மாணவியர்களும் தனித்தனியாகப் படிக்கின்ற காரணத்தினால்தான் அவர்களிடையே சகோதர பாசம் இளமையிலேயே மறைந்து விடுகிறது. ஆகவே, இளமையிலேயே சகோதர மனப்பாங்கை அளிக்கின்ற வகையில் வட மாநிலங்களிலே இருப்பதைப் போல நமது மாநிலத்திலும் இரு சாராரும் சேர்ந்து படிக்க வகைச் செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** எத்தனையோ உயர்நிலைப் பள்ளிகளிலே இரு சாராரும் சேர்ந்துதான் படிக்கிறார்கள். பல கல்லூரிகளிலும் இரு சாராரும் சேர்ந்து படிக்கின்ற வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. சில இடங்களில் பெண்கள் தனியாகப் படிக்க வேண்டுமென்று விரும்புவதால் அவர்களுக்கு அந்த வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறோம்.

### வேலூரை மாநகராட்சியாக்கல்

*570 வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் நகராட்சி, தொரப்பாடி, சத்துவாச்சாரி, சேண்பாக்கம், காட்பாடி நகர் விரிவு ஆகியவற்றை ஒருங்கிணைத்து வேலூர் மாநகராட்சியாக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதற்கான வேலைகள் எப்போது துவங்கும் ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) எழவில்லை.

[1973 மார்ச் 30

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டத்தின் தலைநகரமாக வேலூர் இருக்கிறது. அதன் அருகாமையில் ஆந்திர மாநிலம் இருப்பதால் அங்கிருந்து பெரும் வியாபாரிகள் அடிக்கடி அங்கே வந்து வியாபாரத்தில் ஈடுபடுகிறார்கள். அவர்களின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே இருக்கிறது. அதனால் வேலூர் வளர்ந்துவரும் ஒரு நகரமாக இருப்பதால் இப்போது இல்லாவிட்டாலும் கொஞ்ச நாட்கள் கழித்தாவது இந்த குறிப்பிட்ட நகர்களைச் சேர்த்து மாநகராட்சியாக உருவாக்கும் யோசனையை அரசாங்கம் பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அதைவிட பெரிய நகரங்கள் எல்லாம் மாநகராட்சி யாக்கப்படாமல் இருக்கும் போது வேலூரை மாநகராட்சியாக்கும் யோசனை இப்போது எழாது; கொஞ்ச நாள் கழித்தும் எழாது. மாநகராட்சியாக்க வேண்டுமானால் குறைந்தது 5 லட்சம் மக்கள் தொகையும், 2 கோடி ரூபாய் வருமானமும் இருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினரவர்கள் இந்த இரண்டையும் பெருமுயற்சி செய்து உருவாக்கி விடுவார்களானால் அதற்குப் பிறகு கவனிக்கலாம்.

**திரு. கே. எ. வகாப்:** தலைவரவர்களே, இப்போது மாநகராட்சி ஆக்குவதற்கு 2 கோடி ரூபாய் வருமானமும் 5 லட்சம் மக்கள் தொகையும் இருக்க வேண்டுமென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இப்போது இருக்கின்ற நிலையில் மக்கள் தொகையைப் பெருக்குவது என்பது முடியாது. ஆனால் 2 கோடி ரூபாய் வருமானத்தை பெருக்கிக்கொள்ள முடியும். ஆகவே, 2 கோடி ரூபாய்க்கு வருமானத்தைப் பெருக்கினால் வேலூரை மாநகராட்சியாக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாநகராட்சி யாக்குவதற்கு 5 லட்சம் மக்கள் தொகையும் 2 கோடி ரூபாய் வருமானமும் இருக்க வேண்டுமென்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதல் வகையைப் பெருக்குவது கஷ்டம்; இரண்டாம் வகையைப் பெருக்கி விடுகிறோம் என்று சொல்கிறார்கள். முதல் வகை சுலபம்; இரண்டாம் வகை தான் கஷ்டம் என்பது எல்லோருக்கும் தெரியும்.



1973 மார்ச் 30]

**திரு. ஏ. சி. நரசிம்மன்:** நமது அண்டை மாநிலமான கேரளா சிறிய மாநிலம். அங்கே கூட இரண்டு மாநகராட்சிகள் இருக்கின்றன. அவர்கள் 5 லட்சம் மக்கள் தொகையும், 2 கோடி ரூபாய் வருமானமும் இருந்தால் தான் மாநகராட்சியாக்குவது என்ற முறையைக் கடைப்பிடிக்கவில்லை. அதைப் போன்ற வேறு பல சிறிய சிறிய மாநிலங்களிலும் கூட 3, 4 மாநகராட்சிகள் இருக்கின்றன. அதிகமாக மாநகராட்சிகள் இருந்தால் அந்த மாநகராட்சிகளுக்கு மத்திய அரசின் உதவி அதிகமாகக் கிடைக்கிறது. ஆனால் நகராட்சிகளுக்கு மத்திய அரசின் உதவி கிடையாது. ஆகவே, மத்திய அரசின் உதவித் தொகையை அதிகமாகப் பெறுகின்ற வகையில் தமிழ் நாட்டில் கூடுதலாக ஒரு சில மாநகராட்சிகளை உருவாக்குகின்ற வகையில் முதற்கட்டமாக வேலூரை மாநகராட்சியாக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தமிழகத்தோடு பிற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்ப்பது இந்த விஷயத்தில் பொருத்தமாக இருக்காது. மற்ற மாநிலங்களிலே ஒரு லட்சம் மக்கள் தொகையைக் கொண்டு மாநகராட்சிகள் 5, 6 கூட இருக்கின்றன. அந்த முறையை நாமும் கடைப்பிடிப்பதாக இருந்தால் இங்கே இன்னும் பல மாநகராட்சிகளை ஏற்படுத்த முடியும். அப்படி மாநகராட்சிகளை அதிகப்படுத்தும்போது அங்கே அதிகாரிகள், அலுவலர்கள், இலாகாக்கள் எல்லாம் அதிகரிக்கும். அந்த அளவுக்குச் செலவும் அதிகமாகும். செலவை ஈடுகட்ட அதிகமான வரி போட வேண்டும். அதிக வரி போடுகின்றபோது மக்களிடம் இருந்து எதிர்ப்பு வரும். ஆகவே, இருக்கின்ற செலவைக் கூட்டாமல் வசதி வாய்ப்பைப் பெருக்க கவனம் செலுத்த வேண்டும். மக்களுக்குத் தொல்லைகள் ஏற்படக் கூடாது. ஆகையால்தான் மக்கள் தொகையின் அடிப்படையிலும் வருமானத்தின் அடிப்படையிலும் நகராட்சி, மாநகராட்சிகள் வருவதை வரவேற்கிறோம்.

**திரு. கோவை செழியன்:** மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது 5 லட்சம் மக்கள் தொகையும் 2 கோடி ரூபாய் வருமானமும் உள்ள நகராட்சிகளை மாநகராட்சிகளாக்க லாம் என்று சொன்னார்கள். சில நகரங்களில் அத்தகைய வாய்ப்பு இருந்தாலும், ஒரு எல்லைக்கோடு போட்டு நகரங்களில் பரப்பளவைக் குறைத்துவிடுவதால் அந்தக் கணக்கைக் காட்ட முடியவில்லை.

உதாரணமாக கோவை நகரத்தை எடுத்துக்கொண்டால் அங்கிருந்து பீளமேடு ஏர் போர்ட் வரையில் இடைவெளியில்லாமல் மக்கள் நெருக்கம் இருந்து கொண்டிருக்கிறது. கோவை நகரத்தின் எல்லைக்கோட்டை பீளமேடு ஏர் போர்ட் வரை நீட்டித்தால் அதை மாநகராட்சியாக்க உள்ள எல்லா வசதிகளும் இருக்கும். ஆகவே, நகர எல்லைக்கோட்டை மாற்றியமைக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஏற்கெனவே இருக்கின்ற எல்லைக்கோட்டைக் குறைப்பதில்லை. ஆகவே, மாநகராட்சியாக்கும்போது எல்லைக்கோட்டை விரிவுபடுத்தி, வேறு பல பகுதிகளையும் இணைத்து, மக்கள் தொகையைப் பெருக்கி, வருமானத்தையும் பெருக்கிக் கொள்ளலாம் வசதிகளும் வாய்ப்புகளும் இருந்தால். கோயம்புத்தூரைப் பொறுத்த வரையில் அந்தக் கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

### *Medical Officer at Puduruthamanur Health Centre*

* 571 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that the Directorate of Vigilance and Anti-corruption has filed a case against the Medical Officer of the Primary Health Centre, Puduruthamanur in Lalgudi taluk in Tiruchirappalli district; and

(*b*) if so, the details thereof and the action taken thereon?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) & (இ) புலன் ஆய்வுத் துறை மற்றும் இலஞ்ச ஒழிப்பு இயக்ககம் அந்த மருத்துவர்மீது ஓர் வழக்கைப் பதிவு செய்துள்ளது. அவ்வழக்கு இன்னும் புலனாய்வில் உள்ளது.

### *Drugs supplied to Mental Hospital, Madras*

*572 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether a number of Pharmacy shop owners have been prosecuted for supplying sub-standard drugs to the Mental Hospital, Madras in May 1972 ; and

(*b*) if so, the details thereof?



**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) ஆம்.

(இ) திருவாளர்கள் ஜெயின் பார்மஸூடிகல்ஸ் 19, கேசவ ஐயர் தெரு, சென்னை-3. போர்ஸ்டன் பார்மஸி, சென்னை-3 என்பவர்கள் தரக்குறைவானதும் போலிச் சிட்டு ஒட்டியதுமான குளோரச் ப்ரோமாசீன் ஹைட்ரோக்ளோரைட் மாத்திரைகளை சென்னை அரசினர் மனநோய் மருத்துவ மனைக்கு வழங்கினதற்காகக் குற்ற நடவடிக்கைகளுக்குள்ளாக்கப் பெற்றனர்.

**திரு. என். கே. பழனிசாமி :** சார், இந்த மருந்தையெல்லாம் உபயோகப்படுத்துவதற்கு முன்பாக அது சரியாக இருக்கிறதா என்பதை டெஸ்ட் செய்து உபயோகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ? இல்லையென்றால் இனிமேலாவது அந்த முறையைக் கொண்டுவர ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** சில மருந்து வகைகளில் சில சமயங்களில் தவறு ஏற்பட்டு விடுகிறது. ஆனால் இந்த மருந்து வகையில் அப்படியல்ல. 50 மில்லிகிராம் மருந்து சத்துள்ளது என்று குறிப்பிட்டுள்ள அந்த மாத்திரைகளைப் பரிசோதனை செய்து பார்த்ததில் 9.8 மில்லிகிராம் அளவுதான் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. ஆகவே, மருந்து தயாரித்தவர்கள்மீது ஏமாற்றிய குற்றம் இருக்கிறது. இந்த மாதிரி மருந்துகளில் ஏதாவது குறைகள் இருக்கும் என்ற சந்தேகம் வரும்போது சோதனை செய்து பார்க்கிறோம். எல்லா மருந்துகளையும் பரிசோதனை செய்து பார்க்கும் நிலை இருந்தால்கூட இப்படிப் பட்டவர்கள் அந்த மருந்தின் முதல் 'பாட்ச்' வருகிறபோது ஏமாற்றுவதற்காக ஒரு 500 பாட்டில்களில் நல்ல மருந்தாக வைத்துவிட்டு, மிச்சம் உள்ள 5,000 பாட்டில்களில் தவறு செய்து ஏமாற்றி விடுவார்கள். அதனால் இவர்கள்மீது வழக்குத் தொடரப் பட்டிருக்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, குற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அது சம்பந்தமான விவரங்களைத் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, இதிலே ஒரு வழக்கு ஜெயின் பார்மஸூடிகல்ஸ் பற்றியது. அது இப்போதும் கோர்ட்டிலே இருக்கிறது. The entire matter is, therefore, *sub-judice*.

என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இதிலே உள்ள சில விவரங்களை மட்டும் சொல்கிறேன். 50 மில்லிகிராம் சத்துள்ள மாத்திரை என்று கொடுத்ததில் 9.8 மில்லிகிராம்தான் இருந்தது. அதாவது ஐந்தில் ஒரு மடங்கு சத்துதான் இருந்தது. அந்த மருந்தைக்கூட அவர்கள் பாண்டிச்சேரியிலுள்ள ஒரு கம்பெனியில் வாங்கியதாக ஒரு கருத்து இங்கே காணப்படுகிறது.

ஆகவே, அங்கே சென்று விசாரித்ததில் அவர்கள் தயாரிக்க வில்லை என்றும், அவர்கள் வேறு கம்பெனியிலிருந்து வாங்கி 10 மில்லிகிராம் மாத்திரையை வாங்கி 50 மில்லிகிராம் என்று லேபிளை மாற்றி ஒட்டியதாகவும் காணப்படுகிறது. இன்னொரு வழக்கு போர்ஸ்டன் பார்மஸி பற்றியது.

" Messrs. Borston Pharma, Madras 7, were prosecuted under Drugs and Cosmetics Act, 1940, and its proprietor Thiru Naga-rathinam was fined Rs. 75 while its Manager Thiru Ramalingam was released under the Probation of Offenders Act.'' என்று அதிலே முடிவுகட்டி, தீர்ப்பும் கொடுத்திருக்கிறார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்** : தலைவரவர்களே, இந்தக் குற்றம் செய்தவர்களை 'பிளாக் லிஸ்டில்' போட்டு, மேலும் இவர் களுக்கு ஆர்டர் கொடுக்காமல் இருக்க எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றனவா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்** : எடுத்திருப்பார்கள் என்று நம்புகிறேன். இப்படிப்பட்டக் குற்றம் தவறுதலாக நடந்ததல்ல, வேண்டுமென்றே செய்யப்பட்டது. அதனால் நடவடிக்கை எடுத்திருப்பார்கள்.

**டாக்டர் ச. மு. பழனியப்பன்** : தலைவரவர்களே, இந்தமாதிரி யான மாத்திரைகள் இந்த மெண்டல் ஆஸ்பிட்டல் மட்டுமல்ல; மாநிலத்திலுள்ள பல்வேறு ஆஸ்பிட்டல்களுக்கும் பல்வேறுபட்ட கம்பெனிகளால் வழங்கப்பட்டிருக்கின்றன. அவைகளைச் சாப்பிடு வதனால் எந்தவிதமான பலனும் இல்லை என்று தெரிகிறது. ஆகவே, இந்தமாதிரியான போலி மருந்துகளைத் தயாரிப்பவர்களை எல்லாம் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்** : தலைவரவர்களே, இப்படிப் பொதுவாக ஒரு கருத்தைச் சொல்லிவிடுகிற காரணத்தால்



உண்மையை அறிவது கடினமாக இருக்கின்றது. ஏனென்றால் குற்றச்சாட்டுகள் எந்த அளவுக்குப் பொதுவாகச் சொல்லப்படு கின்றனவோ அந்த அளவுக்குப் போலி மருந்து தயாரிப்பவர்கள் தப்பித்துக்கொள்ள முயற்சி செய்கிறார்கள். எங்காவது மருந்து களில் தரக்குறைவு இருக்கிறது என்று டாக்டர்கள் தெரிவிப் பார்களானால் அதைப்பற்றி உடனடியாக நடவடிக்கை எடுத்து, தரக்குறைவு என்று சொல்லப்படும் மருந்துகளைக் கைப்பற்றி, ஆராய்ந்துபார்த்து மேல் நடவடிக்கை எடுக்க முடியும். 100 பேர்கள் தவறு செய்வதாக அறிந்து நடவடிக்கை எடுக்கப் பட்டால் அதில் 50 பேராவது தண்டிக்கப்பட்டால் மற்றவர்கள் திருந்திக்கொள்ளக்கூடும். மேலும் இம்மாதிரியான முயற்சிகளில் ஈடுபடமாட்டார்கள்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்** : துணைத்தலைவர் அவர்களே, இம் மாதிரி மருந்து உற்பத்தி செய்கிறவர்கள் ஏகமாக விலையை அதிகப் படுத்திக் கொள்ளை அடிக்கிறார்கள். தரமில்லாத மருந்தையும் தயாரிக்கிறார்கள். ஆகவே, மருந்து உற்பத்தி செய்கிற தொழிலை அரசே எடுத்து நடத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்** : அரசு ஆஸ்பத்திரிகளுக்கு உடனடியாகத் தேவைப்படுகிற, அன்றாடம் தேவைப்படுகிற மருந்துகளை உற்பத்தி செய்யலாம் என்ற கருத்தை ஏற்றுக் கொண்டு அதற்கான முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. மருந்து களின் விலையைக் கட்டுப்படுத்தக்கூடிய அதிகாரம் மத்திய அரசிடம்தான் இருக்கிறது. நாம் நமக்குத் தரப்படுகிற டெண்டர்களில் எது குறைந்தது என்று வேண்டுமானால் பார்த்து அதை வாங்கிக்கொள்ளலாம். மேலும் மருந்தை யார் உற்பத்தி செய்தாலும் ட்ரக் டெஸ்ட்டிங் லாபரட்டரி, ரீஜினலாக, மாநிலத் திற்கு ஒன்று அமைக்கப்படவேண்டும் என்பதால் நாம் மத்திய அரசை நிதி உதவி கேட்டும் அவர்கள் தராத காரணத்தினால் உடனடியாக அந்தக் காரியத்தையும் நம்மால் செய்ய முடியவில்லை.

*Research on Filariasis.*

*578 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether any research is being conducted in this State into Filariasis; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்**: (அ) இல்லை.

(இ) வினாவிற்கிடமில்லை.

**திரு. கு. இராசமாணிக்கம்**: யானைக்கால் வியாதி காவேரி ஆற்றின் இரு கரைப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு அதிகம் காணப்படுகிறது. அதுவும் பெண்களிடத்தில்தான் அதிகம் காணப்படுகிறது. இதைத் தடுக்க அரசு தக்க நடவடிக்கை எடுத்துள்ளதா? அந்தப் பகுதியில் இனிமேலாவது தக்க தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்**: தடுப்பு நடவடிக்கை இப்போதே இந்த வியாதி அதிகமாகக் காணப்படுகிற வட்டாரத்தில் நடைபெற்று வருகிறது. தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணத்தில்மட்டும் முன்பு அந்த வியாதியைத் தடுக்க நடவடிக்கை இருந்தது. இப்போது கும்பகோணம் மட்டுமல்லாமல், தஞ்சாவூர் நகரமும், திருச்சி நகரமும், ஸ்ரீரங்கமும் அந்த வியாதி அதிகம் உள்ள பட்டியலில் இடம் பெற்றிருக்கின்றன. இந்த வியாதி இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்ட வட்டாரங்களில் தொடர்ந்து தடுப்பு நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ஜே. ஜேம்ஸ்**: நமது மாநிலம் முழுவதிலும், யானைக்கால் வியாதி எந்த எந்தப் பகுதிகளில் அதிகமாக இருக்கிறது?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்**: இது பொதுவாகக் கிராமங்களில் இருப்பதைவிடச் சிறு நகரங்களில் சற்று அதிகம். கொசுக்கள் அதிகம் உள்ள பகுதியில்—அதுவும் பைலேரியா வியாதியை உண்டாக்குகிற கொசுக்கள் உள்ள பகுதியில்தான் இருக்கிறது. இரவு நேரத்தில் ரத்தத்தை எடுத்துச் சோதித்துப் பார்ப்பதன் மூலம்தான் இந்த வியாதி எந்த எந்தப் பகுதியில் அதிகம் இருக்கின்றது என்பதைக் கண்டுபிடிக்க முடிகிறது. இந்தக் கொசுக்கள் கடிப்பதனால் உட்புகும் கிருமிகளால் ஆரம்பத்தில் சதைப் பகுதி தடித்து, அதை ரத்தமற்றதாகச் செய்து பின்னர் அப்படி ஏற்படும் வீக்கம் நிலைத்து நின்று விடுகிறது. ஆனால் ஆரம்பத்திலேயே தொடர்ந்து 6 மாத காலம் ஹெட்ரசன் மாத்திரை சாப்பிட்டால் ரத்தத்தில் உள்ள இந்த வியாதியைக் குணப்படுத்திவிடலாம். ஆகவே இந்த நோய் அடையாளம் இருக்கிறதா என்று சோதித்துக்கொள்ள மக்கள் முன்வர வேண்டும்.





**திரு. கே. டி. கே. தங்கமணி**: சென்றமுறை கேட்டபோதும், அமைச்சர் அவர்கள் இதுபோன்ற பதிலைத்தான் அளித்தார்கள். சென்ற ஆண்டு பதிலளித்ததற்குப் பின்னால் தடுப்பு நடவடிக்கையாக எங்கங்கே என்ன என்ன செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்**: ஏற்கனவே 4 யூனிட்டுகள் ஏறத்தாழ 15 ஆயிரம் மக்கள்கொண்ட பகுதியில் செயல்படுத்தப்பட்டு வந்தன. Altogether the total population benefited by the said four units is 15 lakhs இந்த வியாதி எல்லா இடத்திலும் உள்ளது அல்ல. சில ரக கொசுக்கள் உள்ள இடத்தில்தான் உண்டாகிறது. அதுவும் இந்த வியாதி இருக்கக்கூடிய இடங்களில் உள்ளவர்களது ரத்தத்தை இரவு நேரத்தில் எடுத்துச் சோதித்துப் பார்ப்பதன்மூலம்தான் இந்த வியாதி அந்த வட்டாரத்தில் இருப்பதை நிர்ணயிக்க முடிகிறது. அதுபோன்ற பரிசோதனைகளை நடத்தி மேலும் 8 யூனிட்டுகள் ஏற்படுத்தி 45 லட்சம் மக்கள் உள்ள பகுதியில் செயல்பட ஆரம்பித்திருக்கின்றன.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, is there any tremendous increase of filariasis in the Madras City in recent years and if so, what steps are being taken to prevent the tremendous increase that is reported?

THE HON. THIRU K. ANBAZHAGAN: Sir, there is also a unit to control filariasis in the Madras City. The Corporation of Madras is taking proper action through this unit in the particular areas where it is prevalent.

**திரு. வை. பாலசுந்தரம்**: துணைத் தலைவர் அவர்களே, கொசுக் கடியின் மூலம் யானைக்கால் வியாதி வருகிறது என்று சொல்லப்படுகிறது. கொசுக்கு முன்பு லார்வா கிருமி தோன்றுகிறது. அவற்றை சேமிக்கக்கூடிய பைரத்தினம், மிலாரத்தினம் போன்றவை பயன்படவில்லை என்று சொல்லப்படுகிறதே, புதியதாக ஆராய்ச்சி செய்து வேறு மருந்தைக் கண்டு பிடிப்பார்களா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்**: கொசுவின் முட்டையில் இருந்து வரக்கூடிய புழுவுக்குத்தான் மூதற்பெயர் லார்வே என்பது. கொசு ஒழிப்புக்கான எண்ணையை மத்திய அரசு வழங்குகிறது. கொசுத்தடுப்புக்கான நடவடிக்கை மாநில அரசால் மேற்கொள்ளப்படுகிறது.

திரு. மு. பழனிவேலன் : ஆத்தூர் வட்டத்தில் யானைக்கால் வியாதி இருக்கிறதே, அதைத் தடுக்கவும் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அதைவிட அதிகமாக இந்த வியாதி உள்ள இடங்கள் இந்தப் பட்டியலில் இருக்கும். மாண்புமிகு உறுப்பினர்கள் எங்கெங்கு இந்த வியாதி காணப் பட்டாலும் எழுதினால் அதுபற்றிக் கவனித்துத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தஞ்சை மாவட்டத்தில் எல்லா இடங்களிலும் இந்த வியாதி பயங்கரமாகக் காணப் படுகிறது. அங்கங்கே ரத்தப் பரிசோதனை செய்யப்படுமா? முன்பு வழங்கப்பட்டதுபோல ஹெட்ரசான் டாப்லட் எல்லோருக்கும் வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ரத்தப் பரிசோதனைமூலம் யார் யாரிடத்தில் இந்த வியாதி இருப்பதாகக் கண்டுபிடிக்கப் படுகிறதோ அவர்களுக்கு இது வழங்கப்படும். தஞ்சாவூர், நாகப் பட்டினம் ஆகிய இரண்டு இடங்களில் இந்தத் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. கே. எ. வகாப் : வடாற்காடு மாவட்டம், வந்தவாசி பகுதியில் இது செயல்படுகிறது. என்றாலும் அங்கே ஆரோனெக்ஸ் என்ற எண்ணை கிடைக்கவில்லை என்பதாக 6 மாதமாகச் செயல் படாமல் இருக்கிறதே, உடனடியாக இந்த எண்ணையை விநி யோகிக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : 6 மாதமாக இருக்கக்கூடிய விஷயத்தை முன்பே தெரிவித்திருக்கலாம். இப்போதும் உடனே புகார் எழுதி அனுப்பினால் விசாரிக்க முடியும்.

### எல்லாபுரம் கால்நடை மருத்துவ அலுவலர்களுக்குக் குடியிருப்புகள்

*574 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கால்நடை மருத்துவ மனையில் பணிபுரியும் கால்நடை மருத்துவ அலுவலர் களுக்குக் குடியிருப்பு இல்லங்கள் கட்டித் தரும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?



மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் மாவட்ட ஆட்சியாளரால் அண்மையில் அனுமதிக்கப் பட்டு, வேலை துவங்கப்பட்டிருக்கிறது. ஆனால் இப்பொழுது சிமெண்ட் இல்லாத காரணத்தால் வேலை நடைபெறவில்லை. ஆகவே, இதற்கான மொத்தத் தொகையையும் ஒதுக்கி, இந்த ஆண்டு இறுதிக்குள் இந்த இல்லங்களைக் கட்டி முடிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, வேளாண்மை மானியத்திலே இருந்து ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் வழங்கப்படுகிற ரூ. 1,000ஐக் கொண்டு, மாவட்டக் கலெக்டர் அந்த பல ஒன்றியங்களிலே, எந்த ஒன்றியத்திற்குச் செய்வது என்பதை மாவட்ட வளர்ச்சிக் குழுவிலே தீர்மானித்து, ஏதாவது ஒரு இடத்திலே செய்கிறார். ஆனால், அரசு அப்படிப்பட்ட காரியத்தை, வீடுகள் கட்டுவதை இப்பொழுது செய்ய முடியவில்லையென்று கைவிட்டிருக்கிறது.

### கோவை தொழிலாளர் ஈட்டுறுதித் திட்ட மருத்துவமனைக்கு வல்லுநர்கள்

*575 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை E.S.I. மருத்துவ மனையில் போதிய (Specialist) மருத்துவ அதிகாரிகள் நியமிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : கோயம்புத்தூர் E.S.I. மருத்துவமனையிலுள்ள பல்வேறு சிறப்புப் பிரிவுகளிலும் தேவையான மருத்துவ வல்லுநர்களை அரசு நியமித்துள்ளது. தற்போது, 14—3—1973 வரை,

1. மருத்துவ இயல் பிரிவு
2. அறுவை மருத்துவம்

| | |
|---|---|
| 3. மகப்பேறு மகளிர் நோய் இயல் | 3 |
| 4. உருக்கி நோய் மருத்துவம் | 3 |
| 5. சிசு நோய் மருத்துவம் | 2 |
| 6. கதிர் வீச்சு | 2 |
| 7. கண் நோய் | 1 |
| 8. காது, மூக்கு, தொண்டை நோய் | 1 |
| 9. தோல் நோய் மருத்துவம் | 1 |
| 10. நோய் குறியியல் | 1 |
| 11. முடவியல் மருத்துவம் | 1 |

ஆக மொத்தம் 21 மருத்துவ வல்லுநர்கள் இம்மருத்துவ மனையில் பணியாற்றி வருகிறார்கள்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவர் அவர்களே, கை கால் முறிவு, ப்ராக்ச்சர் சம்பந்தமானவற்றிற்கு, 'ஆர்த்தோபீடிக்ஸ் ஸ்பெஷலிஸ்ட்ஸ்' நியமிக்கப்பட்டிருக்கிறார்களா? இல்லையென்றால், அதற்கு உண்டான வழியை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். வேறு சில ஸ்பெஷலிஸ்ட்ஸ் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். பல நேரங்களிலே, அவர்கள் லீவிலே போகும்போது, மற்றும் அம்மாதிரிச் சந்தர்ப்பங்களிலே அந்த உதவி கிடைப்பதில்லை. அந்தமாதிரி நேரங்களில், சி.எம்.சி. மருத்துவமனை ஸ்பெஷலிஸ்ட்டை அங்கு அனுப்ப வழி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த கருத்தைக் கவனத்தில்கொண்டு சந்தர்ப்பம் ஏற்பட்டால், அது பரிசீலிக்கப்படும்.

**டாக்டர் ச. மு. பழனியப்பன்:** கோவையிலே இருக்கிற அந்த ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனையிலே அதற்காக ஸ்பெஷலிஸ்ட்ஸ் இருந்தும், உள்ளிருப்பு நோயாளிகள் அதிகம் வருவதில்லையென்று சொல்கிறார்கள். எப்பொழுதும் அதிகப் படுக்கைகள் காலியாக இருப்பதாகச் சொல்கிறார்கள். அதற்கு என்ன காரணம் என்று அரசுக்குத் தெரியுமா? அப்படி இருந்தால், பொதுமக்கள் அவற்றைப் பயன்படுத்துகிற அளவுக்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** அந்த விவரத்தை உறுப்பினரே தெரிவித்தால் தக்க நடவடிக்கை எடுக்க முயற்சிக்கப்படும்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, பொது மக்கள் அதைப் பயன்படுத்தவே முடியாது. அது, தொழிலாளர்களில் இன்ஷூரன்ஸ் செய்து கொண்டவர்களுக்கு மட்டும்தான். அங்கே அனுமதிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கையைவிட, அதிகமான எண்ணிக்கைகொண்ட படுக்கைகள் இருப்பதாக, ஈ.எஸ்.ஐ. கார்ப்பரேஷன் கருதுவதால், சில படுக்கைகளைப் பயன்படுத்த அனுமதிக்கவில்லை. எல்லாப் படுக்கைகளையும் பயன்படுத்த அனுமதி தரவேண்டுமென்று தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் ஈ.எஸ்.ஐ. கார்ப்பரேஷனைக் கேட்டிருக்கிறார்கள். அந்த அனுமதி கிடைத்தால் மற்றப் படுக்கைகளும் பயன்படுத்தப்படும்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** ஒரு தவறான கருத்தை டாக்டர் தருவதனால்தான் சொல்கிறேன். அங்கே படுக்கைகளுக்கு ஆள் வருவதில்லையென்று கூறுகிறார்கள். அதுசரியல்ல, அங்கே படுக்கைகள் போதாது என்ற குறைதான் எப்பொழுதும் இருந்து கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, அங்கே ஏறத்தாழ 550 அல்லது 600 படுக்கைகள் கட்டப்பட்டிருக்கின்றன. அங்கே ஈ.எஸ்.ஐ. கார்ப்பரேஷனால் அனுமதிக்கப்பட்டிருக்கிற படுக்கைகள் ஏறத்தாழ 400 அல்லது 420. ஆகவே, மேலும் ஏறத்தாழ 100 அல்லது 120 படுக்கைகளைப் பயன்படுத்த ஈ.எஸ்.ஐ. கார்ப்பரேஷன் அனுமதிக்காத காரணத்தால், அவை பயன்படுத்த முடியாத கட்டத்தில் இருக்கின்றன.

### பீடித் தொழிலுக்கு வருங்கால வைப்பு நிதித் திட்டம்

* 576 வினா.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பீடித் தொழிலாளர்களுக்கு Provident Fund Insurance திட்டம் கொண்டுவரும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** (அ) & (இ): தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தைப் பீடித் தொழிலுக்கு விரிவுபடுத்தலாமென்னும் மத்திய அரசின் செயற் குறிப்பிற்குத் தமிழ் நாடு அரசு தன் இசைவைத் தந்துள்ளது. இது குறித்து மத்திய அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது. தொழிலாளர் ஈட்டுறுதித் திட்டத்தைப் பீடித் தொழிலுக்கும் விரிவாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

*Water supply for Avinashi and adjoining taluks*

*577 Q.—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there is any proposal at present to let Kundah tail-end to feed the tanks and ponds in Avinashi and nearby taluks; and

(b) if so, the details of the same?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. என். கே. பழனிசாமி:** தலைவர் அவர்களே, 60 வருடத்திற்கு முன்பாக, குந்தா கடைமடைப் பகுதி நீரை உபயோகப்படுத்தி, வறட்சியான பகுதியாகிய பல்லடம், அவினாசி, ஈரோடு தாலுகாக்களிலுள்ள குளங்களுக்குத் தண்ணீர் கொடுப்பதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் எஸ்டிமேட்ஸ்கூட ரூ. 8 கோடிக்குப் போடப்பட்டதே, அதுபற்றி மறுபரிசீலனை செய்ய சர்க்கார் உத்தேசித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** குந்தா கடைமடைப் பகுதியிலிருந்த தண்ணீரைக்கொண்டு பாசன வசதித் திட்டம் பரிசீலிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், குந்தா நீர் மின்சக்தித் திட்டம், பவானி ஏற்பாட்டால் ஏற்பட்டிருக்கிற சிக்கல்கள், கோயம்புத்தூர் குடிநீர் வழங்கு திட்டத் தேவைகள், கோளம்நிலம் அட்டப்பாடி பள்ளத்தாக்கில் பாசன வசதி ஆகிய கூடுதல் பொறுப்புகளைக் கருத்திலேகொண்டு, தலைமைப் பொறியாளர் இந்தத் திட்டத்தை எச்சரிக்கையுடன் செயல்படுத்த வேண்டுமென்ற குறிப்பின்பேரில் தற்பொழுது இந்தக் கருத்து



சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அவினாசி வட்டத்திலிருக்கிற வறட்சியான பகுதிகளுக்கு மாற்றுத் திட்டத்தைப் பரிசீலிக்கும்படி தலைமைப் பொறியாளர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

*Nagapattinam–Nagore Road*

*578 Q.—Thiru A. RAJAMANICKAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal under the consideration of the Government to take up the cement concreting work of the road from Nagapattinam to Nagore?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இல்லை.

**வீடு கட்டும் திட்டங்களுக்கான உதவி**

*579 வினா.—**திரு. எஸ். கணேசன்:** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வீடு கட்டும் திட்டங்களுக்காக ஆயுள் இன்சூரன்ஸ் நிறுவனத்திடமிருந்து 1972–73-ஆம் ஆண்டுக்குக் கடன் ஏதேனும் பெற்றுள்ளதா?

(இ) ஆம் எனில், எவ்வளவு?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) ஆம்.

(இ) வீடு கட்டும் திட்டங்களுக்காக ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தினிடமிருந்து தமிழ்நாடு அரசு 1972-73-ஆம் ஆண்டுக்கு ரூ. 150 லட்சம் கடனைப் பெற்றிருக்கிறது. இதுதவிர, ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் வீட்டு வசதி வாரியத்திற்கு நேர்முகமாக ரூபாய் ஒரு கோடியை பிப்ரவரி 1973-ல் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு வீட்டு வசதித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காகக் கடனைக் கொடுத்துள்ளது.

**திரு. எஸ். கணேசன்:** தலைவர் அவர்களே, இந்த வீடு கட்டும் திட்டத்திற்கு மத்திய அரசு எதும் உதவி செய்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, இதற்கு மத்திய அரசு நேரிடையாக உதவிகள் செய்வதில்லை. ஆனால், எல்.ஐ.சி. மூலமாகவும், 'ஹட்கோ' என்ற நிறுவனத்தின்

மூலமாகவும் கடன் உதவிகள் அளித்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. எ. வகாப் :** தலைவர் அவர்களே, இந்த வீட்டு வசதி வாரியத்தின்மூலமாகச் சிலருக்கு முதலிலே மனைகள் வழங்கப்படுகின்றன. பொருளாதார வசதி இல்லாததன் காரணமாக, மனைகளை வாங்கியபிறகு, வீடு கட்டமுடியாமல் இருக்கிறார்கள். ஆகவே, வீடுகள் கட்டுவதற்கு அந்த மனைகளை வைத்துக் கடன் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக, மனைகளை வைத்திருப்பவர்களுக்குத் தற்பொழுது வீடுகள் கட்ட கடன்கள் அளிக்கப்படுகின்றன என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர்கள் ஒவ்வொன்றாகக் கேள்வி கேட்கவேண்டும். மெயின் கேள்வி, துணைக் கேள்வி எல்லாவற்றையும் ஒன்றாகக் கேட்கக் கூடாது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, வீடு கட்டுவதற்காக நாம் கொடுக்கின்ற பணத்திற்கு வசூல் செய்கின்ற வட்டி அதிகமாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே, வட்டி வீதத்தைக் குறைத்து வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** நாம் கடன் வாங்கித்தான் வீடுகட்டுவதற்குக் கடன்கள் தருகிறோம். அந்த வகையில் எல் ஐ.சி. 6¾ சதவிகிதத்திற்குக் கடன் தருகிறது. ஆகவே, அதற்கு மேலே வட்டி வைத்துத்தான் நாம் கடன் வழங்கவேண்டிய சூழ்நிலையிலே வீட்டு வசதி அளிக்கமுடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கா. வேழவேந்தன் :** துணைத் தலைவர் அவர்களே, இந்த வீடு கட்டும் சங்கங்களின்மூலமாக, ஏராளமான கடன்வழங்க முன்வந்திருப்பதன் காரணமாக, கிராமப் புறங்களிலே கூட்டுறவுச் சங்கங்கள் ஏராளமாக ஏற்பட்டுள்ளன. முன்பு ரூ. 1,000 தொகை கட்டிப் பதிவு செய்துகொண்டால். . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஸ்டேட்மெண்ட் கொடுக்காதீர்கள், விளக்கம் கொடுக்காதீர்கள், கேள்வி கேளுங்கள்.



**திரு. கா. வேழவேந்தன் :** முன்பு ரூ. 1,000 கொடுத்து, பதிவு செய்துகொண்டிருந்ததை மாற்றி, இப்பொழுது ரூ. 8,000 கொடுத்து, பதிவு செய்யவேண்டுமென்ற விதிமுறையிருப்பதை மாற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, ஒவ்வொரு சங்கத்தையும் நம்பி அதன்மூலமாக, லட்சக்கணக்கான ரூபாய்கள் கடனாக வழங்கப்படுகிறது. ஆகவே, ரூ. 8,000 மிகக் குறைந்த தொகை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, டெல்லியிலே நடந்த தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில், இந்தியக் குடிமகனின் வருமானம் ரூ. 30 தான் என்று முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, ஏழைகளுக்கு முதலிடம் கொடுப்பதற்காக ரூ. 10,000-க்கு மேல் வீடு கட்டும் திட்டம் தீட்டாமல் இருக்க அரசு முற்படுமா ? ரூ. 10,000-க்குள் வீடு கட்ட வேண்டுமென்று ஏழைகளுக்கான திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியம் ஏழைகளுக்கும் நடுத்தர மக்களுக்கும் பயன்படுகிற வாரியமாக இருந்துவருகிறது. ஏழைகளுக்கான வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன என்பதையும், ரூ. 10,000-க்கான வீடுகளை மாவட்டந்தோறும் நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

* 580 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether loans are distributed for the construction of houses to Lower Middle Income and Lower Income Groups through House Building Societies in the State;

(*b*) whether such loans have been stopped since July, 1972; and

(*c*) if so, the reasons therefor?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) ஆம்.

(இ & (உ) மார்ச் 1972-ல் அரசு, அனைத்துக் கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்களும், தமிழ்நாடு மத்திய வீடு அடமான

சங்கத்துடன் இணையவேண்டுமெனவும், இச்சங்கமே இவைகளுக்குத் தலைமைச் சங்கமாகுமெனவும் ஆணையிட்டது. மேற்கூறிய ஆணையின் காரணமாக, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் (கூட்டுறவுப் பிரிவு) இக் கடன்களை வழங்கவில்லை.

இக்கடன்களைத் தமிழ்நாடு கூட்டுறவு மத்திய வீடு அடமான சங்கம் இப்பொழுது வழங்கி வருகிறது.

**திரு. என். கே. பழனிசாமி :** துணைத் தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் 'அமால்கமேஷன்' ஆவதற்கு முன்பு குறைந்த வருமானம் உள்ளவர்கள் வீடு கட்டுவதற்கு அந்தச் சொத்தின் மதிப்பு 'ஷேர் கேபிடல்'-ஆக இருந்தது. ஆனால் இரண்டும் 'அமால்கமேட்' ஆனபிறகு இந்த முறை மாற்றப்பட்டு, அவர்களுக்கு அதிகமாகக் கடன்கள் கிடைப்பதில்லை. இதனால் பல வீடுகள், குறிப்பாக அரசு ஊழியர்கள்—என்.ஜி.ஓ.-க்கள் பலர் கட்டிய வீடுகளை முடிக்க முடியாமல் அவை பாதிப்பாதியாக அப்படியே இருக்கின்றன. எனவே இப்படிக் கொடுக்கும் தொகையை அதிகப்படுத்துவதற்கு அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** துணைத் தலைவரவர்களே, மனையை வாங்கிவிட்டால், அந்த மனையின் மதிப்பானது கட்ட இருக்கும் வீட்டின் மதிப்பில் பத்து சதவிகிதம் என்று இருந்தால், அவர்களிடமிருந்து வேறு எந்த விதமான தொகையும் வாங்காமல் கடன் தரலாம் என்று இப்போது கூட்டுறவு மத்திய வங்கி முடிவெடுத்து இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவரவர்களே, நமது ஹௌஸிங் போர்டுக்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்திலிருந்து 6¾ சதவிகிதம் வட்டியில் கடன் கொடுக்கின்றார்கள் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் இதுவரையில் நமக்கு அந்த வகையில் எவ்வளவு பங்கு கடன் தருவதற்கு L.I.C. முன்வந்திருக்கிறார்கள்? நமது ஹௌஸிங் போர்டு எவ்வளவு கடன் கேட்டிருக்கின்றது என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, வீட்டு வசதி வாரியத்திற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்திலிருந்து கொடுக்கப்படும் கடன்பற்றிய தகவல் தற்போது என்னிடம் இல்லை. கூட்டுறவு



வீடு கட்டும் சங்கத்தைப் பொறுத்த வரையில் 107 வீடு கட்டும் சங்கங்கள் மத்திய வங்கியிலிருந்து இப்படிப்பட்ட கடனுதவிகள் பெற்று இருக்கின்றன. இன்னும் பதினெட்டுச் சங்கங்களின் கோரிக்கைகள்தான் பரிசீலிக்கப்பட வேண்டியிருக்கின்றன. மொத்தம் இந்த மாதம்வரையில் ரூ. 40,94,600 வீடுகள் கட்டப்படுவதற்காகத் தமிழகத்தில் கடன்கள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன.

**திரு. எஸ். கணேசன் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தச் சங்கத்தின்மூலம் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு அதிக பட்சம் எவ்வளவு தொகை கடனாக வழங்கப்படுகிறது?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** துணைத் தலைவரவர்களே, இதுவரையில் ரூ. 20,000 என்று இருந்ததை இப்போது அதிக பட்சம் ரூ. 25,000 என்று உயர்த்தி வீடுகட்டுவதற்கு இச்சங்கங்களின், மூலம் கடனாக வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மார். சென்ற கேள்வியினையொட்டி அதன் தொடர்பாக 1972-73-ஆம் ஆண்டில் எல்.ஐ.ஸி.-யிலிருந்து எவ்வளவு பணம் கடனாகக் கிடைத்தது என்று சொன்னார்கள். 1973-74-ம் ஆண்டிற்கு எவ்வளவு பணம் எல்.ஐ.ஸி.-யிலிருந்து வேண்டும் என்று நாம் கேட்டிருக்கின்றோம் என்பதைச் சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** துணைத் தலைவரவர்களே, ஆறு கோடி ரூபாய் கேட்டிருக்கின்றோம்.

**திரு. தொ. ப. சீனிவாசன் :** துணைத் தலைவரவர்களே, வீடு கட்டும் சங்கங்கள் இதற்கு முன்பு நகராட்சி உள்ளடக்கிய பகுதிகளிலிருந்ததை இப்போது மேஜர் பஞ்சாயத்துகளுக்கும் விரிவுபடுத்தியிருப்பதைப் பாராட்டுகிறோம். இதே நேரத்தில் ஏழை எளியவர்கள் வாழும் சிறு வீடுகளைப் பழுது பார்ப்பதற்கு அல்லது சிறிது மாற்றிக் கட்டிக்கொள்ளுவதற்கு உதவி செய்யும் வகையில் அவர்களுக்கும் இந்தச் சங்கங்களிலிருந்து கடன் தருவதற்கு வழி வகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** துணைத் தலைவரவர்களே, சிறு வீடுகளைக் கட்டிக்கொள்ளுவதற்கு முன்பணம் கொடுப்பதற்கும் இருக்கும் வீடுகளை பழுதுபார்ப்பதற்குக் கடன் கொடுப்பதற்கும் தற்போது வசதியில்லை.

**திரு. ப. முத்துசாமி:** துணைத் தலைவரவர்களே, இப்படிப் பட்டக் கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்களை தாலுக்கா அளவில் அமைத்து, தாலுக்கா முழுவதற்கும் இப்படிக் கடன்களை அளித்து உதவத்தக்க வகையில் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் ஏதேனும் இருக்கின்றதா? எப்போது இப்படி தாலுக்கா முழுவதற்குமானச் சங்கங்களை அமைக்கும் திட்டம் நிறைவேற்றப் படும் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** துணைத் தலைவரவர்களே, இப்படிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் நடவடிக்கைகளை தாலுக்கா முழுவதற்குமாக விஸ்தரிப்பது என்பது முடியாத காரியம். ஏன் என்றால் இது இப்போது மூன்று முறைகளில் கண்காணிக்கப்பட்டு வரவேண்டியிருக்கிறது. இந்த நிலையில் கிராமங்கள் தோறும் வீடுகளைக் கட்டுவதற்கு ரூ. 25,000 என்று கடன்களைக் கொடுத்துவிட்டால், பிறகு அந்தத் தொகையைப் பெற முடியாத நிலை வரும்போது அந்த வீட்டை விற்க நேரிட்டால் கிராமத்தில் வேறு ஒருவரும் வாங்கமுடியாத சூழ்நிலை ஏற்படக் கூடும் என்பது மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும். எனவே, தற்போது திருப்பித் தரக்கூடிய வருவாய் உள்ளவர் களுக்குத்தான் கடன் வழங்குகிறோம்.

THIRU B. VENKATASWAMY: Sir, may I know from the Hon. Minister whether there is any other scheme to benefit the rural areas to construct houses as it is seen from the answer of the Hon. Minister that there is no provision to give help to rural areas?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** துணைத் தலைவரவர்களே, கிராமங்களில் உள்ள மக்களுக்கு வீடுகளைக் கட்டித்தருவதற்கான ஒரு பகுதி தனியாக இயங்கிவருகின்றது. அது சிறப்பாக வேலை செய்து கொண்டிருக்கின்றது. இந்த ஆண்டு கூட முதலமைச்சர் அவர்கள் தங்கள் சிறப்பு நிதியிலிருந்து இதற்கென ரூ. 50 லட்சம் ஒதுக்கித் தந்திருக்கின்றார்கள். எனவே, அந்த அளவிற்கு கிராமங்களிலே அதிகமாக வீடுகளைக் கட்டித்தரும் திட்டம் செயல் பட்டு வருகின்றது.

**திரு. வை. பாலசுந்தரம்:** துணைத் தலைவரவர்களே, சிக்கன மாகவும் சீக்கிரமாகவும் கட்டிமுடிக்கக்கூடிய ப்ரீ-ஃபேப்ரிகேடேட் ஹௌஸஸ் என்று சொல்லப்படும் வீடுகள் இரஷ்ய நாட்டில்



சிறப்பான முறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரஷ்ய நாட்டிற்குச் சென்று அவற்றைப் பார்வையிட்டு அப்படிப்பட்ட வீடுகளை இங்கும் பயன்படுத்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, நண்பர் என்னை இரஷ்ய நாட்டிற்கு அனுப்பச் சொல்லும் யோசனைக்கு நன்றி. ஏற்கெனவே நமது நகரத்திலேயே இப்படிப்பட்ட ப்ரீ-ஃபேப்ரிகேடெட் வீடுகள் இப்போது கட்டப் பட்டிருக்கின்றன. இதுபற்றி ஏற்கெனவே இந்த மன்றத்தில் தெரிவித்திருக்கின்றேன். இரண்டு மணி நேரத்தில் 260 சதுர அடி வீட்டைக் கட்ட முடியும் என்று பொறியியல் வல்லுநர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். இப்படிப்பட்ட வீடுகள் நமது முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் தொகுதியில் கட்டப்பட்டிருக்கின்றன.

**திரு. த. சோலையா:** துணைத் தலைவரவர்களே, கிராமங்களிலே வீடுகளைக் கட்டிக் கொள்ளுவதற்கு இச்சங்கங்கள் மூலமாக திட்டங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள் என்று நினைக்கிறேன். அப்படி அமைக்கப்பட்டால் அச்சங்கங்களின் மூலம் ஒரு குறிப்பிட்ட இடத்தில்தான் கட்டுவதற்கு அனுமதிக்கப்படுமா அல்லது விவசாயிகளுக்குச் சொந்தமாக உள்ள இடத்தில் எங்கே வேண்டு மானாலும் கட்டிக்கொள்ள அனுமதிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** துணைத் தலைவரவர்களே, தற்போது இப்படிப்பட்ட சங்கங்களின் மூலம் கடன் வழங்கப் பட்டு வீடுகளைக் கட்டிக்கொடுக்கும் திட்டம் தாலுக்கா தலைநகரங் களிலும் மேஜர் பஞ்சாயத்துக்களிலும்தான் செயல்பட ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். கிராமங்களைப் பொறுத்த மட்டில் நான் ஏற்கெனவே சொல்லியபடி வேறுவகையான கடன்களைப் பெற்றுத்தான் வீடுகளைக் கட்டிக்கொள்ள வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. முனு ஆதி:** துணைத் தலைவரவர்களே, இப்போது வீடுகளைக் கட்டுவதற்கு கால்பகுதி—பேஸ் மட்டம்வரையில் போட்டபிறகுதான் கடன் கொடுக்கின்றார்கள். ஆரம்பிப்பதற்கே கடன் கொடுத்தால் நலமாக இருக்கும். அதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** நான் ஏற்கெனவே இந்தக் கேள்விக்கு பதிலளித்திருக்கிறேன். கட்டயிருக்கும் வீட்டின் மதிப்பில் பத்து சதவிகிதத்திற்குக் குறையாமல் மனையின் மதிப்பிருந்தால் 'பேஸ் மட்டம்' வரையில்கூட இல்லாமல் 30 சத விகிதம் வரையில் கடன் தருவதற்கு திட்டமிடப்பட்டு இருக்கின்றது.

**திரு. கே. எ. வகாப்:** துணைத் தலைவரவர்களே, இப்போது வீட்டு வசதி வாரியம் மிகச் சிறப்பாக இயங்கிவருகின்றது. எனவே கடன்களைக் கொடுக்கும் முறையையும் வாரியத்திடமே வைத்துவிட்டால் இந்த சென்னை போலுள்ள நகரங்களிலே வீடுகளைக் கட்டிக்கொள்ளுவதற்கு மிக வசதியாக இருக்கும். இதை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** துணைத் தலைவரவர்களே, வாரியம் என்பது வேறுவிதமான பணியிலீடுபட்டிருக்கின்றது. அதனிடம் இப்பணியினைக் கொடுப்பது முறையாக அமையாது. பலர் தங்கள் வீடுகளை தாங்களே கடன் தொகையினைப் பெற்றுக் கட்டிக்கொள்ள விரும்புகின்றார்கள். அப்படிப்பட்டவர்களுடைய எண்ணத்தினை ஈடேற்றித் தரும் வகையில் இப்படிப்பட்டக் கூட்டுறவுச் சங்கங்கள் பாடுபட்டு வருகின்றன. எனவே இக்கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பலர் நல்ல பலனையடைந்திருக்கின்றனர். அந்த அளவிற்கு இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் தேவைப்படுகின்றன என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]



## 3. நடைமுறைக் கேள்விகள்.

### (அ) சட்ட அமைச்சர் தம் காரில் தேசீயக் கொடியை பறக்க விட்டுச்செல்லாமை குறித்து.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** ஸார், ஆன் எ பாய்ன்ட் ஆஃப் ஆர்டர். அமைச்சர்களைக் கௌரவிக்கும் முறையில் அவர்கள் தங்கள் காரில் பயணம் செய்யும்போது தேசீயக் கொடிகளைப் பறக்கவிட்டுச் செல்லவேண்டும் என்ற ஒரு முறையிருக்கின்றது. அது நெடுஞ் சாலைகளில் அமைச்சர்களுடைய கார்களை அடையாளம் கண்டு கொண்டு அவர்களுக்கு ட்ராஃபிக்கில் முன்னுரிமை கொடுக்கவும் உதவியாக இருக்கின்றது. ஒரு ஆண்டு காலத்திற்கு முன்பு இங்குள்ள அமைச்சர்களுக்குத் தனிக்கொடி வேண்டும் என்று கேட்டு, அது மத்திய அமைச்சரவையால் மறுக்கப்பட்டுவிட்டது. அதன்பின்னர் நமது மாண்புமிகு முதலமைச்சர் உள்பட அனைவரும் தேசியக் கொடியினை கார்களில் பறக்கவிட்டுச் செல்லகின்றனர். ஆனால் ஒரு சில அமைச்சர்கள் குறிப்பாக மாண்புமிகு திரு. மாதவன் அவர்கள் அந்தக் கொடியின்றி சட்ட மன்றத்திற்கு வரும்போது ஒரு பரபரப்பை உண்டுபண்ணுவதாக அமைகிறது. எனவே, ஒருகால் தனிக்கொடி கேட்டு மறுக்கப்பட்டுவிட்ட காரணத்தினால் இதைப் பறக்கவிட்டுக் கொள்ளுவதில்லையோ என்று எண்ண இடமேற்படுகிறது. எனவே, அமைச்சர்கள் அனைவரும் தேசியக்கொடியினை கார்களில் பறக்கவிட்டுச் செல்ல வேண்டும் என்ற ஒரு நிபந்தனையை அரசு ஏற்று நடத்துமா என்று அறியவிரும்புகிறேன்.

**திரு. நா. வீராசாமி:** ஸார், ஆன் எ பாய்ண்ட் ஆஃப் ஆர்டர். இரண்டு மூன்று தினங்களாக சென்னையில் தேசியக் கொடி போன்று உள்ள ஒரு கொடியை ஒரு சிலர் தங்கள் கார்களில் போட்டுக்கொண்டு கார்களை ஓட்டிக்கொண்டு வருகின்றார்கள். பிறகுதான் அது இந்திரா காங்கிரஸ் கொடி என்று தெரிந்தது. இப்படிக் கொடியை உபயோகப்படுத்தி வரும்போது அது அமைச்சருடைய காரா அல்லது கட்சிக்காரருடைய காரா என்று தெரியாமல் இருக்கின்றது. இந்த வேறுபாட்டினைப் போக்குவதற்கு அந்தக் கட்சிக்காரர்கள் ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ள முன்வருவார்களா?

[1973 மார்ச் 30

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : ஸார், பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்பது சட்ட மன்ற விதியைப் பற்றித்தான் இருக்க வேண்டும் என்று கருதுகிறேன். ஆனால் இங்கே பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி என்னைப் பற்றிச் சொன்னார்கள். தேசியக் கொடியைப் பொறுத்தவரையில் எல்லா அமைச்சர்களும் எப்போதும் கட்டாய மாகப் போட்டுக்கொள்ள வேண்டும் என்று விதி இல்லை. என்னைப் பொறுத்தவரையில் தேசியக் கொடியைப் போட்டுக்கொண்டு பரபரப்பை ஏற்படுத்தாமல் இருந்தால் பாவாயில்லை என்றே கருது கிறேன்.

## (ஆ) நிதி ஒதுக்கீடு மசோதா நிறைவேறும் கட்டத்தில் முதலமைச்சர் கடைசி நிமிடத்தில் சில அறிவிப்புகள் செய்தது குறித்து

THIRU R. PONNAPPA NADAR : Sir I would like to raise another point of order. Yesterday, the Hon. Chief Minister while the Appropriation Bill was being passed was making certain announcements at the last moment. I welcome the announcements. But, our rules are clear with regard to Appropriation Bills. I would refer to Rule 158 of our Assembly Rules.

Rule 158 says :

" (1) Subject to the provisions of the Constitution, the procedure in regard to an Appropriation Bill shall be the same as for Bills generally, with such modifications as the Speaker may consider necessary.

(2) The debate on an Appropriation Bill shall be restricted to matters of public importance or administrative policy implied in the grants covered by the Bill which have not already been raised while the relevant demands for grants were under consideration ".

So, the Rules are clear that the matters which are covered by the Bill and which have been the subject-matter of various Demands will form the reply that is sought to be made by the Hon. Chief Minister. I would also refer to Article 204 of the Constitution which reads like this :

" (1) As soon as may be after the grants under Article 203 have been made by the Assembly, there shall be introduced a Bill



1973 மார்ச் 30] [Thiru R. Ponnappa Nadar]

to provide for the appropriation out of the Consolidated Fund of the State of all moneys required to meet—

(*a*) the grants so made by the Assembly; and

(*b*) the expenditure charged on the Consolidated Fund of the State but not exceeding in any case the amount shown in the statement previously laid before the House or Houses. "

Article 204 (2) is more important. It reads thus :

" No amendment shall be proposed to any such Bill in the House or either House of the Legislature of the State which will have the effect of varying the amount or altering the destination of any grant so made or of varying the amount of any expenditure charged on the Consolidated Fund of the State, and the decision of the person presiding as to whether an amendment is inadmissible under this clause shall be final. "

So, this tantamounts to an amendment that has been made by the Hon. Chief Minister and it contravenes the financial norms because normally when any announcements are made, they will be made when the Hon. Chief Minister is replying to the final discussion that is being tabled in the House. Now, Sir, he is choosing this last minute for making the announcement and so much so, the House and the Members are deprived of the opportunity to express their views on the same. I want to know whether it would be in order according to the financial norms. I think when the Appropriation Bill is under consideration last minute announcements are not in order. I would like to have a clear-cut ruling from the Chair whether such last minute announcements can be made at the last stage when the discussion on the Appropriation Bill is being replied to by the Hon. Chief Minister.

DR. H. V. HANDE : Sir, the Hon. Chief Minister had made this announcement at the end of the discussion. The Hon. Chief Minister is also telling across the table whether he should withdraw all the concessions announced by him. I do not think it is proper to withdraw the concessions that have been given. But the point is, the manner in which and the method in which it has been announced. That is what the hon. Member Thiru R. Ponnappa Nadar was trying to make out, so that such things will not happen in future. Earlier the Hon. Chief Minister had an opportunity. For instance, when the

Pension Demand was moved, he had an opportunity and at that time some concessions could have been announced. Apart from that . . . . .

MR. DEPUTY SPEAKER : Time is very precious. You are going on advising the Hon. Chief Minister. What is your relevant point regarding this point of order raised by the hon. Member Thiru Ponnappa Nadar?

DR. H. V. HANDE : The main point is this. Thiru Ponnappa Nadar's objection was about the last minute announcement which means some modification in the Appropriation Bill. The Appropriation Bill has to be modified. The best solution would be this. We must know whether the amount is going to be charged under Charged Amount or whether it is going to be met out of the Consolidated Fund. If it is going to be met from the Charged Amount, then the Appropriation Bill has to be changed. Whether we can amend the Appropriation Bill is the point; or whether without amending the Appropriation Bill, the amount can be given as well and later on it can be adjusted from out of the Consolidated Fund. So, that point has got to be clarified. Whether it can be taken from out of the Consolidated Fund or whether the Appropriation Bill has to be changed—that should be gone into. The best method would be to announce these things earlier. Instead of trying as usual. . . . .

MR. DEPUTY SPEAKER : This is in no way connected with the point of order.

DR. H. V. HANDE : It is very much connected.

MR. DEPUTY SPEAKER : You are making a speech.

DR. H. V. HANDE : What do you mean by a speech ? This is very much connected.

MR. DEPUTY SPEAKER : I am not supposed to be questioned. You kindly resume your seat. Time is now 10-15.



We have got so many Bills to be considered. It is a point of order. The hon. Member is expected to clarify the point of order. But he is giving advice to the Hon. Chief Minister.

DR. H. V. HANDE : In the course of that I am giving a suggestion to the Hon. Chief Minister.

MR. DEPUTY SPEAKER : I have not decided whether it is a point of order or not. It has not yet been decided. Before that you are saying it is a point of order and you are advising the Hon. Chief Minister. . . . .

DR. H. V. HANDE : I am only trying to help the Hon. Chief Minister.

MR. DEPUTY SPEAKER : Thiru Ponnappa Nadar has raised a point of order, whether it is proper on the part of the Hon. Chief Minister to announce some concessions to some employees. I have not decided yet and I have not yet given my ruling whether it is a point of order or not. I expect the hon. Member to clarify or to give some further reasons how it comes under point of order.

DR. H. V. HANDE : That is exactly the point. My only point is, if the Appropriation Bill has to be amended, his point of order is very much valid because for no Appropriation Bill, amendment is allowed according to the Constitution or according to the Rules. Therefore, some other remedy has to be sought. So, I am suggesting this to help of the Chair for giving a ruling. I am trying to suggest that this can be sorted out by another method by saying that we are going to meet the additional expenditure from out of the Consolidated Fund. I am giving a suggestion to the Hon. Chief Minister. It is not as if I am advising him or making a speech. That is my point.

THIRU K. T. K. THANGAMANI : About the point of order raised by the hon. Member Thiru James, I would like to refer to Rule 83 (3) which says :

" (3) A point of order shall relate to the interpretation or enforcement of these rules or such Articles of the Constitution as

[Thiru K. T. K. Thangamani] *[1973 மார்ச் 30*

regulate the business of the House and shall raise a question which is within the cognizance of the Speaker."

What I would suggest is. . . . .

(Thiru N. Veeraswamy rose)

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :*** *கொஞ்சம் உட்காருங்கள். திரு. தங்கமணி அவர்கள் பேசிக்கொண்டிருக்கின்றபோது நான் உட்கார்ந்திருக்கிறேன். ஆகையினால் நான் அவருக்கு அனுமதி கொடுத்திருக்கிறேன் என்று பொருள். தயவுசெய்து ஒருவர் பேசிக்கொண்டிருக்கும்போது என் அனுமதியில்லாமல் குறுக்கிடக்கூடாது.*

THIRU K. T. K. THANGAMANI : If what Mr. James has raised is true, then it is your jurisdiction. Sir, at least when they come within the premises of this Fort the national flag must be flown. That is the point I would like to mention to you.

About the second one, I fully endorse what the hon. Member Dr. Hande has said. We always like some concession to be given to the employees. That is beside the point. But we are governed by certain Rules. We have voted certain amounts for the various Departments of Government to be spent. In the Appropriation Bill what we tell the Government is this. Having voted these amounts, this must be spent properly. When once the directive is given and then when they say that 'we are going to spend much more than what you have authorised us', it is going beyond the concept of this Appropriation Bill.

Another point I would like to suggest is this. Ours is an elected House. It is better as a convention important announcements are made in this House. The by-election date was announced only in the Upper House. I only make a request that important announcements under Rule 82 or any other announcement should be made in this House. There has been a bone of contention in the Parliament also that announcements which lead to the policy or an announcement which is very much expected by the public should be made in this House. This is only a request I am making. Of course it does not prevent the Minister from making an announcement either in this House or in that House.



*1973 மார்ச் 30]*

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I want to supplement what the hon. Member Thiru K. T. K. Thangamani has said now.

Under Rule 158, any Appropriation Bill is taken up, it should be restricted to administrative policy implied in the grants. We have been discussing various Grants for the past 30 days. Even when the relevant grant was discussed, the Hon. Chief Minister was not kind enough to announce such benefits to Pensioners. We have been asking for more pensions to Pensioners for a long time and on number of occasions.

If the Hon. Chief Minister was generous enough to announce the same benefits earlier, we would have asked for more benefits. We have been completely stopped or prevented from asking for more benefits from the Treasury Benches. Hereafter, when we discuss the Demand either to increase or decrease the Demand, such announcements should be made. There is no use in making such announcements at the end. My only submission is that all these announcements with regard to benefits and concessions should be announced earlier and not at the last moment, when the Members may not have the opportunity to discuss them fully.

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :*** *தலைவர் அவர்களே, ஒரு நல்ல எண்ணத்தோடும், மனிதாபிமான உணர்ச்சியோடும், நான் நேற்றையதினம் வெளியிட்ட , அனைவரும் பாராட்டுகின்ற வெளியிலே உள்ளவர்களும் பாராட்டுகின்ற அறிவிப்புக்களுக்கு இவ்வளவு இடர்ப்பாடுகள் இடையிலே வரும் என்று உள்ளபடியே நான் எதிர்பார்க்கவில்லை. அதனால் பல பேர்கள் பலன் அடைகிற நேரத்திலே சில பேர்களுடைய உள்ளத்தை உறுத்தும் என்பதையும் நான் நன்றாக அறிவேன். ஆனால் இங்கே சில விதிகள், சட்டப்பிரச்னைகள் பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள் . . .*

THIRU R. PONNAPPA NADAR : Sir, on a point of personal explanation. . . . .

THE HON. DR. M. KARUNANIDHI : I am not yielding.

THIRU R. PONNAPPA NADAR : I would like to explain myself, because a charge has been levelled.

THE HON. DR. M. KARUNANIDHI : I am not yielding.

MR. DEPUTY SPEAKER : I request the Hon. Member to resume his seat.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:* நான் முடித்தபிறகு பேசுங்கள். பேச விடுங்கள். நீங்கள் பேசியபொழுது நான் பேசாமல்தான் இருந்தேன். அவரவர்கள் பேசிக்கொண்டிருந்தால் அசெம்பிளியே நடத்த முடியாது.

இங்கு பேசியவர்கள் அறிவிப்புக்களையெல்லாம் முதலிலேயே செய்துவிட வேண்டும் என்று சொன்னார்கள். முதலிலே செய்த அறிவிப்புகளுக்குப் பிறகு கோரிக்கைகள் கொடுக்காமல் இருந்தால் அதற்குப் பதில் சொல்ல வேண்டிய கடமையிலே இல்லாமல் இருப்போம். இடையிடையே எத்தனையோ கோரிக்கைகள். இங்கே முதலிலே வைக்கப்படுகிற மானியக் கோரிக்கைகளை ஒத்துக் கொள்கிற நேரத்திலே அந்த மானியக் கோரிக்கை ஒதுக்கீடு களுக்குத்தான் அனுமதியே கேட்கிறோம். அதற்கு மேலும் நாம் கேட்கிற நிதி ஆதாரங்களுக்கு துணை மதிப்பீடுகளை வைத்து இந்த அவையினுடைய அனுமதியைப் பெறுகிறோம். நேற்றையதினம் தேவையா இல்லையா என்ற நிலைமை இருக்கும், பிறகு பரிசீலிக்கப் பட்டு, இரண்டு நாட்களுக்குப் பிறகு தரலாம் என்ற நிலைமை ஏற்படும். இந்த அவையிலே அந்தக் கட்சியைச் சேர்ந்த உறுப் பினர்கள் கேட்டு, அந்தக் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் எங்களை அணுகி, இதை எப்படியாவது அறிவித்துவிடுங்கள் என்று சொல்கிற போக்கைக் காண்கிறோம். இதிலே அதிகமாகச் சட்டத்தைப் பார்த்துக்கொண்டிருக்காமல் மனிதாபிமான உணர்ச் சியோடு சில நேரங்களிலே சில காரியங்களைச் செய்யவேண்டி யிருக்கிறது. அந்த அடிப்படையிலே இங்கு எடுத்துச் சொல்லப் பட்ட பல்வேறு கோரிக்கைகள் உடனுக்குடனும் கடைசியாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதற்கேற்ப அறிவிப்புகளைச் செய்கிறோம்.

எடுத்துக்காட்டாக, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர்களின் படியை 20 ரூபாயிலிருந்து 25 ரூபாயாக உயர்த்துவதற்கு ஏற்கெனவே நிதிநிலை அறிக்கையிலே அதற்கு இடம் இல்லை. இனிமேல் வருகிறபொழுது நிதி ஒதுக் கீட்டைச் செய்யப்போகிறோம். ஐந்து ரூபாய் உயர்த்தியதற்கு துணை மதிப்பீட்டை வைத்து அனுமதி வாங்குகிறோம். நேற்றைய





தினம் அறிவிப்புச் செய்தவைகளுக்கும் வேண்டிய நிதி ஆதாரங் களுக்கு வேண்டிய துணை மதிப்பீடுகளை வைக்க இருக்கிறோம். விதிப்படி முரண்பாடாக இருக்கிறது என்று சொன்னார்கள். விதியும் அனுமதித்து இருக்கிறது.

கொடியைப்பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் மாதவன் அவர்கள் காரிலே கொடி இல்லாதது திரு. ஜேம்ஸ் அவர்களின் கண்ணிலே பட்டிருக்கிறது. மற்ற 14 அமைச்சர்களின் கார்களிலே கொடி இருந்ததற்கு நன்றி சொல்லவேண்டாம், பாராட்டுவதற்குப் பதில் ஒரு கொடி இல்லை என்பதைச் சொன்னார்கள். திரு. மாதவன் அவர்கள் காரிலே தேசியக் கொடி இருந்திருக்கிறது. தேசியக் கொடியைப் போட்டுக்கொண்டு போக வேண்டுமென்று அமைச்சர்களுக்குக் கட்டாயம் இல்லை, தேசியக் கொடியைப் போட்டுக்கொண்டு போனால் போலீசார் போக்கு வரத்து இவைகளை ஒழுங்குபடுத்துகிற நிலைமை ஏற்படுகிறது. நாங்கள் எல்லாம்கூட, அமைச்சர்களுக்குத் தனிப்பட்ட சலுகைகள் வேண்டாம் என்று சொல்கிறோம், பழைய பந்தாவிலே போலீசார் சில இடங்களிலே நிற்பதற்காக காவல் துறையினரை நாங்கள் கண்டித்து இருக்கிறோம், பழைய பந்தாக்கள் வேண்டாம் என்று கூறியிருக்கிறோம். முன்பெல்லாம் ஒரு பர்லாங்கிற்கு ஒரு போலீசார் என்று இருந்த முறை வேண்டாம் என்று பலமுறைகள் எடுத்துச் சொல்லி வருகிறோம். காவல் துறையினரால் அனுஷ்டிக்கப்படவில்லை.

தேசிய கீதம், தேசியக் கொடி பற்றியெல்லாம் அறிஞர் அண்ணா காலத்திலே பிரச்னைகள் எழுப்பப்பட்டு, தேசிய கீதம் பாடும் பொழுது எழுந்து நிற்கவில்லை, தேசியக் கொடி போடவில்லை என்றெல்லாம் சொல்லப்பட்டு—பிறகு மக்கள் கண்டார்கள்— தேசிய கீதம், கொடி இவைகளுக்கு மதிப்பு அளிக்கப்படுவதை மக்கள் நேரடியாகக் கண்டார்கள்.

திரு. தங்கமணி அவர்கள் ஒரு பிரச்னையைக் கிளப்பினார்கள். மேலவையிலே உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் சொன்னார்கள், இரண்டு அவைகளையும் முதலமைச்சர் அவர்களும் மற்ற அமைச்சர்களும் சரிசமமாகப் பாவிக்கவேண்டுமென்று சொன்னார்கள். ஏற்றத்தாழ்வுகள் அற்ற சமுதாயம் காணவேண்டு மென்று சொல்கிற அரசு இதிலே ஏற்றத்தாழ்வுகளைக் காணக் கூடாது என்று சொன்னார்கள்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 மார்ச் 30

மேலவை முஸ்லீம் லீக் உறுப்பினர் திரு. ஜானி பாய் அவர்கள் முஸ்லீம்களை பிற்பட்டோர் பட்டியலிலே சேர்க்க வேண்டுமென்று அங்கேதான் கேட்டார்கள். ஆனால் முதலமைச்சர் இங்கே போய் அறிவித்திருக்கிறார்கள் என்று கேட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட அறிவிப்புகள் இங்கு பாதி அங்கு பாதி, இங்கு 50 சதவீதம் அங்கு 50 சதவீதம் என்று வெளியிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அவர்கள் மிக உருக்கமாக கேட்டுக்கொண்டார்கள். அந்த முறையிலேதான் திண்டுக்கல் தேர்தல் 20 ஆம் தேதி என்று சொன்னேன், அப்பொழுதுதான் உத்திரவு வந்தது. அங்குள்ள உறுப்பினர்கள் கேட்டிருந்தாலும் மிக முக்கியமான அறிவிப்புகள் ஆக இருந்தாலும் இங்குதான் சொல்லப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: I would like to explain myself, because a charge has been levelled against me that I am against the announcements that have been made. I will be the last person to say that no such concessions should be made to the people. My only point is this. The last minute announcement contravenes the rules and also the Constitution.

(Thiru S. Kandappan rose.)

It is for the Hon. Speaker to decide. It is not for the hon. Member to cow down me. I will not be cowed down by the voice of another Member. I am perfectly within my rights and only with your permission, I stood up.

THIRU S. KANDAPPAN: I want to say certain things by way of personal explanation.

THIRU J. JAMES: The hon. Member Thiru Ponnappa Nadar is standing for more than five minutes.

THIRU R. PONNAPPA NADAR: If these things were to be continued by a senior Member who has been in the Parliament, I am at a loss to understand how we are going to function.

(Thiru S. Kandappan rose.)

MR. DEPUTY SPEAKER: I request the hon. Member to resume his seat.



1973 மார்ச் 30]

THIRU R. PONNAPPA NADAR: My argument may be wrong. It is for the Hon. Deputy Speaker to decide. It is for the Hon. House to consider. When I wanted to make a clarification, you have allowed me. When such is the case, I am within my rights. The hon. Member is not within his rights to interrupt me.

(Thiru S. Kandappan rose.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சிக்கிரம் முடித்து விடுங்கள்.

THIRU R. PONNAPPA NADAR: I would like to invite your attention to Rule 63 (iii). Under Rule 63 (iii), a Member present at a sitting of the House, and not speaking shall not interrupt a Member, while speaking, by disorderly expressions or in any other disorderly manner. When you have given me permission, no other Member has a right to interrupt me. I am within my rights. Whether I am wrong or right, it is for the Speaker to decide. No Member can interrupt me.

**திரு. செ. கந்தப்பன்:** ஒரு தன்னிலை விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன். நடாளுமன்ற உறுப்பினராக இருந்தவருக்குக் கூட இது தெரியவில்லையா என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த அனுபவத்தை வைத்துத்தான் நான் சொல்கிறேன். இதுபோன்ற நடைமுறைகள் நடாளுமன்றத்திலோ சட்ட மன்றத்திலோ காண முடியாது . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் சொல்கிறேன், உட்காருங்கள்.

**திரு. செ. கந்தப்பன்:** You have to permit me to explain. தன்னிலை விளக்கம் கூறுவதற்கு என்னை விடுங்கள். உதவி சபாநாயகர் அவர்கள் அருள்கூர்ந்து எனக்குச் சில நிமிடங்கள் அனுமதி அளிக்க வேண்டுகிறேன். ஒவ்வொரு நாளும் இங்கு நடந்து கொண்டிருக்கிறது. . . .

**திரு. கே. டி. கே. தங்கமணி:** ஒவ்வொரு நாளும் இந்தச் சபையிலே நடக்கிறது என்று சொல்கிறார்களே . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள்.

THIRU K. T. K. THANGAMANI : Sir, it is a reflection on the House. . . . .

MR. DEPUTY SPEAKER : It is not proper to interrupt like this. From the beginning I am requesting the hon. Members not to interrupt an hon. Member who is speaking. Let the hon. Member, Thiru Kandappan finish his speech and then you can speak. . . . .

**திரு. செ. கந்தப்பன் :** இது போல ஒழுங்குப் பிரச்னை எழுப்பப் படுகிறபோது நம்முடைய சட்ட மன்றத்தினுடைய விதி முறைகளை அனுசரித்து சுட்டிக் காட்டி ஒழுங்குப் பிரச்னை எழுப்பப்பட வேண்டுமென்ற விதி இருக்கிறது. அப்படி சுட்டிக் காட்டப்படாமல் எழுப்பப்படுகிறது. அதுவும் தீர்ப்பு வழங்கப் பட்ட பிறகு விவாதம் கூடாது என்று விதி முறை கூறுகிறது. ஆனால் தீர்ப்பு கூறப்பட்ட பிறகும் விவாதம் நடக்கிறது. எதிர்க் கட்சி உறுப்பினர்களால் பிரச்னைகள் எழுப்பப்பட்டால் சலுகை தருகிறீர்கள். ஆளுகிற கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களான நாங்கள் எங்கள் உரிமை பாதிக்கப்படுவதாக நினைக்கிறோம்.

இங்கே உரிமைப் பிரச்னைகள் எழுப்பப்படுகிறபோது அந்த பிரச்னைகள் மீது எங்கள் கருத்துக்களைச் சொல்ல, மாற்றுத் தரப்பில் அதிகமான உரிமைகள், சலுகைகள் வழங்கப்படுவதைப் போல எங்களுக்கும் வழங்கவேண்டும். நாள் தோறும் நடக்கிற நடைமுறையை துரிதப்படுத்துவதற்காக, உதவுவதற்காக எங்கள் ஆலோசனைகளை வழங்கி உதவியிருக்கிறோம். மாறாக இடைமறித்து திசை திருப்புகிற முயற்சிகள், சம்பந்தப்படாத பிரச்னைகள் பேசப்படுகிற போது சகித்துக் கொண்டு பொறுமையாக இருக்க வேண்டும் என்று ஆளும் தரப்பில் இருப்பவர்களைக் கட்டாயப் படுத்தாதீர்கள் என்று மிகப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** ஆன் எ பாயிண்டு ஆஃப் ஆர்டர் சார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஏற்கெனவே இரண்டு பெண்டிங்காக இருக்கிறது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** மதிப்பிற்குரிய துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு துணைத் தலைவரவர்கள் எதிர்க்



கட்சிக்கு அதிக சலுகை கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். உதாரணத்திற்கு நண்பர் மார்ட்டின் அவர்கள் சென்ற கூட்டத்தில் மாண்புமிகு ஆதித்தனார் அவர்கள் சபாநாயகராக இருந்த காலத்தில், நாங்கள் கைதூக்கிக் கொண்டிருந்தோம், மற்றவர்கள் சலுகை பெறுகிறார்கள் என்று சொல்ல, அவர்மீது உரிமை பிரச்னை கிளப்பப்பட்டு, அது புத்தகமாக வந்திருக்கிறது. நமக்குள்ளே ஆயிரத்தெட்டு இருக்கலாம். துணைச் சபாநாயகர் மீது குற்றச் சாட்டுகளைச் சொல்லி உரிமைப் பிரச்னை கிளப்புகிறார்கள். ஆளும் கட்சியினர் குற்றம் சாட்டுவது சரியல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் முடித்து விடுகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** எனக்கு எந்தவிதமான உறுத்தலும் கிடையாது என்பதை அழுத்தந்திருத்தமாக மறு முறையும் கூற விரும்புகிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I want a clarifiication. The Hon. Chief Minister was saying.

அமைச்சர்கள் கொடி போட்டுக் கொண்டு போனால் டிராஃபிக் கான்ஸ்டபிள்கள் தங்கள் வேலைகளைக் கவனிக்காமல் இந்தமாதிரி வேலைகளைக் கவனிக்க வேண்டியிருக்கிறது என்றார்கள். சங்கு ஊதிக் கொண்டு போகிறது என்று சொல்கிறார்களே, அது கான்ஸ்டபிள்களின் கவனத்தை இழுக்காதா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, அம்மையார் அவர்களுக்குச் சொல்வது, அப்படி கார்களெல்லாம் சங்கு ஊதிக் கொண்டு போவதில்லை.

THIRU K. T. K. THANGAMANI : Sir, under rule 184, I raise a question of privilege. . . . .

MR. DEPUTY SPEAKER : Let the hon. Member give it in writing.

THIRU K. T. K. THANGAMANI : It can be waived. . . . .

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்* : எனக்கு ரொம்பவும் வொர்க் லோடு கொடுத்திருக்கிறீர்கள். நீங்கள் ரைட்டிங்கில் கொடுங்கள்.

THIRU K. T. K. THANGAMANI : Under rule 184 I can raise it now.

MR. DEPUTY SPEAKER : But I must waive it. I am not giving permission to raise the privilege issue on the spot.

THIRU K. T. K. THANGAMANI : But there is provision for my moving it now.

(THIRU M. Surendran rose.)

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்* : நீங்கள் ரெயிஸ் பண்ணப் போவது பாயிண்டு ஆஃப் ஆர்டர் இல்லை. இன்றைக்கு இதற்கே சரியாகப் போய்விடும் போல் இருக்கிறது.

(திரு. சுரேந்திரன் மறுமுறை எழுந்திருந்தார்.)

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்* : நான் முடித்த பிறகு சந்தேகம் இருந்தால் கேளுங்கள். உட்காருங்கள்.

கொடிப் பிரச்னையைப் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கம் போதுமானது என்று கருதுகிறேன். கொடி, அமைச்சர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற சலுகை. மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் பயன்படுத்தக் கூடாது என்று கருதுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கத்தை ஒப்புக்கொண்டு இதில் எந்தவிதமான பாயிண்ட் ஆப் ஆர்டரும் எழவில்லை என்ற தீர்ப்பை பேரவைக்கு அளிக்கிறேன்.

இரண்டாவதாக, நேற்றையதினம் அளிக்கப்பட்ட சில அனௌன்ஸ்மெண்டைப் பற்றிச் சொன்னார்கள். அது பற்றி நம்முடைய அரசியல் சட்டத்தில் தெளிவாக இருக்கிறது.

Sub-clause (2) of Article 204 of the Constitution says—

"No amendment shall be proposed to any such Bill in the House or either House of the Legislature of the State which will have the effect of varying the amount or altering the destination of any grant so made or of varying the amount of any expenditure



charged on the Consolidated Fund of the State, and the decision of the person presiding as to whether an amendment is inadmissible under this clause shall be final."

நல்லகாலமாக கடைசியில் எனக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள். அமெண்ட்மெண்டு கூடாது. தொகையை திருத்தக் கூடாது. தொகை உயர்த்தப்படக் கூடாது. முதலமைச்சரவர்கள் சொன்னது அறிவிப்புகளே தவிர இதிலே இந்த டிமாண்டிலே இருக்கிற தொகையை கூட்டவோ, குறைக்கவோ சொல்லவில்லை. குறிப்பிட்ட ஒரு தொகையை அந்த டிமாண்டிலே கேட்டிருக்கிறார்கள். அப்ரோப்ரியேஷன் பில்லில் கேட்டிருக்கிறார்கள். அந்தத் தாகையில் அட்ஜெஸ்டு பண்ணி சலுகைகளைப் பயன் படுத்திக் கொள்ளலாம். பின்னாலே ஒரு சப்ளிமெண்டரி பட்ஜெட்டு கொண்டு வரலாம். அரசியல் சட்டத்தில் உறுதியாக சொல்லப்பட்டிருக்கிறது.

No amendment shall be proposed to any such Bill or Grant or Demand. Here no such amendment was proposed by the Hon. Chief Minister. So, there is no point of order.

THIRU R. PONNAPPA NADAR : Sir, may I take it that there will be no Supplementary Demand?

THIRU K. T. K. THANGAMANI : Sir, what has happened to my privilege motion ? Do you want to give it in writing ?

MR. DEPUTY SPEAKER : I request the hon. Member to give it in writing. . . . .

தங்கமணி அவர்கள் நான் சொல்வதைக் கேளுங்கள். எனக்கே டெலிகேட்டாக இருக்கிறது. நீங்கள் கொண்டு வருகிற பிரச்னை என்னைச் சம்பந்தப்படுத்திய பிரச்னை. இப்படிச் சொன்னார் என்று கொடுங்கள். திரு. கந்தப்பன் இப்படிச் சொன்னார் என்பதில் பிரிவிலேஜ் இருக்கிறதா, சொல்ல உறுப்பினருக்கு இருக்கிற உரிமையைப் பார்க்கவேண்டும். உறுப்பினருக்கு பேரவையில் அப்படிப் பேசுவதற்கு உரிமை இருக்கிறதா என்று பார்க்க வேண்டும்.

## 4. ஒத்திவைப்புத் தீர்மானம்

### அடிசன் கம்பெனி கதவடைப்பும் தொழிலாளர் உண்ணு நோன்பும் குறித்து

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் 42-வது விதியின் கீழ் பேரவையை ஒத்தி வைக்கக் கோரி, கீழ்க்கண்ட பிரச்னையை டாக்டர் ஹாண்டே அவர்களும், திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்களும் கொடுத்திருக்கிறார்கள்.

The continuous lock-out declared by the management of Addision and Company and the relay fast undertaken by the workers'

" The situation arising out of the lock-out in Addison and Company, Madras "

என்று டாக்டர் ஹாண்டே அவர்களும் திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்களும் கொடுத்திருக்கிறார்கள்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, what about my adjournment motion ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் தாமதமாகக் கொடுத்திருக்கிறீர்கள். எடுத்துக் கொள்வது நல்லதல்ல.

THIRU R. PONNAPPA NADAR: Notice will have to be given before the sitting of the House.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, you should not be very strict in regard to this matter.

MR. DEPUTY SPEAKER: The hon. Member knows very well and that so many times I have not been very strict. But since the matter has been raised on the floor of the House and a question has been raised by the Leader of the Congress (O) Party, it may not be very nice to admit this adjournment motion.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, அடிசன் கம்பெனியிலே தொடர்ந்து உண்ணு விரதமாக பல தொழிலாளர்கள் அங்கே ரிலேஃபாஸ்டு என்ற முறையில் நடத்திக்கொண்டு வருகிறார்கள். இந்த விஷயத்தை நான் இன்று ஏற்கெனவே அமைச்சரவர்களுடைய கவனத்திற்கு இந்த தொழிலாளர் மானியக் கோரிக்கை வருகிற நேரத்தில் கொண்டு வந்தேன்.





அந்த நேரத்தில் தொழில் அமைச்சரவர்கள் உடனடியாக சரியான வகையில் தீர்க்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். அந்த வாக்குறுதி அளித்து 3 வாரங்கள் முடிந்து விட்டன என்று கருதுகிறேன். 3 வாரங்களாக பிரச்னை தொடர்ந்து நடந்து கொண்டு வருகிறது. ஒரு தொழிலாளரை அனாவசியமாக இன்னொரு வேலை செய்யவேண்டுமென்று வற்புறுத்தப்பட்டு அதைச் செய்வதற்கு எனக்கு நேரம் கொடுக்கவேண்டுமென்று கேட்டதற்காக அவர் மீது, அந்த தொழிலாளர் மீது ஒரு சஸ்பென்ஷன் ஆர்டர் போட்டார்கள், அதன் விளைவாக அந்த சஸ்பென்ஷன் ஆர்டரை வாபஸ் வாங்கிக் கொள்ளவேண்டும் என்று வற்புறுத்தினார்கள். மானேஜ்மெண்டு ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்குப் பிறகு தொடர்ந்து நீடித்துக் கொண்டிருக்கிறது.

இப்படி ஏற்கெனவே பல பிரச்னைகள் சிம்சன் கம்பெனியிலும், அடிசன் கம்பெனியிலும் இருந்து, ஏற்கெனவே தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தீர்ப்பதாக உத்திரவாதம் தந்து எந்த விதமான சுமுகமான நிலைமையும் வரவில்லை. சிம்ஸனில் 180 பேர் நீக்கப்பட்டு முதலமைச்சரவர்கள் சொன்னதற்குப் பிறகு பிரச்னை என்னாகும் என்று தெரியவில்லை.

அவர்களை மீண்டும் எடுக்கப் போகிறார்களா, விசாரணை முடிந்து விட்டதா என்று தெரியவில்லை. அடிசன் கம்பெனியில் நிலைமை அப்படியே நீடித்துக் கொண்டிருக்கிறது. இது 15,000 தொழிலாளர்களையும் பாதிக்கக்கூடிய பிரச்சினையாக மாறிவிடாது தடுக்க வேண்டும். முற்றிப்போன பிறகு நோயைத் தடுக்க முடியாத அளவுக்குப் போன பிறகு நடவடிக்கை எடுத்துக் கொள்ளாமல் இப்போதே இதற்குத் தீர்வுகாண வேண்டும். இதிலே ஒரு நாள் இரண்டு நாட்களுக்குள்ளாக சுமுகமான முடிவுக்கு வரும் வகையில் இதுபற்றி என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதைப் பற்றி யெல்லாம் அறிய இந்த அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று சம்பிரதாயமாகக் கூறுகிறேன். அவர்கள் இதிலே எடுத்திருக்கக்கூடிய பரிகாரத்தை எடுத்துக் கூறுவார்களானால் அதுவே போதும் என்று கருதுகிறேன்.

*THIRU K. M. SUBRAMANIAM: I have nothing much to add except to state that this lock-out has been going on for about 60 to

[Thiru K. M. Subramaniam] [1973 மார்ச் 30

66 days. No serious attempt has been made to resolve this lock-out and bring them to work. On the other hand, there seems to be prestige standing in the way of settlement. I think the Hon. Minister, as a labour man, knows that prestige should not be allowed to play a serious part in these things.

The suspension of an individual has created a lot of trouble. That is the reason for the starting of relay-fast. That is undertaken by a union which claims the biggest majority. I had information that it is benig done by a union having only 32 members. If it is a fact, it is wrong. If it is a not a fact, I stand corrected.

In order to stop further complication and getting 15,000 to 16,000 people involved, Government should take immediate steps to see that this relay-fast is stopped and lock-out lifted and understanding is arrived at between management and labour.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவரவர்களே, சென்னை அடிசன் கம்பெனி லிமிடெட் தொழிற்சாலையில் சுமார் 1,650 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். இந்தத் தொழிற்சாலையில் இரும்பு வார்ப்புகளும், பொறி இயல் தொழிலுக்கு வேண்டிய வெட்டும் கருவிகளும் தயாரிக்கப்படுகின்றன.

இத்தொழிற்சாலையில் கீழ்க்கண்ட தொழிற்சங்கங்கள் உள்ளன :—

1. தமிழ் நாடு நேஷனல் இன்ஜினீயரிங் எம்ப்ளாயீஸ் யூனியன், சென்னை-14.

2. சிம்சன் அண்ட் குரூப் கம்பெனிஸ் ஒர்க்கர்ஸ் யூனியன், சென்னை-2.

3. சிம்சன் அண்ட் குரூப் கம்பெனிஸ் ஸ்டாப் யூனியன், சென்னை-2.

தமிழ் நாடு நேஷனல் இன்ஜினியரிங் எம்ப்ளாயீஸ் யூனியன், நிர்வாகத்தினரால் தொழில் துறையில் ஒழுங்கு முறை விதிகள் அடிப்படையின்படி 15—2—1972 முதல் நிர்வாகத்தினரால் அங்கீகாரம் செய்யப்பட்டது. அங்கீகாரம் பெற்றதிலிருந்து இன்னும் இரண்டாண்டுக் காலம் முடியவில்லை.

சிம்சன் அண்ட் குரூப் கம்பெனி தொழிலாளர் சங்கம் மற்றும் சிம்சன் அண்ட் குரூப் கம்பெனியில் ஸ்டாப் யூனியன் ஆகிய இரண்டு சங்கங்கள் அங்கீகாரம் கேட்டு கோரிக்கை எழுப்பியுள்ளது. மேலும் ஏறத்தாழ 1,000 தொழிலாளர்களிடமிருந்து



1973 மார்ச் 30] [திரு. என். வி. நடராசன்]

அவர்கள் இச்சங்கங்களைச் சேர்ந்தவர்கள் என்று கடிதங்கள் பெற்று அவற்றை அனுப்பியுள்ளனர். இக்கடிதங்களில் குறிக்கப்பட்டிருக்கும் விவரங்கள் சரியானவையா என்று பரிசீலிக்கப்படுகிறது.

அடிசன் கம்பெனி லிமிடெட் நிர்வாகம் ஆறு தொழிலாளர்களைப் பல்வேறு குற்றங்களுக்காக வேலை நீக்கம் செய்தது.

சட்ட விரோதமான வேலை நிறுத்தம் செய்யத் தூண்டுதல், நிர்வாகத்தினரை பயமுறுத்துதல், நிறுவனத்தின் சொத்தை சேதப்படுத்துதல் ஆகிய குற்றங்களுக்காக திரு. மோகன், திரு. ஸ்ரீதரன், திரு. சங்கரலிங்கம், திரு. தசரதன், திரு. ஏகாம்பரம், திரு. சங்கரன் ஆகிய 6 தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்தனர். வேலை நீக்கத்தை ஆட்சேபித்து சில அலுவலர்களை தாக்கிய குற்றத்திற்காக கீழ்க்கண்ட நான்கு தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர் :—

திரு. முனுசாமி, திரு. சுப்பிரமணியம், திரு. மணி, திரு. கந்தசாமி ஆகிய வேலை நீக்கம் செய்யப்பட்ட பத்து தொழிலாளர்களில் திரு. கந்தசாமி என்பவர் கணக்குத் தீர்த்துக் கொண்டு சென்று விட்டார். மீதமுள்ள 9 தொழிலாளர்கள் சென்னை 2-வது தொழிலாளர் துறை அலுவலரிடம் தொழிற் தகராறு சட்டம் பிரிவு 2-ஏ-யின் கீழ் மனு செய்துள்ளனர். இந்தத் தொழிற் தகராறுகள் விசாரணையில் இருந்து வருகின்றன.

இந்தக் கட்டத்தில் 18—1—1973 அன்று திரு. முத்துகிருஷ்ணன் என்னும் தொழிலாளியை ட்ரில் தயார் செய்யும் இயந்திரம் ஒன்றிலிருந்து அது போன்ற மற்றொரு இயந்திரத்தில் உற்பத்தியின் அவசியத்தை ஒட்டி வேலை செய்யக் கோரியதை அவர் மறுத்தார். அதன் பேரில் அவர் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்து சிம்சன் அண்ட் குரூப் கம்பெனிஸ் ஒர்க்கர்ஸ் யூனியனைச் சேர்ந்த தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். இதன் விளைவாக நிறுவனம் முழுவதும் இயங்காமல் நின்று விட்டது. 24—1—1973, 25—1—1973 தினங்களில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் நிறுவனத்தில் உள்ள தொலைபேசிகள், கண்ணாடி ஜன்னல்கள், முக்கியமான தஸ்தாவேஜிகள், சில இயந்திரங்களின் சில பாகங்கள் இவற்றைத் தாக்கி

பலத்த சேதம் விளைவித்தனர். இதன்பேரில் 25—1—1973 அன்று முதல் நிர்வாகம் கதவடைப்பு செய்தனர். 2—2—1973 அன்று சென்னை தொழிலாளர் துறை ஆணையர் நிறுவனத்திற்குச் சென்று சேதத்தினால் ஏற்பட்ட நிலைமையை பார்வையிட்டு சேதம் நடந்தது உண்மையென்று அறிக்கை அனுப்பியுள்ளார்.

இந்த நிலையில் ஒரு முடிவு காண நிர்வாகத்தினர் அங்கீகரிக்கப்பட்ட சங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்தி வருகின்றனர்.

சென்னை தொழிலாளர் துறை துணை ஆணையர் முன்பாக இத்தொழிற் தகராறு சம்பந்தமாக சமரசப் பேச்சுவார்த்தை நடைபெறுகிறது.

இதற்கிடையில் 28—2—1973-லிருந்து ஒவ்வொரு நாளும் 10 தொழிலாளர்கள் தொழிற்சாலைக்கு முன்பாக தொடர் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

சென்னை தனித் துணை ஆணையர் முன்பு 27—3—1973 அன்று நடந்த பேச்சு வார்த்தை பயனளிக்கவில்லை.

மீண்டும் பேச்சு வார்த்தை தொடர்ந்து நடக்க இருக்கிறது.

டாக்டர் எச். வி. ஹாண்டே: தொழிலாளர்களுடைய பிரதிநிதிகளை அழைத்துப் பேச செயலாளருக்குக் கட்டளையிட்டிருக்கிறார்கள். எப்போது மீண்டும் அழைக்கப் போகிறார்கள்? எப்போது பேச்சு வார்த்தை நடத்தப் போகிறார்கள்? தொழிற் சங்கத் தலைவர்களை அழைத்துப் பேசியதில் என்ன குறையைச் சொல்லுகிறார்கள்? எதற்காக உண்ணாவிரதத்தை வாபஸ் வாங்க மறுக்கிறார்கள். அந்த விளக்கத்தை எல்லாம் சொல்ல முடியுமா? உண்ணாவிரதத்தை வாபஸ் வாங்கும் சூழ்நிலையை முதல் கட்டமாக உருவாக்க முடியுமா?

THIRU K. M. SUBRAMANIAM: I would like to know whether this Thiru Muthukrishnan, who was suspended and who refused to undertake some work, was served with a written show-cause notice and whether he has given his reply. Point No. 2. Whether the Secretary with whom Government is proposing to negotiate, to which union does he belong, does he belong to majority union or minority union?

திருமதி த. ந. அனந்தநாயகி: பாயின்ட் ஆப் இன்பர்மேஷன். நான் பேசவில்லை, ஒரே ஒரு இன்பர்மேஷன் மட்டும் கேட்கிறேன்.





திரு. நா. வீராசாமி: அட்ஜார்ன்மென்ட் மோஷன் யார் கொடுத்திருக்கிறார்களோ அவர்கள்தான் கேட்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் கேட்க முடியாது. உங்களுடைய கருத்தை டாக்டர் ஹாண்டே அவர்களிடம் கூறி அவரைக் கேட்கச் சொல்லுங்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: அவர்கள் கேட்க விரும்புவது ஐ.என்.டி.யு.சி. தொழிலாளர்கள் இருக்கிறார்கள், ஆபீஸ் இருக்கிறது. அவர்கள் ஊர்வலமாகப் போயிருப்பதாக அம்மையார் அவர்கள் சொன்னார்கள். அந்தத் தகவல் எனக்கு வரவில்லை. ஐ.என்.டி.யு.சி. தொழிலாளர்களுக்கும் இந்தத் தொழிலாளர்களுக்குமிடையே க்ளாஷ் ஏற்படாமல் பார்த்துக் கொண்டால் நல்லது.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: டாக்டர் ஹாண்டே அவர்களும் சுப்பிரமணியம் அவர்களும் தெரிவித்த கருத்துப்படி இந்தப் பிரச்சினையில் எந்தத் தொழிற் சங்கத்தை அங்கீகரிப்பது என்ற நிலைதான் இப்போது முக்கியமாக இருக்கிறது. ஏற்கெனவே, ஐ.என்.டி.யு.சி. யூனியன் செயல்பட்டுவருகிறது. அதைத்தான் பதிலில் தெரிவித்தேன். இரண்டு ஆண்டுகள்கூட முடியவில்லை. அதிலுள்ள ஆயிரம் பேர் வேறு ஒரு சங்கத்திற்குச் சென்றிருப்பதாகவும், கடிதத்தின் மூலம் தெரிவித்திருப்பதாகவும் தகவல் கிடைத்திருக்கிறது. அதைப் பற்றிப் பரிசிலனை செய்து வருகிறோம். முக்கியமான பிரச்சினை சங்க அங்கீகாரமே தவிர மற்றப் பிரச்சினைகள் எல்லாம் அடுத்ததாகத்தான் உள்ளன.

எந்தத் தகராறும், பலாத்காரமும் ஏற்படாமல் கண்காணிப்பது தொழற்சங்கத் தலைவர்களையும் சாரும். அதைத் தொடர்ந்து நாலைந்து நாட்களுக்குள்ளாக தொழிலாளர் நலத் துறைச் செயலாளர் அங்கீகரிக்கப்பட்ட யூனியனை, அவசியப்பட்டால் மற்ற யூனியனையும் ட்ரேட் யூனியன் பதிவுபெற்றது என்ற முறையில் அவர்களையும் அழைத்துப் பேசி சமரசம் காண முயற்சி எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அவசியமில்லை என்று கருதி இதற்கான அனுமதியை நான் மறுக்கிறேன்.

## 5. அரசினர் தீர்மானம்.

### பேரவை விதி 41 (3)-ஐத் தளர்த்தல் குறித்து.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, சட்டப்பேரவை விதி 41 (3)-ன் கீழ் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களை எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதைத் தளர்த்தவேண்டுமென்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. க. சுப்பு அவர்கள் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டுவருவார்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** அவர்கள் உங்களுக்கு ஒரு கடிதம் எழுதுவதாகச் . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** எழுதியிருந்தார்கள். முதல் அமைச்சர் அவர்களுக்கும், அவர்களுக்கும் இரண்டு பேர்களுக்கும் ஒத்துவந்துவிட்டது என்று நினைத்தேன். இப்போது அவர்கள் வரவில்லை. ஸோ, நாட் மூவ்ட்.

## 6. கவன ஈர்ப்பு.

### (அ) மதுரை மாநகராட்சியில் பணியாற்றும் அதிகமான தொழில் பழகு ஆசிரியர்கள் முறையாக வேலையில் அமர்த்தப்படாமை குறித்து.

THIRU K. T. K. THANGAMANI : Mr. Deputy Speaker, Sir, under Rule 41 of the Assembly Rules I call the attention of the Hon. Minister for Education and Local Administration to a matter of urgent public importance, namely, the delay in regularising a large number of Apprentice Secondary Grade Teachers in the Madurai Corporation Schools and the consequent unrest among them.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, 1970 அக்டோபரில் தொடங்கப்பட்ட தொழில் பழகு ஆசிரியர் திட்டத்தின் கீழ், மொத்தம் ஏறத்தாழ 5,746 ஆசிரியர்கள்



தொழில்பழகு ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டனர். அவர்களுள் இதுவரை ஏறத்தாழ 3,308 பேர் முறையான ஆசிரியர் பதவிகளில் அமர்த்தப்பட்டுவிட்டனர். எஞ்சியுள்ள தொழில்பழகு ஆசிரியர்கள் 2,438 பேரும் கூடிய விரைவில் முறையான ஆசிரியர் பதவிகளில் அமர்த்தப்பட்டுவிடுவர்.

மதுரை மாநகராட்சி இத்திட்டத்தின் கீழ் 1970 டிசம்பரில் நியமித்த தொழில்பழகு ஆசிரியர்களின் எண்ணிக்கை, பி.டி. 4, செக்ண்டரி கிரேடு 43, ஹையர் கிரேடு 10, ஆக மொத்தம் 57 ஆகும்.

அவர்களுள், தொழில் பழகும் பி.டி. ஆசிரியர் நால்வரும் ஏற்கெனவே முறையான நிரந்தரப் பணியிடங்களில் நியமிக்கப்பட்டுவிட்டனர். மீதி தொழில் பழகு ஆசிரியர்கள் 53 பேரையும் இதுவரையும் முறையான ஆசிரியர் பதவிகளில் அமர்த்த இயலாமைக்கான காரணம் வருமாறு :

தொழில்பழகு ஆசிரியர்கள் பணி செய்யும் எந்நிர்வாகத்தினரும் முறையான ஆசிரியர் பதவிகள் புதிதாக ஏற்படுத்தப்படுமாயினும், காலி விழுமாயினும், அவற்றைப் பின்வரும் வரிசை முறைப்படி நிரப்பவேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளது.

அந்நிர்வாகத்தினுல் ஏற்கெனவே முறையான ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டவர்கள் (அவர்கள் தகுதிகாண் பருவத்திலிருப்பினும் சரி, அல்லது அப்பருவத்தைத் தாண்டியிருப்பினும் சரி) எவராவது காலியிடம் இல்லாத காரணத்தால் பணியை விட்டு அனுப்பப்பட்டிருப்பின், அவர்களை முதற்கண் அக்காலியிடங்களில் மீண்டும் நியமிக்கவேண்டும்.

அவ்வாறு நியமித்த பின் மிஞ்சும் காலியிடங்களுக்குத் தொழில்பழகு ஆசிரியர்களை நியமித்திடல் வேண்டும்.

16—3—1970 அன்று மதுரை மாநகராட்சியினுல் முறையான ஆசிரியர்களாக நியமிக்கப்பட 63 ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். அவர்களுள் 21 பேருக்கு மட்டுமே இதுவரை நிரந்தரப் பணியிடங்கள் தர இயன்றுள்ளது; 22 பேர் விடுப்புப் பணியிடங்களில் பணி செய்கின்றனர்; மீதி 20 பேருக்கு பணி அளிக்க வேண்டியுள்ளது. எனவே தொழில்பழகு ஆசிரியர்கள் 53 பேர்களில் எவருக்கும் முறையான ஆசிரியர் பதவிகள் அளிக்கத்

தொடங்குமுன், 42 நிரந்தரப் பணியிடங்கள் காலி விழுந்து அல்லது புதிதாக ஏற்படுத்தப்பட்டு அவற்றில் மேற்சொன்ன 22-ம், 20-ம் ஆக 42 பேரும் முதற்கண் நிரந்தரப் பணியிடங்களில் அமர்த்தப்படவேண்டும். இக்காரணத்தால்தான் தொழில்பழகு ஆசிரியர்கள் 53 பேரும் தொடர்ந்து தொழில்பழகு ஆசிரியராகவே இருந்து வர நேர்ந்துள்ளது.

இன்னும் தொழில்பழகு ஆசிரியராகவே இம்மாநிலத்தில் இருந்து வரும் மொத்தம் சுமார் 2,438 பேரில் மதுரை மாநகராட்சியின் கீழ் பணி செய்யும் 53 பேரும் அடங்குவர். ஏற்கெனவே கூறியதுபோல அவர்கள் அனைவரையும் கூடிய விரைவில் முறையான ஆசிரியர் பதவிகளில் அமர்த்திட அரசு நடவடிக்கை எடுக்கும்.

**(ஆ) திருப்பூரில் உள்ள பனியன் தொழிற்சாலை தொழிலாளர் வேலை இழக்காமல் இருக்க அவற்றிற்கு அரசே நூலை வாங்கி நியாயமான விலையில் முன்னதாகவே வழங்குவது குறித்து.**

THIRU N. K. PALANISAMY : Sir, I call the attention of the Hon. Minister for Industries to a matter of urgent public importance, namely, the necessity to procure yarn sufficiently in advance by the Government and to distribute the same to 400 Banian Factories and large number of powerloom factories in Tiruppur and surrounding places in order to avoid 30,000 workers from being thrown out of employment.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இப்பொருள்பற்றி பல உறுப்பினர்கள் 41-வது விதியின்கீழ் அறிக்கைகள் விடுத்ததன் பேரில் அவையில் 3—3—1973 அன்று நடந்த விவாதத்தின்போது நெசவாளர்களுக்கு நியாயமான விலையில் பருத்தி நூலைப் பங்கிடு செய்வதற்கு இந்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து ஏற்கெனவே விளக்கப்பட்டுள்ளது. அப்போது இம்மாநிலத்திலுள்ள பஞ்சாலைகள் அனைத்தும் தங்களிடமுள்ள இருப்புக்களை மாநில அரசிடம் ஒப்படைக்குமாறு அவற்றை அரசு கேட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. தென்னிந்திய ஆலை உரிமையாளர்கள் சங்கத்தின்





உறுப்பினர்களாகவுள்ள ஆலைகள் இப்போது உற்பத்தி செய்து வரும் நிபந்தனையற்ற நூல் உற்பத்தி அளவை அரசிடம் ஒப்படைக்க ஒப்புக்கொண்டுள்ளதாக அவைக்குத் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து தமிழ்நாட்டிலுள்ள தென்னிந்திய ஆலை உரிமையாளர் சங்கத்தில் உறுப்பினர்களாயுள்ள ஆலைகள் உற்பத்தி செய்யும் பருத்தி நூலைக் கொள்முதல் செய்வது, பங்கீடு செய்வது குறித்து தென்னிந்திய ஆலை உரிமையாளர்கள் சங்கத்துடன் 6—3—1973-ல் ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் கீழ், இந்த ஆலைகளிலிருந்து 4,446 பொதிகள் கொள்முதல் செய்யப்பட்டு பல்வேறு மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டன. இவை, மாவட்டங்களிலுள்ள தறிகளின் எண்ணிக்கை, அவற்றைப் பயன்படுத்தும் முறை, பல்வேறு நேர்த்திகளில் கிடைக்கும் நூல் ஆகியவற்றின் அடிப்படையில், அனைத்துத் தரப்புக் குழுக்களின் மேற்பார்வையின்கீழ், பல்வேறு மாவட்டங்களிலுள்ள கைத்தறிகளுக்கும், விசைத்தறிகளுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு கொள்முதல் செய்யப்பட்டதில் 393 பேல் சிட்டா நூல் (Hank yarn) 756 பேல் கூம்பு (Hosiery yarn)உருளை நூல் (Cone yarn) , 194 பேல் பின்னல் நூல் ஆகிய வகையைச் சேர்ந்த 1,343 பேல்கள் கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த பேல்கள் உள்ளாடைத் தொழிற்சாலைகள் (Hosiery Factories) உட்பட கைத்தறி, விசைத்தறிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

இதற்கிடையில், பருத்தி நூலின் விலை, கொள்முதல், பங்கீடு ஆகியவற்றின் மீது சட்டப்படிக்கான கட்டுப்பாட்டைக்கொண்டு வந்துள்ளதாக 13—3—1973-ல் இந்திய அரசு அறிவித்தது. இதன் கீழ் 19—3—1973-ல் பஞ்சாலை ஆணையாளர், இம்மாநிலத்திற்கு மார்ச் திங்களுக்கு 9,810 பேல் சிட்டா நூலையும், ஒவ்வொரு பேலும் 200 கிலோ கிராம் எடையுள்ள 2,155 பேல் கூம்பு உருளை நூலையும் ஒதுக்கியுள்ளார். இவை, கைத்தறி பஞ்சாலை இயக்குநரால் நெசவாளர்களுக்குப் பங்கீடு செய்யப்படும். ஆலைவாரியாக ஒதுக்கீடு செய்துள்ள ஒதுக்கீட்டு அளவை 29—3—1973 அன்றுதான் பஞ்சாலை ஆணையாளர் கொடுத்துள்ளார். எனவே,

ஒதுக்கப்பட்டுள்ள நூலை ஆலைகளிலிருந்து முன்னதாக எடுத்துச் செல்ல இயலவில்லை. பஞ்சாலை ஆணையாளர் ஒதுக்கியுள்ள அளவு, நமது தேவையைவிட (குறிப்பாக உயர் நேர்த்தியுள்ள நூல் தேவையைவிட) மிகக் குறைவாகவே உள்ளது. இது குறித்தும் பஞ்சாலை ஆணையாளருக்கு எடுத்துக்கூறப்பட்டுள்ளது. நமது மாநிலத்தில் வெவ்வேறு வகையான நூல்களின் தேவையானது கீழ்வருமாறு :—

| | | | |
|---|---|---|---|
| 1. சிட்டா நூல் | .. | 20,000 பொதிகள் | ஒவ்வொன்றும் 200 கிலோ. |
| 2. கம்பு உருளை நூல்— | | | |
| விசைத்தறி | .. | 20,000 ,, | ,, |
| கூட்டு ஆலை | .. | 15,000 ,, | ,, |
| 3. பின்னல் நூல் | .. | 8,000 ,, | ,, |

பின்னல் நூலைப் பொறுத்தமட்டில், பஞ்சாலை ஆணையாளர், பம்பாய், இந்திய உள்ளாடைத் தயாரிப்பாளர்கள் சங்கக் கூட்டமைப்பு மூலம் நூலை ஒதுக்கீடு செய்யக் கருதியுள்ளார்.

பெடரேஷன், திருப்பூர் தென் இந்திய ஹோசியரி உற்பத்தியாளர் சங்கம், சேலம் ஹோசியரி பாக்டரி உரிமையாளர் சங்கம் இரண்டிற்கும் சேர்ந்து ஒவ்வொன்றும் 200 கிலோ உள்ள 1,800 பொதி பின்னல் நூல் ஒதுக்கீடு செய்திருக்கிறது என்று தெரிய வருகிறது.

எனவே, சட்டப்படிக்கான கட்டுப்பாட்டைக் கொண்டு வந்துள்ளதாக இந்திய அரசு அறிவிப்பதற்கு முன்னரே போதுமான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டுள்ளதைக் காணலாம்.

**திரு. என். கே. பழனிசாமி :** கோவையில் சில மில்களில் உற்பத்தியான நூல் தேங்கிக் கிடக்கிறது. அவர்கள் எடுத்துக் கொள்ளச் சொல்லியும் சர்க்கார் எடுக்கவில்லை என்று பத்திரிகையில் பார்த்தேன், அதன் விவரங்கள் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அது முற்றிலும் உண்மை. இந்த மன்றத்தில் எடுத்துக்காட்டியதுபோல் மத்திய அரசு



அவர்களுக்கு நூல் தருகிற முயற்சியில் தோல்வியடைந்திருக்கிறது. நாமாக ஒப்பந்தம் செய்து இடைக்காலத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய சிக்கலைத் தீர்ப்பதற்காக எல்லா ஆலைகளும் நம்மிடத்தில் ஒப்படைக்க முன்வந்தபோது இப்போது அவர்கள் போட்ட உத்தரவால் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. நாங்கள் ஒப்பந்தம் செய்துகொண்டு ஏற்கெனவே கூறியபடி நாலாயிரத்திற்கு மேற்பட்ட பேல்கள் வாங்கி விநியோகிக்கப்பட்டது. இதற்குப்பின் சட்டப்படி நாங்கள் வாங்கப் போகிறோம் என்று சொல்லிவிட்டு சட்டப்படி உள்ள உத்தரவைப் போட இவ்வளவு காலதாமதம். 29-ம் தேதி நமக்கு உத்தரவு வந்திருக்கிறது.

இன்று காலை நானே நேரில் தொடர்பு கொண்டேன். எங்களுக்கு உத்தரவு வரவில்லை, உத்தரவு வந்தால்தான் நாங்கள் தரமுடியும் என்று சொல்கிறார்கள். இதன் விளைவு கிட்டத்தட்ட, அவர்கள் தந்த தகவல்படி மூன்று கோடியிலிருந்து நான்கு கோடி வரை நம் தமிழ்நாட்டு ஆலைகளில் நூல் தேங்கிக் கிடக்கிறது. ஆனால் நெசவாளர்களுக்கு நூல் கொடுக்கமுடியாத துர்ப்பாக்கியத்தில் நாம் இருக்கிறோம்.

## 7. அறிவிப்புகள்.

### (அ) நடைமுறை விதிக்குழுவிற்கு நியமனம்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவைக் குழுக்கள் பற்றி அறிவிப்புகள். மு.ப. 11-00

தமிழ்நாடு சட்டப் பேரவையின் 229 (1)-வது விதியின்கீழ் 1973-74 ஆம் ஆண்டுக்கு பின்னரும் உறுப்பினர்களை நடைமுறை விதிக் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்.

1. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி, முதலமைச்சர்.
2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர்.
3. மாண்புமிகு திரு. செ. மாதவன், தொழிலமைச்சர்.
4. பேரவைத் துணைத் தலைவர்.
5. திரு. து. ப. அழகமுத்து.
6. திரு. துரைமுருகன்.

[பேரவைத் துணைத் தலைவர்] [1973 மார்ச் 30

7. திரு. ஜி. ராஜாராம்.
8. திரு. பி. எஸ். மணியன்.
9. திரு. எம். கந்தசாமி.
10. திரு. கே. டி. கே. தங்கமணி.
11. திரு. க. உரொ. எட்மண்ட்.
12. திரு. எஸ். முகமதுகாதர் முகைதீன்.
13. திரு. ஏ. சுப்பிரமணியம்.
14. டாக்டர் எச். வி. ஹாண்டே.
15. திரு. கே. கந்தசாமி.
16. திரு. என். டென்னிஸ்.

பேரவைத் தலைவர் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவர் ஆவார்.

### (ஆ) அவையினர் குழுவிற்கு தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** 1973-74-ம் ஆண்டுக்கான அவையினர் குழுவிற்கு சட்டப் பேரவையின் பதின்மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும்பொருட்டு கீழ்க்கண்ட பதின் மூன்று உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப் பட்டுள்ளார்கள் :—

1. திரு. எஸ். அழகுத் தேவர்.
2. திரு. எம். சுரேந்திரன்.
3. திரு. நா. கிருட்டிணன்.
4. திரு. எம். எஸ். கே. சத்தியேந்திரன்.
5. திரு. எம். சத்தியமூர்த்தி.
6. திரு. எஸ். கே. சுப்ரமணியம்.
7. திரு. வி. சுப்ரமணியம்.
8. திரு. ஆ. கு. சுப்பையா.
9. திரு. குழ. செல்லையா.
10. திரு. ஏ. சி. நரசிம்மன்.
11. திரு. வி. முத்து.
12. திரு. பி. வெங்கடசாமி.
13. திரு. கே. ஏ. வகாப்.



1973 மார்ச் 30] [பேரவைத் துணைத் தலைவர்]

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்கு சமமாக இருப்பதால், 1973-74-ம் ஆண்டு அவையினர் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன்.

பேரவையின் 221 (1)-வது விதிக்கிணங்க :—

1. திரு. எஸ். கே. வடிவேலு.
2. திரு. ப. முத்துசாமி.
3. திரு. என். எஸ். பலராமன்.
4. திரு. ஏ. பாலையா.

ஆகியோர்களை இக்குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன். பேரவையின் துணைத் தலைவர் அவர்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவர் ஆவார்.

### (இ) சட்டவிதிகள் ஆய்வுக்குழுவிற்கு நியமனம்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தமிழ்நாடு சட்டப் பேரவையின் 201 (1) விதியின் கீழ் 1973-74-ம் ஆண்டிற்கு பின் வரும் சட்டப்பேரவை உறுப்பினர்களை சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்.

1. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.
2. திரு. மணலி சி. கந்தசாமி.
3. திரு. கே. கந்தசாமி.
4. திரு. ச. சங்குமுத்து தேவர்.
5. திரு. சி. வே. வேலப்பன்.
6. திரு. எம். ஏ. லத்தீப்.
7. திரு. எம். சுப்பிரமணியம்.
8. திரு. மு. சுருளிவேல்.
9. திரு. எம். தேவராசன்.
10. திரு. ஏ. இராசமாணிக்கம்.
11. திரு. கே. பழனிவேலன்.
12. திரு. வி. இராசகோபால்.

**பேரவைத் துணைத் தலைவர் இக்குழுவின் தலைவர் ஆவார்.**

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், அறிவிப்பின்பேரில் ஒரு சிறு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். சென்ற ஆண்டு ரூல்ஸ் கமிட்டி ஒரு தடவை கூட கூடவே இல்லை. ஆகவே, அந்தக் கமிட்டியை அமைக்கிறபோது ஒரு தடவையாவது அந்தக் குழு கூடவேண்டுமென்று கூறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சென்ற ஆண்டு அதனுடைய தலைவராக நான் இல்லை.

8. அறிக்கை அளித்தல்.

(அ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு பொதுப்பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 3/73) மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கையை அளித்தல்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, தமிழ்நாடு 1973-ம் ஆண்டு பொதுப்பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண். 3/73) மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கையை * இப்பேரவை முன் வைக்கிறேன்.

(ஆ) அரசினர் உறுதிமொழிக் குழுவின் 4-வது அறிக்கையை அளித்தல்.

THIRU K. A. WAHAB: As Chairman of the Committee on Government Assurances, I rise to present the Fourth Report (Fifth Assembly) of the Committee.

7. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(ஈ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தமிழ்நாடு 1973-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

---

* 30—3—1973-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



9. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, தமிழ்நாடு 1973-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு குடிநீர் வழங்கு, வடிகால் வாரியத் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 5/73).

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, 1973-ம் ஆண்டு குடிநீர் வழங்கு, வடிகால் வாரியத் (திருத்த) சட்ட முன்வடிவை (* )ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு குடிநீர் வழங்கு, வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1971-ல் 30-வது பிரிவின்படி) அறிக்கையிடப்பட்ட நாளுக்கு அடுத்து முன்பு, இந்த அரசின் கீழ் (பொதுச் சுகாதாரப் பொறியியல்—நகராட்சிப் பணி) தலைமைப் பொறியாளர் அலுவலகம் உட்பட, பொதுச் சுகாதாரப் பொறியியல்—நகராட்சிப் பணிகள் துறை அலுவல்கள் சம்பந்தமாக பணியாற்றி வந்திருக்கிற ஒவ்வொருவரும் அந்த நாளிலிருந்து, வாரியம் தொடர்பான வேலையைச் செய்ய அனுப்பப்பட்டவரென்று கருதப்பட்டு அவர்கள் அரசுப் பணியாளர்களாக அற்றுப்போகும்.

---

* 20—3—1973-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

வாரியத்தின் அதிகாரியாக அல்லது பணியாளராக ஆவதற்குத் தாம் விரும்பவில்லை என்ற அறிவிப்பு கொடுக்க அரசுப் பணியாளர் ஒருவருக்கு விருப்ப உரிமை உண்டு என்று மேற்படி பிரிவின் இரண்டாவது வரம்பு நிபந்தனை விதிக்கிறது. அரசுப் பணியாளராகத் தொடர்ந்து இருந்து வருவதற்கான இந்த விருப்ப உரிமை அறிக்கையிடப்பட்ட நாளிலிருந்து அறுபது நாட்களுக்குள் பயன்படுத்தப்பட வேண்டும், அரசு 1971 ஜூலை 22-ம் நாள் அறிக்கையிடப்பட்ட நாளாகக் குறிப்பிட்டது.

பொதுச் சுகாதாரப் பொறியியல்—நகராட்சிப் பணிகள் துறையைச் சேர்ந்த பெரும்பாலான பணியாளர்கள் வாரியப் பணியாளர்களாக ஆவதற்கு விருப்பம் தெரிவித்தனர். ஆனால் நான்கு இளநிலைப் பொறியாளர்கள் நீங்கலாக, பொதுப் பணித் துறை அதிகாரிகள் அரசுப் பணியாளர்களாகவே இருக்க விருப்பம் தெரிவித்தனர். அதன் விளைவாக அரசுப் பணியிலிருக்க விருப்பம் தெரிவித்த பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைகள்—கிராமப் பணிகள் துறை ஆகியவற்றைச் சேர்ந்த இளநிலைப் பொறியாளர்களைப் பதவி உயர்வுக்குக் கருதிப் பார்க்க இயலாமற்போயிற்று.

அதே சமயத்தில் ஐந்தாண்டுக்குக் குறைவாகப் பணியாற்றியவர்களும் வாரியப் பணிக்கு விருப்பம் தெரிவித்தவர்களுமான இளநிலைப் பொறியாளர்களுக்கு பணித் தகுதிகளை குறித்த விதிகளைத் தளர்த்தித் தற்காலிகமாகப் பதவி உயர்வு அளிக்க வேண்டி வந்தது. பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைகள் கிராமப் பணித் துறை ஆகியவற்றைச் சேர்ந்தவர்களும் தற்போது வாரியத்தில் பணியாற்றி வருபவர்களுமான இளநிலைப் பொறியாளர்கள் வாரியப் பணியில் ஈர்த்துக்கொள்ளப்பட்டாலொழிய அவர்கள் வாரியப் பணியாளர்களுடன் போட்டியிட்டுப் பதவி உயர்வுக்கு உரிமை கோரத் தகுதியுடையவராக மாட்டார்கள். அரசுப் பணியாளர்களாக இருக்க விருப்பம் தெரிவித்து, ஆனால் வாரியத்தின் பணிகள் தொடர்பாக தொடர்ந்து பணியாற்றியவர்களை வாரியத்தின் பணியாளர்களாக ஆக்கிவிட இப்போது ஒப்புக்கொண்டுள்ளார்கள். வாரியத்தின் உதவிப் பொறியாளர் பதவி உயர்வுக்கு அப்போதுதான் அவர்களைக் கருதிப் பார்க்க இயலும் என்பதே இதற்குக் காரணமாகும்.



அரசுப் பணியாளராக இருந்து வர மேற்படி பிரிவின் கீழ் விருப்பம் தெரிவித்து ஆனால் வாரியத்தின் பணிகள் தொடர்பாகத் தொடர்ந்து பணியாற்றிய ஓர் அதிகாரி அல்லது பணியாளர் தாம் வாரியப் பணியாளராக ஆவது இயலும் வகையில் உத்தேச திருத்தச் சட்டத்தின் தொடக்க நாளிலிருந்து அறுபது நாட்களுக்குள் தாம் ஏற்கனவே தெரிவித்த விருப்பத்தை திரும்பப் பெற்றுக்கொள்ள வகை செய்திட தமிழ் நாடு 1971-ம் ஆண்டு 4-வது சட்டத்தின் 30-வது பிரிவைத் திருத்துவதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்சொன்ன முடிவுக்குச் செயல்வடிவம் கொடுக்க இச்சட்ட முன்வடிவு விழைகிறது. ஆகவே, இச்சட்ட முன்வடிவை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த திருத்த மசோதா 30 நாட்களுக்குள் வாரியத்தில் பணியாற்றக்கூடிய அரசு ஊழியர்கள் தங்களுடைய விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டுமென்றும், அதை வாட்டர் போர்ட் சார்பாக சரிபடுத்து வதற்காகவும் இந்த மசோதா இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. என்னுடைய கருத்தெல்லாம் இப்படி 'பீஸ்-மீலாக' ஒரு வாரியத்திற்கு ஒரு சட்டம், இன்னொரு வாரியத்திற்கு இன்னொரு சட்டம் என்று கொண்டு வருவது சரியல்ல, அதனால் பல வகைகளில் பல அதிகாரிகள் பாதிக்கப்படுகிறார்கள் என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்ல வேண்டுமென்பது தான். அதனால் தான் கூறுகிறேன்.

காரணம் என்னவென்றால், இப்போது பி.டபிள்யூ.டியில் ஏராளமாக இன்ஜீனியர்கள் இருக்கிறார்கள். அவர்களிடத்திலே இருக்கிற அதிகாரிகள் என்ன ப்ரமோஷன் நிலையில் இருக்கிறார்கள், சீனியாரிட்டி எப்படி நிர்ணயிப்பது என்பதில் குழப்பம் ஏற்படுகிறது. அதற்குப் பிறகு அவர்களுடைய நிலை வாரியத்தில் எப்படி? இம்மாதிரி குழப்பங்கள் எல்லாம் நடந்து கொண்டு வருகிறது. ஆகவே தான் இப்படி குடிநீர் வாரியத்திற்கு என்று ஒரு சட்டம். ஸ்லம் போர்டுக்காக ஒரு சட்டம் என்று இல்லாமல் நிரந்தரமாக ஒரு 'காம்பிரஹென்சிவ் லெஜிஸ்லேஷன்'

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1973 மார்ச் 30

மிக, மிகத் தேவை. அப்போது தான் அந்த அதிகாரிகளின் நிலையைத் தெளிவாக்க வசதியாக இருக்கும். இந்த வாரியத்திற்கு சென்றால் என்ன நிலைமை என்று அறிந்து கொள்ள வசதியாக இருக்கும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(திரு. நா. வீராசாமி—தலைமை)

முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு எப்படி வாரியங்கள் அமைக்கலாம் என்பதைப் பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள் புதிதாக மந்திரிகளை நியமிக்கக் கூடாது அவர்கள் இவ்வளவு பர்சன்டேஜ்தான் இருக்க வேண்டுமென்று இருப்பதால், வாரியங்களை அமைத்துக் கொண்டு வருகிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்போது கொண்டு வர வேண்டுமென்று விரும்பினாலும், மத்திய சர்க்காரின் சட்டத்தில் எவ்வளவு பர்சன்டேஜ் இருக்கலாம் என்று இருக்கிறதோ, அதற்குக் குறைவாகத் தான் அமைச்சர் இருக்கிறார்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** அதற்குக் குறைவாக சாமர்த்தியமாக வைத்திருக்கிறீர்கள். அந்த சாமர்த்தியத்தை எப்படி வைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்றால். . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நான் சொல்வதைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். நானும் சரியாகச் சொல்லவில்லையோ என்னவோ. அவர்கள் வைத்திருக்கிற விகிதாசார முறைப்படி இன்னும் கூட அமைச்சர்கள் போடலாம். ஆனால் போடவில்லை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** மேலும் மந்திரிகளைப் போடக் கூடிய நிலைமையிலிருந்தாலும் நீங்கள் போடவில்லை என்பதை தான் ஒத்துக் கொள்கிறேன். அதற்காக பாராட்டவும் பாராட்டு கிறேன். ஆனால் அதற்கு பதிலாக வாரியங்களை உருவாக்கு கிறீர்கள். அங்கே தான் உங்களுடைய சாமர்த்தியம் இருக்கிறது. அதற்காகத்தான் முதலமைச்சர் அவர்களைப் பாராட்ட வேண்டும் என்று கூறுகிறேன்.

நேற்றுகூட பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டியைப் பற்றிப் பேசுகின்றபோது, ஏறத்தாழ 8, 9 வாரியங்கள் வர இருக்கிறது



1973 மார்ச் 30] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

என்று தெரிந்தது. இன்னும் எவ்வளவு வரப்போகிறதோ எனக்குத் தெரியாது. வரட்டும், அதைப்பற்றி ஆட்சேபணை யில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** துணைத் தலைவரவர்களே, மூன்று வாரியங்களுக்குத்தான் அதிகாரி அல்லாதவர்கள் தலைவர்களாக இருக்கிறார்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** துணைத் தலைவரவர்களே, எத்தனை வாரியங்கள் வேண்டுமானால் வரட்டும், யார் வேண்டு மானாலும் தலைவராக இருக்கட்டும். அதற்கும் மத்திய அரசாங்கத்தின் சட்டத்தை எடுத்துக் காட்டி அல்லது ஏதாவது ஒரு கருத்தைச் சொல்லிவிடலாம். பிரச்னை என்னவென்றால் இந்த மாதிரியான வாரியங்களின் எண்ணிக்கை இன்கிரீஸிங் டெண்டன்ஸி யில் இருக்கிறது. இந்த மாதிரி ஏராளமாக வாரியங்களை உண்டாக்கு கின்ற ஒரு போக்கை நம்முடைய முதலமைச்சர் அவர்களிடம் காண முடிகிறது. இது ஆட்சேபணைக்குரியதல்ல என்றாலும், அதனால் ஏற்படுகின்ற பிரச்னை என்னவென்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். இதைச் சொன்னாலே மதிப்பிற்குரிய மாதவன் அவர்கள் இதெல்லாம் இப்பொழுதுள்ள சட்டத்திற்கு புறம்பான விஷயங்கள், அவற்றைப்பற்றி இதன் மீது பேசுவது அதிகப் பிரசங்கித்தனம் என்று கூட சொல்லலாம். இந்த மாதிரியிருக் கின்ற சந்தர்ப்பங்களில் திட்டவட்டமான ஒரு கொள்கையைக் கடைப் பிடிக்க வேண்டும். இந்த வாரியங்களை மட்டும் அமைப்பது சரியல்ல. இந்த வாரியங்கள் அமைப்பதால் உள்ள மிகப் பெரிய குறைபாடு என்ன என்றால், இப்பொழுது முதலமைச்சரின் கீழ் ஏராளமான வாரியங்கள் இருக்கின்றன.

மதிப்பிற்குரிய கந்தப்பன் அவர்கள் இந்த வாரியத்தின் தலைவர், அவர் பதில் கூறுகின்ற சமயத்தில் ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் வந்தால் அவர் எப்படிப் பதில் சொல்ல முடியும்? இது அக்கவுண்டபிலிட்டி டிரான்ஸ்பருக்கு இடம் கொடுக்கிறது. அதே மாதிரி இன்ஜினீயர்கள், பொறியியல் வல்லுநர்கள் விஷயத் திலும் அக்கவுண்டபிலிட்டி டிரான்ஸ்பர் ஆகும் நிலைமை ஏற்படு கிறது. அவர்கள் என்ன சொல்கின்றார்கள், செல்லப்பிள்ளைகளாக விருக்கின்ற ஒரு கோஷ்டியினருக்கு இந்த மாதிரியான வாரியங் களுக்குக்குள் நுழைந்து கொள்வதற்கு வாய்ப்பு கிடைத்து அங்கு அவர்கள் சீக்கிரத்தில் பதவி உயர்வு பெறுகின்ற சலுகைகளை

அனுபவிக்கின்றார்கள். இன்னொரு கோஷ்டி பதவி உயர்வு இல்லாமலேயே பேரண்ட் டிபார்ட்மெண்ட், அதாவது பி.டபிள்யு. டி.-யிலேயே இருக்கும் நிலைமைகள் ஏற்படுகிறது. அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தச் சட்டத்தின் நோக்கம் அதையும் கொண்டது என்று கருது கிறேன். ஸ்டேட்மெண்ட் ஆப் ஆப்ஜக்ட்ஸ் அண்ட் ரீசன்ஸில் சொல்லப்பட்டிருக்கிறது.

"The Government have carefully considered the matter and decided to amend section 30 of the Act so as to enable an officer or employee, who had given the option under the above section to remain as Government servant but who continued to serve in connection with the affairs of the Board; to withdraw the option within six days from the date of the commencement of the proposed amending legislation so that he can become a servant of the Board."

வித்டிரா பண்ண வேண்டும் அல்லது அங்கேயே இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

நான் இதற்கு ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். ஏற்றுக் கொள்ள முடியுமா என்று யோசித்துப் பார்க்கலாம். எல்லா இன்ஜினீயரிங் ஆபிஸர்களையும், அவர்கள் பி.டபிள்யு.டி.-யில் இருந்தாலும் மற்ற எந்த இலாகாவில் இருந்தாலும் சரி, ஒருங் கிணைந்த ஒரு பொது சீனியாரிட்டி ஏற்படுத்த வேண்டும். அப்பொழுது யாருக்கும் எந்தவிதமான கஷ்டமும் இல்லாமல் இருக்கும். எந்த விதமான மனக் கசப்பும் ஏற்படாது. Have a complete, combined and consolidated seniority policy அப்படியிருந்தால் அத்தனைபேருக்கும் சௌகரியமாகவிருக்கும். அவர்கள் வாரி யத்தின் கீழ் பணியாற்ற வந்தால், அதன் பின்னால் வாரியத்தின் சர்வீஸில் போட்டுக் கொள்ளலாம். இந்த வாரியத்திற்கு மட்டும் ஒரு திருத்தச் சட்டத்தைக் கொண்டு வருவதைவிட ஒரு கன்ஸா லிடேட் பில் கொண்டு வருவதுதான் பொருத்தமாகவிருக்குமென்று தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** துணைத் தலைவரவர்களே, இந்த மசோதாவின் மீது நான் ஒரு சில கருத்துக்களை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.



எதிர்க்கட்சியில் உள்ளவர் சொல்கிறார் என்று எண்ணாமல், இருக்கின்ற பிரச்னையை நல்ல முறையில் ஆராய்ந்து அவைகளுக்கு தீர்வு காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மாதிரி வாரியங்கள் ஏற்படுத்துவதின் நோக்கத்தைச் சற்று கவனிக்க வேண்டும்.

எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினர் அவர்கள் வாரியங்களின் தலைவர்களாகப் போடுவதற்குப் பதிலாக அமைச்சர்களாகவே போட்டுவிடலாம் என்று சொன்னார். உட்காருவதற்கு இடவசதி வேண்டுமே என்று போடாமலிருக்கலாம். முதலமைச்சர் அவர்கள் சாமர்த்தியமாக இன்னும் அமைச்சர்களைப் போட்டாலும் போடலாம், போடுவோம், போடக்கூடாது என்பது ஒன்றும் கிடையாது என்று சொன்னார்கள். இந்த வாரியங்களின் தலைவர் களையும் அமைச்சர்களாக்கி விட்டால், ஒரு அமைச்சரிடம் இரண்டு மூன்று இலாக்கா இருப்பதை கொஞ்சம் பிரித்துக் கொடுத்து விடலாம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** துணைத் தலைவரவர்களே, இப்பொழுது வந்திருக்கின்ற திருத்த மசோதா வாரியத்தைப் பொறுத்ததா அல்லது அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகப் படுத்துவது பற்றியா என்று புரிந்து கொண்டு பேசவேண்டும். பிரச்னையை விட்டு விட்டு பேசுகிறார்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** துணைத் தலைவரவர்களே, நான் இந்தப் பிரச்சினையில் கூறிக்கொள்வதெல்லாம் இந்த வாரி யங்களுக்கு தலைவர்கள் என்று ஏற்படுத்துவதால், அந்த கன்சர்ன்ட் மினிஸ்டர்களை கேள்வி கேட்க முடியாது. இன்றைய தினம் சாக்கடை வாரியம், சுற்றுலா வாரியம் என்று எடுத்துக் கொண்டால் ஹவுஸிங் மினிஸ்டர் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சாக்கடை வாரியம் என்று ஒன்றும் கிடையாது. வாட்டர் அண்ட் டிரெய்னேஜ் போர்ட், குடிநீர் வாரியம் என்று சொல்ல வேண்டும். சாக்கடை வாரியமல்ல.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நாங்கள் கேள்வி கேட்கின்ற போது சுற்றுலா வாரியத்தைப் பற்றியோ மற்ற எந்த வாரி யத்தைப் பற்றியோ கேள்விகள் கேட்கின்றபோது, அதன்

தலைவர்கள்தான் சரியாகப் பதில் சொல்ல முடியும். அந்தந்த அமைச்சர் சொல்ல முடியாது.

அடுத்து இந்த மசோதாவிற்கு வருகின்றபோது, இந்த இன்ஜினீயர்களில் பலருக்கு பேரண்ட் டிபார்ட்மெண்ட் பொதுப் பணித்துறைதான். அந்த பொதுப்பணித்துறையில் உள்ளவர்கள், குறிப்பாக ஜூனியர் இன்ஜினியர்கள் என்றால் அவர்கள் பல ஆண்டுகளாக அந்த நிலையிலேயே இருக்கவேண்டிய நிலைமை இருந்து வருகிறது. அதே நேரத்தில் ஹவுசிங் போர்ட்டில் ஒரு ஜூனியர் இன்ஜினியராக போகின்றவர் வெகு சீக்கிரத்தில் ஏ.ஈ. ஆகவும், அதற்கு மேல் ஈ.ஈ., ஆகவும், சி.ஈ. ஆகவும் வரக்கூடிய நிலைமை இருந்துவருகிறது. அமைச்சர் அவர்கள் நெய்வேலிக்குப் போய்ப் பார்த்தால் விளங்கும். ஜூனியர் இன்ஜினீயராக இருக்கின்றவர்கள் ஐந்து ஆண்டுகளில் ஏ.ஈ. ஆகக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்பது தெரியும். எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லாமல் சர்விஸ் அடிப்படையிலேயே அந்தப் பதவி உயர்வு கொடுக்கப்படும் நிலை இங்கேயும் வரவேண்டும். ஒரு காமன் பூல் என்று பொதுப்பணித்துறையில் வைத்துக்கொண்டு அதன்படி பதவி உயர்வு கொடுத்து வந்தால் எல்லோருக்கும் நல்லதாக விருக்கும். பொதுவான ஒரு சீனியாரிட்டி வைத்துக் கொள்ள வேண்டும்.

இப்பொழுது இருந்து வருகின்ற முறையில் ஐந்து வருஷம் சர்விஸ் ஆனவர்கள் ஏ.ஈ. ஆகப் போய் பல வருஷங்கள் சர்வீஸ் ஆகியும் ஆரம்ப நிலையிலேயே இருக்கிறார்கள். பர்ஸன்ஸ் வித் லெஸ் தேன் 5 இயர்ஸ் ஆப் சர்வீஸ் ஹேவ் பீன் புரோமோட்டட். மருமகன் ஏ.ஈ. ஆகவும் மாமனார் பல வருஷங்கள் சர்வீஸ் ஆகியும் ஜூனியர் இன்ஜினீயராக இருப்பதாக எழுதினார்கள். பத்திரிக்கை போட்டுக் கொடுக்கப்பட்டது. இட்டீஸ் எ மேட்டர் ஆப் பப்ளிக் இம்பார்டன்ஸ். அதற்காகத்தான் சொல்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: துணைத் தலைவரவர்களே, மாமனார் எம்.எல்.ஏ. ஆகவும் மருமகன் மந்திரியாக இருப்பதையும் அம்மையார் அவர்கள் வரவேற்கிறார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: ரொம்ப பேர் அப்படி வந்து விட முடியாது. அதிர்ஷ்டம் வந்தால் வரலாம். இந்த விஷயம்





இலாக்காவில் பணியாற்றுகின்றவர்களுடைய சீனியாரிட்டியைப் பொறுத்தது. இரண்டு பேரும் ஈக்குவலி க்வாலிபைட். வாரியத்தில் வேலை செய்கினறவர்களுக்கு விரைவில் வாரியம் பதவி உயர்வு கொடுக்கின்றது. பொதுப்பணித் துறையில் வேலை செய்கின்றவர்களுக்கு அம்மாதிரி கிடைப்பதில்லை. இரண்டு பேரும் பி.ஈ. படித்திருப்பவர்கள் தான்.

திரு. இராம. அரங்கண்ணல்: துணைத் தலைவரவர்களே, சர்வீஸ் இல்லாமல், விதிக்குப் புறம்பாக பதவி உயர்வு கொடுக்கப் பட்டிருக்கிறது என்பது அம்மையார் அவர்களின் குற்றச் சாட்டா?

திரு. நா. வீராசாமி: பல பேர் எம்.ஏ. படித்துவிட்டு சாதாரண நிலையில் இருக்கிறார்கள், சிலர் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக வருகின்றார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: நான் சொல்வது எல்லாம் பொதுப்பணித்துறையில் பத்து வருஷத்திற்கு மேலாகியும் அவர்கள் ஜூனியர் இன்ஜினீயர்களாகவே இருக்கும் நிலை இருந்து வருகிறது. ஈக்குவல் குவாலிபிகேஷன் இருக்கின்றபோது ஒரு இடத்தில் சீக்கிரமாக பதவி உயர்வு கிடைப்பதும், இன்னொரு இடத்தில் 15 வருஷம், 18 வருஷம் என்று ஆகியும் மேலே வர முடியாத நிலை இருத்தல் கூடாது. ஆகையினால்தான் ஒரு காமன் பூல் இருக்கவேண்டும் என்று கூறிக்கொள்கிறேன்.

சர்வீஸில் இருக்கின்றவர்களுக்கு ஹார்ட் பர்னிங் இருக்கக் கூடாது. பொதுப்பணித்துறையில் இருக்கிறவர்களுக்கும் பதவி உயர்வுக்கு வாய்ப்பு உண்டாக்க வழி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இதை எதிர்க்கட்சியிலிருந்து சொல்லப்படுகின்ற கருத்து என்று நினைக்காமல் பிரச்சினையில் உள்ள உண்மையை உணர வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

ஆகவே, பி.டபிள்யூ.டி. எஞ்சினீயர்களாக இருக்கின்ற எல்லோருக்கும் சீனியாரிட்டிபடி ஒரு காமன் பூல் போட்டு, அந்த சீனியாரிட்டி போர்ட்டிலே எடுத்துக்கொள்ள வேண்டும். இன்றைக்கு இருக்கிற நிலைமையைப் பார்த்தால் 5 வருஷத்திற்கு குறைவாக சர்வீஸ் இருந்தாலும் வேறு ஆள் கிடைக்கவில்லை

என்று சொல்லி ஜூனியர் எஞ்சினீயர்களை புரொமோட் செய்து போர்டுகளிலே நியமித்துவிடுகிறார்கள். அது கூடாது என்று தான் நான் சொல்கிறேன்.

இன்றைக்குக் கூட இதைப்பற்றி பி.டபிள்யூ.டி. எஞ்சினீயர்கள் இந்த மாதிரியான கோரிக்கைகளை அச்சிட்டு கொடுத்திருக்கிறார்கள். அரசாங்க இலாகாவிலே இருக்கின்றவர்களை போர்டுகளிலே போடும்போது அவர்களுக்கு ஆப்ஷன் கொடுக்கவேண்டும். ஆப்ஷன் கேட்கும்போது அவர்களுடைய சர்விஸ்களும், உரிமைகளும் பாதிக்கப்படுமா அல்லது பாதுகாக்கப்படுமா என்பதை எல்லாம் தெளிவாகச் சொல்லிவிடவேண்டும். இதையெல்லாம் யோசித்துத்தான், நாளை நிலைமை என்ன ஆகுமோ என்ற அச்சத்தில் பலர் இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, தெளிவாக நிலைமைகளைச் சொல்லிவிடவேண்டும்; அவர்கள் கலக்கத்தை போக்கிவிடவேண்டும்.

பஸ் தொழிலை எடுத்துக் கொண்டாலும் இந்த மாதிரியான நிலைமைதான் இருக்கிறது. ஸ்டேட் சர்வீஸில் இருப்பவர்கள் பல்லவா சர்வீசுக்கு வந்தால் நம்முடைய உரிமைகள் பறி போய் விடுமோ, சர்வீஸ் போய்விடுமோ என்று தயங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய ஆப்ஷனைக் கேட்டிருக்கக் கூடிய ஃபாரத்திலே 'உங்களுக்கு அரசாங்க சர்வீசில் இருக்க விருப்பமா, அல்லது பல்லவா சர்வீசில் இருக்க விருப்பமா' என்றுதான் கேட்கப்பட்டிருக்கிறதே தவிர, அங்கே இருந்தால் என்னென்ன நிலைமைகள் ஏற்படும், இங்கே வந்தால் என்னென்ன நிலைமைகள் ஏற்படும் என்பதை தெளிவாகச் சொல்லவில்லை. அதனால் அவர்கள் தயங்கிக் கொண்டிருக்கிறார்கள். தெளிவாகச் சொல்லிவிட்டால் கிடைக்கின்ற சலுகைகள், மற்ற வாய்ப்புகளை அறிந்து அதன் பிரகாரம் அவர்கள் விருப்பத்தைத் தெரிவிப்பார்கள்.

ஆகவே, எஞ்சினீயர்களைப் பொறுத்த வரையில் 'அட் லீஸ்ட் அட் தி லெவல் ஆஃப் ஜூனியர் எஞ்சினீயர்' மட்டத்திலே ஒரு 'காமன் பூல்' ஏற்படுத்தி 'சீனியாரிடி'படி அவர்களை போர்டுகளுக்கு—எந்த போர்டாக இருந்தாலும் சரி—எடுத்துக்கொள்ள வேண்டும். ஆப்ஷன் கேட்கும்போது அதிலே இருக்கிற சாதக பாதகங்களை எல்லாம் தெளிவாகச் சொல்லிவிட வேண்டும். இந்த



விஷயத்தை எல்லா அமைச்சர்களும் யோசித்துப் பார்த்து, அதற்கேற்ற முறையில் சட்டம் கொண்டுவர வேண்டும். ஏதோ மசோதாவைக் கொண்டு வருகிறோம்; நாம் மெஜாரிட்டியாக இருப்பதால் சட்டம் நிறைவேறிவிடும் என்று எண்ணிவிடக் கூடாது நியாயமான முறையிலே இருக்கவேண்டுமென்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி: சார், ஒரு கிளாரிஃபிகேஷன். அம்மையார் அவர்கள் பேசும்போது ஏதோ பெரிய குழப்பம் ஏற்பட்டுவிடுகிறது; அரசாங்க போக்குவரத்து—பல்லவன் போக்குவரத்து, சர்வீசுக்கு உத்தரவாதம் இருக்கிறதா என்றெல்லாம் சொன்னார்கள். 'ஆப்ட்' செய்யும் போதே "Existing facilities and the existing benefits of any kind should not be curtailed" என்று இருக்கிறது. இருக்கின்ற சலுகைகள், சர்விஸ் கண்டிஷன்கள் எல்லாம் 'ஆப்ட்' பண்ணும்போதே தெரிந்துகொள்ளக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அம்மையார் அவர்கள் அதையெல்லாம் தெரிந்துகொண்டு பேசுவது நல்லது.

திருமதி த. ந. அனந்தநாயகி: மாண்புமிகு உறுப்பினர் வீராசாமி அவர்கள் சர்வீசைப் பற்றி எல்லாம் சொல்கிறார்கள். அது எனக்கு தெரியாது. அவர்கள் சொல்வதை ஒப்புக் கொள்கிறேன். ஆப்ஷன் கொடுக்கும்போது சீனியாரிட்டி போய் விடுமா உரிமைகள் போய்விடுமா என்ற குழப்பத்தில் இருக்கிறார்கள்; அதை விளக்கிவிட வேண்டும்.

ஒரு இலாகாவிலிருந்து இன்னொரு இலாகாவிற்குப் போகும் போது என்னென்ன சலுகைகள், உரிமைகள் இருக்கும் அல்லது இல்லை என்பதை விளக்கிவிட வேண்டும். இல்லாவிட்டால் அங்கே போன பின்னால் குழப்பம் ஏற்படும் என்று சொன்னேன்.

* THIRU K. M. SUBRAMANIAM: Mr. Deputy Speaker, Sir, I am glad that the Government have realised that there is a likelihood of a lot of heart-burning when engineers are deputed to various Boards. It is happening that a Junior Engineer who has put in a service of three years either in this Board or in some other Board, by virtue of his experience and hard work in that

particular Board is promoted as Assistant Engineer and he even becomes an Executive Engineer while his co-worker in the parent body remains as a Junior Engineer or an Assistant Engineer. So I thing it is high time that the Government should seriously think of constituting as separate service called 'Tamil Nadu Engineering Service' so that their promotional opportunities are not affected whether they are in the Public Works Department or Housing Board or Slum Clearance Board or in any Board.

It is stated that an Engineer who opts for the Board or the P. W. D. should give his reply within sixty days from the the notified date. I think the whole thing seems to be confusing and nobody knows what his future is going to be. So, I support the suggestion of Dr. Hande that a consolidated and a separate engineering service called 'Tamil Nadu Engineering Service' should be constituted. Whenever Boards or the P.W.D. want engineers, they should be sent from this Service. I think the Government will seriously consider this aspect of the matter.

So far as the Water Supply and Drainage Board is concerned, I think a much more comprehensive legislation should be brought forward. This Board should not be an Executive Board but an Advisory and expert Board, because they are doing the work of Corporations, Municipalities and various other bodies.

There are small bodies like panchayats where there are no expert engineers. In such small bodies, the Water Supply and Drainage Board can enter and render services. But in Corporations like the Madras City Corporation where the drainage system extends over 100 miles and where there are already experts, it is very difficult for new entrants to go and find out defects and so I think this Board should not enter the executive side. Of course, whenever a scheme is proposed, it used to go before the Public Health Engineer for finalisation. . . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மசோதாவுக்கு சம்பந்தமில்லாதவைகளை எல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். மசோதாவுக்கு சம்பந்தப்பட்ட விஷயங்களைச் சொன்னால் பதில் சொல்வதற்கு வசதியாக இருக்கும்.



**திரு. கே. எம். சுப்பிரமணியம்:** நான் ஒரு சின்னக் கருத்தைத் தான் சொல்கிறேன்.

Mr.DEPUTY SPEAKER : The hon.Member is almost discussing all the clauses of the Bill. The general principles of the Bill may be discussed now. The details of the Bill must not be discussed.

THIRU K. M. SUBRAMANIAM : I thought that while discussing the staff of the Board, all the aspects of the matter also could be considered. If that is not necessary, I do not discuss it at all.

Now, as I have stated earlier, a Centralised Engineering Service is very essential for Tamil Nadu so that there may not be heart-burning among the staff and they may not jump from one department to another thinking that there will be promotion here or there.

Thank you, Sir.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர் சார், இந்த தமிழ் நாடு 'வாட்டர் சப்ளை அண்டு ட்ரெயினேஜ் போர்டு ஆக்ட்' 1970—71-ம் வருஷம் 4-ம் சட்டத்தில் வந்திருக்கக்கூடிய இந்த திருத்தத்தின் பெயரிலே சில காரியங்களைச் சொல்கிறபோது இந்த மசோதாவின் சில அம்சங்களைச் சொன்னால்தான் எதற்காக இப்படி திருத்தம் வந்திருக்கிறது அல்லது இந்தத் திருத்தம் எந்தமுறையில் வந்திருக்க வேண்டுமென்பதை எல்லாம் சொல்ல முடியும். இந்தக் கருத்துக்களை அவர்கள் சொல்கிறபோது 1971-ம் வருஷம் ஜூலை மாதம் 22-ந் தேதியை ஒரு நிச்சயிக்கப்பட்ட தேதி என்று வைத்து, அந்தத் தேதியிலிருந்து 60 தினங்களுக்குள்ளாக இப்போது வாரியத்தில் பணியாற்றுகிறவர்கள் இந்த வாரியத்தின் ஊழியர்களாக இருக்க விருப்பமா அல்லது சர்க்கார் ஊழியர்களாக இருக்க விருப்பமா என்று கேட்கப்பட்டதாகச் சொன்னார்கள். அப்படி 1971-ம் வருஷம் செப்டம்பர் மாதத்திற்குள்ளாக அவர்கள் எல்லாம் எந்த இலாகாவிலே இருக்கிறோம் என்பதைத் தெளிவாகச் சொல்லியிருப்பார்கள். அப்படிச் சொன்னபிறகு தான் ஒரு சிக்கல் ஏற்பட்டு, அதை நிவர்த்திப்பதற்காகத்தான் இந்தத் திருத்தம் கொண்டுவரப் பட்டிருக்கிறது என்று காரணம் சொன்னார்கள்.

குறிப்பாக, ஜூனியர் எஞ்சினீயர்களுக்கு பிரமோஷன் வருகிறபோது, சர்க்கார் இலாகாவிலே இருக்கிறவர்களுக்கு 5 ஆண்டுகளுக்கு மேல் சர்விஸ் இருக்க வேண்டும். 5 ஆண்டுகளுக்கு குறைவாக சர்விஸ் இருந்தாலும் இந்த இலாகாவில் பிரமோஷன் கிடைக்கிறது; சர்க்கார் ஊழியராக இருந்தால் இல்லை. ஆகையால்தான் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொன்னார்கள்; அப்படித்தான் நான் புரிந்துகொண்டேன். இந்தமாதிரி வருகிறபோது,—ஏற்கெனவே எனக்கு முன்னால் பேசிய ஒருவர் ஒரு கருத்தை எடுத்துச்
மு.ப. 11-30 சொன்னார்கள்.—ஒரு இலாகாவில் இருக்கிறவர்கள் இன்னொரு இலாகாவுக்கு மாறும்போது ஏற்கெனவே அவர்களுக்கு இருந்த எல்லா உரிமைகளும் பாதுகாக்கப்படும் என்ற உத்திரவாதம் இருக்கிறது என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட உத்திரவாதம் இருக்கின்றது என்பது உண்மைதான். ஆனால் இப்படிப்பட்ட உத்திரவாதங்கள் இருக்கும்போது, பின்னால் போகக்கூடிய அந்த இலாகாவிலே தனக்கு வேறு முறையில் பாதகங்கள் ஏற்படுமா, இப்போது உள்ள சர்வீஸ் பெனிஃபிட்ஸ் இல்லாது போய்விடுமா என்று அச்சப்படுகின்றார்கள்.

அதில் திருமதி அனந்தநாயகி அவர்கள் கூறியதில் ஒரு உண்மையிருக்கின்றது. இப்போது அரசுப் போக்குவரத்திலிருந்து பல்லவா போக்குவரத்துக் கழகத்திற்கு வர விரும்புகின்றவர்கள் எல்லோரும் 31—3—1973-க்குள் தங்கள் அப்ஷனை, விருப்பத்தினைச் சொல்ல வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். இன்று அந்தத் தொழிலாளர்களுக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டிருக்கின்றது. இதிலிருந்து அதாவது அரசுத் துறையிலிருந்து கார்ப்பொரேஷனுக்குப் போனால் ஊதியம் பாதிக்கப்படாமல் இருந்தாலும் சர்வீஸ் பாதிக்கப்படுமோ என்று அஞ்சுகின்றார்கள். இப்படிப்பட்ட நேரத்தில் தான் நாம் ஒரு 'யூனிஃபாரம் பாலிஸியை'-யை 'எவால்வ்' பண்ண முடியுமா என்று யோசிக்க வேண்டும்.

இதில் எஞ்சினீயர்களைப் பொறுத்த வரையில் ஒரு சிக்கல் ஏற்படுகிறது. குறைந்த சர்வீஸ் உள்ளவர்கள் அரசுத் துறையிலிருந்து ஒரு வாரியத்திற்குப் போய்விட்டால் அங்கே சீக்கிரம்





பதவி உயர்வு கிடைக்கும் வாய்ப்பு இருக்கின்றது. அங்கே உள்ள சீனியாரிட்டிப்படி அதைக் கொடுக்கின்றார்கள். இங்கே பத்து வருஷம் ஜே. இ.-ஆக இருந்த ஒருவர் அங்கே போகின்றார். ஆனால் புதிதாக அங்கே வாரியத்தில் ஜே.இ.-யாக இருந்தவர் நாலு வருஷத்தில் ஏ.இ.-யாக வருகின்றார் என்றால் அங்கேதான் முரண்பாடு இருக்கின்றது. எனவே, புதிய வாரியங்கள் என்று அமைக்கும்போது இப்படிப்பட்ட முரண்பாடுகளைத் தவிர்க்க, ஒரு குறிப்பிட்ட ஆண்டு காலம் உதாரணத்திற்கு பத்தாண்டு காலம் ஒருவர் ஜே.இ.-யாக இருந்தால் ஏ.இ.-யாகவும், ஏ.இ.-யாக இருப்பவர் இ.இ.-யாகவும் என்று பதவி உயர்வு கொடுப்பதற்கு ஒரு நியதியை ஏற்படுத்திவிட்டால் நல்லதாக இருக்கும் என்று கருதுகிறேன். இல்லாதுபோனால் உற்சாகக் குறைவுதான் ஏற்படும். அதிலும் எஞ்சினீர்ஸ் போலுள்ள திறமைசாலிகளை இப்படி உற்சாகமில்லாமல் பணியாற்றும்படி வைத்துவிட்டால் அது சரியாக இராது. இப்போதுள்ள நிலையில் இது 'பேச் ஒர்க்'-ஆகத்தான் இருக்கின்றது.

This matter must be seriously examined. Whether we can have a pool of engineers or whether we can have some other rational method must be seriously examined. என்பதை இந்த இடத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, இந்த வாரியங்களின் அமைப்பைப்பற்றி ஒரு வார்த்தையைச் சொல்ல விரும்புகிறேன். சமீபத்தில்கூட ஒரு வாரியத்தினை அமைக்கப் போவதாக வாக்குறுதி கொடுத்திருக்கின்றார்கள். அந்த வாரியத்தின் தலைவர் ஒரு அதிகாரிதான் இருப்பார் என்று அறிவிக்கப்பட்டது. இந்தச் சட்டத்தை நான் பார்க்கவில்லை. ஆக்ட் 4 ஆஃப் 1971-ஐ நான் பார்க்கவில்லை.

எங்களுக்கு உள்ள கஷ்டம் என்னவென்றால் நான் பொதுவாக மசோதாவின் மீது பேச விரும்புகின்றவன். அப்போது அந்த மூலச் சட்டத்தைப் பார்த்து அதன்மீது ஏற்பட்ட விவாதங்களைப் பார்த்து அது சட்டமாகும்போது எப்படி வித்தியாசம் ஏற்பட்டது என்று தெரிந்து பேசினால் உகந்ததாக இருக்கும். ஆனால் அப்படிப் பேச வாய்ப்பில்லை.

I am not doing my service to the House.

என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

அந்த மசோதாவில் யார் தலைவராக இருப்பது என்று சொல்லியிருப்பதாகத் தெரியவில்லை. ஆனால்

only a non-official should be the Chairman

என்று சொல்லப்பட்டிருக்கின்றதோ என்று தெரியவில்லை. சில சமயத்தில் டெவலப்மெண்டு கவுன்ஸிலில் ஒரு 'நான்-அஃபீஷல்' இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டு இருக்கின்றது. தமிழகத்தில் அஃபீஷல்கள் இருக்கின்றார்கள். எனவே என் கருத்து என்னவென்றால் எப்படி நமது மின்சார வாரியத்தில் ஒரு 'நானஃபிஷல்' இல்லாமல் அஃபீஷல் இருப்பதால்தான் கொள்கை ரீதியாகக் குறைகள் சொல்லப்பட்டாலும் தனிப்பட்ட இடத்திலிருந்து குறைகள் வருவதற்கு இடம் குறைவாக இருக்கின்றதோ அந்த வகையில் கூடியவரையில் வாரியங்களில் அதிகாரிகள் இருந்தால் நலமாக இருக்கும்.

இன்று அதிகாரிகளைப் பொறுத்தவரையில் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் என்று இருக்கின்றார்கள். பொதுவாக அவர்கள் சீக்கிரம் தெளிவாக விஷயங்களைக் கிரகித்துக் கொள்ளத்தக்க தன்மை பெற்று இருப்பவர்கள் என்ற காரணத்தினால் அவர்கள் திறமைசாலிகள் என்று அவர்களை ஐ.ஏ.எஸ். என்று போட்டு வருகின்றார்கள், நாமும் ஐ.ஏ.எஸ்.-க்கு அனுப்பி வைக்கிறோம்.

எனவே, இந்த அதிகாரிகள் அல்லது அவர்களுக்கு ஈடாக உள்ளவர்கள் இந்த வாரியங்களின் பொறுப்புக்களில் இருக்கின்றார்கள் என்றால் அவர்கள் மிக அனுபவம் உள்ளவர்களாகவே இருக்கலாம். இது இந்த மசோதாவிற்கு அப்பாற்பட்ட விஷயம் என்று இருந்தாலும் இந்தக் கருத்தை அரசு சீரியஸாக யோசிக்க வேண்டும் என்று நினைக்கிறேன். நான்-அஃபீஷல் தான் இருக்க வேண்டும் என்றால், அப்படிப்பட்ட முறையில் ஒரு மசோதாவின் பேரிலே பொதுவாக விவாதம் நடத்த வேண்டும் என்பது என் கருத்து.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** துணைத் தலைவரவர்களே, கம்யூனிஸ்டு கட்சியின் சித்தாந்தம், மக்கள் பிரதிநிதிகள்தான் ஒவ்வொரு கட்டத்திலும் இருக்க வேண்டும் என்பதாகும். பொதுவாக அதிகாரிகள் இடம் பெறுகின்றதை அவர்கள் விரும்பமாட்டார்கள். அதைத் தங்கள் 'தியரி'யாக வைத்துக் கொண்டு



இருக்கின்றார்கள். இப்போது இந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் மூன்று பேர் இருக்கின்றார்கள் என்பதற்காக எல்லா இடத்திலும் அதிகாரிகள்தான் இருக்க வேண்டும் என்பது எப்படி முறையாகும்?

**திரு. கே. டி. கே. தங்கமணி:** நன்றி. நான் சொல்ல விரும்புவது, அந்தத் துறையில் நிபுணத்துவம் பெற்றவர்கள்தான் தலைமையில் இருக்க வேண்டும் என்பதாகும். ஹௌஸிங் போர்டுக்குத் தலைவர் என்றால் கட்டிடத் துறையில் ஒரு 'எக்ஸ்பீரியன்ஸ்டு' நபராக அங்கே இருக்க வேண்டும். He may be a non-official அபீஷியல்ஸ் தான் இருக்க வேண்டும் என்று 'க்ளாமர்' ஒன்றும் இல்லை. இப்படி நல்ல எக்ஸ்பீரியன்ஸ்டு ஆட்களைப் போட்டால் அரசுக்கு உதவிகரமாக இருக்கும் என்ற கருத்தில்தான் சொன்னேனே தவிர இதில் அரசியல் ஆதாயம் பெற வேண்டும் என்றோ அல்லது அரசியல் பாயிண்ட்டை 'கெய்ன்' பண்ண வேண்டும் என்றோ இதைச் சொல்லவில்லை.

ஒரு குறிப்பிட்ட வாரியம் என்று இருக்கும்போது அந்த வாரியத்தில் அபீஷியல்ஸ்தான் இருப்பார் என்று சொல்லியிருக்கிறோம். நானபீஷல்லையும் போட்டிருக்கலாம். அதில் நான் குறை சொல்லுவதாக நீங்கள் நினைத்துக்கொள்ளக்கூடாது. அப்படிப் பேசக்கூடியவன் இல்லை நான். பொதுவாக அப்படி வந்தால் நன்றாக இருக்கும். நானபிஷியல் என்று இருந்தால் ஒரு அபீஷலைப் போடுவதில் தவறு இருக்காது. சேர்மன் என்ற பொறுப்பில் உள்ளவர் ஒரு அபீஷல்தான் என்று இருந்தால் இன்னும் கொஞ்சம் நன்றாக இருக்கும். காரணம் என் போன்ற ஒரு அரசியல் வாதியை அப்படிப்பட்ட தலைமையில் போடுகின்றதைக் காட்டிலும் அந்தத் துறையில் நிபுணத்துவம் உள்ள ஒருவரை—ஒரு எஞ்சினீயர் அல்லது ஒரு டாக்டர் என்று சம்மந்தப்பட்ட ஒருவரைப் போட்டால் அவர் அந்தத் துறைக்கு, வாரியத்திற்குக் 'காண்ட்ரிப்யூட்' பண்ணுவது அதிகமாக இருக்கும்.

அது மட்டுமில்லாமல் வேறு ஒரு அரசுத் துறையிலிருந்து ஒரு குறிப்பிட்ட வாரியத்திற்கு வருகின்றவர்களுக்கு பாதகம் ஏற்படக்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 மார்ச் 30

கூடிய சர்வீஸ் கண்டிஷன், ஷரத்து ஏதாவது இருந்தால் அதை நீக்குவதற்கும் அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். தங்களுக்கு இந்த வாரியத்திலிருக்கும் காரணத்தினால் பாதகம் ஏற்படும் என்ற சந்தேகம் இல்லாது பணியாற்றத்தக்க ஒரு சூழ்நிலை இருந்தால்தான் அந்த ஸ்தாபனம் நன்கு செயல்படும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இப்படிப்பட்ட ஸ்தாபனங்களிலே ஐந்தாண்டு காலத்திற்குக் குறைவாகப் பணியாற்றியிருந்து அவர்களுக்குப் ப்ரமோஷன் கிடைக்காமல் இருந்தால் அவர்கள் 'ஆப்ட்' பண்ணுமல் இருந்தாலும் அவர்களுக்கு இந்தச் சலுகைகள் கொடுக்கப்பட வேண்டும். அவர்கள் இப்படி ஆப்ட் பண்ணுமல் இருந்த கால கட்டத்திற்குக்கூட கணக்கிலெடுத்துக் கொண்டு ப்ரமோஷன் கொடுத்தால் நன்முக இருக்கும் என்று தெரிவித்துக் கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* **திரு. செ. கந்தப்பன்:** சட்ட மன்றத் துணைத் தலைவரவர்களே, இந்த மசோதாவில் கொண்டு வந்திருக்கும் திருத்தத்தினை வரவேற்று சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

சுமார் பத்தாண்டு காலத்திற்கு முன்பு நம் மாநிலத்தில் பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை என்ற அமைப்பினை ஏற்படுத்தி அது பொதுப் பணித் துறையின் அங்கமாக இருந்து வந்தது. பின்னர் சுகாதாரத் துறையிலும் பின்னர் தனி வாரியமாக, தன்னுரிமை பெருத அரசு அங்கமாக இருந்து பின்னர் 1971-ல் தன்னுரிமை பெற்ற வாரியமாக ஆக்கப்பட்டது. வாரியமாக்கப்பட்ட அந்தக் காலத்தில் பொதுச் சுகாதாரப் பொறியியல் துறையிலிருந்த அவ்வளவு அலுவலர்களும்—அவர்களுடைய வசதி, வாய்ப்பு, சம்பளம் போன்ற இன்னபிறவற்றுக்கு உத்திரவாதம் அளிக்கப்பட்டு, உள்ள எதுவும் மறுக்கப்படாது என்ற முறையில், எந்த விதத்திலும் அவர்களுக்குப் பாதகம் ஆகாத வகையில் அவர்கள் வாரியத்தின் ஊழியர்கள் என்று கருதப்படுவார்கள் என்று அந்தச் சட்டத்தில் ஒரு ஷரத்து இருக்கின்றது.



1973 மார்ச் 30] * [திரு. செ. கந்தப்பன்]

இதற்குப் பிறகும் ஒரு சில அலுவலர்கள் அல்லது பொறியியல் அதிகாரிகள் அரசுத்துறைப் பணியிலேயே இருக்க விரும்புவார்களானால் அவர்களுக்கும் ஒரு வாய்ப்பினை அளிக்க வேண்டும் என்ற முறையில் அதற்கும் அந்தச் சட்டத்தில் ஒரு விதியிருக்கின்றது. ஒரு தேதியினைக் குறிப்பிட்டு, இந்தத் தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள் தாங்கள் புதிதாக ஏற்றிருக்கும் வாரியப் பணியிலிருந்து அரசுப் பணிக்கே திரும்ப விரும்பினால் அவர்கள் அரசுத் துறை ஊழியர்களாகக் கருதப்படுவார்கள் என்று 'ஆப்டிங் ஔட்' என்ற ஒரு முறை கொடுக்கப்பட்டு இருக்கின்றது. எனவே திரும்ப மாநில அரசு ஊழியர்களாகவே இருக்க வேண்டும் என்றால் திரும்பலாம், அல்லது வாரியத்தின் ஊழியர்களாக இருந்தால் ஏற்கெனவே எந்தெந்த உத்திரவாதங்களின் அடிப்படையில் இருந்தார்களோ அவைகள் எந்த வகையிலும் பாதிக்கப்படாது என்ற வகையில் தான் வாரியத்திலும் இருக்க வேண்டும் என்று சட்டம் சொல்லுகின்றது. அவர்கள் அரசு ஊழியர்களாக இருந்தபோது அவர்களுக்கு எந்தெந்தச் சலுகைகள் இருந்தனவோ அவற்றை பாதிக்கும் முறையில் விதிமுறைகளை வகுக்க முடியாது சட்டப்படி.

(திரு. நா. வீராசாமி தலைமை.)

எனவே, இன்றைக்கு பொதுப்பணித் துறையில் இருந்த ஊழியர்கள் வாரிய ஊழியர்களாக இருக்கிறார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப் போல இதில் ஒரு குழப்பத்திற்கு இடமில்லாமல், அவர்களிடையே கண்டிஷன் கொடுத்து சில குளறுபடிகள் உண்டாக்கிவிட்ட நெருக்கடி காரணமாக, அவர்களுக்கு சலுகை தர வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்தத் திருத்தத்தையே அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று அறிகிறேன். நான் இந்தத் திருத்தத்தை வரவேற்கிறேன்.

அதன் அடிப்படையில் இங்கே ஒருசில கருத்துக்களைச் சுட்டிக் காட்டுவது பொருத்தமாக இருக்கும். இந்த வாரியமும், இன்னும் இதுபோல பல வாரியங்களும் ஏற்பட்டதன் காரணமாக இன்றைக்கு நாட்டில் சிவில் என்ஜினியரிங் எடுத்துப் படித்த

[திரு. செ. கந்தப்பன்] [1973 மார்ச் 30

பொறியாளர்கள் அத்தனை பேர்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அவர்களில் ஒருவர் கூட தமிழ் நாட்டில் வேலையில்லாமல் இல்லை என்கிற நிலை உருவாகியிருக்கிறது. மெக்கானிகல் என்ஜினியர், எலெக்ட்ரிகல் என்ஜினியர் ஆகியவர்களிடையே இன்னும் சிலர் வேலையில்லாது இருக்கலாம். சிவில் என்ஜினியர்களைப் பொறுத்தவரை ஒருவர் கூட இல்லை என்கிற நிலைமை இந்த வாரியங்களால் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, யாரும் இந்த வாரியப் பணிக்குக் கட்டாயப்படுத்தி அனுப்பப்படவில்லை. இங்கே வந்து பணியாற்ற விரும்பியவர்கள் யாரும் தடுக்கப்படவுமில்லை. வாரியத்திலே இருக்கிற பொறியாளர்கள் தங்கள் தங்கள் விருப்பப்படியேதான் பணியாற்றுகிறார்கள். அப்படி இருக்க யாரோ சுவரொட்டிகள் அடிக்கிறார்கள் என்பதற்காக பொறியாளர்களின் நிலைமை பாதிக்கப்பட்டிருப்பதாக இங்கே சித்தரித்துக் காட்டப்படுவது தான் வியப்பாக இருக்கிறது.

திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் மசோதாவைப் படிக்கவில்லை, மசோதாவுக்கான திருத்தத்தைக் கூட படிக்கவில்லையோ என்று அஞ்சுகிறேன். இந்த வாரியங்களினால் வேலை இல்லாமல் இருந்த சிவில் துறை பொறியாளர்கள் அனைவருக்கும் வேலை கிடைத்திருக்கிறது. இதன் காரணமாக பொதுப்பணித் துறையிலும் ஸ்டாக்னேஷன் இல்லாமல் இருக்கிறது. இன்னும் சில பிரிவுகளில் ஏற்றத்தாழ்வு இருக்கலாம். ஒத்துக் கொள்கிறேன். அது சட்டச் சிக்கல்.

இது அன்னியில் பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களே ஒரு கருத்தைச் சொன்னார்கள். இதுபோன்ற வாரியங்கள், பொதுப் பணித்துறை ஆகியவற்றில் இருக்கும் பொறியாளர்கள் எல்லோரும் சேர்ந்து எத்தகைய ஒரு அமால்கமேஷன் முடிவை தீர்மானித்துக் கொடுத்தாலும் அதை அரசாங்கம் ஒத்துக் கொள்ளும் என்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதை ஒட்டிய கருத்து ஒன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன்.



1973 மார்ச் 30] [திரு. செ. கந்தப்பன்]

இன்றைக்குப் பொதுவாக பல துறைகளிலும் ஸ்பெஷலைசேஷன் வளர்ந்து கொண்டிருக்கிறது. இங்கே எல்லாம் பணியாற்றுகிறவர்கள் சிவில் என்ஜினியர்கள் தான் என்றாலும் குடிசைமாற்று வாரியம் என்றால் பில்டிங் துறையிலும், பொதுச் சுகாதார—குடிநீர் வாரியம் என்றால் வடிகால் திட்டம் போன்றவற்றிலும் ஒரு தனித் திறமை வளர்க்கப்பட்டு வருகிறது. அரசினர் உதவியுடன் இந்தத் துறையில் பல்வேறு சிறப்புப் படிப்புகளை கிண்டியிலும், வெளி மாநிலங்களிலும் எம்.எஸ்ஸி., பி.எச்டி போன்ற ஸ்பெஷலைசேஷன் செய்ய வலியுறுத்தி வருகிறோம்.

இந்தச் சூழ்நிலையில் ஹைவேஸ் டிபார்ட்மெண்டில் பத்து ஆண்டு பணியாற்றிய ஒருவரை குடிநீர் வாரியத்தில் கொண்டு வந்து போட்டால், அல்லது பத்து வருஷம் குடிநீர் வாரியத்தில் பல துறைகளில் ஸ்பெஷலைஸ் செய்தவர்களை ஹைவேஸில் போடுவதனால் திறமையாகச் செயல்பட முடியாது என்று பொறியாளர்களே கருதுகிறார்கள். நாளுக்குநாள் ஸ்பெஷலைசேஷன் வளர்ந்து வருகிறது.

அமைச்சர் அவர்கள் இதைக் கருத்தில் கொண்டு ஒரு முடிவு எடுக்க வேண்டும். இந்த வாரியங்களினால் ஏற்பட்டு வருகிற வாய்ப்பு, வளர்ச்சிகளை எல்லாம் கவனிக்காது, அரசியலில் ஒரு பந்தலோடு சுவரொட்டிகளின் நிலையைப் புரிந்துகொள்ளாது இருப்பதற்கு வருந்தி, நான் இந்த மசோதாவை மனப்பூர்வமாக வரவேற்று அமைகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** பாயின்ட் ஆப் பெர்சனல் எக்ஸ்ப்ளனேஷன். அம்மையார் அவர்களுக்குப் புரியவில்லை என்றால் வாரியத் தலைவர் அவர்களுக்குப் புரிந்துகொள்ள இருப்பது போன்ற வாய்ப்பு எனக்குக் கிடையாது. அதில் தப்பும் கிடையாது. வாரியத்தில் வந்து வேலை செய்வதற்கு விரும்புகிற யாரும் தடுக்கப்படவில்லை என்றார்கள். இங்கே தேவைப்படுவது இருபது, முப்பது பேர்கள் இருக்கலாம். அங்கே 200 பேர்கள் இருக்கிறார்கள் என்றால் அவர்கள் இங்கே வருவதற்கு தங்கள் விருப்பத்தைத் தெரிவித்தாலும் இவர்களால் எடுத்துக்கொள்ள முடியுமா? . . .

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : பர்சனல் எக்ஸ்ப்ளனேஷன் என்று மறுபடியும் ஒரு ஸ்பீச்சே கொடுத்தால், அதற்கு அவர் பதில் சொல்ல, அப்படியே விவாதம் வளரும். . . . இதை நான் அனுமதிக்க முடியாது. அடுத்து திரு. ஆர். பொன்னப்ப நாடார்.

THIRU R. PONNAPPA NADAR : Mr. Chairman, Sir, I would like to offer my remarks so far as this Bill is concerned.

Sir, there are a plethora of Boards under this Government. I do not want to embark upon any discussion regarding the constitution of the Board or its functioning. But suffice it for me to say that the Board is a legal entity which has been created under a Statute and I think there is some amendment made to Section 30 of the principal Act. In the statement of objects and reasons the Government have set out the reasons thus in their note :

"The Government have carefully considered the matter and decided to amend section 30 of the Act so as to enable an officer or employee, who had given the option under the above section to remain as Government servant but who continued to serve in connection with the affairs of the Board to withdraw the option within sixty days from the date of the commencement of the proposed amending legislation so that he can become a servant of the Board."

Sir, the service of the Board is constituted as a separate legal entity and the promotion opportunities and employment of staff are treated separately. But what I would venture to suggest is that the whole Public Works Department, Public Health Engineering Department and the Highways Engineering Department—all these things should be taken as a whole and a State list should be empanelled, so that if any Officer wants to serve this Board he can be there by virtue of deputation. He need not be a servant of the Board to all intents and purposes.

I think there may be no legal impediment or flaw in any officer of the Public Health Engineering Department to serve in this Water and Drainage Board. I would also venture to suggest that any Officer who would be willing to serve the Water and Drainage Board should be an expert in that department because several crores



of rupees is being spent on this Water and Drainage Board. I think it is an important institution which caters to the needs of the whole of Tamil Nadu and there are numerous schemes and for manning these schemes and for execution and implementation of these schemes expert officers are needed.

Sir, formerly the Public Health Engineering Department was separated, bifurcated from the other Engineering Departments and on account of the volume of work and the immensity of the contribution which they have to make to the nation, separation has been made. Now Government thought it fit to have compact Boards. That is a policy of the ruling party.

So far as we are concerned, we do not very much advocate the creation of numerous Boards or super-Governments because they are all super-Governments, if I may use that expression. That is the reason why several criticisms have been levelled against the composition of the Board and the way in which promotions have been given in the Board. It should not be a ground for dispensation of favour for a few Officers who have put in very few years of service.

So much so, their counterparts working in the Department for a considerable length of time have got some grouse against these people. That is the reason why certain members expressed the view and Thirumathi T. N. Ananthanayaki gave vent to the feelings of the Officers who are working in the Public Works Department through her speech. Not that it is an accusation against the Government or that she wanted to find fault with the working of this Board. But to me it appears that the Officers who are empanelled or appointed in that Board should not be treated as a separate entity. They can be on deputation, as I have mentioned earlier and their seniority and their ranking in the parent department can be kept alive. But by this arrangement we are taking away that valuable right which has been vested in them.

Now sixty days time has been given as per the amendment to section 30. After the sixty days time, the person becomes the servant of the Board. The conditions of service, and framing of ad hoc rules are matters which are starting at the Officers and staff who are willing to opt. . . .

I understand that these rules have not yet been framed. Many Officers are apprehensive of their future. That is why some view it with favour and others view at it with disfavour. There is considerable force in their argument. A State list should be drawn up.

I am in full agreement with the view reiterated that there should not be any watertight compartment in this regard. The Tamil Nadu Water and Drainage Board is a small Board. So far as the Public Works and the Public Health Engineering Departments are concerned they are big departments.

The vistas of promotion will be more compared to the opportunities in the Drainage Board. The number of years of service put in the Public Works Department and Public Health Engineering Department should also be taken into consideration. If necessary, the people who have put in sufficient number of years of service in the P.W.D. or Public Health Engineering Department should be appointed by requisitioning their services. Their vast experience could be utilised by the Board. This is the suggestion worthy of acceptance and if the Hon. Minister bestows his thought, I do not think there will be any difficulty in accepting this suggestion which I am making.

The notified date has also been given. The Government have specified the 22nd July 1971 as the notified date. In the matter of promotion, there has been certain paper promotions and some rumblings here and there. No doubt promotions have been given to people who are far junior to them in the parent department. This is a matter for the Board and the Officer to decide.

I do not want to embark upon any discussion or encroach upon their right to do so. I would once again say that there are many Engineers who are not viewing them with favour. They are thinking that their days are not happy inasmuch as they opted for the Board. It is only the Junior Engineers are opting for the Board with the hope that they will have more promotional avenues. I think that this amendment is unnecessary. The original system that was in vogue is much better. Once again I reiterate with all the emphasis at my command that I oppose this amendment. With these words, I conclude.





**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இது போன்ற மசோதாக்கள் வரும்பொழுது, மசோதாக்களைப் பற்றி பேசினால், நான் பதில் சொல்வதற்கும் எளிதாக இருக்கும். மற்ற வேலைகளைத் தொடர்வதற்கும் வாய்ப்பிருக்கும். இப்பொழுது பேசப்பட்ட கருத்துக்கள் எல்லாம் மசோதாவுக்கு சம்பந்த மில்லாத, பொதுவாக, வாரியங்களைப் பற்றியக் கருத்துக்களாக இருந்தன. வாரியத்தை ஆட்சேபிப்பதைப் பற்றி நான் அதிக விளக்கம் சொல்ல விரும்பவில்லை.

ஹாண்டே அவர்கள் ஆட்சேபிப்பதற்கு முன்னாலே, ஒன்றை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த அரசாங்கம் வந்ததற்குப் பின்னாலே,, இப்படி வாரியம் அமைப்பது என்ற புதிய கொள்கையை எடுத்தது. அதனுடைய பயன் என்ன என்பதை நாம் சிந்திக்க வேண்டும். ஏதோ தலைவர் என்ற எண்ணம்தான் வருகிறதே தவிர, வரிப் பணத்திற்கு அப்பாற்பட்ட நிதி வசதிகள் ஏராளமாக நமக்குக் கிடைக்கின்றன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதுதான் நமக்கு கிடைக்கிற பயன். அதோடு, அரசாங்கத்திலிருக்கிற ரெட் டேப்பிஸம்--சிவப்பு நாடா—முறைகள் அப்புறப்படுத்தப்பட்டு, வேகமாகக் காரியங்கள் நடைபெறுகின்றன. அதை ஆட்சேபிப்பது சரியல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மசோதாவைப் பொறுத்த அளவுக்கு இப்படி வாரியங்கள் அமைக்கப்படும்போது, அங்கு பணி புரிகிறவர்கள் அந்த வாரிய சட்ட விதிகளுக்குள்ளே வரவேண்டும். இதுதான் நாம் கொண்டு வந்திருக்கிற முறை. அப்படி அவர்கள் வந்து கொள்வதற்கு ஒரு வாய்ப்பு கொடுக்கிறோம். அதுபோல், இந்த வாரியத்திற்கும் வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

பல பேர் அந்த வாரியத்திற்கு வர வாய்ப்பு கேட்கிறார்கள். வேலைகள் துரிதமாக நடந்து, அதிகமான அளவுக்கு புரமோஷன் வாய்ப்பு கிடைத்து, அவர்கள் பெறுகிறார்கள். முதலில் அளிக்கப் பட்ட அந்த வாய்ப்பை பயன்படுத்தாத சிலரும் இந்த வாய்ப்பு பெறுவதைப் பார்க்கிறார்கள். முதலில், சேராமல் போய் விட்டோம். ஆகவே, இன்றைக்கு எங்களுக்குச் சில சலுகைகள் கிடைக்காமல் போய்விட்டது என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு உதவி செய்வதற்காக இந்தத் திருத்த சட்டம். அப்படி சிலர் அந்த வாரியத்திலே உள்ளவர்கள் அந்த வாரியத்திலேயே இருப்பதற்கு

[திரு. செ. மாதவன்] [1973 மார்ச் 30

மீண்டும் அவர்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுக்க வேண்டும். வாய்ப்பு கொடுத்தால், அவாகளுக்கு சில சலுகைகள் வருகின்றன. அதற்காகத்தான் இந்த சட்டமே தவிர, இதிலே வேறு எந்தவிதமான தகராறும் கிடையாது.

இப்படி வாரியங்கள் அமைக்கும்போது, அதிலே வருகின்ற அலுவலர்களுக்கும், வாரியத்திற்கு வராத, பொதுத் துறையிலே இருக்கக்கூடிய, பொதுப்பணித் துறையிலோ, வேறு துறையிலோ இருக்கிற அதிகாரிகளுக்கும் வேறுபாடு இருக்கிறது என்ற கருத்தும் வலியுறுத்தப்படுகிறது. அது இயற்கை. அது இருக்க வேண்டாமென்று சொல்லிவிட்டால், இந்த வாரியங்களே அமைக்க முடியாது. வாரியங்களுக்கும் பல்வேறு துறைகளுக்கும் ஒரே சீனியாரிட்டி வைப்பது என்பது வேறு பிரச்சினை. அதற்குள்ளே நான் போக விரும்பவில்லை. ஆனால், அதனாலே பல சிக்கல்கள் ஏற்படும்.

இப்பொழுது தொழில் துறையை எடுத்துக் கொள்ளுங்கள். தொழில் துறைக்கு ஒரு வாரியம் அமைக்கும்போது, அங்கே சிலர் செல்லும்போது இந்த சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஆகவே, அரசு அலுவலரைப் பொறுத்த அளவுக்கு ஏதாவது ஒரு முடிவு எடுக்க வேண்டும். அரசுத் துறையிலே இருப்பவர்களுக்கும் சில 'பெனிபிட்ஸ்', வசதிகள் இருக்கின்றன. வாரியங்களுக்குச் செல்கின்றவர்களுக்கும் சில வசதிகள் இருக்கின்றன. எந்தத் துறைக்கு தாங்கள் செல்லவேண்டுமென்று அவர்கள் ஒரு முடிவு எடுக்க வேண்டும். அதற்கும் வழி இருக்கிறது. இந்தத் துறையிலேதான் இருக்க வேண்டும், திருப்பிச் செல்லக் கூடாது என்று நாம் சொல்லவில்லை. எதிலே வாய்ப்பு இருக்கிறது என்று கருதுகிறார்களோ அதிலே சேருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த வாய்ப்பைப் பயன்படுத்திய பிறகு, இதிலே இருந்தால் வசதி, அதிலே இருந்தால் வசதி என்று குழப்பம் ஏற்படுத்த முனையக் கூடாது.

இங்கே, வாய்ப்பை பயன்படுத்த தவறிவிட்டார்கள். முன்பு தவறிவிட்டாலும், அவர்களுக்கு நன்மை. கிடைக்க வேண்டுமென்ற முறையிலே; இன்னும் 60 நாட்களுக்குள் அந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று அளிப்பதற்காகத் தான் இந்தத் திருத்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறோம்



1973 மார்ச் 30]* [திரு. செ. மாதவன்]

என்று சொல்லிக்கொண்டு, இந்த நீண்ட விவாதத்திற்குப் பிறகாவது இதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. நா. வீராசாமி:** பேரவை முன்னுள்ள கேள்வி.

"தமிழ் நாடு 1973-ம் ஆண்டு குடிநீர் வழங்கு, வடிகால் வாரியத் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 5/73 ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது. பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, "தமிழ் நாடு, 1973-ம் ஆண்டு, குடிநீர் வழங்கு, வடிகால் வாரியத் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 5/73) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும் என்று கோருகிறேன்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**(இ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்டமுன் வடிவு எண் 7/73.)**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1973ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு* (சட்டமன்றப் பேரவைச் சட்ட வரைவு எண் 7/1973) பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று முன்மொழிகிறேன்.

---

*26-3-1973-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1973 மார்ச் 30

இச்சட்ட முன்வடிவை முன்மொழிகையில், நகராட்சிகளில்
உள்ள இரட்டை உறுப்பினர் வார்டுகளை நீக்கி விடவும்
அரிசனங்கள், பழங்குடியினர் மற்றும் பெண்டிருக்காகத்
தொகுதிகள் ஒதுக்கவும் வகை செய்யும் முறையில் தமிழ் நாடு
1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (தமிழ்நாடு சட்டம்
5/1920) சட்டத்தைத் திருத்த இச்சட்ட முன்வடிவு விழைகிறது
என்பதைக் குறிக்கொள்கிறேன். தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு
மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920)
43-வது பிரிவின்கீழ் நகராட்சிகளில் இரட்டை உறுப்பினர்கள்
வார்டுகள் உள்ளதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர்.
மாநிலச் சட்டமன்றங்களைப் பொறுத்தவரையில் சட்ட மன்றப்
பேரவை இரட்டை உறுப்பினர் தொகுதிகளை நீக்கி விட்டு
அவற்றிற்குப் பதிலாக ஓர் உறுப்பினர் தொகுதிகளை ஏற்படுத்து
வதற்கு 1961 ஆம் ஆண்டு இரட்டை உறுப்பினர் தொகுதிகள்
நீக்கிவிடுதல் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1961) 3-வது பிரிவு
வகை செய்கிறது என்பதை இது தொடர்பாகக் குறிப்பிட
விரும்புகிறேன்.

இதைப்போலவே, தற்போதுள்ள இரட்டை உறுப்பினர்
வார்டுகளை ஓர் உறுப்பினர் வார்டுகளாக மாற்றவும், எந்த வார்டு
ரிசர்வ் வார்டாக இருக்க வேண்டும் என்பதை முடிவு செய்ய
அரசுக்கு அதிகாரம் அளிக்கவும் வகை செய்ய முடிவு செய்யப்
பட்டுள்ளது.

நகராட்சிகளில் தற்பொழுதுள்ள இரட்டை உறுப்பினர்கள்
வார்டுகளை நீக்கிவிட்டு ரிசர்வ் இடங்களுக்காகவும் பெண்டிருக்
காகவும் தனித் தேர்தல் வார்டுகளை ஏற்படுத்துமாறு சில
நகராட்சி மன்றங்களும் இப்பொழுது அரசைக் கேட்டுக்
கொண்டுள்ளன.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

நகராட்சி மன்றங்களுக்கான அடுத்த சாதாரணத் தேர்தல்கள்
1974 ஏப்ரல் இறுதியில் நடக்கவிருக்கின்றன. வார்டுகள் பிரிப்பது
தொடர்பாக பல்வேறு நகராட்சி மன்றங்களின் செயற்குறிப்புகள்



1973 மார்ச் 30] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

வரப்பெற்று அவை இப்போது ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. எனவே, ஓர் உறுப்பினர் வார்டுகள் ஏற்படுத்தும் வகையில், பல்வேறு நகராட்சி வார்டுகளில் எல்லைகளை வரையறுக்க அரசு இப்பொழுதே நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம் என்று கருதப்படுகிறது. எனவே, நகராட்சிகளின் இரட்டை உறுப்பினர் வார்டுகளை நீக்கிவிடவும் நகராட்சி வார்டுகளின் எல்லைகளை வரையறுப்பது பற்றிய அரசின் செயற்குறிப்புகள் தொடர்பாக முறையீடுகள் செய்து கொள்ள பொதுமக்களுக்கு வாய்ப்பு அளிக்க வகை செய்யவும், தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு 5-வது சட்டத்தின் 43-வது பிரிவைத் திருத்தக் கருதப்பட்டுள்ளது.

ஒரு நகராட்சியில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வார்டு களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர், அவ்வாறு தேர்ந்தெடுக்கப் பட்ட நாளிலிருந்து ஏழு நாட்களுக்குள் தான் எந்த வார்டின் உறுப்பினராய் இருக்க விரும்புகிறார் என்பதைத் தெரியப் படுத்தவும். அதனால் பிற வார்டுகளில் ஏற்படும் காலியிடங்களுக்குப் புதிய தேர்தல்கள் நடத்தி உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது.

நகராட்சித் தேர்தல்களில், ஆங்கிலோ-இந்தியர்கள், அரிசனங்கள், பெண்டிர் ஆகியோருக்கு இடங்கள் ஒதுக்குவதற்கு விதித் துறை உள்ளது என்பதையும் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். நகராட்சி நிர்வாகத்தை மாற்றியமைப்பதற்கான 1949-ல் அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழு செய்த ஏனைய பரிவுரைகளோடு, வகுப்பு வேறுபாடுகள் ஒழிக்கப்பட்டு விட்டதால் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் வகை செய்யப் பட்டுள்ளவாறு அரிசனங்கள், பழங்குடியினர் ஆகியோரைத் தவிர வேறு எந்த வகுப்பினருக்காகவும் தேர்தல்களில் இடம் ஒதுக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதியது.

1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 4/1919) 5-வது பிரிவில் கூறியுள்ளவாறு முஸ்லீம்கள், இந்தியக் கிறிஸ்தவர்கள், ஆங்கிலோ-இந்தியர் ஆகியோருக்கு இடங்கள் ஒதுக்குவது, இந்திய அரசியலமைப்பின் 14-வது பிரிவின் விதித்துறைகளுக்கு முரணானது என்று சென்னை உயர்நீதி

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்][1973 மார்ச் 30

மன்றமும் தீர்ப்பளித்துள்ளது. எனவே, 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 4/1919) முஸ்லீம்கள், ஆங்கிலோ-இந்தியர்களுக்கு இடம் ஒதுக்குவது தொடர்பான விதித்துறை விட்டுவிடப்பட்டது. மேற்சொன்ன வற்றால் ஆங்கிலோ-இந்தியர்களுக்கு இடம் ஒதுக்குவது தொடர்பான தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) விதித்துறைகளை விட்டு விடுவதென்று 1961 ஆம் ஆண்டிலும் மீண்டும் 1966-லும் கருதப்பட்டது. ஆனால், திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட வில்லை. மேற்சொன்ன விதித்துறையை நீக்க இப்போது வாய்ப்பு கிட்டியுள்ளது. அரிசனங்களுக்கும் பெண்டிருக்கும் இடங்கள் ஒதுக்குவதற்கு ஏற்கனவே வகை செய்யப்பட்டிருப்பதைத் தவிர, பழங்குடியினர்களுக்கும் இடங்கள் ஒதுக்குவதற்கான விதித் துறையைச் சேர்த்துக்கொள்ள கருதப்படுகிறது.

இவை கூறி, பிரேரணையை இம்மன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

ந.ப. 12-00 **திரு. என். கே. பழனிசாமி:** சார், மத்தியான செஷனுக்கு காப்பி வாங்கிக் கொடுத்தால்கூட 'கோரம்' இருப்பதில்லை. பட்ஜெட் முடிந்து விட்டது. பில்கள் இருக்கின்றன, மத்தியானம் இல்லாமல் காலை நேரத்திலேயே வைத்துக்கொண்டால் நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** மத்தியானம் தேவையில்லை, காலையிலேயே முடித்து விடுவது நல்லது. நாங்கள் எல்லாம் களைப்போடு இருக்கிறோம். நீண்ட நாட்களாக வேறு வேலைகளைக் கவனிக்க முடியாமல் இங்கே இருக்கின்றோம். காலையிலேயே முடித்து விடலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதோடு அமைச்சர்கள் எல்லாம் கவுன்சிலுக்குப் போகவேண்டும். சீக்கிரம் முடித்துக்கொள்ளலாம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவானது வரவேற்கத் தக்கது என்றுதான் கருதுகிறேன்.



1973 மார்ச் 30] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

ஏனென்றால், தற்போதைய நிலைமையிலே சில நகரங்களிலே, கோவையாக இருந்தாலும் சரி, இன்னும் பல நகரங்களாக இருந்தாலும் சரி, இரண்டு மெம்பர்கள் ஒரு வார்டுக்கு இருக்கிற நிலைமை இருந்தது. யார் அந்த வார்டைக் கவனிப்பது என்ற குழப்பமான நிலைமை இருந்து வருகிறது, தேர்தல் முடிந்த பிறகு. ஆனால் தேர்தல் முடிவதற்கு முன்பும் தேர்தல் நேரத் திலேயும் பல சிக்கல்களைப் பார்க்கிறோம்.

அமைச்சர் அவர்கள் விளக்கத்திலே ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். எப்படி, யார் யார் எந்த வார்டுகளுக்கு உறுப் பினர்களாக இருக்கவேண்டுமென்று விண்ணப்பத்தைப் போட்டு அவர்கள் விருப்பத்தைத் தெரிவிக்கவேண்டுமென்று சொன்னார்கள். அதிலேயும் ஒரு குழப்பம் இருக்கிறது. இரண்டு பேர்களும் ஒரு வார்டு வேண்டுமென்று சொல்கிறார்கள் என்றால் அப்பொழுது எப்படி முடிவு எடுக்கப்படும் என்ற சிக்கல்தான் வரும், மீண்டும் குழப்பங்கள் எல்லாம் வரத்தான் செய்யும்.

நகராட்சியாக இருந்தாலும், மாநகராட்சியாக இருந்தாலும் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடைபெறவேண்டு மென்று இருக்கிறது. ஆனால், அமைச்சர் நாவலர் அவர்கள் அடிக்கடி திருத்த மசோதாக்கள் இங்கு கொண்டுவந்திருக் கிறார்கள். எக்ஸ்டன்ஷன், எக்ஸ்டன்ஷன் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். பெரிய மெஜாரிடி இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு நிறைவேற்றிக்கொண்டு போகலாம், அதிலே ஆட்சேபணையில்லை. ஆனால் முதலிலே இருக்கக்கூடிய சட்டத்திற்கு விரோதமாக இப்படி நீட்டிக்கொண்டே போவது கண்டிக்கத் தக்கது என்பதை இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாதாரணமாக ஒரு சட்ட மன்ற உறுப்பினர் என்றால் 5 ஆண்டுகள், மாநகராட்சி உறுப்பினர்கள் என்றால் 3 ஆண்டுகள் என்று தான் இருக்கிறது. சென்னை கார்ப்பரேஷன் உறுப்பினராக இருப்பது தேவலை என்றுகூட நான் சொல்லியிருக்கிறேன். உங்களுக்கு 3 ஆண்டுகள் தான் என்றாலும்கூட ஐந்து ஆண்டுகள் வந்துவிடும். எங்களுக்கு 5 ஆண்டுகள் என்று இருந்தாலும்கூட 3½ ஆண்டுகளுக்குள் தேர்தல் வந்துவிடுகிறது என்று

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1973 மார்ச் 30

சொன்னேன். இப்படி நீட்டிப்பதால் பலவித சிக்கல்களும், தொல்லைகளும் ஏற்படுகின்றன. இன்னும் நம்முடைய மாநக ராட்சித் தேர்தல்பற்றித் தெளிவாகச் சொல்லப்படவில்லை. அக்டோபர் மாதம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதையும் தெளிவாக்கவில்லை.

மாநகராட்சியிலே வேலை செய்யக்கூடியவர்கள் சுறுசுறுப்பாக வேலைசெய்ய வேண்டுமென்பதற்காகத்தான் இதைச் சொல் கிறார்கள் என்று பலரும் பேசிக்கொள்கிறார்கள். வேலை வாங்கு வதற்காக அவர்கள் சொல்லியிருக்கலாம், மீண்டும் தள்ளி வைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. இந்தத் திருத்த மசோதாவுக்குப் பதில் சொல்கிறபோது தெளிவாக அவர்கள் நிலைமைகளைச் சொல்லவேண்டும். திருத்தங்கள் வரவேற்கத் தக்கதுதான்.

அரிசனத் தோழர்களுக்கு டிவிஷன்கள் எத்தனை சதவீதம் ஒதுக்கப்பெறும் என்பதை இப்பொழுதே சொல்லவேண்டும். பிறகு ஏன் சொல்லவேண்டும்? இப்பொழுது ஏன் சொல்லவில்லை? இத்தனை சதவீதம் அவர்களுக்கு, இத்தனை சதவீதம் ஆங்கிலோ-இந்தியர்களுக்கு என்று ஏன் இப்பொழுது சொல்லவில்லை. ரூல்ஸ் கமிட்டிக்கு இது போகவேண்டுமா? ரூல்ஸ் கமிட்டிக்கு ஏன் போகவேண்டும்? இப்பொழுதே சொல்லிவிடவேண்டும். அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது இந்த விவரங்களையும் தெளிவாகச் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM: Mr. Deputy Speaker, Sir, I welcome the amendment to the Tamil Nadu District Municipalities Act.

But before giving my full support to it, I would like to know one thing. So far as the Corporation is concerned, as mentioned by the Hon. Minister for Education, there is co-option of Scheduled Castes and women after the elections. In this Bill, a different idea is put forward. For the existing double-member ward, the Government proposed to bring forward an amendment to have one member for each ward whether it is general or reserved.

I think if the interests of the community as a whole have to be served in the municipility, it is better that the system that is



1973 மார்ச் 30] [Thiru K. M. Subramaniam]

followed both in Madurai and Madras Corporations is adopted here also. If a particular community is predominant in any particular ward and if a representative is useful to the community, I am sure that community will certainly help him to get elected whether he belongs to the Scheduled Castes or not.

For instance, if there are 20 Members in a local body, certain percentage of them must be women or persons belonging to Scheduled Castes or Scheduled Tribes. If that number is not elected, the municipal council has the right, after the first meeting of the election, to co-opt the required number of women and persons belonging to Scheduled Castes and Scheduled Tribes. I leave it for the consideration of the Hon. Minister.

THIRU K. T. K. THANGAMANI: Mr. Deputy Speaker, Sir, I would like to make a few observations on this new amending Bill, namely, Bill No. 7 of 1973.

இந்த மசோதாவினுடைய நோக்கத்தைப்பற்றி மறுத்துச் சொல்வதற்கு எதுவும் இல்லை என்றாலும்கூட, இந்த அரசியல் சட்டத்தின் அடிப்படையிலே சட்டமன்ற, நாடாளு மன்ற தேர்தல்களுக்கெல்லாம் தனித் தொகுதியாகப் பிரிக்கப்பட்ட அந்த காலத்திலேயே இந்த முனிசிபாலிடி சம்பந்தமான சட்டத்தையும் திருத்தியிருக்கலாம் என்பதுதான் நான் சொல்ல விரும்புவது. இவ்வளவு காலத்திற்கு இதை ஒத்தி வைத்த தனுடைய காரணம் எனக்குத் தெரியவில்லை.

அடுத்தாற்போல தேர்தல் நடக்கிறபோதாவது இந்த மாதிரியான தனித் தொகுதி இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். இதில் வரக்கூடிய சிக்கல் என்னவென்று சொன்னால், இன்றைக்கு சட்ட மன்றத்திற்கோ அல்லது நாடாளுமன்றத்திற்கோ தனித் தொகுதி பெண்களுக்காக இல்லை. இந்த நகர சபைகளுக்குத்தான் நாம் பெண்களுக்காக தனித் தொகுதி வைத்திருக்கிறோம். காரணம், பஞ்சாயத்திலும், பஞ்சாயத்து யூனியனிலும் கூட பெண்கள் இல்லாமல் இருப்பார்களானால் அங்கு பெண்களைச் சேர்த்துக்கொள்ளலாம் என்ற நியதி இருக்கிற காரணத்தினால் ஸ்தல ஸ்தாபனங்களில் பெண்கள் தனியாகச் செயல்படுவதற்கு உதவிகரமாக இருக்குமென்ற முறையில் வைத்திருக்கிறோம். அதன் காரணமாக பொதுவாக இருக்கத்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 மார்ச் 30

கூடிய தொகுதிகளில் பெண்கள் போட்டியிடாத நிலைமை இருந்து விடக்கூடாது. ஆங்காங்குகூட பெண்களுக்குத் தனித் தொகுதி இருந்தாலும் பொதுத் தொகுதியில்கூட பெண்கள் போட்டியிடுவதற்கு உற்சாகப்படுத்தப்பட வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொரு விஷயம் நான் சொல்ல விரும்புவது என்னவென்றால் ஏற்கெனவே இருந்த சட்டத்திலும், இப்போது கொண்டு வந்திருக்கிற திருத்த மசோதாவிலும் மொத்த உறுப்பினர்கள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்களோ அதில் 4-ல் 1 பகுதி ரிசர்வேஷனாக இருக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. என்னுடைய கருத்து 4-ல் 1-க்கு மேல் இருக்க வேண்டுமேயொழிய 4-ல் 1-க்கு குறையாத அளவிற்குப் பார்க்கவேண்டுமென்பது எனது கருத்தாகும்.

(திரு. நா. வீராசாமி தலைமை)

பெண்களுக்கும், ஷெட்யூல்ட் காஸ்டுக்கும், ஷெட்யூல்ட் டிரைப்ஸுகளுக்கும் போதுமான பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும். சில இடங்களில் என்ன ஏற்படும் என்று சொன்னால் ஏற்கெனவே இருக்கக்கூடிய முறையில் டபிள் மெம்பர் சீட் கம்மியாக இருந்தது. அந்த முறையில் அதே மாதிரி இப்போதும் செய்யவேண்டும். ரூல்ஸ் தயார் பண்ணக் கூடிய காலத்தில் எந்த எந்த முனிசிபாலிடியிலே எத்தனை உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்று பார்த்து, உதாரணத்திற்கு 24 உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால் கண்டிப்பாக 6 பேர் ஷெட்யூல் காஸ்டுகளும், பெண்களும் இருக்கவேண்டும் என்ற முறையில் விதிகள் அமைக்கப்படவேண்டும். எப்படி ஷெட்யூல்ட் காஸ்டுக்கு 18 சதமானம் வேலை வாய்ப்பு என்று சொல்கிறோமோ, பேக்வார்டு கிளாஸுக்கு 31 சதமானம் வேலை வாய்ப்பு என்று சொல்கிறோமோ அந்த மாதிரி முறையில் பொதுப்படையாக 25 சத வீதத்திற்கு மேல் இல்லையென்ற நிலைமையை மாற்றி விதிகள் வரக்கூடிய காலத்தில் பின்தங்கிய ஷெட்யூல்ட் காஸ்டுகளுக்கும், பெண்களுக்கும் கண்டிப்பாக இத்தனை சீட் இருக்குமென்று சொல்லிவிட்டால் தொகுதிகளைப் பிரிக்கிறபோது தனித் தொகுதிகளைப் பிரிப்பதில் சர்ச்சைக்கு இடமில்லாமல் போய்விடும்.



1973 மார்ச் 30] [திரு. கே. டி. கே. தங்கமணி]

தனித் தொகுதிக்கு அதிகமாக மாறுபாடு வந்து பல தொகுதிகளை தனித் தொகுதியாக ஆக்கமாட்டார்கள். அதை என்கரேஜ் பண்ணவேண்டுமென்ற என் கருத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன். அதே மாதிரியாக ஏற்கெனவே பல ஆண்டுகளுக்குமுன் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தத் திருத்தம் மாதிரி வேறு ஏதாவது விடப்பட்டிருந்தால் அதையும் சீக்கிரமாகக் கொண்டுவரவேண்டும். அடுத்த தேர்தலுக்குள்ளாவது நகரசபை தேர்தலுக்குள்ளாவது ஏற்கெனவே கிடைத்த அனுபவங்கள், நமக்கு வந்திருக்கிற ஆலோசனைகள் அடிப்படையில் இன்னும் அதிகப்படியான முறையில் இரண்டு, மூன்று அம்சங்களைத் தொக்கியிருக்கிற மசோதாக்களைக் கொண்டு வர வேண்டும்.

இந்த மசோதாவைப் பொறுத்தவரையில் எப்படி அமுல் நடத்தப்படுகிறது என்பதில்தான் நமக்குள் விவகாரங்கள் ஏற்படலாமேயொழிய இந்த மசோதாவைப் பொறுத்தவரையிலே எதிர்ப்பதற்கு இல்லையென்று சொல்லி வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: Mr. Chairman, I would like to offer a few remarks regarding this Bill.

So far as the present amendment is concerned, there is nothing to object. But the way in which piecemeal amendments are brought forward is the main objection which I am going to raise.

Sir, so far as the District Municipalities Act is concerned, previously there has been an attempt to redraft the whole Act and change the pattern of the local administration. In that regard several attempts have been made and a draft Bill was also prepared and it was published. I think that has been now given the go-by.

This Government, when it assumed office said that they would also be bringing in a comprehensive legislation so that the working of the local bodies and municipalities would be geared up and toned up and the administrative machinery may function effectively and very well.

[Thiru R. Ponnappa Nadar] [1973 மார்ச் 30

Now, Sir, this is only to do away with the plural constituencies which were in existence and now single member constituency is being just introduced. It is a welcome measure no doubt. But the reservation that is given to Scheduled Castes and Scheduled Tribes and also the participation of women in an abundant measure in the membership of the local bodies will have to be encouraged because they will be in the know of things and I think there is some legislation to that effect as well.

But so far as women are concerned, many members are not willing to come forward because we know the pitiable plight in which many of the women members were subjected to when they become members of the local bodies. That is the reason why well-meaning and decent people feel funky about being members of the local bodies because the discipline that is prevalent in the local bodies is not congenial to the atmosphere. That is the reason why there has been so much apprehension and fear which is lurking in the minds of the women at large.

We may even say that women are equal to men and the Constitution does not make any distinction between man and woman. There is also the concept of equality prevalent so far as law is concerned, but in practice this concept of equality is always forgotten and the local bodies are now manned by male members rather than by women. That is the case in almost all the municipalities and other local bodies. That is the reason why a percentage should be earmarked and reservation for women should be made. That shoud be a must so far as local administration is concerned because they are concerned with the local administration and women bestow greater care on the problems that concern them in the day-to-day living and administration of the municipalities.

So much so, I would once again say that at least one-third should be earmarked. Here it is one-fourth—one-third should be earmarked for women. There should be such a healthy convention so far as the membership of the local bodies is concerned. The Government should take care to see that the next election is not being postponed on account of the ward delimitation and there shall not be any retarding of progress.



1973 மார்ச் 30] [Thiru R. Ponnappa Nadar]

I think the Government will agree with me when I say that the elections are overdue because we have been periodically extending the life of the local bodies. Any further extension would not be welcome. I think that it would be against public interest.

In the matter of division of the wards the whole thing should be expedited.

The Hon. Minister should also see that the Corporation election is held in October 1973 as has been announced. With these words, let me conclude, Sir.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, பொதுவாக மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த சட்ட திருத்த மசோதாவிற்காக ஆதரவு அளித்து தங்களுடைய கருத்துக்களை வழங்கியிருப்பதற்காக என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதனுடைய நோக்கம் ஆதரிக்கப்படுகிறது. இதிலே ஏற்படுகிற சங்கடங்களைப் பலரும் உணர்ந்திருக்கிறார்கள். இரட்டை உறுப்பினர் தொகுதிகளை வைத்துக்கொண்டிருப்பதன் மூலம் ஏற்படுகிற சங்கடங்களை உணர்ந்ததன் காரணத்தினால்தான் சட்ட மன்றத் தொகுதிகளிலேகூட தனித் தனித் தொகுதிகளாக வைக்கின்ற முறை வகுக்கப்பட்டது. அதையொட்டி, ஏற்பட்ட அனுபவத்தை ஒட்டி, இப்போது நகராட்சி மன்றங்களிலும் ஒரு உறுப்பினர் தொகுதிகளாக மாற்றுவது சிறந்தது என்ற காரணத்தினாலும், பல்வேறு நகராட்சி மன்றங்களிலிருந்து இந்த கோரிக்கை வந்ததன் காரணத்தினாலும் இதை நிறைவேற்றுவதற்கு இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

ஏற்கெனவே மதத்தின் அடிப்படையில் இடங்கள் ஒதுக்கப்படுகிற ஏற்பாட்டை உயர் நீதி மன்றம் மறுத்திருக்கிறது. அது மட்டுமல்லாமல் அரசியல் அமைப்பு சட்டமும் ஏற்றுக் கொள்ளவில்லை. அப்படி ஒதுக்கப்படுவதை நீக்கிவிட்டு இப்படி தாழ்த்தப்பட்டவர்களுக்கும், அரிசனங்களுக்கும் பெண்களுக்கும் மட்டுமே இடங்கள் ஒதுக்கிவைக்கிற அளவிற்கு வந்திருக்கிறோம். 4-ல் 1 பகுதியினருக்கு மேல் இருக்கக்கூடாது. ஆனால் 4-ல் 1 பகுதியினர் இருக்கவேண்டுமென்பது கட்டாயமில்லை.

ரிசர்வேஷன் நான்கில் ஒரு பகுதிக்கு மேல் போகக்கூடாது என்பதுதான். நான்கில் ஒரு பகுதி கட்டாயம் இருந்து தீர வேண்டுமென்ற நிலைமை இல்லை.

தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கப்படுகின்ற இடங்களை அந்தந்த ஊர்களில் இருக்கும் தாழ்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கையை மனதில் கொண்டு இரண்டு, மூன்று, நான்கு என்று விதியின் அடிப்படையில் ஒதுக்க இருக்கிறோம். டாக்டர் ஹாண்டே அவர்கள் கூறியது போல் அவர்களுக்கு அந்த விருப்பத்தைத் தரவில்லை. நாமே நிர்ணயிக்கிறோம். இது பெண்களுக்கான தொகுதி, இது அரிசனங்களுக்கான தொகுதி என்று நிர்ணயிக்கப்படுகிறது.

ஒருவரே நாலைந்து இடங்களில் போட்டியிடுவாரானால் இரண்டு மூன்று மாதங்கள் வரை எந்தத் தொகுதியை விடுகிறார் என்பதைத் தெரிவிக்காமல் இருப்பதைத் தடுக்க ஒரு வார காலத்திற்குள்ளாக எந்தத் தொகுதியை வைத்துக் கொள்ளுகிறார் என்று தெரிவிக்க வேண்டுமென்று செய்திருக்கிறோம்.

திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் சென்னை மதுரை மாநகராட்சிகளுக்கு இருப்பது போல் ஒவ்வொரு வார்டுக்கும் தேர்தல் நடத்தி, அதிலே 15 பெண்கள் என்று இப்போது நிர்ணயிக்கப்பட்டிருப்பது போல் வரவில்லை என்றால் கோவாப்ட் செய்து கொள்ளுவதற்கான விதிமுறைகள் இருப்பது போல் நகராட்சி மன்றங்களுக்கும் கொண்டு வரவேண்டுமென்று சொன்னார்கள். இப்போது நாம் ஓர் உறுப்பினர் தொகுதியாக ஆகும் நிலையில் அரிசன பெண்களுக்கு என்ற தொகுதியை ஒதுக்கி தேர்தலை நடத்தும் முறையில், அவர்களுக்கு நேரடிப் பங்கு இருக்க வேண்டுமென்ற நிலையில் அது தேவையில்லை.

காம்பரஹென்சிவ் பில் கொண்டு வருவது பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கேட்டார்கள். அதற்கு ஆயத்தப்படுத்தப்பட்டு வைக்கப்பட்டிருக்கிறது. அடுத்த தொடர் கூட்டத்தில் சட்டத்தைக் கொண்டுவர முன்னேற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அடுத்த தொடர்கூட்டத்தில் அதனைக் கொண்டு வரவேண்டுமென்ற எண்ணத்தோடு அரசு பணியாற்றி வருகிறது



இந்தச் சட்டமுன்வடிவின் நோக்கத்தை ஆதரிக்கும் வகையிலே முழு மனதோடு ஏற்றுக் கொள்ளும் வகையில் ஆதரவு தந்தமைக்காக நன்றி தெரிவித்து சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1973-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/73) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இச்சட்ட முன்வடிவைச் சட்டமாக்கித் தரவேண்டுமென்று கோருகிறேன்.

**(உ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டமுன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.**

## 7. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (உ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்ட முன்வடிவு

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

**தமிழ்நாடு 1972-ம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/72)-ஐ பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.**

9. அரசினர் சட்டமுன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஈ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 53/72).

THE HON. THIRU S. MADHAVAN : Sir,—

The Societies Registration Act, 1860 (Central Act XXI of 1860) was passed in 1860 when the law relating to Societies was in its infancy in India. The actual working of the Act for the past several decades brought to light many defects, as, for instance, there is no provision in the Act permitting change of name of a society, alteration of bye-laws, keeping of a registered office, maintenance of a register of members and Committee members, holding of annual general meeting, winding up of the Societies under the orders of Registrar, etc. As a result, much difficulty has been experienced by the public and by the administrative officers alike.

Therefore, the question of repealing the Societies Registration Act, 1860, which is a Central Act, and replacing it by a suitable State enactment has been under the consideration of the Government for quite some time. Accordingly, the Tamil Nadu Societies Registration Bill, 1972 (L.A. Bill No. 53 of 1972) was introduced in the Legislative Assembly during its last session.

I may now mention a few salient features of the Bill for the information of Honourable Members. The Bill seeks to bring societies for promotion of religion, social reform, improvement of crafts and cottage industries, within the scope of the provision, and the registration of societies for diffusion of political education, provided for, in the existing Act, has been excluded from the purview of the proposed legislation.

The Bill provides for compulsory registration of not only the literary, science art, etc., societies whose annual gross income or expenditure in any financial year is not less than Rs. 2,500 within a stipulated time, but also provides for registration of unregistered societies with such expenditure as may be prescribed, and which are formed before the commencement of the proposed legislation and in existence.



The Bill also seeks to prohibit registration of a society by a name undesirable, in the opinion of the Government or with a name identical to that of an existing registered society in the same district or with the words such as "Reserve Bank" 'Union', etc., as part of its name, and also enables change of name of a society.

Specific provision has been made in the Bill requiring a society to keep an office and to notify its situation and also the maintenance of Register of members of society.

The Bill requires a registered society to keep proper books of its accounts and to present before the general body meeting at the end of each financial year, audited receipts and expenditure account and balance sheet with the auditor's report.

Provision has also been made in the Bill to invest the funds of a society either in immovable properties, or in Government securities, and also to vest, with the society, the power to spend, out of its funds, such sums for certain authorised purposes subject to certain restrictions.

The Bill also provides for the saving of rights of creditors, in the event of amalgamation or division of societies.

Necessary provision has been made in the Bill for inspection of books of society by the Registrar or any authorised person, for causing enquiry by the Registrar into the affairs of society, for cancellation of registration of a society, winding up, removal of societies, as well as to levy fees for filing documents, issue of certificates or registration, etc., and to enhance the fee for registration, etc. of a society from Rs. 50 to Rs. 90 with power to Government for remission of fees. There are no such provisions in the said Central Act.

Further, the Government have been empowered to exempt any society from the operation of any of the provisions of the proposed legislation or with any modification and also to remove any difficulty arising in implementing the proposed legislation.

In view of the far-reaching changes sought to be introduced in the Bill and as it is also proposed to enact legisaltion by the State Legislature for the first time for the registration of societies, it

[Thiru S. Madhavan] [1973 மார்ச் 30

is considered expedient to refer the Bill to a Joint Select Committee of both the Houses with its concurrence. I accordingly move the following motion for the consideration of the House :

"That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses consisting of 16 members from the Tamil Nadu Legislative Assembly and 8 members from the Tamil Nadu Legislative Council to consider the Tamil Nadu Societies Registration Bill, * 1972 (Legislative Assembly Bill No. 53 of 1972) and that the following members of the House be selected to serve on such a Joint Select Committee :—

1. Thiru A. Rajamanickam.
2. Thiru V. K. Rajah Pillai.
3. Thiru K. Thirupathi.
4. Thiru D. Soniah.
5. Thiru A. K. Doraisamy.
6. Thiru M. V. Narayanaswamy.
7. Thiru N. Nachiappan.
8. Dr. R. Naina Malai.
9. Thiru R. Manickavachagam.
10. Thiru R. Ponnappa Nadar.
11. Thiru G. R. Edmund.
12. Thiru Manali C. Kandasamy.
13. Thiru K. Kandasamy.
14. Thiru K. A. Wahab.
15. Thiru B. Venkatasamy.
16. Thirumathi T. N. Anandanayaki.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்டமுன்வடிவு கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது.

* Published in the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated 14th December 1972.



1973 மார்ச் 30]

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** சட்டப் பேரவை விதிகள் 139 (1) விதியின்படி மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர் அவர்களை இக்குழுவின் உறுப்பினராக நியமனம் செய்கிறேன். 12-30 பி.ப.

9. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(உ) 1973-ம் ஆண்டு பொது இஸ்லாமியர் அறக் கட்டளைகள் (காலவரையறையை நீட்டித்தல்) தமிழ்நாடு திருத்த சட்ட முன்வடிவு.

THE HON. THIRU S. J. SADIQ PASHA : Sir, I beg to move—

'That the Public Wakfs (Extension of Limitation) Tamil Nadu Amendment Bill*, 1973 (L.A. Bill No. 8 of 1973) be taken into consideration.'

The Public Wakfs (Extension of Limitation) Act, 1959 (Central Act 29 of 1959), as subsequently amended, extends the period of limitation in certain cases for suits to recover possession of immovable property forming part of public wakfs up to the 31st December 1972. Though, availing this provision, a number of suits have already been filed, there are a number of cases in which suits have yet to be filed. It is, therefore, considered necessary that the time-limit for filing such suits in this State should be extended up to the 31st December 1975.

The Bill seeks to achieve the above object. Sir, I commend the motion for the acceptance of the House.

* **திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வக்ப் ஆக்ட் காலாவதியாகும் சட்டத்தை மேலும் ஒரு ஆண்டு நீட்டிக்கவேண்டும் என்று அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்தத் திருத்தத்தை நான் ஆதரித்து ஒரு சில கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ்நாடு எங்கும் இது ஒரு அறிந்த விஷயம். முஸ்லிம் வக்ப் ஸ்தாபனத்திற்குச் சொந்தமான சற்றேறக்குறைய 300 கோடி ரூபாய்க்கு அதிகமான சொத்துக்கள் பிறரால் ஆக்கிரமிக்கப்பட்டு

* Published in the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated 26th March 1973.

[திரு. வா. மை. அப்துல் ஜப்பார்] [1973 மார்ச் 30

எந்த புனிதமான நோக்கத்தோடு வக்ப் செய்யப்பட்டதோ அது இன்று பலருடைய கைகளில், நீண்ட காலமாகச் சிக்கி அந்தப் பொருள்களை அந்தப் புனிதமான காரியத்திற்கு உபயோகிக்க முடியாத ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** இந்த 'பில்'லைப் பற்றித்தான் பேச வேண்டும். ஒரிஜினல் 'பில்'லுக்குப் போக முடியாது. நம் விதிமுறைகள்படி இந்தத் திருத்தத்தைப் பற்றித் தான் பேச வேண்டுமே தவிர பொதுவான கருத்துக்கள் இந்த விவாதத்தில் இடம் பெறக்கூடாது. அதுதான் விதி.

**திருமதி த. ந. அனந்தநாயகி** Sir, this Bill relates to the extension of the period of limitation in cases relating to wakfs and so anything connected with it can be discussed . . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** நம் விதிமுறைகள்படி இங்குகொண்டுவரப்பட்டுள்ள திருத்தத்தைப் பற்றித்தான் பேசவேண்டும். எக்ஸ்டென்ஷன் பற்றித்தான் பேச வேண்டுமே தவிர, மற்றவற்றைப் பற்றிப் பேசுவது முறையல்ல. இதற்கு முன்பே இதுபற்றி தீர்ப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. டாக்டர் கிருஷ்ண ராவ் அவர்கள் கூட இது குறித்து தீர்ப்பு கொடுத்திருக்கிறார்கள். இது முக்கியமான பிரச்னை என்பது எனக்குத் தெரியும். எனவே. சுருக்கமாகப் பேசும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** இந்து அறநிலையத் துறை என்றால் அதற்காக தனி விவாதம் வைக்கிறோம். ஆனால் வக்ப் வாரியம்பற்றி, அதன் சொத்துக்கள் பற்றி பேசுவதற்கு தனியானதொரு வாய்ப்பில்லை. இந்தச் சட்டத்திற்கு உட்பட்டு, போதிய அளவிற்கு ரெலவன்ட்டாக உள்ளவை பற்றி குறிப்பாக முஸ்லிம் லீக் உறுப்பினர்கள் பேசக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அப்படிப் பேசுவது விதிகளை மீறிப் பேசுவது என்றில்லை.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** அப்படி ஒரு விவாதம் வேண்டுமென்றால் அமைச்சர் அவர்களிடம்



1973 மார்ச் 30] [மாற்று தலைவர் திரு. நா. வீராசாமி]

சொல்லலாம். அலுவல் ஆய்வுக்குழுவில் நேரம் கேட்டு விவாதிக்கலாம்.

'There should not be a long discussion on Bills which merely seek to extend the life of the parent Act'.

என்ற தீர்ப்பு முன்னமேயே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, முடிந்தவரையில் கொஞ்சம் சுருக்கமாகவே சொல்லுங்கள்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டதன் நோக்கமே மீண்டும் ஒரு ஆண்டு காலம் கூட்டித் தரவேண்டும் என்பதுதான். அது ஏன் அவசியம் என்பதைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும் ஒரு ஆண்டு இந்தச் சட்டத்தை நீட்டிப்பதற்கான காரணங்கள் என்ன என்பதை எடுத்துச் சொல்ல முயற்சித்துக்கொண்டிருக்கிறேன். சற்று அனுதாபத்தோடு மாற்றுத் தலைவர் அவர்கள் எனக்கு சிறிது அதிக அவகாசம் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 300 கோடி ரூபாய்க்கு மேல் அதிகமான சொத்துக்கள் மஸ்ஜித், தர்க்காக்களின் சொத்துக்கள் புனிதமான காரியங்களுக்குப் பயன்படுவதை விட்டு அவை தனி நபர் நல்வாழ்விற்காகப் பயன் படுகின்றன என்பது உலகம் அறிந்த உண்மை. இதை வக்ப் ஆக்ட் மூலம் சீர்செய்து நடைமுறைக்குக் கொண்டு வருவதில் இன்று வரை அதில் முழுமையான வெற்றி பெறவில்லை என்பது உண்மை. ஏனெனில் தனிப்பட்டவர்களிடம் உள்ள சொத்துக்களைப்பற்றி மற்றவர்கள் அவர்களிடம் உள்ள சொத்துக்கள் பற்றிய ஆதாரங்களை எல்லாம் பெற்று, அந்தச் சொத்துக்கள் எந்த எந்தக் காலத்தில் யார் யாரால் வாங்கப்பட்டது என்ற உண்மைகளை எல்லாம் தெரிந்த பிறகு அவர்கள் மீது வழக்காடுவது என்பது சிரமமான காரியம்.

தனிப்பட்ட மனிதன் பள்ளிவாசல் மீது அக்கறை கொண்டு, பொது நலனில் அக்கறை கொண்டு, அந்தச் சொத்துக்களை வைத்திருக்கக்கூடிய தனி மனிதனின் விரோதத்தை சம்பாதித்துக் கொள்ளும் முறையில் துணிச்சலாக முன்வந்தால் தவிர அந்தச் சொத்துக்களை அபகரித்திருப்பவர்களிடமிருந்து அந்தச் சொத்துக்களை மீண்டும் கைப்பற்ற வழியில்லை.

நான் கேட்பது என்னவெனில், ஏன் பொதுமக்களிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறீர்கள் அவர்கள்தான் வழக்கு தொடர்ந்து அந்தச் சொத்தைக் காப்பாற்றவேண்டுமென்ற முறையில்? வக்ப் வாரியம் என்றதொரு அமைப்பு இருக்கிறது. அதில் ஒரு தனி செக்‌ஷன் ஏற்படுத்தி அவர்கள் எந்தெந்த மஜ்ஸித்களின் சொத்துக்களை யார் யார் கைப்பற்றி வைத்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் ஆராய்ந்து அவர்களைப்பற்றி ஒரு அட்டவணை தயாரித்து அந்த வரிசைக்கிரமமாக அவர்கள் மீது ஏன் வழக்குகள் தொடரக்கூடாது அல்லது நடவடிக்கைகள் எடுக்கக்கூடாது?

தனிப்பட்ட மனிதன் செய்வதுஎன்றால் உண்மையிலேயே சில தஸ்தாவேஜ்களைப் பெறமுடியாது. ஆனால் அதுகுறித்து அரசு பொறுப்பேற்றால் தஸ்தாவேஜ்களைப் பெறுவது சுலபம். ஆங்காங்குள்ள டிப்பார்ட்மென்ட்களைக் கேட்டு தஸ்தாவேஜ்களைப் பெறுவது சுலபம். நூறு, இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட சொத்துக்கள் கூட அந்தச் சொத்துக்களில் அடங்கியிருக்கிறது. ஆகவே அரசு தக்க நடவடிக்கைகள் எடுத்தால் அரசு ஆண்டு தோறும் இந்தச் சட்டத்தை விஸ்தரித்துக்கொண்டு போக வேண்டிய அவசியமில்லை.

ஏன் ஒவ்வொரு ஆண்டும் இப்படி ஒரு காலகெடு ஏற்படுத்த வேண்டும்? காலகெடு இல்லாமலே யாரிடம் பொதுச் சொத்துக்கள் உள்ளனவோ அதுபற்றி தகவல் கொடுத்தால் எந்த நோக்திலும் எந்த முறையிலும் வழக்காட முடியும் என்ற விதியை நாம் ஏற்படுத்தினால் என்ன? இன்ன தேதிக்குள்ளாக வழக்காட வேண்டும், அதற்கு மேல் வழக்காடக் கூடாது என்று ஒரு விதி முறை இருக்கவேண்டியதின் அவசியம் என்ன? தலைவர் அவர்கள் அனுமதித்தால் நான் ஒரு திருத்தம் கொண்டு வருகிறேன். ஒரு ஆண்டு என்பதை நீக்கிவிட்டு எப்போதும் என்ற வார்த்தையை போடவேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த மஸ்ஜித்களை கவனிக்கும் முறையில் ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொரு முறை இருக்கிறது. சிலயிடங்களிலே ஊரிலுள்ள பெரிய தனவந்தர் அல்லது நாட்டாண்மைக்காரர் அந்த மஸ்ஜித் நிர்வாகத்தைக் கவனித்து வருகிறார். சிலயிடங்களில் கோர்ட்





களில் முன்பு வழக்கு தொடரப்பட்டு, ஸ்கீம்ஸ் வைத்து மூன்று ட்ரஸ்ட்டிகள் நிர்வகிப்பது மூன்று அல்லது ஐந்தாண்டுகளுக்கு என்று இருக்கிறது. ஒருசில மஸ்ஜித்களில் ஐந்தாண்டு என்று இருக்கிறது. ஒருசில மஜ்ஜித்களில் இல்லை. இரண்டு ஸ்கீம்கள் ஒன்றுக்கு ஒன்று மாறுபட்டிருக்கிறது. மாநிலத்தில் உள்ள எல்லா மஜ்ஜித்களுக்கும் ஒரே சீரான ஸ்கீம்ஸ் இல்லை ஒருசில ஊர்களில் அங்குள்ள பெரிய தனவந்தர்களிடம் மஜ்ஜிதின் நிர்வாகம் கிடைத்த பிறகு ஏழை எளிய முஸ்லீம்கள் அந்த பள்ளி நிர்வாகத்தில் ஏதாவது குறைபாடுகள் கண்டபோதிலும் அவற்றை எடுத்துச் சொல்வதற்கு முடியாத நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். ஆண்டு ஒன்றுக்கு ரூ. 10,000 வருமானம் வருகிறது, செலவு ரூ. 5,000 தான். மீதி உள்ள ரூ. 5,000-க்கு கணக்கு என்ன என்று கேட்க முடியாத ஒரு சூழ்நிலை இன்று சமூகத்தில் உள்ள பல்வேறு முஸ்லீம் நிறுவனங்களில் உள்ளது. ஆகவே ஒரு வேண்டுகோள்.

அரசாங்கத்திலிருந்தே இங்குள்ள முஸ்லீம் சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைக்கவேண்டும். அதில் பொது மக்களின் பிரதிநிதிகளாக முஸ்லீம் பெரியார்களையும் சேர்த்து அந்தக் குழு ஆராய்ந்து பார்த்து ஒரு ஸ்கீம் தயாரிக்க வேண்டும். அது தமிழ்நாட்டிலுள்ள அனைத்து முஸ்லீம் அறநிலையங்களுக்கும் பொருந்தக் கூடியதாக அமைய வேண்டும்.

ஐந்து ட்ரஸ்டிகள் வைத்து அவர்கள் ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக்கவேண்டும். இவர்கள் மூன்று ஆண்டுகள் பதவி வகிப்பார்கள் என்று இருக்கவேண்டும். இவர்கள் தேர்ந்தெடுக்கப்படும் முறை அந்த ஊரின் எல்லைக்குள், ஊராட்சி மன்றம் என்றால் அதன் எல்லைக்குள், அல்லது நகரசபை என்றால் அதன் எல்லைக்குள் சட்டசபை வாக்காளர்கள் ஜாபிதாவில் இடம் பெற்ற அனைத்து வாக்காளர்களையும் வாக்காளர்களாக எடுத்து அவர்கள் மூன்று அல்லது ஐந்து ட்ரஸ்டுகளை குறிப்பிட்ட தினத்தில், அரசு நியமிக்கக்கூடிய அதிகாரியின் தலைமையின்கீழ் ரிட்டேர்னிங் ஆபிஸர் தலைமையில்—ட்ரஸ்டிகள் தேர்ந்தெடுக்கப் படவேண்டும்.

இப்படிச் செய்தால் பொதுச் சொத்துக்களுக்கு ஆபத்து ஏற்படாமல், விரயம் ஏற்படாமல் இருக்கும். மற்றச் சொத்துக்கள் விரயமானால் பரவாயில்லை. ஆனால் இறைவன் வணக்கத்திற்கு

இறைவன் பெயரால் ஏற்படுத்தப்பட்ட சொத்துக்கள் விரயமாகக் கூடாது.

ஓரளவு வக்ப் போர்ட் இது விஷயத்தில் நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை ஏற்றுக்கொள்கிறேன். குறை காண விரும்ப வில்லை. ஆயினும் அவர்களுடைய சக்திக்கு மிகமிக அப்பாற் பட்டு விஷயம் இருக்கிறது. அவர்கள் என்னதான் முயற்சித்துப் பார்த்தும் இந்த மிகப் பெரிய திருட்டைத் தடுக்க முடியவில்லை. அதனுடைய எல்லைக்கே வர முடியவில்லை.

இன்று வக்போர்ட் சட்டத்தில் பேசவேண்டுமென்பதற்காக நம்முடைய டிபார்ட்மெண்டுக்குச் சென்று அந்த வக்போர்டு சம் பந்தமாக சட்டபுக் இருக்கிறதா என்று பார்க்கப்போனல் அங்கே யில்லை. லைப்ரரியிலும் கிடையாது. பில்ஸ் செக்ஷனிலும் கிடையாது. கண்ணைக் கட்டி விட்டது போல் வக்போர்டைப் பற்றி தெரிந்து வைத்திருக்கிறோம். அதை வைத்துத்தான் பேச வேண்டியிருக்கிறது. திட்டவட்டமான, தெளிவான சட்டம் இருக்கிறதா? அந்தச் சட்டப் புத்தகம் இருக்கிறதா என்றால் துரதிருஷ்ட வசமாக இல்லை.

அமைச்சர் அவர்களைத் தாழ்மையாகக் கேட்டுக்கொள்வேன். இந்தச் சட்டங்களை ஒழுங்குபடுத்தி, திட்டவட்டமான ஒரு சட்டம் ஏற்படுத்த வேண்டும். இதற்காக முஸ்லீம் பொதுமக்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் பங்கு பெற்று ஆராய்ந்து அந்தச் சட்டத்தைக் கொண்டு வரவேண்டும். அப்படி ஒரு சட்டத்தை அமலுக்குக் கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த வக்போர்ட்டில் திருத்த ஆலோசனைக் குழு அமைக்குமாறும், அதற்குண்டான தீர்மானத்தை அமைச்சர் அவர்களே கொண்டு வரவேண்டுமென்றும், மிக விரைவில் அதைக் கொண்டு வரவேண்டு மென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இன்று ஒருசில பள்ளிவாசல்கள் மதராசாக்களில் நிர்வாகம் எப்படியிருக்கிறது என்றால் இரண்டு தரப்பார்களிடையே சண்டை சச்சரவு ஏற்பட்டு அதன் காரணமாக அவை மூடிவைத்திருக்கும் நிலை இருக்கிறது. எது எப்படியிருந்தாலும் ஒரு மனிதனுக்கு இறைவனின் இல்லத்திற்குச் செல்ல தடை ஏற்பட்டால் அது





பெரிய அளவில் மத உணர்ச்சியைத் தூண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அரசாங்கம் இப்போது அதிகக் கவனம் எடுத்துக் கொண்டிருக்கிறது. இன்னும் அதிகக் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அதற்கு ஒரு நல்ல சட்டத்தை கொண்டுவர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

நான் முன் சுட்டிக்காட்டியது போல, எல்லா மசூதிகளும், எல்லா மதராசாக்களும் மொத்தமாகவும் இருக்கவேண்டும். இனி இறைவனுக்காக மசூதிக்கு, மதராசாக்களுக்கு வக்ப் செய்ய வேண்டுமென்று விரும்பி யாரேனும் சொத்துக்கள் எழுதி வைத் தால் அதை எப்படி நிர்வகிப்பது அதை யாரிடம் ஒப்படைப்பது என்ற வரையறை இருக்கவேண்டும். இப்போது இருக்கும் வக் போர்ட்டில் ஒரு திட்டம் இல்லாமல் இருக்கிறது. இந்த வக்ப் போர்டு செயல்படுவதில் சில இடங்களில் சில கோளாறுகள் இருப்பதாக அறிகிறேன்.

திட்டவட்டமான வக்ப் ஆக்ட் இல்லாததால் அதை நிர்வகிக்கும் முறையில் சிக்கல்கள் ஏற்படுகின்றன. அங்கே 11 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஏதேனும் ஒரு வழக்கு தொடுக்க வேண்டுமென்று சொன்னால் அந்த வழக்கைத் தொடுப்பதற்கு 9 உறுப்பினர்களின் பெரும்பான்மை ஓட்டு வேண்டுமென்று சொல் கிறார்கள். நாலிலே 3 பங்கு வேண்டுமென்று சொல்லப்படுகிறது. இது ஜனநாயகமா? சட்டமன்றத்தில் 200 உறுப்பினர்கள் இருக் கிறார்கள் என்றால், 101 உறுப்பினர்கள் வாக்களித்தால் போதும், ஒரு மசோதா சட்டமாகிவிடும். இங்கே இந்த நிலைமையிருக்க வேண்டுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** முதலாவது நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, வக்ப்போர்டு ஆக்ட் என்பது மத்திய அரசால் கொண்டு வரப்பட்ட சட்டமாகும். அதிலே 11 பேர் உறுப்பினர்கள் நியமிக்கலாம் என்று இருக்கிறது. அவர் களிலே 9 பேர் அனுமதி கொடுத்தால் தான் மேற்கொண்டு நடவ டிக்கை எடுக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்லாமியப் பிரச்னை பற்றித் தீவிரமாக சர்ச்சை செய்து முடிவு எடுக்க வேண்டுமானல் அதற்கு 9 பேர் இருக்கவேண்டுமென்று அந்தச்

[திரு. எம். வ. லத்திப்] [1973 மார்ச் 30

